பகவத்கீதை விருத்தம்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 575

பகவத்கீதை விருத்தம்

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

கோ. சேதுராமன், M.A., B.Ed.

அம்மாப்பேட்டை, தஞ்சாவூர்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

மற்றும்

ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

2016] [விலை: ரூ. 300-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	பகவத்கீதை விருத்தம்
பதிப்பாசிரியர்	:	கோ. சேதுராமன் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	575
ISBN	:	978-93-85343-13-1
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல்பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2016
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 x 14 செ.மீ.
பக்கங்கள்	:	632
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	இலக்கியம்
விலை	:	ரூ. 300/-

வெளியீட்டாளர் முகவுரை

நம் பாரத தேசத்தில் வாழ்ந்த முன்னோர்களின் அறிவுச் செல்வங்களை, எழுத்து வடிவில் பனை ஓலை, காகிதச்சுவடிகள் மற்றும் தாமிரத்தகடுகள் ஆகியவற்றில் பல மொழிகளில் எழுதி வைத்து பாதுகாக்கப்படும் மிகப் பழமையான நூலகங்களுள் ஒன்றான தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம் அறிவுக் கருவூலம்-சுவடிக் கருவூலம் என்பதாக அனைவராலும் போற்றப்படுகின்றது. இச்சுவடிகளில் உள்ள இலக்கியம், இலக்கணம் மற்றும் பல துறை சார்ந்த கருத்துக்கள் பொக்கிஷமாக பாதுகாக்கப்படுகின்றன. இவற்றில் வெளிவராத இலக்கிய மற்றும் பல துறை சார்ந்த சுவடிகளைக் கண்டறிந்து அவற்றை உரிய வல்லுநர்களைக் கொண்டு நூல்களாக அச்சிட்டு வெளியிடும் பணியை இந்நூலகம் தொடர்ந்து செய்து வருகின்றது. அந்த வரிசையில் பகவத்கீதை விருத்தம் என்னும் இலக்கிய நூல் தற்பொழுது முதற்பதிப்பாக வெளிவருகின்றது.

வியாசரால், சமஸ்கிருதத்தில் எழுதப்பெற்ற பகவத் கீதையைத் தமிழ் மக்களும் அறிந்துகொள்ளும் பொருட்டு, அறிஞர் ஒருவரால் எழுதப்பெற்ற சுவடி. வியாசர், தமது பகவத் கீதையை எழுநூற்று ஒரு (இரட்டை வரி) சுலோகங்களில் எழுதியுள்ளார். சுவடி ஆசிரியர் இதனைத் தமது ஐந்நூற்று அறுபத்தைந்து விருத்தங்களால் தமிழாக்கம் செய்துள்ளார். இங்கு சுவடியில் உள்ளவாறே விருத்தங்கள் கொடுக்கப்பெற்று, பொருள் கூறி, அருஞ்சொற்பொருள் மற்றும் தேவையான இடங்களில் சிறு விளக்கங்களும் கொடுக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு அத்தியாயத்தின் நிறைவிலும், சுவடி ஆசிரியரின் விருத்தங்கள், வியாசரின் பகவத்கீதையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வகையில் விளக்கவுரையும் அளிக்கப் பெற்றுள்ளது.

மகாபாரதக் கதையை முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல் அதன் உட்பகுதியாகிய பகவத் கீதையைப் படிப்பது முழுமை பெறாது. எனவே சுருக்கமாக மகாபாரதக் கதையும் பகவத் கீதையை ஒத்த வேறு இரண்டு கீதைகளும் உண்டு என்பதையும் விளக்கியுள்ளார். வியாசர் வாழ்ந்த காலம் வேறு. அவரால் கூறப் பெற்றுள்ள செய்திகளில் சில இந்த நூற்றாண்டின் சமூக வாழ்க்கைக்கு ஏற்புடையதாக இல்லாதனவும் உண்டு. அவைகளை அவர் காலத்து மக்களின் வாழ்க்கை முறையைக் காட்டும் அடையாளங்களாக மட்டுமே கொள்ளவேண்டும். பகவத் கீதையை இந்த நூற்றாண்டிற்கேற்ப எவ்வாறு பொருள் கொள்ள வேண்டும் என்பதைத் தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்கள் நமக்குத் தெரிவித்திருக்கும் குறிப்புகளை இத்துடன் இணைத்துள்ளார். இசசுவடி முழுவதையும் தாம் சுவைத்தவாறே தமிழ் பயின்ற மக்கள் அனைவரும் சுவைத்து இன்புறுமாறு வடிவமைத்துப் பதிப்பித்துள்ள நூலக சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் திரு. கோ.சேதுராமன் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி **அ. பூங்கோதை,** M.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்சன்,** M. A., B.Lit.M.L.I.S. Ph.D அவர்களுக்கும், சரசுவதி மகால் நூலக ஒளி அச்சுப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. அண்ணாதுரை, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.

தஞ்சாவூர்.
19-09-2016

பொருளடக்கம்

		பக்கம்
1.	பதிப்பாசிரியர் முன்னுரை	i
2.	கீதை ஒரு அறிமுகம்	iv
3.	கீதை விருத்தங்கள் 1 முதல் 18 அத்தியாயங்கள்	1-514
4.	உவமைகள்	515
5.	கண்ணனைப்பற்றிய செய்திகள்	518
6.	தேசப்பிதா அண்ணல் மகாத்மா காந்தியும் பகவத்கீதையும்	524
7.	மகாபாரதக் கதையும் மூன்று கீதைகளும்	555
8.	சொல்லடைவு	591

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், மருத்துவக் குறிப்புகளையும், இன்ன பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. அச்சுவடிகள் பழுதடைவதற்குள் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலகத்திற்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் நூலகம் உள்ளளவும் பெறுவர். அவை நூல் வடிவில் பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு. அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகால் நூலகத்திற்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,
தஞ்சாவூர்.

பதிப்பாசிரியர் முன்னுரை

உலகப் புகழ்பெற்ற தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் பாதுகாக்கப்பெற்று வரும் தமிழ்ச் சுவடிகளில், எண். 772ல் உள்ள கீதை விருத்தம் என்ற சுவடி பதிப்பிக்கப்பெறுகிறது.

வியாசரால், சமக்கிருதத்தில் எழுதப்பெற்ற பகவத் கீதையைத் தமிழ் மக்களும் அறிந்துகொள்ளும் பொருட்டு, அறிஞர் ஒருவரால் எழுதப்பெற்ற சுவடி. இதில் இச்சுவடியை எழுதியவரின் பெயர், ஊர், காலம் ஆகியவை பற்றிய எந்தச் செய்தியும் இல்லை. சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குக் குறைவில்லாத பழமையான சுவடி இது. வியாசர், தமது பகவத் கீதையை எழுநூற்று ஒரு (இரட்டை வரி) சுலோகங்களில் எழுதியுள்ளார். சுவடி ஆசிரியர் இதனைத் தமது ஐந்நூற்று அறுபத்தைந்து விருத்தங்களால் தமிழாக்கம் செய்துள்ளார்.

ஒரு சுலோகத்திற்கு ஒரு விருத்தம் என, ஒரு மொழிபெயர்ப்பாக அல்லாது, ஒரு அத்தியாயத்தை ஒரு அலகாக எடுத்துக்கொண்டு, அதில் கூறப்பெற்றுள்ள செய்திகளைக் கூட்டியும், குறைத்தும், எதிர்மறைக் கருத்துக்கள் ஏதுமின்றி, தெளிவாக வியாசரைப் போன்றே பதினெட்டு அத்தியாயங்களாக இயற்றியுள்ளார்.

இச்சுவடி ஆசிரியர், பகவத் கீதையை மட்டுமல்லாது மகாபாரதக் கதையையும் முழுமையாகத் தெரிந்தவர். மேலும் ஸ்ரீமத் பாகவதம் போன்ற புராணங்களையும், கைவல்ய நவநீதம், நாநா ஜீவ வாதக் கட்டளை, பிர்மகீதை, ஈஸ்வர கீதை போன்ற தத்துவ நூல்களையும் கற்றவர். இதனை இவரது விருத்தங்களைப் படிப்பதன் மூலம் தெரிந்துகொள்ள இயலும். இங்கு சுவடியில் உள்ளவாறே விருத்தங்கள் கொடுக்கப்பெற்று, பொருள் கூறி, அருஞ்சொற்பொருள் மற்றும் தேவையான

இடங்களில் சிறு விளக்கங்களும் கொடுக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு அத்தியாயத்தின் நிறைவிலும், சுவடி ஆசிரியரின் விருத்தங்கள், வியாசரின் பகவத்கீதையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வகையில் விளக்கவுரையும் அளிக்கப் பெற்றுள்ளது.

வியாசர் வாழ்ந்த காலம் வேறு. அவரால் கூறப் பெற்றுள்ள செய்திகளில் சில இந்த நூற்றாண்டின் சமூக வாழ்க்கைக்கு ஏற்புடையதாக இல்லாதனவும் உண்டு. அவைகளை அவர் காலத்து மக்களின் வாழ்க்கை முறையைக் காட்டும் அடையாளங்களாக மட்டுமே கொள்ளவேண்டும். பகவத்கீதையை இந்த நூற்றாண்டிற் கேற்ப எவ்வாறு பொருள் கொள்ள வேண்டும் என்பதைத் தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்கள் நமக்குத் தெரிவித்திருக்கும் குறிப்புகளை இத்துடன் இணைத் துள்ளேன்.

மகாபாரதக் கதையை முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல் அதன் உட்பகுதியாகிய பகவத் கீதையைப் படிப்பது முழுமை பெறாது. எனவே சுருக்கமாக மகாபாரதக் கதையும் பகவத் கீதையை ஒத்த வேறு இரண்டு கீதைகளும் உண்டு என்பதையும் விளக்கியுள்ளேன்.

இந்நூலிற் காணும் குறைகளை மன்னித்து விட்டுவிடாமல் அருள்கூர்ந்து பதிப்பகத்தாருக்கு தெரிவிப்போருக்கு என்றும் நன்றியுடையவனாவேன்.

இத்தகையதொரு தமிழ்ச்சுவடி நூலினைப் பதிப்பித்து வெளியிட மகிழ்வுடன் அனுமதி வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநருமான **டாக்டர் என். சுப்பையன், இ. ஆ. ப.,**

அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூல் முழுமைபெற்று வெளிவருவதற்கு பல்லாற்றானும் உதவிகள் புரிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நூலக இயக்குநர் திரு. **ஆ. அண்ணாதுரை, இ. ஆ. ப.**, அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி. **அ. பூங்கோதை, M. A.**, அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்த நூலக ஒளி அச்சுக்கோப்புப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை,
14-07-2016.

கோ. சேதுராமன்
பதிப்பாசிரியர்.

கீதை ஒரு அறிமுகம்

உலக நாடுகளிடையே இந்திய நாட்டைச் சிறப்பாக அடையாளம் காட்டுவது பகவத்கீதை. பல நாட்டவர் களும் அவரவர்தம் மொழிகளில் மொழிபெயர்த்துக் கொண்டு படித்து வருகிறார்கள்.

சமக்கிருதத்தை நன்கு படித்தவர்கள் கூட வேதங்களைப் படித்துப் பொருள் உணர்ந்து கொள்ள இயலாத அளவுக்கு அது மிகப் பழமையான மொழி நடையைக் கொண்டது. ஆனால் **வேதசாரம்** எனப்பெறும் கீதை எல்லோரும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய எளிய மொழி நடையில் அமைந்துள்ளது.

பகவத்கீதை என்ற உடன் அது ஏதோ வயதானவர்கள் படிக்கக் கூடிய நூல் என்பவர்கள் உண்டு. மனிதனை மனிதனாக வாழக் கற்றுக்கொடுக்கும் ஒரு நூலை வாழ்க்கையின் இறுதி நிலையில் படிப்பதால் பெரிய பலன் எதுவும் கிடைக்காது. எனவே இளம் வயதில், வாழ்க்கையைத் தொடங்கி, மனிதர்களில் சிறந்தவனாய், முன்னேற்றம் கண்டு வாழத் துடிக்கும் இளைஞர்கள்தான் பகவத்கீதையைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும். சிறந்த ஆளுமைத் திறனைக் கற்பிக்கிறது. நல்ல நிர்வாகியாக மாற்றுகிறது. வாழ்க்கையில் அன்றாடம் சந்திக்கும் மனிதர்களின் குணங்களைக் கண்டறியும் மனயியற்கலையைக் கற்பிப்பதும் பகவத் கீதையே!

இளைஞன் ஒருவன் கையில் பகவத்கீதை புத்தகத்தை வைத்திருந்தால், அவனைப் பார்த்து, இவன் சந்நியாசியாக ஆகப்போகிறான் என்று கூறுவோருமுண்டு.

கீதையச் சொன்னவனும் சந்நியாசி இல்லை. அதைக் கேட்டவனும் சந்நியாசி இல்லை. கேட்ட பின்னரும் கூட அவன் சந்நியாசியாகவில்லை. இருக்கும் இடத்தில் இருந்தபடியே இறைவனைக் காண இயலாதவன், காட்டிற்கும் மலைப்பகுதிக்கும் சென்று இறைவனைக் காண இயலாது. இல்லறமே நல்லறம்! இல்லறமல்லது நல்லறமில்லை! இல்லை என்று கேட்டுவந்தவருக்கு இல்லை என்னாது கொடுக்கும் உயர்ந்த தருமத்தை இல்லறத்தானால் மட்டுமே செய்தற்கியலும்.

நமது புராணங்களை எல்லாம் படித்துப் பார்த்தால் ரிஷிகளும் முனிவர்களும் இல்லறத்தார்களே என்பதையும், ரிஷி பத்தினிகளையும், முனிவர்களுக்குப் பிள்ளைகள் இருப்பதையும் படிக்க முடியும். எனவே கீதை யாரையும் சந்நியாசியாகப் போகும்படி சொல்லவில்லை என்பதையும், கர்மயோகமே மேலானது எனக் கூறுவதையும் காணலாம்.

பகவத் கீதைக்கு, சங்கரர், இராமானுஜர், மத்வாச்சாரியர் ஆகியோர் விரிவுரைகள் எழுதி இருக்கிறார்கள். அஹிம்சையை உயிர் மூச்சாகக் கொண்ட அண்ணல் மகாத்மா காந்தியும் இதனை மொழி பெயர்த்துக் குறிப்புகளை எல்லாம் எழுதி இருக்கிறார். ஒரு கொலை செய்யத் தூண்டும் நூலுக்கு இவர்கள் எல்லாம் ஏன் விரிவுரை எழுதினார்கள்? எனவே பகவத் கீதையை முழுமையாகப் படிக்காமல் இவ்வாறு கூறிவிட்டார்கள் என்றுதான் கொள்ளவேண்டும்.

வனவாசத்தில் இருந்தபோதே, போரை எதிர் நோக்கித் தவங்கள் செய்து சக்திவாய்ந்த அஸ்திரங்களை எல்லாம் சேகரித்தவன் அருச்சுனன். போர் தொடங்கி

விட்ட நிலையில், இரண்டு படைகளுக்கும் இடையே நின்று கொண்டு, இந்தப் போரைச் செய்து வெற்றிபெற்று, என் உற்றார் உறவினர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரைக் கொன்றுவிட்டு, இந்த நாட்டை ஆள்வதை விட பிச்சை எடுத்து உண்பதே மேல் என்று கூறி, ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, சோர்ந்துபோய் உட்கார்ந்து விட்டான். இதுவரை தேரோட்டியாக மட்டுமே இருந்த கண்ணன், இப்போது அருச்சுனனுக்கு அவனுடைய கடமையை உணர்த்தும் ஞான குருவாக ஆகிறான். போர் செய்-போர் செய் என்றே பலமுறையும் கூறுகிறான். ஆன்மாவின் தத்துவத்தை எடுத்துரைக்கிறான். இறுதியில் தன்னையே யார் என்று வெளிப்படுத்தியும் காட்டுகிறான். பின்னர் தான் அருச்சுனன் கண்ணனின் சீடனாகிப் போரைத் தொடங்கினான்.

பகவத் கீதையில் எளிமையாகப் புரிந்து கொள்ளக் கூடியது ஆன்மா என்ற விஷயம். அதுவே எவ்வளவு முயன்றாலும் புரிந்துகொள்ள முடியாத விஷயமும் கூட. ஆன்மாவைப் பற்றி எல்லோராலும் எளிதில் அறிந்து கொள்ள முடியாது. அவ்வாறு ஆன்மா இன்னதென அறிந்தவனே ஆன்ம ஞானி. கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்று கீதை சொல்வதாகக் கூட சிலர் சொல்வார்கள். கடமை என்பது செயல். எதுவும் செய்யாமல் இருத்தல் எவராலும் இயலாது. செயல் என்பது உடலால் செய்வது மட்டுமல்ல மனத்தால் செய்யப்படுவதும் செயலே! ஒரு செயலைப் பயனைக் கருதாமல் அறிவுள்ள எவனும் செய்யமாட்டான். செய்யப்பெற்ற செயலில் வெற்றியே கிட்டினாலும் துன்பமே மிஞ்சும். செயலின் முடிவின் பயனாக வெற்றி கிட்டியபோது வெற்றியின்மேல் வைத்த பற்றின் காரணமாக கிடைத்த வெற்றி சிறிதேயாயினும் மிகப்

பெரிதாகத் தோன்றும். வெற்றிக் களிப்பு-ஆனந்தம்-மற்றவர்களின் புகழ்ச்சி, இதுவே இருமாப்பு-அகந்தை ஆகியவற்றின் அடித்தளம். இந்த அகம்பாவம் வந்து விட்டால் உலகத்தில் அசைவு உண்டாகும். ஆக்கம் தருவது அசைவிலா ஊக்கம். எனவே வெற்றி கூட துன்பத்திற்குக் காரணமாகிவிட்டது. செய்த செயலில் தோல்வியடைந்து விட்டாலோ, மனச்சோர்வு, தன்னைத் தானே வெறுத்துக்கொள்ளும் மனநிலை, இதுவும் உலகத்தில் அசைவை உண்டாக்கும். எனவே பலனில் பற்று, ஆசை கொள்ளாமல் செயலைச் செய்தோமானால் வெற்றி கிட்டினாலும் தோல்வியே அடைந்தாலும் மனத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. அசைவிலாத ஊக்கம் நிலைக்கும். வெற்றியையும் தோல்வியையும், இன்பத்தையும், துன்பத்தையும் சமமாகக் கொள்ளும் மனப்பக்குவம் உண்டாக்கும். எனவே பலனில் பற்று-ஆசை கொள்ளாமல் செயலைச் செய்தோமானால் வெற்றி கிட்டினாலும் தோல்வியே அடைந்தாலும் மனத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. அசைவிலாத ஊக்கம் நிலைக்கும். வெற்றியையும் தோல்வியையும் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கொள்ளும் மனப்பக்குவம் உண்டாகும். இந்த நிலை உண்டானால் அவனே பரமஞானி.

மனிதர்களை மூன்று வகையினராக அடையாளம் காட்டுகிறது கீதை. அவர்களின் குணங்களைப் பற்றியும் கூறுகிறது. தருமம் செய்வதற்குக்கூட வரைமுறையைக் கூறுகிறது. எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணியுள்ளே ஒத்துரிமை உடையவராய் உவக்கச் செய்வது கீதை. நிறைவாக, பக்தி என்றால் என்ன? மோட்சம் என்பதன் பொருள் என்ன என்பவைகளைப் பற்றி எல்லாம் இந்த பகவத் கீதையில் கூறப்பெற்றுள்ளன.

எனவே கீதையை முழுமையாகப் படிக்க வேண்டும். படிப்பதோடு விட்டுவிடாமல் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். பகவத் கீதையைப் புரிந்துகொள்ள, மேலும் தத்துவங்கள் சார்ந்த பல நூல்களையும் படிக்க வேண்டும். கீதையைப் பற்றிய விளக்க உரை நூல்கள் தமிழில் நிறைய உண்டு. அவைகளையும் படிக்க வேண்டும். சந்தேகங்கள் தோன்றும் போது உரிய அறிஞர்களை அணுகி விளக்கம் பெறுவது நன்று. தற்போது இணையதளத்தில் கீதையைப் பற்றிய சொற்பொழிவுகள் பலராலும் பதிவு செய்யப் பெற்றுள்ளன. அவைகளையும் கேட்கலாம். பெரிய அளவிலான விரிவுரை குறுந்தகடுகளாகக் கூட கிடைக்கின்றன.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தோமானால் வானுறையும் தெய்வங்கள், தாமாக முன்வந்து நம்மை வரவேற்கும் எனவவே படியுங்கள் ! பகவத் கீதையைப் படியுங்கள் !

கோ. சேதுராமன்
பதிப்பாசிரியர்

பயன்பெற்ற நூல்கள்

1. பகவத் கீதையும் சங்கர பாஷ்யமும்
தமிழாக்கம்-த. சுந்தரராஜ சர்மா, சென்னை-1905

2. பகவத் கீதை வசனம்

மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை-1899

3. நாநாஜீவ வாதக் கட்டளை-மூலமும்-வியாக்யானமும்
மடப்புரம்-திருவாரூர்-1982

4. கைவல்ய நவநீதம்-மூலமும், உரையும்
பூவணநாதர் புத்தகாலயம், மதுரை-1-1974

5.ஸ்ரீமத் பகவத் கீதை, மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி
கௌசானி-இமயமலை-1929.
தமிழாக்கம்-க. சந்தானம்-சென்னை-1958

6. பகவத்கீதை முன்னுரை-ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார்
பாரதி பிரசுராலயம்-சென்னை-1949

7. அரவான் களப்பலி
சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர்.

8. கீதை சொற்பொழிவுகள் இணையதள பதிவுகள்

9. திருக்குறள்.

சரசுவதி மகால் நூலக வெளியீடுகள்

தமிழ் எண்ணும் எழுத்தும்	150-00
தமிழ் ஆய்வுக் கடடுரைகள்-1	100-00
தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்-2	150-00
சரபேந்திர பூபால குறவஞ்சி	100-00
தமிழறி மடந்தை கதை	80-00
அறப்பளீசுர சதகம்	150-00
திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்	160-00
தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு	450-00
பாபநாச க்ஷேத்திர மகாத்மியம்	250-00
கணபதி உபாசனை	120-00
தல வரலாற்று ஆய்வுக்கட்டுரைகள்	180-00
காலவிதான பத்ததி	150-00
காலப்பிரகாசிகை	250-00
பலதிரட்டு வைத்தியம்	140-00
அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம்	400-00
வைத்திய பலதிரட்டு	200-00
மகாமகம் - 2016 சிறப்பு மலர்	250-00
அருணாசல புராணம்	150-00
மதுரைவீரன் அம்மானை	120-00
கர்ப்பிணி பால ரோக சிகிச்சை	300-00
சரநூல்	200-00
சிற்ப ரத்தினம்	500-00
நட்சத்திர சிந்தாமணி பாகம்-1	310-00
நடசத்திர சிந்தாமணி பாகம்-2	200-00
நடசத்திர சிந்தாமணி பாகம்-3	250-00
வராகர் ஓரா சாத்திரம்	500-00
அகத்தியர் லோக மாரணம்	150-00
நீதித்திரட்டு	600-00
காலவிதான பத்ததி	150-00
கார்த்தவீர்யார்ஜுன-உபாஸ-பத்ததி	100-00
நீதி நூல்	100-00

பகவத்கீதை விருத்தம்

முதலாவது சோகவத்தியாயம்

பாதியோர் பெண்மையான் பரிந்து பெற்றதோர்
சோதியாங் களிற்றினைத் தூர மண்மையிற்
பேதி யாதுளம் பெறப் பேணிப் பாகவத்
கீதையான் மொழிகுவன் ஞானம் கிட்டவே ! 1

நூல் தொடக்கத்தில், விநாயகரை வணங்குவது மரபு. அதன்படி நூலாசிரியர் விநாயகரை, ஆண் பாதி பெண் பாதியாய் நின்ற சிவனார் அன்புடன் பெற்ற. யானை வடிவினனாகிய விநாயகனை, பேரறிவெனும் ஞானத்தை அடையும் பொருட்டு, உள்ளத்தாலும், வெளியிலேயும், வேறுபாடின்றி போற்றி வணங்கி பகவத்கீதையை உரைக்கிறேன் என்கிறார்.

சோதி-ஒளி; பேதியாவது-வேறுபாடின்றி; பாகவத் கீதை-பகவத்கீதை.

சேய மாமதுரை நின்றுஞ் சேமமா நகரந்தேடி
ஆயனார் பட்டனாராய் அவதரித்த ருளினாலே
போயினார் மொளிந்த கீதை புலன் படுத்தவு மன்றித்
தூய மாதவர்க்கு மிந்தச் சூருதி நூறுடங்கினாரே! 2

வெற்றியைத் தருகின்ற, மதுராபுரி எனும் பெரிய நகரத்தை விடுத்து, ஆயர்பாடி எனும் வளமான நகரத்தைப் பெறுபவராய்த் தோன்றி, அன்புடன் கீதையை உரைத்த, வேதங்களின் உட்பொருளாகி நின்ற மாதவனை வணங்கி, கீதையை அனைவரும் அறிய தெரிவிக்கின்றேன். இது திருமாலை வணங்குவது.

சேய-செய=வெற்றியைத் தருகின்ற; சேமம்-வளம்; ஆயனார்-ஆயர் குலத்தவர்; பட்டனார்-பட்டாச்சாரியார், வைணவக்கோயில்களில் இறைவனுக்குப் பூசனைகள் செய்பவர். இவர் வணங்குதற்குரியவர்.

மொளிந்த -மொழிந்த-உரைத்த; புலன் படுத்தல்-தெரியப்படுத்தல். சுருதி-ஸ்மிருதி-வேதப்பொருள்; நூறுடங்கினார்-உள் அடங்கினார். முடங்கல்-ஒடுங்குதல்.

ஏறிப்படுத்திருப்பவனும், வைகுண்டத்தில் இனிதே வீற்றிருப்பவனுமாகிய, மாயச்செயல்களைச் செய்வோனு மாகிய, குதிரைகள் பலவற்றால் பூட்டப்பெற்றதும், மணிகள் ஒலி எழுப்பக்கூடியதுமான பெரிய தேரினை யுடைய, பார்த்தன் எனும் அர்ச்சுனனுக்கு மிகவும் பிடித்த மானவனுமான, பாண்டவ சேனைகளில் ஒரு தேரோட்டி யுமானவனே நாம் வணங்கும் தெய்வமாகும்.

அரி-திருமால், அயன்-பிரமன், அரன்-சிவன், அளிக்கின்ற-காப்பாற்றுகின்ற, அளிக்கின்ற-அழிக்கின்ற, கரியது-கரியது என்னும் சொல் மாயைக் குறிப்பது. மாயையின் தற்காலப் பொருள், இருப்பதுபோல் தோன்றும் ஆனால் இருப்பதில்லை. ஏமாற்றம் தருவது என்பது. ஆனால் இதன் பழைய பொருள் மாயை-மகாமாயை-இதனின்றே எல்லாமும் தோன்றின. இதனையே ஆதிபராசக்தி என்பர். ஆதி மூலம் என்பதும் இதுவே.

சலம்-அசைவு, வரியமர் அரவணை-கோடுகளையுடைய பாம்புப் படுக்கை, நெழிய-நெளியும்படி, பரிபுனர்-குதிரைகள் பூட்டப்பெற்ற, நெடுந்தேர்-பெரியதேர். பாத்தக் கூர்ந்த-பார்த்தருக்கு உகந்த, சாரதி-தோரோட்டி, பரவும்-வணங்கக்கூடிய.

பரிபுணர் மணி என்பது கடல் அலையில் தோன்றிய முத்து எனவும் பொருள்படும். பரி-கடல்அலை, எனவே முத்துக்களால் அலங்கரிக்கப் பெற்ற தேர் எனவும் பொருள் கொள்ளலாம். மாணிக்கத்தேர்- பவளத்தேர் நவரத்தினத்தேர் என்பனவெல்லாம் உண்டு.

ஒரு பதமடித் தொரு பதமப் பொற்றேர் மிதித்
தொரு கையிற் குசை புரிந்து நோக்கி
மெய்தரு கசை பொருந்து .....
பொருளு ரைத்தவர்ச் சரணம் போற்று. 3

இப்பாடல் பொருள் கூற ஏற்ற வகையில் முழுமையாக இல்லை.

மன்னருள் விசயன் கேட்ப வாழ் மாதன மேலிட்டு
மின்னவிற் படைக்கை மாய னுரைத்த
மெய்ப்பொருளை எல்லாம்
பன்னரு மறைகள் கோர்த்த பழமுனி பணித்த
வண்ணம்
மன்னறி வழுவினாலே தமிழினா லியம்ப லுற்றேன். 4

மன்னர்களில் சிறந்தவனாகிய விசயன் எனும் அருச்சுனன் கேட்கும்போது, மகிழ்வுடன், ஒளிமிக்க படர்ந்த கைகளையுடைய மாயன் எனும் கண்ணன் கூறிய உண்மைப்பொருளை எல்லாம், வேதங்களைப் பகுத்துக்கொடுத்த பழ முனியாகிய வியாசன், சொல்லியபடி, பூவுலக மக்களின் வழக்கப்படி தமிழில் சொல்லுகிறேன். என சுவடி ஆசிரியர் கூறுகிறார்.

பகவத் கீதை என்பதே அர்ச்சுனனுக்கும் கண்ணனுக்கும் இடையே நடைபெறக் கூடிய உரையாடலைப் போன்று அமைந்ததுவாகும். இங்கு "விசயன் கேட்ப" என்பது போர்க்களத்தில் நின்று கொண்டிருக்கும்போது அருச்சுனன் கேட்டான் என்பதாகும்.

பன்னரு மறைகள் கோத்த பழ முனி-யுகங்கள் நான்கு. திரேதா, யுகம், திரேதா யுகம், துவாபரயுகம் கலியுகம் என்பன.

இதில் மூன்று யுகங்கள் வரை வேதம் என்பது ஒன்றாகவே இருந்தது. கலியுகத்தில்தான் ஒரு பெரிய ஞானி அந்த வேதத்தை ருக்வேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் என நான்கு பிரிவுகளாக வகுத்துக்கொடுத்தான். வியாச என்ற சமக்கிருத சொல்லிற்கு பகுத்தல் என்பது பொருள். வியாசன்-பகுத்துக்கொடுத்தவன். அதாவது பாட்டுபாடுபவனைப் "பாடகன்" என்பது போல. எனவே வேதங்களைத் தொகுத்தவரின் பெயர் வியாசர் என்பதல்ல, அவருடைய பெயர் என்னவென்று தெரியாது.பகுத்துக்கொடுத்தவன் என்றதால் அவரை வியாசர் என்கிறோம்.

உன்னு நான்மறை மால்வரை யுச்சிமேல்
மனனு மேக முளக்கிய வாக்கினை
பன்னுசீர் பரமார்த்த தெரிசன
மென்னு நாமத்தினை யியம்புவாம். 5

நினைப்பதற்கரிய திருமாலின் மலையுச்சியின்மேல் வந்து சூழுகின்ற மேகங்களுக்கிடையே முழங்குகின்ற நான்கு வேதங்களின் வாக்கினை, இறைவனின் காட்சி யென்றே கொண்டு திருமாலாகிய அவனுடைய பெயரை உச்சரிக்கிறேன்.

நான்மறை-நான்கு வேதங்கள், மால்வரை-திருமால் உறையும் மலை, முளக்கிய-முழங்கிய-தெரிசனம்-காட்சி, நாமம்-பெயர்.

விண்ணய மொழியினால் வியாதன் கூறிய
புண்ணிய கதையை நீபுகல்வ தென்னெனி
லெண்ணிய வகை பிரிதில்லை யானு மின்
னுண்ணிய பொருளிலே நுளைய வேண்டியே. 6

விண்ணவர் தம் மொழியாகிய சமக்கிருதத்தில் வியாசன் கூறிய புண்ணியத்தைத் தரக்கூடிய பகவத் கீதையை நீ ஏன் சொல்கிறாய் என்று கேட்டால், அப்பகவத் கீதையில் கூறப்பெறுகின்ற நுட்பமான பொருட்களை யானும் அறிய வேண்டித்தானேயன்றி வேறெதையும் நினைத்து அல்ல.

விண்ணியமொழி-விண்னவர் மொழி, வியாதன்-வியாசன், பிரிதில்லை-வேறொன்றுமில்லை. நுளைய- தெரிந்துகொள்ள.

புண்ணி பூமியென்று புகல் குரு பூமிதன்னில்
நண்ணிய பின்னை நண்ணாதவர்களும் நமருமிங்குக்
கண்ணிய தெத்தனை யென்று கண்ணிலா வரசன் கேட்பத்
தண்ணிய வினிய சொல்லாற் சஞ்சயனுரைக் கலுற்றாள். 7

புண்ணிய பூமி யென சொல்லப் பெறுகின்ற குருச்சேத்திரத்திற்கு, வந்து சேர்ந்தவர்கள், வராதவர்கள், அவர்களில் நம்மைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்பதைக் கணக்கிட்டுச் சொல்லுமாறு கண்ணில்லாத அரசனாகிய திருதிராட்டிரன் கேட்க, குளுமையான, இனிய சொற்களால் சஞ்சயன் சொல்லத் தொடங்கினான்.

புண்ணிய பூமி- குருச்சேத்திரம் என்ற போர்க்களம், நண்ணியர்-நண்ணாதவர்-வந்து சேர்ந்தவர்கள், இன்னும் இவ்விடத்திற்கு வராதவர்கள், நமர்-நம்மைச் சேர்ந்தவர், தண்ணிய-குளிர்ந்த.

போர் முகமாகி நின்ற புல்லவற் படையைப் பார்த்து
கார்முக வுழவனா ய்கலை மறையவனை நோக்கி
வார் முரச திருந்தானை வாளரவுயர்த்த தோன்ற
லோர் முகின் முளக்க மென்ன வின்னனவியம்பு
மன்றே! 8

போர்க்களத்தில் வந்துள்ள, புல்லர்களாகிய, துரியோதனின் படையைப் பார்த்து அர்ச்சுனன், முரசுகளை அதிரச்செய்யும் சேனைகள், அரவக் கொடியினுடைய படைகள், வாளை உயர்த்தி நிற்க, மேகத்திடையே தோன்றக் கூடிய இடி முழக்கம் போல கேட்பது ஏன் என்பதை உடனே தெரிவியுங்கள் என்று வேத நாயகனாகிய கண்ணனிடம் கேட்க !

போர்முகம்-போர்க்களத்தில், புல்லவர்-கீழானவர், கார்-மழை, தாணை-சேனை, படைகள். அரவு-பாம்பு, முளக்கம்-முழக்கம். விண்ணென-விரைவாக-உடனே.

வீமனையும் விசயனையும், நிகர்தரு போர்
வில்லாட்க
ளேமருவுசிலை யபிம னுள்ளிட்டா ரெனப் பலருந்
தாமருவு தலைவர்களாய்த் தலைப் பெயத்
தானையினை
மாமருவு பெருந்தேராய் பாரென்று மறுத்துரைப்
பான். 9

வீமனையும், அர்ச்சுனனையும் ஒத்த, வில்லினை யுடைய, அபிமன்யு முதலான பலரும் படைத்தலைவர் களாக சேனைகளுக்குத் தலைமை ஏற்க, அச்சேனைகள் வருவதைப் பெரிய தேரினை உடையவனே பார் என்று பதில் உரைத்தார்.

நிகர்-சமமான, முலை-வில், தானை-படை.

கங்கையாள் பெறு காவலனும் புக
ழுங்கர்கோ னென தாருயிர்த் தோழனும்
நங்கள் வாழ் துணை நம்பனு நீயுமாற்
றிங்குளாரு யிரெம் பொருட் டொக்கு நீர். 10

கங்கையின் மைந்தனாகிய பீஷ்மாச்சாரியாரும், அங்க தேசத்து மன்னனாகியவனும் என்னுடைய உயிருக்கு உயிரான நண்பனுமாகிய கர்ணனும், நாங்கள் வாழ்வதற்கு துணையாக இருக்கும் நம்பிக்கைக்கு உரியவர்களும், நீயும் மற்றும் இங்குள்ளவர்கள் அனைவரும் எனக்காகவே இருக்கின்றீர்கள்.

அங்கர்கோன்-துரியோதனனால் கொடுக்கப்பெற்ற அங்க தேசத்திற்கு அரசனானவன் கர்ணன்.

அன்றி யேயு மாசா னேகரால்
வென்றியே திரு வஸ்து வேண்டல்
ரொன்றியே தமெனக்குறு மேலுயிர்
பொன்றியெய் துபோக்குதல் மேற்கொண்டாற். 11

இப்போரில் துரோணாச்சாரியார் போயிருப்பதால், நமக்கு வெற்றியே! படையில் எதிரிகள் அனைவரின் உயிரையும் அவர் போக்குவார்.

ஆசான்-ஆசிரியர்-துரோணர், வஸ்து-பெரிய பொருள்-(வெற்றி)

எய்த வெங்கள் பிதாமக னேவலாகை கொன்கின்ற
கடற்படை கண்ணுறில் வெய்ய வீமன்
வியப்பொடு காத்திடுமைவர் தன் படை
யார றவற்றா குமோ! 12

எங்களின் பாட்டனராகிய வீடுமாச்சாரியாரின், உத்தரவின் பேரில், போரில் ஈடுபட்டுள்ள கடலைப் போன்ற பெரிய படையைப் பார்த்தால், கொடிய வீமன், தலைமை ஏற்று நடத்தும் பாண்டவர்களாகிய ஐவரின் படை எதிர்கொள்ள முடியுமோ!

பிதாமகன்-பாட்டனார்-வீடுமாச்சாரி, ஏவல்-உத்தரவு, கடற்படை-கடலைப்போன்ற பெரிய படை, ஐவர்-பாண்டவர்கள்.

மேல் வகுத்தி வாகமினி விரைந்தேனு
மேல் வயிற்தரியாதவ ரென் னோடுங்
கால் வளைத்த சிலைக் கங்கையாளரு மகன்
போல் வளைத்திர டன்னையும் வாய்வைத்தன். 13

இனி சீக்கிரமாக, எவ்விடத்தில் எங்கள் பாட்டனாராகிய வீடுமர் இருக்கின்றாரோ, அவரைக் காத்து நில்லுங்கள். கங்கையின் மைந்தனாகிய விடுமன்-தேவர்களோடு போர் புரிந்த வில்லையுடையவன். இப்போது வெள்ளை நிறமான சங்கை வாயில் வைத்து ஊதத் தொடங்கினான்.

சிலை - வில், கங்கையாள் மகன் - வீடுமன்.

வஞ்சகர்கள் சூழ்ச்சியின் காரணமாக
இக்கொடிய போர் செய்யும்படி நேரிட்டது
மன்னர்களின் மன்னனாகிய திரியோதனன்
மகிழும் படியாகவும், எதிரிப்படையில்
உள்ளவர்கள் பயந்து நடுங்கும் படியாகவும்
கர்ணன் சங்கெடுத்து ஊதினான். 14

வஞ்சர்-வஞ்சக, சூத மதியுடையவர், மறலி-எமன்-வெஞ்சமம்-கொடிய போர், வேந்தர்கோ-அரசர்க்கரசர்-சக்ரவர்த்தி, நேரலர்-விரோதிகள், ஆர்த்தனன்-ஒலி எழுப்பினான், கன்னர்-கர்ணன்.

ஆர்த்தன வளை களெங்கு மதிர்ந்தன பல்லியங்கள்
போர்த் திரட்படை நின்றப் பாற லப்புவன
மீரெழும் பூத்த தீர்த்தனுந் தனது சங்கைச்சொங்
கையால் வாங்கிக்கொண்டு
கார்த்திரள் முளக்க மென்னக் கடல்கீழாந்
தாற்த்த தென்ன. 15

சங்கின் ஒலியினாலே திசைகள் அதிர்ந்தன. போரில் திரண்டு நிற்கும் படைகளின் பல்லியங்கள் ஒலித்தன. ஈரேழு பதினான்கு உலகங்களிலும் விளங்கி நின்ற புண்ணியமூர்த்தியாகிய கண்ணனும் தன்னுடைய பாஞ்ச சன்னியம் எனும் சங்கைக் கையில் எடுத்து மழை மேகத்தின் இடி ஓசைபோலவும், கடல் கவிழ்ந்தலென்ன ஊதினான்.

ஆர்த்தனன்-ஒலி எழுப்பினான், வளைகள்-சங்குகள், பல்லியம்-ஒருவகைப் போர் இசைக்கருவி, திரட்படை-திரண்ட படைகள், புவன மீரேழு-ஈரேழு உலகங்கள், தீர்த்தன்-புனிதமானவன், கார்+திரள்=மேகக் கூட்டம், முளக்கம்-முழக்கம், கடல் கீழாந்தாற்றதென்ன-பூமியில் இருக்கக் கூடிய கடல் ஆகாயத்தில் கவிழ்நதாற்போல.

வேறு

வைய மனத் தையும் வாரிமுன் வைக்குஞ்
செய்ய திருப் பவளத்திடை வைத்தானைவ
ரெனக்குயி ராதலினாலே
யுய் வது மக்கரி தென பவன னொத்தான். 16

உலகத்தை வாரியுண்ட பவளம் போன்று சிவந்த வாயினிடத்தே சங்கினை வைத்து ஊதி பாண்டவர்களாகிய ஐந்து பேரும் எனக்கு என் உயிரைப் போன்றவர்கள், ஆகையால் என் எதிரில் இருக்கும் நீங்கள், துரியோதனனின் படைகள் பிழைப்பது அரிது என கண்ணன் கூறினான்.

வையம்-உலகம், பவளத்திடை-பவளம்போன்று சிவந்த நிறமுடைய உதடுகளைக் கொண்ட வாய். ஐவர்+எனக்கு=ஐவரெனக்கு, உய்வது-உயிர் பிழைப்பது.

தரும ண்டல வீமன் அருச்சுன னகுலச் சகாதேவன்
றிருமருவு விசையம் பவுண்டாந் தேவதத்த மேனில்
மருவிய புட்பகத்தொடு சுகோடமென மற்றிவற்றி
னுருமனைய குரல் திரந்தார் செவி புதைப்ப வூதினார். 17

வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் மற்று முள்ளோரின் காதுகள் அதிரும்படியாக ஒலிமிக்க சகோடமெனும் கருவியின் ஒலி மிகவாக ஒலிக்கும்படி சங்கினை ஊதினார்.

சகோடம்- ஒருவகை இசைக்கருவி, வூதினார் - ஊதினார்.

ஒன்றலாது பல வூதினார்கள் பலரூதும் வாய்
வளை யினோசை பொய்
நின்ற கௌரவர்க ளெஞ்சை யூடுவி யஞ்சாவ
னினும் நிரம்பி மேல்
வென்றி சேர் மாதுடங்கும் வேலையினில்
வெள்ளை மா நடவு தேரின் மேல்
நின்ற போர் விசைய னொன்று மாயனெதிர்
நில்லாமை யொடு சொலுவான். 18

ஒருவர் மட்டுமல்லாது பலரும் ஊதக் கூடிய சங்குகளின் ஒலியானது, கௌரவர்களாகிய, துரியோதனின் படை வீரர்களின் நெஞ்சை ஊடுறுவி, அவர்களைப் பயம் கொள்ளச் செய்தது.

வெற்றியைத் தரக்கூடிய இலக்குமி தேவியானவள், சேர்ந்திருக்கும் நேரத்தில், வெண்ணிறக் குதிரைகள் பூட்டப்பெற்ற தேரின்மேல் போரிற் சிறந்த அர்ச்சுனன், மாயவனாகிய கண்ணனின் முன்னின்று சொல்கிறான்.

வளையின் ஓசை-சங்கின் ஒலி, வென்றிசேர் மாது-வெற்றித் திருமகள். வெள்ளை மா-வெண்ணிறக் குதிரை.

யாவர் போர்க்கருதி யெய்தினார்க ளெதிரேயதி
நின்ற விவ ரங்களில்
யாவ ரோடமர் துடங்கலாமென வறிந்து
கோள் வளவும்
யாவையுங் காவல் பேணியவை தந்து
பின்னவை காத்து கொண்டருள்
செய் கண்ணனே மேவநீ கடவு மா
கோ டேரினை நிறுத்துவாயென
விளம்பினான். 19

போர் செய்ய விரும்பி யார் யாரெல்லாம் எதிரே நிற்கின்றார்கள், அவர்களில் எவருடன் போர் செய்யத் தொடங்கலாம் என்பதை, நேரங் காலம் யாவும் அறிந்து சொல்லி, எனக்குக் காவலாகவும் இருந்து என்னைக் காத்து அருள் செய்குவாய் கண்ணனே ! மேலும், நீ நடத்தும், குதிரைகள் பூட்டிய தேரினை நிறுத்துவாயாக என்றும் கூறினான்.

போர்க்கருதி-போரிட விரும்பி, அமர்-சண்டை, துடங்கலாம்-தொடங்கலாம், கோள் வளவு-நேரங் காலம், கடவு-நடத்துகின்ற, மா கோடேர்-மா+கோ+தேர்-குதிரைகள் பூட்டிய தேர்.

விளம்பு மவ்வளவில் மேக வண்ணனும் வெள்ளைமா
நடவு தே ரினைக்
களங் கொளும் பரிசு நின்ற தானை நடுவே
கடாவி யிதுகா ணென
வளங் கொள் கங்கை மகனாதியாக முடி
மன்னர் யாவரையும் முன்றுருத்
துளங்குகின்ற மொளியொடு நெஞ்சினோடு
வல்லவாறு சில சொல்லினான். 20

இவ்வாறு அர்ச்சுனன் கூறிய உடனே, மேக வண்ணனாகிய கண்ணன், வெண்ணிறக் குதிரைகள் பூட்டிய தேரை, போர்க்களத்தில் வெற்றியை அடைய வேண்டி நின்ற படைகளின் நடுவிலே கொண்டுபோய் நிறுத்தி, வீரமிக்க கங்கையின் மகனாகிய பீஷ்மர் முதல் போரிட வந்திருக்கும் மன்னர்களின் முன்னிலையில் ஒளி வீசக்கூடிய கிரீடத்தையுடைய அர்ச்சுனனிடம், ஏற்றவாறு இதோ பார் என்று சிலவற்றைச் சொல்லத் தொடங்கினான்.

வெள்ளைமா நடவு தேர்- வெண்ணிறக் குதிரைகள் பூட்டிய தேர். களங்கொளும் பரிசு-களம்+கொள்ளும் பரிசு, போரிலே வெற்றி கொள்ளும் பொருட்டு, தானை-சேனை, கங்கை மகன்-வீடுமன், மௌலி-மன்னர்கள் அணியும் கிரீடம்-முடி.

வேறு

தாவி லருந் தந்தையருந் தையர் தந்தந்தையரு
மேவியுடன் பிறந்தாரு மெஞ்ஞான மழிக்காடு
மாவி யெள் நட்டாரு மான்றொரு மாகாரே
மேவிய வெம் பொருட்டாக வீடு வான் றுடங்கினார். 21

அருமை மிகு தந்தையர்க்கு சமமானவர்களும், எம் வீட்டுப் பெண்களின் தந்தையர், மாமனார் மற்றும் அவ்வுறவுக்குச் சமமானவர்களும் உடன் பிறந்தவர்களும், என்னுடைய அறிவை வளர்த்த ஆசிரியர்களும், என் நாட்டில் உள்ளவர்களும், ஆன்றோர்களும் ஆகிய அனைவரும் எங்களின் வெற்றிக்காக, தம்முயிரை வீழ்த்திட வந்து கூடியுள்ளார்கள்.

தையர் தந தந்தையர்-தையல் தம் தந்தை-பெண்களின் தந்தைமார்கள். மெஞ்ஞான மழிக்கார்-அறிவினைப் புகட்டிய ஆசிரியர்கள், நாட்டார்-நாட்டுக் குடிமக்கள், வீடுவான்-வீழ்வான்-உயிரை மாய்த்துக்கொள்ள.

தீதறு சிறுவர் மற்றவர்கள் சேய்களு
மாதுவரிவர் களோ மாய்கின்றா ரெனக்
காதல் செய்திடரி னாற் கலக்க முற்றவன்
மாதவ னெதிர் சில மறித்துங் கூறினான். 22

குற்றமேது அறியா சிறுவர்கள், மற்றும் அவ் வீரர்களின் குழந்தைகள் மனைவியர்கள் ஆகியோர் தங்களின் உறவினர் போரில் இறப்பதால் துயர் அடைகின்றார்களே என்பதால் அன்பு மிகவாகி அதுவே அவனுக்குத் துன்பம் தருவதாதலால், மனம் கலங்கி, கண்ணனிடம் சில மீண்டும் கூறலானான்.

தீதறு-குற்றமற்ற, சேய்கள்-குழந்தைகள், மாதுவரிவர்-மனைவி மார்கள், மாய்கின்றார்-இறக்கின்றார். காதல்-அன்பு, கருணை, இடர்-துன்பம், மறித்து-மீண்டும்.

வாயே யின்றி முகம் புலரு மனமொன்றுணரமாட்டாது
தீயே யென்ன உடல் வெதும்புஞ் செவ்வு நிற்கமாட்டுகு
லெனவே
யேதருதிண காண்டீப வில்லும் நலுவி விழா நின்றதியா
யெயனை யாய்
போர் நின்ற விவரத்தைக் காணுந்தோறு மென்னே ! 23

என் வாயினால் எதுவும் பேச முடியவில்லை. மனத்தாலும் ஏதும் உணர முடியவில்லை. என் உடலில் நெருப்பு சுட்டாற்போல் வெந்து வெதும்புகிறது. என்னால் நிற்கவும் இயலவில்லை. வெற்றியைத் தருகின்ற காண்டீபம் எனும் வில் நழுவி விழுகின்றதே ! இது ஏன்? இப்போர் இவ்வாறு இருப்பதன் காரணத்தைக் கூறுவாய்.

நலுவி-நழுவி, விழாநின்ற-விழுகின்ற, தீயே என்ன-நெருப்பைப் போல.

ஓதலாகா நிமித்தங்க ளொன்றே யல்லப் பல வுழவாங்
காதலாரைக் கொன்று பெறும் பயனோ யாதுங் காணெனா
னாதலினாலிவ் வென்றி யுடனர் சிணுனுரிமை யாதனை
யேத லாவ தென்கின்ற யாதின் பொருட்டோ வியம்பாயால்.24

சொல்லமுடியாதபடி சகுணங்கள் பல தோன்று கின்றன. அன்பிற்குரியவர்களை எல்லாம் கொன்று என்ன பயனைக் காணப்போகிறேன். ஆகையால் இந்தப் போரில் நான் வெற்றிபெற்று என்ன பயனை அடையப் போகிறேன். இநதப் போரை நான் எதற்காகச் செய்ய வேண்டும் என்பதைக் கூறுவாயாக.

ஓதலாகா-வெளியில் சொல்ல முடியாத, நிமித்தம்-சகுணம்-அறி குறிகள், காதலர்-அன்பிற்குரியவர்கள். யாதின் பொருட்டு-என்ன காரணத்திற்காக.

அரசவ் வரசால வரும் போக மதனா லின்ப மெய்துமென
வுரைசெய் பொருகள் யாவர் சிலர் பொருட்டா லுலகருந்
தடைவா
வரை செய் புயனே மற்றவர் தம் பொருளுந் தங்கள்
வானாளுநீ
நிரை செய்தொரு வரொருவரின் முன்னிற்க வந்து
நின்றாரால். 25

அரசப்பதவி என்பது வரும் போகும். சிலர் அப்பதவி இன்பத்தைக் கொடுக்கும் எனக் கூறுவர். மலையைப் போன்ற தோள்களை யுடையவனே ! ஒருவர் தாம் பெற்ற செல்வத்தையும், வாழ்நாளையும் முடித்துக்கொள்ளும் முன்னதாக அவரை முந்திக்கொண்டு வேறொருவர் வந்து நிற்பர்.

வரை-மலை, வாழ்+நாள்=வானாள்.

ஆன பொருளீதாதி னால்வரைக் கொன்றால் ருள்சொர்
வினமன்றி எங்களுக்கோ ரின்ப மெங்கு மில்லையார்
கூனல் வரிவிற் கொண் டென்னைக் கோலினும் வதையான்
கோரல்
வானம் பெரினும் மாட்டேனான் மண்ணின் பொருட்டால்
வல்லேனோ 26

இங்கேயுள்ள, இவர்களைக் கொல்வதால் எனக்குக் கெட்டபெயர் தான் கிடைக்குமேயன்றி, இன்பம் ஏதும் இல்லை. வளைந்த வில்லினால் என்னைக் கொன்றாலும் கொன்றுவிடு, வானமே கிடைக்குமென்றாலும் இச் செயலைச் செய்யமாட்டேன். பூமியைப் பெறுவதற்காக இதனைச் செய்வோனோ ?

ஈனம் - கெட்ட பெயர், கூனல்-வளைந்த, கோல்-கொல்.

கொற்றவர் தங்குலங் கெடுத்தால் வருகின்ற குற்றமுமே
யுற்ற வந்த திறம் பிழைத்தாலு றுகின்ற வுயர் பழியு
மற்றவர் களறியாது மறந்திடுக மறந்தாலுங்
குற்றமென வறிந்த நான் குறிக்கொள்ளா தொழிவேனோ.27

இப்போர்க்களத்திலே உள்ள மன்னர்களை அழிப்பதால் உனக்குப் பழி உண்டாகும். அன்றி அவர்களைப் பிழைத்துப் போகும்படி விட்டுவிட்டாலும், போரில் தோற்றதற்கான பழி வந்து சேரும். எனவே, இதனை மற்றவர் யாரும் அறியாதபடி மறந்துவிடு. ஆனால் எது குற்றம் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்ட நான் அவைகளை மறக்கவே மாட்டேன்.

கொற்றவர்-மன்னர்கள், குலங்கெட-குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் அழிய, பிழைத்தல்-தப்பித்தல். குறிக்கோள் நினைவில் கொள்ளுதல்.

குலங்கிடவே வருகின்ற குலதருமங் கெடுதரும்
நலங்கெடவே குலம் பாவம் நண்ணும் நண்ணவே
யிலங் கிழையார் நெரிதிரிவரி வாக ணெரி திரியவே
தலங் குலவு குலமெல்லாந் தலை தடுமாறாகுமால். 28

நற்செயல்கள் குறைந்து தீயச்செயல்கள் அதிகமாகும் போது, குலதருமம் அழியும் நற்குலங்கள் கெடும். நற்குலப் பெண்கள் கூட தம் வழியினின்று விலகி நெறிகெட்டு திரிவார்கள். நற்குல மக்கள் கூட தடுமாற்றம் அடைவார்கள்.

குலதருமம்-குலத்திற்குரிய விதிமுறைகள். இலங்கிழையார்-இளம் கிழையார்-பெண்கள். நெரிதிரிவரிவராக-நெறிகெட்டவர்களாக.

தடுமாற்ற மக்குத்தே சார்ந்தவர்க்குஞ் சார்ந்தே
கெடுமாற்றம் நினைந்த வர்க்குங் கேடாயங் கிடைப்பிக்கும்
படுமாற்ற மென்னுரைக் கென பண்டிரந்தோர் களுந்
தமக்கொன்
றிடுமாற்ற லவர்கள் பெறாதிரு நரகத் திழி வர்களால். 29

குலத்திற்குக் கெட்டபெயர் உண்டாகும்படி ஒருவர் நடந்து கொண்டால் அது அவருடைய குலத்திற்கே கேட்டை உண்டாக்கும். மேலும் அவ்வாறு குலக் கேடான செயல்களைச் செய்ய நினைத்தவர்களுக்கும் கேடு வந்து சேரும். இறந்துபோன முன்னோர்களும் கூட, அவர்களுக்கு இடம்பெறும் பிண்டமும் நீரும் இல்லாது நரகத்தில் வீழ்வார்கள்.

பெறாது-பிண்டங்களைப் பெற இயலாது. தடுமாற்றம்-நிலை தடுமாறி குற்றம் செய்தல், இரந்தோர்-இறந்தோர்-மாண்டவர்கள். பண்டு-முன்பு-முன்னாளில்.

வாராநின்ற குலமயங்கப் பண்ணினாற்கு மற்றதனைச்
சாரா நின்ற குலத்திற்குந் தருமந் தளர்ந்து சாயு மால்ச்
சாரா நின்ற குலந் தரும மிரண்டுந் தளர்ந் சாயவே
பேரா நிரையம் பிளைத்த தெனப் பெரியோ ரெல்லாம்

பேசுவரால். 30

கேடு விளைவிக்கும் செயலைச் செய்த குலத்தவர்க்கு மட்டுமல்லாமல், அவ்வாறு அக்கேடு செய்தவர்களை அவ்வாறு செய்தார்க்கு தூண்டியவர்களுக்கும், குல தருமம் கேடுறும்.

இவ்வாறு இரண்டு குலங்களிலும் குலதர்மம் கெட்டுவிட்ட காரணத்தால் தரும நியாயம் முற்றிலும் கெட்டுப் போய்விட்டதாகப் பெரியோர் கூறுவர்.

குலம் இரண்டும்-கேடு செய்த, செய்வித்த குலம் இரண்டும். பேரா நிரையம்-மாறாத தருமம், பிழைத்ததென-கெட்டுவிட்டது என்று.

மின்னே யனைய செல்வத்தை வேண்டித் தங்கள் மெய்யு யிரைக்
கொன்னே கழிக்க நின்றவரைக் கொல்லித் துணந்த கொடு

வனையே

னென்னே கொடிய பெரும் பாவ மெய்த நினைந் தென

யானுமிவர்

முன்னே விட்ட மாதிறந்து நின்னா லிவர்கள் முனியாமே. 31

மின்னலைப் போன்று தோன்றி மறையக் கூடிய செல்வத்தை விரும்பி, தங்களின் மேலான உயிரைக் கொன்று நீக்க இக்கொடியவர்களை நான் கொல்லத் துணிவது கொடுஞ்செயலாகும். என் கையில் உள்ள போருக்கான ஆயுதங்களை விட்டுவிட்டு நின்றபோது இவர்கள் என்னைக் கொன்றாலும் பாவம் இல்லை.

மின்-மின்னல், கொன்னே கழிக்க-கொன்று முடிக்க, முனியாமே-கோபம் கொண்டு கொல்வாரே !

கொல்லினு மெனக்கிது பொறுக்கை குண
கல்லி நிகர் தொள விடலை கண்ண னெதிர் கூறி
வில்லினுடனே பகழி சோர விழி சோரச்
செல்லும ணியாழி யணிதேர் மிசை இருளதான். 32

கண்ணா ! அவ்வாறு என்னைக் கொன்றாலும் நான் பொறுத்துக்கொள்வேன் என்று கூறி, வில்லையும், அம்புகளையும் கீழே போட்டுவிட்டு, உடல் சோர்வடைந்து தேரின் மீது அமர்ந்து விட்டான் அருச்சுனன்.

பொறுக்கை- பொறுத்துக் கொள்வதே, பகழி-அம்பு.

முதல் அத்தியாயம் நிறைவு.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–1

அர்ச்சுன விசாத யோகம்

1. திருதராஷ்ட்டிரன் சஞ்சயனிடம், தர்மம் விளங்கக் கூடிய நிலமாகிய குருச்சேத்திரமெனும் போர்க்களத்தில், விருப்பத்துடன், ஒன்றுகூடித் திரண்ட பாண்டவர்களும் கௌரவர்களாகிய நம்மவர்களும் என்ன செய்தார்கள்? என்று கேட்க.

2. அணி வகுத்து நின்ற, பாண்டவர்களின் படையைப் பார்த்த, துரியோதனன், தன்னுடைய ஆசிரியராகிய துரோணரிடம் போய் இவ்வாறு சொல்கிறான்.

3. ஆச்சாரியாரே ! துருபதன் மகனும் தங்களுடைய சீடனுமாகிய பெரியவீரனால் அணிவகுக்கப்பெற்றுள்ள இந்த பாண்டவர்களின் படையைப் பாருங்கள்.

4. இங்கு, போர்த்திறமிக்க, பெரிய வில்லாளிகளும் போர் செய்வதில், வீமனையும், அருச்சுனனையும் ஒத்தவர்களாகிய பலரும் இருக்கிறார்கள். யுயுதாதனன், விராடன், மகாரதனாகிய துருபதன்,

5. திருஷ்டகேது, சேகிதானன், வீரமிக்க காசிராஜன், புருஜித், குந்திபோஜன், மனிதர்களில் வீரமிக்கவனாகிய சைவியன்.

6. வலிமைமிக்க யுதாமன்யு, உத்தமௌஜா என்ற வீரன், சுபத்திரையின் மகன், திரௌபதியில் புத்திரர்கள், இவர்கள் எல்லாரும் மகாரதர்கள் (பெரிய தேரினை உடையவர்கள்.

7. இனி எனது படைக்குத் தலைவர்களாகிய, நமது படைவீரர்களில் சிறந்தவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள். இரு பிறப்பாளிகளில் மேம்பட்டவரே, குறிப்பிட்டு சொல்லும்படியா அவர்கள் யார் என்பதை உனக்குச் சொல்கிறேன்.

8. தாங்கள், பீஷ்மர், கர்ணன், தன்னுடன் போரிட வருவோரை வெல்லக் கூடியவனாகிய கிருபன், அசுவத்தாமன், விகர்ணன், சோமதத்தனின் மகன், இன்னும் வேறுபல மாவீரர்கள்.

9. எனக்காக, தங்களின் வாழ்க்கையை துறந்தவர்கள், பலவிதமான, ஆயுதங்களையும், அம்புகளையும் உடையவர்கள் இவர்கள் அனைவருமே போர் செய்வதில் திறமை மிக்கவர்கள்.

10. என்றாலும், பீஷ்மரால் காக்கப்படக்கூடிய நமது படைகள் கண்களுக்கு நிறைவாகத் தோன்றவில்லை, பீமனால் தலைமை ஏற்று நடத்தப்பெறுகிறதும் அவனால் காக்கப்படுவதுமாகிய பாண்டவர்களின் படையோ நிறைவாகவே இருக்கிறது.

11. நீங்கள் அனைவரும் பிரிக்கப்பெற்றுள்ள, படைப் பிரிவுகளின்படி எல்லா இடங்களிலும் நின்றுகொண்டு, பீஷ்மரைப் பாதுகாக்க வேண்டும்.

12. அந்த நேரத்தில் புகழ்மிக்க கௌரவர்களின் பாட்டனார் வயது முதிர்ந்தவரான பீஷ்மர், துரியோதன னுக்கு மகிழ்ச்சி உண்டாகும்படி உயர்ந்த குரலில் சிங்கத்தைப் போல உரத்து-தனது சங்கை ஊதினார்.

13. பிறகு, போர்க்களத்தில் சங்குகளும், பேரிகைகளும், தாரை தப்பட்டை, கொம்பு ஆகிய கருவிகளும் ஒலிக்கத்தொடங்கின. இது பெருத்த ஓசையை உண்டாக்கியது.

14. பிறகு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய பெருந்தேரில் நின்ற மாதவனும், அருச்சுனனும் தங்களுடைய தெய்வீகத் தன்மையினதான சங்கினை ஊதினார்.

15. கண்ணன், பாஞ்ச சன்னியம் என்ற தன்னுடைய சங்கை ஊதினான். அருச்சுனன் தேவதத்தம் எனும் சங்கினை ஊதினான். அஞ்சுவதற்குரிய ஓநாயின் வயிற்றைப் போன்ற வயிற்றினையுடைய பீமன் "பௌண்டரம்" என்ற பெரிய சங்கை எடுத்து ஊதினான்.

16. குந்தி மகனான யுதிட்டிரன் அனந்த விசயம் என்ற சங்கையும், நகுலன் சுகோஷம் என்ற சங்கையும், சகாதேவன் மணி புஷ்பகம் என்ற சங்கையும் ஊதினார்கள்.

17. வில்லாளிகளில் மிகச் சிறந்தவனாகிய காசிராஜனும், பெரிய தேரினையுடைய சிகண்டியும், திருஷ்டத்யும்னனும், விராடனும், எவராலும் வெல்ல முடியாத சாத்யகியும்,

18. துருபதனும், திரௌபதியின் புத்திரர்களும், சுபத்திரையின் மகனாகிய பெருந்தோளினையுடைய வனும், தனித்தனியே அவரவர்களின் சங்குகளை ஒலிக்கச் செய்தனர் பூமிக்குத் தலைவனே !

19. அந்தப் பெரிய முழக்கம் விண்ணையும் மண்ணையும், ஒன்றாக ஒலிக்கச் செய்வதாய், திருதராட்டிரக் கூட்டத்தாரின் நெஞ்சங்களைப் பிளந்தது.

20. இதற்குப் பிறகு, இரண்டு பக்கங்களிலிருந்தும் அம்புகள் பறக்கத்தொடங்கின. அப்போது அநுமக் கொடியினையுடைய அருச்சுனன் திருதராட்டிரக் கூட்டத்தாரை நோக்கி, வில்லினை யேந்திக்கொண்டு, கண்ணனைப் பார்த்து சொல்கிறான்.

21. அர்ச்சுனன் சொல்கிறான், அச்சுதா-படைகள் இரண்டிற்கும் இடையிலே என்னுடைய தேரைக் கொண்டுபோய் நிறுத்துவீராக என்று சொன்னான் என்பதைக் கேள் திருதராஷ்ட்டிரரே !

22. போரை விரும்பி நிற்கும் இவர்களை நான் பார்க்க வேண்டும். முதன்முதலில் என்னோடு போரிடப் போகிறவர் யார் ?

23. தீய மனம் கொண்ட துரியோதனன் மகிழ்ச்சி அடையும்படி இங்கே போர் செய்ய நிற்பவர்களை நான் காணவேண்டும் என அருச்சுனன் கூறுகிறான்.

24. சஞ்சயன் தொடர்ந்து திருதராட்டிரரிடம் கேளாய், இப்பாரத நாட்டின் அரசே ! இவ்வாறு அருச்சுனன் உரைத்ததைக் கேட்ட கண்ணன் மிகவும் பெருமை மிக்க அந்தத் தேரை, இரண்டு படைகளின் இடையே கொண்டு போய் நிறுத்தினான்.

25. பீஷ்மருக்கும், துரோணருக்கும் மற்றும் உள்ள எல்லா வேந்தர்களுக்கும், எதிரே தேரை நிறுத்திய பின்னர், அருச்சுனா ! இங்கு கூடி நிற்கும் கௌரவர்களைப் பார் ! என்றான் கண்ணன்.

26. அங்கே அருச்சுனன் தன்னுடைய தந்தையாரும்-பாட்டன்மாரும், ஆசிரியர்களும், தாய்வழியினரும், அண்ணன் தம்பிகளும் தன்னாட்டு மக்களும், அன்பிற்குரிய நண்பர்களும் நிற்பதைக் கண்டான்.

27. அதுபோலவே, மாமன்னர்களும், நண்பர்களும், உறவினர்களும், இரண்டு படைகளிலும் நின்று கொண்டிருப்பதைக் கண்டு அருச்சுனன் இரக்கமுற்றவனாகவும், துயரமடைந்தவனாகவும் சொல்கிறான்.

28. கண்ணா போர் செய்யவேண்டி இங்கு கூட்டமாகத் திரண்டு நிற்கும், என்னுடைய சுற்றத்தார்களைக் கண்டு,

29. என்னுடைய உடல் உறுப்புகள் அனைத்தும் சோர்வடைகின்றன. வாய் உலருகிறது, என்னுடைய உடல் நடுங்குகிறது. மயிர் சிலிர்க்கிறது.

30. என் கையில் உள்ள காண்டீபம் என்ற வில் நழுவுகிறது. என் உடம்பில் எரிச்சல் உண்டாகிறது. என்மனம் குழப்பமடைகிறது. என்னால் நிற்கவே முடியவில்லை.

31. விபரீதமான சகுனங்களைக் காண்கிறேன். போரிலே சுற்றத்தார்களைக் கொல்வதினால் எனக்கு என்ன நன்மை உண்டாகப்போகிறது என்று தெரியவில்லை.

32. நான் இந்தப் போரில் வெற்றியடைய விரும்பவில்லை. வெற்றியினால் பெறக்கூடிய நாடுகளையும், அதன் காரணமாகப் பெறக்கூடிய இன்பங்களையும் விரும்பவில்லை. அவ்வாறு உயிர் வாழ்வதால் இன்பமேது? கோவிந்தா !

33. எவர்களுக்காக அரசபோகத்தையும் இன்பங் களையும், செல்வத்தையும் அடைய விரும்புகிறோமோ, அவர்கள் இந்தப் போரில் தங்கள் உயிரையே இழந்தவர் களாக இங்கு வந்து முன்னிற்கிறார்கள்.

34. குருமார்கள், தந்தை, மகன்கள் மற்றும் பாட்டனார்கள், மாமன் மற்றும் மாமனார்கள், பேரர்கள், மைத்துனர்கள் என்று உறவின்முறை உடையவர்கள் அனைவரும் இங்கு வந்திருக்கிறார்கள்.

35. மதுசூதனா ! இந்தப்போரில் நான் மடிந்தாலும், கொல்லப்பட்டாலும், இவர்களைக் கொல்வதால் எனக்கு மூவுலக ராஜ்ஜியங்களும் கிடைக்குமென்றாலுங் கூட நான் இவர்களைக் கொல்ல விரும்பவில்லை. வெரும் பூமியை வேண்டி நான் இவ்வாறு செய்யவேண்டேன்.

36. ஜனார்த்தனா! இந்த திருதராஷ்ட்டிரக் கூட்டத்தாரைக் கொல்வதால் நாம் என்ன இன்பத்தை அடையப்போகிறோம்? இந்தப் பாவிகளைக் கொல்வதால் நமக்குப் பாவமே வந்து சேரும்.

37. ஆகையால் சுற்றத்தாராகிய, திருதராஷ்ட்டிரனைச் சேர்ந்தவர்களைக் கொல்வது நமக்குத் தகாத செயல் ஆகும். மாதவா ! உறவினர்களை எல்லாம் கொன்றுவிட்ட பிறகு நாம் எப்படி இன்பமாக இருக்க முடியும் ?

38. ஆசையின் மிகுதியால், அறிவை இழந்த இவர்கள் தங்கள் குலத்தையே அழிப்பதால் ஏற்படக்கூடிய தீமைகளையும், நண்பர்களின் எதிராக சதி செய்வதில் உள்ள பாதகத் தன்மையையும் இவர்கள் அறிந்திருக்க வில்லை. ஆனாலும்,

39. ஜனார்த்தனா ! குல நாசத்தால் வரக்கூடிய குற்றத்தை நன்றாக அறிந்துள்ள நாம் அப்பாபத்திலிருந்து விலகிக்கொள்ள அறியாமல் இருப்பது என்ன நியாயம்?

40. குலநாசம் செய்யப்படுவதால், தொன்று தொட்டு வருகின்ற குலதருமங்கள் அழிகின்றன. தர்மம் அழிவதால், குலம் முழுவதும் அதர்மம் பரவுகிறது.

41. கிருஷ்ணா ! அதர்மம் சூழ்வதால், நற்குலப் பெண்கள், கற்பு நிலை கெட்டுப் போகிறார்கள், அவ்வாறு கெட்டுவிட்டப் பெண்களால், சாதிக்கலப்பு உண்டாகிறது. குழப்பம் உண்டாகிறது.

42. இவ்வாறு குழப்பம் ஏற்படுவதால், நல்ல குலத்தவர்க்கு மட்டுமல்லாது, அக்குலத்தோரை அழித்தவர்களுக்கும், இவர்களுடைய முன்னோர்களும் கூட (முன் இறந்தவர்கள்) தங்களுக்குரிய பிண்டமும், நீரும் கிடைக்கப்பெறாமல் நரகத்தில் வீழ்கிறார்கள்.

43. ஜாதிக் குழப்பம் உண்டாகும்படி இந்த குலக் கேடர்கள் செய்யும் குற்றங்களின் மூலம் ஜாதிகளுக்கு உரிய தர்மங்களும், காலங் காலமாக நிலையாக இருந்து வரக்கூடிய குலதர்ம விஷயங்களும் அழிந்துபோகின்றன.

44. ஜனார்த்தனா! குல தர்மங்களிலிருந்து விட்டு, விலகிப்போன மனிதர்களுக்கு அளவற்ற காலத்திற்கு நரகத்தில் இருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது என்று நாம் அறிகிறோம்.

45. அந்தோ பரிதாபம்! நாட்டை ஆளவேண்டும் என்ற சுகத்திற்கு ஆசைப்பட்டு, பெரிய பாவச்செயலைச் செய்வதற்கு நாம் துணிந்துவிட்டோம். சுற்றத்தார்களைக் கொல்லவும் முற்பட்டுவிட்டோம்.

46. கையில் போர் செய்வதற்கான ஆயுதங்கள் எதுவும் இல்லாமல் நின்றுகொண்டிருக்கும் என்னை, ஆயுதங்களைத் தாங்கியுள்ள இந்த திருதராஷ்ட்டிரக் கூட்டத்தினர் ஒருவேளை என்னை இந்தப் போரில் கொன்றுவிட்டாலும் கூட அது எனக்கு நன்மையே ஆகும்.

47. போர்க்களத்தில் இவ்வாறு கூறிவிட்டு, சோகத்தினால் கலங்கிய மனத்துடன் தன் கையில் இருந்த வில்லையும், அம்புகளையும், எறிந்துவிட்டு தேர்த் தட்டிலே உட்கார்ந்து விட்டான் என்று, சஞ்சயன் திருதராஷ்ட்டிரரிடம் கூறினான்.

விளக்கவுரை

இவ்விளக்கவுரை சுவடி ஆசிரியரால் இயற்றப் பெற்றுள்ள விருத்தங்களில் உள்ள கருத்துக்களும், வியாசரின் பகவத் கீதையில் உள்ள சுலோகங்களில் காணப்பெறும் கருத்துக்களும் எந்த அளவு ஒத்து உள்ளன என்பதைக் கண்டறியவும், வியாசரின் கருத்துக்கள், சுவடி ஆசிரியரால் முழுவதுமாகக் கூறப்பெற்றுள்ளனவா, அல்லது ஏதேனும் விடுக்கப்பெற்றுள்ளனவா, அல்லது வியாசரைவிட மேலும் கூடுதலான செய்திகள் ஏதும் சொல்லப்பெற்றுள்ளனவா என்பதைக் கண்டறியும் பொருட்டும் கொடுக்கப்பெறுகிறது. தேவையான இடங்களில் சிறிய அளவில் விளக்கங்களும் கொடுக்கப் பெற்றுள்ளன.

சுவடி ஆசிரியர், வியாசரின் பகவத்கீதையைத் தமிழில், நேரடியான மொழிபெயர்ப்பாக விருத்தங்களை எழுதவில்லை. அதாவது ஒரு சுலோகத்திற்கு ஒரு விருத்தம் என்ற வகையில் எழுவில்லை. வியாசர், தமது பகவத்கீதையை எழுநூற்று ஒரு சுலோகங்களாக இயற்றியுள்ளார். ஆனால் சுவடி ஆசிரியர் ஐந்நூற்று எண்பத்தைந்து விருத்தங்களையே பாடியுள்ளார். ஆயினும் வியாசரைப் போன்று பதினெட்டு அத்தியாயங் களாகவே தாமும் பிரித்துக் கொண்டுள்ளார். ஒரு முழு அத்தியாயத்தை ஒரு அலகாகக் கொண்டு விருத்தங்களைத் தேவையான அளவில் எழுதியுள்ளார்.

அத்தியாயம்–1. வியாசர் தமது பகவத்கீதையின் முதல் அத்தியாத்திற்கு நாற்பத்தேழு சுலோகங்களை இயற்றி யுள்ளார். அர்ச்சுன விசாத யோகம் எனத் தலைப்பிட்டுள் ளார். சுவடி ஆசிரியர் தமது முதல் அத்தியாயத்திற்கு சோகவத்தியாயம் எனத் தலைப்பிட்டு, கடவுள் வாழ்த்து விருத்தங்களைத் தவிர முப்பத்திரண்டு விருத்தங்களை இயற்றியுள்ளார்.

விருத்தம் 1. கடவுள் வாழ்த்து- விநாயகரை வணங்குதல் சிவன் மகன் என்றோ, பார்வதி மகன் என்றோ குறிப்பிடாமல் பாதியோர் பெண்மையினான் பெற்ற சோதி எனக்கூறியிருப்பது சிறப்பு.

விருத்தம் 2. கீதையின் நாயகனாகிய கண்ணனை வழிபடும் விருத்தம்.வேதங்களின் உட்பொருளே கண்ணன் எனத் தொடக்கத்திலேயே குறிப்பிடுவது சிறப்பு.

விருத்தம் 3. இதுவும் கண்ணனைப் போற்றும் விருத்தம். கீதையை உரைத்தவனாகிய கண்ணனை வணங்குகிறேன் என்றது.

விருத்தம் 4. வியாசரால் இயற்றப்பெற்றதான பகவத் கீதையைத் தமிழில் ஆக்கியுள்ளேன் என்பதை இவ்விருத்தத்தில் சுவடி ஆசிரியர் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

விருத்தம் 5. இதுவும் கண்ணனை வணங்குவது.

விருத்தம் 6. தான் எதற்காக இந்த பகவத்கீதை விருத்தங்களை எழுதியுள்ளேன் என்பதற்கான காரணத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

விருத்தம் 7. இதுவரை கூறப்பெற்ற ஆறு விருத்தங் களும் இறை வணக்கப் பகுதியாகக் கொள்ளவேண்டும். இந்த ஏழாவது விருத்தம்தான் பகவத் கீதையின் தொடக்கச் செய்தியைக் குறிப்பிடுகிறது. இவ்விருத்தத்தில் உள்ள செய்தி வியாசரின் பகவத்கீதையின் இவ்வத்தியா யத்தின் முதல் சுலோகமாக இருப்பதைக் காணவும்.

விருத்தம் 8. அருச்சுனன் கண்ணனிடம் கேட்பதாக உள்ள விருத்தம்-வியாசரின் இரண்டாவது சுலோகம், துரியோதனன், துரோணரிடம் கேட்பதாக உள்ளது. சுவடி ஆசிரியர் துரியோதனனின் படைகளைப் "புல்லவற் படை" எனக் குறிப்பிடுகிறார்.

விருத்தம் 9. அருச்சுனனிடம் கண்ணன் போர்க் களத்தில் வந்திருப்பவர்களைப் பற்றிக் கூறியது-வியாசரின் மூன்றாவது சுலோகம், திரியோதனன் தொடர்ந்து கூறுவதாக அமைந்துள்ளது.

விருத்தம் 10. கண்ணன் தொடர்ந்து அருச்சுனனிடம் கூறுவது-வியாசரின் நான்காவது சுலோகம் இதனை ஒத்த செய்தியைக் கூறவில்லை.

விருத்தம் 11. துரோணரின் பெருவீரம் பற்றிக் கூறுவது. வியாசரின் நான்காவது சுலோகம் இதனை ஒத்த செய்தியைக் கூறவில்லை.

விருத்தம் 12. வீடுமாச்சாரி மற்றும் வீமனைப் பற்றிக் கூறுவது-இதுவும் வியாசரில் வேறுபாடாகவே உள்ளது.

விருத்தம் 13. வீடுமன், போரைத் தொடங்குதற்கான சங்கினை ஊதுகிற செய்தி-இது வியாசரின் பன்னிரண்டாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 14. கண்ணன் சங்கினை ஊதிய செய்தி. இது வியாசரின் பதினான்காவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 15. கண்ணன் சங்கினை ஊதிய செய்தி- இது வியாசரின் பதினைந்தாவது சுலோகத்தில் உள்ளது. வீமனும் சங்கினை ஊதியதான செய்தி உள்ளது.

விருத்தம் 16. சங்கெடுத்து ஊதிய கண்ணன் - துரியோதனின் படைகள் பிழைப்பது அரிது எனக் கூறுகிறான். இப்படி எதுவும் வியாசர் கூறவில்லை.

விருத்தம் 17. வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் தத்தமது சங்குகளை ஊதிய செய்தி. இதுவும் வியாசரால் தனது பதினாறாவது சுலோகத்தில் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 18. பலரும் சங்கினை ஊதுகின்றனர். அர்ச்சுனன் கண்ணனிடம் பேசத்தொடங்கினான். இது வியாசரின் பதினெட்டு மற்றும் பத்தொன்பதாவது சுலோகங்களில் உள்ளது. இருபதாவது சுலோகத்தில்தான் அர்ச்சுனன் கண்ணனிடம் பேசுவதாக உள்ளது.

விருத்தம் 19. யாருடன் போர் செய்யவேண்டு மெனக் கேட்ட அருச்சுனன், தேரை ஓட்டி வரக்கூடிய கண்ணனிடம் தேரை நிறுத்தும்படியும் கூறுகிறான். இச்செய்தி இருபத்தோறாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 20. அர்ச்சுனன் சொல்லியபடி தேரை நிறுத்திய கண்ணன் பேசத்தொடங்கினான். கண்ணன் தேரை நிறுத்திய செய்தி இருபத்து நான்காவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 21. போர்க்களத்திற்கு வந்திருப்பவர்களைப் பற்றிக் கூறப்பெறுகிறது. வியாசரின் இருபத்தைந்து மற்றும் இருபத்தாறாவது சுலோகங்களில் இச்செய்தி உள்ளது.

விருத்தம் 22. அர்ச்சுனனின் மனம் கலக்கமுற்றது. கண்ணனிடம் கூறுகிறான். இருபத்தெட்டு, இருபத் தொன்பதாவது சுலோகங்களில் இச்செய்தி உள்ளது.

விருத்தம் 23. இந்தப் போரை செய்யத்தான் வேண்டுமா என அர்ச்சுனன் கேட்கிறான்.

விருத்தம் 24. முதல், அருச்சுனன் தன்னுடைய மன நிலையை விளக்கி-உயிர்களைக் கொல்வது பாவச்செயல்-அதிலும் உற்றார், ஆசிரியோர் ஆகியோரை எல்லாம் கொன்றுவிட்டு, இந்த இராஜ்ஜியத்தைப்பெற்று என்ன பயன். நான் அவர்களைக் கொல்வதற்குப் பதில் அவர்கள் என்னைக் கொன்றாலும் நன்றே ! என்றெல்லாம் கூறித் தன் கையில் வில்லைக் கீழே போட்டுவிட்டு சோர்ந்து அமர்ந்துவிட்டான் என்பதாக விருத்தம் முப்பத்தி ரெண்டும் நிறைவடைகிறது.

இதே செய்திகள்தான் வியாசராலும் தமது நாற்பத்து ஏழாவது சுலோகங்கள் வரை விரிவாகக் கூறப் பெறுகின்றன.

மகாபாரதக் கதையைப் படித்தோமானால், சஞ்சயன் என்பவன், திருதராட்டிரனுக்குப் போர்க் களத்தில் நடக்கும் செய்திகளைக் கூறுவதுபோல அமைந்திருப்பதை அறியலாம். எனவே வியாசரின் கூற்று அவ்வாறே சஞ்சயன் திருதராட்டிரனிடம் கூறினான் என்பதாக வரும். ஆனால் நமது சுவடி ஆசிரியர் நேரிடையாக போர்க்களத்திலிருந்தே செய்திகளைத் தொடங்கி விடுவதை அறியலாம்.

இவ்வத்தியாயத்தின் சுருக்கமாகப் போரிடுவதற்காக வந்த அருச்சுனன் தன் எதிரில் இருப்பவர்களைப் பார்த்து அவர்களைக் கொல்ல மனமில்லாதவனாக மனமாற்றம் கொண்டான் என்பதுவரை கூறப்பெற்றுள்ளதை அறியலாம்.

இரண்டாவது சாங்கிய யோகவத்தியாயம்

இவ்வண்ண மறிய வொதுங்க வெழுகின்ற விரக்கத் தாற்
செய்வண்ண மறியாது திகைத்திருந்த தேர் விசைய
ணெண்ண மதுநாடி யொறு வண்ண மூலகோதுங்கை
வண்ண மலருடைய கார் வண்ண கட்டுரைப்ப 1

இவ்வாறு மனதில் எழுகின்ற இரக்க குணத்தின் காரணமாக என்ன செய்வது என்று அறியாதபடி திகைத்து நின்ற அருச்சுனனிடம் செந்தாமரை மலரைப் போன்ற சிவந்த கைகளையுடைய கண்ணன் இவ்வாறு கூறத் தொடங்கினான்.

வெழுகின்ற விரக்கத்தாற்-மனதில் எழுகின்ற இரக்க குணத்தின் காரணமாக. வண்ண மூல கோதுங்கை-அழகிய கை. கார்வண்ணன்- கரிய மேகத்தினைப் போன்ற நிறத்தினையுடைய கண்ணன்.

ஆயாதவர்க்கும் லிகடகு மடுப்ப தழியாப் பழியுனது
தேயா வறிவைத் தெய்பதறச் சிறுமை களிலே சிறுமையது
சாயாநற கத்திடை சாய்பது ன்போல் வர்க்குத் தகாத்தீ
தேயாநில த்தேயுனை யையா வெவ்வா றடைந்ததென
வறியேன. 2

ஆராய்ந்து அறிய இயலாதவர்களுக்கும் ஆண்மை யற்ற அலிகளுக்கும் மட்டுமே இது தகும். உன்னுடைய செயல் உனக்கு அழியாத பழியை உண்டாக்கும். அறிவிற்சிறந்த உன்னை, அறிவில்லாதவனாக்கிவிடும், மிகவும் கீழானதாகும் உன்செயல் நரகத்தில் உய்த்து விடும். உன்னைப்போன்ற மாவீரர்களுக்கு இது தகாத தாகும். உனக்கு நான் எப்படி நண்பனாகியுள்ளேன் என்று எனக்குத் தெரியவில்லையே !

ஆயாதவர்க்கு - நல்லது எது அல்லது எது என ஆராய்ந்து அறிய முடியாதவர்களுக்கு. அடுப்பது - வந்து சேருவது. தேயாவறிவு-என்றும் நிலை நிலையான அறிவு. தேய்ப்பது-கெடுப்பது. சிறுமைகளிலே சிறுமை-மிகவும்-கீழானது. தேயா நிலம்-எக்காலத்தும் ஒரே அளவினதாக இருக்கும் இப்பூமி. அறியேன்-தெரியவில்லை.

ஒவ்வொ.....ழிந்த மா மே லோருப் படுகென் றுருக்கரிய
செவ்வாயன்
திருமொழி.....தோ விசையன் செப்புவான் மெய்
வாயினோடு மனத்தால்
மிகப் போற்றற் குறியாரை யெவ்வாறு கொலை புரிவே
னென்றிவ் வாறியம் பினான்.3

ஒப்புமை கூற இயலாத பெரிய மேருமலையைப் போன்ற உருவத்தையுடைய கரிய நிறத்தவனும் சிவந்த வாயினையுடையவனுமாகிய கண்ணன் கூறியதைக் கேட்டு, மனம், வாய், உடல் ஆகியவற்றால் மிகவும் போற்றுவதற்குரியவர்களை, நான் எவ்வாறு கொலை செய்ய முடியும் என்று கேட்டான் அருச்சுனன்.

கரிய செவ்வாயன்-கரிய நிறமும், சிவந்த வாயும் உடையவன். திருமொழி-கண்ணனின் வார்த்தைகள். மெய்-உடல். செப்புவான்-சொல்லுவான்.

மாற்றலர்களென விவரைக் கொன்று பெறும் பெருவா ழுவி
பெற்றமுறைத் தியான பிராபா விரந் துண்கை யினிதன்றே
கூற்றவர் களுயிருண் டாலவர் குருதியாற் குழைத்த
சோற்றை யினியல்ல வோயாம் பின்னைத் துய்ப்ப
தெல்லாம். 4

நமது விரோதிகளான இவர்களைக் கொன்று, அதனால் கிடைக்கக்கூடிய அரசபோகம் எனும் பெரு வாழ்வு பெற்று புகழ்பெறுவதை விட பிச்சையெடுத்து உண்பதே மேலானது.

எமனாக இருந்து அவர்களைக் கொன்றால் அவர்களின் இரத்தத்தைச் சோற்றிலிட்டுப் பிசைந்து குழைத்துச் சாப்பிடுவதுபோல் அல்லவா ஆகும்.

மாற்றலர்-எதிரிகள், விரோதிகள். பெருவாழ்வு-அரசபோகம் எனும் பெருவாழ்வு. பிராபவம்-பிரபாவம்-பெருமை, புகழ் கூற்று-எமன், குருதி-இரத்தம்.

தவர் கொல்படை விடுகையோத தவிர யோத
குவது மற்றவர் களேனை வெல்வரோ யான்வே
ல்வனோ யறியே முனிவர்கள் சில விறந்தக்கா லதனாலே
யென்னுயிர்ப் போம்
மவர்கன்மர் துடங்குக வென்றடல் குறித்து நின்றாரால். 5

போரின் முடிவை யாரால் சொல்லமுடியும். எதிரிகள் என்னை வெல்வார்களோ, அன்றி அவர்களை நான் வெல்வேனோ! எனக்குத் தெரியவில்லை. அறிவிலும் வயதிலும் முதிர்ந்தவர்கள் இறப்பார்களேயானால், அதைத் தாங்கிக் கொள்ள இயலாது என்னுயிர் போய் விடும். இனி என் எதிரிகள் கூடி நின்று போரைத் தொடங்கினாலும் அவ்வாறே ஆகட்டும்.

படைவிடுகை யோத-போரின் முடிவைக்கூற. முனிவர்கள்- போர்க் களத்தில் தவஞ்செய் முனிவர்கள் இல்லை. ஆதலால் அவர்களை ஒத்த வயது முதிர்ந்த அறிவிற் சிறந்த பெரியோர்கள் என்க.

ஆதலால் அறிவாய் விழியினை மற்றாங்கு அவர்பாற்
காதலா மிருள் மறைப்ப னெறி யெங்கு காணெ னா
னாத லாலெனக்குருவ தறி கிலேனு ரைத்தருள் வாய்
சாதலானதும் பிறப்பு மில்லாத் தனி முதலே ! 6

இரக்கம், அன்பு எனும் இருள் என் கண்களை மறைக்கிறது. அவர்களிடத்தே அன்புதான் உண்டாகிறது.

இனி நான் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுவாயாக! சாவும் பிறப்பும் இல்லாத ஆதிமுதலான கண்ணனே !

காதல்-அன்பு-இரக்கம். காதலாமிருள்-அன்பெனும் மாயை-இருள் சாதல்-பிறப்பு, இறப்பும் பிறப்பும்.

உஞ்சே பொகு நெறிவாளர் வுரைப்ப னோவென் றுளங் கருதிற்
றஞ்சே யென்றுன் சரண்பு குந்தேன் தண்டிற் பணிந்தேன்
தாமரைக்கண்
மஞ்சே யுன்றன் மானாக் கனாயுன் பாதமலர் புனைந்தே
னஞ்சேலின்றிங் கடியென் செய்வினைகளே வியருள்
புரிவாய்.7

நான் உய்வதற்கான நெறிமுறைகளை நீ உரைப்பாய் என, என் உள்ளத்திற் கருதி, தஞ்சமென்று உன்னை சரணடைந்தேன், கால்களில் பணிந்தேன், தாமரையைப் போன்ற கண்களையுடையவனே! மேகத்தைப் போன்றவனே! நான் உனது மாணவன்-சீடன்- என்று உன் மலர்ப்பாதங்களை வணங்கினேன்! என் மனதில் உள்ள அச்சம் நீங்கும்படியாக நான் என்ன செய்யவேண்டும் என்பதை அருள்கூர்ந்து சொல்வாயாக!

உஞ்சேபோகுநெறி-உய்ந்து போகும் நெறி. றஞ்சே என்று-தஞ்சமென்று. தண்டு-பாதம். மஞ்சே-மேகத்தைப்போன்றவனே! மானாக்கன்-மாணாக்கன்.

மண்ணாளும் பெருஞ்செல்வ மன்றியே மாயாத
விண்ணோடும் பெற்றிடு னுமென்னுடைய மெய்யுணர்வு
நண்ணாம லருதுயர் நலியாமல்க் காற்பதனைக்
கண்ணா லிங் கெவ்விடத்துங் காண்கிலே னெனக்
கலுழந்தான். 8

இந்த நாட்டை ஆளக்கூடிய பெரிய செல்வத்தை மட்டும் அல்லாது, விண்ணுலகமே கிடைத்தாலும் என் மனம் விரும்பாதவாறு, தொடர்ந்து வரும் துன்பம் என்னை வந்து வருத்தாமல், என்னைக் காப்பாற்றுவார் யார் என்பதை என் கண்ணாற் காண இயலவில்லையே என மனமுருகி உரைத்தான்.

மாயாத-என்றும் அழியாத. விண்ணோடு-தேவலோகம். நன்னமல்-விரும்பாமல். அடுதுயர்-தொடர்ந்துவரும் துன்பம். நலியாமல்-வருத்தாமல் கண்ணால்+இங்கு+எவ்விடத்தும்-கண்ணாலிங் கெவ்விடத்தும்.

நேய மார்பிற் சொரி வதேன் நெடுங்க கண்ணீர் சோர விம்மா
நின்றவன் காதல் வெந்
தீயால் வெ வாமென்ன கைமா றொன் றின்றி யுயிர் காற்க்க வேகடன்
பூண்ட வம்மாயன் றிருவாய் மையருள் மாரி யால்
விப்பான்.9

அன்பின் மிகுதியால், வெந்துருகி, கண்ணீரானது மார்பில் சொரியும்படி நின்ற அருச்சுனன் கைமாறு ஏதுமில்லாது என் உயிரைக் காக்க வேண்டும். அது உன் கடமை என, கண்ணன் திருவாய் மலர்ந்து இவ்வாறு கூறலானான்.

விம்மி-மிக வருந்தி. காதல்வெந்நீ-அன்பு எனும் தீ. மாயன்-கண்ணன். யால்விப்பான்-யாலறிவிப்பான்.

மின்னைய னைய திருநகை கொண்ட ருளி விரைத் தாமரை
நாறும்
பொன்னை யணியும் திருமார்பன் போகாத துயர்போம் பரி
செண்ணிமுன்னை மறைக ளெடுத்து றைத்து முடியும்
பொருளை முதற் பொருளாந்
தன்னை யுள்ள பரிசவற்குத் தானே சாத்தித் துடங்கினான்.10

மின்னலைப் போன்ற ஒரு சிரிப்பை சிரித்தருளி, தாமரை மலர் மாலையை அணிந்ததால் மணம் வீசும், பொன்னாலாய நகைகளை அணிந்த, அழகிய மார்பினை யுடைய கண்ணன், அருச்சுனனை வந்தடைந்து, நீங்காதுள்ள துயரம் தன்னைப் போக்குவதற்காக, முன்னர் வேதத்தை எடுத்துரைத்து, முடியும் பொருளே முதற் பொருளாகும் என்பதனை அருச்சுனனுக்குக் கூறத் தொடங்கினான்.

மின்னனைய-மின்னலைப் போன்ற. திருநகை-அழகிய சிரிப்பு. நாறும்-மணம் வீசக்கூடிய. போம் பரி செண்ணி - போகும் வழியை எண்ணி. பரிசவற்கு-பரிந்தவர்க்கு-அன்புடன். சாத்தீத்து-சாற்றிட-கூற.

சாவதிலையாவர் களு நிற்கவது தானே
மாய்வ ரெனநீ கருது மாதர் களெல்லாந்
தேயவரிய தீவினை செயா தமை யினாலே
வீவதன்முன் வானுலக மேவுவர்கள் மென்மேல். 11

நீ கொன்றுவிடுவதால் இவர்கள் சாவதில்லை. நீ கொல்லாவிட்டாலும் இவர்கள் இறந்தே போவார்கள். கேட்டினைத் தரக்கூடிய தீய வினைகளைச் செய்யாது நற்செயல்களைச் செய்வதால்,சாவதற்கும் முன்னதாகவே தெய்வலோகத்தை அடைகிறார்கள்.

தேய்வரிய- கேடு தரக் கூடிய, வீவதன்முன்-சாவதற்கும் முன்னதாகவே. வானுலகு-சுவர்க்கலோகம்.

அன்னவர்கள் சோகிதரெனா வமுதலாலும்
பன்னலரியோர்கள் முரையே பகர்தலாலும்
மன்ன மயலேறியுள மயங்கினை கொல்வாயா
வன்ன தொழிலானவை மறந்திடுவையுங் கேள். 12

அவ்வாறு புண்ணியச் செயல்களைச் செய்து சுவர்க்க பூமியை அடைபவர்களைப் பற்றி மிகவும் அறிவிற் சிறந்தோர் கூறுவதால், அன்ன மயமேயான மயக்கத்தை விட்டு, மற்றவைகளை மறந்துவிட்டு இவர்களைக் கொல்வாயாக.

சோகிதர் - உயர்நிலை அடைந்தோர். வழுதல்-சொல்லுதல். பகர்தல்-சொல்லுதல்.

மாயுமவராலு முயிர் வாழுமவராலு
மாயு மறியோர்கள் ழியாமை யறியா யோ
நீயுமிவர் தாமுநிகர் நாலு நெறி தெறி
லேயும் வகையா லுலகி லென்று முளமே காண். 13

இவர்கள் சாவதுமில்லை, சாகாமல் வாழ்வதும் இல்லை. இது அறியாமை யென்பதை அறியாயோ! இவர்களைப் போலவேதான் நீயும் நானும்-உண்மை இதுவென்று அறிந்து. நாம் என்றும் உள்ளவர்களே என்ற உண்மையை அறிந்து கொள்வாயாக !

மாய்தல் - சாதல்.

பொன்றுவ துடம்ப தனுள் நின்ற பொருள் பொன்றா
தென்று மோரியற்கையொடு நிற்கு மியல் பைக்கேள்
முன்றுடா மகப் பருவம் விட்டிளமை மூப்போ
டொன்று முடலா யினு முயிற் கியல் பதன்றால். 14

உடம்பினுள்ளே இருக்கும் பொருள் ஆன்மா- இது என்றும் அழியாது இயற்கையாகவே நிற்கும். இதன் தன்மை என்னவென்பதைக் கேள். முறையான விதிகளின்படி பருவமானது, இளமை நீங்கி மூப்பினை அடைந்து அழிவது உயிர்கள் எல்லாவற்றிற்கும் இயல்பேயாகும்.

உடம்பதனுள் நின்ற பொருள்-உயிர்-ஆன்மா. பருவம்+விட்டு+இளமை+மூப்போடு+ஒன்றும்-பருவம் விட்டிளமை மூப்போடொன்றும். உயிர்க்கியல்பு-உயிரின் இயல்பு.

அன்ன வகையான லுரு வழிந்து வருமாங்கே
யென்னுறுவ மா மறிவிறந்து பிறவாதாற்
பின்ன தறிவா னுட லழிந்து பிரி போதுந்
தன்ன தெனவே துமோர் சலிப்ப தறியானால். 15

இவ்வாறாக ஒரு உருவம் அழிந்து வேறு ஒரு உருவத்தை மாறி மாறி எடுத்து, இறந்தும் பிறந்தும் இந்த நிலையை இறந்த பின்னர் பிறவாத நிலையை எவ்வகையில் அறியலாம் என்பதை உணர்ந்தவன் என்னை வந்தடைகிறான்.

சலிப்பது-வெறுப்படைவது. பின்னது-இறந்தபின். வேதுமோர்-எய்தும் ஓர். பிரிபோதும்-பிரிந்த போதும்.

இவ்வகை யதாகிலழல் சீத மிடரின் பஞ்
செய் வகையிலா றிவு சேர்குவதே னென்னில்
மெய் வகையினர் லிவை விழைந்தா
மெய் வைய வகை யினாய புலனும்
பொறியுமையா. 16

இவ்வகையாக சூடும், குளிரும், இன்பத்தையும் துன்பத்தையும் தரும் வகையறிந்து ஐம்புலனும், ஐம்பொறி களும் உணரக்கூடிய இவைகளின் உண்மை நிலையை உணர்ந்துகொள்ள வேண்டும்.

அழல்-சீதம், சூடு-நெருப்பும்-குளிரும். புலனும் பொறியும்-ஐம்புலன்-ஆகாயம். காற்று-நெருப்பு-நீர் - நிலம் இவைகளை உணரக் கூடிய ஐம்பொறி-கண், காது மூக்கு, நாக்கு, தோல் முதலியன.

வேறு

சீத முதலி வையிற்றின் செயல் கேட்கி லனித்திய மாய்ப்
போதலொடு வருவன வா யிருக்கு மவை பொறு நீயு
மாதலினாற் பயனென் னிலவை பொறுத்த பெரியோனை
யேதமவை நிலை கலைக்காதவன் வீடே யெய்து மால். 17

குளிர் முதலிய இவற்றின் செயல் என்னவென்பதைக் கேட்கின், இவை நிலையற்றவைகளாகும். போகும், வரும் ஆகையால் நீ இவற்றைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு இவற்றைப் பொறுத்துக்கொள்ளக் கூடிய உறுதியான மனம் உடையவனிடத்தில் வேறுபாடுகள் இருக்காது. இவரே சுவர்க்கநிலையெனும் வீடுபேறு எய்துவர்.

அனித்தியம்-நிலையற்றது. போலொரு வருவன-போகும் வரும். யேதம்-மாற்றம்-பேதம்.

மண்ணினாய் விகாரமும் மண்ணே யந்த மண்ணொழித்துப்
பண்ணினாரும் பிறரில்லைப் பண்ணப்பட்ட பல பொருள்க
ளெண்ணி னாகுவதன் முன்பு மிறந்த பொழுது நிகழு
விடத்துங்
கண்ணி னாடின் மண் ணொழியக் கண்டா ருளரோ
கட்டுரைப்பாய். 18

மண்ணால் செய்யப்பெற்ற பொருள்களும் மண்ணே! பின் அந்த மண்ணையே மீண்டும் வேறு ஒரு உருவமாகச் செய்பவர்கள் இல்லை. இவ்வாறு மண்ணினால் செய்யப்பெறும் பொருள்கள் யாவும் மீண்டும் மண்ணாகவே ஆகும். இதுபோலவே உயிருடன் இருக்கும் இப்போதும், இறந்த பிறகும் அந்த மண்ணைப்

போன்று தானே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை அறிந்தவர்கள் யார் இருக்கிறார்கள் என்பதைக் கூறுவாயாக !

விகாரம்-உருவம். நிகழ்விடம்-உயிர் வாழும் காலம்.

வையரா யிலுழ வாவதன் வகை யேயிதன் வகைகேள்
மெய்யானது நசியா ததனுடன் வேனெ விரவும்
பொய்யானது நிகழாதிவை புலனாகிய பொருளே !
யய்யாவே னை யறிவா ரிவை யறிவார் பிறரறி யார். 19

பூமியில் பிறந்தும் இறந்தும் உழலுவார்களின் வகை என்னவென்பதைக் கேள்! உடல் அழியக்கூடியது. அதன் உள்ளிருப்பது வேறு என்பது பொய்யில்லை. பொய்யானது எதுவும் இருப்பது இல்லை. அய்யா! என்னைப் பரம்பொருள் என்று யார் அறிகிறார்களோ அவரே இதனை அறிவார்கள். மற்றவர்களுக்கு இது அறியமுடியாததாகும்.

வையம்- பூமி. வையர்-பூமியில் பிறந்தோர். நசியாது-அழியாது. புலனாகிய பொருள்-கண்ணுக்குத் தெரியும் பொருள். யையய்யவேனை யறிவாரிவை-அய்யாவே+எனை+அறிவார்+இவை. பிறரறியார்-பிறர்+அறியார்.

யானாம் வகையது கேளெழு மொலியே முதலியவும்
வானாதியில் வரு பூதமும் வருனாள் வருமிடமா
யானாதெளு மறிய்யா வையு மறி காரணமது வாய்ப்
போனாளொடு வரு நாள விழி புணராதோர் பொருளே.20

நான் எவ்வாறெல்லாம் இருக்கிறேன் என்பதைக் கேள். எழுகின்ற ஒலி முதலியனவாகவும், வான் முதலான பூதங்களாகவும், வரக்கூடிய நாட்களாகவும், இடங்களாகவும் இருக்கிறேன். என்பதை அறிவாயாக! இவைகளுக்கெல்லாம் காரணமாய் இருப்பதும் நானே!

நேற்றாகவும், நாளையாகவும் இருப்பதும் நானே! விழிகளை இமைக்காதவர்களாகிய தேவர்களின் முழு முதற் பொருளாக இருப்பவனும் நானே !

பூதம்-ஐம்பூதங்கள். ஒலி முதலாய-ஒலி, ஒளி, முதலான.

அழியாதவை யது யாதெனில் விகாரதை யுருவா
யொழியா நிறைவொடு நீடியதென தியா னென வுணரா
வழியா மதியியலா லிதுசில மாறு கொள்வதாய
மொழியார் செயல் முடியாமையின் முயலார் கெட வயலார்.21

அழியாது என்றும் நிலைத்து இருப்பது எதுவென்றால், கண்ணால் காணக்கூடியதாக இருக்கும் பொருளே நிலையானதெனவும் கண்களினால் காண இயலாது உண்மையில் இருப்பதாகிய ஒன்றியை அறியாமல் இருப்பதும், அறிவில்லாதவர்கள், தங்களால் அறிவின் முயற்சியினால் தெரிந்துகொள்ள இயலாத வர்கள். ஆகியோர் கூறக்கூடிய மாறானதாகும். அவர்கள் நிறைவாகவும் நீண்டகாலத்திற்கு இருப்பவன் நான் என்பதை அறியாதவர்களாவர்.

மாறுகொள்-எதிர்மறையாக கொள்வது. அயலார்-மற்றவர். முடியாமை-இயலாமை. முயலார்-முயற்சி செய்யாதவர்கள்.

இல்லாமையினில் கே ளேழுகழுக தாழி யினிடையே
யல்லா தெழு புனல் போ லறிவுறவே யழிகுவதா
லெல்லா வகையினு மாய்வதிவ் வுருவே யறிவதுதான்
கொல்லா தழி கொலை யானது குறுகாத தநெறிகேழ். 22

கடலில் எழக்கூடிய அலைகளைப் போல தோன்றி மறைவதே பிறவி. எல்லா வகையாலும் அழிவது இந்த உருவமே! இதனைக் கொல்லாவிட்டாலும் அழியும் தன்மையதாகும். கொலை செய்வது என்பது குறுகாத நெறி என்பதைக் கேட்பாயாக.

ஆழியினிடையே - கடலிலே. எழுபுனல்-எழக்கூடிய அலைகள். யழிகுவது-தோன்றி மறைவது. கொல்லாதழி-கொல்லாமல் தானாக அழிவது. குறுகாத நெறி-நன்னெறி.

வேறு

ஊறுபட வொன்றிலே பிறத்தல் பிறந்துழ வாதல்
வேறுபட வளர்தல் வளர்ந் தய லொன்றாய் விழைந்தமைதல்
மாறு படத் தெய்த லறமாய் தலென வருகின்ற
வாறியில்பு முடம்பின்றி யறிவடையா தாதலினால். 23

உணர்வுடன் ஒன்றிலே பிறத்தல், பிறந்து பின் இன்ப துன்பங்களில் உழலுதல், வளர்தல், வளர்ந்தபின் வேறொன்றை விரும்புதல், விழைந்த தன்றி வேறொன்றை அடைதல் நீதி நூல்களை ஆய்வு செய்தல், இவ்வா றானவை எல்லாம் இவ்வுடல் சார்ந்ததேயன்றி வேறில்லை. இதனால் அறிவிற்கு ஆவது ஏதும் இல்லை. ஆகையினால்.

ஊறு-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் இவை ஐம்புலன்களின் வகை. ஊறு என்பது உணர்ந்து அறிவது (தோல் உணர்வு) உழலுவது-துன்பப்படுவது. விழைதல்-விரும்புதல், அமைதல்-கிடைத்தல். அற மாய்தல்-நீதி இதுவென ஆராய்ந்து அறிதல்.

நில்லா வுடற்கே நின்றேயு நித்திய மாகியது நாச
மல்லாதது போய்ப் பிறப்பிறப் பொன்றியா தது மற்றது
வறிந்தோர்
கொல்லார் கொலை யேவலுஞ் செய்யார் குல மேலிட்டுக் குல
மறைக
ளெல்லாம் விதித்த தொழிலினையு மியம்பிற் றென்றேயிது
தெழிநீ. 24

நிலையற்ற உடலில் என்றும் அழியாமல் இருப்பது-அழிவற்றது-மீண்டும் மீண்டும் பிறப்பது ஒன்று உண்டு என்பதை அறிந்தவர்கள் எந்த உயிரையும் கொல்ல மாட்டார்கள். கொலை செய்யவும் ஏவமாட்டார்கள். நீ பிறந்த குலத்தின் நீதிநெறி முறையின்படி உனக்கு விதிக்கப் பெற்ற தொழில் இன்னது என்று விதிக்கப்பட்ட தொழில்-பணி-கடமை-இதுதான் என்பதை நீ கேள் !

நில்லா உடல்-நிலையற்ற உடல். நித்தியம்-என்றும் அழியாதிருப்பது. மற்றது--அழியாமல் என்றும் இருப்பது. விதித்த தொழில்- இந்த இந்த குலத்தில் பிறந்தவர்கள் இன்ன தொழில்தான் செய்ய வேண்டும் என்று கூறுவது அறநூல் அதன்படி அத்தொழிலையே அவர்கள் செய்தல் வேண்டும். இதுவே கடமையாகும் என்பது.

பீறிய போர்வையைப் பெயர்த்துப் பின்னரே
வேறியல் போர்வை விரும்பு வாரென
ஆறிய வுடம்பினி லுதித்த வுண்மை தான்
மாறி யோருடம் பினை மருவு மன்னனே ! 25

பிய்ந்து நைந்து போய்விட்ட உடைகளை நீக்கிவிட்டு பின்னர் வேறு ஒரு உடையை அணிவது போல ஒரு உடல் அழிந்த பின்னர் வேறு ஒரு உடலை ஏற்கிறது! இதையறிவாய் மன்னா !

பீறிய-பிய்ந்து நைந்து போன. போர்வை-உடை. ஆறிய-உயிர் போவதால் உடம்பின் கூடு ஆறிப்போகிறது.

உருப்பான்மை மற்றதனுக் கொரு நாழுமின் மையாற்
செருப்பால் வெம்படைக் கலங்கள் செதிக்க மாட்டாவால்
நெருப்பால் வெந்தழியாது நீரால் நெக் கொழுகாது
மருத்தாலுஞ் சலியாது மற்றதன் தன்வகை கேழாய் ! 26

அதற்கு உருவ வேற்றுமை என்பது ஒருநாளும் இல்லை, கோபத்தினால், கொடிய போர்க்கலங்களைக்

கொண்டு அதனை அழிக்க இயலாது. நெருப்பினில் வெந்தழியாது. நீரிலும் கரையாது. இது இவ்வாறு ஆக வேண்டாம் என மறுத்தாலும் கூட ஓய்வில்லாது மாற்றமடைந்து கொண்டே இருக்கும் அதன் வகை என்ன என்பதைக் கேட்பாயாக !

உருப்பான்மை-உருவ வேறுபாடு. செரு+ஆல்-செருப்பால்-கோபத்தால். மறுத்தாலும் சலியாது-வேண்டாமென்றாலும் தொடர்ந்து.

எல்லாப் பொருட்கும் பழையதனை யெங்குந் தானா
யிருப்பதனை
நில்லாத் தன்மையில் லதனை நித்தியத் துவத்தை நிலை
பெற்றை
யல்லாப் புலன்கள் பதினாலுமறியா வறிவை யறியாதே
யில்லாப் பொருள்போல் அழியுமென விரங்குகினற தென்
கொண்டோ.27

பழமையான எல்லாவற்றையும் விடப் பழமை யானது. எல்லாவிடத்திலும் தானாக இருப்பது. ஒரு இடத்தில் நிலையாக நில்லாத தன்மையது. என்றும் நிலைத்து நிலைபெற்றிருப்பது. மேலும் புலன்களினால் அறிந்துகொள்ள இயலாததது. இல்லாத பொருள் இருப்பதாகவும் அழியக்கூடியது எனவும் சிலர் வருந்துவது எதனாலோ !

நித்தியம்-எந்நாளும் இருப்பது. புலன்கள் பதினாலு மறியா-புலன்கள் ஐந்தேயன்றி பதினான்கு என்பது சரியல்ல எனவே இதனை "புலன்கள் என்பதினாலும் அறியா" எனக் கொள்க.

வேறு

வீவரெனக் கொடு மெய் தளர்வா யெலி யாவர் பிறப்பவரி
யாவர் களெனுஞ் சாவர் பெயர்த்து மவ்வாறு சனிப்பர்கா
வலிதற் குளதோ கடனே காண். 28

தோல்வியைக் கண்டு சோர்வடைவார்கள் ...டவர்களைப் பற்றியும் இறப்பவர்களைப் பற்றியும் எண்ணி வருந்துவர். இதைக் கண்டு வருத்தப்படுவதால் பயன் இல்லை.

வீவர்-தோற்பவர். மெய்தளர்வார்-உடல் சோர்வு அடைவர். சனிப்பாக- சலிப்பாக. வலிதற்கு-வருந்துவதற்கு. பாடல் குறை.

செறிந்த திவ்வாறிவா ரென்பதுந் தோரா
யறிந்தது நீ நடுவே சில நாளே
யெறிந்திடு வேலவர் பாலிழ வென்னோ
பிரிந்திவர் போயிடமும் பெரி கோனாய் ! 29

பெரிய மன்னனே! நீ எறியும் வேலால் இவர்கள் அழிந்தார்கள் என்றால் இவர்கள் இறந்தபின் போகுமிடம் எது? அது எவ்வாறு என்பதை அறியாது இருக்கிறாய்.

வேறு

ஒருவ னென்றுங் கண்டறியாதது கண்டாய்
போலுணர்ந்திருக்கு
மொருவ னென்று முறைத் தறியா ததனை யுரைத்தான்
போலுரைக்கு
மொருவ னென்றுங் கேட்டறியா ததனைக் கேட்டாற்
போலுவக்கு
மொருவ னென்றுங் கேட்டாலு மறியா னிந்த
உண்மையின. 30

ஒருவரும் கண்டு அறியாதது. கண்டதைப் போல உணர்ந்திருக்கும், ஒருவனென்று சொல்லப்பெறாதது. சொன்னாலும் அறிய இயலாதது சொன்னதுபோல் இருக்கும். யாரும் கேட்டதில்லை. என்றும் கேட்டது போல விரும்புவார்கள். இந்த உண்மைகளை ஒருவர் கேட்டாலும் அறியமாட்டார்கள்.

உவக்கும் - விரும்புவர்.

திதனாயெவரு மரியாத பொருளைத் தெரிந்து கொண்டு நீ
யிதனாலிவரை யான் கொன்றே னென்ப தொழிவாயின்
னுங்கேள்
மதனா லாய மறைமொழியு மன்னர் கருமம் வாழும்ரென்
பதனா லமரே துடங் தனையற நன்றென நீயையு றேல். 31

இதுநாள்வரை யாரும் அறிந்திராத பொருளை நீ தெரிந்துகொண்டு, நான்தான் இவர்களைக் கொன்றேன் என்று கூறுவதை விடுவாயாக ! மேலும் இன்னும் நான் சொல்வதைக் கேள் ! எதிரில் இருப்பவர்கள் உன் அன்பிற்குரியவர்கள் என்பதை மறந்து, மன்னர்களின் கடமை இதுவென்பதை அறிந்து போரைத் தொடங்குவாயாக! சந்தேகப்படவேண்டாம்.

மதனாலாயமறை-முன்னோர்களால் சொல்லப்பட்ட நீதி. கருமம்-கடமை, அமரே துடங்கு-போரைத் தொடங்கு. நீயையுறேல்-நீ சந்தேகம் கொள்ளவேண்டாம்.

வேறு

செய்தியன்றி யித் தேவர்கள் வானுனினுக்
கெய்தி நின்ற திது பெறுவார்கள் கேள
வைதிகந்தரு மாதவ மேற் கொடு
மெய் திருந்திய வேந்தர்க ளல்லரோ ! 32

இந்த செய்தியை அறிந்த தேவர்கள் வானுலகு எய்தி மேன்மை பெறுகிறார்கள். சாத்திரங்களின்படி தவத்தை மேற்கொண்ட வேந்தர்களும் இவர்களே !

வைதிகம் - சாத்திர முறைகள்.

இன்று வாளமர் தன்னி லெதிர்ந்து நீய்
பொன்றில் வானவர் போற்ற விண் காற்குவை
வென்றி செரிலிவ் வேந்தா ரெல்லாந் தொழ
நின்று ஞான மழிக்குவை நீ யாரோ ! 33

இன்று வாளெடுத்துப் போர் செய்து வெற்றி பெறுவாயானால், தேவர்கள் போற்றுவர். வெற்றியுடைய இவ்வேந்தர்கள் எல்லாம் வணங்க, உலகத்தாரால் புகழப்பெறுவாய்.

வாளமர்-வாள்+அமர், அமர்-போர். விண் காற்குவை-விண் காண்பாய்-விண்ணகத்தாரால் புகழப்பெறுவாய். ஞாலம்-பூவுலகம்.

ஆவதான வமர் துடங்கா யெனிற்
போவதான புகழுந் தருமமும் பாவமாம் பழியாமிறப்
பழியினிற்
சாவ தானதுவே தலையல்லவே ! 34

இப்போது நீ இப்போரைத் தொடங்காவிட்டால், உன்னுடைய புகழ் அழியும், பாவமும் பழியும் உன்னை வந்து சேரும். இவ்வாறான பழியை அடைவதைவிட சாவதே மேல்.

அமர் - போர். தலை - மேல்.

அன்றியும் முனையஞ்சினை யென்பரால்
நின்றியைந்து நிலத்து முன்னீர் செய்த
வென்றியும் பழியாய் நிற்கு மெவ்வ
ரென்றியம் பிலின்னாங் கிதன் மேலுண்டோ. 35

மேலும், நீ போரிடாவிட்டால், போர் முனையில் உள்ள வீரர்களைக் கண்டு நீ பயந்துவிட்டதாகக் கூறுவர். இதனால் முன்பு நீ பெற்ற வெற்றிகள் எல்லாம் பழிச் சொல்லுக்கேயாகும். இதைவிடக் கேடு தருவது வேறு எதுவும் உண்டோ ?

முனை யஞ்சி-போர் முனையைக் கண்டு பயந்து. முன்னீர்-முன்பு நீ. வென்றி-வெற்றி. இன்னாங் கிதன் மேலுண்டோ-இதைவிட வேறு உண்டோ.

துற்ற வின்பமுந் துன்முந் தோல்வியும்
வெற்றியு மிழவு மிகு பெறுமென
றுற்ற வின்னவைக் கொற்ற மனத்தனாய்க்
கொற்ற வெஞ்சமஞ் செய் குற்ற மில்லையால். 36

இன்பத்தையும், துனபத்தையும், தோல்வியையும் வெற்றியையும் கருதாமல், வின்னவர்களின் மன்னனாகிய இந்திரனைப் போல வேறுபாடற்ற மனத்தவனாக போர் செய்வாயாக ! இது குற்றமில்லை.

மிழவு-நீக்க, வின்னவக கொற்றன்-இந்திரன். சமஞ்செய்-சமர் செய்-போர்செய்.

வேறு

கதுவிய பொருள் ஞானங் கரையாது முறையாலே
பொதுவுறுவகை நீயும் புலன்றி வகையானா
யேதுவொரு வினையாலே யிருவினை களும்வீடு
மது தனையறிவார் வீட்டை பவாது கேழாய். 37

அறிவினாலேயன்றி புலன்களால் உணர்வது பொதுவல்ல. போர் என்னும் ஒரு வினையைச் செய்வதாலே உன்னுடைய இருவினைகளையும் நீங்கி வீடுபெறுவாய் என்பதைக் கேட்பாயாக !

ஒருவினை-ஒருசெயல். இருவினை-பாவ புண்ணியமெனும் இருவினைகள்.

அரிதி னோரடி யேனுஞ் சேலினது மழிவா
காரி தருமிடை யூறாம் வினைகளு மிடைகூடா
தெரி பொருள் சிறிதேனும் பெரு மயல் தேறுமாறா
லுரிய திவ் வுலகோர் பாலிதுவல துளதோ தான். 38

அழிவாகார் தரும் இடையூறு, வினைகளும் இடை கூடாது. பொருள் சிறியதே எனினும் பேராசை கொள்வர் உலகோரின் இயற்கை இதுவே.

அரிது - கிடைக்க அரிது. மயல் - மயக்கம் - ஆசை.

தெழிய வருணர் வொன்றே தெழிவிலருணர் வோதிற்
றழிர் நிகர் பலவாகுந் தரு பயனது மேவு
மொளி மறை நெறி மேலாமுணர் பொருளென
வோது மழியவர் தெளியாதா ரவை யவாறியாரால். 39

தெளிந்தவர்கள் உணர்வது ஒன்றே. தெளிவற் றவர்கள் கூறுவது பலவாகும். வேதங்களால் உணரப் பெறும் பொருளும் உரைப்பதும் இதுவென அறியாதவர்கள் அறிவிலிகளே !

தெழிய வருணர்-தெளிந்தவர்+உணர்வோதி-ஓதி-கூறி. மறை நெறி-வேத நெறி.

புண்ணிய உலகத்தே பொருள் முடிவினை வைப்பார்
மன்னிய பிறவிக்கே வரும் வழிநெறி நிற்பார்
பண்ணிய வினைகட்கே பயனினை பவாகப்பால்
நுண்ணிய பொருள் செப்பார் நுணிகிய வறிவுற்றோர். 40

பொருளின் முடிவினை இப்புண்ணியம் சேர்ந்த உலகின் வைப்பார்கள். பிறவியின் நெறி முறைகளின் வழி தவறாது அவ்வழி நிற்பர். வினைகளின் பயனைப் பெறுவார்கள். நுட்பமான பொருள் இதுவென சொல்ல மாட்டார்கள். அவர்கள் சிற்றறிவாளர்களாவர்.

செப்பார்-சொல்லமாட்பார். நுண்ணி-நுட்பமான. நுணிகிய அறிவு-குறைந்த அறிவு.

நவை தருகுண முப்பான நணுகிய பயனுற்றோர்
சுவை தெரிகிலாப்பா றொழில் மறை நெறியுற்றே
கவை தரு குணமற்றோர் கரும மதினட லுற்றாம்
மவை கெட வருமப் பாலறிவினை யென நிற்பாய். 41

நன்மையைத் தரக்கூடிய முப்பு எனும் மூலப் பொருளை அடைந்து அதன் பயனை அடைந்தவர்கள் அதன் சுவையைத் தெரிந்து கொண்டு, தரும நெறிகளை உணர்ந்து, கவலையைத் தரக்கூடிய குணங்களை விடுத்து, கரும வினைகளைத் தரக்கூடியனவற்றை நீக்கி மேலான ஞானத்தை வேண்டி இருப்பார்கள்.

நவை தரு-மேன்மைத் தரக்கூடிய. நணுகிய-மேன்மையான. கவை-கவலை. முப்பு-மருத்துவதிற்கு மூலப்பொருளாவது.

குண முதலியவற்றே குழி முதலிய துய்ப்பா னளவறு
புனல் பெற்றா லவை கொள லமைத் தோவள மறு
கரும மத்தால் வரு
சிறு சுவை வற்றா உழ மகிழ்பிர்மத்தே யுழு கோள்
லெளிமைத்தால். 42

குற்றங் குறைகளைச் சமமாகக் கருதி அனுபவிக்க வேண்டும். அனைத்தும் கருமத்தால் வருவனவாகும். ஆதி பிர்மத்திலிருந்து எழும் கோள்களாகவே கொள்ள வேண்டும்.

குண-குழி-குறை நிறை. துய்ப்பான்-அனுபவிப்பான்.

விடலரும் வகை யிற்றாம் வினை பயனது விட்டே
கடவிய வினைமுட்டாவகை செய்து கழிவுற்றோ
னுடலொடிவ் வுலகத்தே உழனென நிகழ் பெற்றே
இடரினை யற விட்டா னெனை யறி வகை பெற்றான். 43

விட்டுவிடுவதற்கு இயலாத வினைப்பயனைக் கடந்து, அவ்வினையானது வந்து சேராத வகை செய்து, அதை முற்றிலுமாக நீக்கியவர் உள்ளார். துன்பத்தை நீக்கிய அவர்களே என்னை அறிந்தவர்களாவர்.

விடலரும்-விடல்+அரும்-விட இயலாத. கடவிய-கடந்துபோன-விட்டுப்போன. முட்டா-சேராத. உழனென-உளன்+என. இடர்-துன்பம்.

அறிவினையறி குற பாய்கிலமு மடைகுற்றே
பிறி பொழுதினி யொத்தே பெருவினை தனி நிற்பாய்
நெறி தருமறி வொட்டா வகைவினை தனி நிற்பார்
சிறியவ ரென மிக்கோர் தெளிபவர் செயலைக் கேழு. 44

அறிவினை அறிவாய். அகிலத்தில், இரவும் பகலும் எனும் பொழுதினைப் போன்றதே வினைகளும். வினைகளைத் தான் செய்வதில்லை எனும் பெரிய நிலையை அறிந்து ஒட்டாமல் இருக்கும் வகையில் பற்றற்ற நிலையில் செயல்படுபவர்களே. சீரியவர்கள் என அறிவிற் சிறந்தோர் கூறுவர்.

தெளிபவர் செயல் என்பது-ஒட்டா வகை-இது நான் செய்வது என்னாது செய்வது-தனி நிற்பவர் சிறியவர் என்பது-இவ்வாறு அல்லாது நானே செய்கிறேன் என்பவர். மிக்கோர்-மேலானவர். தெளிபவர்-தெளிந்த அறிவினையுடையவர்கள்.

தருபயனது விட்டே தருவினை செயலுற்றாம்
பெரு மயலறு மற்றா லறிவுறு மறிவு ற்றா
லிரு வினை விடுவிட்டா லிளவோடு பெறுதற் பால்
ஒரு மனம் வரும் மத்தா லெனை யுணருணரப்பால். 45.

பயனைக் கருதாமல் செயலைச் செய்தல் வேண்டும். பேராசையால் அறிவு கெடும். இருவினைகளையும் விட்டு விட்டால், தனியான ஒரு மனம் வரும். கோபம் கொள்பவர்களால் என்னை உணர இயலாது.

தருவினை-செய்யத்தகுந்த செயல். மயல்-விருப்பம். அற்றால்-நீங்கினால்.

பேதமையடை குற்றே பிறிதுனு மனமற்றே
யோதமி றெளிவுற்றான் யாதொரு பொறாதப் போ
தோத லொடுலத் தொருரை கழிலுழும் விட்டா
னாதலி னெனை மெய்ப்பாட்டை தரு நெறியைக் கேழ். 46

உள்ளத்தில் தெளிவற்ற நிலையடைந்து, விருப்பு, வெறுப்பு எனும் வேறுபாடு கொண்ட மனமின்றி, அறிவிலே தெளிவு பெற்றவன். எதையும் ஏற்றுக் கொள்வான். தான் பெற்ற மேலான நிலையைச் சொல்லவும் அறியமாட்டான். ஆகையால் நான் சொல்லக் கூடிய உண்மையான அறிவினைத் தரக்கூடிய நெறிமுறைகளைக் கேட்பாயாக.

பேதமை-அறிவின்மை. பிறிதுறு மணம்-வேறொன்றை விரும்பும் மனம். தெளிவுற்றான்-அறிவிலே தெளிவான முடிவை அடைந்தவன். மெய்ப்பாட்டை-உணமையான வழி.

வேறு

தலைநின்ற பொருளை யமின்றியே சலியாதே
நிலைநின்றான் யாதொரு போதப் போதனநெறி நின்றான்
கலைநின்ற மெஞ்ஞான யோகங் கண்ணுறு மென்னச்
சிலை நின்ற தொழுவிசையனிவ் வண்ணஞ் செப்பினான்.47

மேலாய் விளங்கும் பொருளை, சந்தேகமில்லா மலும் தெரிந்துகொண்ட - விஜயன், கண்ணன் கூறிய மொழிகளைக் கேட்டு அதன்படி நின்றால் மெய்ஞ்ஞான போதம் எனும் போதிக்கப்பெற்ற- கண்ணனால் கூறப்பெற்ற-செய்திகளைக் கேட்டு-வில்லையுடைய விசயன் இவ்வாறு கூறத்தொடங்கினான்.

போதப்போது-மெய்ஞ்ஞான அறிவு. கண்ணுமென-கிட்டுமென. இவ்வண்ணஞ் செப்பினான்-இவ்வாறு கூறத்தொடங்கினான்.

இவ்வகை வினையிநின்றோ னெவ்வகை யுரைப்பானந்தச்
செய்வகை யிதோன செய்யுஞ் செயல்களென் செப்பு
மாறென
மெய் வகை யருள் செய்கென்ன விண்ணையே முதலாய்க்
கொண்ட
வய்வகைப் பொருளு மீன்றவ்வ னிவை யருளிச்
செய்வான். 48

இவ்வாறான நிலையில் இருப்போர் எப்படி அழைக்கப்பெறுகிறார்கள். அவர்களின் செயல்கள் எவ்வாறு இருக்கும் என்பதைச் சொல்வாயாக! உண்மை நிலையை உரைப்பாயாக! என்று கேட்ட அருச்சனனிடம் கண்ணன் ஐவகைப் பொருட்களும் இவ்வாறென அருளோடு கூறினான்.

செப்புமாறு-சொல்லும்படி. விண்ணையே முதலாகக் கொண்ட-வானை முதலாகக் கொண்ட.

அறிவினை யளகிதாக வறிந்தெல்லால் வரவு நீக்கி
வெறிதரு வெகுழி காமம் மயக்க நித்தின் துன்பம்
வறிதெழு பொழுதின் வாட்ட மகிட்சி யென்றிவை
யுமாய்த்துப்
பொறிதரு புகளுந் தீங்கும் போற்றல் பொற்றாமை
போக்கி.49

அறிவைக் கொண்டு இதுவரை நான் அறிந்தவை களை எல்லாம் அகம்பாவத்தைத் தரக்கூடிய கோபம், காமம், மயக்கம் இவைகளினால் ஏற்படக்கூடிய துன்பத்தை நீக்கி, மேலும், சோர்வு மகிழ்ச்சி ஆகிய ஐம்புலன்களால் பெறக்கூடிய, புகழையும் தீங்கினையும், பெரிதாகக் கொள்ளும் நிலையை போக்கி....

அளதாகி-அதைக்கொண்டு. வெறி-அகம்பாவம். வெகுழி-வெகுளி, கோபம். பொறிதரு-ஐம்பொறிகளால் கிடைக்கக்கூடிய. போற்றல் போற்றாமை-ஏற்றலும், ஏற்காமையுமாக, ஒரு பொருட்டாக கொள்ளலாமல்.

ஆமைதனு-போரைந்து மதனுள்ளே யடக்கு
மாபொற் றீய்மை செய்புலன் களைந்தும்
தன்னுள்ளே செறியச் சொர்த்தி
வாய்மையுள நிகளுமுன்னே வளுத்தவும் படுகின்றாரே
தூய்மை செய்தவையே நாளுஞ் சொல்வது தவன்றன்
சொல்லால். 50

ஆமையானது தனது தலை முதலான ஐந்து உறுப்புகளையும் தன்னுள்ளே அடக்கிக் கொள்வதைப் போல, தீமையைத் தரக்கூடிய ஐந்து புலன்களையும் அடக்கி, உண்மையானவற்றை, வருமுன் கூற வல்லவர்கள் என்றும் கூறக்கூடிய தூய்மையான சொற்களாகும்.

பொற்றீய்மைசெய்-போல் தீமை செய்கின்ற, செறியச் சொர்த்தி-உள்ளடங்குமாறு சேர்த்து. வளுத்தவும்-வழுத்தவும்-சொல்லவும். தூய்மை செய்தவை-நன்மை தரக் கூடியவை.

குறையுமாப்பிணி யுற்றலும்ங் கொண்டவிப் புலன் கலெண்ணி
லறை கடலனைய நெஞ்சத் தவா வறான்றி வினில்லான்
மறை மொழி பலவு மோதி யடக்குவான் மனத்தை வாங்கிப்
பொறை கெடப் புலன்களைந்தும் பொறியிலே பொருட்டுங்
கணடாய். 51

குறையுடையதும், நோய்களை அடைவதும் இந்த ஐம்புலன்களே என்று எண்ணி, கடல் அலைகள் அவை மோதுவது போன்ற மனத்தில் எழும் ஆசைகளை அது எவ்வாறு அல்ல என்பதை உணர்ந்து வேத நெறி முறைகளை ஓதி மனத்தை அடக்க வல்லவன், புலன்கள் பொறியினாலே அடங்கும் என்பதை அறிவான்.

ஆதலால் புலன்க ளைந்துமடக்கி, அரிதங்கா தாகிற்
றீதிலாக் கருந்துந் தீயவ்வற்றிலே, சொல்லுஞ் சென்றாங்
காதலால்ப் புகைந்து வெய்யக் காமமாய்க் கொழுந்தீயக்
காமமே தலாகாமை தீய வெகுழியாய் யெரியுமன்றே. 52

ஆகையினால், ஐம்புலன்களையும் அடக்கி எளிதில அடங்காத தீய செயல்களின் நாட்டத்தை விடாவிட்டால், அந்த ஆசையே புகைந்து வெம்மையான காமக் கொழுந்தாகி அழியாத ஆசை கொடிய கோபமாக கொழுந்துவிட்டு எரியும்.

அரிதடங்கா-எளிதில் அடங்காத, புகைந்து வெய்ய-புகையும் சுடு நெருப்பாகி. வெகுழி-வெகுளி-கோபம்.

எரிநிகர் வெகுழி பொங்க மயக்கம் வந்தெய்து மெய்த்த
தெரிபவை சிந்தையு முள்ளந் தெரிந்தவை சிதைத்த போதே
உரிய தன்னுணர்வு மாயு ஒணரமாய்ந் தொழிந்த
அறிய வென் றறிஞர் பேசுமனைத் துமாய்ந் தொழியு
மன்றே. 53

தீயை ஒத்த கோபம் அதிகமானால் மயக்கம் வந்தெய்தும். அம்மயக்கமானது உள்ளத்தில் தெளிந்த மனதைச் சிதைத்து விடும். அவ்வாறு மனம் சிதைவுற்ற போது தன் உணர்வு மாறுபடும். பின்னர் அரிய செயல்களைச் செய்து தன்னை வென்ற அறிஞர்கள் சொல்லக்கூடிய நல்லவை அனைத்தும் அழிந்து ஒழியும்.

வெகுழி-வெகுளி-கோபம். மயக்கம்-தெளிவற்ற நிலை. மெய்த்த-மெய்த; சிதைத்தல்-நிலையற்றுப் போதல். மாயும்-அழியும். அறிய வென்றறிஞர்-அரிய செயல்களினால் தன்னைவென்ற அறிஞர்கள்.

வேண்டல் வேண்டாமை யின்றி மிகை செலாப் புலன்
களாலே
மாண்ட போகங் கடுய்ப்பான் மனங் கலக்குறான் மற்றத்தா
லீண்டிய தெழிவுண்டா மாற் றெழியவே யெல்லை யின்றிப்
பூண்ட நோய் நீங்கும் நீங்காப் புலனலாப் பொருளுந்
தோன்றும். 54

விருப்பு வெறுப்பு இன்றி புலன்களினாலே சிறந்த சுகபோகங்களை அனுபவிப்பான். மனம் கலங்குகிறான். மற்றும் அதன்மேல் தெளிவு உண்டாகப்பெறின் அம்மனக் கலக்கம் நீங்கி, புலன்களால் வரும் நோய் எனும் துன்பம் நீங்கி, கண்ணுக்குத் தெரியாநின்ற பெரும்பொருள், பேரின்பம் தோன்றும்.

வேண்டல் வேண்டாமை-விருப்பு, வெறு;ப்பு. மிகை செலாப்புலன்-ஐம்புலன்கள். போகங்கடுய்ப்பான்-போகங்கள்+உய்ப்பான்-சுகங்களை அநுபவிப்பான். பூண்ட நோய்-வந்த நோய்-எனும் அறியாமை.

அடுத்ததன றொழிலா செய்யா தாற்கறி வில்லை
அறிவின்றாகில்
விடுத்த மெய்யுணர்வின் றாமான மெய்யுணர்
வில்லையாகிற்
றொடுத்த மின்சித்தி சாந்தி தோன்றிடாத்து தோன்றாதா
லெடுத்த நல் வின்பந்தானு மில்லையே யிசைக்க
வேண்டா. 55

கடமையைச் செய்யாதவனுக்கு அறிவில்லை. அறிவில்லையெனில் மெய்யுணர்வில்லை. மெய்யுணர் வில்லை யென்றால், அறிவில் சாந்தி-அமைதி தோன்றாது-அமைதியில்லை என்றால் உயர்ந்த பேரின்பமாகிய யோகநிலை இல்லை. இதனைச் சொல்லவும் வேண்டுமோ?

தொழில்-கடமை. மெய்யுணர்வு-தான் எனும் உணர்வு. சித்திசாந்தி-உள்ள அமைதி. நல்வின்பம்-நல்ல இன்பமெனும் பேரின்பநிலை அது யோக நிலை.

ஆறுசெல் பொருள் கடுயக்கு மைம் புலன் களுக்கும்
பின்னே
காறுடா நெஞ்ச மந்தப் புலன்களைக் கலக்குமாகே
மூறு செய் கடலு ளொடுங்க கலத்தினை யுடன் செலகாற்றே
வேறுசெய் தறைந்து மாய்த்து விளுத்துமா
போலவேயாம்.56

கடலில் கப்பல் செல்ல உதவுவது காற்று. ஆனால் அந்தக் காற்று தான் அந்தக் கப்பலைக் கடலில் மூழ்கடிக்கவும் செயகிறது. அதுபோல ஐம்புலன்களுக்கும் துய்க்கும் பொருளாக அனுபவிக்க உதவுவது ஐம்புலன்களே! அதே ஐம்புலன்களே மனதைக் கலக்கி வீணாக்கி விடவும் செய்கிறது.

ஆறுசெல் பொருள்-ஆற்றின் நீர் ஓட்டத்தைப் போல நிலையற்ற பொருள். கடுயக்கு-கண்டு உய்க்கும்-துய்த்தல். கலம்-மரக்கலம்-கப்பல். அறைந்து மாய்த்து-வேகமாக வீசி மூழ்கச் செய்தல். விளுத்துமா-வீழ்த்துமாம்.

யாதொரு பொருளே யெல்லா வுயிர்களு மிருள்பொற
காணாரொதரு ஞானி யத்தை யுளங் கையிற் கனிபொற்
காணுமியா தொரு பொருளை யெல்லா வுயிர் மெனங்
காண்பார்
காதலில் ஞானியத்தைக் கண்ணினாற் றெரியக்
காணான். 57

எல்லா உயிர்களிடத்தும் உள்ளிருப்பது ஒரே பொருளே என்பதை ஞானிகள் அல்லாதார் அறிய

மாட்டார்கள். உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல அதனை எல்லா உயிர்களின் உள்ளே இருப்பது ஒன்றே என்பதனைக் காண்பார்கள். அவர்கள் அன்பின் மிகுதியால் எல்லா உயிர்களையும் அவற்றின் வடிவங்களாகக் காணாமல் உள்ளே இருக்கும் பொருளாகிய பரமாத்மாவையே காண்பார்கள்.

பொருள்-உள்ளிருக்கும் ஆன்மா எனும் பொருள் உள்ளங்கையிற் கனி-உள்ளங்கையில் நெல்லிக்கனி போலத் தெள்ளத்தெளிவாக. காதலில்-அன்பின் மிகுதியால்.

நீரினா னிறைந்து நின்ற கடலிலே நெறிமேற்கொண்டு
நீரினா னிறைந்த வாறு விழுமது நிறைவு முது
தேரினா மது போலாசை செறிந்தவர் திறமே நோக்கிச்
சாருமா மாசை யத்தை யவர்களுந் தணித்தல் செய்யார். 58

நீர் நிறைந்த கடலுக்குள் மேலும் நீர் வந்து நிறைக்கும் போது நிறைந்து வழியாது. அவ்வாறே இருக்கும் கடலைப் போல, ஆசைகளை அடக்கியவர்கள் மனத்தில் தோன்றும் ஆசைகளினால் வசப்படுத்தப்பட மாட்டார்கள். அதனைத் தணித்துக்கொள்வார்கள்.

நெறிமேற்கொண்டு-நல்ல நீதி நெறிகளை மேற்சொண்டவர்கள். ஆசை செறிந்தவர்-ஆசையை அடக்கியவர். திறம்-குணம். தணித்தல்-அடக்குதல்.

யானென தென்ப தின்றி யெவ்வகைப் பொருளும் விட்டான்
றானெனச் சரிக்கின்றான் யாரவனை யேயடையுஞ் சாந்தி
யீனம் தடை யாரித்தை யடைந்த வரிறக்கும் போது
ஞானமே யுடையா ரென்னை நண்ணுவார் பிறவி
நண்ணார்.59

நான் எனது என்ற நிலையை நீக்கி, எல்லாவற்றின் மேலும் பற்றினை விட்டவன். எல்லாமே அப்பரம் பொருள் என எண்ணுகின்றவன் எவனோ அவன்தான் சாந்தியடைகின்றான். பல காலமும் இந்நிலையை அடையாமல் இருந்தவனும் கூட இறக்கும் தருவாயி லேனும், இனி இப்பிறவி வேண்டாம் என விரும்புகிறவர்கள், என்னைச் சரணடைகின்றார்கள்.

யாரவனையே யடையுஞ் சாந்தி-யார்+அவனையே+அடையும்+ சாந்தி. யீனம்-கீழான யாரித்தை-யார்+இதை, நண்ணுவார்-விரும்புவார்.

வேறு

பின்னையோ விவ்வுலக மெல்லாம் பெற்ற
வன்னையோ திருமார்பத் தனைத்தவன்
முன்னையோர் புகளு; வேத முடியை யோ
தன்னையோ வுள்ள வாறெல்லாஞ் சாற்றினான். 60

இவ்வுலகத்து உயிர்களை எல்லாம் பெற்ற அன்னையை தன் திருமார்பின் கண் அணைத்தவன், பழமையும் புகழும் வாய்ந்த வேதத்தின் முடிவே தான் என்பதை உண்மையாகச் சொன்னவன்.

பின்னை-பிள்ளை. புகள்-புகழ். சாற்றினான்-கூறினான்.

இரண்டாவது சாங்கிய யோகவத்தியாயம் முற்றியது.
மகாவிஷ்ணு லெசிக்கவும் விருத்தம்-62

வியாசரின் பகவத் கீதை

இரண்டாம் அத்தியாயம்

சாங்கிய யோகம்

1. சஞ்சயன் சொல்கிறான் இவ்வாறு. மனதிலே, இரக்க உணர்வு மிகுதியு உடையவனாக, நீர் தளும்பும் விழிகளுடன், சோகத்தோடு அமர்ந்துவிட்ட அருச்சுனனிடம், மதுசூதனனாகிய கண்ணன் இவ்வாறு சொல்கிறான்.

2. அருச்சுனா! வரக்கூடாத இந்த நேரத்தில் எங்கிருந்து உன்னை இந்தச் சோகம் வந்தடைந்தது? ஆரியகுலத்தவனுக்கு இது தகாத செயல், சுவர்க்கத்தைத் தரமாட்டாதது, இது உனக்குப் புகழையும் தராது.

3. ஆண் தன்மையற்ற அலியின் தன்மையை அடையாதே! இது சரியான செயல் அல்ல, இழிவைத் தரக்கூடிய இந்த மனச்சோர்வை விட்டுவிடு, எழுந்து நில், பகைவரை விடாது அழிப்பவன் நீ !

4. அருச்சுனன் கூறுவது:- பகைவர்களை அழிக்கக் கூடியவனே! என்னால் தொழுவதற்குரியவர்களாகிய, பீஷ்மரையும், துரோணரையும், எப்படி எதிர்க்க முடியும், அவர்களின் பேரில் அம்புகளை நான் எவ்வாறு தொடுப்பேன்! பகைவர்களை எப்படி அழிப்பேன் ?

5. என்னுடைய குருக்களாகிய இப்பெரியோர் களைக் கொல்வதைவிட, இவ்வுலகில் பிச்சை எடுத்து உண்பதே மேல், ஏனென்றால், அவ்வாறு பொருட்களை விரும்பும் குருமார்களைக் கொன்றுவிட்டு அதன்மூலம் கிடைக்கக்கூடிய இன்பம் இரத்தம் கலந்ததல்லவா ?

6. நாம் இவர்களைக் கொல்வதோ, அல்லது அவர்கள் நம்மை வெல்வது இதில் எது மேன்மையானதென்று எனக்கு விளங்கவில்லை! எவரைக் கொன்றபின் நாம் உயிர்வாழமாட்டோமோ, அந்த திருதராட்டிரக் கூட்டத்தார் தானே இந்தப் போர்முனையில் வந்து நம்முன்னே நிற்கிறார்கள்.

7. கோழைத்தனத்தால், சீரழிந்த குணமுடைய வனாய், எது சரி, எது தவறு என்று அறியமுடியாத மயங்கிய அறிவுடன், நான் உன்னைக் கேட்கிறேன். எது நல்லதோ அதை நிச்சயப்படுத்தி, சொல்லுவாயாக! நான் உங்களுடைய சீடன்! உன்னைச் சரணடைந்துவிட்ட எனக்குக் கட்டளை இடுவாயாக!

8. ஏனெனில், பூவுலகில், ஒப்பிலாத செல்வமுடைய அரசாட்சியைப் பெற்றாலும், வானுலகில் மேலான ஆட்சியைப் பெற்றாலும், புலன்களை அடக்கும் இயல்புடைய, இந்தத் துயரம் என்னை விட்டு நீங்குமென்று தோன்றவில்லை.

9. சஞ்சயன் சொல்கிறான்:- எதிரிகளை எரிப்பவனே! உறக்கத்தை வென்ற அர்ச்சுனன், கண்ணனிடம் இவ்வாறு சொல்லி, இனி போர் புரியமாட்டேன் எனவும் கண்ணனிடம் சொல்லி பின் மௌனமாக நின்றான்.

10. பாரதா ! அப்போது கண்ணன் புன்னகை பூத்தவனாக, இரண்டு படைகளுக்கும் நடுவிலே துயரம் மிக்கவனாக நின்ற அருச்சுனனை நோக்கி இவ்வாறு கூறுகிறான்.

11. ஸ்ரீ பகவானாகிய கண்ணன் சொல்கிறான் ! எவர்களைப் பற்றி நீ துயரம் கொள்ளக் கூடாதோ, அவர்களைப் பற்றி நீ துயரம் கொள்கிறாய்! பெரிய அறிஞனைப்போலவும் பேசுகிறாய் ! உண்மையான ஞானிகள், இறந்து போனவர்களைப் பற்றியும், தற்போது

உயிருடன் இருப்பவர்களைப் பற்றியும் வருந்துவதே இல்லை.

12. எக்காலத்திலும் நான் இல்லாமல் இருந்ததில்லை. நீயும், இங்குள்ள அரசர்களும் கூட அவ்வாறே இனி மேலும் நாம் அனைவரும் இல்லாமற் போகப் போவதும் இல்லை.

13. ஆத்மாவுக்கு, இந்த உடலில் எவ்வாறு பிள்ளைப் பருவமும், இளமையும், மூப்பும் தோன்றுகின்றனவோ அதேபோலத்தான், வேறு ஒரு உடல் பிறப்பும் தோன்றுகிறது. வீரமிக்கவன் இதைக்கண்டு கலங்க மாட்டான்.

14. குந்தியின் மகனே! குளிர், வெப்பம், இன்பம், துன்பம், இவை இயற்கையின் தீண்டல்கள், அவ்வப் போது தோன்றி மறைந்து போகக் கூடியவை என்றும் நிலையாக நிற்பவை அல்ல அர்ச்சுனா! ஆகவே அவைகளைப் பொறுத்துக் கொள்வாயாக !

15. எவன் ஒருவன் இவைகளினால், இன்பமும், துன்பமும் ஏற்படுவதை ஒன்றே என எண்ணுகிறானோ, எந்த வீர மகனை கலங்க வைப்பதில்லையோ, அப்படிப்பட்ட வீரனே என்றும் சாகாதிருக்கத்தகுந்தவன்.

16. இல்லாத ஒன்று உண்மையாகாது. இருக்கும் ஒன்றிற்கு இல்லாததென்பது ஒன்று இல்லை. இவை இரண்டிற்கும் உள்ள தத்துவத்தை உண்மையான தீர்க்கதரிசிகளே உணர்வார்கள்.

17. இவ்வுலக முழுவதிலும் பரந்து நிற்கும் பொருள், அழிவற்றது என்பதை அறிந்துகொள். இவை அனைத்தும் எங்கும் நிறைந்துள்ளவை. அழிவற்ற இதனை அழிக்க எவராலும் இயலாது.

18. ஆத்மா என்பது என்றும் இருப்பது. அதற்கு அழிவு கிடையாது. அளவிட்டுக் கூற இயலாதது. ஆனால் ஆத்மாவிற்கான வடிவங்கள் அழியக்கூடியவை என்பர். ஆகையினால், அருச்சுனா போர் செய் !

19. எவன் இந்த ஆத்மாவைக் கொல்பவனாக நினைக்கிறானோ, எவன் இந்த ஆத்மாவைக் கொல்லப் பட்டவனாக நினைக்கிறானோ; அந்த இருவருமே அறிவில்லாதவர்கள். இந்த ஆத்மாவானது எவரையும் கொல்வதுமில்லை. எவராலும் கொல்லப்படுவதுமில்லை.

20. இந்த ஆத்மாவானது என்றும் பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. முன் ஒருமுறை இருந்ததாக ஆகி பின்னர் இல்லாது போவதும் இல்லை. ஆத்மா என்பது பிறப்பற்றது. எந்நாளும் இருப்பவன். இவன் நிலையாக இருப்பவன். பழமையானது. உடல் கொல்லப்பட்ட போதும் ஆத்மா கொல்லப்படாமல் இருப்பதாகும்.

21. அருச்சுனா; ஆத்மா என்னும் இது மாற்றம் இல்லாதது. அழிவற்றது. என்றும் இருப்பது. பிறப்பு அற்றது. இதனை எந்த மனிதன் அறிகிறானோ அவன் எவரையும் கொல்வதுமில்லை, கொல்விப்பதுமில்லை.

22. பயன்படுத்தியபின் நைந்துபோன துணிகளைக் களைந்து நீக்கிவிட்டு, புதிய துணிகளை எடுத்து உடுத்திக் கொள்கிறானோ அவ்வாறே இந்த ஆத்மாவானது முதலில் எடுத்துக்கொண்ட ஒரு உடல் இனியும் இருக்கத் தகுதியற்ற இடம் என்று உணரும்போது வேறு ஒரு உடலை எடுத்துக்கொள்கிறது.

23. இந்த ஆத்மாவை ஆயுதங்களால் வெட்ட இயலாது. தீயினால் எரிக்கமுடியாது. தண்ணீரில் நனைந்தும் போகாது. காற்றில் உலர்ந்து போவதுமில்லை.

24. இரண்டாகப் பிளக்கமுடியாது. எரிக்கவோ, நனைக்கவோ இயலாது. உலர்த்தவும் இயலாது. அரியவன், என்றும் இருப்பது. எங்கும் நிறைந்திருப்பது. உறுதியானது, அசையாதது என்றும் நிலையானது.

25. இந்த ஆத்மா புலன்களுக்குப் புலப்படாதது. மனத்தினால் சிந்தித்து உணரவும் இயலாதது. என்றும் மாறுதல் இன்றி ஒரே நிலையில் இருப்பது. என்றெல்லாம் கூறப்படும் இதனை இவ்வாறாகவே அறிந்துகொண்டு வருத்தப்படாமல் இருப்பாயாக !

26. இப்படி அல்லாது, இந்த ஆத்மாவானது நாளும் பிறந்து மடிவது என்று நீ நினைப்பாயேயானால் நீண்ட கரங்களையுடைய அருச்சுனா! அப்போதும் இவ்வாத்மாவின் பொருட்டுத் துயரம் அடையக்கூடாது.

27. பிறந்தவன் இறப்பதும், இறந்தவன் மீண்டும் பிறப்பதும் உறுதி. எனவே இந்த விடிவு இல்லாத விஷயத்துக்காக நீ துயரப்படுவதுதகாது.

28. அருச்சுனா! உயிர்கள் தொடங்குவது எங்கே என்பதும் இறுதியில் எங்கே போகின்றன என்பதும் தெளிவில்லாத ஒன்றாகும். ஆகையால் இதில் துயரப்படுவதற்கு என்ன இருக்கிறது ?

29. இந்த ஆத்மாவை வியப்பாக ஒருவன் காண்கிறான், வியப்பிற்குரியதுதான் என ஒருவன் சொல்கிறான். ஆம் வியப்பிற்குரியதே என்று ஒருவன் கேட்டுக்கொள்கிறான். ஆனாலும் இதனை அறிந்து கொண்டவன் எவனும் இல்லை.

30. அருச்சுனா! இந்த ஆத்மாவானது எவராலும் கொல்லப்பட முடியாதது. ஆகவே உயிர்கள் அழிவதைப் பற்றி நீ வருந்துவது தகாது.

31. உன்னுடைய சுய தருமத்திற்காகவும், நீ நடுங்குதல் கூடாது. மன்னர்களுக்கு, அறப்போரைவிட உயர்ந்த நன்மையைத் தருவது வேறொன்றில்லை.

32. இந்தப்போர் தானாக வந்தது! சுவர்க்கமே கிடைத்தாற்போன்றது. இத்தகையை போரைச் செய்யும் வாய்ப்பை பெறக்கூடிய மன்னர்கள் இன்பமே அடைகிறார்கள்.

33. அதுவல்லாமல், இந்த தர்ம யுத்தத்தை நீ நடத்தாமல் விட்டுவிடுவாயானால், உன்னுடைய சுய நீதியையும், புகழையும் கொன்றவனாகி, பாவத்தையும் அடைவாய்.

34. உலகத்தார்களும் நீண்ட காலம் வரை உன்னைப் பற்றி இகழ்வாகவே பேசுவார்கள். புகழ்படைத்த ஒருவன் இகழ்வை அடைவது மரணத்தை விட கொடியதல்லவா?

35. பெரிய ரதங்களையுடைய வீரர்களால் நீ மதிப்புடையவனாக கருதப்பட்டாயோ, அவர்களே நீ பயத்தினால் யுத்தத்திலிருந்து பின் வாங்கிவிட்டதாக, தாழ்மையாகப் பேசுவார்கள்.

36. உனக்கு வேண்டாதவர்கள், உன் திறமையைப் பழித்துக் கூறுவார்கள். சொல்லத் தகாத வார்த்தைகள் பலவும் சொல்வார்கள். இதைவிடத் துன்பத்தைத் தருவது வேறு என்ன இருக்கிறது?

37. இந்தப்போரில் நீ கொல்லப்பட்டாயானால் வீர சுவர்க்கத்தை அடைவாய். வெற்றி பெற்றால் இந்தப் பூமியை ஆள்வாய். ஆகவே குந்தியின் மகனே ! இதனை உறுதி செய்துகொண்டு போர் செய்ய எழுந்திரு.

38. இன்பம், துன்பம், வரவு, இழப்பு, வெற்றி தோல்வி இவை அனைத்தும் சமமே எனக்கொண்டு, அதன்பிறகு போர் செய்யத் தயார் ஆகுவாயாக! இப்படி நீ செய்தால் பாபத்தை அடையமாட்டாய்.

39. இவ்வாறு உனக்கு சாங்கிய (அடிப்படையான அறிவினைக் கூறும்) முறைப்படி புத்தி சொன்னேன். இனி யோக வழியில் சொல்கிறேன் கேள்! இந்தப் புத்தி கொண்டவன் காமத் தளைகளைச் சிதறிவிடுவான்.

40. இந்த (கர்மயோகத்தில்) விதைக்கு முயற்சிக்கு நஷ்டம் என்பது இல்லை. எதிர்விளைவு எதுவும் இல்லை. இந்தக் கர்மயோக தர்மத்தில், சிறிதளவே கடைப்பிடித் தாலும் அது அவனைப் பெரிய அச்சத்திலிருந்து காப்பாற்றும்.

41. குருகுலத்தில் உதித்தவனே! உறுதியுடைய புத்தி இவ்வுலகத்தில் என்றும் ஒருமையுடையது. உறுதியற்றவர் களின் புத்தியோ பல வகையாலும் சிதறுவது ஆகும்.

42. வேதங்களின் வெளி உரையைக் கேட்டு மகிழ்பவர்கள் சிலர். பூக்களைப் போன்ற அலங்கார சொற்களைச் சிலர் பேசுகிறார்கள். தாம் கொண்ட கொள்கையைத் தவிர மற்றதை தவறு என்கிறார்கள்.

43. இவர்கள் ஆசையின் வசப்பட்டவர்கள். சொர்க்கத்தையே மேலானதாகக் கொண்டவர்கள். சுகபோகங்களையும், அரசாட்சியையும் விரும்புகிற வர்கள். பல வகையான செயல்பாடுகளைக் காட்டிப் பேசுகிறார்கள்.

44. இவ்வாறு இவர்கள் சொல்வதைக் கேட்டு மதிமயங்கி சுகபோகத்திலும், ஆட்சியிலும், பற்று கொண்டவர்களின் நிச்சயபுத்தி சமாதி-யோக-நிலையில் நிலைபெறாது.

45. மூன்று குணங்களுக்கு உட்பட்டனவற்றைப் பற்றி வேதங்கள் பேசுகின்றன. அருச்சுனா! நீ மூன்று குணங்களையும் கடந்தவனாய் ஆகுக. இருமைகள் அற்று, எப்போதும் உண்மையான நெறியில் நின்று யோக நலன்களைக் கருதாமல், ஆத்மாவை வசப்படுத்தியவனாக விளங்குவாயாக !

46. எங்கும் நீர் நிரம்பியள்ள இடத்தில் ஒரு சிறு குட்டையின் பயன் எந்த அளவுக்கு ஆகும்? அவ்வாறே எல்லாவித வேத சாத்திரங்களைப் படித்து ஞானம் பெற்ற பிராமணனுக்கு வேதத்தின் பயன் என்பது!

47. செய்யவேண்டிய கடமையைச் செய்யத்தான் உனக்கு அதிகாரம் உள்ளது. ஒரு போதும் அதன் பலனில் எதுவும் இல்லை. செய்யும் கடமையின் பலனைக் கருதாதே! அதே சமயம் கடமையைச் செய்யாமலும் இருந்துவிடாதே !

48. தனஞ்சயா ! யோக நிலையில் நின்று, பற்றுகளை நீக்கி, வெற்றியையும், தோல்வியையும் சமமாகவே கருதி, கடமையைச்செய். அனைத்தையும் சமமாகக் கருதுவதே யோகம் என்பது!

49. தனஞ்சயா! புத்தி யோகத்தைவிட கர்மம் மிக அதிகமாகத் தாழ்ந்த நிலையை உடையது. புத்தியைச் சரணடைந்துவிடு. பயனைக் கருதி வினையாற்றுவோர் லோபிகள்.

50. புத்தியுடையவன், நற்செய்கை, தீச்செய்கை என்ற இரண்டையுமே துறந்துவிடுகிறான். ஆகையால் நீ யோக நிலையில் பொருந்திவிடு! யோகம் என்பது எல்லாச் செயல்களிலும் மேம்பட்ட திறமையுடையதாகும். (வீடுபேறு பெற வழியும் அதுவே!)

51. ஏனெனில், புத்தியுடைய, மேதாவிகள், அறிஞர்கள் பயனைத் தியாகம்செய்து, பிறவியாகிய கட்டுகளை நீக்கி, என்றும் மாற்றம் இல்லாத, ஆனந்த மயமான பரமபதத்தை அடைகிறார்கள்.

52. எப்போது உனது புத்தியானது, மோகம் என்னும் குழப்ப நிலையைக் கடந்து செல்கிறதோ, அப்போது, கேட்கப்போவது, கேட்கப்பட்டது என்ற இரண்டிலும் உனக்கு வேதனை ஏற்படாது.

53. கேள்விகளிலேயே கலக்கத்தை அடைந்து விடாதபடி, உனது புத்தியானது, சமாதிநிலையில் அசையாது நிற்குமாயின் அப்போது நீ யோக நிலையை அடைவாய்.

54. கேசவா! உறுதியான அறிவுடன் கூட சமாதி நிலையில் நிற்பவன் எவ்வாறு பேசுவான்? என அருச்சுனன் கேட்கிறான்! நிலையான புத்தியை யுடையவன் என்ன சொல்வான்? அவன் எப்படி இருப்பான்? எதனை அடைவான்?

55. பகவானாகிய கண்ணன் சொல்கிறான்! எவன் ஒருவன் தன் மனதில் எழக்கூடிய ஆசைகள் அனைத்தையும் துறந்து, தன்னிலேதான் என்ற நிலையில் மகிழ்ச்சி அடைகிறானோ அவனே நிலையான, ஸ்திர புத்தியுடையவனென்று சொல்லப்படுகிறான்.

56. துன்பங்களிலே மனம் கெடாதவனாகவும் இன்பங்களிலே ஆவல் அற்றவனாகவும், கோபத்தை நீக்கியவனாகவும், இருப்பவனை ஞானி எனவும், புத்தியிலே உறுதி வாய்ந்தவன் என்றும் கூறுவர்.

57. எவன் ஒருவன் நல்லது வரும்போதும் தீயன வரும்போதும் மகிழ்வடைவதில்லையோ, வெறுப்பதும் இல்லையோ, அவைகளிடத்தில் வெறுப்பைக்

காட்டாமலும் இருக்கிறானோ, அவனுடைய அறிவே நிலையான உறுதியுடையதென்பர்.

58. எப்படி ஆமையானது தன்னுடைய ஐந்து உறுப்புகளையும் உள்ளிழுத்துக் கொள்கிறதோ, அவ்வாறு ஐம்பொறிகளின் தொடர்பானவைகளிலிருந்து தன்னுடைய ஐம்புலன்களையும் அடக்கிக் கொள்ள வல்லவனாகின்றானோ, அவனுடைய அறிவே உறுதியானது.

59. தம்மைக் கவராத உயிர்களிடமிருந்து வரக்கூடிய விஷயங்கள் தாமாகவே நம்மைவிட்டு விலகிவிடுகின்றன. ஆனாலும் அவற்றினின்றும் கிடைக்கக்கூடிய சுவையை நாம் மறப்பதில்லை. பரம்பொருளைக் கண்டு கொண்டதும் அவ்வாறு கிடைத்த சுவையும் கூட தீர்ந்துபோய் விடும்.

60. குந்தியின் மகனே! தவ முயற்சியுடைய புருஷனிடத்திலே கூட, இந்திரியங்களாகிய ஐம்புலன்கள் வரம்பு கடந்து செல்லும்போது தம்முடைய போக்கில் மனத்தையும், வலிய வாரிக்கொண்டு போய் விடுகின்றன.

61. அவற்றை எல்லாம் நன்றாக அடக்கி, யோகத்தில் அமர்ந்தவனாக என்னைப் பரமனாகக் கொண்டு, புலன்களை வசப்படுத்தி வைத்திருப்பவன் எவனோ அவனுடைய அறிவே நிலையானது.

62. மனிதனின் விஷயங்களைப் பார்க்கும்போது, அவனுக்கு அதில் பற்றுதல் உண்டாகிறது. அப்பற்றுதலின் காரணமாக விருப்பம் உண்டாகிறது. விருப்பத்தின் காரணமாகவே கோபம் உண்டாகிறது.

63. கோபத்தால் மயக்கம், மயக்கத்தால் நினைவு தவறுதல், நினைவு தவறுவதால் புத்தி நாசம், புத்தி நாசத்தால் அவனே அழிகிறான்.

64. விருப்பு, வெறுப்பு இன்றி தனக்கு வசப்பட்ட புலன்களுடன், விஷயங்களில் ஊடாடுபவனாய், தன் விதிக்கு தானே உட்பட்ட மனிதன் ஆறுதலடைகிறான்.

65. மனம் சாந்தியான நிலையை அடையும்போது மனிதனுக்கு எல்லாத் துன்பங்களும் அழிந்துபோகின்றன. மனம் சாந்தி பெற்றபின், ஒருவனுடைய புத்தி விரைவிலேயே நிலையான தன்மையை அடைகிறது.

66. யோகமில்லாதவனுக்குப் புத்தியில்லை. யோக மில்லாதவனுக்கு மனோபாவனை இல்லை. மனோ பாவனை இல்லாதவனுக்குச் சாந்தி இல்லை. சாந்தி யில்லாதவனுக்கு இன்பமேது ?

67. இந்திரியங்கள் சலிக்கையில் ஒருவனுடைய மனமும், அவற்றைப் பின்பற்றிச் செல்லுமாயின், அம்மனம், கடலில் தோனியைக் காற்று மோதுவது போல அறிவை மோதுகிறது.

68. ஆதலால்! பெரியதோளினை உடையவனே! எவ்விடத்தும், விஷயங்களிலிருந்து இந்திரியங்களைக் கட்டுப்படுத்த வல்லவன் எவனோ, அவனுடைய அறிவே நிலையான தன்மையதாகும்.

69. எல்லா உயிர்களுக்கும் இரவு எனப்படும் நேரத்தில் முனிவர்கள் விழித்திருக்கிறார்கள். ஏனென்றால் இவர்கள் தன்னைக் கட்டுப்படுத்தியவர்கள் மற்ற உயிரினங்கள் விழித்திருக்கும் நேரம் எதுவோ அதுவே அம்முனிவர்களுக்கு இரவு நேரமாகும்.

70. நீர் வந்து கடலில் விழும்போது, அசையாமல் நிலை கொண்டிருக்கும் கடலைப் போல, ஆசைகள் தன்னுள்ளே புகும்போது, கடலைப் போல அசைவுறாமல் இருப்பவன் எவனோ அவனே சாந்தி அடைகிறான். அவ்வாறன்றி விருப்பங்களை விரும்பி ஏற்பவனுக்கு சாந்தி கிடைப்பதில்லை.

71. ஆசையற்றவன், எல்லா இன்பங்களையும் துறந்தவன், யான், எனது என்ற நிலையற்றவன் எவனோ அவனே சாந்தி எனும் நிலையை அடைகிறான்.

72. அருச்சுனா! இது தான் பிர்ம நிலை! இதனை அடைந்தவன் பிறகு மயக்கம் கொள்வதில்லை. தன்னுடைய இறுதிக் காலத்திலாவது இந்த பிர்ம நிலையை அடைந்தவன். பிர்ம நிர்வாண நிலையை எய்துகிறான்.

விளக்கவுரை

வியாசர் தமது கீதையில் சாங்கிய யோகம் என்ற தமது இரண்டாவது அத்தியாயத்தை எழுபத்து இரண்டு சுலோகங்களில் கூறியுள்ளார்.

சுவடி ஆசிரியர் அதே சாங்கிய யோகம் என்று தமது இரண்டாவது அத்தியாயத்திற்கு தலைப்பிட்டு அறுபது விருத்தப்பாக்களைப் பாடியுள்ளார்.

முதல் அத்தியாயத்தில் கண்ணனால் செலுத்திவரப் பெற்ற, தேரிலே அமர்ந்து போர்க்களத்திற்கு வந்த அர்ச்சுனன், அங்கே இருபுறத்திலும், நண்பர்களும், தமக்கு வித்தையைக் கற்பித்த ஆசிரியர்களுமே தம்முடன் போர் புரியவேண்டி நிற்பதைக்கண்டு, மனம் கலங்கி, தன்னால் போரிட முடியாது எனக்கூறி வில்லையும், அம்பையும் கீழே போட்டுவிட்டு, சோர்ந்த நிலையில் தேர்த்தட்டிலே அமர்ந்துவிட்டான்.

இந்நிலையில் "சாங்கிய யோகம்" எனும் இந்த இரண்டாம் அத்தியாயத்தில் அவ்வாறு சோர்வடைந்து விட்ட அருச்சுனனுக்கு, கண்ணன் இருவகையான முறையில் நீதிகளை எடுத்துக்கூறி அவனைத் தேற்றி, போரிடவேண்டியதன் அவசியத்தை, கடமையை, உணர்த்துகிறான். சாங்கியம் என்ற சொல்லுக்கு அறிவு என்பது பொருள்.

[தனிக்குறிப்பு:- தமிழ்நாட்டின் தென்பகுதியில் உள்ளவர்கள், பிறப்பு, இறப்பு தொடர்பான மதச் சடங்குகளையும், இறை வழிபாடு தொடர்பான செயல்களைச் செய்வதையும், "சாங்கியம்" செய்தல் என்கின்றனர். மேலும் ஒருவர் தன்னுடைய குடும்பத்தில்

ஏற்பட்ட துன்பமான பிரச்சனைகள் எதுவும் வந்துற்றால், அதனை இறைவனின் செயல்-விதியின் வினை எனக்கருதி அத்தீங்கு நீங்கும் பொருட்டு மத நம்பிக்கையின் அடிப்படையில் சில சடங்குகளைச் செய்கிறார்கள். இதனைச் சாங்கியம் என்கிறார்கள்.]

வியாசர் முதல் மூன்று சுலோகங்களில சொல்லும் செய்தியையே சுவடி ஆசிரியரும் தமது முதல் மூன்று விருத்தங்களில் கூறுகிறார். மூன்றாம் விருத்தத்தில் அருச்சுனன் கண்ணனிடம், "நான் எவ்வாறு கொலை செய்ய முடியும் என்று கேட்கிறான். வியாசர், தமது பதினொன்றாம் சுலோகத்தில், அருச்சுனனைத் தேற்றி-இருப்பவர்களைப் பற்றியும், இறந்துபோனவர்களைப் பற்றியும் கவலைப்படுபவர்கள் ஞானிகள் அல்லர் எனவும், ஆத்மா என்பது பிறந்து இறந்து, இறந்து பிறந்து என்றும் நிலையானது என்பதை விளக்குகிறார் சுவடி ஆசிரியர். தமது நான்காம் விருத்தத்தில் இவர்களைக் கொன்று விடுவதால், அவர்களின் இரத்தத்தைச் சோற்றிலே இட்டுப்பிசைந்து உண்பது போல் அல்லவா ஆகும்" என்று அருச்சுனன் கூறுவதாகச் சொல்லுகிறார்.

ஏழாம் விருத்தத்தில், அருச்சுனன் தன்னை கண்ணனின் சீடன் எனவும், கண்ணனையே சரண் அடைந்ததாகவும் கூறி தான் இனி என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறும்படி கேட்கிறான். வியாசரின் ஏழாம் சுலோகத்திலும்இதனையே கூறியுள்ளார். வேறுபாடு ஏதும் இல்லை.

இல்லாத ஒன்று உண்மையாகாது. இருக்கும் ஒன்றிற்கு இல்லாததென்று ஒன்று இல்லை, என்ற தர்க்க ரீதியான கருத்தை வியாசர் தமது பதினாறாவது சுலோகத்தில் குறிப்பிடுகிறார்.

சுவடி ஆசிரியர், இதனை முடியும் பொருளே முதற் பொருளாகும் என தமது பத்தாவது விருத்தத்திலும் "நீ சொல்வதால் இவர்கள் இறந்து போவதில்லை, நீ கொல்லாமல் விட்டால் இவர்கள் சாகாமல் இருக்கப் போவதுமில்லை" என்னும் அரிய கருத்தை தமது பதினோறாம் விருத்தத்திலும் குறிப்பிடுகிறார்.

வியாசர் தமது பதினெட்டாவது சுலோகத்தில், ஆன்மா என்பதன் விளக்கத்தைக் கூறுகிறார். இதனையே சுவடி ஆசிரியர் தமது பதினான்காவது விருத்தத்தில் தெளிவாகக் குறிப்பிடுகிறார். தொடர்ந்து 15, 16ஆவது விருத்தத்திலும் ஆன்மாவைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறார். இந்த ஆன்மாவைப் பற்றி வியாசர் மிக விரிவாக, 18, 19, 20, 21, 22 ஆகிய சுலோகங்களில் சொல்வதோடு, நைந்துபோன ஆடையை மாற்றி புதிய ஆடையை உடுத்திக் கொள்வதைப் போல ஆன்மாவானது உபயோகமற்ற உடலை நீக்கிவிட்டு புதிய உடலை ஏற்கிறது என எடுத்துக்காட்டுடன் கூறுகிறார்.

இதனைத் தமது பதினெட்டாம் விருத்தத்தில் சுவடி ஆசிரியர் தாமும் ஒரு எடுத்துக்காட்டுடன் மண்ணால் செய்யப்பெற்ற பொருள்கள் மண்ணே எனவும், ஒருமுறை ஒரு உருவத்தை செய்த மண்ணைக்கொண்டு மீண்டும் வேறு ஒரு உருவத்தை அதே மண்ணால் செய்வதுபோல என்ற ஒரு புதிய எடுத்துக்காட்டுடன் கூறுவது சிறப்பாகும். சுவடி ஆசிரியர், கண்ணன்-பரமாத்மா எனவும் அவன் எவ்வாறெல்லாம் இருக்கிறான் என்பதைக் கண்ணனே கூறுவது போல விருத்தம் இருபதில் குறிப்பிடுகிறார். கடலில் தோன்றி மறையும் அலையைப் போன்றதே பிறவி என்ற ஒரு சிறந்த தெளிவான உவமையை சுவடி ஆசிரியர் தமது இருபத்திரண்டாவது விருத்தத்தில் கூறுகிறார்.

ஆன்மாவைக் கொல்வதாக நினைப்பவன் அறிவில் லாதவன் என வியாசர் தமது பத்தொன்பதாவது சுலோகத்தில் தெளிவாகக் கூறுகிறார். ஆன்மா பிறப்பும் இறப்பும் இன்றி என்றும் நிலையாக இருப்பதொன்று எனவும் கூறுகிறார். மன்னர்களுக்கு அறப்போரைவிட உயர்ந்த நன்மையைத் தருவது வேறு ஒன்றுமில்லை எனவும், கண்ணன் அருச்சுனனிடம், "நீ இந்தப் போரைச் செய்யாமல் இருந்தால் உன்னைப் பயந்தவன் எனவும் இகழ்வார்கள், மேலும் இந்தப் போரில் நீ இறந்து விட்டால்கூட வீர சுவர்க்கத்தையே அடைவாய்" எனவும் கூறுவதாக வியாசர் தமது 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, ஆகிய சுலோகங்களில் கூறி, பின்னர் கண்ணன், அருச்சுனனுக்கு இதுவரை சாங்கியமுறைப்படி புத்தி சொன்னதாகவும இனி யோக வழியில் சொல்லப் போவதாகவும் குறிப்பிடுகிறார். சுலோகம்-39. சுவடி ஆசிரியர் இவ்வாறான ஒரு செய்தியைத் தமது விருத்தத்தில் எங்கும் குறிப்பிடவில்லை. தவிர "குலத்தின் தொழில் என விதிக்கப்பட்டதையே நீ செய்யவேண்டும் எனவும், இறந்தபின் இவர்கள் போகும் இடம் எது எனவும் கேட்டதாக கண்ணன் வாயிலாக விளக்கம் தருகிறார். சுவடி விருத்தம் 28, 29. வியாசரின் கருத்துக்களையே சுவடி ஆசிரியரும் தொடர்ந்து தமது விருத்தங்களில் கூறுகிறார். விருத்தம் நாற்பத்தைந்தில், பயனைக் கருதாமல் கடமையை-செயலைச் செய்தல் வேண்டும். பேராசையால் அறிவு கெடும். கோபம் கொள்பவர்களால் இறைவனை உணரமுடியாது எனவும் கூறியுள்ளார். இதனை வியாசர் தமது நாற்பத்து எட்டாவது சுலோகத்தில், பற்றுகளை நீக்கி, யோக நிலையில் நின்று கடமையைச் செய் என்று கண்ணன் கூறுவதாக குறிப்பிடுகிறார். பயனைக் கருதி வினையாற்றுவோர் லோபிகள் எனவும் கூறப்பெறுகிறது. சுலோகம்-49,

மோகம்-ஆசை என்பது குழப்பத்தைத் தருவது. யோகம் என்பது எல்லாச் செயல்களிலும் மேம்பட்டது. புத்தியானது, கலக்கமின்றி சமாதி நிலையில் அசையாது நிற்குமாயின், யோக நிலையை அடையலாம் என்பன போன்ற தத்துவக் கருத்துக்களை வியாசர் 48, 49, 50, 51, 52 ஆகிய சுலோகங்களில் விரிவாகக் கூறுகிறார். இக்கருத்துக்களை, தத்துவ விஷயங்களை நன்கு கற்றுணர்ந்த ஞானிகள் மேலும் விரிவாகக் கூறி யுள்ளார்கள்- (பகவத் கீதை-விரிவுரை-பல பிரசுரங்கள்-நூல்கள் உள்ளன.)

இவ்வத்தியாயத்தில், சுவடி ஆசிரியரின் விருத்தப் பாக்களில் கூறப்படும் செய்திகள் பெரும்பாலும் வியாசரின் கீதையில் உள்ள சுலோகங்களில் கூறப்பெறும் கருத்துக்களை முழுமையாக ஒத்தனவாகவே உள்ளன.

ஐம்புலன்களையும் அடக்குவதற்கு ஆமையை உவமையாகச் சுவடி ஆசிரியர் தமது 50ஆம் விருத்தத்தில் கூறுகிறார். ஆசைகள மனதில் தோன்றுவதைக் கடலில் தோன்றி மறையும் அலைகளுக்கு உவமையாக ஐம்பத்தொன்றாம் பாடலில் கூறியுள்ளார். 52ஆம் பாடலில் ஆசையை அடக்காவிட்டால் அதுவே கோபமாக மாறும் எனவும் ஒரு செய்தியைக் கூறியுள்ளார்.

விருப்பு வெறுப்பு அற்றவரே பேரின்பம் அடைய இயலும் எனவும், கடமையை செய்யாதவனுக்கு அறிவு இல்லை எனவும், கூறும் சுவடி ஆசிரியர் கடலில் கப்பல் செல்ல உதவுவது காற்று. அக்காற்றே கப்பலைக் கடலில் மூழ்கடிக்கவும் செய்கிறது என்பது ஒரு நல்ல எடுத்துக் காட்டு-இது ஐம்புலன் நுகர்வு அளவோடு இருப்பின் நன்மையும் அளவுக்கு அதிகமாயின் தீமையும் தரும்

என்பதைத் தெளிவாக்குவதற்காக கூறுகிறார். இதுபோல வியாசரும், தமது நாற்பத்தாறாவது சுலோகத்தில் எங்கும் நீர் நிரம்பிய இடத்தில் ஒரு சிறு குட்டையின் பயன் எதுவும் இல்லை எனவும், கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என நாற்பத்தெட்டாவது சுலோகத் திலும், சமாதி நிலையில் இருப்பவன் எவ்வாறு பேசுவான் என்று கேட்கும் அருச்சுனனிடம், நன்மைகள் வரும் போது மகிழ்வும், தீமைகள் வரும்போது துன்பமும் கொள்ளாதவனே-உறுதியுடைய அறிவினையுடையவன், ஐம்புலன்கள் வரம்பு கடந்து செல்லும்போது ஞானிகள் கூட மன உறுதியை இழக்கிறார்கள் என அறுபதாவது சுலோகத்தில் கண்ணன் கூறுவதாகக் குறிப்பிடுகிறார். பற்றின் காரணமாக - விருப்பமும் விருப்பத்தின் காரணமாக கோபமும் உண்டாகிறது. பின்னர் அக்கோபத்தின் காரணமாக மயக்கமும், மயக்கத்தின் காரணமாக புத்தி நிலை தடுமாற்றமும் அத்தடுமாற்றமே அழிவுக்கும் காரணமாகிறதென வியாசர் அறுபத்து மூன்றாவது சுலோகத்தில் குறிப்பிடுகிறார்.

கடலில் தோணியைக் காற்று மோதுவது போல என்றும் உவமையை வியாசர், இந்திரியங்களின் வழி மனம் செல்வதற்குக் கூறுகிறார் சுலோகம்-67.

பல வழிகளாலும், ஆறு-மழை-நீர்வந்து கடலில் விழும்போது கடல் பொங்கி வழியாது அசையாது நிற்பதை-ஆசைகள் மனதில் புகும்போது அவ்வாசையின் காரணமாக மனதைச் சஞ்சலமடைய விடக்கூடாது என்பதற்கு உதாரணமாக வியாசர் எழுபதாவது சுலோகத்தில் கூறியுள்ளார்.

யான் எனது என்ற நிலையை நீக்கி சாந்தி நிலையை அடைந்தவனே பிர்மநிலை அடைந்தவன். அவனை

மயக்க நிலை ஆட்கொள்வதில்லை அவனே பிர்ம நிர்வாண நிலையை அடைகிறான் என கண்ணன் கூறுவதாக இரண்டாம் அத்தியாயத்தை நிறைவு செய்கிறார் வியாசர்.

வியாசரில் எழுபதாவது சுலோகச் செய்தி மாற்றம் இன்றி சவடி ஆசிரியர் தமது ஐம்பத்தெட்டாவது விருத்தத்திலும், இறுதி காலத்திலேனும் ஒருவன் சாந்திநிலை அடைந்துவிட்டால் அவன் இறைவனடியைச் சேர இயலும் என்று வியாசர் தமது எழுபத்தி இரண்டாவது சுலோகத்தில் கூறியிருக்கும் செய்தியைச் சுவடி ஆசிரியர் மாற்றம் ஏதுமின்றி தமது ஐம்பத் தொன்பதாவது பாடலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இந்த இரண்டாவது அத்தியாயத்தில் வியாசரும் சுவடி ஆசிரியரும் தேவையான இடங்களில் நல்ல உவமை களைக் கூறி படிப்பவர்களுக்கு மனதில் எளிதில் பதியும்படி தெளிவாகக் கூறியுள்ளார்கள்.பகவத்கீதையின் மிக முக்கியமான அத்தியாயம் இது.

மூன்றாவது தேவபூசைவத்தியாயம்

.....கடல் கடந்து மருமறை களான வற்றின்
றலையிலே யிருக்கும் வன றெரிலே நின்ற ருளிக்
கலையிலே பொருள் விரித்துக் காட்டாவு மெய்
காணாதே சிலையிலேய தோள் விசையனி
வண்ணஞ் செப்பினான் 1

கடலில் இருந்து, வேதங்களின் முதன்மைப் பொருளாக விளங்கும், வளர் எரியிலே நின்றவனாகிய கலைகளின் பொருளை விவரித்து காட்ட, உண்மை இதுவென அறிய இயலாத-தோள்களிலே வில்லைத் தரித்த விசயன் இவ்வாறு கூறினான்.

கடல் கிடந்து-பாற்கடலில் கிடந்து. மறைகளா னவற்றின் தலை யிருக்கும்-வேத முதல்வன். மெய் காணாத-உண்மையை அறியாத. சிலை-வில்.

நன்றே வினவின ஞானமென வுரைத்தாய் மீள்வினை
யதுநன்
றென்றே உரையா நின்றனை நானிவற்றிலேது நன்றென
வறியேன்
குன்றே யுனையா யனை யடைந் தேற் குற்ற துயர்
நீக்கிடுவதனை
ஒன்றே யாக வுரைத்தருள வேண்டு மென்றானவ
னுரைப்பான். 2

நல்லது எதுவென கேட்ட எனக்கு ஞானமே உயர்வெனக் கூறினாய்-வினையையும் நல்லது உயர்வானது என உரைத்தாய். எனவே இவ்விரண்டில் எது மேலானது என்று அறிய இயலாதவனாய் உள்ளேன்.

குன்றினை ஒத்த உன்னையே சரணமென்று அடைந்தேன். எனக்கு ஏற்பட்ட இந்தக் கலக்கத்தை நீக்கி இதில் எது உயர்வான ஒன்று என்பதைக் கூறியருள வேண்டுமென அருச்சுனன் வேண்டினான்.

வினவின-கேட்ட, உரையா நின்றனை-உரைத்தாய், உற்ற துயர்-இரண்டில் எது மேலானது என்று அறிய இயலாத கலக்கமே துயர். ஒன்றேயாக-இரண்டையும் மேலானது என்று கூறாது இவற்றில் எந்த ஒன்று மேலானது என்று கூறுவாயாக என்றது.

ஆதி இவ்வுலகினை யாக்கி யன்று நானோதிய
பொருளிவை யிரண்டு முண்மை
தீதி யலவா வறான் செயலை மாற.....
மீதியல் வினை யுறான் வீடுமே விடான். 3

இப்பாடல் முழுமையாக இல்லை. கண்ணன் அருச்சுனனிடம் கூறுகிறான். ஆதிநாளில் இந்த உலகத்தினை ஆக்கு அன்று நான் சொன்ன உயர்ந்த பொருள்களாகிய ஞானமும் வினையும் ஆகிய இரண்டும் உண்மையே! தீமை தரக்கூடிய ஆசையை அறவே விட்டொழிக்காதவன்-வினைகளை அறுக்க இயலாது. வினைகளை விட்டவன் வீடுபேறாகிய சுவர்க்கத்தை அடைகிறான்.

ஆதி-யுக தொடக்கத்தில். நானோதிய-நான் கூறிய. அவா அறான்-அவாவறான்-ஆசையை ஒழிக்காதவன். வீடு-சுவர்க்கம்.

ஒருவரு வொரு பொழுதினு ....மு
மிருவகை வினை செய்யாதவர் களில்லையா
லருமயல் பா வறான் வினை யடக்கிலான்
பருவா லொடு பொய்யே பாவிப்பா னரோ. 4.

ஒரே நேரத்தில் இரண்டுவிதமான செயல்களைச் செய்பவர் எவருமில்லை. ஆசையின் காரணமாக வினையை அடக்க இயலாதவன், பொய்யான செயல்களையே செய்தவராவர்.

இருவகை வினை - இரண்டு செயல்கள்.

புலனவை பொறிவழி போக்கு மாற்றியே
பலனற வினைக ளென் பொருட்டும் பண்ணுவாய்
நலனுறு மவ்வினை நாச மின்றியே
சலனுறு பிறவியுந் தவிர்க்குந் தன்மை கேள் ! 5

ஐம்புலன்களையும், ஐம்பொறிகளின் வழியாக மாற்றி, பலனை எதிர்பார்க்காது, செய்யவேண்டிய கடமைகளைச் செய்வாயாக! அவ்வாறு செய்த செயல் வீணாகாது. சலிப்பைத்தரும் பிறவியைத் தவிர்க்கும் என்பதைக் கேட்பாயாக.

புலன்-ஐம்புலன். பொறி-ஐம்பொறிகள். பலனற-பலனை எதிர்பார்க்காமல். சலன்-சலிப்பு. நாசமின்றி-வீண் ஆவது இன்றி.

வேறு

தேவர்களை மகிழ்விக்குஞ் செயலோடே தெரிந்திந்த
மூவகைய வுலகமு முன்படைத்த முதல் வன்னை
மொழிவான்
மேவரி யசுர பூசையிது நீங்கள் வேண்டியன யாவகையுந்
தருமின்ன மிது கேட்டீரென விசைப்பான். 6

மூவகை உலகையும் முன்னர் படைத்தவனாகிய, பரமாத்மாவெனும் கண்ணன் இவ்வாறு சொல்கிறான். செய்வதற்கு அரிய தேவ பூசையிது. இதனைச் செய்தால் அவர்கள் உங்களுக்கு நீங்கள் வேண்டியதை எல்லாம் தருவார்கள். என்றும் கூறினான்.

மேவரிய சுரபூசை-மேவ+அரிய+சுர+பூசை-செய்ய-அரியதான-தேவர்களுக்கான-பூசை.

செயல் வகையால் நீங்களவர் திரம் போற்றுமாங்கவரும்
புயல் வகை யாலுங் களையே புறம் பெற்றிப் புந்தி
வயல் வகை யானது பிழை யீரெனிலிரண்டு திறத்தீரு
முயல் வகையா லெனை யடைதீரென நிலத்தோர்க்
குரைத்தனனால். 7

வேள்விகள் செய்து தேவர்களை வழிபடுவதால் அவர்கள் மழையைப் பூமியில் பொழியச் செய்து உங்களை வளமாக வாழச்செய்வர். இவ்வாறு தேவர்களும் மானிடர்களும் அவரவர் தம் முயற்சிக்கேற்ப எனை வந்தடைவீர் என புவியில் உள்ளவர்களுக்கு உரைத்தான்.

செயல் வகை-செய்யும் வகை-செய்தல் என்பது தேவர்க்கு ஆகியதால் வேள்வி எனக் கொள்க. புயல்-மழை. மழையானது வயல் வளத்தைத் தருகிறது. முயல்வகை-முயற்சி செய்யும் வகை. எனையடைதீர்-என்னை அடைவீர்.

இதனால் வினைகளிலே விளைவன யாவை யுமிங்
னேதின னாய் வரும் வினை யாழியி னெறிசொலா திரிவார்
மதனாரிய புலனே மகிழ் விடமாகவு முடையார்
தனல் வாவமே கழிபவரா மென வரியே ! 8

வினைகளிலேதான் எல்லாம் விளைகின்றன. வினையின் நெறியைச் சொல்ல இயலாது. காமத்தை அகற்றிய புலன்களே மகிழ்ச்சியைத் தருவதாகும். அவ்வாறு காமத்தை அகற்றியவர்கள் மேன்மையானவர் என்பதை அறிவாயாக.

மதனாரிய-மதன்+ஆறிய=காமம் அகன்ற. தினனாய்-திண்ணமாய்-உறுதியாய். அவம்-தாழ்மை-கழிபவர்-அகற்றியவர்.

கண்ணிற் கருதரு மறிவைக் கருதிய லறிவே மிகவரு
களிகூரவோ
னெண்ணித் தொழில் தருபய னுற்றிரும் வகை யிசை
யானாதலின் விளையாவும்
பண்ணிப் பெறுவதோர் பயனு ண்டொவ்வை
பண்ணா துறு வதோர் பரரால். ୨

கண்களால் காணப்பெறுவனவற்றில் அறிவைப் பயன்படுத்தி அதன் பொருளில் இன்புறுவார்கள். நன்றாகச் சிந்தித்துக் கடமையைச் செயதல் வேண்டும். எனவே தன்னுடைய கடமையைச் செய்து பயன் எதுவோ அதைப் பெறவேண்டுமேயல்லாது-கடமையை-வேள்வியை செய்யாது பயனைப் பெறுவோர்.

கண்ணிற் கருதரு-கணகளால் காணக்கூடிய. களி கூர-இன்பம் தருவது. பணணிப் பெறுவது-கடமையைச் செய்து பலனைப்பெறுவது. பண்ணா துறுவோர்-கடமையைச் செய்யாது பயனைப் பெறுவோர்.

மற்றவர் தந்ததுகொண்டு மறுதத்தவரைப் பேணாதார்
கற்றவர் முன் பழித்துரைத்த கள்வரினும் கடைப்பட்டார்
பெற்றது கொண்டவரப் பேணிப் பிளைத்து கொண்டுண் ணாதே
யுற்றத் தன் பொருட்டாலே யுண்பான் றீ துண்கின்றான். 10

ஒருவர் கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு நன்றியுடன் மீண்டும் அவர்களுக்கு உதவாதவர்கள் கற்றவர்முன் பழித்துரைத்த திருடர்களைவிடக் கீழானவர்கள். பிறர் கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு மீண்டும் அவருக்கு உதவி செய்யாது உண்டு பிழைக்காதே! அவ்வாறு உண்பவன் தீமையை உண்பவனாகின்றான்.

பேணாதார்-காப்பாற்றாதவர். கள்வர்-திருடர். பிளைத்து-வாழ்ந்து. றீதுண்கின்றான்-தீது உண்கின்றான் பாபத்தை உண்கின்றான்.

வேறு

உளவா முயிருண வாலுணவுயா மாறியி னுளவா
மளவான மழையுயர் வானவர் மகிழ்வால் வருமது தா
னிளவா ளரியனை யாயிசை தொழிலால் வருமிதைமீ
தளவா மறைதரு மாமறை யறிவா லறிவுறுமால். 11

அளவான மழையை வானவர் மகிழ்ந்து தருவதால் உயிர்களுக்குத் தேவையான உணவு கிடைக்கிறது. வழுவாத அறத்தின் மூலம் அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்யும் தொழிலால் நீதி வழுவாத மன்னனின் ஆட்சியினால் வரக்கூடிய இதனையே வேதங்களை அறிந்த அறிஞர்கள தங்களின் ஞானத்தால் அறிந்த உண்மை என்பர்.

ஆதலால் நீயும் பலத்தின மெல்லாவற்றடுத்த காரியஞ்
செய்வாய்
தீதிலா வீடே சொலாமுன்னஞ் சேர்ந்தவ ரனேகர்
பின்றெறியிற்
காதலா லா சனகனே முதலானோர் கருமமோ டொழுகி
யேயன்றோ
போதரா வுலகம் புக்கதே மற்றும் புகுந்த வானேகா முன்
போனார். 12

ஆகையால் நீயும் பலனை எதிர்பார்க்காது கடமையைச் செய்வாயாக! தீமையற்ற வீட்டுப்பேற்றை, இவ்வாறு செய்தலைப் பின்பற்றியே அடைந்தார்கள். சனகன் முதலானோர், தங்களுடைய கடமையை ஒழுங்காகச் செய்தமையால் தான், பெருமைமிக்க கிடைத்தற்கரிய வானுலகமெனும் சுவர்க்க பதவியைப் பெற்றார்கள்.

அடுத்த காரியம்-எடுத்துக்கொண்ட கடமை உனக்கென உரிய தொழில். தீதிலாவீடு-தீமையற்ற சுவர்க்கம். கருமமோ டொழுகி-தாங்கள் செய்ய வேண்டிய கடமையைத் தவறாது செய்து. வானேகா முன்-இறக்குமுன் சுவர்க்கம் பெற்றார் என்பது.

பெரியவர் பயின்ற படியலாற் பயிலார் பின்புளோ
ரென்பதன்றாகி
லுரிய விவ்வுலக மூன்றினு மினக்குச் செய்ய வேண்டுவது
மொன்றுண்டோ
வரியவை யென்ற லுதவு முறுதற்பாலவுமே வையுமிங்
கையா
பரிய விவ்வுலக மகிழ்வுடன் வினைதான் பண்ணுதற்
கென்னையும் பாராய். 13

அறிவிற் சிறந்த பெரியோர்கள் செய்யும் செயலையே மற்றையோரும் பின்பற்றி செய்வார்கள். இம்மூவுலகிலும் நான் செய்யவேண்டிய கடமைகள் எதுவுமில்லை. அரிய செயல் என்று சொல்லுவதற்கு இங்கு எதுவுமில்லை. இவ்வுலக மக்கள் மகிழ்வுடன் வாழ நான் செய்யும் கடமைகளைப்பார்.

பின்புளோ ர்- சாதாரண மக்கள். அரியவை - செய்வதற்கு அரிய செயல்.

என்செய றவிரிலி யான செயாவினை களியா வருஞ்
செய்யா ராதலினாலே
மன்செய்த குலங்கள் மயங்கி மாய்ந்திடுவர் மற்றவர்
மற்றதற்காகப்
பின் செயலறியாத வாவொடு முயலும் பேதையைப்
பொற்பிறர் பொருட்டா
லுன் செயல்களைச் செய்வை செய்வார் தம்மை யுணர்வு
வெறாக்கறு மொழிவாய். 14

நான் எதுவும் செய்யாதிருந்தால், அறிவில்லாத வர்கள் தாங்களும் எதுவும் செய்யாதிருந்து விடுவார்கள். இதன் காரணமாக மனிதகுலம் மயங்கி மாய்ந்திடும். தான் செய்யும் செயல் இன்னதென அறியாது செயல்படும். அறிவில்லாதவர்களும், உன் செயலைக் கண்டு அதனையே செய்வர். எனவே அவர்களுக்காகவேணும், பிறருக்காவாவது, உன் கடமையைச் செய்வாயாக.

மன்செய்த குலங்கள்-மனிதர்கள், பேதை-அறிவில்லாதவர்கள், பிறர் பொருட்டு-மற்றவர்களுக்காக.

மெய்வகை தனக்கும் புலன்கட்கு முள்ள
வேறுபாட்டினை மிக வறிந்தோனை வகை
யியற்கைப் புலன்களே பொறியுற்ற முந்து
கின்றனவென வசங்கானிவ் வகையறி
யாதவனிரு வினையும் யான்
செய்தே னென விழைத் தெங்குமுய் வகை
யிதுநீ யுணர்ந்துனக் கடுத்த
வினை சேயென்றுரைத்து மீண்டுரைப்பான். 15

தனக்கும் புலன்களுக்கும் உள்ள வேறுபாடுகளை நன்கு அறிந்தவனும், புலன்களே பொறியில் அழுந்து கின்றன என்பதையும் அறியாதவனும் இரு வேறுபட்ட வர்களாக செய்யும் வினைகளையும் நானே இதனைச் செய்தேன் என்று அகம்பாவத்துடன் செய்பவர்களின் செயல்களையும் நானே செய்கிறேன் என்று உணர்வாயாக என்று மீண்டும் கூறுவான்.

இருவினை - இரண்டு செயல்கள். வசங்கள் - செயல்கள்- விழைத்து - விழைந்து.

என்பாற் பொறாமையினைத் தவிர்ந்தென் கருத்தா யுன்
வினையதனை
யன்பாற் பயில்வரா யாவர் சிலரவர் களற விட்டா
ரென் பாற் பொறாமை யானுரைத்த விதனை யிகழ்
கிற்பார்கள் வாவினைகள்
வன் பாற்றரையிலேழுமாம் பொன் மாய்ந்தா ரறிவு
மாய்ந்தரே! 16

என்னுடைய செயல்களைக் கண்டு என்மேல் பொறாமை கொள்ளாமல், நான் கூறுவதைக் கேட்டு அன்புடன்கூட செயல்களை, கடமைகளைச செய்பவர்கள், சிலரேயாவர். என்மேல் பொறாமை கொண்டு யான் சொல்லும் இதனை இகழ்பவர்களங வன்மையான நரகத்திலே வீழ்ந்து ஏழேழு பிறவியிலும் அறிவிழந்தவர்களாவர்.

கருத்தா யுள்ள வினை-மேலான செயல்கள். பயில்வார்-கடைப்பிடிப்பவர்கள். சொல்வதைக் கேட்டு அதன்படி நடப்பவர்கள். வாவினைகள்-வல் வினைகள். பொன் மாய்ந்தார்-சுவர்க்கத்தை இழந்து. ரறிவு மாய்ந்தார்-அறிவு இழந்தார்கள்.

வேறு

பண்டுநின்ற பன நிலையின் பணி கொண்டு
நின்றவை கூடுமவர் கட்குச்
கண்டு நின்றவர் கற்பனை யென் செய்யு
முண்டு நன்றி தெனாவுற வொண்ணு மோ. 17

இப்பாடலில் மூன்று வரிகள் மட்டுமே உள்ளன. பழைய காலந்தொட்டு, பழமையாய் இருந்து வரக்கூடிய செயல்களை இன்னதுதான் உயர்வெனக் கண்டு செயல்படுவோருக்கு அவர்தம் செயல்களைக் கண்டு கற்பனையாகக் கூறப்படும் சொற்களால் பயன் ஏதும் இல்லை. நன்றியும் கூறவேண்டுமோ !

பண்டு-பழமை, பணி கொண்டு-செயலை மேற்கொண்டு, தெனாவுற-தான் நவில.

அஞ்சு புலனாவை துடரு மஞ்சுபொறி யவையாம்
வெஞ்சு ரனிலு லறி யுயிர் வெம்பி யறிவு வொ
ருஞ்சு புகு நெறி தகைய வொன்னு வகை யுளகே
ளெஞ்சு தலி லின்ப மிடரென் பவையிகழ் நீ. 18

ஐம்புலன்களைத் தொடர்வது ஐம்பொறிகளாகும். இதனை அறிந்து உயிர் வெம்பி அழியும் காலத்திலாவது உய்யும் வகை அறிந்து கொள்ள வேண்டும். இன்பமும் துன்பமும் சமமாகக் கொள்வாயாக !

வெம்பி யளிவு-வெம்பி-காலத்தால் சிதைவுற்று-அளிவு-அழிவு. வொன்னு வகை-உய்யும் வகை. எஞ்சு தலில்+இன்பம்+இடர்+என்பவை+ இகழ+நீ=எஞ்சுதலிலின்பமிட ரென்பவை யிகழ் நீ.

தடுத்த தொழில் செய்வது தகாதது தனக்கே
யடுத்த தொழில் செயிது கெடுமெனு மழ கய்யா
விடுத்த கருமம் பெரிது செய்வதனில் மேலோர்
தொடுத்த கருமஞ் சிறிது செய்கை
தொளிலென்றான். 19

பெரியோர்களால் செய்யத்தகாத செயல் எனக் கூறப்பட்ட செயல்களைச் செய்யக்கூடாது. தமக்குரிய தன் குலத்திற்குறிய தொழிலையே செய்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் மனுதருமம் கெட்டுவிடும். எனவே உரிய தொழிலைச் செய்தல் வேண்டும். பெரியோர் சொல்லிய செயல்களைச் செய்வதே சிறந்ததாகும்.

கெடு-மனு-அழகு-மனுநீதி கெடும். தொடுத்த கருமம்-இதுதான் என நிர்ணயிக்கப்பெற்ற தொழில்.

மாயவனியை நின்றுறை செய்ய விசையன் மறித்துங்
கூறுவான்
நீய் வினை செய்யாதவரைத் திகைப்பச் செயிது திறலாலே
யேய பணிகொள்வாரைப் பொலிலற்றுவி ப்பான்
யாரென்றான்
பாயல் பரவையாய்க் கொண்ட பழையோ னிவ் வாறெனப்
பணிப்பான். 20

மாயவனாகிய கண்ணன் இவ்வாறு கூறியபோது, விசையன் இவ்வாறு மறுத்துக் கூறினான். தீய செயல்களைச் செய்பவரை பயங்கொள்ளும்படிச் செய்து, தன்னறிவாலே, உரிய தொழில் செய்பவர்களைக் கலக்கமுறச் செய்பவன் யாரென்றால் உயரிய ஞானம் படைத்தவர்கள் அல்ல என கருடனை வாகனமாகக் கொண்ட, பழமைக்கும் பழமையானவனாகிய கண்ணன் கூறினான்.

பரவை-பறவை-பாயல் பறவை-கருடன். பொலிவற்று விப்பான்-கலக்கமடையச் செய்வான். திகைப்ப-மயக்கமுற-பயம்-கொள்ளும்படி மறுத்துக் கூறல்-எதிர் கேள்வி கேட்டல்.

வேறு

தீமனந்தனிலே செனனஞ் செய்வ காமமென் னுங்
கைத்தாய் வளர்க்கின்றது
வேமயங் கொள் வெகுளி யென்கின்றது
நாம மற்றது நன்னல் மின்னுங்கேள். 21

இப்பாடலில் மூன்று வரிகள் மட்டும் உள்ளன. தீய மனங்களில் பிறப்பது வெறுக்கத்தக்க காமமேயாகும். இதுவே மன மயக்கத்தைத் தருகின்ற கோபத்தை உண்டாக்குகிறது. இன்னும் வாயால் சொல்லமுடியாத செயல்களை விரும்பிச் செய்வதால் வரும் கேட்டினை இன்னும் கேள்.

செனனஞ் செய்வ-தோன்றுவது-பிறப்பது. கைத்தாய்-வெறுக்கத் தக்கதாய். வெகுளி-கோபம், நாமமற்றது-சொல்லத்தகாதது.

எவ்வகைப் பயனுந் தின வல்லதை
யெவ் வகைப் பெரும் பாவமு மீவதை
யெவ் வகைப் பொருட்கும் பகையாவதை
யிவ்வகைத் தெனக் கூறுவ னின்னுங் கேள். 22

எவ்வகையிலும், தினையளவும் பயனற்றதை, பெரும் பாவமானதை, எல்லாப் பொருட்களுக்கும் பகையாவதை இவைதான் என மேலும் கூறுகிறேன் கேள்.

தினவல்லது - தினையளவது. இன்னும்-மேலும்.

நெருப்பை மூற்றிய தூபமும் நி டொளித்த
தருப்பணத்தை-மரை.....மாசும் போ
லுருப் படைத்தன வுள்ளுணர் யாவையும்
விருப்பமுற்ற வெங் காமம் விழுங்குமாய். 23

நெருப்பை மூடிய புகையும், நீண்ட நாட்கள் மறைத்துவைத்த பணமும், உள்ளுணரும் நல்வினை களையும் ஆசையானது விழுங்கிவிடும்.

மூற்றிய-மூடிய, தூமம்-புகை-நீடொளித்த-நீண்ட நாட்கள் ஒளித்து வைத்த. உள்ளுணர்வு-மனதில் உணரச் கூடிய. வெங்காமம்-கொடிய ஆசை-காமம்-ஆசை, மோகம்.

காதலார்த் தவிக்காமப் புலன் கனே
வாதலாப் புகுந்துள்ள மயக்குவ
தாதலாற் புலனைந்து மடக்கியே
யேதலாக் கடுங் காம இறக்குவாய். 24

காதலால்-ஆசையினால்-தவிக்க வைப்பது ஐம் புலன்களே! ஆகையால் உள்ளத்திலே புகுந்து மயக்கத்தைத் தரக்கூடிய ஐம்புலன்களையும் அடக்கி, தகாத கொடிய காமத்தை ஆசையை அழிக்கவேண்டும்.

காதல்-ஆசை, யேதாலா-தகாத, கடுங்காமம்-கொடிய ஆசை, காமம்.

ஆற்று மிவ் வுடம்பிற் பா மைம் புலன்
மாற்று மைம் புலனிற் பாயா மனம்
போற்றும் புந்தியதிற பாம் புந்தியிற்
றோற்றுகின்றது காண்பது தொல் பரம். 25

இவ்வுடலை இயக்குவது ஐம்புலன்கள், ஐம்புலன் களையும் இயக்குவது மனம். இம் மனத்தை புத்தியினால் அடக்கினால், புத்தியில் அறிவிலே-ஞானத்திலே-பழம் பொருளாகிய இறைவனைக் காணலாம்.

ஆற்றும்-இயக்கும்-வழி நடத்தும். புந்தி-புத்தி, தொல்பரம்-பரம் பொருள். புத்தியே--அறிவே மனத்தை அடக்கவல்லது என அறிக.

வேறு

மேலாயுள்ள விப் பொருளை மெய்யாயறிந்து பொய்யாய்
மாலாய் மயங்கு மனத்தினையு மடக்கி யந்த மனங் கலக்குங்
காலாயுள்ள காமத்தை காப்பா யென்று கட்டுரைத் தான்
சேலா யுலக முறு புன்னோர் செலு வின்புரையே
செலுத்தினோன். 26

எல்லாவற்றிற்கும் மேலாய் உள்ள இப்பொருளை உண்மையாய் அறிந்து, பொய்யாய், இருளாக்கி மயங்கும் மனத்தினை அடக்கி, அந்த மனத்தை கலக்கமடையச் செய்யக்கூடிய காமத்தை-ஆசையை-அடக்குவாய் என்று மீனாய் உருவெடுத்து உலகைக் காத்த தேரோட்டும் கண்ணன் கூறினான்.

மேலாய்-உயர்வாய். மாலாய்-இருளாய்-காலாய்-காரணமாய். சேல்-மீன்.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்-3

கர்ம யோகம்

1. அர்ச்சுனன் சொல்கிறான்: ஜனார்த்தனா! செய்கையைக் காட்டிலும் புத்தியே மேலானது என்பது உன்னுடைய கொள்கை என்றால், என்னை இந்தக் கொடிய செயலில் ஈடுபடச் செய்வது ஏன் கேசவா ?

2. குழப்பமான பேச்சினால் என்னுடைய புத்தியை மயங்கச் செய்கிறாய் எனக்கு நன்மையைத் தருவது எது என்பதை ஒரு சொல்லில் சொல்.

3. ஸ்ரீ பகவனாகிய கண்ணன் சொல்கிறான்! பாபமென்று எதுவும் இல்லாத அர்ச்சனா! சாங்கியர்களின் ஞான யோகத்தால் எய்தும் நிஷ்டை என இவ்வுலகில் இரண்டுவித நிஷ்டைகள் இருப்பதை முன்னால் உனக்கு என்னால் கூறப்பெற்றது.

4. ஒரு செயல் செய்வதை தொடங்காமல் இருப்பதால் செயலற்ற நிலைமை அடைவதில்லை. துறவறம் மேற்கொள்வதினால் மட்டும் (சித்தி) ஈடேற்றம் பெற்று விடவும் மாட்டான்.

5. எவனும் ஒருகணப்பொழுது கூட செயல் ஏதும் செய்யாதிருப்பதில்லை. இயற்கையாக விளையும் குணங்களே எல்லா உயிர்களையும், கட்டாயமாக தொழில்புரிய வைக்கின்றன.

6. கர்மேந்திரியங்களை அடக்கிக்கொண்டு, இந்திரிய விஷயங்களை மனத்தில் நினைத்தவாறு இருக்கிறவன் மூடாத்மா எனப்படுகிறான். அவனே பொய்யான ஒழுக்கமுடையவன் எனவும் சொல்லப்படுகிறான்.

7. அருச்சுனா! எவன் ஒருவன் இந்திரியங்களை மனத்தால் கட்டுப்படுத்திக் கொண்டு, பற்றில்லாமல் கர்மேந்திரியங்களால் கர்ம யோகம் பண்ணுகின்றானோ அவனே சிறந்தவன்.

8. உனக்கென விதிக்கப்பட்ட கடமையை நீ செய். ஏனெனில் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்யாமல் இருப்பதைவிட தொழில் செய்வது சிறந்ததல்லவா? அவ்வாறு தொழில் ஏதும் செய்யாமல் உன் உடம்பைப் பேணுதல் கூட இயலாத செயல் ஆகும்.

9. வேள்விகளுக்காக செய்யப்படும் கடமைகளைத் தவிர மற்ற வேலைகள் மனிதனைக் கட்டுப்படுத்துவதாக அமைகிறது. குந்தியின் மைந்தனே! பற்றுகளை நீக்கிவிட்டு அந்த வேள்விகளுக்காகவே தொழில் செய்து கொண்டிரு.

10. ஆதி காலத்தில் பிர்மதேவன் வேள்வியின் மூலம் உயிரினங்களைப் படைத்து, அவைகளிடம் நீங்கள் மேலும் பல்கிப் பெருகுவீர்கள் என்று சொன்னான். குந்தியின் மகனே! பிர்மதேவன் தான் படைத்த உயிரினங்களிடம் இந்த வேள்வியானது நீங்கள் விரும்புவனவற்றை எல்லாம் உங்களுக்குத்தரும் என்றார்.

11. இதனால் நீங்கள் தேவர்களைப் போற்றுங்கள் அந்த தேவர்கள் உங்களைப் போற்றுவார்கள். இவ்வாறு ஒருவருக்கொருவர் பாவனை செய்வதால் நீங்கள் உயர்ந்த நலத்தை எய்துவீர்கள்.

12. வேள்வியிலே, பாவனை செய்யப்பெற்ற-போற்றப்பெற்ற தேவர்கள், நீங்கள் விரும்பிய போகங்களை எல்லாம் தருவார்கள். அவர்களுக்குக் கைம்மாறு செய்யாமல், அவர்களால் கொடுக்கப் பட்டதை உண்பவன் கள்வனேயாவான்.

13. வேள்வியின் மிச்சத்தை உண்ணக்கூடிய நல்லோர்கள் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். தமக்காக மட்டுமே என உணவைச் சமைக்கும் பாவிகள் பாவத்தை உண்ணுகிறார்கள்.

14. உயிர்கள் அனைத்தும் உணவினால் தான் உண்டாகின்றன. அவ்வுணவு மழையினால் உண்டாகிறது. மழையோ வேள்வியினால் தோன்றுகிறது. வேள்வி என்பது செய்கையிலிருந்து பிறப்பது.

15. செய்கை பிர்மத்திலிருந்து பிறப்பது என்பதை உணர்ந்துகொள். பிர்மம் அமிர்தத்திலிருந்து தோன்றுகிறது. ஆகையால் எங்கும் நிறைந்த பிர்மம் எப்போதும் வேள்வியில் நிலைபெற்று இருப்பதாகும்.

16. பார்த்தா ! இவ்வாறாக சுழலும் வட்டத்தை இவ்வுலகில் பின்பற்றி ஒழுகாது எவன் பாப வாழ்க்கையுடையவனாக, புலன்களிலே களிப்புறுபவனாக அவனுடைய வாழ்க்கை வீணானதே !

17. ஆனால் எந்த மனிதன், தன்னிலே தான் இன்புறுகிறானோ, தன்னிலே தான் ஆத்ம திருப்தி அடைகிறானோ அவனுக்கு தொழில்-கர்மா-என்பது இல்லை.

18. அவனுக்கு செய்கையில் யாதொரு பயனுமில்லை, செயலின்றி இருப்பதினாலும் அவனுக்கு யாதொரு பயனுமில்லை. எவ்விதப் பயனையும் கருதி அவன் எந்த உயிரையும் சார்ந்து நிற்பதில்லை.

19. ஆதலால், பற்றினை நீக்கி எப்போதும் செய்யத் தக்க தொழிலை செய்துகொண்டிரு. பற்றில்லாமல் தொழில் செய்துகொண்டிருக்கும் மனிதனே பரம் பொருளை எய்துகிறான்.

20. ஜனகன் முதலானோரும் செய்கையினாலேயே சித்தி-சிறந்தபேறு-பெற்றார்கள். உலக நன்மையைக் கருதி நீயும் தொழில்-கடமை-புரிதலே தகும்.

21. உயர்ந்த மனிதர்கள் என்போர் எதனை எல்லாம் செய்கிறார்களோ அதனையே மற்றவர்களும் பின்பற்று கிறார்கள். அவன் எதை-சரி என்று நிர்ணயிக்கிறானோ அதையே உலகத்தார் தொடர்கிறார்கள்.

22. பார்த்தா ! எனக்கு மூன்று உலகத்திலும் யாதொரு கடமையும் இல்லை. நான் பெறாத பெறும் பேறு எதுவும் இல்லை. என்றாலும் நான் தொழில் செய்வதாலேயே இயங்குகிறேன்.

23. பார்த்தா ! நான் எப்போதும் சோம்பல் இல்லாமல், தொழில் செய்து கொண்டிருக்காவிட்டால், எல்லாப் பக்கங்களிலும் உள்ள மனிதர்கள் .என் வழியையே பின்பற்ற தொடங்கிவிடுவார்கள்.

24. நான் என்னுடைய கடமையைச் செய்யாதிருந்து விட்டால், இந்த ஜனங்கள் எல்லாம் அழிந்துபோவார்கள். குழப்பத்தை உண்டாக்கியவனாவேன். இந்த மக்களை எல்லாம் கொன்றவனாகவும் ஆவேன்.

25. பார்த்தா ! அறிவில்லாதவர்கள் தங்களுடைய செய்கைகளில் பற்றுடையவர்களாய் எப்படித் தொழில் செய்கிறார்களோ, அப்படித்தான், அறிவுடையவன் பற்றினை நீக்கி, உலக நன்மையை நாடி தொழில் செய்யவேண்டும்.

26. அறிவுடையவர்கள், தொழிலில் பற்றுதல் கொண்ட அஞ்ஞானிகளுக்கு, புத்தி பேதத்தை விளைவிக்கக் கூடாது. அவர்கள் தமது எல்லா கர்மங்களையும், செவ்வனே செய்து அந்த அஞ்ஞானி களையும் எல்லாத் தொழில்களிலும் கவர்ச்சி உடையவனாக மாற்ற வேண்டும்.

27. இயற்கையின் குணங்களால், எங்கும் தொழில்கள் செய்யப்படுகின்றன. அகங்காரத்தால் மயங்கியவன்-தான்-செய்கிறேன் என்று நினைக்கிறான்.

28. பெரியதோள்களை உடையவனே! குணம், செய்கை இவைகளினுடைய பிரிவுகளை இதுவென உண்மையை அறிந்தவன். குணங்கள் குணங்களிலேயே தான் இயங்குகின்றன என்று கருதி பற்று அற்று இருப்பான்.

29. இயற்கையில், குணங்களால் மயங்கியவர்கள், குணங்களிலும், தொழில்களிலும் பற்றுதலை அடைகிறார்கள். சிற்றறிவுடைய அப்படிப்பட்டவர்களை, முற்றும் உணர்ந்த ஞானிகள, சுழல்விக்கக்கூடாது. புத்தி தடுமாற்றம் அடையும்படி செய்யக்கூடாது.

30. என்னிடம் மனது ஒன்றியவனாக, எல்லாச் செய்கைகளையும் எனக்கு அர்ப்பனம் செய்துவிட்டு மனக்காய்ச்சல்-தீர்த்தவனாய், ஆசையை நீக்கி என்னுடையது என்ற பற்றையும் நீக்கி போர் செயவாயாக.

31. எவன் ஒருவன் மனதில் பொறாமையின்றி, பொறுப்புடையவனாய், என்னுடைய இந்தக் கொள்கையைப் பின்பற்றுகிறானோ அவன் கர்மாக்களிலிருந்து விடுபடுகிறான்.

32. யார் ஒருவர், பொறாமையினால், என்னுடைய இந்தக் கொள்கையை பின்பற்றாது விடுகிறார்களோ, எவ்வித ஞானமும் இல்லாத அந்த மூடர்கள், நாசமடைந்தவர்களே என்பதைத் தெரிந்துகொள்.

33. எல்லா உயிர்களும், இயற்கைக்கு ஏற்ப இயல்பை அடைகின்றன. ஞானமுடையவன் கூட தன்னுடைய இயற்கைக்குத் தக்கபடியே நடந்துகொள்கிறான். எனவே கட்டாயப்படுத்தி அடக்குவது எந்தப் பயனையும் தராது.

34. இந்திரியத்திற்கு இந்திரிய விஷயங்களில் விருப்பு வெறுப்பு ஏற்பட்டிருக்கின்றன. இவ்விரண்டிற்கும் ஒருவன் வசப்படலாகாது. இவையே அவனது நேர்வழிக்குத் தடையாகும்.

35. நன்றாகச் செய்யப்படக்கூடிய பர தர்மத்தைக் காட்டிலும், குணமற்றதெனினும், சுயதர்மமே சிறந்து. இந்த சுய தர்மத்தினால் இறந்துவிட்டாலும் கூட நன்மையேயாகும். பரதர்மம் என்பது பயத்துக்கிடமாகும்.

36. அர்ச்சனன் கேட்கிறான்:- விருஷ்ணி குலத் தோன்றலே! மனிதன் தான் ஆசைப்பட்டு விரும்பாத போதும் வலியக் கொண்டுபோய் தூண்டி, அவனைப் பாவம் செய்யும்படி எதனால் செய்யப் பெறுகிறான்?

37. ஸ்ரீ பகவானாகிய கண்ணன் சொல்கிறான்:- இது விருப்பமும் சினமும் ரஜோ குணத்தில் பிறப்பது, பேரழிவு செய்வது, பெரும்பாவம். இதனை இங்கு விரோதியாகத் தெரிந்துகொள்.

38. எப்படி புகையினால் தீயும், அழுக்கினால் கண்ணாடியும், மறைக்கப்படுகிறதோ, எப்படி தசை யினால் கர்ப்பம் மூடப்பட்டிருக்கிறதோ அதைப் போல ஞானம் என்பது இவ்வுலகைச் சூழ்ந்து இருக்கிறது.

39. குந்தியின் மகனே! திருப்தி அடையாத நெருப்பைப் போன்றதும், ஆசை எனும் வடிவில் இருப்பதும், ஞானிகளுக்கு என்றும் பகையாக இருக்கும் காமம் என்பது ஞானத்தைச் சூழ்ந்து இருக்கிறது.

40. இந்திரியங்களும், புத்தியும், மனமும் இதற்கு நிலைக்களன்கள் என்பர். இவைகளைக் கொண்டு இது ஞானத்தசை சூழ்ந்து மனிதனை மயங்கச்செய்கிறது.

41. ஆதலால் பரதர் ஏறே! தொடக்கத்தில் இந்திரியங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு, ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் அழிப்பதாகிய இந்தப் பாவத்தைக் கொன்றுவிடு.

42. இநதிரியங்களை உயர்வானது என்பர் ஆனால் அவற்றை விட மனம் மேலானது. மனத்தைக் காட்டிலும் புத்தி மேலானது. புத்தியைவிட மேம்பட்டது ஆன்மா.

43. இவ்வாறு, புத்திக்கும் மேலான பொருளான ஆன்மாவை உணர்ந்து, தன்னைத் தானே உறுதிப்படுத்திக் கொண்டு, வெல்வதற்கு அரிய ஆசையாகிய பகையைக் கொல்வாயாக. பெருந்தோளுடையவனே !.

விளக்கவுரை

வியாசர், பகவத் கீதையின் மூன்றாவது அத்தியாயத்திற்கு, கர்ம யோகம் என்று தலைப்பிட்டுள்ளார். சுவடி ஆசிரியர், தமது மூன்றாவது அத்தியாயத்திற்கு தேவபூசை அத்தியாயம் எனத் தலைப்பிட்டுளளார்.

வியாசரின், இவ்வத்தியாயத்தில் உள்ள நாற்பத்து மூன்று சுலோகங்களில் உள்ள கருத்துக்களைச் சுவடி ஆசிரியர் இருபத்தாறு விருத்தங்களின் மூலம் கூறுகிறார்.

இரண்டாம் அத்தியாயத்தில் இருவேறுவிதமாகக் கூறிய அறிவுரையினால் தெளிவுபெறாத அருச்சுனன், கண்ணனிடம் இவ்விரண்டில் எது மேலானது எனக் கேட்கிறான்.

இக்கருத்து வியாசரின் இரண்டாவது சுலோகத்திலும் சுவடி ஆசிரியரின் இரண்டாவது விருத்தத்திலும் ஒத்தே வருகிறது.

வினைகளை அறுத்தவன் வீடுபேறு அடைவதாக சுவடி ஆசிரியர் தமது மூன்றாவது விருத்தத்தில் கூறும் கருத்து வியாசரின் பத்தொன்பதாவது சுலோகத்தில் உள்ளது.

ஒரே சமயத்தில் இருவேறு வினைகளைச் செய்பவர் எவருமில்லை என சுவடி ஆசிரியர் தமது நான்காம் பாடலில் கூறுகிறார். இக்கருத்து வியாசரால் கூறப் பெறவில்லை.

சுவடி ஆசிரியர் ஐந்தாம் பாடலில் பலனை எதிர் பார்க்காமல் செய்யப்படும் செயல் வீணாகாது-நல்ல பலனைத்தரும்-எனக் கூறுகிறார். இதனை வியாசர் தமது

பத்தொன்பதாவது சுலோகத்தில் பற்றில்லாமல் தொழில் செய்பவனே பரம்பொருளை அடைகிறான் எனக் குறிப்பிடுகிறார்.

ஆறாவது சுலோகத்தில் மூடாத்மா எவன் எனவும் பொய்யான ஒழுக்கமுடையவன் எவன் எனவும் விளக்குகிறார். சுவடி ஆசிரியர் தமது பத்தாவது பாடலில் நன்றி கெட்டவனைத் திருடன் என்று சாடுகிறார்.

சுவடி ஆசிரியர் தமது ஒன்பதாவது விருத்தத்தில் கடமையைச் செய்தே பலனைப் பெற வேண்டுமெனவும் அவ்வாறு கடமையைச் செய்யாது பயனை மட்டும் பெறுவோர் நற்செயலைச் செய்தவர் அல்லர் எனவும் கூறுகிறார். இதனை வியாசர் தமது எட்டாவது சுலோகத்தில் விதிக்கப்பெற்ற கடமையைச் செய். தொழில் ஏதும் செய்யாமல் உடம்பைப் பேணுவது கூட இயலாத செயல் ஆகும் என்கிறார்.

வானவர் மகிழ்வதால் பூமிக்கு அளவான மழை கிடைக்கிறது. மழையினால் உணவு கிடைக்கிறது-விசும்பின் துளிவீழ பசும்புல் முளைக்கிறது-மன்னர்களின் நீதி வழுவாத ஆட்சியினால் தான் இது இவ்வாறு ஆகிறதென்கிறார் பதினோராவது விருத்தத்தில் சுவடி ஆசிரியர். இதனை வியாசர் தமது பதினான்காவது சுலோகத்தில் உணவினால் தான் உயிர்கள் உண்டாகின்றன, அவ்வுணவு மழையினால் உண்டாகிறது. மழையோ தேவர்களைக் குறித்து செய்யப்பெறும் வேள்வியினால் உண்டாகிறது எனத் தெரிவிக்கிறார்.

பிர்ம தேவன் வேள்வியின் மூலம் உயிரினங்களைப் படைத்தவன். சுலோகம் பத்து-தேவர்களும் மனிதர்களும் ஒருவரை ஒருவர் போற்றுதல் வேண்டும். சுலோகம்

பதினொன்று-சுலோகம பன்னிரண்டில் தேவர்களுக்குக் கைம்மாறு செய்யாது உண்பவன் கள்வன்-எங்கும் நிறைந்துள்ள பிர்மம் அமிர்தத்திலிருந்து தோன்றுகிறது-இந்த பிர்மம் வேள்வியில் நிலைபெற்று இருக்கிறது-புலன்களில் இன்புறுபவனின் வாழ்க்கை வீணானது-சுலோகம் 16. ஆத்ம திருப்தி-தன்னிலே இன்பம் அடைகிறவனுக்கு கர்மா-தொழில் என்பது இல்லை-சுலோகம் 17.

ஆகிய கருத்துக்கள் இம்மூன்றாம் அத்தியாயத்தில் சுவடி ஆசிரியரால் கூறப்பெறவில்லை. உயர்ந்த மனிதர்கள் எதைச் செய்கிறார்களோ அதனையே மற்றவர்களும் பின்பற்றுவார்கள் என்பது வியாசரின் கருத்து-சுலோகம் 21-இதனைச் சுவடி ஆசிரியர் மாற்றம் எதுவும் இன்றி தமது பதிமூன்றாவது விருத்தத்தில் கூறியுள்ளார். இதுவே பதினான்காவது விருத்தத்தில் விரிவாகவும் கூறியுள்ளார்.

அருச்சுனனிடம் கண்ணன் கூறுவதாக வருவது. எவன் ஒருவன் என்மேல் பொறாமை கொண்டு என்னுடைய கொள்கையைப் பின்பற்றாமல் போகிறானோ-அவன் மூடன்-நாசமடைவான் என்ற இக் கருத்தை வியாசர் தமது முப்பத்து இரண்டாவது சுலோகத்திலும், சுவடி ஆசிரியர் தமது பதினாறாவது விருத்தத்திலும் சேர்ந்தே சொல்கிறார்கள்.

ஐம்புலன்களைத் தொடர்வது ஐம்பொறிகள். இதனைச் சாகும் காலத்தேயாவது அறிந்து கொள்ள வேண்டும்-இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கொள்ளவேண்டும். விருத்தம் 18-சுவடி-

பெரியோர்கள் செய்யத்தகாதன எனக்கூறியுள்ளவற்றை செய்யக்கூடாது. மனுதர்மப்படி தனக்கே உரிய தொழிலைச் செய்யவேண்டும் என்ற கருத்து சுவடி ஆசிரியரின் பத்தொன்பதாவது விருத்தத்தில் வருகிறது.

இந்திரியங்களை விட மனம் மேலானது-மனத்தைக் காட்டிலும் புத்தி மேலானது-வியாசர் சுலோகம்-42, புத்தியிலும் மேலானது ஆன்மா சுலோகம்-43, பரதர்மம், சுயதர்மம்-சுலோகம்-35, பேரழிவு ரஜோ குணத்தில் பிறப்பது சுலோகம்-37, காமம் என்பது திருப்தி அடையாத நெருப்பினைப் போன்றது. எரிய எரிய எதனைப் போட்டாலும் எரித்துக் கொண்டே இருப்பது-ஆசை என்பதும் இவ்வாறே! அளகேசன் நிகராக அம்பொன் மிக வைத்த பேரும் செம்பைப் பொன்னாக்கும் வித்தைத் தேடி அலைவர்-என்ற தாயுமானவரின் வரிகளை நினைவிற் கொள்ளவும்-. சுலோகம்-37, சுலோகம்-40-இந்திரியங் களும், புத்தியும் மனமும் ஞானத்தைச் சூழ்ந்து மயங்க வைப்பது. சுலோகம்-38, புகையினால் நெருப்பு சூழப்பட்டுள்ளது. அழுக்கினால் கண்ணாடி மறைக்கப் படுகிறது. தசையினால் கர்ப்பம் மூடப்பட்டிருக்கிறது. இவைகளைப் போலவே ஞானம் என்பது இவ்வுலகைச் சூழ்ந்து இருக்கிறது. ஆகிய இக்கருத்துக்கள் சுவடி ஆசிரியரால் இம்மூன்றாம் அத்தியாயத்தில் கூறப்பெறாத செய்திகளாகும்.

ஆகவே சுவடி ஆசிரியர் வியாசரின் மூன்றாம் அத்தியாய கீதையின் பல செய்திகளையும் விட்டு விட்டார் என்க.

நான்காவது சம்பிறதாயவத்தியாயம்

நற்றவ நிகழ் தரு க ம ஞானமு
மற்ற வ தற வுனக்கறியக் கூறினேன்
மற்றவைகளின் வரலாறுங் கேளெனக்
குற்றமிலா ழியங்கையன் கூறுவார். 1

மேலானதாக விளங்கக்கூடிய கர்ம ஞானமும், மற்றவற்றையும் சந்தேகம் வராதவாறு உனக்குக் கூறினேன். இனி வேறு பலவற்றின் வரலாறுகளையும் கேள் என தூய்மையான சங்கினைக் கையில் ஏந்திய வனாகிய கண்ணன் கூறலானான்.

க ம - கர்ம; எழுத்து விடுபட்டுள்ளது. அற-சந்தேகமின்றி. குற்ற மில் லாழியம் கையன்-குற்றம்+இல்+ஆழி+அம்+கையன். அம்-அழகிய, இல்-இல்லாத.

ஏவமற முன்பு யான் னிரவிக் கோதினே
னவன் மனுவாசனுக் கறியக் கூறினா
னுவகை யோடே வனிக்கு வாகுக் கோதினான்
றவ முயலா சீதறியுந் தண்மையோர். 2

குற்றமற இதனை முன்பு நான் சூரியனுக்குக் கூறினேன். அவன் அதனை மனுவெனும் அரசனுக்குக் கூறினான். அம்மனுவானவன் அன்புடன் இஷ்வாகு என்ற மன்னனுக்குக் கூறினான். தவத்தை மேற்கொள்ளும் சரிதம் இதனை உணர்ந்து கொள்வாயாக !

எவமற-குற்ற மற. ரவி-சூரியன், உவகை-விருப்பம், இக்குவாகு-இஷ்வாகு என்ற மன்னன்.

கருக்கும் வகை நிகழ் காலஞ் சேறலான்
மரு வரும் வகையதாய் மறைந்த வாய்மையை
இருவினை கெட வரும் யோக நீர்மையை
யொருவரு மறிவரி தாய் உண்மையை. 3

அறியாமையின் காரணமாக தற்காலத்தில் இதனை உலக மக்கள் மறந்து விட்டார்கள். இந்த உண்மையை, இருவினைகளையும் நீக்கவலல யோகத்தின் பெருமையை, யாரும் அறியாத உண்மையை-உனக்குச் சொல்கிறேன்.

கருக்கும் வகை-அறியாமை காரணமாக. சேறலான்-இல்லாமற் போனது. நீர்மை-மேன்மை, அரியதாய்-எளிதில்-கிடைக்காததாய்.

வேறு

நல்ல காதல் செய் நண்பனு மாயோனை
யல்ல தியாவு மறியலை யாதலாற்
சொல்ல மேயின் னென்றன்ன றூம்வன்
மெல்லவேறு விசையன் விளம்புவான். 4

என்மேல் அன்புடையவனும், நண்பனும் ஆகிய நீ, இதைப்பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை, ஆகையால் உனக்குச் சொல்லலானேன் என்று கூற அருச்சுனன், கண்ணனிடம் இவ்வாறு கேட்கலானான்.

நல்ல காதல்-தூய அன்பு, யாவு மறியலை-எதுவும் தெரியவில்லை. றூயவன் - கண்ணன்.

ஞானமாமிது நல்லவர் கேட்டிடப்
போன காலமும் யான் புகன்றே னென்றா
யான தானு மவ் வுடம் பன்றி து
தான தாம் வகை நீ யறி தக்க தே ! 5

நல்லறிவாகிய இதனை முன்னாளில் நல்லவர் கேடக நான் சொன்னேன். அப்போது இருந்ததும் இதே உடல்தான் இப்போது இருப்பதும் இதே உடல்தான் இதனை நீ அறிவாயாக.

ஞானம்+இது=ஞானமிது-நல்லறிவு இது. போன காலம்-முற் காலத்தில். புகன்றேன்-சொன்னேன். அவ்வுடம்பன்றி-அந்த உடலே அல்லாது.

சொல்வார் விசையனிது மொழியத் துளபப முடியோன்
சொல்லுவான்
பல்லாயிரங் காலுடம் பெனக் குண்டுமுனக்கு நடுவு பரிந்
தொழிந்த
தெல்லா மறிவன் யா னீ யடுத்து மறியா யிது வன்றோ
வில்லார் தோளாய் நமக்குள்ளே வேறுபாடு விளம்புங்கால். 6

(இதைக்கேட்ட அருச்சுனன் இது எவ்வாறு? எனக் கேட்ட போது) துளசி மாலையை அணிந்தவனாகிய கண்ணன், "எனக்குப் பல ஆயிரம் உடம்பு உண்டு, கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் இனி வருங் காலத்தையும் நானறிவேன் உனக்கு இவை எல்லாம் தெரியாது. வில்லினை ஏந்திய தோளினை உடைய அருச்சுனா! உனக்கும் எனக்கும் உள்ள வேறுபாடே இதுதான்", என்று கூறினான்.

துளபம்-துளசி, நடுவு-நிகழ் காலம், ஒழிந்த-கடந்த காலம். விளம்புங்கால்-சொல்லும்போது.

சாவாது பிறவாது தனி முதலாயிருந்த
நானாவாய் வுலகு படுமழிதுயர் தீர்ப் பதற்காக
மேவாது நின்றே யென் மாயை யினான் மெய்யேபோ
லோவாது பிறந்திடுவே னுகந்தோறு முகந்தோறும். 7

இறப்பும் பிறப்பும் அற்றவன் நான். தனி முதல்வ னானவன். உலகத்தார் படக்கூடிய துன்பங்களை நீக்குவதற்காக, என்றும் இருக்கின்ற என்னுடைய மாயா சக்தியினால், உண்மையாக, யுகங்கள் தோறும், பிறக்கின்றேன்.

படுமழிதுயர்-படக்கூடிய துன்பங்கள். யுகந்தோறும்-ஒவ்வொரு யுகத்திலும்.

மெய் வகைய தீதுவென்ன வேண்டுவோர் வேண்டிய
னவ்வகைத் தெய்வமுமா யானே காளிப் பேனு
மிவ்வகை யென்செயல் தனை யறிந்தா
ரிவ் விடும்பையினின்றுய் வகையநெறி
பெற்றாங்கு யர்ந் தாரை யுரைப்பரிதால். 8

உண்மையான வழியறிந்து: வேண்டுவோர்க்கு வேண்டும் தெய்வமாக இருப்பவனும் நானே! அவர்களுக்கு வேண்டுவன எல்லாம் அளிப்பவனும் நானே! துன்பத்தினின்றும் நீங்கும் வகை இதுவென அறிந்த உயர்ந்த பெரியோர்களே இதனை அறிவர். அறிந்தவர்கள் மற்றவர்களுக்கும் உரைப்பதற்கு அரியது இது.

காளிப்பேன்-களிப்பேன்-அருள்வேன். இடும்பை-துன்பம். உய்வகை-பிழைக்கும் வழி, நெறி பெற்றாங்கு உயர்ந்தோர்- நல்ல வழியில் நின்று வாழ்ந்த உயர் மக்கள். உரைப்பரிது-சொல்வதற்கு அரிதானது.

செயலாலுங் குணனாலுஞ் செல நாலு குலமாக
வியலானமுன் படைத்தே னானிப் பொளுது காப் பேனான்
மயலாய் வினைப் பயனின் மனம் வைப்பேன் மற்றதனுக்
கயலாமே யிருக்கு மெனக் கவை யிவை வெற்றியரால். 9

செயலினாலும், குணத்தினாலும், இயல்பாக உடைய நான்கு குலத்தவராக உலக மக்களை நான் படைத்தேன். ஆனாலும் இவைகளுக்கு நானே காரணமானவன் அல்லன் என்பதை வாழ்க்கையில் ஞான வழியில் வெற்றி பெற்றவர்கள் அறிவார்கள்.

நாலு குலமாக-நான்கு பிரிவினராக. இப்பொளுது-இப்பொழுது. காப்பேன்-அதைக் காப்பேன். அயலாமே-அயல்-தொடர்பில்லாத-காரணமல்லாத.

உய்யும் பரிசி னுணர்ந்தவர்கள் புணர்ந்த வினை
மேலொருப் படுநீ
செய்யும் கருமம் செய்யாமை தீய கரும மென்றிவற்றின்
மெய்யும் பொய்யும் றிகுவை யறிய வேண்டும் பொருளுமிவை
செய்யுஞ் சிலைக் கையுரவோ யறு மற்றிவற்றின் செயலை
யியம் பக்கேள் ! 10

மேன்மையான நிலையை அடையும் வழியை உணர்ந்தவர்கள் மேற்கொண்ட செயல்களையே நீயும் செய்ய விருப்பம் கொள். செய்யவேண்டிய செயல்களைச் செய்யாதிருப்பின் கேடு வந்து சேரும். செய்யக்கூடாத தீய செயல்கள் எவை என்பதையும் அறிந்துகொள். உணமை எது பொய் எது என்பதை அறியவேண்டும். போர் செய்ய வேண்டிய வில்லைக் கையில் ஏந்தியவனே! உறவினை-பாசத்தை நீக்கிவிடு. மேலும் இவற்றின் செயலைச் சொல்கிறேன் கேள்.

உய்யும் பரிசு - மேன்மையடையும் வழி. மேல்+ஒருப்படு-மேலொருப்படு-விருப்பம் கொள். சிலை - வில்.

ஓடுகின்ற புனல் யாற்றி னோடத்துடனே யோடுவான்
மாடுநின்ற மானோட த்தானின்றாற் போல் வரச் செய்தே
நீடுநின்ற மாங்கனிவை நிற்கு யியற்கைத் தன்மைத்திங்
கோடு நின்றேன் யானே யென்று ணர்வு மிக்கொ
ருணர்ந்தார்ப் போலே. 11

வெள்ளம் பெருக் கெடுத்து ஓடக்கூடிய ஆற்றிலே ஓடத்தைச் செலுத்துபவன் அவ்வாற்றின் நீரோடே தானும் போவான். அருகில் நின்ற மான் ஓடும்போது தான் நின்றதனைத் தன்னருகே வரச்செய்வான் இவ்வாறு இவர்களைப் போல இயற்கையினோடு நான் பற்றுக் கோடாக என்றும் இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்வாயாக.

ஆற்று வெள்ளத்தோடு போகிறவன் வினைவழி வாழ்ந்து மடிபவன்- மானைத் தன்னருகே வரச்செய்பவன் புலன்களை அடக்கி மேன்மை யடைகிறவன். ஆகிய இயற்கையாய் அமைந்த இவர்களுக்கு பற்றுக் கோடாய் இருப்பவன் இறைவனாகிய கண்ணன்.

புனல்-நீர், மாடு-அருகில், நீடு-என்றும், கோடு-பற்றுக்கோடு. கொம்பு-கிளை.

செயன் மேனின்ற வறிவிடையே செயலின்மை யும்
செயல்செய்யா
வியன் மேனின்ற புலன்களிலே யெல்லா வினையு
மியல்வதுவு
மயன் மேலின்றி யறிந்தாயரவனே யெல்லா மறிந்தானு
முயன் மே னின்ற யோகியு நல்ல வினைக ளெல்லா
முறுவானும்.12

செய்யும் செயல்களில் அறிவைக் கொண்டு செயலின்மையானவனாகவும், செயல் ஏதும் செய்ய வில்லை என்ற போதும் புலன்களினாலே எல்லாச் செயல்களையும் செய்தாற்போலும் மயக்கம் இல்லாமல் அறிந்தவர்கள்,முயற்சியினால் மேன்மையுற்ற யோகிகளே. இவர்களுக்கு எவ்வித வினைகளும் ஏற்ற பாடாகாது.

செயல்-செயலின்மை, மயன் மேல்-மயக்கத்தினால். முயன்மேல்-முயற்சியினால்.

வேறு

ஆவதென்பது மாசையு மற்றன
மேவ ஞான வெந்தீயிடை வெந்தன
யாவர் தந் தொளிலவ் வகையோர் களே
சாவதும் பிறப்புந் தவிர்த்தார் கடாம். 13

ஆசையற்றவனாக செய்யும் செயல்கள் அவனுடைய ஞானமென்னும் பெரிய தீயில் இடப்பட்டதாகும். யார் ஒருவர் இவ்வாறு செயல்படுகிறார்களோ அவர்கள் இறப்பையும், பின்னர் பிறப்பதையும் தவிர்த்தவர்களாவர்.

ஆவதென்பது-ஆகும் செயல்-செய்யும் செயல். தவிர்த்தார் கடாம்-தவிர்த்தார் கள்+ஆம்-தவிர்த்தவர்கள் ஆவர்.

எண்ணுமின்றி யிகபரம் யானிவை
பண்ணு கின்ற ணென்னுமிப் பான்மையோ
யுண்ணு மேல் வினை யுண்டென வோர் கிலா
னன்னு கின்ற வினை நீலிவு ண்ணு மோ. 14

அளவில்லாத இகத்தையும், பரத்தையும் யானே இயக்குகின்றேன் என்ற மனப்பக்குவத்தோடு நினைக் கின்றவர்களுக்கு வினைகளின் பயன் உண்டு எனக் கருதுபவர்கள் அடைகின்ற இழிவை நினைக்க இயலாது.

எண்ணுமின்றி--அளவில்லாத, வோர் கிலார்-ஓர் கிலார் அறிய முடியாதவர், நீலிவு-நலிவு-இழிவு.

பெற்றதே கொடாமை ந்து முன் பெறிழ
வுற்ற போதி லொத்த தென்று மொருவார் பாற்
செற்ற மேது மிலாதவன் செய்வினை
குற்ற மொவ் வற்றின் றிறங் கூறக் கேள். 15

தான் பெற்ற செல்வத்தில் திருப்தி அடைந்து, பெரிய இழப்பு ஏற்பட்டாலும் கூட. வருத்தம் கொள்ளாது பொறாமையற்றவனாய், செய்கிறவனின் தொழில் பற்றற்ற தன்மையது. ஆதலால், அவன் செய்யும் தொழில் அவனைக் கட்டுப்படுத்தாது.

கொடாமைந்து-கோடாயமைந்து-போதும் எனும் மனப்பாங்குடன் ஏற்றுக்கொண்டு. பெறிழ வுற்ற போதி-பேறிழப்பு+உற்ற+போதிலும், செற்றம்-பொறாமை. குற்றம்+ஒவ்வ+அற்ற+றிறம்+கூற-குற்றவொவ் வற்றின றிறங் கூற.

அடங்குகின்ற புலன்ங் களோடா சை போய்
மடங்குகின்ற மனத்தின னானவ
னுடம்பிதன் பொருட்டாலுளவா மெனத்
துடங்கு கின்ற யினை துடக் குண்ணுமோ ! 16

ஐம்புலன்களையும் அடக்கியவனாக, ஆசையற்றவ னாக, மனத்தளவிலே ஆணவம் இல்லாதவனாக இருப்பதற்கே இவ்வுடலை எடுத்துள்ளதாக தொழில் செய்பவனைக் கர்மவினைகள் ஒட்டாது.

புலன்களோடு+ஆசை-புலன்களோடாசை. மனத்தி னானவ-மனத்தில்+ஆணவம்.

விட்டு முற்றும் வினைகள் வினைப் பயத்
திட்ட மாற்றிறை தின்னி லெழுங் கருத்
தொட்ட நின்றவன் யோகப் பொருட்டுற
பட்ட கன்மம் பலத்துடன் மாயுமால். 17

வினைகளை முழுமையாக விட்டுவிட்டு, வினையி னால் விளையும் பயனையும் மாற்றி, இறைவன்பால் கருத்தை ஒருமித்தவனுக்கு யோக நிலை கிட்டும். அவ்வாறு யோகநிலை சித்திக்கப் பெற்றவனுக்குக் கர்மங்கள் ஒட்டுவதில்லை.

வினை-செயல். வினைப்பயன்-செயலால் விளையும் பலன். யோகநிலை-உயர்வான தெய்வீக நிலை.

பிரம மானோர் பிரம நெருப்பிடைப்
பிரம மாகிய மந்திரந் தன்னினாற்
பிரமமாய் சருவுடன் பெய்தபின்
பிரம மேயடை வாருளக பின்னுங்கேள். 18

பிர்ம நிலையை அடைந்தவர்கள், பிர்மம் என்ற நெருப்பிலே-யாகத்திலே-பிரமம் என்னும் மந்திரத்தால் பிர்மத்தையே எல்லாமாக போட்டபின்-ஆகுதியாக அளித்த பின்-அவர்கள் பிறவி எனும் துன்பம் நீங்கி-பிர்மத்தை அடைகிறார்கள். மேலும் கேட்பாயாக.

பிர்ம நெருப்பு-யாகத்தீ, மந்திரம்-யாகங்களில் சொல்லப்படும் மந்திரங்கள், சருவுடன்-எல்லாமாக, முழுமையாக, அடைவாருளக-அடைவார்கள்.

அறிவதாகிய வங்கியிலே கொள்
வரிவையே சில ராகுதி பண்ணுவார்கள
செறிவதாஞ் சாமத் தீயிடையே சில
ரெறிவதாய் புலன்களை யீவார்கள். 19

யாகத்தீயில் ஆகுதியாக சிலர், அறிவிலே விளைவ தாகிய ஞானத்தை இடுகிறார்கள், மேலும் சிலர் அடர்ந்த வேதத்தீயிடையே தங்களுடைய புலன்களையும் ஈவார்கள்.

ஆகுதி-யாகத்தீயில் இடப்பெறும் பொருள். சாமத்தீ-சாம வேதத்தால் ஓதப்பட்டு வளர்க்கப்பெறும் யாகத்தீ. புலன்களை ஈவார்கள்-ஐம்புலன்களின் பொறிகளில் ஒன்றை அறுத்து ஈதல். வங்கி=-அங்கி-போர்வை துணி.

உந்தியப் பொறி யைந்தையு மொக்கவே
யிந்தியத் தளல்வாயிடுவார் சிலர்
நந்தியந் றொளில் யாவையு ஞானநெய்
சிந்தி யோக வெந்தீ யிடுவார் சிலர். 20

ஐம்பொறிகளையும் கூட ஒருசேர சிலர் யாக நெருப்பிடை இடுவர். கர்மாவை சிலர் ஆகுதியாக்குவர். ஞானத்தை நெய்யாக யோகத்தீயில் இடுவார் சிலர்.

பொறி ஐந்தையும் ஒக்குமே-ஐம்பொறிகள் அனைத்தையும், தொளில்-தொழில்-கர்மா. ஞானநெய்-ஞானமெனும் நெய் வெம்மைத்தீ-வெந்தீ. தளர்-தழல்-நெருப்பு.

தேடிய பொருள் களாலுஞ் செயலுறு தவங்களாலு
தாடிய யோகத்தாலு நவின்மறை ஞானத்தாலுங்
கூடிய பரிசால் பவள விகுலா வுவானே காங்கும்
பாடிய விவர்களன்றி யிவர்சிலர் பரிசுங் கேளாய். 21

தன் உழைப்பினால் கிடைத்த பொருளைக் கொண்டும், தவத்தினாலும், யோகத்தினாலும், வேத ஞானத்தினாலும், ஆகுதி செய்வர். இவர்களைத் தவிர வேறு சிலரும் உள்ளார்கள் அவர்களைப் பற்றியும் கூறுகிறேன் கேட்பாயாக.

பரிசு-பெருமை, காங்கும்-காணும், பாடிய இவர்கள்-இதுவரை கூறப்பட்ட இவர்கள்.

மிகமேனின்ற பிரணனை யங்க பானனிடையே
புகவிட் டங்கமே னின்றப் பானனை யப்பிரா னன்னிடை
யாகுதி பண்ணி யிகமே யிரண்டு மியக்க மற
விருப்பார் சிலர் மற்றிவர் கண்டாய்
தகமே நின்ற பிராணா யாமத்தை தலை நின்றவ
ரென்பர். 22

உடலில் உள்ள பிராணவாயுவை, அபாண வாயுவினிடத்தே கட்டுப்படுத்தியும், அபாண வாயுவை பிராண வாயுவினிடத்தே அடக்கியும் ஒன்றுக்குள் ஒன்றாய் ஆகுதிசெய்வார்கள். இவர்களைத் தவிர மேலும் பிராணா யாமத்தில் ஈடுபட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

பிராணவாயுவும் அபாண வாயுவும் ஒன்றுக்கொன்று எதிரானவை-பிராணாயாமம் என்பது இவ்விரண்டின் தன்மையையும் சமமாக்குவது.

வேறு

இன்னவர்கள் யாவர்களும் யாகம றிவாரே
யன்னவர்களே யறனி நீமை யையகன்றோர்
சொன்ன பரிசாலிவை துடங்கி முடியா தார்க்
கென்ன பரிசாறு மிகமிலை பரமுண்டோ. 23

இவர்கள் அனைவரும் யாகம்-வேள்வி என்றால் என்ன என்பதை அறிந்தவர்கள். அவ்வேள்வியைச் செய்வதன் காரணமாக பாவத்தை அறச்செய்தவர்கள். இப்படிச் சொல்லப்பெற்ற வேள்வியைத் தொடங்கி செய்து முடிக்க இயலாதவர்களுக்கு இகம், பரம் இரண்டுமே இல்லை.

இகம்-இவ்வுலக இன்பம், அறநீமை-அறமல்லாத-பாவம். பரம்-சுவர்க்லோக சுகம்.

வேறு

இப்படி யுரைத்த விந்த யாகங்கள் யாவு முன்னஞ்
செப்பிய பிர்மத்தின் கட செனித்தன செய்யுங்காலை
யொப்பரிதாய் புத்தி கருமத்தினுள் வாமுள்ள
தப்படி யறிந்து நீயும் பாவத்தினகல நிற்பாய். 24

இப்படியாக நான் கூறிய யாகங்கள் எல்லாம், நான் முன்னரே கூறிய பிர்மத்தில் தோன்றியவைகளாகும். ஒப்பரிய புத்தியானது புத்தியினுள் செயல்படுவது என்பதை அறிந்து பாவங்களிலிருந்து விடுபட்டு நிற்பாயாக.

செப்பிய-சொன்ன, செனித்தன-பிறந்தன, புத்தி-அறிவு, கருமம்-செயல்.

வேறு

தொன்மை யாக முன் சொன்ன துறைக் கெல்லா
நன்மையா மிகற் பாலது ஞானமே
பின்மையா லறுத் தாங்கது பேணிடுந்
தன்மை யாதெனி லாங்கது சாற்றுவாய். 25

பழமையாக, முன் சொன்ன உரைகள் எல்லா வற்றையும்விட மிகவும் நன்மையானது ஞானமே. ஆசையை அறுத்து அந்த ஞானத்தை மேலாகக் கொண்டு போற்றுவதால் ஆகும் பயன் என்ன என்பதைச் சொல்கிறேன.

தொன்மை-பழமை, மிகற்பாலது-மிகவும் மேலானது. அறுத்து-ஆசையை அறுத்து-நீக்கி. பேணி-பெரிதாகக் கொண்டு, போற்றி.

வேறு

விழியாமென வறிவாலறி வுறுவோர் விழி வசமே
வழிபாடு செயிதவர் சேவடி மலர் சூடிட வவரே
யொழியா தவர்களும் யாவையு மொரு நீ யென
திடை யென்
றழியா வகையது வாவதோ ரறிவே யருளுவரால். 26

அறிவுக் கண்களினால் அறிவை அறிவோர் கண்களால் கண்டு இறைவனின் திருவடியை மலர்சூடி வழிபடுபவர்கள் அவர்களே! அவ்வாறு வழிபட இயலாதவர்களும் கூட என்னை வந்தடைகின்றார்கள். இதன் காரணத்தை நீயுணர்வாயாக.

வழிபாடு-வணங்குதல். விழியாமென-கண்கொண்டு. அழியா வகை-பேறு பெறுதல் அழியா நிலை.

அதனால் வருபயன் யாதெனி லழி
பாதக முதலாய் வித நாடாரும் வினை
யாழியினிடையே
விழுகுறு வராகி தனாகி யவறிவாகிய சிதையா
மிதவை யினா லிதனாய் வகைகளை சேருவனெங்
னே யெனிலது கேள்! 27

அதனால் வரக்கூடிய பயன் என்னவென்றால், அழியக்கூடிய பாதகங்கள் முதலானவற்றை விரும்பாதவர் களும், வினை என்னும் கடலிலே வீழ்வார்கள். அறிவனால் எல்லாவற்றிற்கும் மூல காரணன்-ஆதி-எது என்பதை அறிவினால் அறிபவர்கள், அழியாத மிதைவை-தோணி-ஏறிக்கரைசேருவர்.

அழி பாதகம்-அழியக்கூடிய தீமைகள. நாடார்-விரும்பாதவர், வினையாழி-வினை+ஆழி=கர்ம வினையெனும் கடல், சிதையாமிதவை-அழியாத தோணி, கரைசேருவர்-பிறவி நீங்கி இறைவனடி சேருவார்கள்.

எரிவரு கானிடையெரியா தன வெவை தா
யறியா வறியுடை யீர்களுயர மறவீரது பொற்
குறியால் வரு குண ஞான மேயனலே
கொளுவிடுமேற்
பொறியால் வரும் வினை யானவை பொடியா
மிதோர் பொருளே. 28

பெரிய காடு தீப்பற்றி எரியும் போது அதில் எரியாது எஞ்சி நிற்பது எது? தாயறியா-அறிவுடையவர்களின் நிலை அறிவீர். அதுபோல-குறிகளினால் வரக்கூடிய குண ஞானம் எனும் நெருப்பு கொளுந்து விட்டு எரியும்போது ஐம்பொறிகளால் வரும் வினைகள் பொடியாகிப் போகும். இதுவும் ஒரு கருத்தாகும்.

எரிவரு கானிடை-எரியும் காட்டில், அறிவீரதுபொற்-அறிவீர் அதுபோல. குறியால்-செயலால்-இந்திரியங்களால். கொளுவிடு மேற-கொழுந்து விட்டு எரிய. பொறியால்-ஐம்பொறியாக பொடியாகும்- அழிந்து போகும்.

வேறு

தீதற் பாலாம் வினை புரிவொருஞ் சிலநாளிலே
தற்பாலா மறிவறிவ தக்கோர் யாரென்னி
னோதற் பாலார் பாலு மிவ் வுண்மை பொருட்பாலுங்
காதற் பாலா ரைம் புலன் வென்றோரிவர்
கண்டோய். 29

தீமை தரக்கூடிய செயல்களைச் செய்வோர் சில நாட்களில் அதன் பயனை அறிந்துகொள்வார்கள். அறிவுடைய பெரியோரின் செயல்களை அறிந்து அவர் போல் செய்தல் வேண்டுமெனவும் அறிவார்கள். இவர்களே ஆசையின் காரணமாக ஐம்புலன்களையும் வென்றவர்கள் என்பதை அறிவாயாக !.

சொலலனு ஞானப் பொரு டெரியாற் கிது
சொன்னாலு
மல்லவித மென்றையய்யுறு வாரங்கன்
பில்லாரில்ல வார் வரிகபர மில்லாரிவர் கண்டாய்
தொல்லறிவாலே யையுறவர் றோர் துறவுற்றோர். 30

சொல்வதற்கு அரியதாகிய இந்த ஞானப் பொருளை எதுவும் தெரியாதவர்க்கு சொன்னால் இதுவல்ல என சந்தேகப்படுவார்கள். உள்ளத்தில் அன்பு இல்லாதவர் களுக்கு இகம் பரம் ஆகிய இரண்டும் இல்லை. முன்னமே அமைந்த அறிவுடையவர்களே எல்லாவற்றையும் துறந்தவர்களாவர்.

சொல்லனு ஞானம்-அரியதாகிய சொல்ல இயலாத ஞான யோகம். ஐயுறுவார்-சந்தேகப்படுவார்கள். அங்கன்+அன்பு+இல்லவர்-அங்கன் பில்லாரில்லவர். துறவுற்றோர்-துறந்தவர்.

அறியா மையிலே பிறந்துறை னகத்தே வளர்ந்தவை
யுற்றால்
நெறியா ளுன்றன் ஞான மென்னும் வாளால் வெட்டி யற
நீக்கிக்
குறியா லுன்றன் வினை வினைத்துக் கொள்வா யென்று
கூறினா
னுறியார் வெண்ணெய் தொட்டுண் டிவ்வுலக முண்ட
பெருவாயில். 31

அறியாமை எனும் அஞ்ஞானத்தில் உன் மனத்துள்ளே தோன்றி நீங்காது வளர்ந்துள்ள அஞ் ஞானத்தை-அறியாமையை-உன் அறிவு என்னும் வாளால் வெட்டி அறவே நீக்கி, உன் யோக நிலையை விளை வித்துக் கொள்வாயாக என்று, உரியிலே வெண்ணெய்யை வைத்திருந்ததை உண்டு. இவ்வுலகத்தையே உண்பவ னாகிய பெரிய வாயினன் எனும் கண்ணன் கூறினான்.

சம்பிரதாய அத்தியாயம் முற்றும்.

• • • • • • • •

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–4

ஞான கர்ம சந்யாச யோகம்

1. பகவானாகிய ஸ்ரீ கண்ணன் சொல்கிறான். இந்த அழிவற்ற யோகத்தை நான் சூரியனுக்குச் (விஸ்வான்) சொன்னேன். அவன் மனுவுக்குச் சொன்னான். மனு இஷ்வாகு மன்னனுக்குச் சொன்னான்.

2. இவ்வாறு பரம்பரையாகக் கிடைத்த இதனை ராஜரிஷிகள் உணர்ந்திருந்தனர். அந்த யோகம், வெகு காலமாக இவ்வுலகில் இழக்கப்பட்டது.

3. அந்தப் பழைய யோகத்தையே இன்று நான் உனக்குச் சொன்னேன். நீ என்னுடைய பக்தனும் நண்பனும் ஆனவான். ஏனெனில் இந்த யோகம் மிகவும் சிறந்தது. ரகசியமானதும் கூட.

4. அருச்சுனன் சொல்கிறான். உன் பிறப்பு பிந்தியது- விஸ்வானுடைய பிறப்பு முந்தியது நீ இதை ஆதியில் சொன்னவன் என்று நான் தெரிந்து கொள்வது எப்படி?

5. பகவான் சொல்கிறான், அர்ச்சுனா உனக்கும் எனக்கும் பல ஜென்மங்கள் கழிந்திருக்கின்றன. அவை எல்லாவற்றையும் நீ அறியமாட்டாய். அவற்றை எல்லாம் நான் அறிவேன்.

6. பிறப்பற்றவனாகவும், அழிவற்றவனாகவும், உயிர்களுக்கெல்லாம் ஈசனே எனினும், யான் எனது பிரகிருதியில், நிலைபெற்று, என்னுடைய ஆத்ம மாயையால், பிறப்பு எய்துகிறேன்.

7. பாரதா! எப்போது எப்போதெல்லாம் தருமம் அழிந்து போய், அதர்மம் எழுச்சி பெறுமோ, அப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்கிறேன்.

8. நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், தருமத்தை நிலை நிறுத்தவும், நான் யுகந் தோறும் பிறக்கிறேன்.

9. அருச்சுனா! எனது பிறப்பும், செய்கையும் தெய்வத்தன்மை கொண்டது. இங்ஙனம் என்பதை உள்ளபடி உணர்கிறவன், உடலைத் துறந்த பின்னர், மறுபிறப்பு எய்துவதில்லை. என்னைவந்து அடைகிறான்.

10. விருப்பத்தையும், அச்சத்தையும், சினத்தையும், துறந்தவர்களாய், என் மயமாய், என்னை அடைக்கலம் புகுந்து, ஞானத்தவத்தால், தூய்மை பெற்று என்னியல்பு எய்தினோர் பலர்.

11. யார் என்னை எவ்வாறு வேண்டுகிறார்களோ அவர்களை நான் அவ்வாறே சார்கிறேன். பார்த்தா! மனிதர் யாங்கனும் என் வழியையே பின்பற்றுகிறார்கள்.

12. தொழில்களில் வெற்றியை விரும்புகிறவர்கள் இங்கு தேவதைகளைப் பூஜை செய்கிறார்கள். இவ் வுலகத்தில் தொழில்களிலிருந்து வெற்றி விரைவில் விளைவதல்லவா.

13. குணத்திற்கும் செய்கைக்கும் தக்கபடி, பிரிவுகளாக, நான்கு வர்ணங்கள் என்னால் உருவாக்கப் பட்டது. அவற்றைச் செய்தேன் என்றாலும் அழிவற்றவ னாகிய என்னைக் கர்த்தா அல்லேன் என்று உணர்வாயாக!

14. எனக்குக் கர்மப் பயனில் விருப்பமில்லை. என்னைக் கர்மங்கள் ஒட்டுவதில்லை. இவ்வாறு என்னை அறியக்கூடியவன், கர்மங்களால் கட்டப்படமாட்டான்.

15. முற்காலத்தில் முக்தியை வேண்டினோரும் இதை உணர்ந்து தொழிலே செய்தனர். ஆதலால் முன்னோர்கள் முன்பு செய்தபடி நீயும் தொழிலே செய்யக் கடவாய்.

16. எது தொழில், எது தொழில் அல்லாதது என்ற விஷயத்தில், ஞானிகளும் மயக்கம் எய்துகிறார்கள். ஆதலால் உனக்குத் தொழிலின் இயல்பை உணர்த்து கிறேன். இதை அறிவதனால் தீங்கிலிருந்து நீ விடுபடுவாய்.

17. தொழின் இயல்பும் தெரியவேண்டும், தொழில் கேட்டின் இயல்பும் தெரியவேண்டும். தொழில் இன்மையின் இயல்பும் தெரியவேண்டும். ஏனெனில் கர்மத்தின் போக்கு ஆழமானது.

18. செய்கையில் செயலினையும், செயலின்மையில் செய்கையும் எவன் காணுகின்றானோ, அவனே மனிதரில் அறிவுடையோன். அவன் எத்தொழில் செய்கையிலும் யோகத்தில் இருப்பான்.

19. எவனுடைய செய்கைத் தொடக்கங்கள் எல்லாம் விருப்ப நினைவு தவிர்ந்தனவோ, அவனுடைய செயல்கள் ஞானத் தீயினால் எரிக்கப்பட்டனவாகும். அவனை ஞானிகள் அறிவுடையோன் என்கிறார்கள்.

20. கர்மப் பயனிலே பற்றுக் களைந்தவனாக, திருப்தியுடையோனாக, சார்பற்று நிற்போனாக, இருப்பவன் செய்கை செய்து செய்து கொண்டிருக் கையிலும் கூட செயலற்றவனாவான்.

21. ஆசையற்றவனாய், சித்தத்தை ஆத்மாவால் கட்டுப்படுத்தி, எவ்வித தானங்களையும் வாங்குவதைத் தவிர்த்து, வெறுமே சரீரத் தொழிலை மட்டும் செய்து கொண்டு இருப்பவன் பாவத்தை அடையமாட்டான்.

22. தானாக வந்தெய்தும் லாபத்தில் சந்தோஷ மடைகிறவனாகி, இருமைகளை கடந்து. பொறாமை யற்றவனாய், வெற்றியிலும், தோல்வியிலும் சமநிலை பெற்றவன் தொழில் செய்தாலும், அதனால் கட்டுப் படுவதில்லை.

23. உலகப்பற்றை ஒழித்து, உடற்பற்று, மமதை ஆகியவற்றை ஒழித்து,ஞானத்தில் அறிவு நிலைக்கப் பெற்றவன் எவனோ அவனே வேள்வியைக் கருதி தொழில்புரிபவன். அவனுடைய கர்மங்கள் எல்லாம் தானே நழுவிப் போய்விடுகின்றன.

24. வேள்வியில் உபயோகப்படும் பொருட்கள் பிர்மம்தான். ஹோமம் செய்யப்படும் திரவியமும் பிர்மம்தான். பிர்மத் தீயில், பிர்மத்தால் ஓமம் செய்யும் செயலும் பிர்மம்தான். பிர்மத்தின் செய்கையில் ஊன்றி நிற்கின்ற, அந்த யோகியினால் அடையத்தக்க பயனும் பிர்மம்தான்.

25. சில யோகிகள் தேவர்களுக்குச் செய்யப்படும் வேள்வியையே வழிபடுகிறார்கள். வேறு சிலர் பிர்மத் தீயில் வேள்வியையே ஆகுதி செய்து, ஹோமம் செய்கிறார்கள்.

26. வேறு சிலர் செவி முதலிய இந்திரியங்களை அடக்கம் எனும் அக்னியில், ஆகுதி செய்கிறார்கள். வேறு சிலர் ஒலி முதலிய புலன் நுகர் விஷயங்களை இந்திரியங் களாகிய தழல்களில் ஹோமம் செய்கிறார்கள்.

27. வேறு சிலர் எல்லா இந்திரியச் செயல்களையும் உயிர்ச் செயல்களையும், ஞானத்தால் ஒலிபெற்ற, தன்னாட்சி என்ற யோகத் தீயில் ஹோமம் செய்கிறார்கள்.

28. வேறு சிலர் திரவியத்தால் வேள்வி செய்வோர் தவத்தால் வேட்போர், அதேபோல யோகத்தால் வேட்போர், அஹிம்சை முதலிய கொள்கையினை யுடையோர், முயற்சி செய்வோர், சிலர் ஞானத்தால் வேட்போர்.

29. இனி வேறுசிலர் பிராணாயமத்தில் ஈடுபட்ட வர்களாய், பிராணன், அபானன் என்ற வாயுக்களின் நடையைக் கட்டுப்படுத்தி, அபான வாயுவில், பிராண வாயுவையும், பிராணவாயுவில் அபானத்தையும் ஆகுதி செய்கிறார்கள்.

30. வேறு சிலர் உணவை ஒழுங்குபடுத்தி, உயிரை உயிரில் ஆகுதி செய்கிறார்கள். இவ்வனைவரும் வேள்வி நெறியுணர்ந்து, வேள்வியால் பாவமற்றுப் போயினோர்.

31. வேள்வியில் மிஞ்சிய அமுதை உண்போர். என்றும் உளதாகிய பிர்மத்தை எய்துகிறார்கள். வேள்வியைச் செய்யாதவர்களுக்கு இவ்வுலகமில்லை. அவர்களுக்கு வேறு பரலோகம் ஏது? குருகுலத்தில் சிறந்தவனே.

32. இவ்வாறு பலவித வேள்விகள் வேதங்களின் வாயிலாக விரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அவை எல்லாம் தொழிலிலே பிறப்பன என்று உணர்வாயாக! இவ்வாறு உணர்ந்தால் விடுதலை பெறுவாய்.

33. பரந்தப அர்ச்சுனா! திரவியத்தைக் கொண்டு செய்யப்படும் வேள்வியை விட ஞான வேள்வி கர்ம மெல்லாம் முற்றிலும் ஞானத்தில் முடிவுபெறுகிறது.

34. அதனை, வணக்கத்தாலும், சூழ்ந்த கேள்வி யாலும், தொண்டுபுரிவதானாலும் அறிந்துகொள். உண்மை காணும் ஞானிகள் உனக்கு ஞானத்தை உபதேசிப்பார்கள்.

35. பாண்டவா! அந்த ஞானத்தைப் பெறுவதனால் நீ அப்பால் இவ்வித மயக்கத்தை எய்தமாட்டாய். இதனால் நீ எல்லா உயிர்களையும், மிச்சமின்றி உன்னுள்ளேயே காண்பாய். பிறகு அவற்றை என்னுள்ளே காண்பாய் !

36. பாவிகள் எல்லோரைக் காட்டிலும், நீ அதிகப் பாவியாய் இருந்தாலும், ஞானத் தோணியால், அப் பாவத்தை கடந்து செல்வாய்.

37. அர்ச்சுனா! நன்கு கொளுந்துவிட்டு எரியும் தீ, விறகுகளை சாம்பலாக்கி விடுவதைப் போல, ஞானத்தீ எல்லா வினைகளையும் சாம்பலாக்கிவிடும்.

38. இவ்வுலகத்தில் ஞானத்தைப் போல தூய்மை தரும்பொருள் வேறு எதுவும் இல்லை. நல்ல சித்தி அடைந்தவன், தானாகவே, தக்க பருவத்தில் அதைத் தனக்குள் கிடைக்கப்பெறுகிறான்.

39. இந்திரியங்களை கட்டுப்படுத்தியவனாக, சாதனையிலே ஒன்றிய சிரத்தையுடையோன் ஞானத்தை அடைகிறான். ஞானத்தை அடைந்தபின் விரைவிலேயே பரசாந்தி பெறுகிறான்.

40. அறிவும், சிரத்தையுமின்றி ஐயத்தை இயல்பாகக் கொண்டவன் அழிந்து போகிறான். ஐயமுடையவனுக்கு இவ்வுலகமில்லை. மேலுலகமும் இல்லை. இன்பமும் இல்லை.

41. அர்ச்சுனா! யோகத்தில் செய்கையைத் துறந்து ஞானத்தால் ஐயத்தை அறுத்து, தன்னைத் தான் ஆள்வோனை கர்மங்கள் கட்டுப்படுத்த முடியாது.

42. ஆகவே பாரதா ! அஞ்ஞானத்தால் தோன்றி நெஞ்சில் நிலை கொண்டிருக்கும் இந்த ஐயத்தை, உன் ஞானமெனும் வாளால் அறுத்து யோக நிலைகொள். எழுந்துநில்.

▬ ▬ ▬

விளக்கவுரை

இந்த நான்காவது அத்தியாயத்திற்கு வியாசர் ஞான கர்ம சந்நியாச யோகம் எனத் தலைப்பிட்டு நாற்பத்திரண்டு சுலோகங்களில கூறியுள்ள கருத்துக் களைச் சுவடி ஆசிரியர் சம்பிரதாய அத்தியாயம் எனத் தலைப்பிட்டு முப்பத்தொரு விருத்தங்களால் விரித்துக் கூறியுள்ளார்.

சுவடி ஆசிரியர் முதல் விருத்தத்தில் கண்ணனின் கூற்றாக மேலும் சில செய்திகளைச் சொல்கிறேன் என அருச்சுனனிடம் கூறுவதாக உள்ளது வியாசரால் கூறப்பெறாதது.

இரண்டாவது விருத்தத்தில் இந்த ஞானயோக சூத்திரமானது யாரால் யார் யாருக்கெல்லாம் கூறப் பெற்றது என்கிற விவரம் உளளது. இது வியாசரின் இந்நான்காம் அத்தியாயத்தில் முதல் சுலோகத்தில் அவ்வாறே கூறப்பெற்றுள்ளது.

சுவடி ஆசிரியரின் மூன்றாவது விருத்தத்தின் கருத்தும் வியாசரின் இரண்டாவது சுலோகத்தின் கருத்தும் ஒன்றே !

வியாசரின் மூன்றாவது சுலோகத்தில் கண்ணன் அருச்சுனனைத் தன்னுடைய பக்தன் எனவும் நண்பன் எனவும் குறிப்பிடுகிறான். இதனைச் சுவடி ஆசிரியர் தமது நான்காவது விருத்தத்தில் குறிப்பிடுகிறார்.

வியாசரின் நான்காவது சுலோகத்தில் அருச்சுனன் கண்ணனிடம் அவரின் பிறப்பு பின்னதாகவும் விஸ்வா வசுவின் பிறப்பு முன்னதாகவும் உள்ளதே நீ எவ்வாறு அவரிடம் இந்த ஞான யோகத்தைப் பற்றிக் கூறி இருக்க முடியும் என தனது சந்தேகத்தைக் கேட்க தொடர்ந்து வியாசர் தமது ஐந்தாம் சுலோகத்தில், கண்ணன் தனக்கு முன் ஜென்மத்தில் நடந்தவைகள் எல்லாம் தெரியும்

எனவும் ஆனால் அருச்சுனனுக்கு இது தெரியாது எனவும் கூறுகிறான். தான் ஆத்ம மாயையால் பிறப்பு எய்து வதாகவும் கூறுகிறான். இப்படி ஒரு செய்தி சுவடி ஆசிரியரால் கூறப்பெறவில்லை. ஆனால் மாயா சக்தியால் யுகங்கள் தோறும் பிறக்கின்றேன் என கண்ணன் கூறுவதாக சுவடி ஆசிரியர் தமது ஏழாவது விருத்தத்தில் குறிப்பிடுகிறார்.

சுவடி ஆசிரியர் தமது எட்டாவது விருத்தத்தில் "வேண்டுவோர்க்கு வேண்டும் தெய்வமாக இருப்பவன் நான். இதனை உணர்ந்தவர்கள் அதை மற்றவர்களுக்கு உரைப்பது அரிது" என கண்ணனின் வாய் மொழியாகக் கூறுகிறார் இவ்வாறு வியாசர் கூறவில்லை.

மக்களை நான்கு குலத்தவராகப் படைத்தேன். ஆனால் நான் கர்த்தாவல்ல என கண்ணன் கூறுவதாக வரும் செய்தி சுவடி ஆசிரியரின் ஒன்பதாவது விருத்தத்தில் உள்ளது. வியாசர் இதனைத் தமது பதின்மூன்றாம் சுலோகத்தில் குறிப்பிடுகிறார்.

முக்தியை வேண்டியர்கள் செய்ததையே நீயும் செய்- வியாசர்-சுலோகம் 15. மேன்மையான நிலையை அடையும் வழியை உணர்ந்தவர்கள் மேற்கொண்டவர் களின் செயலையே நீயும் செய்-சுவடி ஆசிரியரின் பத்தாவது விருத்தம்.

ஓடுகின்ற ஆற்று நீரில் படகைச் செலுத்துபவன் அந்நீரின் ஓட்டத்தோடேயே செல்கிறான். அருகில் இருக்கும் மான் ஓடும்போது, தான் நின்றுகொண்டு, அந்த மானைத் தன் அருகில் வரச்செய்கிறான் என்ற கருத்தைச் சுவடி ஆசிரியர் தமது பதினோராம் விருத்தத்தில் கூறுகிறார். இதன் உட்பொருள் மிக ஆழமானது. வாழ்க்கையை இருவேறு விதமாக வாழ்கிறார்கள். இறையுணர்வும், ஆன்ம சிந்தனையும் இன்றி பிறந்து வாழ்ந்து இறப்பவர்-இவர்கள் ஆற்று நீரோடே

செல்பவர்கள்-தான் நின்றவிடத்திலே ஞானயோகத்தால் முக்தியைத் தன் வசமாக்கிக் கொள்பவர்கள் ஞானிகள்-இவர்கள் ஓடிய மானைத் தன்னிடதிற்கு வரச் செய்பவர்கள். மேலும் விளக்கம் உண்டு,

இப்படி ஒரு மறைக்கருத்து வியாசரில் இல்லை. சுவடி ஆசிரியர் தமது பதினைந்தாவது விருத்தத்தில் கூறும் கருத்துக்கள்-கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைதல்-பொறாமையும் ஆணவமும் இல்லாமை-வியாசரின் இருபத்து இரண்டாவது சுலோகத்தில் காணப்பெறுகிறது. மேலும் இருபத்து மூன்றாம் சுலோகத்திலும் இதைப் பற்றி கூறப்பெறுகிறது.

"சர்வம் பிர்ம மயம்" என்ற கருத்து யாகமும் யாகத்தில் இடப்பெறும் ஆகுதியும், பிர்மமே எனவும் யாகத்தில் பலனும் பிர்மமே எனவும் வியாசர் தமது இருபத்து நான்காம் சுலோகத்தில் குறிப்பிடும் செய்தி சுவடி ஆசிரியரின் பதினெட்டாவது விருத்தத்தில் தெரிவிக்கப்பெறுகிறது.

வேள்வியில் இடம்பெறுவது ஆகுதி எனப்பெறும். இது மேற்கொளள்ப்பெறும் வேள்விக்கான அதி தேவதையைச் சென்றடையும். இந்த ஆகுதியைப் பற்றிய செய்தி-அதாவது எவற்றை எல்லாம் வேள்வியில் ஆகுதியாக இடுகிறார்கள் என்பதைப் பற்றி சுவடி ஆசிரியர், 20, 21 ஆகிய விருத்தங்களில் தேடிய பொருள், தவம், யோகம், வேதஞானம், பிராண அபான வாயுக் களின் ஒன்றுடன் ஒன்றுக்குள் அடக்கிய நிலை, என்பனவற்றைக் குறிப்பிடுகிறார்.

வியாசர் இதனை மேலும் விரிவாக தமது சுலோகம்-26 வேள்வியையே ஹோமம் செய்கிறார்கள். சுலோகம்-27 இந்திரியச் செயல்கள், உயிர்ச் செயல்கள், திரவியம், ஞானம் 29ம் சுலோகத்தில்- பிராணன்-அபானன்-உயிரை உயிரில்-ஆகுதி செய்வதாக கூறுகிறார்.

வேள்வியைச் செய்பவர்கள் வேள்வி என்றால் என்ன என்பதை அறிந்தே செய்கிறார்கள், வேள்வியைச் செய்து பாவத்தை நீக்கிக்கொள்கிறார்கள். அவ்வாறு வேள்வியை உரிய ஆகுதியிட்டுச் செய்யாதவர்களுக்கு இகபர சுகம் ஏதுமில்லை என சுவடி ஆசிரியர் தமது இருபத்து மூன்றாவது விருத்தத்தில் குறிப்பிடுவதை வியாசர் தமது 29, 30, 31வது சுலோகத்தில் கூறுகிறார்.

மேலும் வேள்வியில் மிஞ்சியதை உண்பது அமிர்தத்தை உண்பதற்கு நிகர் எனவும் சுலோகம் 31ல் வியாசர் கூறுகிறார். இது சுவடி ஆசிரியரால் கூறப்பெற வில்லை. வேள்வியைப் பற்றிய செய்திகள் வேதங்களில் கூறப்பெறுவதாக வியாசர் கூறுவதைச் சுவடி ஆசிரியர் தெரிவிக்கவில்லை.

ஆதி முதலானது எது என்பதை அறிபவர்கள் பிறவிக் கடலை அறிவு எனும் தோனியின் உதவியால் நீந்தி மோட்சக் கரையை அடைவார்கள் எனவும் அவ்வாறல் லாதவர்கள் வினையெனும் கடலில் வீழ்ந்து அமிழ் வார்கள் எனவும் ஒரு கருத்து சுவடி ஆசிரியரால் தமது இருபத்தி ஏழாம் விருத்தத்தில் கூறப்பெறுகிறது. இச்செய்தி சுருக்கமாக பாவத்தை ஞானத் தோணியால் கடக்கலாம் என வியாசர் 37ஆம் சுலோகத்தில் கூறுகிறார். இப்படிப் பட்ட ஞானத்தை எவ்வாறு அடையலாம் என்பதை வியாசர் தமது முப்பத்தொன்பதாவது சுலோகத்தில் கூறுகிறார்.

கொழுந்துவிட்டு எரியும் தீயில் இடப்பெறும் விறகுகள் சாம்பலாகிப் போவதைப் போல ஞானத்தீ எல்லாவற்றையும் சாம்பலாக்குகிறது என்பதை எடுத்துக் காட்டுடன் கூறும்செய்தி இதே எடுத்துக்காட்டுடன் சுவடி ஆசிரியரின் இருபத்து எட்டாவது விருத்தத்தில் கூறப்பெற்றிருப்பது சிறப்பு.

இருபத்தொன்பதாவது விருத்தத்தில் தீச்செயல் செய்வோரும் திருந்தி ஆசையை நீக்கி ஐம்புலன்களையும் வென்றவராகிடுவர் எனக் கூறுகிறார். இவ்வாறு இவ்வத்தியாயத்தில் வியாசரால் சொல்லப்பெறவில்லை.

ஞான யோகத்தைப் பற்றிச் சொன்னால் சிலர் அதை ஏற்றுக்கொள்வதா வேண்டாமா எனச் சந்தேகப் படுவார்கள் எனவும், உள்ளத்தில் அன்பு இல்லாதவர் களுக்கு இகபரகம் இல்லை எனவும் கூறுகிறார். விருத்தம்-30, அறியாமையை அறிவு என்னும் வாளால் வெட்டி நீக்கி யோக நிலையை அடையலாம் என்பது சுவடி ஆசிரியர் நிறைவு விருத்தத்தில் கூறுவதாகும். இதனையே வியாசரும் தமது 41, 42ஆவது சுலோகங்களில் கூறி நிறைவு செய்கிறார்.

எப்போதெல்லாம் தருமம் வீழ்ந்துபோய் அதர்மம் எழுச்சி பெறுகிறதோ அப்போது நான் என்னைப் பிறப்பித்துக்கொள்கிறேன். நல்லவர்களைக் காக்கவும், தீமை செய்வோரை அழித்து தர்மத்தை நிலைநாட்டவும் யுகங்கள் தோறும் நான் பிறக்கிறேன் என்று கண்ணன் கூறுவதாக உள்ள 8, 9 எண் கொண்ட சுலோகங்கள் இவ்வத்தியாயத்தின் மிகவும் சிறப்பானவைகளாகும்.

இது சுவடி ஆசிரியரின் ஏழாவது விருத்தத்தில் மிகவும் சுருக்கமாகவே கூறியுள்ளார்.

இந்த நான்காம் அத்தியாயத்தில் வியாசரின் கருத்துக்களை எங்கும் முறன்பாடு ஏதுமில்லாமல் ஆங்காங்கே விரிவாகவும், சில இடங்களில் சுருக்க மாகவும். சில விருத்தங்களில் உவமைகளுடனும் சுவடி ஆசிரியர் விளக்கியுள்ளார்.

ஐந்தாவது ஞான கர்மவத்தியாயம்

பூத்தருளி யொரு மலராற் புவனமவை யீரேளும்
காத்தருளி விளையாடிக் கடை சராங் கனங்கண் வளருந்
தீத்தமை மறை முறை மொளிந்திரு வர்க்கு தெரியாதே
பாத்தனவ னெதிர் நின்று சிலவிங்ஙன பகர்வுற்றான். 1

புன்னகை பூத்து ஒரு மலரில் இருந்து, இவ்வீரேழு உலகத்தையும் காத்தருளி விளையாடி, இறுதியில் அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்கியமையான அவ் விறைவனின் செயல் வேதமுறைகளைக் கற்றுணர்ந்தவர் களுக்கும் தெரியாது. அப்படிப்பட்ட இறைவனாகிய கண்ணனின எதிரில் நின்று, அருச்சுனன் இவ்வாறு சில சொல்கிறான்.

மலராற்-மலரால், மலரில் இருந்து, புவனம்-பூமி உலகம், யீரேளும்-ஈரேழும். சராங் கனங்கண்-சராசரங்கள் மறைமுறை மொளிந்தவர்- வேதங்களை முறையாக மொழிந்தவர்-கற்றவர். பாத்தன்-பார்த்தன்-அருச்சுனன். பகர்வுற்றான்-சொன்னான்.

கரும நன்றெனவு மெதிர் கழறு கின்றனை துறவை
யரு மருந்தென மொழிதி யவை இரண்டினும்
வொருமை யென்னுயாகல் வுரை சேயென்றனன் விசைய
னிருமையின் பரிசு மிதுவென வியம்பிடு மிறைவன். 2

கர்மமே உயர்வெனவும் கூறுகிறாய். அதற்கு எதிராக துறவே அருமருந்தெனவும் கூறுகிறாய் இவை இரண்டில் எது ஒன்று மேலானது என்று உறுதியாக கூறுவாயாக! அதனால் வரும் பெருமை இதுதான் எனவும் கூறுவாயாக என்று கேட்ட விசனுக்கு இருமையின் பயன் இதுதான் என்று இறைவனாகிய கண்ணன் கூறலானான்.

கழறு-சொல்லு, மொழிதி-கூறினாய். உரைசெய்-கூறு. இருமையின் பரிசு-இம்மையின் பயன். இயம்பு-கூறு.

துறவு நன்றருவினை செய் தொழிலு நன்றவை
துணியி
லறவு நன்றிர வினைகள் விட லிங்கன முய்வகை
பெறலி லின்பமு மிழவி லிடரு மொன்றிலர் பெரிது

துறவினின்றவர் பிறர்க யேரி னின்றிடு தொழிலா. 3

துறவும் நல்லதே! அரிய வினைகளைச் செய்யக் கூடிய தொழிலும் நன்றே! இவ்வாறு இருக்க, பிறவியி னின்று உய்ந்திட, இன்பத்திலும், இழப்பிலும் ஒன்றேயாக இருப்பதே பெரிது. துறவில் நின்றவர்களைவிட தொழில் எனும் கர்ம யோகத்தில் நின்றவரே, பிறரைக் காட்டிலும் மேலானவர்.

துணியில்-எதுவென்று சொல்லத் துணிந்தால், பெறல்-பெறுவதில், இழவில் இடர்-இழப்பில் துன்பம், பிறர்க யேரி-பிறருக்கு அரிது.

பெருமை யொன்றிய துறவு கரும மென்றி
ருருமை யினும ருமை யொன்றினை யுடையானவ
யிரண்டையுமுடைய ரிருமை யென்ற றியும்
வரிவை யறிந்தில ரியல் பினொருமை . 4

பெருமை மிக்க துறவையும், அருமையிலும் அருமையான, கர்மத்தையும் ஒன்றென உணர்ந்த அறிவுடையோர் இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றை மேற்கொண்டாலும், இரண்டின் பயனையும் அடை வார்கள் என அறிஞர்கள் கூறுவர்

பெருமை யொன்றிய-பெருமை மிக்க, ஒன்றினை+உடையவா+ இரண்டையும்+உடையர்+இருமை+என்று+அறியும்+அறிவை= அறிந்தவர்-உணரில்.

வினை முயன்றிட வதனில் விழை தருந்
துறவதுகோ
டெனை யடைந்திடுவ ரெவரவர் களுஞ் செயலைவிட
நினை வருந்தகைய பொரு நெறி யறிந்திடுதலரி
தனைவ தன்றொழில் புரியு மவரடைந் திடுவரறி. 5

தொழில் செய்வதைக் காட்டிலும் துறவே உயர்வெனக் கருதி, என்னையே பற்றுக் கோடாகக் கொண்டு என்னை வந்தடைபவர்களைவிட, நினைவினாலே, பொருந்திய நெறிமுறையோடு தன்னுடைய தொழிலைச் செய்பவர்கள் கூட என்னையே வந்தடைவார்கள் என்பதை அறிவாயாக.

வினை முயன்றிட-தொழில் செய்ய முற்பட்டு. விழை-விருப்பம், பொரு நெறி-பெருநெறி-சிறந்த நெறிமுறைகள். தன்தொழில்-தனக்குரிய தொழில்.

கவை தருங் குணனு மிகு களிதரும் புலனு மெனு
மிவை கடந்தவர்க ளெனை யறிவின் றிசையு மவர்
நவை தருந்தொழில் செயினு நலிவ தெங்க வரை
யவை யவை யடைந்தவர்கள் வினையவை
துறந்தடை குவதென். 6

தீமை செய்யும் குணமும், இன்பத்தைத் தரக்கூடிய புலன் நுகர்வும் நீக்கியவர்கள், பற்றற்ற நிலையில் தொழில் செய்தபோது நலிவடைவதில்லை. இவ்வாறான வற்றை எல்லாம் பெற்றவர்கள்கூட தங்களின் தொழிலை விட்டபோது அடைவது எதுவுமில்லை.

கவை-தீமை. களி-மகிழ்ச்சி, நவை தரும் தொழில்-நன்மை தரும் தொழில். நலிதல்-கீழ்நிலை யடைதல். வினை துறந்து-செய்யும் செயல்களிலிருந்து விடுபட்டு.

காணுங் கௌக்குமுறு மொக்கும் காலானடக் குங்
கண்வளரும்
பேணுந் துறக்கு மூச்சுவிடும் பேசும் விழிக் குஞ்சும்
பிழிக்கும்
பூணு மின்னம் பல வெனினும் புலன்சோ பொறியின்
புணர்ப்பென்
றேணுங் கிரியுமென வொன்றுந் துளங்கா விளங்குந்
துணிவுடையோன். 7

பார்க்கும் போதும், தூங்கும்போதும், விழித்திருக்கும்போதும் மற்றும் பல தொழில்கள் செய்தபோதும் உண்மையை அறிந்த யோகியானவன் தான் எதையும் செய்யவில்லை. என்பதாக உறுதியாக இருக்க வேண்டும்.

காலான் அடக்கும்-கால்-காற்று-காற்றை இழுத்து மூச்சாக அடக்கிவிடும்போதும். கண் வளரும்-தூங்கும்போதும். பேசும் விழித்திருக்கும் போதும், புலன்சேர் பொறி-ஐம்புலன்களைச் சார்ந்த ஐம்பொறிகள். துணிவுடையோர்-உறுதியுள்ளவர்கள்.

யாரும் வினைகளென் பொருட்டா லியற்றிப் பயனை
இகழ்வார்கள்
சேரும் வினைகளவ ரோடும் சேரா ரெய்துந் திற முறைக்கிற்
சாரு முடனே பிறந் தெனினுந் தண்டாமரை யின்றகை
யிலைக்கு
நீரு மெனலா யிருப்பாது நின்றார் கொன்று நிகழாதால். 8

பயனைக் கருதாமல், செய்யும் செயல்களை எனக்காகவே அர்ப்பணித்துச் செய்பவர்களுக்கு வினைப் பயன் எதுவும் சேராது. நீரிலேதான் பிறந்து வளர்ந்தது என்றாலும் தாமரையிலையில் தண்ணீர் ஒட்டாது இருப்பதுபோல் இது அமைகிறது.

என்பொருட்டால் இயற்றி-எனக்காக வென்று செய்து. இகழ்வார்-புறந்தள்ளி, கருதாமல்; தண்டாமரை-குளிந்த தாமரை.

வேறு

உடனாய புலனாலு மனனாலு முடம்பாலு
நடனாகு மென முயல்வார் நாடோறு முயன்றாலும்
விடனாகுவ வினையே வீடாகும் வினைப் பயனைக்
கடனாகு மென முயல்வா ரவற்றாலே கட்டுணபார். 9

ஐம்புலன்களாலும், மனத்தினாலும், உடம்பாலும் தானே செய்வதாகக் கருதி செயல்படுவோர் நாள்தோறும் எவ்வளவு முயன்றாலும், வினைகள் அவர்களை விட்டு நீங்காது. வினையாகிய கடமையைச் செய்வது தமது கடனாகும் என்றும் அவ்வினையின் பயன் தமக்கு இல்லை என்பதையும் உணர்ந்து செயல்படுவோர் அவற்றினாலேயே கட்டுப்பட்டவர்களாவர்.

மனனால்-மனத்தால், கடனாகும்-கடமையாகும். நடனாடும்-தனக்கானது என்று. விடனாகுவ-விடுவதற்கு ஆனவை.

அன்ப வினையாகு பயன் விட்டாமை தீயாலே
யொன்பது பொயி வாயிலமை யூரதனுள்ளே
யின்ப உருவாயினி திருப்ப ணியல்பாலே
முன் பயில்வதாம் வினைசெய்ன
முயல்வியேனான்.10

என் அன்பிற்குரியவனே! உன் கர்மங்களினால் விளையும் பயன்களை எல்லாம் விட்டு அகன்று, பொய்யான ஒன்பது வாயில்களையுடைய ஊராகிய உடம்பினால் இன்பங்களை இனிமையாக அனுபவித்திருப்பாயாக! முன்னோர் சொல்லப்பட்டபடி செயல்களைச் செய்ய முற்படுவாயாக! என கண்ணன் கூறினான்.

அன்ப-அன்பிற்குரியவனே! பொயி=பொய் ஒன்பது ஓட்டைகளையுடைய உடலை ஒன்பது வாயில்களையுடைய ஒரு ஊர்; என்பதாக இங்கு கூறப்பெற்றுள்ளது.

இவ்வகைய வாய் செயல் யாவு மியல்பே கா
னவ் வகைய மாயை யதனா லறிவு றாதே
செய்வகை யென யானெனது செய்கையிவை
யென்றே
பொய் வகையினா லழிவதே புலனிலாதார். 11

இவ்வகையான செயல்கள் யாவும் இயற்கையானது என்பதை அறிவாயாக! மாயையினால் அறிவில் மயக்கம் கொள்ளாமல், செய்யும் செயல்கள் யாவையும் நானே செய்தேன் என்ற நினைவும் இவையாவும் என்னால்தான் செய்யப்பெற்றன என்னும் பொய்யான நினைவினால் உய்யும் வகையறியாது அழிகிறார்கள்.

யானென்று - யான்+எனது; பொய்வகை - உண்மை யல்லாத நிலை.

அறிவினா லதிகிலாதவை யெலா மழியவே
செறிவினா ரறிவு வானிரவி பொற்றிகழுமா
னெறியினா லதனிலே நிலையு மாய துணிலோர்
பிறிதிலா வகையினார் பிரவியானது விலார். 12

அறிவினால் அறிந்து கொள்ள முடியாத அஞ்ஞான மானது ஞானத்தினால் அழிக்கப்பெறுகிறது. வானில் சூரியனைப் போல் திகழ்வதே ஞானமாகும். நெறியினால் அதில் தோன்றும் மாயையை அகற்ற இயலாதவர்கள் பிறவியின் பயனைத் தெரிந்து கொள்ளாதவராவர்.

வானி ரவி பொற்றிகழுமா-வானில்+ரவி+போல்+திகழுமாம்; நிலையு மாயை-நிலையான மாயை. ஞானத்தை ஒளிவிடாமல் செய்வது மாயை பின் அந்த ஞானமே ஞானத்தை உணரச்செய்கிறது. எனவே அது சூரியனுக்கு உவமையாகக் கூறப்பெற்றுள்ளது.

வேறு

நன்றே ஞான வருமறை யொன் னாய வின்னாயிறைச்சி
தனைத்
தின்றே யுழலு மிவ யானே யாமென்ற றிந்த திறத்தெல்லா
மன்றே யென்னாதா மென்னாத றிவாய் நின்ற வினை
யெங்கு
மொன்றே யாகக் காண்பா னிவ் வுடம்பொ டிருந்தே
யுடம்பறுப்பான். 13.

நல்ல அறிவைத் தரக்கூடிய அரிய வேதத்தை உணர்ந்து போற்றாதவர்கள், நாயைப் போல இறைச்சியை உண்டுத் திரிபவர்களாவர். என்னை யாரென்று நானே எல்லாமென்று அறிந்து கொள்ளாதவர்கள் செய்யும் வினைகள் ஒன்றே எனக்கொள்பவர்கள் அவர்கள் இவ்வுடம்பை உடம்பொடு இருந்தே அவ்வுடலை நீக்கியவர்களாவார்கள்.

ஞான வருமறை-ஞான+அரு+மறை=ஞானத்தைத் தரக்கூடிய அரிய வேதம்; யொன்னான்-போற்றாதவன்; நாயின் இறைச்சியைத் தின்னும் புலையன் எனவும் பொருள் கொள்ளலாம். யானே+யாம்+என்று+ அறிந்த =யாமேயாமென்றறிந்த-எல்லாம் நானே என்று உணர்ந்த; வுடம்பொடிருந்தேயுடம் பறுப்பான்-உடலை உயிரினுடன் வைத்துக் கொண்டு-உடம்பறுத்தல் என்பது உடலால் செய்யப்படுவற்றை தான் செய்ததாகக் கொள்ளாது இருத்தல்-ஆன்மா வேறு உடல் வேறு என்ற நிலையை உணர்ந்தவர்கள்.

இகமே நிகழும் புலன் விளைந்த வின்ப மெல்லாமற
விகழ்ந் துளகமே விளையும் பேரின்ப மடைந்தார்க் கென்று
மழியாதாற்
புகமெனின்ற புலன்பொறிகள் புணர்ந்த வின்பம்
போமென்றுந்
தகமேலிட் டாரா மெனவு தக்கோ ரென்றுஞ் சாரால். 14

இல்லற வாழ்வில், புலன்களால் நுகரக் கூடிய இன்பங்கள் எல்லாவற்றையும் இகழ்ந்து நீக்கி, விண்ணுலக இன்பமே பேரின்பமென அடைந்தவர்களுக்கு, புறமாய் நின்ற புலன்களாலும் பொறிகளாலும் உணர்ந்து அநுபவித்த இன்பங்கள் எதுவும் ஒட்டுவதில்லை எனவும் அவர்களே மேன்மையை அடைந்தவர்கள் எனவும் உயர்ந்த ஞானிகள் என்றும் கூறுவர்.

இகம் X பரம்; உளகமே-உலகமே-பரலோகம் விண்ணுலகம்; புலன்-பொறிகள் புணர்ந்த இன்பம்-புலன்களாலும் பொறிகளாலும் உணர்ந்து சுவைத்த இன்பம்; தக்ககோர்-தகுதியான ஞானிகள்.

யுடம்புடனே யுளனாகி யிருந்தே
விடம்புரை காம வெகுளியின் வேகாச்
சடம் புரையாமை தவிர்த்தவனே நல்
விடம் புகு ஞானியு மின்புறு வானும். 15

உயிருடன் கூடிய உடம்பையுடையவனாக இருந்து கொண்டு, தீமையைத் தரக்கூடிய, காமமும், கோபமும் காரணமாகி இவ்வுடலை வேகவைத்து விடாமல் தவிர்த்தவனே நல்ல ஞானியாவான். அவனே, இன்பத்தை அடைந்தவனுமாவான்.

யுடம்புடன் உளனாகி-உயிருடன் உடல் உள்ளவனாகி; விடம்புரை-தீமை தரக்கூடிய; வெகுளி-கோபம்; சடம்-உடல்.

மெய்யறிவே விளை யின்பமதாகவு
மெய்யறிவே விளையாடிட மாகவு
மெய்யறிவே யொளியாக வுமே யோர்
மெய்யறிவே பெறு மின்பம் விடாதார். 16

மெய்யறிவென்னும் மேன்மையான ஞானத்திலே விளைவது இன்பம். அந்த மெய்யறிவைக் கொண்டே எல்லாச் செயல்களையும் செய்யவேண்டும். அதுவே பேரொளியாக எல்லாவற்றையும் உணர்த்துகிறது. இதனை உணர்ந்தவர்கள் மெய்யறிவு எனும் ஞான யோக இன்பத்தை விடமாட்டார்கள்.

விளையாடிடம்-எல்லா செயல்களையும் செய்யும் இடம்.

காவல் செய் தைந்து புலன்க ணிரண்டு
மெவ் விரும் புருவத்திடை விட்டிடா
வகை நின்ற பிராணன பானனே
வலிவின்றி யியக்க மறுத்தே. 17

ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி, இரு கண்களின் (புருவத்திற்கு) இடையே-பிராணன் அபானன் ஆகிய வற்றை குற்றமில்லாது இயக்கி.

பிராணன்-உள் இழுக்கும் மூச்சு. அபானன்-வெளியிடும் மூச்சு.

அஞ்சு பொறித் திற னாசை யடக்கா
நெஞ்சு பயத்தொடு கோபமு நீக்கா
வெஞ்சு திறத்தலின் யோகிகளே கா
ணுஞ்சு பிறப்பிடா யரவு முதிர்ப்பர். 18

ஐம்பொறிகளின் திறமான ஆசையை அடக்கி உள்ளத்தில் பயம், கோபம் ஆகியவற்றை நீக்கிய திறம் படைத்தவர்களே யோகிகள். இவர்களே மறுபிறப்பு எனும் நிலையைத் தவறாமல் அடையாதவர்களாவர்.

பிறப்பிடாயரவு-பிறப்பு இல்லாத உயர்வு. முதிர்ப்பர்-அடைவார்கள்.

சாதிபுரியுஞ் தொழில் களுக் குந்தக்கோர் செய்யுந்
தவங்களுக்குந்
தீதிலுலக மேழி னுக்குஞ் சேருமிடமா யுள்ளவனை
யோதி முடியும் பரிசே மெய்யுணர்ந்தார் பிறவா ரென
வுரைத்
தானாதி முடி வொன்றி ன்றியே யடையத் தானேயாய்
நின்றான். 19

சாதிகளின் பிரிவுகளுக்கு ஏற்ப செய்யப்பெறும் தொழில்களுக்கும், தகுந்த ஞானிகளால் செய்யப்பெறும் தவங்களுக்கும், தீமையற்ற ஈரேழு உலகத்தினருக்கும் சேரும் இடமாக உள்ளவனை, புகழ்ந்து பேசி, மெய்ஞ்ஞானத்தை உணர்ந்தவர்கள் பிறப்பிணி நீங்கியவர்கள் என்று தானே ஆதி முதலாகவும் முடிவு என்பது ஒன்று இல்லாது எல்லா உயிர்களும் தன்னை வந்து அடையும்படி எல்லாம் தானேயாக நின்றவன்-கூறினான்.

சாதிபுரியுந்தொழில்-நான்குவகை சாதியினர் அவர்களுக்குரிய தொழில்; தக்கோர்-தகுதி வாய்ந்த ஞானிகள். உலக மேழினுக்கு-ஏழு உலகங்களில் வாழும் உயிர்களுக்கு. தானாதி இன்றி-முதலும் இல்லாது. முடிவொன்றின்றி-முடிவும் இல்லாது; தானேயாய்-எல்லாமே தானாக.

ஐந்தாம் அத்தியாயம் நிறைவு.

■ ■ ■ ■ ■ ■ ■

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்-5

சந்யாச யோகம்

1. அர்ச்சுனன் சொல்கிறான்: கணணா! செய்கை களின் துறவைப் புகழ்ந்து பேசுகிறாய், பின்னர் அவற்றுடன் கலப்பதைப் புகழ்கிறாய், இவ்விரண்டில் சிறந்தது எதுவென்று நன்றாக நிச்சயப்படுத்தி என்னிடம் சொல்.

2. பகவான் சொல்கிறான்! துறவு, கர்ம யோகம் இவ்விரண்டுமே உயர்ந்த நன்மையைத் தரக்கூடியவை தான். இவற்றில் கர்மத்துறவைக் காட்டிலும் கர்மயோகம் மேம்பட்டதாகும்.

3. பெருந்தோளாய்! விருப்பு வெறுப்பு இல்லாத வனே நித்ய சந்யாசி எனப்பெறுகிறான். இருமை நீங்கி எளிதில் அவன் பந்தத்திலிருந்து விடுபடுகிறான்.

4. சாங்கியம் எனும் சந்நியாசத்தையும், யோகத் தையும், வெவ்வேறென்று அறியாதவர்கள் கூறுகிறார்கள். ஆனால் பண்டிதர்கள் அவ்வாறு கூறமாட்டார்கள். இவ்விரண்டில் நன்கு நிலைபெற்றவன், இரண்டின் பயன்களையும் எய்துகிறான்.

5. பெருந்தோளாய்! யோகம் இல்லாதவன் சந்யாசம் பெறுவது கடினமானதாகும். யோகத்தில் பொருந்திய முனி விரைவில் பிர்மத்தை அடைகிறான்.

6. யோகத்திலே ஆழ்ந்து தூய்மை பெற்றவன், தன்னைத்தானே வென்றவனாகிறான். இந்திரியங்கள் மீது வெற்றிகொண்டவன். எல்லா உயிர்களும் தானே யானவன். கர்மயோகியாகத் தொழில் செய்து கொண் டிருப்பினும் அவன் அதில் ஒட்டுவதில்லை.

7. பார்த்தாலும், கேட்டாலும், தொட்டுணர்ந் தாலும், முகர்ந்து பார்த்தாலும, உண்டாலும்,

நடந்தாலும், தூங்கினாலும், உயிருடன் இருந்தாலும் கூட, உண்மையை அறிந்த யோகி, தான் எதையும் செய்யவில்லை என்று நினைக்கவேண்டும்.

8. புலம்பினாலும், விட்டாலும், வாங்கினாலும், இமைகளைத் திறந்தாலும், மூடினாலும், இந்திரியங்கள் தம்முடைய விஷயங்களில் செயல்படுகின்றன என்பதை உணர்ந்துகொண்டு, நான் எதையும் செய்வதில்லை என்று கருதி இருக்கவேண்டும்.

9. எவன் தனது செய்கைகளை எல்லாம் பிர்மத்தில் சார்த்திவிட்டு, பற்றுதலை நீக்கிவிட்டு தொழில் செய்கிறானோ, அவனை, தண்ணீரில் தாமரை இலை போல பாவங்களால் தீண்டப்பெறுவதில்லை.

10. யோகிகள், பற்றுதலைக் களைந்துவிட்டு, ஆத்ம சுத்தியின் பொருட்டாக, உடம்பாலும், மனத்தாலும், புத்தியாலும், வெறுமே-இந்திரியங்களாலும் தொழில் செய்வான்.

11. யோகத்தில் பொருந்தியவன்; கர்மப்பயனைத் துறந்து, நிஷ்ட்டைக்குரிய சாந்தியை அடைகிறான். யோகத்தில் பொருந்தாதவன், தன் இஷ்டத்திற்கு-ஆசைக்கு-வசமாகி, பயனிலே பற்றுதல் கொண்டு அதற்குக் கட்டுப்பட்டு விடுகிறான்.

12. தன்னை வசங்கொண்ட ஆத்மா, எல்லா கர்மங்களையும் மனதால் துறந்து, எதனையும் செய்வதுமின்றி, செய்விப்பதுமின்றி, ஒன்பது வாயில் கொண்ட உடல் எனும் கோட்டையில் இன்புற்றிருக்கிறான்.

13. செயலின் கர்த்தா எனும் தன்மை, செய்கை, செய்கையின் பயனைப்பெறுதல், இவற்றில் எதனையும், இறைவன் மனிதனுக்குத் தரவில்லை. இயற்கையே செயல்படுகிறது.

14. பாவி, அல்லது நற்செயல்களைச் செய்யும் இயல்புடையவன் என்று எவனையும் கடவுள்

ஏற்பதில்லை. அஞ்ஞானத்தால் ஞானம் சூழப்பட்டிருக் கிறது. அதனால் உயிரினங்கள் மயக்கம் எய்துகின்றன.

15. ஆனால் எவர்களுடைய அஞ்ஞானம் ஆத்ம ஞானத்தால் அழிக்கப்பட்டதோ, அவர்களுடைய ஞானம், சூரியனைப் போல, பரம்பொருளை ஒளி மயமாகக் காட்டுகிறது.

16. பிர்மத்தில் புத்தியை நிலைநிறுத்தி, அதுவே தாமாய், அதிலேயே நிஷ்ட்டை எய்தி ஈடுபட்டோர், ஞானத்தால் தம்முடைய, பாவங்களை எல்லாம் நன்கு கழுவப் பெற்றோராய், மீளாப் பதத்தை அடைகிறார்கள்.

17. கல்வியும்-விநயம்-நாகரீகமும் நன்கு கற்ற பிராம்மணனிடத்தும், பசுவினிடத்திலும் யானை யினிடத்தும், நாயினிடத்தும், நாயைத் தின்னும் புலையினிடத்தும், பண்டிதர்கள் - ஞானிகள்-சமப் பார்வையுடையோராவர்.

18. எவர்களுடைய மனம் சமநிலையில் நிற்கிறதோ, அவர்கள் இவ்வுலகில் உயிர் வாழும் போதே இயற்கையை வென்றவர்களாவார்கள். ஏனெனில் பிர்மம் மாசற்றது. சமநிலையுற்றது. ஆகையால் அவர்கள் பிர்மத்தில் நிலைபெறுகிறார்கள்.

19. விரும்பிய பொருளைப்பெறும்போது மகிழ்ச்சி அடையாமலும், பிரியமற்றதைப் பெறும் போது துயரப் படாமலும், நிலையான புத்தியுடையோனாய், மயக்கம் நீங்கி, பிர்மஞானியானவன் பிர்மத்தில் நிலைபெறுகிறான்.

20. புறத்தீண்டுதல்களில் பற்றற்ற சாதகன் உள்ளத்தில் எந்தச் சுகம் தியானத்தால் விளைகிறதோ, அதனைப் பெறுகிறான். அதன்பிறகு பிர்ம யோகத்தில் பொருந்தி அவன் அழியாத இன்பத்தை எய்துகிறான்.

21. புறத்தூண்டுதல்களில் தோன்றும் இன்பங்கள் துன்பத்திற்குக் காரணமாகும். அவை தொடக்கமும்

இறுதியும் உடையனவாகும். நிலையற்றவையாகும். குந்தியின் மகனே! அறிவுடையவன் அவற்றில் இன்பமுடையவன்.

22. எவன் இவ்வுலகத்திலேயே சரீரம் நீங்கும் முன்னர் விருப்பத்தினாலும், கோபத்தினாலும் விளையக் கூடிய எழுச்சியைப் பொறுக்க வல்லவனோ அவன் இன்பமடைவதில்லை.

23. தனக்குள்ளே இன்பமுடையவனாய், உள்ளே மகிழ்ச்சி காண்பவனாய், உள்ளே ஒளி பெற்றவனாகிய யோகி, தானே பிர்ம மயமாகி, பிர்ம நிர்வாண மடைகிறான்.

24. இருமைகளை வெட்டிவிட்டுத் தன்னைத் தானே கட்டுப்படுத்தி, எல்லா உயிர்களுக்கும் இனியது செய்வதில் மகிழ்ச்சி அடையும் ரிஷிகள், பாவங்கள் அழிந்து பிர்ம நிர்வாணமடைகிறார்கள்.

25. விருப்பத்தையும், கோபத்தையும் தவிர்த்து சித்தத்தைக் கட்டுப்படுத்திய ஆத்ம ஞானிகளாகிய முனிவர்களுக்கு பிர்ம நிர்வாணம் நாலாபுறமும் அருகில் இருக்கிறது.

26. புறத்தூண்டுதல்களை, வெளியிலே தள்ளி புருவங்களுக்கிடையே விழிகளை நிறுத்தி மூக்கினுள்ளே இயங்கும், பிராண வாயுவையும், அபான வாயுவையும், சமமாகச் செய்து கொண்டு.

27. புலன்களையும், மனத்தையும், புத்தியையும் அடக்கி, விருப்பம், அச்சம், சினம் ஆகியவற்றைத் தவிர்த்து, மோட்சத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிற முனிவன், எக்காலத்திலும் முக்தனேயாவான்.

28. என்னை, வேள்வியையும் தவத்தையும் ஏற்பவன் என்றும், உலகுக்கெல்லாம் ஒரு பேரரசன் என்றும் எல்லா உயிர்களுக்கும் நண்பன் என்றும் அறிபவன் அமைதியை அறிந்து அதையே அடைகிறான்.

விளக்கவுரை

பகவத்கீதையின் ஐந்தாவது அத்தியாயத்திற்கு சந்நியாச யோகம் என்று தலைப்பிட்டு வியாசர் இருபத்தெட்டு சுலோகங்களை இயற்றியுள்ளார். சுவடி ஆசிரியர் ஞான கர்மவத்தியாயம் எனத் தலைப்பிட்டு பத்தொன்பது விருத்தங்களைப் பாடியுள்ளார்.

சுவடி ஆசிரியரின் முதல் விருத்தத்தில், இறைவனாகிய கண்ணனின் பெருமைகளைக் கூறி அவனிடம் அர்ச்சுனன் கேட்பதாகவும், அவன் முன் அத்தியாயத்தில் கர்மயோகமும் உயர்வே-ஞான யோகமும் உயர்வே என்று கூறியதில் எது உயர்வானது என்று கேட்கிறான். இது வியாசரின் முதல் சுலோகத்தில் உள்ளது.

மூன்றாவது விருத்தத்தில், கண்ணன் அருச்சுனனிடம் ஞானயோகத்தைவிட கர்மயோகமே மேலானது என்று கூறுகிறான். இதனையே வியாசர் தமது இரண்டாவது சுலோகத்திலும் கூறியுள்ளார்.

நான்காவது விருத்தத்தில் சுவடி ஆசிரியர், கர்ம யோகம், துறவு எனும் சந்நியாசம் ஆகிய இரண்டில் எது ஒன்றைக் கடைப்பிடித்தாலும அவர்கள் இரண்டின் பயனையும் அடைகிறார்கள் என்கிறார். இது வியாசரின் நான்காவது சுலோகத்தில் குறிப்பிடுகிறார்.

சுவடி ஆசிரியர் தமது ஐந்தாவது விருத்தத்தில், கர்மயோகியை விட, சந்நியாசமடைந்த ஞானயோகியின் நிலை குறைவானதாக கண்ணன் கூறுவதாக உள்ளது.

சாங்கியமும், யோகமும் ஒன்றே எனவும், அவர்கள் விரைவில் பிர்மத்தை அடைவதாகவும், கர்மயோகியாக தொழில் செய்து கொண்டிருந்தாலும் அவன் அதில் ஒட்டுவதில்லை என வியாசர் தமது ஐந்து மற்றும் ஆறாவது சுலோகங்களில் கண்ணன் கூறுவதாகச் சொல்லியுள்ளார்.

ஆறாவது விருத்தத்தில், சுவடி ஆசிரியர், புலன்களின் நுகர்வை நீக்கி பற்றற்ற நிலையில் தொழில் செய்பவர்கள் நலிவடைவதில்லை எனவும், ஆனால் அவர்கள் தங்கள் செய்யும் தொழிலை விட்டுவிட்டபோது எதையும் அடைவதில்லை எனக்கூறியுள்ளார்.

இதனை வியாசர் தமது ஏழு எட்டு ஆகிய சுலோகங்களில், எவ்வித செயல்களைச் செய்தபோதும் யோகிகள் தாம் எதையும் செய்யவில்லை என நினைக்க வேண்டும் எனவும் கண்ணனின் கூற்றாகக் கூறியுள்ளார்.

சுவடி ஆசிரியர் தமது ஏழாவது விருத்தத்தில் வியாசர் தமது ஏழாவது சுலோகத்தில் சொல்லிய கருத்தையே தாமும் சொல்கிறார்.

சுவடி ஆசிரியர் விருத்தம் எட்டில் தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாத தன்மையைப் போல செய்யும் செயல்களை இறைவனுக்கே அர்ப்பணிப்பவர் களுக்குக் கர்மவினை ஒட்டுவதில்லை எனக்கூறுகிறார். இதே கருத்தும் எடுத்துக்காட்டும் வியாசரின் ஒன்பதாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் ஒன்பதில் சுவடி ஆசிரியர் தமது எட்டாவது விருத்தத்தில் கூறிய கருத்தையே மீண்டும் விவரித்துக் கூறுகிறார். பத்தாவது விருத்தத்தில் சுவடி ஆசிரியர், மனித உடலை ஒன்பது வாசல்களையுடைய ஊருக்கு உவமையாகக் கூறுகிறார். வியாசர் தமது பன்னிரண்டாவது சுலோகத்தில், ஒன்பது வாயில் கொண்ட கோட்டையே உடல் என்று கூறியுள்ளார். இந்தக் கோட்டையில் இன்புற்றிருக்க, எல்லா கர்மங்களையும் மனதால் துறக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

பதினோராவது விருத்தத்தில் சுவடி ஆசிரியர், செயல்கள் யாவும் இயற்கையானது எனவும், மாயை யினால் தான் அறிவில் மயக்கம் ஏற்படுவதாகவும், செயல்களை நானே செய்தேன் என்ற ஆணவம் கொண்டவர்கள் அழிந்துபோகிறார்கள் எனவும் கண்ணனின் வாய்மொழியாகக் கூறுகிறார்.

வியாசரும் செயல்பாடுகள் அனைத்தும் இயற்கையே என்பதைத் தமது பதின்மூன்றாவது சுலோகத்தில் தெரிவிக்கிறார். அறிவினால் அறியப்படாத அஞ்ஞானம்-வானில் ஒளிவீசும் சூரியனைப் போன்ற ஞானத்தால் அழிக்கப்படுவதாக ஒரு நல்ல எடுத்துக் காட்டுடன் விளக்குவது சுவடி ஆசிரியர் தமது ப்ன்னிரண்டாவது விருத்தத்தில்.

இதே எடுத்துக்காட்டும் கருத்தும் மாற்றம் ஏதுமின்றி வியாசரின் பதினைந்தாவது சுலோகத்தில் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சுவடி ஆசிரியரின் விருத்தம் பன்னிரண்டில் நல்லறிவைத் தரக்கூடிய வேதத்தைப் போற்றாதவர்களை இறைச்சியை உண்டு உழலும் நாய்கள் என்கிறார். அவ்வேதத்தை உணர்ந்தவர்கள் உடம்பை உயிருடன் இருந்தவாரே உடலை நீக்கிய மேன்மக்கள் எனக் கண்ணனின் கூற்றாகத் தெரிவிக்கிறார்.

விருத்தம் 13இல் இயற்கையே செயல்படுகிறதாக மீண்டும் கூறியுள்ள சுவடி ஆசிரியர் 14வது விருத்தத்தில் ஞானம் அஞ்ஞானத்தால் சூழப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்.

இதனை ஞானத்தால் பாவங்கள் கழுவி அஞ்ஞானம் நீக்கப்படுவதாகக் கூறுகிறார் பதினைந்தாவது சுலோகத்தில் வியாசர்.

சுவடி ஆசிரியர் தமது 15வது விருத்தத்தில் காமமும் கோபமும் காரணங்களாகி இவ்வுடலை வேகவைப்ப தாகவும், இதனைத் தவிர்ப்பதன் மூலம் ஞானிகள் இன்பத்தை அடைகிறார்கள் எனத் தெரிவிக்கிறார். வியாசர் தமது இருபதாவது சுலோகத்தில் பிர்ம யோகத்தில் பொருந்தியவன் அழியாத இன்பத்தைப் பெறுவதாகக் கூறுகிறார்.

மெய்யறிவே பேரொளியாக எல்லாவற்றையும் விளக்குகிறது எனவும் இதனை உணர்ந்தவர்கள் ஞான யோகத்தைக் கைவிடமாட்டார்கள் எனவும் 15வது விருத்தம் தெரிவிக்கிறது.

சுவடி ஆசிரியரின் பதினாறாவது விருத்தம் ஞான யோகம் கைவரப் பெற்றவர்கள், அதுவே உண்மையான இன்பத்தைத் தருகிறது என்பதை உணர்கிறார்கள். ஆகையால் அதனைக் கைவிடமாட்டார்கள் எனத் தெரிவிக்கிறது.

இதனை வியாசர் இவ்வத்தியாயத்தின் பத்தொன்ப தாவது சுலோகத்தில், பிர்மஞானியானவன் பிர்மத்தில் நிலைபெறுகிறான் எனவும், இருபதாவது சுலோகத்தில், பிர்ம ஞானத்தில் பொருந்தியவன் நிலையான இன்பத்தைப் பெறுகிறான் எனவும் கூறியுள்ளார். எனவே வியாசரின் கருத்தே இங்கும் சுவடி ஆசிரியரால் விவரித்துக் கூறப்பெற்றுள்ளதைக் காணலாம்.

பதினெட்டாவது விருத்தத்தில், சுவடி ஆசிரியர் பயத்தையும், கோபத்தையும் நீக்கிய யோகிகள் மறுபிறவி அடைவதில்லை எனவும், மெய்ஞ்ஞானத்தை உணர்ந்த வர்களே பிறவிப் பிணி நீக்கியவர்கள் எனவும், உயிர்கள் அனைத்தும் இறுதியில் தன்னையே வந்து அடைவதாக கண்ணன் அருச்சுனனிடம் கூறுவதாக இவ்வைந்தாம் அத்தியாயத்தை நிறைவு செய்கிறார்.

வியாசர் தமது 17வது சுலோகத்தில் சமமான பார்வை-உயர்பிறவி-தாழ்ந்த பிறவி என பாகுபாடு இல்லாது-உடையவர்களே ஞானிகள் எனவும், இன்பங்களே துன்பத்திற்குக் காரணம் எனவும், எல்லா உயிர்களுக்கும் இனியது செய்வதில் மகிழ்ச்சி அடைபவனே பாவங்களை அழித்த ரிஷிகள் எனவும் அவர்களே பிர்ம நிர்வாணத்தை அடைகிறார்கள் எனவும், ஆத்ம ஞானிகளுக்குப் பிர்ம நிர்வாணம் என்பது எளிதில் கிட்டக்கூடியது எனவும், வியாசர் கூறி வேள்வியையும் தவத்தையும் ஏற்பவன்-உலகுக்கெல்லாம் பேரரசன், எல்லா உயிர்களுக்கும் நண்பன் என இறைவனை-அறிந்து-அமைதியடைகிறவனே முக்தன் என்பதாகக் கண்ணனின் வாய்மொழியாகக் கூறி நிறைவு செய்கிறார்.

இவ்வத்தியாயத்தில் பிராணன் அபானன் என்னும் வாயுக்களைச் சமப்படுத்துவது. மற்றும் அதனைப் புருவ மத்தியில் நிலை நிறுத்துவது பற்றிய செய்தி வியாசராலும் சுவடி ஆசிரியராலும் கூறப்பெறுகிறது எனினும் இவ்வாறு செய்வது பிராணாயாயம் எனத் தெளிவாகக் கூறப் பெறவில்லை. பிராணனுக்குள் அபானனும் அபான னுக்குள் பிராணனும் அடக்குவது பற்றியும் முன்னர் கூறப்பெற்றுள்ளது. இவைகள் யாவும் ஞானிகளும் யோகிகளும், முனிவர்களும் அறிந்த செயல்கள் எனவே பிராணாயாமம் என்பதை இங்கு கூறப்பட்டிப்பதே எனக் கொள்வது சிந்தனைக்குரியதாகும்.

■■■■■■■

ஆறாவது யோகவத்தியாயம்

யோக மனத்தவர் யோக மதற்கே
யேக முதற் பொருளாகி யிருந்தே
நாக பணத்திடையே நடமாடு
மேக மவற் கிவை மீள வரிக தான். 1

முழுமுதற் பொருளாகி இருந்து, நாகப் பாம்பின் படத்தின் மீது நடனமாடிய, மேக வண்ணனாகிய கண்ணன்-யோக நிலையை மனத்தால் உணர்ந்தவர் களுக்கு யோகமே எல்லாமாகும் என்று கூறினான்.

யேக-யேகம்-ஒன்று; நாக பணம்-நாகப்பாம்பின் படம்(தலை) மேகமவர்-மேகவண்ணன்; அவர்க்கு இவை-அர்ச்சுனனுக்கு;

செய்தவினப் பயன் விட்டிவை தீரா
செய்த வியற்றி விருப்பவனே கா
ணுய்ய நிலைத்து நல் யோகியு ஞானியும்
வெய்ய தழற் பொலி வேழ்வி செய்வாரில். 2

வெப்பம் மிகுந்த நெருப்பை மூட்டி வேள்வியைச் செய்பவர்கள், ஞானிகள், யோகிகள் ஆகிய இவர்களை விட, தான் செய்த காரியத்தின் பலனை எதிர் நோக்காமல் பற்றற்ற நிலையில் செய்யத் தகுந்த செயல்களை மட்டுமே செய்யும், கர்மயோகியே மேலானவன்.

பயன்விட்டு-பயனைக் கருதாமல்; காணுய்ய-காண்+உய்ய; வெய்ய-வெப்பம் மிகுந்த; தழல்-நெருப்பு. வேழ்வி-வேள்வி-யாகம்.

மேவினை யாவையும் வீடுதலில்லார்
யாவர்க ளேனு நல்யோகி களா காரி
யாவர் களாகில் அவர் வறலே காணோ
வலிலாத நல் யோ கமு மய்யா. 3

புலன்களை அடக்கி உணர்வுகளைத் தூய்மையாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். யோகிகள் படுக்க வேண்டிய இடம்பற்றிக் கூறப்பெற்றுள்ளது.

குசை, தர்ப்பைப்புல், உழை-பெட்டை மான். துகில்-துணி; மணனை-மண்ணை; உணர்வு தூய தாயத்தான் பொருட்டாய்- தூய உணர்வுகள் உண்டாகுவதற்காக.

தலையுங் கழுத்து முடம்புமிவை செவ்வே தழராதே யிருத்தி
நிலையிலிருந்து கண களைத்த மூக்குத் துதிமேலே நிறுத்தி
யலையுங் கடல் பொற் காமமு மெய்ப்பயமுந்
தனைவிட்டகலவே
வுலையு மனமுள்ளடங்க வினை யுணந்தே யிருக்குமது
யோகம். 12

தலை, கழுத்து, உடம்பு ஆகியவற்றை நேராக தளர்ச்சி இல்லாமல் நிறுத்தி, அவ்வாறு இருந்த நிலையில் இரு கண்களின் பார்வையையும் மூக்கின் நுனியின் மேலே நிறுத்தி, அலையும் அலைகள் வீசும் கடலைப் போன்ற காமத்தையும், பயத்தையும் விட்டு அகன்று மனமும் உள்ளடங்குமாறு செய்யும் செயலை உணர்ந்து கொள்ளும் நிலையில் அறிதுயில் இருப்பதுவே யோகம் என்பதாகும்.

செவ்வே-செம்மையாக, நேராக; தழராதே-தளராது. மூக்குத்துதி-மூக்கின் நுனி, வினையுணர்ந்தே-தன்னை மறந்தநிலை யல்லாது தூங்குவது போன்ற நிலையிலும்,தூங்கும் செயலை உணர்ந்தவாறு-இதனை அறிதுயில் என்பர்.

வேறு

எண்டிகழும் யோகத்தை யிப்பரிசே யெப்பொழுதுங்
கொண்டு பயில்லார்க் கடைக்கா லென்னையே கூடுவார்
லுண்டியினில் மிகுவா ரூண்டுறப்பார் மிக குறங்கிடுவார்
கண் டுயிலை யறத் துறப்பார் வாக்கிது கைவாராதால். 13

எங்கும் உள்ள, இந்த யோகத்தை இவ்வாறு எப்பொழுதும் முறையாகக் கொண்டு பயில்கிறவர்கள் கடைசிக் காலத்தில் என்னை வந்தடைந்தவார்கள். அதிகமான அளவு உணவு உண்பவர்களுக்கும் குறைவாக உண்பவர்களுக்கும் அதிக நேரம் தூங்குபவர்களுக்கும் அதிக நேரம் கண்விழித்து இருப்பவர்களுக்கும். இந்த யோகம் என்பது செய்யதற்கியலாது.

கடைக்கால்-காலக்கடைசியில்-சாகும் நிலையில் உண்டி-உணவு; ஊண்-மாமிச உணவு; ஊண் துறப்பார்-உணவு உண்ணாமல் பட்டினி கிடப்பவர்கள். கண்டுயில்-கண்+துயில்; துறப்பார்-நீக்குபவர்.

வேறு

துயிலுமுணர்வுஞ் செய் தொழிலு மிகாமே குறைந்து
தோன்றாமே
பயிலுமவனே யோகத்தைத் தன்பார் படுக்கும் பான்மையோ
னயிலும் பொறி விட்டவ் வறிவு தன்பா லடங்கு மப்பொழுது
குயிலும் யோகந்தலை நின்ற னென ருங்கவனைக்
கூறலாம்.14

தூங்குவது, உணர்வுடன் விழித்திருப்பது, செய்யும் தொழில் ஆகியவற்றை மிக அதிகமாகாமல், மிகவும் குறைவாக இல்லாமல் செய்துவருபவனுக்கே யோகம் கைகூடும். சோர்வைத் தரக்கூடிய ஐம்பொறிகளின் நுகர்வை விட்டு, அப்போதுதான் அறிவு தன்பால் அடங்கும், அப்பொழுது கூடிவரும் யோகம். நிலை பெற்றவன் அவனே எனக்கூறலாம்.

துயில் - தூக்கம், அயிலும்-உஷ்ணத்தினால் பொசுக்குகின்ற. குயிலும்-குறிப்பிடத்தக்க.

இப்பாரிசு பயில்கின்ற யோகி காலிலா விடத்து
மெய்ப் பரிசு நடுங்காத விளக்குப் போல விளங்கு
மெப்பொழு தங்க வணுணர் விவ்வுண்மை யிலே
சென்றிசையு
மப்பொழுது பரமானந்தத்தினையு யடையுமால். 15

இவ்வாறு யோகத்தைப் பயில்கின்ற யோகி யானவன். காற்றில்லாத இடத்தில் அசையாது எரியும் விளக்கைப் போல நிலையானவனாக இருப்பான். எப்போது அவனுடைய உணர்வானது இவ்வுண்மையில் இசைவுபெறுகிறதோ அப்போது அவன் பரமானந்த மடைகிறான்.

காலிலா-கால்+இலா=காற்று இல்லாத, நடுங்காத விளக்கு-ஆடாது அசையாது எரியும் விளக்கு.

வேறு

யாதொன் றிந்தப் புலனறியா வளவிலின் பயமாயிருக்கும்
யாதொன்றினைச் சென்றடைந்தார்கள் பின்னையா
தனிரண்டர்காரி
யோதொன்றிசைப் பெற்றவரிதனின் மிக்க தொப்ப
துண்டென்னார்
யாதொன்றிந்த வறிவுக்கே யறிவாய் நிற்கு மதனின்றோர்.16

அறிவிற்கே அறிவாய் விளங்கும் யோக நிலைமை அடைந்தவர்கள், வேறு எதனினும் புலன்களால் அறியப்படாத இன்பத்தை அடைகிறார்கள். வேறு ஒன்றையும் இதற்கும் மேலானதாகக் கருதி அதனை விரும்பமாட்டார்கள், இந்த யோக நிலைக்கு ஒப்பானது வேறொன்று உண்டு எனவும் கூறமாட்டார்கள்.

வேறு

வஞ்சா வேல்கொடு மார்பினெறியினு
மெஞ்சவே தழல் மூடி யேரினும்
நஞ்சினார ழல் நாக நலியினு
மஞ்சிடா ரவை யானந்த மாவதே ! 17

வேல் கொண்டு மார்பினைப் பிளந்தாலும், நெருப்பிலே இட்டு பொசுக்கினாலும் விஷம் மிக்க பாம்பினால் கடிக்கச் செய்தாலும் ஆனந்தத்தைத் தரக்கூடிய யோக நிலையை அடைந்தவர்கள் பயப்பட மாட்டார்கள்.

தழல்-நெருப்பு, நஞ்சு-விஷம், நாக-பாம்பு; அஞ்சிடார்-பயப்பட மாட்டார்கள.

யோகமாய் புலன்களைப் போக்கறுத்
தாகமா மெய்யறி விடையே யந்த
வேகமாய் மனத்தினை மெல்லவே
யேகமா கய்யற்றிகழாது நீ. 18

யோக நிலையில் நின்ற புலன்களை அதன் வழி போகவிடாது நிறுத்தி, தாகத்தோடே உண்மையான அறிவோடு கூட மனதை மெல்ல ஒரே நிலையில் நிறுத்துவதை நீ மேன்மையாகக் கருதுவாயாக !

போக்கறுத்து-அதன் வழிச் செல்லாது தடுத்து; யேகமாய்-ஒரே நிலையில்; தாகத்தோடே-அதிக ஆவலோடு-விருப்பத்தோடு.

வாங்கி நயம் பொறி நின்ற மனத்தினை
நீங்கிடா வகை நின்னு ளிருத்தி யுந்
தீங்கி யாவையுஞ் சிந்தை செய்யா மையும்
பாங்கி யாத்துவே பயில் வாயரோ. 19

கட்டுப்பாட்டிற்குறிய செயல்கள் யாவற்றையும் விடாதவர்கள் யோகிகள் ஆக மாட்டார்கள். எவன் ஒருவன் தன்னைத் தானே முயற்சியில் ஈடுபடுத்திக் கொள்கிறானோ, அவன் செய்வதே துன்பமில்லாத யோகம் எனப்படும்.

ஏகா+ணோவல்+இல்லாத=ஏகாவணேவவலிலாத. நோவல்-நோற்றல்-கட்டுப்படுத்தல்-துன்பம்.

உய்வகை யோகமொருப்படு வார்க்க
துகைவருமா செயல் காரியமே காண்
மெய்வகை யோகம் விளைந்த பின் மெய்யே
செய்வகை யானிவை தீமையை வென்றான். 4

உய்யும் வகையான யோகநிலை கிட்டியவர்களுக்கு அது கைவருமாறு செய்வதற்கான காரியம் என்னவெனில் மெய்யான யோகநிலை அடைந்தவர்கள் தீமையை வென்றவர்களாவர்.

உய்வகை-உய்யும்வகை- மேன்மையடையும் வழி; கைவரு-செய்ய இயல்வது; விளைந்தபின்-கிடைத்த பிறகு.

தான லதி யாவர் தன் மேன்மை செய்தக்கார்
தானல தியாவர் தன் கீழ்மை சமைப்பார்
தானலதி யாவர் தன் மெய்ப்பகை யாவார்
தானல தியாவர் தனக்குற வாவார். 5

தன்னைத்தானே மேம்படுத்திக்கொள்ள வேண்டும். உன்னைத் தவிர வேறு எவரும் உன்னைக் கீழ்மைப்படுத்த இயலாது. எனவே நீயே உன்னைக் கீழ்மைப்படுத்திக் கொள்ளக்கூடாது. தனக்குத் தானே பகைவன்-தானே தனக்கு உறவும் ஆவான்.

மேன்மை-புகழ்ச்சி, கீழ்மை-இகழ்ச்சி, மெய்ப்பகை-உண்மையான பகைவர். தனக்குறவு-தனக்கு+உறவு-உறவினர்.

இறவா வகை தம் உள்ளத் தடக்கு மவரே தமக்கென்று
முறவாயுள்ளா ரல்லாதார் தமக்கே பகையா யொழுகுவார்
துறவா தொழுகு துவந்து வங்கடுறந் தொன்றினை யே
துடர்ந்தவர் பான்
மறவா தெழுந்த மெய்யறிவாம் மாயை மறைக்க
மறையாதால். 6

தமது உள்ளத்தைத் தாமே அடக்கியவர் தமக்குத் தாமே உறவாய் இருப்பர். அவ்வாறில்லாதவர் தாமே தமக்குப் பகைவனைப் போலச் செயல்படுவார்கள். துறவையே போற்றி விரும்பி ஏற்றவர்களிடத்தில் நிறைந்த ஞானத்தை மாயை என்பது மறைக்க இயலாது.

மாயை-ஞானத்தை மறைக்கும் மேகம். மெய்யறிவு-உண்மை யான-யோகமெனும்-அறிவு.

பாடும் பனுவல் பல வோதிய வற்றாலறியும் பயன் தெரிந்து
நீடும் புலன்களவை வென்று நிலையிற் கலக்கற் கரியனா
யோடும் பொன்னுமொரு பொருள் போலொக்கப்
பார்க்குமவனே யிங்
காடும் பெரிய மாய்க் கூடத்தாடாதது கண்டமர்ந்திப்பான். 7

இறைவனைப் பற்றிப் பாடப்பெற்றுள்ள பல பாடல்களையும் கற்று அவற்றின் உட்பொருளை உணர்ந்து, ஐம்புலன்களை வென்று, யோகநிலையில் நின்றவனுக்கு ஓடும், பொன்னும் ஒன்றேயாகும். அவன் பெரிய காட்டிலும் கூட மாயக்கூடத்தில் அமர்ந்திருப்ப தாகவே உணர்வான்.

மண் ஓட்டையும் பொற்கட்டியையும் ஒன்றேயெனக் கருதியவனே உண்மையான துறவி-பனுவல்-இறைவனைப் பற்றிப் பாடும் பாடல் கூடத் தாடாதது-யோகத்தில் அசையாது அமர்ந்திருத்தல்.

புன் மயமான பொறித் ததினோடும்
பன் மயமான வினைப் பய னொடு
மன் மயமான வனப் பொழுதய்யா
தன் மையில் யோக மதிற்றலை நின்றான். 8

கீழ்த்தரமான ஐம்பொறிகளினால் கிடைக்கும சுகத்தைத் துறந்து, பலவிதமான வினைகளின் பயன் களோடு மனதை மயக்கும் காம யாகத்தினின்றும் நீங்கி தனிமையில் யோகத்தில் நின்றவனே உயர்ந்தவன்.

புன் மயமான-கீழ்த்தரமான, பன்மயமான-பலவிதமான; மன்மயமான வனப்பொழுது-மனதை மயக்கும் (மன்மதனின் வசமான) வனப்பொழுது என்பது மயங்கிய நிலையில் உள்ள நேரத்தைக் குறிப்பது. தன்மையில்-தனிமையில். யோக மதிற்றலை நின்றான்-யோக நிலையை மேலாகக்கொண்டு நின்றவன்.

கைமாறில்லாதன செய்வான் காதற்றொழன் கடும்பகைஞன்
விம்மாதே
வாக்கு மொத்திருப்பான் வேண்டப் படுவான் வேண்டாதா
னம்மா மறை
தூனெறி புரிவானாகாதன வாக்கிடு வானிரிம் மானிடவாளை
வருக்கு மொப்பான் யோகி எனப்படுவான் 9

கைம்மாறு கருதாமல் செயல் செய்வான். நண்பர்களை விரும்புவான். பகைவர்களையும் கடுமையாக நோக்கமாட்டான். சொல்லும் செயலும் ஒன்றாய் இருப்பான். எல்லோராலும் விரும்பப்படுவான். தீய பழக்கங்கள் எதுவும் இல்லாதவனாக இருப்பான். மனிதர்கள் அனைவருக்கும் ஈடாகமாட்டான் அவனே யோகி எனப்படுபவன்.

விம்மாது-கொடிய பார்வை பார்க்காது. தூனெறி-தூயநெறி, ஆகாதன வாக்கிடுவான்-அரிய செயல்களைச் செய்திடுவான்.

தலையா மிந்தயோ கத்தைத் தலை நின்றொ முகுந்
தன்மைகேளு
னாலை வாவாசைதனை மாற்றி யொன்றுந் தனக்கென்
றொழுகாதே
மலையார் முழையே முதலாக யோகங்களுக்கு வகுத்துரைத்த
நிலையாவை யினுமொன்றினில் வந்தியாது நலியா
விடத்திலே. 10

மேன்மையான இந்த யோகத்தினை மேலாக மேற்கொண்டு நின்றவர்களின் தன்மையைச் சொல்கிறேன். ஆசையை நீக்கி, தனக்கென எதுவும் செய்யாது, மலைகளில் உள்ள குகைகளில் உறையும் யோகியர்களுக்கு என வகுத்துக் கூறப்பெற்ற இவை. எதனிடத்தும வெறுப்புக்கொள்ளாமல், தீங்கு தராத இடத்தில் நிலையானவர்களாகிய யோகிகளுக்கு பொருந்துவதாகும்.

தலைநின்று-முதன்மையாக ஏற்று; தனக்கென்று ஒழுகாதே-தன்னலமற்றதான செயல்களைச் செய்தல். மலையார் முழை- மலைகளில் உள்ள குகை. வந்தியாது-வெருப்புக்கொள்ளாமல், ஒளிக்காமல். நலியாவிடம்-துன்பம் தராத இடம்.

ஒக்கும் வகையாற்குசை பரப்பியதன் மேலுழையின் றோல்
படுத்துத்
தக்கதுகிலை யதன் மேலே விரித்துத் தானங் கதிலிருந்து
மிக்க மன்னையற வொருக்கி வேறு செய்யும் வினைகளுடன்
றொக்கப் புலன்களை யடக்கி யுணர்வு தூயதாயத்தன்
பொருட்டாய்.11

ஏற்கும்படியாக தர்ப்பப் புல்லைப் பரப்பியும் அதன்மேல் பெட்டைமானின் தோலை விரித்தும் அதன் மேல் துணியை விரித்துப்படுத்து உறங்கவேண்டும். மண் தரையில் படுக்கக் கூடாது. செய்யத்தக்கன செய்து,

யோக நிலையை ஏற்று நல்ல நிலையில் நின்ற மனத்தை அந்நிலையிலிருந்து நீங்கிடாதவாறு நிலை நிறுத்தியும், இது தீமை தருவது எனக்கூறப் பெறுவதை ஏற்றுக்கொள்ளாமல் சிறப்பாக பயின்று வருவாயாக !

வாங்கி-ஏற்று; பொறி நின்ற-நன்னிலையில் நின்ற; சிந்தை செய்யாது-பொருட்படுத்தாமல்.

தேறு நெஞ்சின னா யத் தன் செயலல்லால்
வேறு கண்டறியா மெய்யறி வினாலுறி வந்த உடம்புடன்
வேறு பெற்றேரி நின்வனே யின்ப மெய்துவான். 20

உறுதியான மனமுடையவனாக, தன் செயல் அல்லாது வேறு எதையும் கண்டறியாத உண்மையான அறிவினால் உறுதி வாய்ந்த உடம்புடன், தனித் தன்மை பெற்றவனாகிய யோகியே உண்மையான இன்பத்தை அடைவான்.

மெய்யறிவு-உடல் வேறு ஆன்மா வேறு எனும் உண்மையான அறிவு.

வேறு

இழியா திந்த யோகத்தை யென்றுந் தலை நின்றவ னென்று
மழியா வினை பத்தினையின் பத்தாலே யடையுமது நிற்க
வொழியா வெல்லா வுயிர்களுந் தன்னுள்ளே
காணுமவற்றுள்ளே
கழியா தெங்குந் தானின்ற பரிசுந் தெரியக் காணுமால். 21

குறைவாக எண்ணாது என்றும் இந்த யோகத்தை மேன்மையாக ஏற்று நின்றவன் என்றும் குறையாத வினை பத்தினை இன்பத்தினாலே அடைகிறான் மேலும், எல்லா உயிர்களும் தன்னுள்ளேயே இருப்பதாகவும், மற்றும் எல்லா உயிர்களிடத்தும் தானே இருப்பதையும் உணரக் காண்கிறேன்.

இழியாது-குறைவாக எண்ணாமல்.

யாவ னொருவ னென்னை யெல்லா வுயிர் களிடையு
மென்னிடையே
மேவ வெல்லாத வுயிர்களையும் வேறாகாதே
மெய் காண்பான்
றேவர் பகைமுன் செகுத்தோனே யாவான் யாதெனினுஞ்
செய்திடினு
மாவவ்வ னாகின்றேன் யானது நீயேது மையுறேல். 22

எவன் எங்கும் என்னைக் காண்கிறேனோ, எல்லாப் பொருள்களிடத்திலேயும் என்னைக் காண்கிறானோ, என்னிடத்தில் எல்லாப் பொருள்களையும் காண்கி றானோ, அவனே தேவர்களின் பகையை முன்னாளில் வெற்றி பெற்றவனாவான், எதைச் செய்தபோதும் அவைகளில் நானே நிற்கின்றேன் இதற்கு நீ கொஞ்சமும் சந்தேகப்பட வேண்டாம்.

தேவர்பகை முன் செகுத்தோன்-தேவர்களின் பகைவர்களான சூரர்களை வென்ற முருகன்-முழுமையான ஞானம் பெற்றவன்-என விரித்துக்கொள்க. செகுத்தோன்-செயித்தவன். ஐயுறேல்-சந்தேகப்பட வேண்டாம்.

இடரானது தானின் பந்தான் யாதெனுக்கு மாயிடுக
படரா நின்றவது காணுமுறுவான் யோகி யெனப் படுவான்
சுடராய் நின்ற வடிவேலெய்து துணி நீயென்று துளா யலங்க
லடரா நின்ற நெடிமுடி யொன் றருளிச் செய்ய
வவனுரைப்பான். 23

துன்பத்தையும், இன்பத்தையும் அவை எனக்கே ஆகட்டும் என விடுக! தன்னைச் சாருவதில்லை என்று காண்பவனே யோகி என்பவனாவான். ஒளிமிக்க வேலினை வீசி போரிடத்துணிவாயாக என துளசி மாலையை அணிந்த நெடிய முடியினையுடைய கண்ணன் அன்புடன் கூற அர்ச்சுனன் கூறுகிறான்.

இடர்-துன்பம்; துளா யலங்க-துளபமாலை யணிந்த; துளபம்-துளசி; நெடுமுடியோன்-உயர்ந்த முடியுடைய கண்ணன்.

எல்லா வுயிரு மொன்றதாகப் பார்ப்பதி யோக
மெனவுரைத்தாய்
மல்லார் தோளா யிதற்கு நிலை காணேன் மனமாகி
நின்றவிது
நில்லா வியற்கை த்தாய்ப் புலனைக் கலக்கு மதனை நிலை
நிறுத்த
லொல்லா தெனவுங் காற்றடக்கிற் றொக்கு மெனவு
முணர்கின்றேன். 24

எல்லா உயிர்களையும் சமமானதாகப் பார்க்க வேண்டும். அதுவே யோகம் என்று சொன்னாய்! இது எவ்வாறு என அறிய முடியவில்லை! மனம் இயற்கை யிலேயே அலையும் தன்மையுடையது. அது புலனைக் கலக்கி தவறு செய்யச்செய்கிறது. எனவே அதனை நிலை நிறுத்த இயலாதெனவும் உயிர் மூச்சாகிய காற்றை வசப்படுத்தி அடக்கினால் இது இயலும் எனவும் உணர்கிறேன்.

மல்லார் தோளா!-மல்யுத்தம் செய்யவல்ல வலிய தோளினை உடையவனே! நில்லாவியற்கை-நிற்காது என்பது இயற்கை, புலனைக் கலக்கும்-புலன்களை தன் வழியில் கலக்கி தீமைகள் செய்யத்தூண்டும். ஒக்கும்-இயலும்.

இவ்வகை விசயன் சுவற மாயவனியம்புகின்றா
னைவகைப் புலனும் நெஞ்சுமடக்குகை யரிதானுலு
முய்வகை யோகம் யாவு முயரறி வானாலு மொவ்வா
ஐவகைப் புலன் செயின்ப மதனை மனைத்தையும்
வெறுத்தலாலும். 25

இவ்வாறு விசயன்கூற, மாயவனாகிய கண்ணன், ஐம்புலன்களையும், மனதையும் அடக்குவது அரிய செயலே ஆனாலும், உய்யும் வகைக்குரிய யோகத்தை முயற்சியுடன் செய்பவனுக்கு அது இயலும். ஐம்புலன் களால் கிடைக்கும் இன்பங்களை வெறுப்பதினாலும், இது இயலும்.

நெஞ்சு-மனம்; அரிது-எளியதன்று.

வேறு

வெய்ய நெஞ்ச மடங்கிடும் வெறிதற்
கையமில்லை யென்றே யறியாத லற்றெ
பையவே காணம் பதினான்
கையும் கடந்தவர் யோகமுங் கை கொண்டார். 26

மனம் கட்டுப்படுத்தப்படுவதற்கு அரியதுதான். சநதேகம் இல்லை. பதினான்கையும் கடநதவர்கள் தான் யோக நிலையை அடைந்தவர்கள் என்பதை காலப் போக்கில் மெல்ல அறிந்துகொள்.

வெய்ய-கொடிய, ஐயம்-சந்தேகம், பைய-மெல்லமெல்ல-காலப்போக்கில்.

பதினான்கு என்பது எவை என்பது பற்றி இந்நூலில் கூறப்பெற வில்லை இதனை பதி+நான்கு எனப்பொருள் கொண்டால் பதி-தலம்-தளம்-இடம் எனக்கொண்டு நான்கு வகையான யோகம் என்க. இதில் கர்ம யோகம் ஞானயோகம் ஆகிய இரண்டினைப் பற்றி மட்டுமே இங்கு கூறப்பெற்றுளளது. பக்தி யோகம், முக்தியோகம் என்பன கூறப் பெறவில்லை . எனவே இந்நான்கு யோகங்களையும் கடந்தவர்கள் எனவும் பொருள்கொள்ள முயலலாம். பத்து+நான்கு=பதினான்கு. பதி+நான்கு=பதினான்கு.

ஞானேந்திரியம்-5-கர்மேந்திரியம்-5-அந்தக் கரணம்பு-4-ஆக 14 என்பது சரியானது என வேறு நூல்கள் தெரிவிக்கின்றன.

என்றுகூற விசைய னியம்பு வா
னின்று யோகத்திலே நெடு நாளெல்லாம்
பொன்னுங் காலத்த யாத்துயிர் போயினார்
சென்ற நற்கதியே யன்றிச் சேருடமோ. 27

இவ்வாறு கண்ணன் கூறியபின் விசயன் கேட்கிறான். யோகத்தில் நீண்ட காலம் வரையிருந்தும் பலன் இன்றி உயிர் நீத்தவர்கள் நற்கதியை அடைவார்களா அல்லது வேறு எங்கு சென்றடைவார்கள்?

பொன்றும்-பொருந்தி இருந்து. உயிர் போயினார்-செத்துப் போனவர்கள். சேருடமோ-சேரும் இடம் எதுவோ.

யோக வெவ்வினைக ளொருவினான்
போகமே வலின் யோக முடிந்தில
னாகமே யிருபாலும் விடா நிற்க
மேகமே யென வீந்து கழியுமோ. 28

யோக நிலையை மேற்கொள்ள முயற்சித்த ஒருவன் போக நிலையில் மேம்பட்டுப் போய் யோக நிலை அடையாமலும், போக சுகத்தில் ஈடுபட முடியாமலும், இரண்டும் கெட்டானாய், நின்றவன் உடைந்து கரைந்து அழியும் மேகத்தைப் போல அவனுடைய வாழ்வு அழியுமோ?

யோகம்-போகம்; ஒருவினான்-மேற்கொண்டவன்-வலின்-வலியதாக ஆயின். இருபாலும்-யோகமும் போகமும்.

மையலிது வென்மனத்தினின் மற்றிந்த
வைய மறுக்க வல்லாரில்லை நீயன்றி
யுய்ய விதனை யுரையென யோகத்தின்
மெய்யனிதனை விரிய உரைக்கின்றான். 29

என் மனதில் மயக்கத்தை உண்டாக்கிய இந்த சந்தேகத்தை உன்னைத் தவிர நீக்குவார் வேறு எவரும் இல்லை என்று கேட்ட அருச்சுனனுக்கு, யோகத்தின் உண்மையான நிலை என்னவென்பதைக் கண்ணன் விவரமாகக் கூறுகிறான்.

மையல்-மயக்கம். மற்நிந்த வையம்-மற்றும்+இந்த+ஐயம்; ஐயம்-சந்தேகம்; அறுக்க-நீக்க, விரிய-விவரமாக.

பொய்மையுடைய புலனுடை மாந்தர்க
ளிம்மை யிடையு மறுமை யுலகத்து
மெய்ம்மை யுடையவர் மெய்ம்மை விடா நின்றார்
செம்மை தெளி யின்னஞ் செப்பவுங்கேள். 30

பொய்யான புலன் அடக்கம் கொண்டவர்களுக்கு யோகநிலை மேற்கொண்டதன் காரணமாக-இவ் வுலகத்திலும் அழிவின்றி மேன்மையே அடைவார்கள். இவர்களைப் பற்றி இன்னமும் சொல்கிறேன் கேள்.

பொய்மையுடைய புலன்-அடக்கப்பெறாத ஐம்புலன்கள்; செம்மை-மேன்மை.

யோக முடியா திடையே யிறந்தவன்
யாகவினை செய்தாங் கிசைந்திடுஞ்
சோகமில் நாடெய்த்தித் துன்பஞ் துடராதே
போக நுகர்ந்து பல காலங்கள் போய பின். 31

யோக நிலையை அடைவதற்கான முயற்சியை மேற்கொண்டு, அது நிறைவு பெறாமல் இறந்து போனவன் துன்பம் இல்லாத சுகமான வாழ்க்கை வாழ்வோரின் இல்லத்திலே பிறந்து, சோகம் இல்லாது, சுகபோகங்களை பலகாலம் அனுபவித்திருந்து, யாகம் செய்த வினையின் பயனாக நல்வாழ்வு வாழ்வார்கள்.

சோகமில்-சோக மில்லாத, போக நுகர்ந்து=இன்பங்களை அனுபவித்து. துன்பந் தொடராதே-துன்பம் என்பது ஏதும் இல்லாமல்.

சிறந்த வாசா திருக்குலத்தாத
லறந்தரு யோகி கடங்கு குலத்தாதல்
பிறந்து பெறுவ தெல்லா மெய்திப்பின்னும்
மறந்த வியோக மகிழ்வுட னெய்தும். 32

சிறந்த புத்திமான்களின் உயர்குலத்தில் பிறக்கிறான். அறத்தின் வழி வாழுகின்ற யோகிகள அடங்கிய குலத்தில் பிறக்கிறான். அவ்வாறு பிறந்து, பிறவிக்குரிய எல்லா நன்மைகளையும் அடைகிறான். பின்னர், போன ஜென்மத்தில் தான் செய்த யோகத்தின் பலனாக, மறந்து போன அந்த யோக நிலையை மறுபடி முயற்சி செய்து அதன் பலனை மகிழ்வுடன் அடைகிறான்.

வாசா-வாசிக்கும் அறிவாளிகள்; திருக்குலம்-உயர்ந்த குலம்; மறந்த வியோகம்-மறந்துபோன யோகம்.

கொண்டு பயிலுங் குணமில னாயினு
முண்டு தெளி வென்றுணர்ந்த, வியோகந்தான்
பண்டு பயின்ற பயிற்சியினார் களைத்
தண்டுத லின்றி முன்றானே தலைப்படும். 33

இப்பிறவியில், முற்பிறவியின் நினைவைக் கொண்டு யோகத்தைப் பயிற்சி செய்யும் குணம் இல்லாதவனா னாலும், முற்பிறவியில், தெளிவாக உணர்ந்து கொண்ட யோகத்தினால், முன்பு பயின்ற பயிற்சியினால், தடை யின்றி அவனுக்கு யோக நிலை கைகூடும்.

முண்டு-முற்பிறவிகள்; பண்டு-பழமையில். தண்டு-தடை.

அனைய வியோகத்தை யாற்றுவ னென்று
நினையு மவனு நெறி பிறழாமல்
வினைகள் பல செய்து யெழுவி முடித்தா
வினை யுங்கதி மேற்கதியை யவன்பெறும். 34

இப்பிறவியில், யோகத்தை அடைய வேண்டும் என்ற நினைவினாலே, நெறி பிறழாமல், பலவினைகளைச் செய்து முயற்சியினால் முடித்து யோகநிலை கைவரப் பெற்று மேற்கதியாகிய பரமபதத்தை அடைகிறான்.

நெறி பிறழாமல்-முறை தவறாமல். யெழுவிமுடித்த-எடுத்த காரியத்தை முடித்து.

நீடுமனநிலை நின்றி லனாயினு
மோடும் வகையால் விடாதே யுழன்றவன்
பாடும் பவங்கள் பல கடந்தாயினும்
வீடும் பெறுமின்னம் வெறுஞ் சிலகேளாய். 35

நீண்ட நாட்கள் இம்மன நிலையில் நில்லாது இருந்தாலும், முயற்சியின் காரணமாக விடாது அதையே செய்தவன், பாவங்கள் பலவற்றையும் கடந்து வீடுபேறு அடைவான். மேலும் சொல்கிறேன் கேள்!

நீடு-நீண்டநாள்; மோடும்-முயற்சி செய்யும்; உழன்றவன்-தொடர்ந்து அதையே செய்து. வீடு-மோட்சம்.

எல்லா தவமு மியற்றி நின்றோ னினு
மெல்லாக் கலைகளுங் கற்றுணர்ந்தோனினுஞ்
செல்லாக் கரும மெல்லாஞ் செய்தவனினும்
நல்லா வலி யோகி நீயது நண்ணுவாய் ! 36

எல்லாவகைத் தவங்களையும் செய்து நின்றவன் என்றாலும், எல்லாவிதக் கலைகளைக் கற்றுணர்ந்தவன்

என்றாலும், செல்லாத செயல்களை எல்லாம் செய்தவன் என்றாலும். அவன்தான் நல்ல யோகி என்பதை அறிவாயாக.

நல்லான் - நல்லவன். நண்ணுவாய்-அறிவாய்.

இருவகை வினையனுக்கும் யோகிக ளெல்லார் களினு
மருவரிய மனத்தினயு மன்பையு மென்பால் வைக்கு
வொருவனுமே யானு யானுவைக்கப் படுகின்றான்
னெனவுரைத்தா
னருவென யன்றுருவென முன் பாராலு மறிவரியோன். 36

அருவும், உருவுமென உலகோரால் அறியப்பெற்ற வனாகிய கண்ணன், இருவகை வினைகளை நீக்கிய யோகிகள் இகழமாட்டார்கள் என்றாலும், குற்றமற்ற மனத்தினனாய், என்பால் அன்பைவைக்கும் ஒருவனே என்னால் விரும்பப்படுகின்றவனாவான் என்று உரைத்தான்.

எல்லார்-எள்ளார்-இகழமாட்டார். மரு-குறறம்; உவக்க-விரும்ப. அருவு-உருவமில்லாதவன்.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–6

தியான யோகம்

1. ஸ்ரீ பகவானாகிய கண்ணன் சொல்கிறான். எவன் ஒருவன் செய்கையின் பயனில் பற்றில்லாமல் செய்யத் தகுந்தவற்றை மட்டும் செய்கின்றானோ அவனே சந்நியாசியும், யோகியும் ஆவான். மேலும் அக்னி காரியங்களைத் துறப்பவன் ஆகமாட்டான். செயல் களைத் துறப்பவனும் ஆகமாட்டான்.

2. பாண்டவா ! எதனைச் சந்நியாச மென்கிறார் களோ, அதுவே யோகம் என்று அறிந்து கொள். ஏனெனில் கோட்பாடுகளை கட்டுப்பாடுகளை துறக்காத எவனும் யோகியாக மாட்டான்.

3. யோக நிலையில் ஏற விரும்பும் யோகிக்குத் தொழிலே கருவியாகக் கூறப்படுகிறது. அந்நிலையில் ஏறியபின் அவனுக்குச் சாந்தம் கருவியாகிறது.

4. ஒருவன் எல்லாக் கோட்பாடுகளையும் துறந்து விட்டு புலன்களிலேனும், செயல்களிலேனும் பற்றுத லின்றி இருப்பானாயின் அப்போது அவன் யோக நிலையில் ஏறியவன் என்று சொல்லப்படுகிறான்.

5. தன்னைத்தானே உயர்த்திக் கொள்ள வேண்டும். தன்னைத்தானே இழிவுபடுத்திக் கொள்ளக்கூடாது தனக்குத்தானே நண்பன். தனக்குத் தானே பகைவன்.

6. எந்த ஜீவாத்மாவின் புலன்களுடன் கூடிய உடல் அடக்கி ஆளப்பட்டிருக்கிறதோ, அந்த ஜீவாத்மாவிற்கு தனக்குத்தானே நண்பன். ஆனால் தன்னைத் தானே வெல்லாதவன் தனக்குத்தானே பகைவனைப் போல, பகைமையாக செயல்படுவான்.

7. சீதோஷ்ணங்களிலும், சுகதுக்கங்களிலும், மானபி மானங்களிலும், சமநிலைப்பட்ட, தன்னை வென்ற மனிதனிடத்தில் பரமாத்மா நன்கு நிலைத்து நிற்கிறான்.

8. எவனுடைய உள்ளம், ஞானத்திலும் விஞ்ஞானத் திலும், திருப்தியாக நிறைந்திருக்கின்றதோ, எந்த சூழ் நிலையிலும், தன்னிலையிலிருந்து பிறழாமல் இருக்கின் றானோ, புலன்களை வென்று வசப்படுத்தியுள்ளானோ, மண் ஓட்டையும், கல்லையும், பொன்னையும் ஒன்றே போலக் காணும் அந்த யோகியே யோகநிலையை அடைந்தவன் எனப்பெறுகிறான்.

9. ஞானமென்பது கடவுளியலைப் பற்றியது. விஞ்ஞானமென்பது உலகவியலைப் பற்றியது. அன்பிற் குரியவர், நட்பிற்குரியவர், எதிரிகள், சுற்றத்தார், ஏதிலார், நடுவர், நல்லோர், தீயோர் ஆகிய எல்லோரிடத்திலும் சம புத்தியுடையவனே மேலானவனாவான்.

10. உள்ளத்தைக் கட்டி, ஆசையைத் துறந்து, மற்றவர்களின் பொருளை ஏற்பதை விட்டுவிட்ட யோகியானவன், மறைவான இடத்தில், தனியாளாக இருந்து கொண்டு எப்போதும் ஆன்மாவில் யோகமுற்று இருப்பான்.

11. சுத்தமான இடத்தில், அதிக உயரமில்லாமலும் அதிகத் தாழ்வில்லாமலும், துணி, மான் தோல், தர்ப்பைப் புல் இவற்றின் மீது தனக்கோர் உறுதியான ஆசனம் அமைத்துக்கொண்டு,

12. அந்த ஆசனத்தில் அமர்ந்து உள்ளத்தையும் புலச் செயல்களையும் நன்கு கட்டுப்படுத்தி, மனதை ஒருமுகமாக்கி, ஆத்மா நன்கு தூய்மையடையும்படி யோகத்தில் பொருந்தக்கடவன்.

13. உடம்பையும், தலையையும், கழுத்தையும் சமமாக அசைவின்றி வைத்துக்கொண்டு, திசைகளை நோக்காமல், உறுதியானவனாய் தன்னுடைய மூக்கு நுனியைப் பார்த்துக்கொண்டு....

14. நன்கு சாந்தம் எய்தியவனாய், அச்சத்தைப் போக்கி, பிர்மச்சரிய விரதத்தில் நிலைகொண்டு, மனதை வசப்படுத்தி என்னிடத்தே சித்தத்தை இசைத்து, என்னையே அடையத்தக்க கதி எனக்கொண்டு, யோகததில் இருக்கக்கடவன்.

15. மனத்தைக் கட்டுபடுத்தி, இவ்விதம், யோகி, இடையறாது பிர்மத்துடன் இணைத்துக் கொண்டு, என்பால் நிலைபெற்றதாகிய மிகச் சிறந்த விடுதலையி லுள்ள, ஆறுதலை அடைவான்.

16. அர்ச்சுனா ! மிகைப்பட உண்போனுக்கு யோகமில்லை, உணவு அற்றவனுக்கும், ஏகாந்த நிலை எய்தாது, மிகுதியாக உறங்குவோனுக்கும், மிகுதியாக விழித்திருப்பவனுக்கும் யோகம் இல்லை.

17. ஒழுங்குப்பட்ட உணவை உண்டு, நடமாடுகிற வனுக்கும், வினைகளில், ஒழுங்குபட்ட முயற்சி செய்கிறவனுக்கும், உறக்கத்திலும் விழிப்பிலும் ஒழுங்கு பட்டவனாக இருப்பானாயின் அவனுக்குத் துயரத்தை அழிக்கும் யோகம் கைகூடுகிறது.

18. தன் வசப்பட்டுள்ள உள்ளம், எப்பொழுது தனதுள்ளேயே நிலைபெறுகிறதோ, அப்போது எந்த விருப்பத்திலும் பற்று நீங்கிய மனிதன், வீழ்ச்சியற்ற வனாயின், யோகமுற்றவன் எனப்படுவான்.

19. காற்று இல்லாத இடத்தில் விளக்கு எப்படி அசைவற்று இருக்குமோ, அதே உவமை, ஆத்ம யோகத்தில் கலந்து நிற்கும் யோகியினுடைய, வெற்றி கொள்ளப்பட்ட மனதிற்கும் சொல்லப்பட்டது.

20. எங்கு சித்தம் யோகத்தில் பிடிப்பு உற்று, ஆறுதல் எய்துமோ, எங்கு ஆத்மாவினால், ஆத்மாவை அறிந்து, ஒருவன் ஆத்மாவில் மகிழ்ச்சி அடைகிறானோ....

21. புத்தியால் தீண்டத்தக்கதும், புலன்களைக் கடந்து நிற்பதுமாகிய பேரின்பத்தை எங்கு காண்பானோ, எங்கே நிலைபெறுவதால், இவன் உண்மையிலிருந்து வழுவுவதில்லையோ.....

22. எதனை எய்தியபின், அதனைக் காட்டிலும், பெரிய லாபம் வேறு ஒன்று இருப்பதாகக் கருத மாட்டானோ, எங்கு நிலைபெறுவதாய், பெரிய துக்கத்திலும் சலிப்பெய்தமாட்டானோ

23. அந்நிலையே துன்பத்துடன் கலத்தலை விடுத லாகிய யோக நிலையென்று உணர்வாயாக. உள்ளத்தில் ஏக்கமின்றி, உறுதியுடன், அந்த யோகத்தை ஒருவன் பற்றி நிற்கக்கடவன்.

24. சங்கல்பத்தினால், எல்லா விருப்பங்களையும், மிச்சமறத் துறந்துவிட்டு, எல்லாப் பக்கங்களிலும், மனத்தால், இந்திரியக் குழாத்தைக் கட்டுப்படுத்தி.

25. துணிந்த மதியுடன், மனத்தை ஆத்மாவில் நிறுத்தி, மெல்ல மெல்ல ஆறுதல் பெறக்கடவன். எதற்கும் கவலை அடையாதிருக்கக் கடவன்.

26. எங்கெங்கே, இந்த நிலையில்லாத, சஞ்சலமான மனம் அலைகிறதோ, அங்கங்கே அதனைக் கட்டுப்படுத்தி, ஆத்மாவுக்கு வசமாக்கிக் கொள்ளவேண்டும்.

27. ஏனெனில், மனம் சாந்தமாக மாசு நீங்கி, ரஜோ குணம் ஆறி, பிர்மமேயாகிய, இந்த யோகிக்கு மிகச்சிறந்த இன்பம் கிடைக்கிறது.

28. குற்றங்களைப் போக்கி, இவ்வாறு எப்பொழுதும் ஆத்மாவில் கலப்புற்று இருப்பானாகில், அந்த யோகி, பிரம்மத்தைத் தொடுவதாகிய மிக உயர்ந்த இன்பத்தை எளிதில் துய்க்கிறான்.

29. யோகத்தில் கலந்தவன் எங்கும் சமப்பார்வை யுடையவனாய்,எல்லா உயிர்களிடத்திலும் தானிருப் பதையும், தன்னுள் எல்லா உயிர்களும் இருப்பதையும் காணுகிறான்.

30. எவன் எங்கும் என்னைக் காண்கிறானோ, எல்லாப் பொருள்களையும் என்னிடத்தே காண்கி றானோ, அவனுக்கு நான் காணப்படாமல் போவதில்லை. அவன் எனக்கும் காணப்படாமல் போவதில்லை.

31. ஒருமையில் நிலை கொண்டவனாய், எல்லா உயிர்களிடத்திலும் உள்ள என்னைத் தொழுகிறவன், எங்கே சென்ற போதிலும், அந்த யோகி என்னுள்ளேயே செயல்பட்டுக் கொண்டிருக்கிறான்.

32. அர்ச்சுனா ! எந்த யோகி, இன்பமாயினும் துன்பமாயினும் எல்லாவற்றிலும், எல்லாவற்றையும், தன்னைப் போலவே சமமாகப் பார்க்கிறானோ அவனே பரமயோகியாகக் கருதப்படுகிறார்.

33. அர்ச்சுனன் சொல்கிறான்! மதுசூதனா ! இவ்வாறு சமத்துவத்தால் ஏற்படுவதாக நீ சொல்லிய யோகம் உறுதியான, நிலையானதாக எனக்குத் தோன்றவில்லை. எனது சஞ்சலத் தன்மையால்.

34. கண்ணா! மனம் சஞ்சலமுடையது. தவறும் இயல்பானது. வலியது உரனுடையது; அதைக் கட்டுப் படுத்துவது காற்றைக் கட்டுப்படுத்துவத போல மிகவும் கடினமான செய்கை என்று நான் மதிக்கிறேன், நினைக்கிறேன்.

35. ஸ்ரீ பகவான் சொல்லுகிறார், பெருந்தோளாய்! மனம் கட்டுப்படுவதற்கு அரியதுதான். சலனமுடையது தான், சந்தேகமில்லை. ஆனால் குந்தியின் மகனே! அதைப் பழக்கத்தாலும், விருப்பமின்மையினாலும் கட்டி விடலாம்.

36. தன்னைக் கட்டாதவன் யோக நிலையை அடைதல் அரிதானதென்று நான் கருதுகிறேன். தன்னைக் கட்டியவன் முயற்சியாலும், உபாயத்தாலும் அதை எய்த வல்லவனாவான்.

37. அர்ச்சுனன் சொல்கிறான்! நம்பிக்கை யுடையவன் என்றாலும், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளா மையால், யோகத்தினின்றும் மனம் வழுவியவன். யோகத்தில் தோற்றுப்போய், அப்பால் என்ன கதியை அடைகிறான் கண்ணா !

38. ஒருவேளை அவன் இரண்டுங் கெட்டானாய் உடைந்த மேகத்தைப் போல அழிகிறானோ? பெருந் தோளாய்! உறுதியற்றவனாய், பிரம்ம நெறியிலே குழப்பமெய்திய மூடன் என்னவாகிறான்?

39. கண்ணா! இந்த சந்தேகத்தை அறுத்து நீக்க நீயே தகுதியானவன். ஏனெனில் இந்த சந்தேகத்தை போக்குபவர் உன்னையன்றி வேறொருவர் இல்லை.

40. ஸ்ரீ பகவான் சொல்கிறார்! பார்த்தா! அவனுக்கு இவ்வுலகிலும், மேலுலகிலும் அழிவில்லை! மகனே! ஆன்மீக மேம்பாட்டிற்காக (பாடுபட்டவன்) எவனும் கெட்ட் கதியை அடையமாட்டான்.

41. யோகத்தில் தவறியவன், புண்ணியம் செய்வோரின் உலகங்களை அடைந்து, அங்கே கணக்கில்லாத வருஷங்கள் வாழ்ந்து, தூய்மையுடைய, செல்வந்தர்களின் வீட்டில் பிறக்கிறான்.

42. அல்லது, புத்திமான்களாகிய யோகிகளின் குலத்திலேயே பிறக்கிறான். இதுபோன்ற ஒரு பிறவியை அடைதல் சந்தேகமின்றி மிகவும் அரியதாகும்.

43. அங்கே அவன் பூர்வ சரீரத்திற்குறிய புத்தியைப் பெறுகின்றான். குருநந்தனா! அப்பால், அவன் மறுபடியும் வெற்றிக்காண முயற்சியைச் செய்கிறான்.

44. அவன் பண்டைப் பழக்கத்தால், தன் வசமின்றி இழுக்கப்படுகிறான். யோகத்தை அறிய வேண்டுமென்ற விருப்பத்தாலேயே, வேதமெனும் ஒலி உலகத்தையே கடந்து செல்கிறான்.

45. பாவங்கள் நீங்கியவனாய், முழு முயற்சியுடன் முயற்சி செய்யும் யோகி, பல பிறவிகளில் செய்த முயற்சியின் பயனாக வெற்றியாக அக்கணமே பரகதியை அடைகிறான்.

46. தவம் செய்வோரைக் காட்டிலும். சிறந்தவன் யோகி, ஞானிகளிலும் அவன் சிறந்தோனாகக் கருதப்படுகிறான். கர்மாவில் ஈடுபட்டவனை விட அவன் சிறந்தவன். ஆதலால் அர்ச்சுனா! நீ யோகியாக ஆக வேண்டும்.

47. எவன் ஒருவன் சிரத்தையுடைய யோகியோ என்னிடம் ஈடுபாடு கொண்ட உள்ளத்தால் என்னைப் போற்றுகின்றானோ, அவனே மற்ற எந்த யோகிகளையும் விட மேலான யோகி என்பது எனது கொள்கை.

விளக்கவுரை

வியாசர் தமது பகவத் கீதையின் ஆறாவது அத்தியாயத்திற்கு தியான யோகம் எனத் தலைப்பிட்டு, நாற்பத்து ஏழு சுலோகங்களை இயற்றியுள்ளார். சுவடி ஆசிரியர் தமது ஆறாவது அத்தியாயத்திற்கு யோக வத்தியாயம் எனத் தலைப்பிட்டு முப்பத்து ஏழு விருத்தங்களைப் பாடியுள்ளார்.

முதல் விருத்தத்தில், பகவான் கண்ணனை முழு முதற்பொருள் எனவும், பாம்பின் மீது நடனமாடியவன் எனவும், மேக வண்ணன் எனவும் புகழ்ந்து கூறியுள்ளார். இவ்வாறு வியாசர் ஏதும் கூறவில்லை.

இரண்டாவது விருத்தத்தில், ஞானிகள, யோகிகள் இவர்களை விட கர்ம யோகிகளே மேலானவர் எனக் கூறுகிறார். இதுவும் வியாசரில் இல்லை.

சுவடியின் மூன்றாவது விருத்தத்தில், கட்டுப்பாட் டிற்குரிய செயல்கள் யாவற்றையும் விட்டவர்களே யோகிகள் எனக் கூறப்பெற்றுள்ளது. இதுவே வியாசரின் இவ்வத்தியாயத்தின் இரண்டாவது சுலோகத்தில் கட்டுப்பாடுகளைத் துறக்காத எவனும் யோகியாக மாட்டான் எனக் கூறப்பெற்றுள்ளது.

சுவடியின் நான்காவது விருத்தம், மெய்யான யோக நிலையை அடைந்தவர்கள் தீமையை வென்றவர்கள் என்கிறது. இக்கருத்து வியாசரால் தமது மூன்றாவது சுலோகத்தில் யோகிக்குச் சாந்தமே கருவியாகிறதெனக் கூறப்பெறுகிறது. துன்பத்தை வென்றவன் தான் சாந்தியடைய முடியும். எனவே இருவரின் கருத்துக்களும் ஒன்றேயாக உள்ளன.

விருத்தம் ஐந்து:- தன்னைத் தானே மேன்மைப் படுத்திக் கொள்ளவேண்டும். கீழ்மைப்படுத்திக் கொள்ளக் கூடாது. தனக்குத் தானே பகைவனும் நண்பனும் ஆவான் என்கிறது. இது வியாசரின் ஐந்தாவது சுலோகத்தில் இவ்வாறே உள்ளது.

உள்ளத்தை அடக்கியவன் தமக்குத் தாமே நண்பனாவான் எனவும் அவ்வாறு அடக்க இயலாதவன் தனக்குத் தானே பகைவன் ஆகிறான் எனவும் தெளிவு படுத்துகிறது. துறவை ஏற்ற ஞானிகளின் ஞானத்தை மாயையினால் மறைக்க இயலாது எனவும் ஆறாவது விருத்தம் கூறுகிறது.

இச்செய்தி வியாசரால் கூறப்படாதது. சுவடியின் ஏழாவது விருத்தத்தில், யோகிக்கு மண் ஓடும் பொற் கட்டியும் ஒன்றே என்று கூறப்படும் செய்தி வியாசரின் எட்டாவது சுலோகத்தில மாற்றமினறிக் கூறப் பெற்றுள்ளது.

ஐம்பொறிகளின மூலம் கிடைக்கக் கூடிய கீழ்த்தர மான சுகத்தைத துறந்து, காம மயக்கத்திலிருந்து நீங்கி, தனிமையில் யோக நிலையில் நின்றவனே யோகி என வரையறுத்து எட்டாவது சுவடி விருத்தம் தெரிவிக்கிறது.

புலன்களை வென்று வசப்படுத்தியவனே யோகி என வியாசரின் எட்டாவது சுலோகத்திலும் மறைவான இடத்தில் தனியாக இருக்க வேண்டும் என பத்தாவது சுலோகத்திலும் வியாசரால் கூறப்பெற்றுள்ளது.

சுவடி விருத்தம் ஒன்பது:- இதில் ஒரு யோகி என்பவன் எவ்வாறெல்லாம் இருக்கவேண்டும் எனக் கூறப்பெறுகிறது. கைம்மாறு கருதாச் செயல், நண்பர் களின் நட்பு, பகைவரிடத்தும் பரிவு, சொல்லும் செயலும்

ஒன்றேயாதல், தீய பழக்கம் எதுவும் இல்லாமை, எல்லோராலும் விரும்பப்படுதல், ஈடு இணையற்ற மனிதன் ஆகியவை யோகியின் தகுதிகள் எனப்பெறுகிறது. இது வியாசரின் ஒன்பதாவது சுலோகத்தில் உள்ளதுதான். சுவடி விருத்தம் பத்திலும் இதன் தொடர்ச்சியாக, ஆசையை நீக்கி, தனக்கென எதுவும் செய்து கொள்ளாத வனாக இருக்க வேண்டும் எனவும் கூறப்பெற்றுள்ளது. இதுவேதான் வியாசரின் பத்தாவது சுலோகத்திலும் கூறப்பெற்றுள்ளது.

யோகியின் இருக்கை மற்றும் படுக்கை பற்றி- தர்ப்பைப் புல்லின் மேல் அல்லது பெண் மானின் தோலை விரித்து அதன்மேல் துணியை விரித்துப் படுக்கவேண்டும். மண் தரையில் படுக்கக் கூடாது. எனறெல்லாம் விதிகள் கூறப்பெறுகின்றன. இதுதான் வியாசரின் பதினோராம் சுலோகத்திலும் உள்ளது.

பன்னிரண்டாவது விருத்தத்தில், சுவடி ஆசிரியர் யோகியின் யோகாசன நிலையைப பற்றிக் கூறுகிறார். பார்வையை மூக்கின் நுனியில் நிலை நிறுத்த வேண்டும் என்கிறார். உடல் தளர்ச்சி இல்லாமல் இருக்க வேண்டும். தூக்கம் போல இருந்தாலும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் கூறுகிறார். வியாசர் கூட தமது பதிமூன்றாவது சுலோகத்தில் பார்வை மூக்கு நுனியில் தான் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

சுவடியின் பதின்மூன்றாவது விருத்தம், உண்பதில் அதிகமாகவோ குறைவாகவோ உண்ணக்கூடாது எனவும், தூக்கம், விழித்திருத்தல் ஆகியவை கூட அளவோடு இருக்க வேண்டும் என்றெல்லாம் கூறுகிறது. தூங்குவது

பற்றியும், விழித்திருப்பது பற்றியும் வியாசர் தமது பதினாறாவது சுலோகத்தில் குறிப்பிடுகிறார். அளவான உணவு உண்ண வேண்டும் எனவும், இதே சுலோகத்தில் கூறியுள்ளார்.

சுவடி விருத்தம் பதினான்கு:- அறிவு தன்பால் அடங்கும் போதுதான் யோக நிலை கூடிவரும் என்கிறது. உறக்கத்திலும், விழிப்பிலும், ஒழுங்குப்பட்டவனாக இருப்பானாயின் அவனுக்கே துயரத்தை அழிக்கும் யோகம் கைவரப்பெறும் என்கிறார், தமது பதினேழாவது சுலோகத்தில் வியாசர்.

காற்றில்லாத இடத்தில் அசைவற்று எரியும் விளக்கு யோகியின் நிலையான தியான நிலைக்கு எடுத்துக் காட்டாக சுவடியின் பதினைந்தாவது விருத்தத்தில் கூறப்பெற்றுள்ளது. இதேத உவமைதான் வியாசராலும் தமது பத்தொன்பதாவது சுலோகத்தில் கூறப்பெற்றுள்ளது. சுவடியின் 16, 17 ஆகிய விருத்தங்களில், யோகநிலையை அடைந்தவர்கள், புலன்களால் அறியப்படாத இன்பத்தை அடைகிறார்கள். இதனினும் பெரிதாக வேறு எதையும் கருதமாட்டார்கள். வேலால் மார்பைப் பிளந்தாலும், நெருப்பிலிட்டாலும், பாம்பை விட்டுக் கடிக்கச் செய்தாலும் பயப்படமாட்டார்கள் எனக் கூறப்பெற்றுள்ளது. இவையெல்லாம் வியாசரால் இவ்வளவு விரிவாகக் கூறப்பெறவில்லை என்றாலும் இருபத்தி ஒன்றாம் சுலோகத்தில் புத்தி, புலன்களால் உணரப்பட இயலாத இன்பத்தை யோகி அடைகிறான் எனவும், இருபத்திரெண்டாவது சுலோகத்தில் யோகத்தைக் காட்டிலும் பெரிய லாபம் ஏதும் இல்லை எனவும், இருபத்து ஐந்தாவது சுலோகத்தில் கவலையின்றி ஆறுதல் பெற்றிருப்பான் எனவும் கூறப்பெற்றுள்ளதைக் காணலாம்.

சுவடியில் 18, 19வது விருத்தங்களில் மனதை ஒரே நிலையில் நிறுத்தவேண்டும் எனவும், எவறேனும் இந்த யோகநிலை தீங்கு தருவது எனக்கூறினால் அதனை ஏற்றுக் கொள்ளாது சிறப்பாகப் பயிலவேண்டும் எனவும், யோகிக்குக் கூறப்பெறுகிறது. வியாசர் தமது 26வது சுலோகத்தில் மனதைச் சஞ்சலமடையவிடக் கூடாது, அதனைக் கட்டுப்படுத்தி ஆத்மாவிற்கு வசமாக்கிக் கொள்ளவேண்டும் என்று கூறியுள்ளார்.

விருத்தம் 20, மன உறுதியோடு கூட உடலும் உறுதியாக இருக்கவேண்டும் என்று யோகிக்கு கூறப்பெறுகிறது. உடலும் உறுதியாக இருக்க வேண்டும் என வியாசர் குறிப்பிடவில்லை.

சுவடியின் இருபத்தொன்றாவது விருத்தம், யோகியானவன், எல்லா உயிர்களிடத்தும் தானே இருப்பதாகவும், எல்லாவுயிர்களும் தன்னுள்ளே இருப்பதாகவும் உணரவேண்டும் என்கிறது. வியாசர் இதனைத் தனது இருபத்தொன்பதாவது சுலோகத்தில் கூறியுள்ளார்.

சுவடியின் இருபத்திரெண்டாவது விருத்தம், கண்ணன், எவன் எங்கும் என்னைக் காண்கிறானோ, என்னிடத்தில் எல்லாப் பொருள்களையும் காண்கிறானோ, அவனே யோகி என்கிறான். மேலும் அவன் எதைச் செய்த போதும் அதில் நானே இருக்கின்றேன் எனவும் இதில் சந்தேகப்படக் கூடாது எனவும், அப்படிப் பட்டவனே முழுமையான ஞானத்தைப் பெற்றவன் எனவும் கூறுகிறது.

துன்பத்தையும், இன்பத்தையும் எனக்கே ஆகட்டும், ஒளிமிக்க வேலை வீசிபோரிடத் தொடங்கு எனக் கண்ணன் அருச்சுனனிடம் கூறுவதாக வருவது சுவடியின்

இருபத்து மூன்றாவது விருத்தம். ஆனால் வியாசர் இந்த அத்தியாயத்தில் கண்ணனால் கூறப்படுவதாக வரும் செய்திகள் மேலும் அதிகமாக உள்ளதால் இன்னும் போரைத் தொடங்கு எனக்கூறவில்லை. இருபத்து நான்காவது விருத்தத்தில், போரிடத் தொடங்கும்படி கூறிய கண்ணனிடம் அர்ச்சுனன் மல்லார் தோளா! என விளித்து, எல்லா உயிர்களையும் சமமாகப் பார்க்க வேண்டும் என்று நீ சொன்னதை என்னால் அறிய இயலவில்லை. மனம் இயற்கையில் அலைபாயும் தன்மை உடையது. அதுவே புலன்களைத் தாக்கி தவறான செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. ஆகையால் அதனை நிலைநிறுத்த இயலாது எனவும், ஆனால் மூச்சுக் காற்றை வசப்படுத்துவதால் அது இயலும் என உணர்கிறேன் எனக் கூறுகிறான். இது வியாசரில் இல்லாதது.

ஐம்புலன்களையும், மனதையும் அடக்குவது, அரிய செயல்தான். ஆனால் யோகத்தை முயற்சியுடன் செய்பவனுக்கு அது இயலக்கூடியதெனக் கண்ணன் கூறுவதாக இருபத்தைந்தாவது விருத்தத்தில் உள்ளது. இச்செய்தி வியாசரின் இருபத்தாறாவது சுலோகத்தில் சஞ்சலமான மனத்தைக் கட்டுப்படுத்தி அதனை ஆத்மாவுக்கு வசமாக்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில் மனம் சாந்தமாக, மாசுநீங்கி, ரஜோகுணம் ஆறியவனே பிர்மயோகி, அவனுக்கு மிகச்சிறந்த இன்பம் கிடைக்கிறது எனக் கூறப்பெற்றுள்ளது.

சுவடி விருத்தம் 26ல் மனம் கட்டுப்படுத்தப் படுவதற்கு அரியதுதான். பதினான்கையும் கடந்தவர் களுக்கு யோகநிலை சித்திக்கும் எனப்பெற்றுள்ளது. இச்செய்தி முன்பே இருபத்தாறாவது வியாசரின் சுலோகம் தெரிவிக்கும் செய்திதான்.

விருத்தம்-27. கண்ணன் இவ்வாறு கூறியபின், அர்ச்சனன், யோகத்தில் நீண்ட காலம் வரை பயிற்சி

செய்தும் பலன் இன்றி உயிர் நீத்தவர்களின் நிலை என்னவென்று கேட்கிறான், மேலும் அப்படி இடையில் உயிர்நீத்தவன், உடைந்து கரைந்து போகும் மேகத்தைப் போல அழிகிறானா வெனவும் கேட்கிறான். இது இருபத்தி எட்டாவது சுவடி விருத்தத்தில் உள்ளது. இதே செய்தி வியாசரின் முப்பத்து ஏழாவது சுலோகத்திலும் அடுத்து முப்பத்து எட்டாவது சுலோகத்தில் உள்ளது. மேலும் முப்பத்து ஒன்பதாவது சுலோகத்தில் அருச்சுன னிடம், அவ்வாறு யோகத்தில் தவறியவன் புண்ணியம் செய்தவர்களின் உலகத்தில் பல காலம் வாழ்ந்து பின்னர் செல்வந்தர்களின் வீட்டில் பிறக்கிறான் எனவும், வியாசர் தொடர்ந்து தமது நாற்பதாவது சுலோகத்தில் ஆன்மீக மேம்பாட்டிற்காக பாடுபட்டவன் எவனும் கெட்ட கதியை அடைவதில்லை என்கிறார். மேலும் அப்படிப் பட்ட யோகிகள் முழுமையடையாதவர்களானாலும் கூட, அவன் தனது அடுத்த பிறவியில் புத்திமான்களாகிய யோகிகளின் குலத்திலே பிறப்பான். இதில் சந்தேகமே இல்லை. பூர்வ ஜென்மத்தின் புத்தியைப் பெற்று மறுபடியும் முயற்சியில் ஈடுபடுவான். இவ்வாறு அவன் பல பிறவியில் முயற்சி செய்ததன் பலனாக வேதம் எனும் ஒலி உலகத்தைக் கடந்து, பாவங்கள் நீங்கியவனாய் வெற்றி பெற்று பரகதியை அடைகிறான் என்பது வரை கண்ணனின் வாய்மொழியாக வியாசர் தமது 40, 41, 42, 43, 44, 45 ஆகிய சுலோகங்களில் கூறியுள்ளார்.

மேற்கண்ட கருத்துக்கள் அடங்கிய விருத்தங்கள் சுவடியில், அருச்சுனன், என் மனத்தில் தோன்றிய இந்த சந்தேகத்தை உன்னையன்றி வேறு யாராலும் தீர்த்து வைக்க இயலாது எனக் கேட்க அதற்குக் கண்ணன் கூறும் மறுமொழியாக 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36 ஆகியவைகளாக உள்ளன.

இவ்வத்தியாயத்தின் நிறைவு விருத்தமான முப்பத்து ஏழாவதில், இருவகை வினைகளை நீக்கியவர்கள் இதனை இகழமாட்டார்கள் என்றாலும் குற்றமற்ற மனத்தினனாய் என்பால் அன்பை வைக்கும் ஒருவனே என்னால் விரும்பப்படுகிறான் என்று, அருவும், (உருவமில்லாதவன்) உருவும் ஆகி நின்றவன் என உலகோரால் அறியப்பெற்ற கண்ணன் கூறுவதாகச் சொல்லி நிறைவு செய்கிறார்.

இவ்வத்தியாயத்தின் நிறைவில் 46, 47 ஆகிய சுலோகங்களில் எவன் ஒருவன் சிரத்தையுடன், என்னிடம் ஈடுபாடு கொண்ட உள்ளத்துடன் என்னைப் போற்று கின்றானோ அவனே மற்ற எல்லா யோகிகளையும் விட மேலானவன் என்பது எனது கொள்கை எனக் கண்ணன் கூறுவதாக வியாசர் கூறியுள்ளார்.

அக்னி காரியங்களைத் துறப்பவனும், செயல்களைத் துறப்பவனும் யோகியாகமாட்டான். சந்நியாசம் என்பதே யோகம், சீதோஷ்ணம், மழை, வெய்யில், குளிர், மானாபி மானங்கள், ஆகியவற்றில் சமநிலைப்பட்டவனிடத்தில் பரமாத்மா நிலைத்து நிற்கிறான்.

உள்ளமானது ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் திருப்தியாக இருக்கவேண்டும். ஞானம் என்பது கடவுள் இயல். விஞ்ஞானம் என்பது உலகவியல். யோகநிலையில் இருப்பவன், தனியான இடத்தில் மட்டுமல்லாது மறைவான இடத்திலும் இருக்கவேண்டும். ஆத்மாவினால் ஆத்மாவை அறிந்து ஆத்மாவில் மகிழ்ச்சி அடைய வேண்டும். ஆத்மாவில் கலப்புற்று இருப்பவன் பிர்மத்தைத் தொட்டு இன்பமடைகிறான். எல்லா உயிர்களிடத்தும் இறைவன் இருப்பதாகத் தொழவேண்டும். யோகிகள் இறைவன் உள்ளத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கி றார்கள். தவம் செய்வேரை விடவும், கர்மாவில் ஈடுபட்டவனை விடவும் யோகியே மேலானவன், ஆகிய செய்திகள் சுவடியின் விருத்தங்களில் கொடுக்கப் பெற்றுள்ள செய்திகளைவிட கூடுதலாக வியாசரால் இந்த அத்தியாயத்தில் சொல்லப்பெற்றள்ளவைகளாகும்.

ஏழாவது மாயாரூப வத்தியாயம்

அறுசீரடி யாசிரிய விருத்தம்

உய்ய வன்பினோடு மென்னையே யடையும் யோகமே
பயிலும் யோகிதா
னைய மின்றி யெனையே யடைந்திடும்
தய்ய மின்றி நீயு மறிவா யென
வைய்ய முண்டு மறைநீர்மை யுண்டிடையாத ருணடிட
மலர்ந்திடுஞ்
செய்யதண் பவள வாய் திறந்து திருமாது கேழ்வ னிவை
செப்புவான். 1

அய்யா! உய்வதற்கான அன்பினோடு, யோகத்தைப் பயிலும் யோகிகள், என்னையே அடைவார்கள். இதனைச் சந்தேகமின்றி அறிவாயாக என்று உலகத்தை உண்டவனும், வேத குணங்களை உட்கொண்டவனும், இடையர்குலப் பெண்களால் கற்பனை செய்து பார்க்க இயலாத சிவந்த, குளிர்ந்த, தன்பவளவாய் திறந்து இலக்குமியின் கணவனாகிய கண்ணன் கூறினான்.

வையம்-உலகம்; மறை-வேதம்; நீர்மை-உயர்வு, இடையாத ருண்டிட-இடையர் யாதவர். உண்ண இயலாத-உண்ண-நினைக்க, செய்ய-சிவந்த, தண்-குளிர்ந்த, பவளவாய்-பவளம் போன்று சிவந்த வாய்-பவளவாய்க் கமலச் செங்கண்-திருமாது-இலக்குமி; கேழ்வன்- கணவன்.

மாயுமாயை மறையாத நெஞ்சினிடை மற்றென்மை
யினுவாய் மையா
லேயு மாற்றிவ றிந்துளோர்களறியாத தொன்று மில்லை
யென்னினு

மாயு மானிடரனேகர் பாலொருவ னென்னை
யாயு மனம் வைத்துள னாயுமா துடரனேகர் பாலொருவனே
யறிந்து முடிவானய்யா! 2

அழியும் தன்மையையுடைய மாயையினால், மறையாத மனத்திடையே, என்னுடைய உண்மையான ஞானத்திலே இசையும்படி இருக்கிறவர்கள் அறியாதது ஒன்றும் இல்லை. என்றாலும் நாசமாகி அழியும் மானிடர் அனேகர் உண்டு. அவர்களில் ஒருவரே என்னையறிந்து, கவலையை ஒழிப்பார்கள். அவ்வாறின்றி எல்லோரும் என்னையறிந்து கொள்ளமாட்டார்கள். ஒரு சிலரே என்னை அறிந்துகொள்வார்கள்.

அறுசீரடி யாசிரிய விருத்தம்

மண்ணு நீரு மெரிதீயும் வாயுவு வவ்வானி னொடு
மன்புந்தியு
மெண்ணு நீர்மைகளில் யானெனும் பதமுமென்னு
மெட்டுமிவை யென்றறியே
பண்ணு நீர்மைகளில் மேலதாயுலகில் யாவையுங் கொடு
பாத்துடற்
கண்ணு நீடொழியு மாகி யென்னுடைய மாய்கை நிற்பது
கைவேலினோய் ! 3

கையிலே வேலையுடைய அர்ச்சுனா! மண் (பூமி), நீர், எரியும் தீ, வாயு, வான், மனம், புத்தி என்னும் உயர்வானவைகளோடு யான் என்கிற அகங்காரமும் சேர்ந்து எட்டு என்பதை அறிவாயாக. இவை எட்டும் உண்டாகிற காரணத்தால் ஆன உலகம் இது. இவைகள் எல்லாம் இல்லாமல் என்னுடைய மாயையே மேலோங்கி நிற்கிறது என்பதை அறிவாயாக.

புந்தி-புத்தி; கண்ணும்-அழியும்; நீடொழி-எங்கும் நிறைந்திருப்பது.

கண்ணினின் தெரியலுற் றுணர்ந்த விவ் விரண்டி னாலும்
வரு காரியம்
பண்ண நிற்பன நடப்ப வென்ற பொருள் யாவு மற்ற விருப்
பாண்மையே!
நண்ணி நிற்ப துலகாதலா லுலகினாசவுற்ப் பவமும் நானலா
தெண்ணில் மற்றறிவதில்லை யெப் பொருளு மென்னிய
வன்னிய மதில்லையால். 4

கண்களால் தெரியும்படி, அறிந்துகொள்ளவும், உணர்த்தவும் இந்த இரண்டினாலும், செய்யப்பெற்று நிற்பவை, நிற்பன, நடப்பன என்ற எல்லாமே இவ்வுலகம் பெற்றிருக்கின்றன. இந்த எல்லா சுபாவங்களும் என்னையே பெற்று நிற்கின்றது. உலகில் மரணமும் பிறப்பும், என்னைத் தவிர மற்ற யாரும் அறிவதில்லை. வேறு எவரும் இல்லை இதனை யாரும் அறிவதும் இல்லை. மெய்ப்பொருளாகிய பரப்பிர்மமே நான்தான். இதற்கும் மேலானது வேறு இல்லை.

நண்ணி-விரும்பி; சவ-சாவு-இறப்பு; வுற்ப்பவம்-உற்பவம்-உற்பத்தி-பிறப்பு; நானலா-நான் அலலாது, மெய்ப்பொருள்-பரப்பிர்மம்.

வேதமாகி நிகழ் யானலாதுலகி லென்னில் வேறென
விழங்கிடும்
பூதமானவை பொறுக்க வேறு பொறை யாழ ரில்லை
யேது பொலினி லோது மாமணிய னேக மூடுறவு கோவை
நூலிலொரு பான்மை பொற
பேதமான பொருடோறும் நான் மருவி நின்றவாறு தனி
பேசுவாம். 5

வேதமே நானாகி விளங்குகின்றேன். வேறு எனக் கூறப்படுகின்ற, பஞ்ச பூதங்களைத் தாங்கக் கூடியவர்கள்

என்னையல்லாது வேறு எவருமில்லை. அது எப்படி என்றால், உயர்தரமான ரத்தின மணிகள் ஒரு நூலில் கோர்க்கப்படுவது போலவாகும். வேறுபாடுகள் நிறைந்த பொருட்கள் அனைத்திலும் நானே கலந்து நிற்கின்றபடியால் இவ்வாறு சிறப்பித்துக் கூறுவார்கள்.

விழுங்கிடும்-விளங்கிடும்; யாழ-யாள, பொறையாழர்-பொறுத்துக் கொள்பவர். மாமணி-உயர் ரக ரத்தினங்கள்-கோவை-கோர்த்திருத்தல்; பேதமான-வேறுபட்ட, மருவி-மறைந்து-கலந்து.

கொச்சகக் கலிப்பா

திரியு மிருக திரினிடை திகழொளி நான் றிமறையின்
னரியும் முதலெழுத்து நா னாடவர் பாலாண் மையு நான்
விரி புனலிற் சுவையு நான் மேதினியில் வாசமு நா
னெரியில் வருவெம்மையுநா னாகாயத்தெழு மொலிநான்.6

ஆகாயத்தில் வலம் வரக்கூடிய இரண்டு கதிர் களாகிய சூரியன், சந்திரன் ஆகியவற்றில் விளங்கும் ஒளி நான். உயர்வான வேதத்தின் முதல் எழுத்தாக அறியப் படும் ஓம் எனும் முதல் எழுத்தும் நான். ஆண்களிடத்தில் ஆண்மையும் நானே! பரந்து கிடக்கும் நீரின் சுவையும் நானே! பூவுலக மண்ணின் வாசனையும் நான். எரியும் நெருப்பில் உள்ள சூடு, உஷ்ணம், நான். ஆகாயத்தில் எழக்கூடிய ஓசையும் நானே!

திரியு மிரு கதிரி னிடை-வலம் வரக்கூடிய இரண்டு கதிர்களாகிய சூரியன் சந்திரனிடையே! திகழொளி-திகழ்+ஒளி-திகழொளி; முதல் எழுத்து-ஓம்; விரிபுனல்-பரந்து கிடக்கும் நீர் நிலைகள். மேதினி-பூவுலகம்; ளரி-எரியும். வெம்மை-சூடு; ஆகாயத் தெழு மொலி-வானோசை.

ஆன்ற வரிவுயோர் பாலறிவுநா னடங்கினர்பால்
வான்றவ னான வளமின்மை பூண்டார் பாலவண் புகனான்
தோன்றல் மிகு திறலோர் பாற் காமமுறாத தொழுவிலி நா
னூன்று பொரு ளனைத் தினுக்கு முயிராகி யுள்ளோனான். 7

உயர்வான அறிவுடையோர்களிடையே அறிவு நான். புலன்களை அடக்கி அடங்கிய தவசிகளின் மேலானவன் நான். வளமேது மில்லாதவர்களுக்கான வண்புகழும் நான். மிகுந்த வலிமை படைத்த பலசாலிகள் விரும்பும் பலமும் வீரமும் நான். உலகில் உள்ள உயிரினங்கள் அனைத் துள்ளும் உயிராகி நிற்பவனும் நானே !

அடங்கினார்-புலன்களின் வேகம் தணிந்து அடங்கியவர். வளமின்மை-பொருள்-மற்றும் அறிவு வளம் இல்லாமை. பூண்டார்-அடைந்தவர்; வண்புகழ்-இகழ்ச்சி; மிகுதிறலோர்- மிகுதியான வலிமை படைத்தவர்கள். வலி-வலிமை.

மூன்று குண மவையாகி முடிகின்ற பொருள் முழுதுந்
தோன்றுவது மென்னிடையே யெனைத் துடர்ந்தே நிற்பதுவு
மான்றவற்ற வற்றினிடை யான் றோன்றேன் அவற்றினுக்குச்
சான்றென நிற்குவனல்லா லவை சார்ந்து வாழேனான். 8

மூன்று குணங்களின் வேறுபாடுகளால் உண்டாகி அழிகின்ற பொருள்கள் எல்லாமும் என்னிடத்திலேதான் தோன்றுகின்றன. அவைகள் யாவும் என்னைச் சார்ந்தே வாழுகின்றன. ஆனால் அவைகளிடத்தில் நான் காணப் படுவதில்லை. அவைகள் எல்லாம் இருப்பதற்கு சாட்சி யாகவே நான் இருக்கிறேனேயல்லாது அவைகளை நான் சார்ந்து இருப்பதில்லை.

மூன்று குணம்-சத்துவ, ரஜோ, தமோ குணங்கள். முடிகின்ற-அழிகின்ற, துடர்ந்து-தொடர்ந்து, சார்புடையனவாக; சான்று-சாட்சி, அடையாளம், வாழேனான்-நான் வாழமாட்டேன்.

மைக் குணங்களேனு மிவற்றின் மயமாயம் மனத்துவமா
யக்குணங்கள் மூன்றாலு மயக்கப்பட்டறி வழிந்துன்
தொக் கிணங்குகின்ற வுயிரிவை யெல்லாஞ் சுடர்வே
லொய்க் குணங்கள் கடந்த வெனை யறியுமே வறியாவால்.9

பிரகாசமாக ஒளி வீசக்கூடிய வேலினையுடைய அருச்சுனா! மூன்று குணங்களிலும், அஞ்ஞானமெனும் அறிவற்ற நிலையில், மனமாயையில் சிக்குண்டவர்கள் முற்றிலும் அம்மயக்கத்தால் அழிவுற்றவர்கள் ஆகிய உயிரினங்கள் எல்லாம், மூன்று குணங்களையும் கடந்து குணாதீதனாகிய என்னை அறியமாட்டார்கள்.

மைக்குணம்-சீர்கெட்ட மூன்று குணங்கள். அறவழிந்து- முற்றிலு மாக அழிநது. குணங்கள் கடந்த-மூன்று குண தோஷங்களைக் கடந்து குணாதீதன் எனப்பெற்ற.

இவ்வகை குணமூன்றினியற்கை தாமாராலுஞ்
செய்வகை யதல்லாவென் மாயையினிற் றிகைப் பொழிந்திங்
குய்வகையரி தெவர்க்கு மென்னையே யெப்பொழுது
மெய்வகை யேடைகின்ற மனமிலரேல் வேல்வேந்தே ! 10

இவவகையான மூன்று குணங்களின் இயற்கைத் தன்மையைத் தவிர்க்க எவராலும் இயலாது. இந்த மாயையினால் ஏற்படக்கூடிய திகைப்பை நீக்கி பிறவிப் பயனை அடையவேண்டுமானால், உண்மையான முறையாகிய யோக நெறியில் நின்று என்னையே எப்பொழுதும் சரணமென்று நினைக்கின்ற மனம் உடையவர்களாலேயே இயலும் இதனை அறிவாயாக! சுடர்மிகு வேலினை ஏந்திய அரசனே !

திகைப்பு-மயக்கம்; உய்வகை-பிறவிப்பயன் அடையும் வகை; மெய்வகை-உண்மையான நெறி-யோக நெறி.

ஊழா லெவருமிந்த மாயையினாலே யுள்ளம்
பாழாக வறி விங்கே பறியுண்டு நெறி நின்றோர்
வீழாத தீவினையே வினையாக விழைகின்றார்
கீழா னோர் எனை யடையா ரடைவாருஞ் சிலருளர் கேள். 11

விதியின் காரணமாக, எவரும் இந்த மாயை யினாலே, மனம் சீரழிந்து, அறிவிழந்து, தீயசெயல் களையே என்றும் செய்வதற்கு ஏற்ற வினையாக விரும்பி செய்கின்றார்கள். அப்படிப்பட்ட கீழானவர் எவரும் என்னை வந்து அடையமாட்டார்கள். இவர்கள் இவ்வாறு இருக்க, என்னை வந்து அடைபவர்களும் சிலர் உண்டு. அவர்கள் யாவர் எனச்சொல்கிறேன் கேள் !

ஊழ்-விதி-முற்பிறவியின் பலன். மாழாக-பாழாக-நாசமாக; பறியுண்டு-பறிக்கப்பெற்று; கீழானோர்-தீச்செயல்களை விரும்பிச் செய்பவர்கள்.

செல்வம் விரும்பினர் செல்வ மடைந்தோ
ரல்லல் கெடுத்தெனை யன்பு செய்வோர்க
ணல்ல தறிந்த மெய்ஞ்ஞானியினால் வரும்
வல்லதில் லென்னை வணங்கு தவத்தோர். 12

பரப்பிர்மத்தை அடைய அதனை நோக்கிச் செல்ல விரும்பி தவத்தை மேற்கொண்டவர்கள் மாயையினால் வரும் துன்பங்களை யெல்லாம் கடந்து என் பேரில் அன்பு கொண்டவர்கள், நல்லது இதுவே என அறிந்த மெய்ஞ் ஞானிகள், அந்த ஞானத்தால் வெற்றிபெற்று என்னையே வணங்குபவர்கள் என இந்நால்வரும் .....

செல்வம் விரும்பினர்-உயர்ந்த செல்வமாகிய பரப்பிர்மத்தை அடைதல்; அல்லல் கெடுத்து-துன்பங்களை வென்றவர்கள்; வல்லதில்-மேலான தாயுள்ளதான அவற்றில்.

இன்னவர் தங்களி லென்னோடும் வேறா
யுன்ன விலாமையில் ஞானி யுயர்ந்தோ
னன்னவ னல்லனெனக் கவனுக்கே
நன்னலம் வைப்பது நானு நலத்தோய் ! 13

நலம் சேர் அருச்சுனா! இந்த நான்கு பேர்களில் தான் வேறு நான் வேறு என எண்ணாத இருவரும் ஒன்றே என எண்ணும் ஞானிகளே மேலானவர்கள். அவர்களே எனக்கு நல்லவர்கள். இனியவர்கள். அவர்களுக்கு நானே இனியவன். அவர்களுக்கு நான் எல்லா நன்மைகளையும் செய்கிறேன். இது மற்றவர்க்கில்லை.

இன்னவர்-இப்படிப்பட்டவர்கள்; உன்ன-நினைக்க; விலாமை-இயலாமை; யுயர்ந்தோன்+அன்னவன்+நல்லன் எனக்கு+அவனுக்கே நன்னலம்-நல்ல நன்மைகள்.

ஓதரு ஞானி என்னுன்மை யினுள்ளே
யோதலி னுலவனானென ல்லேயா
மாதலினா லவனே சிலவாய்
காதலினா யபயன்களி லெய்தான். 14

சொல்வதற்கு அரிய, ஞானியானவன்,என்னுடைய உண்மையினுள்ளே, சொல்லும்படியாகக் கூடியவன் ஆகையால், அவனையே நான் என சொல்லலாம் ஆகையினால், அவனே மிகக் குறைவான ஆசையி னாலேயே பயனை அடைந்து விடுகிறான். மிக விரைவாக-எனவும் பொருள் கொள்க.

ஓதரு-சொல்வதற்கரிய யோதலின்-ஓதலின், உலவனானென-உள்ளவன் நான் என; சிலவாய்-குறைவாக; விரைவாக; காதலினாய்-விருப்பத்தினால்.

விரியவுணர்ந்த விளுப் பொருளெல்லா
முரியனன்றி யிலாத வொழுக்கந்
தெரிய வந்தெனையே செறிகிற்ப
னரியவ்வன் பெறுதற் கையில் வேலோய் ! 15

விவரமாக விரிவாக உணர்ந்து கொள்ள உரியவன் என்னையன்றி வேறெவரும் இல்லை எனவே இவ்வாறு என்னை அறிந்துகொண்டு என்னையே வந்தடை கின்றவன் மிக அரியவன். இப்படிப்பட்டவன் கிடைப்பதே அரிது! கைகளில் வேலையுடைய அர்ச்சுனா!

விரிய-விவரமாக, விரிவாக; விளுப்பொருள-விழுப்பொருள்-மேன்மையான பொருள். செறிகீ-அருகில்; னரியவன்-அரிதானவன்.

மற்றவரும் தம் மனங்களில் வைத்த
பற்றதிலே பரியுண்டறி லெல்லா
முற்றவை தந்திடு தெய்வ தொழுக்கா
னற்றவ நின்றவை நண்ணுவர் நல்லோய். 15

மற்றவர்கள, தங்கள் மனத்தில் வைத்த ஆசையின் காரணமாக, ஞானத்தை எல்லாம் பறிகொடுத்துவிட்டு, வேறு வேறு தெய்வங்களை, அவைகளுக்குரிய வழியிலே நின்று வணங்கி, அந்தந்த தெய்வங்களின் மூலமாகவே தான் வேண்டியவற்றை அடைகிறார்கள்.! நல்லவனே !

மற்றவர்-என்னையே எல்லாவற்றிலம் மேலானவன் என்று அறியாதவர்கள். பரியுண்டு-பறிகொடுத்து; உற்றவை-வேண்டியவற்றை; நின்று-வழிபட்டு; நண்ணுவர்-அடைகிறார்கள்.

யாவ னொருத்தன் யாதொரு தெய்வ
மேவ வருச்சினை யன்பில் விளைப்பா
னவெ சலிப்பது மன்ப வனுக்கே
யாபல முற்ற தழித்திடு வேனான். 17

எவனாவது ஒருவன், ஏதாவது ஒரு தெய்வத்தின் பேரில் நம்பிக்கையும், அன்பும் வைத்து, அருச்சனை செய்து, வழிபட்டானாயின், அவன் வேண்டுவதை, அவனால் வேண்டப்பெற்ற தெய்வமும் ஆகி, யாவற்றையும் அளிப்பதும் நானே !

மேவ-விரும்பி; அருச்சினை-அருச்சித்தல்; வழிபடுதல்; சலிப்பது-வேண்டுவது. அழித்திவேனான்-அளித்திடுவேன்-நான்.

அளித்த னனன்பொடு மத்த தெய்வ நாளுங்
களித்து வணங்கினர் காதல வெல்லாம்
வெளிப்பட முற்ற வளித்திடு வேனா
னொளிப் பரிதா முரு மஞ்ச வுடன்றோய் ! 18

ஒளிப்பதற்கு இயலாதபடி, மற்றவர்கள் பயப்படும் படியாக போரிடும் அருச்சுனா! மனக்களிப்புடன் கூட மற்ற தெய்வங்களை அன்போடு வணங்கியவர்களுக்கு, அவர்களால் வேண்டப்பட்டதை எல்லாம், மன மகிழ்வுடன் நானே கொடுக்கினறேன்.

அளித்தனனன் பொடு-அளித்தனன்+அன்போடு; களித்து-மன மகிழ்வுடன்; காதலவெல்லாம்-விரும்பியவற்றை எல்லாம். வெளிப்பட-மறைக்காமல்; முற்ற-முழுவதுமாக. உடன்றோய்-சண்டையிட்டவனே. வொளிப்பரிதா-ஒளிப்பரிதா-மறைக்க முடியாதபடி.

சிந்தையினி தெய்வ மெய்த தெய்வ மென்றே
முந்த வருச்சினை செய்து முடிக்கு
மந்தை மனத்தர் பெறும் பயன் வானா
ளந்த முடைத்த தனித்த முமையா ! 19

அந்த தெய்வமே வழிபடுவதற்கு ஏற்ற தெய்வம் என்று கருதி, முயன்று வழிபட்டு பயனைப்பெறக் கூடிய மூட மதியினர் பெறக்கூடிய பலன்கள் நீண்ட நாட்கள் நிலைத்து நிற்பதில்லை. அனித்யமானது அற்பமானது ஐயா!

முந்த-முயன்று; மந்தை மனத்தன்-அறிவில்லாத மூடர்கள்; வானாள்-வாழ்நாள்; அந்த முடைத்த-அழியக்கூடியது; அனித்தமும்-அநித்யமும். மிகக் குறைவான நாட்களே இருப்பது நித்யம்.

வேறு

தானந்த மிலி யுவமை தான் நின்று தாவரிய
வானந்த வுருவமென யெனை யொன்று மறிவதிலா
கோனந்தன் மகனரசா குல மைந்தனிவ மேழி
லானந்தமிலி யாருவ னென்பர றிவிலிகள். 20

ஆதி அந்தம் இல்லாதவன். உவமையாக வேறு எவரையும் கூற இயலாதவன். அழியாமல் நின்றுள்ளவன். ஆனந்த மயமான உருவமுடையவன். இடையர்குலத்து அரசனின் மகனான அரசகுலத்துப் பிறந்த மகன். உலகத்தில், மகிழ்ச்சியற்ற மனிதர்களில் இவனும் நம்மில் ஒருவன் என்றெல்லாம் என்னைப்பற்றி நன்கு அறியாத அறிவிலிகள் கூறுவர்.

அந்தமிலி-முடிவற்றவன்-மரணமில்லாதவன். கோனந்தன்-பசுக்களின் கூட்டத்தையுடைய நந்தன். ரசாகுல மைந்தன்-அரசகுமாரன். ஆனந்தமிலி-மகிழ்ச்சியற்றவன். அறிவிலிகள்-அறிவில்லாதவர்கள். அறிவதிலா-அறியமுடியாத. இப்பாடல் கலி நிலைத்துறை விருத்தம்.

மறுவுற்ற பிறகிருதியதிலுற்று மறைவனிவன்மிக
லொறுவற்கு மறியும் வகை வெளி நிற்ப திலை யுலகில்
வெருவுற்ற பெருமயலின் மனமுற்று விழிமறைய
வருவுற்ற வெனை உலக யறிகிற்ற திலையடைய. 21

நான் என்னுடனேயே கூடியதான பிறகிருதி எனும் யோகமாயையில் நின்று எவருக்கும் தெரியாமல் மறைவாக இருப்பவன்.எல்லோரும் நன்றாக என்னைக் காணும்படி வெளியில் எங்கும் நிற்பதும் இல்லை. உலகில் பயத்தைத் தரக்கூடிய பெரிய மாயையின் காரணமாக மனதில் மயக்கமுற்று அதனால் கண்கள் மறைக்கின்ற காரணத்தால் என்னை, அருகில் வந்து உலகில் யாரும் காணமுடிவதில்லை.

பிறகிருதி-மாயை-யோக மாயை; மறைவன்-மறைந்திருப்பேன். வெருவுற்ற-பயத்தைத் தருகின்ற.

வேறு

போனவை யினிமேற் புகுத நின்றன விப்பொழுது-போகின்ற
வனைத்தும்
யானறிந்திருப்பன் முலகில் யென்னை மற்றியாவரு மறியார்
மான வெஞ்சிலையாய் வேண்டல் வேண்டாமை தனிலே
வருகுண மயக்காற்
றானமர்ந்து துருவாய்ச் சனித்திடும் பொளுதே தந்த
மெய்யறிவு சார்ந்திடலால். 22

கொல்லும் செயலைச் செய்கின்ற கொடிய வில்லையுடைய அருச்சுனா! இதுநாள் வரை இப்பூவுலகில் வாழ்ந்து மடிந்து போனவை. இனிமேற்கொண்டு உலகில் பிறக்க இருப்பன. இப்போதைக்கு உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவைகள் இவைகள் அனைத்தையும் நான் அறிவேன். ஆனால் இவ்வுலகில் என்னை யாரும் அறிந்திலர். விருப்பு வெறுப்பு காரணமாக ஏற்படக் கூடிய மயக்கத்தினால், உருவாய்ப் பிறந்திடும் போதே உண்மையான அறிவு அமைந்துவிடுகிறபடியால்.

இனிமேற் புகுதன-இனி பிறக்க இருப்பவை. வெஞ்சிலை-கொடியவில். குண மயக்கம்-குணங்களில் ஏற்படும் மாற்றம். சனித்தல்-பிறத்தல். பொளுது-பொழுது. இப்பாடல் எழுசீரடி ஆசிரிய விருத்தம்.

வியக்க மேல் முயன்ற நன்வினை மாந்தர் விரும்பலராகி
முன்செய்த
பயக்கமேவிய தீவினை யெலாமற பற்றப் பறிந்து
முன்போனாற்

றுயக்கமே புரியுஞ் சோகமே முதலாதுவந்து வக்
குணங்களிற் றொடர்ந்த
மயக்க மேவலார் யொழுக்கமே நிலை நின் றென்னையே
மனத்திடை வைப்பர். 23

வியக்கும்படியாக, உயர்வாகச் செய்ய, நல்வினை களை, மக்கள், விரும்பாதவர்களாகி, முன் செய்த, அந் நல்வினைகள் பயனைக் கொடுக்க, தீவினைகள் யாவும் நீங்கி, நன்னிலை பெற்றனர். துன்பத்தையே தரக்கூடிய சோகமே முன்னதாக வந்து, நற்குணங்களோடு தீய குணங்கள் அணுகாது. நல்லொழுக்கத்திலேயே நிலையாக நின்று பின் என்னையே உற்ற துணையாக எண்ணி மனத்திடையே வைப்பர்.

வியக்க-ஆச்சரியப்படும்படியாக, முயன்ற-செய்த, விரும்பலராகி-விரும்பாதவர்களாகி, பயக்க மேவிய-திரும்பவும் கிடைக்கும்படி செய்த.

ஏறிவரும் பிணிமூப்பிறப்பொடு பிறப்பே னறிவைக்
கெடுத்திடல் பொருட்டாக
குறிவரும் பரிசுநினைத்து மற்றெனையே கூடுகின்மேவி
நின்றவர்க
ளறிவரும் பிரமம் தன்னையுந் தனையறியு மெய்யறிவவை
மறிவி
னெறிவருங் கருமமனைத் தையுமறிவா ரறிந்தபின் னிகழ்
வதுங்கேளாய். 24

உடலில் ஏறிவரக்கூடிய, நோய், மூப்பு, இறப்பு, பின்பிறப்பு ஆகியவற்றைக் கெடுக்கும் பொருட்டு, இறப்புக் கால குறி வரும்போது என்னையே சரண் என கூடிவரும் நிலைக்கு வந்தவர்கள், அறிந்து கொள்வதற்கு அரிதான பிர்மத்தையும், அந்த பிர்மத்தை அறிவதற்கான

சத்திய ஞானத்தையும் அறிவார்கள். அதன் காரணமாக எல்லாவித கருமங்களையும் அறிவார்கள். இதன் பின்னர் என்ன நிகழும் என்பதைக் கேட்பாயாக !

ஏறிவரும் பிணி-உடலுக்கு வந்த நோய் குறையாமல் மேன் மேலும் அதிகமாகிவரும் நோய், கெடுத்திடல் பொருட்டு-நீக்கிடுவதற்காக. குறி-இறப்பதற்கான நேரம் வந்து விட்டதற்கான அறிகுறி-கபம் முதலியன.

வேறு

தேடும் பளைய வதிபூக மதி தெய்வத் தோடதி யெச்சங்
கூடும்ப ரிசுநின்ற வெனை யறிவா ரிந்தப் புளுக்கூடு
வீடும் பொழுது மெனை மெய்யே யறிவா ரென்றார் யாம்
வெல்வே
றாடும் பளைய மாயக் கூத்தாட்டுகின்ற வம்மாயன். 25

ஞானிகளால் விரும்பித் தேடப்படக் கூடிய அதிபூதம், அதிதெய்வம், அதியக்யம் ஆகியவற்றுடன் கூடியிருக்கும்படியான என்னை, புழுக் கூடாகிய இந்த மானிட உடல் அழியும் காலத்திலேயாவது என்னை அறிவார்கள் எனக்கூறினார். தான் வேறாக நின்று பழமையானதாகிய மாயக் கூத்தெனும் விளையாட்டை ஆடுகின்ற மாயவனாகிய வாசுதேவன்.

பூதம், தெய்வம், யிகியம்-இவை மூன்றினுள்ளும் நானே இருக்கிறேன் என்றது. எச்சம்-யக்ஞம்-பரகதி அடையும் பொருட்டு செய்யப்பெறும் யாகங்கள், புளுக்கூடு-புழுக்களே நிறைந்ததாகிய மானிட உடல்; வீடும்பொழுது-வீழும்பொழுது-சாகிற காலம் வரும்போது. மாயக் கூத்து-ஒருவகை தோல் பொம்மை ஆட்டம் பொம்மலாட்டம் போன்ற கூத்து.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–7

ஞான விஞ்ஞான யோகம்

1. ஸ்ரீ பகவான் சொல்கிறான்; பார்த்தா! என்பால் இசைந்த மனத்தினனாய், என்னைச் சார்ந்து; யோகத்தில் அமர்ந்தவனாய், எல்லா ஐஸ்வர்யங்களும் விபூதிகளும் பொருந்திய என்னை, எவ்வித ஐயமுமின்றி உணருமாறு சொல்கிறேன். அதைக்கேள் !

2. எதை அறிந்தால், இவ்வுலகில் மேலும் தெரிந்து கொள்ளவேண்டிய வேறு எதுவும் மீதம் இருக்காதோ விஞ்ஞானத்துடன் கூடிய இந்த ஞானத்தை, முழுமையாக நான் உனக்குச் சொல்வேன் !

3. பல்லாயிர மனிதர்களில் ஒருவன் சித்திபெற முயல்கிறான். அவ்விதம் சித்திபெற முயற்சி செய்கிற யோகிகளிலும் கூட, யாரோ ஒருவன் தான் என்னை உள்ளபடி அறிகிறான்.

4. மண், நீர், காற்று, ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம் என இந்த இயற்கை, இவ்வாறு எட்டு விதமாகப் பிரிந்து தோன்றுகிறது.

5. பெருந்தோளாய்! இது என் கீழ் இயற்கை (அபரா என்பது) இதனின்றும் வேறுபட்டதாகிய, எந்தப் பிரகிருதி யினால், இந்த உலகம் முழுவதும் தாங்கப்படுகிறதோ எனது உயிர்வடிவான (பரா என்னும்) மேலியற்கையைத் தெரிந்துகொள்.

6. எல்லா உயிர்களும் பிரக்கிருதிகளிலிருந்து உண்டானவை என்றும், நானே முழுமையாக உலகிற்கும் உற்பத்தியாகும் இடம். அவ்வாறே ஒடுங்குகின்ற இடமும் என்றும் உணர்ந்துகொள்.

7. தனஞ்ஜெயா! என்னைக் காட்டிலும் வேறு ஒன்றும் உயர்ந்த பொருள் இல்லை! இவ்வையகமெல்லாம் நூலில் மணிகளைப் போல என் மீது கோர்க்கப் பட்டுள்ளது.

8. குந்தியின் மகனே! நான் நீரில் சுவையாகவும் எல்லா வேதங்களில் நான் பிரணவம் சூரியனிலும், சந்திரனிலும் ஒளியாகவும், வானில் ஒலியாகவும், ஆண்களிடத்தில் ஆண்மையாகவும் இருப்பதும் நானே!

9. மண்ணில் தூய நறுமணமகாவும், நெருப்பில் ஒளியாகவும் இருக்கிறேன். அவ்வாறே, எல்லா உயிர் களிலும் உயிர்ப்பாகவும் தவம் செய்வோரின் தவமாகவும் இருக்கின்றேன்.

10. எல்லா உயிர்களும் அழியாத, சநாதனமாகிய விதை என்று என்னை அறிவாயாக! புத்தியுடையோரின் புத்தி நான், ஒளியுடையோரின் ஒளியாக நான் இருக்கின்றேன்.

11. பரதர் ஏறே! எல்லாரிடத்தேயும், விருப்பமும், விழைவும் தீர்ந்த வலிமை நான், மேலும் அறத்திற்கு மாறுபடாத காமமும் நான்.

12. மேலும்கூட எந்த உணர்வுகள், சத்வ, ரஜஸ், தமோ குணங்களில் தோன்றியவையோ, அவை என்னிடத்தில் பிறந்தவை என்று அறிந்துகொள். ஆனால் அவை எல்லாம் என்னுள் இருக்கின்றன. நான் அவற்றுள் இல்லை.

13. இந்த மூன்று குணங்களாகிய வண்ணங்களால், இவ்வுலகமெல்லாம் மயங்கிப்போய், இவற்றினும் மேலான அழியாத இயல்புகொண்ட என்னை உணரா திருக்கின்றது.

14. ஏனெனில் இந்தக் குணமாகிய தேவமாயை கடத்தற்கரியது, யார் என்னையே சரணடைகிறார்களோ, அவர்களே இந்த மாயையைக் கடக்கின்றனர்.

15. மாயையினால், ஞானமழிந்தோர், அசுரத் தன்மையைப் பற்றி நிற்போர், மனிதர்களில் தாழ்ந்தவர் களும், இழிவான செயல்களைப் புரிகின்றவர்களுமான அறிவிலிகள், என்னைச் சரணடைய மாட்டார்கள்.

16. பரதரேறே அர்ச்சுனா! பயனை வேண்டுவோர், துன்புற்றவர்கள், அறிவை விரும்புகிறவர்கள், ஞானிகள் என நான்கு வகையான நற்செயல்களையுடைய மக்கள் என்னை வழிபடுகின்றனர்.

17. அவர்களில் நித்திய யோகம் பூண்டு, ஒரே பக்தி செலுத்தும் ஞானி சிறந்தவன். ஏனெனில், ஞானிக்கு நான் மிகவும் இனியவன். அவன் எனக்கு மிக இனியவன்.

18. மேற்சொல்லிய யாவரும் நல்லவரே! எனினும் ஞானி என்பவன் என்னுடைய ஸ்வரூபம், என்பது என்னுடைய கருத்து, அவன் யோகத்தில் இசைந்து, உத்தம கதியாகிய என்னைக் கடைப்பிடித்து நிற்கிறான்.

19. பல பிறவிகளின் இறுதியில், ஞானவான் "எல்லாம் வாசுதேவனே" என்று கருதி என்னை அடைக்கலமாகப் பற்றுகிறான். அவ்வித மகாத்மா கிடைத்தற்கரியவன்.

20. வெவ்வேறு விருப்பங்களால், கவரப்பட்ட அறிவுடையோர், அவரவர் தம் விருப்பங்களால் கட்டுண்டு, வெவ்வேறு நியமங்களில் நிற்பவராகி அன்னிய தேவதைகளை வழிபடுகின்றனர்.

21. எந்த எந்த பக்தன் நம்பிக்கையுடன் எந்த வடிவத்தை விரும்பி அர்ச்சிக்கிறானோ, அந்த அந்த பக்தனுக்கு, அசையாத நம்பிக்கைக்குத் தகுந்த வடிவத்தை நான் மேற்கொள்கிறேன்.

22. அவன் அந்த நம்பிக்கையுடன் கலந்து, அவ் வடிவத்தை ஆராதித்து, வேண்டுகிறான். அதன்மூலம் தான் விரும்பியவற்றைப் பெறுகிறான். என்றாலும் அவற்றை வகுத்துக் கொடுப்பவன் நானே !

23. என்றாலும், அற்ப புத்தியுடைய அவர்கள் எய்தும் பயன் இறுதியுடையதாக ஆகிறது. தேவர்களைத் தொழுவோர் தேவர்களை அடைகிறார்கள், என்னடி யார்கள் என்னையே அடைகிறார்கள்.

24. அறிவற்றவர்கள், என்னுடைய இணையற்றதும், அழிவற்றதும், உத்தமமும் ஆகிய பரநிலையை அறிந்து கொள்ளாமல், புலன்களுக்கு அப்பாற்பட்டவனான என்னை கண்களால் காணக்கூடிய தோற்றத்தை அடைந்தவன் என்று (மனிதனைப் போன்று பிறப்புள்ள வனாக) கருதுகின்றனர்.

25. எல்லாவற்றிற்கும் ஒளியாகிய என்னை, யோக மாயை சூழ்வதில்லை. பிறப்பும் கேடுமற்ற என்னை இந்த மூட உலகம் தெரிந்து கொள்வதில்லை.

26. அர்ச்சுனா! கடந்துபோனதும், நிகழ்வதும், இனி வருவதுமாகிய உயிரினங்களை எல்லாம் நானறிவேன். ஆனால் எவரும் என்னை அறிவதில்லை.

27. பகைவரைச் சுடுவோய்! பரதா! விருப்பத்தாலும், பகைமையாலும் எழுந்த இருமைகளின் மயக்கத்தால், உலகில் எல்லா உயிர்களும் மயங்கி விடுகின்றன.

28. எந்த ஜனங்கள், பாவம் தீர்ந்து, புண்ணிய செயல்கள் செய்கின்றார்களோ, அவர்கள், இருமை மயக்கம் தீர்ந்து, திட விரதமுடையவர்களாய், என்னை வழிபடுகின்றனர்.

29. மூப்பினின்றும், மரணத்தினின்றும் விடுபடுமாறு என்னை வழிபட்டு முயற்சி செய்வோர், "அது" என்ற பிர்மத்தை உணர்வார்கள். ஆத்ம ஞானம் முழுவதையும் உணர்வார்கள். செய்கை அனைத்தையும் உணர்வார்கள்.

30. பூத ஞானம், தேவஞானம், யாகஞானம் ஆகிய இவற்றுடன் கூடியவனாக, எவர் என்னை இறுதிக் காலத்திலேனும் அறிவார்களோ, அவர்களே, யோகத்தில் பொருந்திய சித்தமுடைய என்னையே அறிகிறார்கள்.

விளக்கவுரை

வியாசர் தமது பகவத் கீதையின் ஏழாவது அத்தியாயத்திற்கு "ஞான விஞ்ஞான யோகம்" எனத் தலைப்பிட்டு, முப்பது சுலோகங்களை இயற்றியுள்ளார்.

சுவடி ஆசிரியர் தமது ஏழாவது அத்தியாயத்திற்கு "மாயாரூப வத்தியாயம்" எனத் தலைப்புக் கொடுத்து இருபத்தைந்து விருத்தங்களை எழுதியுள்ளார்.

விருத்தம் 1. இதில் கண்ணன், அருச்சுனனிடம் யோகிகள் தன்னை அடைவதாகக் கூறுகிறார். தவிர கண்ணனை நூலாசிரியர், உலகத்தை உண்டவன், வேத குணங்களுடையவன், இடையர் குலப்பெண்களால் கற்பனை செய்து பார்க்க இயலாதவன், பவள வாயினன், இலக்குமியின் நாயகன் என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறெல்லாம் வியாசர் ஏதும் கூறவில்லை.

விருத்தம் 2. மாயையின் காரணமாக, எல்லோரும் என்னை வந்தடைவதில்லை. மிகச் சிலரே என்னை அறிவர். எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது. இக்கருத்து வியாசரின் இவ்வத்தியாயத்தின் மூன்றாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 3. உலகில் உள்ள உயிர்களின் தோற்றம் எட்டுவிதப் பொருட்களால் ஆனதெனவும், அவ்வெட்டு மட்டுமின்றி என்னுடைய மாயையின் காரணமாகவே உயிரினங்கள் தோன்றுவதாக கண்ணன் கூறுகிறான். இக்கருத்து வியாசரின் ஆறாவது சுலோகத்தில் எல்லா உயிர்களும் பிரக்கிருதி யிலிருந்து தோன்றியவை எனக் கண்ணன் கூறுவதாக வந்துள்ளது. 'பிரக்கிருதி' என்பது யோக மாயை எனவே இருவரின் கருத்தும் ஒன்றே யாகிறது.

விருத்தம் 4. எல்லா உயிர்களின் சுபாவங்களும் என்னையே சார்ந்துள்ளன. பிறப்பும், மரணமும் எனக்குத் தெரியும், நானே பரப்பிர்மம். இப்படிப்பட்ட என்னை யாரும் அறிந்து கொள்வதில்லை எனக் கண்ணன் கூறுவதாக உள்ள இச்செய்தி, வியாசரால் வேறு விதமாக, ஏழாவது சுலோகத்தில் "என்னைக் காட்டிலும் வேறு உயர்ந்த பொருள் வேறொன்றும் இல்லை" பரா, அபரா என்பவனாகிய மேல் இயற்கை கீழ் இயற்கை என்பவை எனது உயிர் வடிவானவை எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது.

விருத்தம் 5. வேதமும் நானே! நானே பஞ்ச பூதங்களைத் தாங்குகின்றேன். நூலில் மணிகள் பலவும் கோர்க்கப்படுவது போல என்னும் எடுத்துக் காட்டுடன் வேறுபாடுகள் நிறைந்த பொருட்கள் அனைத்துள்ளும் நானே கலந்து நிற்கிறேன் எனும் கண்ணனின் பேச்சு வியாசரின் மேலே சொல்லப்பெற்ற அதே எடுத்துக் காட்டுடன் வியாசரின் ஏழாவது சுலோகத்தில் காணப்பெறுகிறது.

விருத்தம் 6. சூரிய சந்திரனில் ஒளி நான்! வேதத்தின் முதல் எழுத்து நான். ஆண்மை நான்! நீரின் சுவை, நெருப்பபின் சூடு, விண் ஓசை ஆகிய யாவும் நானே எனக் கண்ணன் கூறுவதாக வரும் செய்தி வியாசரின் எட்டாவது சுலோகத்தில் வருகிறது.

விருத்தம் 7, 8. ஆகியவற்றில் வரும் செய்திகள் அறிஞர்களின் அறிவு நான், வண்புகழ் நான்! எல்லாப் பொருள்களும் என்னிடத்தில்தான் உண்டாகின்றன. என்னைத்தான் எல்லாமும் சார்ந்துள்ளனவே தவிர நான் எதையும் சார்ந்திருக்கவில்லை. ஆகியவை எல்லாம் வியாசரின் பன்னிரண்டாவது சுலோகத்தில் காணப் பெறுகிறது.

விருத்தம் 9. மனமாயையில் சிக்குண்டவர்களால் என்னை அறிந்து கொள்ள இயலாது. நான் மூன்று குணங்களையும் கடந்த குணாதீதன். என்னை யாரும் அறியமாட்டார்கள்.

விருத்தம் 10. மாயையினால் ஏற்படக்கூடிய திகைப்பை நீக்கி, யோக நெறியில் நின்று என்னையே என்றும் நினைத்திருப்பவர்களால் மட்டுமே என்னை அறிய இயலும் என்பதாகக் கண்ணன் கூறுவது வியாசரின் பதினான்காவது சுலோகத்தில் காணப்படுவதுதான்.

விருத்தம் 11. மாயையின் காரணமாகவே, மனம் சீரழிகிறது. அப்படி மனம் கெட்டு தீவினை செய்வோர் என்னை அடைய இயலாது. வேறு யார் என்னை வந்து அடைகிறார்கள் என்றால், தவத்தை மேற்கொண்டவர்கள், மாயையைக் கடந்தவர்கள், என்பேரில் அன்பு கொண்டவர்கள், என்னையே வணங்குபவர்கள் ஆகிய நால்வர் மட்டுமே! (விருத்தம்-12) விருத்தம்-13- இவர்கள் எனக்கு இனியவர்கள்-அவர்களுக்கு நான் எல்லா நன்மைகளையும் செய்கிறேன். என்ற இக்கருத்துக்கள் யாவும் வியாசரின் பதினேழாவது சுலோகத்தில் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளன.

விருத்தம் 14, 15. ஆகியவற்றில் இறைவனின் அருளைப் பெறுபவர்களின் தகுதி பற்றிக் கூறப்பெறுகிறது. இவைகள் வியாசரின் பதினெட்டாவது சுலோகத்தில் ஞானவான் எல்லாமே வாசுதேவன் எனக் கருதி என்னை அடைக்கலமாகப் பற்றுகிறான் எனக் கண்ணன் கூறுவதாக சொல்லப்பெறுகிறது.

விருத்தம் 16. இவ்வாறு பரப்பிர்மத்தை அறியாத மற்றவர்கள் வேறு தெய்வங்களை-அவற்றிற்குறிய வழிபாட்டு முறைகளை அனுசரித்து வழிபட்டு தாங்கள் விரும்பியதை அடைகிறார்கள்.

விருத்தம் 17. அவ்வாறு அவர்கள் வேறு தெய்வங்களை வழிபட்டாலும் அவர்களால் வழிபடப்பெற்ற அதே தெய்வமாக நின்று அவர்களால் விருப்பப்பட்டதை அளிப்பவனும் நானே!

விருத்தம் 18, 19. ஆனால் அவர்கள மூட மதியினர். அவர்கள் வருந்திப் பெற்ற பலன்கள் நீண்ட நாட்கள் நிலைத்து நிற்பதில்லை. ஏனென்றால் அவர்களால் வேண்டப்பபட்ட பிற தெய்வங்களும் தேவதைகளும் கூட நிலையானவை அல்ல என்பன போன்ற செய்திகள், வியாசரின் 20, 21, 22 ஆகிய சுலோகங்களில் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன.

விருத்தம் 20. மனிதர்களில் ஒருவன் என என்னைச் சிலர் நினைப்பார்கள்.

விருத்தம் 21. பிரகிருதி எனும் யோக மாயையில் இருப்பவன நான். எல்லோரும் பார்க்கும்படியாக நான் இருப்பதில்லை. மாயையின் காரணமாக ஏற்படக்கூடிய மயக்கத்தினால் என்னால் யாராலும் காணமுடிவதில்லை. எனக் கண்ணன் கூறுகிறார். இதனை வியாசர் தமது இருபத்து நான்காவது சுலோகத்தில், புலன்களுக்கு அப்பாற்பட்ட என்னை, சாதாரண மனிதனைப் போன்றவன் எனச் சிலர் நினைக்கிறார்கள் எனவும், பிறப்பும் இறப்பும் அற்ற என்னை இந்த மூட உலகம் தெரிந்துகொள்வதில்லை-சுலோகம் இருபத்தைந்து-எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது.

விருத்தம் 22. போனவை, இனி வருபவை, இருப்பவை இவைகளை எல்லாம் நானறிவேன்.

விருத்தம் 23. நல்லொழுக்கத்தில் நின்றவர்களால் மட்டுமே என்னைக் கண்டுகொள்ள முடியும், முன்செய்த நல்வினைகள் காரணமாக தீவினைகள் நீங்குகின்றன. இச் செய்திகள் வியாசரின் இருபத்தி ஆறாவது சுலோகத்தில் உள்ளவைதான்.

விருத்தம் 24. இறந்துபோவதற்கான அறிகுறிகள் தோன்றும் காலத்தில், மரணத்தருவாயில், சிலர் என்னை நினைக்கிறார்கள். சத்திய ஞானத்தையும் அதன் காரணமாக பரப்பிர்மத்தையும் கூட அறிகிறார்கள். அதிபூதம், அதி தெய்வம், அதியக்ஞம் ஆகியவற்றின் முழு உருவமாக நான் இருக்கிறேன். புழுக் கூடாகிய உடல் அழியும் காலத்தில் சிலர் என்னை அறிகிறார்கள். நான் மாயக்கூத்தெனும் ஆட்டத்தை ஆடுகிறவன் என்று கண்ணன் கூறுவதாக இருபத்தைந்தாவது விருத்தத்தில் சுவடி ஆசிரியரின் கருத்து உள்ளது.

பிறவியின் இறுதியில் ஞானவான் எல்லாம் வாசு தேவனே எனக் கருதி என்னை அடைக்கலம் புகுகிறான். இப்படிப்பட்டவன் கிடைத்தற்கரியவன் எனவும் இறுதி சுலோகத்தில் வியாசர் பூத, ஞானம், தேவஞானம், யக்ஞ ஞானம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றுடன் கூட வியாசரின் கீதையில் சில செய்திகளும் உள்ளதைக் காணலாம். "எல்லா ஐஸ்வர்யங் களும், விபூதிகளும் பொருந்தியவன் நான்" சித்திபெற வேண்டி பலரும் முயற்சி செய்கிறார்கள் ஆனால் அவர்களில் ஒருசிலர் மட்டுமே அந்த நிலையை அடைகிறார்கள். எல்லா உயிர்களிலும் அழியாத சநாதன மாகிய விதை நான். அறத்திற்கு மாறுபடாத காமமாக இருப்பவன் நான். இழிவான செயல்களைச் செய்யும் அசுரத் தன்மையுடையோர்களாகிய அறிவிலிகள் என்னைச் சரணடைய மாட்டார்கள், ஞானி என்பவன் என்னுடைய சொரூபம், நானே யோக மாயை ஆனால் என்னை அந்த யோக மாயை சூழ்வதில்லை, என்பன வெல்லாம் கண்ணன் கூறுவதாக உள்ள செய்திகள் சிறப்பாக உள்ளவைகளாகும்.

உலகையே உண்டாக்கியவன் பரமாத்மா. ஆனால் உலகத்தாரோடு தீண்டப்படாமல் இருக்கின்ற காரணத்தால் தான் பரமாத்வே யோக மாயை எனப்படுகிறான்.

சாகும் பொழுதாகிலும், எய்ப்பென்னை வந்தெய்தும் போது, எல்லாவித ஆசாபாசங்களை விட்டு விட்டு ஈஸ்வர சிந்தனை உடையவர்களாக ஆயினும் அவர்கள் மோட்சத்தை அடைய இயலும் என்ற சிறப்பான செய்தியும் இந்த அத்தியாயத்தின் முக்கிய செய்திகளாகும். மேலும் இவ்வத்தியாயத்தில் அருச்சுனனுக்குக் கண்ணன் தான் எப்படிப்பட்டவன் என்பதை விவரமாக எடுத்துச் சொல்லும் விதமாக முழுவதும் கண்ணனே பேசுவதாக வியாசரின் சுலோகங்கள் அமைந்துள்ளதையும் காணலாம்.

எட்டாவது ஏழுவகை வினாவத்தியாயம்

அடைய ஞாலத்தை யார்த்ததி லார்ப்புணா
திடையர் தாம்பிடை யார்ப்ப விருப்ப வனுள்
குடையனாகி முன்னோதினவே கொடங்
விடைய னாளென மீள விளம்புவான். 1

இந்த உலகத்தை எல்லாம் தன்னுள்ளே அடக்கி அந்த உலகத்தில் தான் கட்டுப்படாமல், இடையர்தம் தாம்புக் கயிற்றினால் கட்டப்பெற்று, அதனாலே கட்டுப்பட்ட வனாகி, முன்பு சொன்னதையே மீண்டும் விடையாகச் சொல்லக் கூறுவான்.

ஞாலம்-உலகம், யார்த்து-கட்டி-ஆர்ப்பு-கட்டுதல், யார்த்து+ஆர்ப்பு+உணா=அபார்த்திலார்ப்புணா, தாம்பு-மாட்டைக்கட்டும் கயிறு, முன்னோதின-முன்+ஓதின-முன்னர் சொல்லிய, இப்பாடல் கலிவிருத்த வகையது.

ஆய பிறமத்தோ டத்தியாறம்மைக் கரும
மேய வதிபூத மதிதெய்வ மதி யெச்சங்
காய மதினுள்ள பரிசும் கெழுமுகயாய்
வீய லுறு பொழுதி லுனை மெய் தெளியு மாறும். 2

அருச்சுனன் கண்ணனிடம் கேட்பது:- தங்களால் முன் சொல்லப்பட்டதாகிய பிர்மத்தோடே ஆதியாக அமைந்த கருமத்தோடேயும் கூட, அதிபூதம், அதி தெய்வம், அதியக்ஞம் என்று சொல்லப்பெறுகின்ற இவைகள், தேகத்தில் இருக்கின்றவிதமும், இந்த உடலானது வீழும் போது, சாகுங் காலத்தில் உன்னையே உண்மையானவன், பரப்பிர்மம் எனத் தெரிந்து கொள்ளும் விதம்.....

பிற்மத்தோடு-பிர்மத்தோடு, யெச்சம்-யக்ஞம், சாயம்-உடல், வீயலுறுபொழுது-வீழும் போது சாகும்போது.

விரிய வுரை செய்தருள வேண்டுமென மீண்டவ்
வரியரவிலே துயிலு மாயவ னுரைப்பா
னரிய தழியாமை யதனைத் தினு முரைக்கிற்
பெரியது மொழிந்த பிரமம் மிறவையுங் கேள்! 3

விரிவாகச் சொல்லி அருளவேண்டும் என மீண்டும் அருச்சுனன் கேட்க, உடலில் கோடுகளையுடைய பாம்பின் மேல் படுத்துறங்கும் மாயவனாகிய கண்ணன் கூறலானான். 'அரியது, அழிவற்றது, அனைத்திலும் பெரியது அதுவே பிர்மம்' மற்றவற்றையும் சொல்கிறேன் கேட்பாயாக!

வரியரவு-உடலில் கோடுகளையுடைய பாம்பு, விரிய-விரிவாக.

அந்தக்கரணங் களி னின்ற வறிவ த்தியாற்ப மாவதுதா
னிந்தப் பிறவி தனை யாக்கும் யாகங் கரும மென்பது தா
னந்தற் கமைந்த வுடம்புதனை நானென்கின்ற பூதம்
பந்தப்படு மிவ் வுடற் கமைந்த புருடன் றெய்வமெனப்
படுவான். 4

அகத்தியாகம்-ஆத்மத்தியாகம் என்பது அந்தக் கரணங்களிலே நின்ற அறிவாகும். கருமம் என்பது இந்தப் பிறவியை உருவாக்கும். சிருஷ்டி-எனும் யாகம்-எடுத்திருக்கும் உடலின் தன்மையை அறியாது அதுவே நான் என்பது அகங்காரம். பஞ்ச பூதங்களின் சம்பந்தப் பட்ட இந்த உடலுக்கு அமைந்தது புருஷன்- பூத தெய்வம் எனப்படுவதாகும்.

அத்தியாற்பம்-அகத் தியாகம்-அத்யாத்மம் ? பரப்பிர்மமானது உடம்பு தோறும் உள்ளே இருப்பதை ஆத்மவாக இருத்தல்-உடலில் இருக்கும் பரப்பிர்மமே ஆத்மா-அப்படி இருப்பதையே அத்யாத்மம் என்கிறோம். தியாகம் என்பது தேவதைகளைக் குறித்து பொருள்களைக்

கொடுத்தல்-இந்த தியாகம் என்னும் யாகம் கர்மம் எனப்பெறுகிறது. இதன் மூலமாகத்தான் மழை முதலியன உண்டாகி உலகில் எல்லா உயிரினங்களும் தோன்றுகின்றன.

அதிபூதம் என்பது-உலகில் பிறந்த அனைத்து உயிரினங்கள். இவை காலத்தால் அழியும் தன்மை கொண்டவை.

அதிதெய்வம் அல்லது அதிதைவதம் என்பது இந்திரியங்களை செம்மையாகச் செயல்பட வைப்பது. எனவே இது உடலுக்குள் இருக்கிறது. இதனை சூர்ய மண்டலத்தில் உள்ள ஹிரண்ய கர்ப்பன் என்பர்.

அதியக்யம்-அதியக்ஞம்-எல்லா யாகங்களையும் ஏற்றுக் கொள்கிற விஷ்ணு என்னும் தேவதை-யக்ஞமே விஷ்ணு-விஷ்ணுவே யக்ஞ தேவதை, யாகம் என்பது உடலால் செய்து முடிக்கப்பெறுவது. ஆகவே அதியக்ஞம் என்பது உடலோடு ஒன்றியிருப்பது. உடலில் தங்கி இருப்பது எனவும். (சங்கர பாஷ்யம்) சிறிது காலத்திற்கு இருந்து பின்னர் அழிந்துவிடக் கூடிய தன்மையுடையது அதிபூதம், இதனை ஜீவ ஸ்வரூபம் அதிதைவதம் என்பர். இந்த உடலில் இருந்து கொண்டு யக்ஞத்தின் வாயிலாக தூய்மை பெற்ற ஜீவஸ்ரூபமே அதியக்ஞம் என்பது. (தேசபிதா மகாத்மா காந்தி

எஞ்சிதலை யிதிலெச்ச மாகின்றெ னானிற் குங்கால்
நெஞ்சு கவரும் நெறிகளெல்லா மடைத்து நினைய
படுவதுநா
னஞ்சு புலனும் பொறி யைந்து மடக்கி யறிவென் பாலதாய்த்
துஞ்சு மவர்க ளெனையடைவ ரெவ்வா ரென்னிற்
சொல்லக்கேள். 5

மனதைக் கவரக்கூடிய ஐம்பொறிகள் எல்லாம் தாம் செய்யக்கூடிய வாயில்கள் அடைத்துப் போய்விட்ட நிலையில் மீதியிருக்கின்ற, எஞ்சிய, நிலையில், சாகிற நிலை, இறக்கும்போது என்க, என்னுடையதாகிய உண்மைகளை நினைப்பது. புலன் ஐந்தும் பொறி ஐந்தும் அடக்கி, முழுமையான அறிவை என்பால் வைத்த நிலையில் சாகிறவர்கள் என்னை வந்து அடைவது எவ்வாறு என்பதைச் சொல்கிறேன் கேட்பாயாக!

எஞ்சுதலை-சென்றதுபோக மீத இருப்பது. வெச்சம்-மீதி, அஞ்சு புலனும் பொறியும்-ஐம்புலன்களும் ஐம்பொறிகளும். துஞ்சும்-சாகும்.

இந்த உடலம் விழும் பொழுதின் யாவன் யாதொன்றினை
நினைந்தா
னந்த வாழ்வே யந்தப் பாவனையா லதனை யடையு
மாதலின்
எந்த னியல்பே யெப்பொழுது மிதயத்திடை கொண்டேன்
பாலாஞ்
சிந்தை யொடும் வாளமர் துடங்கி லதனா லெனையே
சேருதியால்.6

உயிரானது இந்த உடலை விட்டுவிட, அது விழும் போது, சாகிறபோது, யார் எதைப்பற்றி நினைக்கிறார் களோ அவர்கள் நினைத்தபடியான அதே வாழ்வை, அதே பாவனையோடே, அடுத்த பிறவியில், அடைகிறார்கள்; ஆகையினால், என்னைப் பற்றியே, எப்பொழுதும் மனதில் கொண்டு என்னிடத்திலே உன் சிந்தையை வைத்து வாளை எடுத்து போர் செய்யத் தொடங்கினால், நீயும் இறுதியில் என்னையே சேருவாய்.

உடலம் விடும்பொழுது-சாகின்ற நேரத்தில், எந்தனியல்பு-நான் எப்படிப்பட்டவன் என்பதை உணர்ந்து, வாளமர்-வாள்+அமர்= வாளெடுத்துச் செய்யும் போர்.

நல்ல கரும யோகத்தும் ஞானம் யோகமது தனிலுஞ்
செல்லு மன்னை மிகச் செழுத்தி பிறிதொன்றினையுஞ்
சேராதார்
சொல்லவரிய கதிர் வன்மண்டலம் பொற்றோன்றுந்
தொல்லோனை யல்ல தடையாதவ னியற்கை யறியும்
பரிசையடையக்கேள்.7

நல்ல கரும யோகம், ஞான யோகம் ஆகியவற்றில் என்னையே மனத்தில் மிகவும் உயர்வாக இருத்தி, வேறு எதையும் சிந்திக்காதவர், ஒளிமிக்க சூரிய மண்டலம் போன்று தோன்றக்கூடியவனும், மிகப் பழமையானவனு மாகிய என்னை வந்தடைவது இயற்கையே! இவ்வாறு அல்லாதவனின் நிலை என்னவென்பதையும் சொல்லு கிறேன் கேள் !

செழுத்தி-உண்மையாக நினைத்து, கதிர்வன் மண்டலம்-வெப்பமான ஒளியைத்தரக் கூடிய சூரியமண்டலம, தொல்லோன்-முன்னைப் பழமைக்கும் பழமையானவன்.

எல்லாப் பொருளு மரியானை எல்லாப் பொருட்குப்
பளையானை
யெல்லாப் பயனு மீவானை யாற்கு நினைத்த கரியானை
யெல்லா விடத்துமிரு ளர்த்தவிள் வெங்கதிர் போலெழுவானை
யெல்லாரையும் தன்னிலை நிறுத்துவானை யிறப்பச்
சிறியானை. 8

எவ்வெவ்வற்றிற்கும் மிகப் பழமையானவனை எல்லாவற்றையும் அவரவர் தம் நிலையில் நிறுத்துவானை எல்லோரையும், அவரவற்கு உரிய காலத்தில் இறக்கச் செய்வானை, எல்லோருக்கும், அவரவர் வேண்டியவாறு எல்லாப் பயனையும் கொடுக்கிறவனை, நினைத்துப் பார்ப்பதற்கு அரிதானவனை இருள்சூழ்ந்த எல்லாவிடத்திலும், அந்த இருளைப் போக்குகின்ற சூரியனைப் போல எழுகின்றவனை....

கதிர்போல-சூரியனைப் போல, இறப்பச் செறிவானை-இறக்க வேண்டியவர்களை இறக்கச் செய்துவிட்டு, தான் மட்டும் இறவாது இருப்பவனை என்க.

மறுவற்க்குரிய வன்புடையார் மயங்கார் யோக மனத்தாலே
புருவத்திடையே தன்னுடைய புரை தீருயிரைப் புகநிறுத்தி
யுருவத்தினை விட்டி டிலிருந்த யோகத்தாலே யவறோடும்
பொருவப்படு மிப்பொருள் மேலே யின்னம் புகல்வன்
பொருவேலோய்! 9

வேல் கொண்டு போர் செய்யும் அர்ச்சுனா! என்னை வந்தடைவதற்குரிய பக்தியுடையவர்கள், மாயையின் காரணமாக வேறெதிலும் மயங்காதவர், யோகமெனும் உறுதியான மனத்தினாலே, இரு புருவங்களுக்கு இடையே, பயிற்சியினாலே சுத்தம் செய்யப்பெற்றதாகிய பிராணவாயுவை நிறுத்தி, உருவாய் நின்ற இந்த உடலை விட்டு விடுவார்களேயானால், அவர்கள செய்த யோகத்தின் பலனாக சேரப்பெறும் பொருளாக இருப்பவன், பொருளாகிய நான், மேலும் சொல்கிறேன் கேள்.

மறுவற்க்கு-மறுவுவதற்கு-சேருவதற்கு-சேருவதற்கு. மயங்கார்-மயக்கம் என்பது மாயையின் காரணமாக வருவது என்றாலும் அம்மாயையைக் கடந்து என்க. புரைதீர் உயிர்புக நிறுத்தி-பிராண யாமம் என்பது எளிதில் சித்திக்கக் கூடியதல்ல, உள்மூச்சு, வெளிமூச்சு இவைகளை சுத்தப்படுத்துவதற்கான வழிமுறைகள் உண்டு. அவ்வாறு சுத்தப்படுத்தப் பெற்றதை இருபுருவங்களுக்கிடையே நிறுத்துவதாகும், உருவத்தை விடல்-உடலை விடுதல்-சாதல்.

வேறு

யாதொன்றை மறைதெரிந்தோ ரழியா தென்றுடுத்து ரைப்பா
யாதொன்றை யவர வறுத்து யோகிகடா மெய்திடு வானி
யாதொன்றை யுறதி நினைந்தோர் காம முதலிய விளப்பா
யாதொன்றைப் பரம்பொருளா மதனைச் சுருங்க
வியம்புவேன் கேள்.10

வேதங்களைக் கற்றுணர்ந்தவர்கள் எதனை அழியாத ஒன்று என்று எடுத்துரைப்பார்களோ, எதனை, அடைய வேண்டுமென யோகிகள் வரையறை செய்து கொண்டு, அதனை அடைகிறார்களோ, காமம் முதலானவற்றை ஒழித்தவர்கள் மனதில், உறுதியாக நினைக்கிறார்களோ, அப்படிப்பட்ட பரம்பொருள் எது என்பதைச் சுருக்கமாகச் சொல்கிறேன் கேள்!

மறைதெரிந்தோர்-வேதங்களைக் கற்றுணர்ந்தோர். யவரவறுத்து-வரையறுத்து-இதுவே சரி என முடிவு செய்து; காம முதலிய-காமம், குரோதம், மத, மாச்சரியம் ஆகியன.

வேறு

அஞ்சு புலன் வழியவை யடைத்த யலுறாதே
நெஞ்சு தனை யிதை யக மலத்திடை நிறுத்தி
யெஞ்சு தலிலுயிர் வழியை யுச்சியினிலேற்றி
யுஞ்சு புகுநெறியென வியோ குடனிருந்தே! 11

ஐந்து புலன்களையும் அதன் வழியே அடைத்து, அயற்சியடையாமல், மனதை இதயக்கமலத்திடையே நிறுத்தி, பிராணவாயுவை உச்சியில் ஏற்றி துணிந்து செய்வதற்குரிய நெறிமுறை இதுவே என யோக நெறியில் இருந்து....

அஞ்சு புலன் வழியவை யடைத்தல்-ஐம்புலன்களையும் அதனதன் வழிகளை அதனதனைக் கொண்டே அடைக்கவேண்டும். ஒரு புலனை அடக்க மற்றொரு புலனைக் கட்டாயப்படுத்தக் கூடாது என்க. அயற்சி-சோர்வு; மனம் வேறு-இதயம் வேறு என்க. உச்சியில் ஏற்றி என்பது-பிராண வாயுவை இறுதிக் காலத்தில் பிர்ம கபாலம் எனும் தலையின் உச்சிப் பாகத்தில் உறையச்செய்வது.

ஓதிலிரி யற்கை யினோடோ மெனுமெழுத்தே
வாயத னிலுரைத்தனின் மனமானது தணித்தே
யாவரு மெனைத் தெளிய லாவாவிதனை விட்டார்
வாவி தணியற்க்கை யினையே யடைவர் மிக்கோய்.12

வாய்விட்டுச் சொல்லாதபடி, மௌனமாக, இயற்கையாக, ஓம் எனும் எழுத்தை வாய்க்குள்ளேயே சொல்வதால், மனமானது தணிந்து ஆவியை விட்டவர்கள், என்னைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு இயற்கையை அடைவார்கள்! வீரம் மிக்க அச்சுனா!

ஓதல்+இன்றி-ஓதலின்றி-ஓதலிரி, ஆவிதனை விட்டார்- உயிரை விட்டவர்கள் இயற்கையினையே அடைவர்-வேறு எதையும் சாராது இயற்கையாகவே இருக்கும் என்னை அடைவார்கள்.

இப்பரிசி னாண்டோரறு திங்கள ளவென்னா
தெப்பொழுது மென்றினியவபே நினையடைவர்
கைப் படுவன்யா னெளியல் கைப்பட விருந்தோர்
பொய்ப் பிறவி யானவை மறுத் தடைதல் பூணார். 13

இப்படியாக, என்னையே நாளும் நினைத்துக் கொண்டிருப்பவர்கள், ஒரு ஆண்டிற்குள்ளோ, ஆறு மாதத்திற்குள்ளோ, எனக்கு இனியவனாகி என்னை வந்தடைவார்கள். இப்படியாக என்னை அடைந்தவர்கள், பொய்ப்பிறவியான மேலும் ஒரு பிறவியை அடைய மாட்டார்கள்.

ஆண்டோ-ரறு திங்க ளளவு-ஒரு ஆண்டு காலமோ அல்லது ஆறுமாத காலமோ; கைப்படுவன்-வசப்படுவேன். பொய்ப்பிறவி-கர்மத்தால் உண்டாகும் மறுபிறவி.

செய்யாமுன் சார்ந்த வினைதீர்ந்த போதே திசைமுக
னாடனைந் தோருந் திரியமிழவா
மெய்யாக வெனையடையு மவரே கண்டாய் மீளாதநெறி
யடைந்தார் வேறு கூறி
லையா கேள் சதிரியுக மீரைஞ் ஞறோரு பகலாம்
ஆண்டொரு னூயற்குமுள்ள
தெய்யா திங்க வருக்கோர் பகலிற் றோன்றி யிரா விற்குந்
தன்மைத்தாய் யோனி யெல்லாம். 14

முன் செய்த புண்ணியங்களின் பலனாக பிர்ம லோகத்தை அடைந்தவர் கூட அவர்கள் செய்த புண்ணி யங்களின் பலன் தீர்ந்து போன பிறகு அப்பிர்மலோகத்தை விட்டு மறுபடி இந்த உலகத்திலேயே வந்து சேருவார்கள். உண்மையில் என்னை வந்து அடைந்தவர்கள் மட்டுமே மீளாத நெறி எனும் மறுபிறவியை அடையாதவர்கள் ஆவர். இதற்கான காரணம் என்னவென்று கேட்பா யாகில், பூமியில் நான்கு யுகங்கள் கொண்டதான ஆயிரம் (=4+1000=4000) ஆண்டுகளைக் கொண்டது பிர்ம லோகத்தில் ஒரு பகலாகவும் உள்ளது. இப்படி ஒரு கணக்குப்படி அந்த பிர்மாவுக்கு ஆயுளே நூறு வயசுதான். இவ்வாறு உள்ள அந்த பிர்மலோகத்தின் ஒரு பகல் பொழுதில் எல்லா உயிர்களும் பிறந்து பிறகு அந்த பிர்ம லோகத்தில் இரவு வரும்போது எல்லா உயிர்களும் அழிந்துபோய் விடக் கூடிய தன்மையுடையவனுவாகும்.

மீளாதநெறி-மறுபடி பிறக்காத நிலை, கூறிலை--காரணமில்லை. சதிரியுகம்-சதுர்யுகம்-நான்கு யுகங்கள்-(பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு யுகத்திற்கும் எத்தனை ஆண்டுகள் என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.) யோனி யெல்லாம்-பிறப்பு உறுப்பைக் கொண்ட ஆண் பெண் என்னும் உயிர்கள் எல்லாம். இது அறுசீரடியாசிரிய விருத்தம்.

நெறியில்லா வரு வியத்தமோ டவ்வியத்தங் கூடா தாகிலமை
யென்றும்
பொறியளியும் யாக்கை தனிலழியாத புலனென்றும்
புதிதன்றென்று
மறிவறிய நெறிய நெறியன்று மழியாத பொரு ளென்று
மடைந்தோர் பினனைப்
பிறிவறிய நெறி யென்று பெரியோர்கள் பேசுவதென் பெற்றி
கண்டாய். 15

முறையாக வரக்கூடிய வியத்தம், அவ்வியத்தம் ஆகியவை ஒன்றுடன் ஒன்றுசேர இயலாதவையாகும். ஐம்பொறிகளும் அழிந்து போகக் கூடிய உடலில், என்றும் ஐந்து புலனாக இருப்பவன் என்றும் புனிதமான புதியவன் என்றும், அறிந்து கொள்வதற்கு அரிதானவன் என்றும், என்றும் அழியாத பொருள் என்றும், என்னை அடைந்தோர் பின் என்னை விட்டுப் பிரியமாட்டார்கள் என்றும் என்னைப்பற்றிப் பெரியோர்கள் பெருமையாய் பேசுவதைக் காண்பாயாக!

வியத்தம் x அவ்வியத்தம்; அவ்வியத்தம் அழியக்கூடியது. பொறியளியும்-பொறியழியும், புதிதன்-தூய்மையானவன- புதியவன்- பெற்றி-பெருமை. கண்ணன் தன்னுடைய பெருமை இன்னதென்று அருச்சுனனிடம் கூறுவதாக அமைந்தது இவ்விருத்தம்.

பகவத்கீதைக்குத் தமிழில் உரை எழுதிய பலரும் "வியக்தை அவ்வியக்தை" என்ற சொற்களைப் பொருள் கூறாது உள்ளது உள்ளபடியே எழுதியுள்ளார்கள். சங்கர பாஷ்யத்தில் அவ்வியக்தமென்பது அழியக்கூடியது எனத் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. சுவடி ஆசிரியரின் இந்த விருத்தத்தில், "பொறியழியும் யாக்கைதனில் புலன் அழியாத" எனக் கூறியுள்ளார். பொறியும் புலனும் பிரிக்க இயலாதவை. இதில் உடலில் புலனொடு பொறியும் அழிவது மனித உடல், ஆனால் இறைவனுக்கோ பொறியழியினும் புலன் அழியாத உடல். இதனை வள்ளுவர் "பொறிவாயில் ஐந்தவித்தான்" எனக் குறிப்பிடுவதைக் காணலாம். பொறிகளின் வாயில் புலன் அல்ல என்பது தெளிவு.

எப்பொழுது மாய்ந்தே யாவரு வனுள்ளடக் கிற்றெங்குமாய்
நிற்கின்றானியா
ரப்பா மப்பரம் பொருளாயுள்ள வெனை யன்பாலே
யனைவதய்யா

யெப்பொழுதும் வருங்காலத் திறந்தார்கள் பிறவாதார்
பிரப்பரென்னி
லப்பரிசு வருங் காலத்தினை யறிய அரைக் கின்றேன் தனக்
கேள்ப்பாய்.16

எல்லாப் பொருள்களிடத்தும் அடங்கி இருப்பதும் எல்லோருடைய உள்ளங்களிலும் அடக்கப் பெற்றிருப் பதும் அந்தப்பரம் பொருளாகிய என்னை அன்பினால் தான் அடையமுடியுமப்பா! எக்காலத்தில் இறப்பதால் யோகிகள் வருங்காலத்தில் பிறக்காமல் இருப்பார்களோ அது எப்பொழுது என்பதை உனக்குச் சொல்கிறேன் கேட்பாயாக.

மாய்ந்து-அடங்கி; அரைக்கின்றேன்-சொல்லுகிறேன்.

அங்கி யொளி பகல் வெம்மையாங் கால தேவதை
கள்வர்களோடுந்
தங்கு மறுதிங்களிடை யுத்தராய ணஞ்சேர்வார் மறுத்துஞ்
சாரார்
கங்குல் புகை கறுப்பென்னும் கால தேவதை யடைந்து
பிறக்குங் கண்டாய்
யெங்கு மறு திங்களிடை தேக்கனாயனத் திறந்த யோகி
யென்பான்.17

நெருப்பின் ஒளி, பகல் நேரம், சுக்கிலபட்சமெனும் வளர்பிறை காலத்தும், காலத்தேவதையோடு தங்கிய ஆறுமாதங்களில் ஆன உத்திராயண காலமாகிய ஆறு மாதங்களில் தமிழ் மாதக் கணக்கில் தை மாதம் தொடங்கி ஆனி மாதம் முடிய என்க. இறக்கும் யோகிகள் இறந்த பின்னர் பிறவாதவர்களாவர். இரவு நேரம், புகை சூழ்ந்த இடம் அமரபட்சம் என்னும் தேய்பிறைக் காலம் மற்றும்

காலதேவதையடங்கும் ஆறு மாதங்களாகிய தட்சிணா யணம் எனும் ஆடிமாதம் முதற்கொண்டு மார்கழி மாதம் ஈரான ஆறுமாத காலங்களில் இறக்கும் யோகிகள் மறுபடியும் பிறப்பார்கள். என்பதை அறிவாயாக.

அங்கி-அக்கினி-நெருப்பு; வெண்மையாம் காலம்-வெண்மை என்பது சுக்கிலம் எனவே சுக்கிலபட்சம் என்க, தங்கியயறு திங்கள்-ஆறு மாதங்கள்; கங்குல்-இருட்டு; கருப்பு-கறுப்பு-இருண்ட காலம் இரவில் நிலவு குறைந்து வரும் அமரபட்சமெனும் தேய்பிறைக் காலம் என்க.

ஏதமான தன்றயிவ் விரண்டுமாயும் யோகிதான்
வேதமோதி வேழ்வி தான் மெய்த்தவங்கள் செய்துளோ
ரேதுவாய் நற்பதங்க ளெய்தி வீடுமெய்துவர்
ராதலாகி யோகமே செய் என்று மாயனோதினான். 18

குற்றமில்லாததாகிய இவ்விரண்டு அயனங்கள் இருந்தபோதும், யோகிகள், வேதங்களை ஓதுவோர் உண்மையான தவங்கள் செய்வோர் ஆகியோர் தத்தமது வழியில் நன்னிலை அடைந்து மோட்சமெனும் பிறவா நிலை எய்துவார்கள். ஆகையினால் நீ யோகத்தையே செய்வாயாக எனக் கண்ணன் அருச்சுனனிடம் கூறினான்.

ஏதம்-குற்றம்; வேழ்வி-வேள்வி-யாகம். ஏதுவாம்-தமக்கு ஏற்ற வழியில் நற்பதம்-வீடு-மோட்சம்.

இவ்வத்தியாயத்திற்குச் சுத்தப் பிரக்ஞானதார யோகம் எனப்பெயர் உண்டு.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–8

அட்சர பிர்ம யோகம்

1. அர்ச்சுனன் சொல்கிறான்! புருஷோத்தமா! அந்த பிர்மம் எது? ஆத்ம ஞானம் யாது ? கர்மமெனபது யாது? பூதஞானம் யாது? தேவஞானம் என்பது என்ன?

2. யாக ஞானம் என்பது என்ன? இந்த தேகத்தில் எப்படி இருக்கிறார்? மேலும் தம்மைத் தாம் கட்டியவர்களால், இறுதிக் காலத்திலேனும் எவ்வாறு அறியப்படுகிறாய்.

3. ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்! அழிவற்ற பரம் பொருளே பிர்ம்மம்; அதன் இயல்பை அறிதல் ஆத்ம ஞானம் எனப்படும், உயிர்த் தன்மையை விளைவிக்கும் இயற்கை கர்மம் எனப்படுகிறது.

4. உடலை எடுத்தவர்களில் உயர்ந்தவனே! அழிவுபடும் இயற்கையைக் குறித்தது பூத ஞானம், புருஷனைப் பற்றியது தேவஞானம், உடம்புக்குள் உன்னை அறிவது யாக ஞானம்.

5. எவன் இறுதிக் காலத்தில், என்னுடைய நினைவுடன் உடம்பைத் துறந்து கிளம்புகிறானோ, இறப்போன் எனதியல்பை எய்துவான். இதில் ஐயமில்லை.

6. குந்தியின் மைந்தனே! மரணத் தருவாயில் எந்த எந்த ஸ்வரூபத்தை சிந்தித்த வண்ணமாய் உடலைத் துறக்கின்றானோ, எப்போது அத்தன்மையிலேயே கருத்துடையவனாய் அந்த அந்த ஸ்வரூபத்தையே அடைகிறான்.

7. ஆதலால் எல்லாக் காலங்களிலும் என்னை நினை. போர் செய்! என்னிடத்தே மனத்தையும் புத்தியையும் அர்ப்பனம் செய்வதனால், ஐயமின்றி என்னையே பெறுவாய்.

8. வேறிடம் செல்ல விரும்பாமல், யோகம் பயிலும் சித்தத்துடன், சிந்தனை செய்து கொண்டிருப்பவன் தேவனாகிய பரம புருஷனை அடைகிறான்.

9. கவியை, பழையோனை, ஆள்வோனை, அணுவைக் காட்டிலும் நுண்ணியவரை, எல்லாவற்றையம் தாங்குபவரை, சூரியனின் நிறம் கொண்டிருப்பவரை, எண்ணுவதற்கரிய வடிவுடையவரை, அஞ்ஞான இருளுக்கு அப்பாற்பட்டவரை எவன் நினைக்கிறானோ,

10. இறுதிக் காலத்தில் அசைவற்ற மனத்துடன், புருவங்களிடையே உயிரை நன்கு ஏற்றி, பக்தியுடனும், யோகபலத்துடனும் நினைத்துக்கொண்டு, அவன் அந்தக் கடவுளாகிய பரம புருஷனை அடைகிறான்.

11. எந்த நிலையை வேதம் உணர்ந்தோர் அழிவற்ற தென்பார்களோ, விருப்பமற்ற முனிவர்கள் எதனுட் புகுவார்களோ, எதை விரும்பி, பிர்மச்சரிய விரதம் காக்கப் படுகிறதோ, அந்தப் பதத்தைப்பற்றி உனக்குச் சொல்கிறேன்.

12. எல்லா வாயில்களையும் நன்கு கூட்டி, மனத்தை உள்ளத்தில் நிறுத்தி, உயிரைத் தலையின் உச்சியில் நிலை நிறுத்தி,யோக தாரணையில் உறுதிபெற்று.

13. ஓம் என்ற பிர்ம்ம எழுத்தையே ஜபித்துக் கொண்டு, என்னை ஸ்மரிப்பவனாய், உடம்பைத் துறந்து பரமகதி பெறுகிறான்.

14. நித்திய யோகத்தில் இசைந்து, வேறு நினைப்பின்றி, என்னை எப்பொழுதும் நினைக்கிறானோ, அந்த நித்திய யோகத்தில் இசைந்திருக்கும் யோகிக்கு நான் எளிதில் அகப்படுவேன்.

15. என்னை அடைந்து பரம சித்திபெற்ற மகாத்மாக்கள், நிலையற்றதும், துன்பத்தின் ஆலயமுமாகிய மறுபிறப்பை அடையமாட்டார்கள்.

16. குந்தியின மகனே! பிர்மலோகம் வரை எல்லா உலகங்களும் மறுபிறப்பு உடையன, ஆனால் என்னை அடைந்தவனுக்கு மறுபிறப்பு இல்லை.

17. பிர்மாவுக்கு எது ஒரு பகலோ, அது ஆயிரம் யுகங்களைக் கொண்டது, இரவும் ஆயிரம் யுகங்களைக் கொண்டது என்று யார் அறிகின்றார்களோ, அந்த மக்களே இரவு பகல் என்பதன் தத்துவத்தை அறிந்தவர்கள்.

18. பிர்மாவின் பகல் தொடங்கும்போது, எல்லா விதமான சராசரத் தொகுதிகளும், மறைவுபட்ட உலகத்திலேயே மீண்டும் மறைகின்றன.

19. அருச்சுனா! அதுவே இந்த உயிரினங்களின் தொகுதிகள். மீண்டும் மீண்டும் தன் வசமின்றியே, இரவு வந்தவுடன் அழிகிறது. பகல் வந்தவுடன் பிறக்கிறது.

20. ஆனால் அந்த அவ்யக்தத்தை (இந்திரியங்களுக்குப் புலப்படாதவை) காட்டிலும் மிகவும் உயர்ந்த வேறான சாஸ்தவமான, வெளிப்படா தன்மையுடன் எது இருக்கின்றதோ, அது எல்லா உயிர்களும் அழிகையில் தான் அழிவதில்லை.

21. அவ்யக்ந்தம் அழிவற்றது எனப்படும், அதனையே பரமகதி என்பர், எதை எய்தியபின் மீள்வதில்லையோ, அதுவே என்னுடைய பரமபதம். (உயர்ந்தவீடு)

22. அருச்சுனா! எவனுள்ளே எல்லா உயிர்களும் இருக்கின்றனவோ, எவனால் இவை எல்லாம் நிறைந் திருக்கிறதோ, அந்த பரம புருஷன் வேறிடம் செல்லாத பக்தியால் அடையப்படுவான்.

23. எக்காலத்தில் இறப்பதால், யோகிகள் மீளாத நிலையும், மீளும் நிலையும் பெறுவாரோ! அக்காலத்தைச் சொல்கிறேன், பரதர் ஏறே !

24. தீ, ஒளி, பகல், சுக்கில பக்ஷம், உத்திராயணத்தின் ஆறு மாதங்கள் இவற்றில் இறக்கும் பிர்ம்ம ஞானிகள் பிர்மத்தை அடைகிறார்கள்.

25. புகை, இரவு, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயத்தின் ஆறு மாதங்கள் இவற்றில் இறக்கும், அந்த யோகி சந்திரனின் ஒளியைப் பெற்றிருந்து மீளுகிறான்.

26. ஏனெனில் இந்த ஒளி வழியும், இருள் வழியும், சாசுவதமாகக் கருதப்பட்டன. இவற்றுள் ஒன்றினால் மீளாப் பதம் பெறுவான். மற்றொன்று மீளும் பதம் தருவது.

27. பார்த்தா! இவ்வழிகள் இரண்டையும் உணர்ந்த யோகிகள் மயக்க முறுவதில்லை. ஆதலால் எப்போதும் யோகத்தில் கலந்திரு !

28. யோகி இதனை அறிவதால், வேதங்களிலும், யாகங்களிலும், தவங்களிலும், தானங்களிலும் எந்த புண்ணியத்தின் பயன் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவை அனைத்தையும் கடந்து செல்கிறான். மேலும் ஆதி நிலையாகிய பரநிலையை எய்துகிறான்.

விளக்கவுரை

வியாசர் தமது பகவத் கீதையின் இந்த எட்டாவது அத்தியாயத்திற்கு அட்சய பிர்ம யோகம் எனத் தலைப்பிட்டு இதில் இருபத்து எட்டு சுலோகங்களை இயற்றியுள்ளார்.

சுவடியில் ஆசிரியர் தமது இந்த எட்டாவது அத்தியாயத்திற்கு ஏழுவகை வினாவத்தியாயம் எனத் தலைப்பிட்டு பதினெட்டு விருத்தங்களை எழுதியுள்ளார்.

தொடக்க விருத்தத்தில் சுவடி ஆசிரியர், இடையர்தம் தாம்புக் கயிற்றினால் கட்டப்பெற்றவன் கண்ணன் என்ற செய்தியைக் கூறுகிறார். இது வியாசரால் கூறப்படாத ஒன்று.

விருத்தம் 2. இதில் அருச்சனன், கண்ணனிடம், அதிபூதம், அதிதெய்வம், அதியக்ஞம், பிர்மம் ஆகியவை என்றால் என்னவெனக் கேட்கிறான். இது வியாசரின் இவ்வத்தியாய முதல் சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 3. இதில் பாம்பனையின் மேல் படுத்திருப் பவனாகிய கண்ணன்-திருமால்-பதில் சொல்லத் தொடங்குவது.

விருத்தம் 4. இதில் அகத்தியாகம், ஆத்மத்தியாகம், சிருஷ்டி-எனும் உயிர்களின் தோற்றம்; அகங்காரம்-என்பனவும் பூத தெய்வம் பற்றியும் உள்ளது.

விருத்தம் 5. இறப்பவர்கள் என்னை வந்து அடையும் விதம் எவ்வாறு என்று கண்ணன் கூறத் தொடங்குகிறான் மேற்கண்ட செய்திகள் வியாசரின் மூன்றாவது சுலோகத்திலும் நான்காவது ஐந்தாவது சுலோகத்திலும் உள்ளவைதான்.

விருத்தம் 6. இதில் சிறப்பான செய்தி-உடலை விட்டு உயிர் பிரியும் நேரத்தில் யார் எதைப்பற்றி சிந்திக் கிறார்களோ அதுவாக அடுத்த பிறவியில் பிறப்பார்கள் என்பது. இது வியாசரின் ஆறாவது சுலோகத்தில் உள்ளதுதான்.

விருத்தம் 7. தன்னை வந்து அடைபவன்யார். அவ்வாறு அடையாதவன் நிலை என்ன என்பதைக் கண்ணன் சொல்லத் தொடங்குவது.

விருத்தம் 8. இதில் கண்ணன் தான் எல்லாப் பொருள்களையும் அறியக்கூடியவன், பழமையானவன் மற்றும் எல்லோரையும் அவரவர்களுக்குரிய காலத்தில் இறக்கச் செய்கிறவன். அவரவர் வேண்டியதை அவரவர் களுக்குக் கொடுப்பவன். இருளை நீக்கும் சூரியனைப் போன்றவன் என்றெல்லாம் கூறிக்கொள்கிறான். வியாசரின் சுலோகம் எதிலும் இவ்வளவு விரிவாகக் கூறப்பெறவில்லை.

சிந்தனையை வேறு இடத்திற்குச் செல்ல விடாமல் யோகம் பயில்பவன் பரமபுருஷனை அடைவதாக வியாசர் இவ்வத்தியாயத்தின் எட்டாவது சுலோகத்தில் கூறுகிறார்.

விருத்தம் 9. சாகும் தருவாயில் உயிர் மூச்சை இரு புருவங்களுக்கு இடையே நிறுத்தி யோகிகள் தங்களது உடலை விடுவார்கள் எனக் கூறப்பெற்றுள்ளது. இதுவே வியாசரின் பத்தாவது சுலோகத்தில் உள்ளதுதான்.

விருத்தம் 10, 11. இதில் வேதங்களைக் கற்றுணர்ந்த வர்கள் அடைய விரும்பும் பரம்பொருள் எதை என்பதைச் சொல்கிறேன்-எனக் கண்ணன் கூறுவது பின் அடுத்த

விருத்தத்தில் ஐந்து புலன்களையும் அதனதன் வழியே அடைத்து பிராணவாயுவை பிர்ம கபாலமெனும், தலையின் உச்சியில் பிராணவாயுவை நிறத்துவது பற்றிக் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 12. ஓம் எனும் மூல மந்திர எழுத்தை வாய்விட்டுச் சொல்லாமல், மௌனமாக மனத்திடையே நினைக்கவேண்டும் எனக்கூறப்பெற்றுள்ளது. இக்கருத்து வியாசரின் பதின்மூன்றாவது சுலோகத்தில் சொல்லப் பெற்றிருக்கிறது. ஆனால் வாய்விட்டுச் சொல்வதோ வெளியில் ஓசை கேட்கும்படியோ கேட்காதபடி சொல்வதோ என்பது பற்றி எதுவும் சொல்லப்பெற வில்லை- "ஜெபித்து" எனும் சொல் வருகிறது. இது ஜெபம் என்பது வாயிலிருந்து ஓசை வெளிப்படாமல் சொல்வதையே குறிப்பிடுகிறது. எனவே இருவர் கருத்தும் ஒன்றே என்க.

விருத்தம் 13. ஜபித்தவாறு இருந்த யோகிகள் தான் தன்னை வந்தடைய ஓராண்டு அல்லது ஆறுமாத காலம் ஆகும் எனக்கூறுவது இது போன்ற காலவரையறை வியாசரால் கூறப்பெறவில்லை.

விருத்தம் 14. புணணியங்களே செய்தவர்கள் கூட தன்னை வந்து அடைய இயலாமல் பிர்மலோகத்தில் சில காலம் இருந்து பின்னர் தன்னை வந்து அடைவதாகக் கூறி பிர்மலோகத்தின் ஒரு ஆண்டு என்பது என்னவெனவும், ஒருநாள் என்ன அளவு கொண்டது எனவும் கூறப் பெறுவதோடு, பிர்மலோகத்தில் பகலில் தோன்றுவன அனைத்தும் இரவில் அழிந்து விடுவனவாகும் எனவும் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. இந்த பிர்மலோக இரவு பகல் கணக்கு வியாசரின் பதினேழாவது சுலோகத்தில் இருக்கிறது. மேலும் பிர்மலோகத்தில் உயிரினங்கள் பகலில் தோன்றி இரவில் அழியும் தன்மையை உடையன வென்பதும் சுலோகம் பதினெட்டில் உள்ளது.

விருத்தம் 15. இதில் வியக்தம்-அவ்வியக்தம் என்பது பற்றிக் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 16. யோகிகள இறக்க வேண்டிய காலம் எதுவெனக் கண்ணன் கூறப்போகிறான்.

விருத்தம் 17. இதில் உத்திராயண புண்ய காலத்து சுக்கில பட்சத்துப் பகலில் இறப்பவர்கள் மோட்சத்தை அடைவதாக தெரிவிக்கப்பெற்றுள்ளது. இதனை அடுத்து இவ்வத்தியாயத்தின் நிறைவு விருத்தத்தில் இவ்வாறு இரண்டு புண்ய காலங்களாக இருந்தாலும் யோகிகள் மற்றும் வேதபுருஷர்கள் தத்தம் நிலையில் என்னை வந்து அடைகிறார்கள். ஆகவே நீ யோகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கண்ணன் அருச்சுனனிடம் கூறுவதாக நிறைவடைகிறது.

மேற்கூறப்பெற்ற சுவடி ஆசிரியரின் கருத்துக்கள் வியாசரின் இருபத்து ஆறாவது சுலோகத்தில் இருளும் ஒளியும் சாசுவதம்-நிலையானது என்றும், ஒருவன் இதில் ஒரு வழியின் மூலம் மீளாப் பதம் பெருவான் எனவும் மற்றொன்றாகிய தட்சிணாயண புண்ய காலத்தில் இறப்பவன் சந்திரனின் ஒளியைப் பெற்றிருந்து பின்னர் மீண்டு வந்து தன்னை அடைகிறதாகவும் கூறப் பெற்றுள்ளது. ஆயினும் இவ்விரண்டைப் பற்றியும் அறிந்த யோகிகள் மயக்கமுறுவதில்லை. ஆகவே நீ எப்போதும் யோகத்தில் கலந்தே இருப்பாயாக எனக் கண்ணன் அருச்சுனனிடம் கூறுகிறான்.

இவ்வத்தியாயத்தில் யோகியின் இறக்க வேண்டிய காலம் பற்றிக் கூறப்பெற்றுள்ளதைக் காணலாம். ஆனால் எந்த யோகியாலும் தான் இறக்கவேண்டிய காலத்தைத் தன்னால் நிர்ணயித்துக் கொள்ள இயலாது. பீஷ்மரைப்

போன்ற அதற்கான சிறப்பு வரம் ஒன்றைப் பெற்றவ னாலேயே அது இயலும் என்பதை வியாசரே தமது மகாபாரதக் கதையில் கூறுகிறார்.

போரில் அடிபட்டு இனியும் உயிர் வாழ இயலாது என்ற நிலையை அடைந்துவிட்ட பீஷ்மர், இன்னும் உத்திராயணம் வராத காரணத்தால் அதுவரை தன்னுடைய உயிரை உடலிலிருந்து நீங்காதபடி அம்புப் படுக்கையின் மேல் படுத்து, காத்திருந்து, அப்படிப்பட்ட உரிய காலம் வந்த பிறகு உயிர் துறப்பதாகக் கூறப் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

மேலும் இவ்வத்தியாயத்தில், அருச்சுனனால் கேட்கப்பெறும் ஏழு வினாக்களுக்கு உரிய விடை கண்ணனால் கூறப்பெற்று, நிறைவாக யோக நிலையே அருச்சுனனுக்கு அறிவுரை கூறுவதாக உள்ளது.

பகவத் கீதையை கற்றுணர விரும்புகிறவர்கள் இந்த அத்தியாயத்தைத் தொடர்ந்து பலமுறையும் படித்து இதில் கூறப்பெறும் கருத்துக்களைச் சிந்தித்துப் பார்ப்பதன் மூலம் தங்களின் விருப்பத்தை நிறைவு செய்து கொள்ள இயலும்.

▪▪▪▪▪▪▪

ஒன்பதாவது மாயா விகாரவத்தியாயம்

ஈர் வன் றுயர் களையும் பத மீதன்று கொல்லெனவே
யார் வஞ்செய்து விசையன் கொளு மாசங்கையைக்
கார் வந்தென வவன்முன்புறு களிகொண்டெழு வெளியே
தேர் வெண் பரிகுசை கொ டெழுபாகன் றிரு மொழிவான். 1

அருச்சுனனின், துயரைக்களையும் விதம் இதுவே என்பதை அறிந்து, மேலும் அருச்சுனன் கொண்ட சந்தேகத்தைத் தீர்க்கும் பொருட்டு கரிய மேகங்கள் திரண்டு வந்தன போல, அவ்வருச்சுனன் முன்பாக மகிழ்ச்சியுடன் வெளியே தேரிலே பூட்டப்பெற்ற வெள்ளைநிறக் குதிரைகளை ஓட்டக் கூடிய சவுக்கைக் கையிலே கொண்ட பாகனாகிய கண்ணன் இவ்வாறு கூறலானான்.

ஈர்-இரண்டாக்க முடியாத, வன்றுயர்-வன்+துயர்-கொடிய துன்பம், யார்வஞ் செய்து-ஆர்வம் செய்து-ஆவலுடன், மா சங்கை-பெரிய சந்தேகம்; கார் வந்தென-கரிய மேகங்கள் திரண்டு வந்தார்ப் போலே, களிகொண்டு-மகிழ்வுடன்; வெளியே-என்பது இதுவரை தான் இன்னார் எனக் காட்டாமல் இருந்த கண்ணன் தற்போது அருச்சனன் தன்னையார் என்று அறியும்படியாக வெளிக்காட்டி எனப்பொருள் கூறப்பெற்றுள்ளது. தேர் வெண் பரிகுசை-தேரில் பூட்டப்பெற்ற வெண்மை நிறக்குதிரைகளை ஓட்டக்கூடிய சவுக்கு அல்லது சாட்டை எனும் ஒன்று; பாகன் - தேரோட்டி.

அறையும் பொருள்களின்முன் பனுவ மொன் றியத் தனை
மறையும் பொருள்களின் முன்பவரையும் பொருளினமே
லிறையுந் துயரது வின்றி முன்னிசை யசை வொ
டுறையுந் துகளற நின்றதை மொழிகின்றன னுணர்நீர். 2

பலரும் அறியும்படி கூறப்பெற்ற, காணப்பெறும் பொருள்களில் முன் உள்ள அனுபவங்களின்படி,

கண்ணாற் காண இயலாது மறைந்துபட்ட பொருள்களில் மிகப் பழமையானது, துக்கமில்லாததுமான சந்தேகமும் வெறுப்பும் இல்லாமல், எல்லாவற்றோடும் பொருந் தினதைக் கூறுகிறேன் உணர்ந்து கொள்வாயாக.

அறையும்-அறியும்படிக் கூறப்பெற்ற, துயரது வின்றி-துக்கம் இல்லாமல், முன்னிசை யசை-முன்னால் இருந்து கொண்டு இயங்குவது

அழிவொன்றில தறனொன்றிய தரின்றி யத்தனமேல்
வழிவந்த மெய்யறிவன வில ரேனை ரியங்கனு மருவா
திழி தந்திடு சென்னங்கொடு மரணம் கொடு மிஞ்ஞனே
யுழி தந்திகம் பர மொன்றிய வுருவங் களி னுளல்வார். 3

அழிவு என்ற ஒன்று எனறுமே இல்லாத, அறவழி நின்றதாகிய ஞானமே மேலானது. இவ்வாறான மெய்ஞானமில்லாதவர்கள், என்னை வந்து அடையாது, இழிவைத் தரக்கூடிய பிறத்தலையும் மீண்டும் இறத்தலையும் தரக்கூடிய இவ்வுலகத்திலேயே இருந்து கொண்டு, இவ்வுலகில் மட்டுமில்லாமல் மேல் உலகத்திலும் கூட உருவத்தைக் கொண்டு அல்லல் உறுவார்கள்.

அழிவொன்றில-அழிவு என்பது இல்லாத, அறவழி-நல்வழி, மருவா-கூடாது-சேராது; சென்னம்-பிறப்பு; யுழி-உழன்று.

வேறு

ஆரு மறியப் படாமையே யெனக்கு வடிவாயுடையனான்
யாரு முலகங்களை யடையப் பரப்பி நிற்பதிலினாற்
சாரு முலகிற் சரா சரங்க ளெனை யேய வற்றை யான்
சாரேன்.
சேரும் பரிசு நின்றாப் போலத் தெழியா யாற் குந்திகமுமால்.4

யாரும் என்னை அறிந்து கொள்வதில்லை. அப்படிப் பட்ட உருவத்தை நான் கொண்டிருக்கிறேன். எல்லா உலகங்களிலும் பரவி இருப்பவன் நான். ஆகையினால், அண்ட சராசரங்கள் எதிலும் நான் சார்ந்து நிற்பதில்லை. ஆனால் இதைப் பற்றித் தெரியாதவர்களுக்கு எல்லா உலகத்திலும் நானே இருக்கிறார்ப் போல தோன்றுகிறேன்.

வடிவு-உருவம்; பரப்பி-பரந்து; சாரும்-சேர்ந்து; சராசரம்-மேலேழு கீலேழு எனும் பதினான்கு உலகங்கள்; திகழும்-தோற்றம் தரும். இப்பாடல் ஒரு அறுசீரடி யாசிரிய விருத்த வகையது.

முன்னே யொன்றுங் கலவாதி யானிற்பன் முளுதுமாய் நின்ற
வன்னேர்மை யினா லுலக மென்னோ டங்கங் கலவாதா
தலினாலே
லென்னே யென்ற னியற்கை யினைப் பார் யிந்தச்
செகமெல்லா
மன்னே என்றன் மாயை பெறு மகங்காரமு நான்
றருவன்காண். 5

எல்லாவற்றிற்கும் முன்னே எதிலும் கலக்காமல் நிற்கிறேன். எல்லாவற்றிலும் முழுமையாக நிற்பவன் ஆகையினால் உலகில் என்னுடைய அங்கங்கள் கலப்பதில்லை. இப்படிப்பட்ட என்னுடைய இயற்கையைப் பார்! இந்த உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் என்னுடைய மாயையினால் மயக்கமுறும். அவற்றிற்கு அகங்காரத்தைத் தருவதும் நானே !

கலவாதி-கலவாது-கலக்காமல்; முளுதுமாய்-முழுவதுமாய்; செகம்-உலகம்-உலகத்து வாழ் உயிர்கள். என்றன் மாயை பெறும்-என்பது நான் மாயையை உண்டாக்கி உயிர்களுக்குத் தருகிறேன். என்றது-நான் மாயையில் பிடிபடுவேன். என்பது அல்ல-என்னுடைய மாயை என்பதும் அல்ல என்க.

என் னுருவிற் புணராதே யென்னை விடத் தோன்றாதே
மன்னுயிர்க ளெனை யென்று சேர்ந்து வரும் வகை கேட்கி
லுண்ணு மிட மெங்கு நிறைந் தொளிர் கின்ற வானெங்குந்
துன்னியது செறி காற்றின் றோற்றம் போற் சுடர் வேலோய்! 6

என்னுடைய உருவத்திலே பொருந்தாமலும், என்னை விட்டுவிட்ட எண்ணமெனும், மண்ணில் உள்ள உயிர்கள் எல்லாம் என்னையே சார்ந்து வரும். அது எப்படி என்றால், ஒளிமயமான ஆகாயத்தில் எல்லாவிடத்திலும் நிறைந்திருக்கும் காற்றைப் போல என்று அறிவாயாக! ஒளிவிடும் வேலை ஏந்திய அருச்சுனா !

புணராதே-சேராதே! செறிகாற்று-நிறைந்து நிற்கும் காற்று- இப்பாடல் ஒரு மறைவான கருத்தைக் கூறுகிறது. காற்று ஆகாயத்தில் நிரம்பியுள்ளது. ஆயினும் அது ஆகாயத்துடன் கலப்பதில்லை, ஆகாயம் உள்ள மட்டும் காற்றும் இருக்கும். இதில் வானம் மட்டுமே கணணுக்குத் தெரிவது போன்று உள்ளது. ஆனால் காற்று கணணுக்குத் தெரிவதில்லை என்பனவாகும்.

ஈண்டு பொருளிவை யனைத்து மிறக்குங் கா லென்னிடையே
மாண்டு புகும் பிறக்குனாள் மற்றவை தன் வான் முறையே
மீண்டு பிறப் படு மெல்லா மாதலினான் மெய்ப் பார்க்கி
லாண்டு முயிர் படைததுக் காத்தழிக் கின்றேன் யா னே காண். 7

இவ்வுலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் இறக்கும் காலத்தில் இறந்து என்னை வந்து அடைகின்றன. பின்னர் அவைகளின் விதிமுறைப்படி மீண்டும் பிறப்பை எடுக்கின்றன. ஆகையால் உண்மை என்னவென்று ஆராய்ந்து பார்த்தால், என்றும் எல்லா உயிர்களையும் படைத்து அவைகளைக் காப்பாற்றி அழிக்கின்றவன் நானே என்பதைக் காண்பாயாக!

ஈண்டு-இவ்வுலகில்; தன் வான் முறையே-தனக்குறிய விதிமுறைப்படி; மெய்ப்பார்க்கில்-உண்மை என்னவென்று பார்த்தல்.

விலங்கனையாய் பலன் கழுடன் வேண்டல் வேண்டாமையை
விட்டு
சலங்கொள் வினைகளவை செய்வத தனா லென்னையவை
சாரா
வுலண்டு வாயால் நூற்றந்த நூலாற் கட்டுண் பதுபோலப்
பலன் கணினை வாரவற் றாலே கட்டுண்டாங்கே
படருழப்பார்.8

விலக்க இயலாத பலன்களுடன் விருப்பு, வெறுப்பு களை விடுத்து, துன்பத்தைத் தரக்கூடிய செயல்களைச் செய்வதனாலே, அப்படிப்பட்டவர்கள் என்னை வந்து அடைவதில்லை. வண்டு தன்னுடைய வாயினால் நூலை உண்டாக்கி தன்னையே சுற்றிக்கொண்டு பின் அதனின்றும் வெளியே வர வழியில்லாமல் அதனுள்ளேயே இறந்துவிடுவது போல, பலன்களையே நினைத்து செயல்படுவோர், அந்தச் செயல்களினாலேயே கட்டப்பெற்று உழல்வார்கள்.

விலங்கனயாய்-விலக்கனையாய்-விலக்க முடியாதனவாய்; பலன்கழுடன்-பலன்களுடன், சலங்கொள்-துன்பம் நிறைந்த, வுலண்டு-உழன்று, சுற்றிச்சுற்றி; பலன்கணினைவார்-பலன்கள் நினைவார்-பலனையே எதிர்பார்ப்போர்.

ஊர்வன நிற்பனவாக வுலகவை யுண்டாக்குமெனை
யோர்வு பெற வறியாதார் மகனென்றே யிகள்ந்திடுவர்
வேறென நெஞ்சத் தாசை வினைகளை மிடையச் செய்
வராரெனில்
வர்கடாமு மரக்கரோ டசுர ராவார். 9

அசைவனாகவும் அசையாது நிற்பனவாகவும் இவ்வுலகை உண்டாக்கும் என்னை, உயர்வுடன் அறியாதவர்கள் என்னை ஒரு சாதாரண மனிதன் என்று

இகழ்ந்திடுவார்கள். இப்படி ஒரு எண்ணத்தை அவர்கள் தம் நெஞ்சங்களில் வேர்விட செய்வார்களானால், அவர்கள் எல்லாம். அரக்கர்களும் அசுரர்களுமாவார்கள்.

ஊர்வன-அசையும் தன்மையுடைய உயிர்கள்; யேர்வுபெற-உயர்வுபெற, இப்பாடல் ஒரு கலி விருத்தம்.

அறிவினா லெனையே யாக வறிந்து கொண்ட மைதியாலே
பொறிவழியடைத் தெப்போது மென்னையே போற்றிசெய்து
நெறியினால் வழுத்தி வாயா லென்னையே நினைந்து
நெஞ்சாற்
செறிதரு மவரே கண்டாய் தேவரிற் றெரியப் பட்டோர். 10

அறிவினால் என்னை யார் என்பதை அறிந்து கொண்டு, அமைதியான குணத்தினாலே ஐம்பொறி வழிகளை அடக்கி எப்போதும் என்னையே புகழ்ந்து வாழ்த்தி மனத்தால் நினைந்து, மேன்மைமிக்க அவர்களே தேவர்களில் உயர்ந்தோராவர்.

என்னையே யாக-என்னை எல்லாவற்றிற்கும் மேலானவன் என்பதாக, போற்றி செய்து-பெருமையாய் பேசியும், பாடியும், செறிதருமவர்-மேன்மை மிக்க அவர்கள்.

காலத்தாலும் பொருளிடத்தும் கணித்தற் கரிதாகிய
வென்னை
ஞாலத்தார்கள் புகழ வரிய ஞான யோகங்களி னாலே
கோலத்தால் வேறாகவு மெய்க்குறியா லொன்றாக
வுங்கொண்டு
சாலத் தாள்வார் அவருடைய தன்மையினை நான்
சாற்றக்கேள்.11

காலம், பொருள், இடம் ஆகியவைகளினால் இன்னார் எனவும் இன்னது எனவும் கணிக்கப்பட

முடியாதவனாகிய என்னை, உலகத்தில் உள்ளவர்கள் புகழ்வார்கள், சொல்வதற்கரிய ஞான யோகத்தினாலே உருவத்தால் வேறு வேறாகவும் உண்மையான அடையாளங்களால் ஒன்றே யாகவும் கண்டு கொண்டு மிகவும் தாழ்ந்து பணிந்து வணங்குவார்கள். அப்படிப் பட்டவர்கள் எப்படிப்பட்ட உயர்ந்த தன்மைகளை உடையவர்கள் என்பதைக் கூறக் கேட்பாயாக.

கணித்தற்கரிய-குறிப்பிட்டு சொல்ல இயலாத, ஞாலத்தார்-உலகில் உள்ளவர்கள், கோலம்-உருவம், சாலம்-மிகவும்.

வேறு

வேதமொழி வேள்வி மிகு வேள்வி பிதிற் கட்கே
யீதலுறும் வேள்வி யெரிநெய் சருவி வற்றால்க்
காதலுறுவோர்கள் புரிகாரியமீ தெல்லாம்
நாத முதலாய் பொருளாய வையு நானே. 12

வேதங்களால் சொல்லப்பெறுகின்ற வேள்வி, முன்னோர்களுக்காக செய்யப்பெறும் யாகம், எறியும் நெருப்பில் இடக்கூடிய நெய், மற்றும் நிவேதனமாக இடப்பெறும் பிண்டங்கள் இவைகளை எல்லாம் விரும்பிச் செய்யக்கூடியவர்களின் எல்லாச் செயல் களாகவும், ஒலி முதலான (ஐந்து வகையானதாகிய சத்தம்-ஸ்பரிசம்-ரசம், ரூபம்-கெந்தம்) வையாகவும் இருப்பவன் நானே !

வேழ்வி-வேள்வி-யாகம், சருவி-நெருப்பில் இடம்பெறும் பொருட்கள், காதலுறுவோர்-விரும்பிச் செய்வோர். நாதம்-ஒலி, பொருள்-ஐவகைப் பொருள். இது ஒரு கலிவிருத்தம்.

ஆயிலுல கங்களை யளித்தொளி வளர்க்குந்
தாயினோடு தந்தை யவர் தந்தை தலைக்கண்ணான்
போயின வினைப் பயனழித்தல் புரிவேனா
னேயு மறை நான்கினுட னோமெனு மெழுத்துயான். 13

ஆராய்ந்து பார்க்கில் உலகங்களை உண்டாக்கி அதனை ஒளிமிக்கதாயும் வளர்ப்பவனும், தாய் தந்தையர், அவர்தம் தாய் தந்தையர் எனும் பாட்டன் முதலான வர்களின் வினைப்பயனை நீக்குவதாகிய அருளையும் புரிபவனாகவும், நான்கு வேதங்களுடன் கூட ஓம் எனும் எழுத்தாயும் இருப்பவனும் நானே !

அளித்தொளி வளர்க்கும்-தோற்றுவித்து மேலும் அதனை இருள் சூழாவண்ணம் ஒளிமிக்கதாக வளர்த்து; தலைக்கண்-முற்பட்டோர்-பாட்டன் முப்பாட்டன் என்போர்.

எல்லார்க்குங் கதியுனா னிருவினைப் பார்கனு நா
னெல்லாற்கு முறைவிடம் நானியாற்கு மிடர் திப்பேனா
னெல்லார்குந் தலைவ னானெப் பொருட் குஞ்சான்றுநா
நெல்லார்க்கு நல்லோ னானெப் பொருட்கும் வித்துநான்.14

உயிர்கள் அனைத்திற்கும் போக்கிடமாக இருப்பவன் நான். இருவினைகள் எனும் பாவ புண்ணியங் களை ஆக்குகிறவனும் நான். அனைவரும் தங்கும் இடமாக இருப்பவனும் நான். எல்லோருடைய துன்பங் களையும் தீர்ப்பவன் நான். நானே எல்லோருக்கும் தலைவன். எல்லாப் பொருள்களுக்கும் சாட்சியாய் இருப்பவனும் நானே! எவர்க்கும் நல்லவன் நான். எல்லா உயிர்களும் தோன்றுவதற்கான வித்தும் நானே !

கதி-சென்றடையும் இடம்-இலக்கு, மிடர்திர்ப்பேனா-இடர் தீர்ப்பேன் நான். சான்று-சாட்சி, இது இவ்வாறென கூறப்பெறுவதற்கான காரண காரியன். இவ்விருத்தம்-கலிவிருத்தம்.

தாங்கிய நீரை யெல்லாங் கிரவி யின்ற லத்தினின்று
வாங்கு கின்றேனு மீண்டு மழைகளாய்க் கொடுக்கின்றேனு
மீங்கு மெய்யுணரிலாயானே யாதலால் யாதொன்றேனு
மாங்கு மரிச்சனை செய்கின்றா ரென்னையே
யரிச்சிக்கின்றார். 15

பூமியில் தேங்கியுள்ள நீரையெல்லாம் சூரியனின் உதவியால் ஆகாயத்திற்குள் வாங்குகின்றவனும் நான். பின்னர் அதனையே மழையாகப் பெய்விக்கிறவனும் நானே! இவைகளை எல்லாம் உண்மையாக உணர்ந்து பார்த்தால் எல்லாமே நானே என்பது தெரியும். ஏதேனும் ஒன்றைக் கொண்டு அருச்சனை செய்வார்களேயானால், அந்த அருச்சனையும் நானே மேலும் அவர்களால் அருச்சிக்கப் பெறுவதும் நானே!

இரவி-சூரியன், தலத்தினின்று-பூமியிலிருந்து, மரிச்சனை-அருச்சனை-மந்திரத்தோடு கூட மலர்களைத் தூவி வழிபடுதல். இது ஒரு அறுசீரடி யாசிரிய விருத்தம்.

ஞானமாய் யொன்றாய் நின்ற வென்னையே நானா வாகப்
போன தீவினையின் மாந்தர் வேள்வியாற் பூசித்தலால்
வானமா முலகமேறி வாழ்ந்து மண்ணிடையே வீழ்ந்திட்
டீனமா வாசை யாசையாலே பிறப்பது மிறப்பதாவர். 16

ஞானவடிவமாகவும், ஏகமாகவும் நின்ற என்னை, நினைவில் கொள்ளாது, தீவினையின் காரணமாக வேள்விகள் செய்து வானுலக தேவர்களை வழிபடு கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் வானுலகிற் சென்று, தங்களது புண்ணியங்கள் நின்றவரை, வாழ்ந்து பின்னர் மண்ணுலகில் வீழ்ந்து ஈனமான ஆசையின் காரணமாக பிறப்பதும் இறப்பதுமாக இருப்பார்கள்.

யொன்றாய்-ஏகமாய், நானாவாகப்போன-நினைவு அகற்றிப் போன-மறந்த, வாழ்ந்து-வாழ்வு என்பது விண்ணுலகில் புண்ணியங்கள் செய்த அளவின் காலம் என்பது முன் அத்தியாய விருத்தங்களின் மூலம் அறியலாம். ஈனம்-கீழான தன்மையுடைய.

மின்னையே யனைய வேலா மேவுவார் வேண்டிற் றெல்லாம்
பின்னையே யென்னாதன்றே யளித்தவை காப்பான்
வானோர்
மன்னையே முதலாந் தெய்வம் வணங்கு கின்றாரு மற்றென்
றன்னையே வணங்குகின்றார் தாமறியாததே கண்டாய். 17

மின்னலை ஒத்த வேலினையுடைய அருச்சுனா! என்னை வந்தடைபவர்களுக்கும், வேண்டியதை எல்லாம் பின்னர் தருகிறேன் என்று சொல்லாமல் அன்றே கொடுத்து காப்பவன் நான்! வானுலகத்து மன்னவனாகிய தேவேந்திரன் முதலான தெய்வங்களை வணங்கு கின்றவர்கள், என்னையே வணங்குகின்றார்கள் என்பதை அறியாதவர்கள் என்பதை அறிவாயாக!

மின்னை-மின்னலை, பின்னை-பிறகு, யென்னாதன்றே-என்னாது+அன்றே, மன்னையே-மன்னனையே, வானுலக மன்னன்-தேவேந்திரன்.

தேவரை அடைந்தோர் தேவராவர்கள் பிதிர்கடம்மை
மேவவே வடைந்தோர்ந்தப் பிதிர்களாய் விழங்கா நிற்பர்
யாவர்கள் யாவர் பாலாமவர்களே யாவரென்றா
லாவ வென்னடைந்தார் யானே யாவதற்கைய
முண்டோ. 18

தேவர்களை வணங்கி வழிபட்டவர்கள் அத் தேவர்களே யாவர். பித்ருக்கள் எனும் முன்னோர்களை வழிபட்டோர் அப்பிதிர்லோகத்தையே அடைந்து வாழ்வார்கள், இப்படியாக யார் யார் எதனை வழிபடு கிறார்களோ அவ்வாறே அவ்விடத்தை அடைகிறார்கள். என்னை வழிபட்டு என்னை வந்து அடைந்தவர்கள் நானே ஆவதற்கு எந்த சந்தேகமும் உண்டோ? சந்தேகமே இல்லை என்க.

தேவர்கள்-இந்திரன் முதலான தேவர்கள், பிதிர்கள்-பித்ருக்கள்-முன்னோர்கள், தாய் தந்தை முப்பாட்டன் போன்றோர். வென்னடைந்தார்-என்னை அடைந்தார், யானே யாவர்-என்னை வந்தடைந்தவர்கள் என்னுள் ஒடுங்கியதால் அவர்கள் யானே ஆகினர் என்பது.

போதிலை கனிகாய் நீரே பெற்றவை கொண்டு போற்றி
காதலாற் றூய வன்பாற் றந்தவே களித்துக் கொள்வே
னாதலா லீவ ணோற்ப வுண்ப மற்றவை களே கொண்
டீதலா மெனக் காய் தந்தா லென்னையே யெய்தலாமால். 19

இலை கனி காய், நீர் ஆகியவற்றில் எது உள்ளதோ அதனைக் கொண்டு என்னைப் போற்றித் தூய அன்பினால் அவைகளைத் தருவார்களேயானால், அவைகளை நான் உண்பேன். வேறு ஏதேனும் கொண்டு என்னை வழிபட்டு எனக்காகவே கொடுத்தால் அவர்கள் என்னையே வந்தடையலாம்.

போதிலை-கொத்துடன் கூடிய இலை, பெற்றவை கொண்டு-எது கிடைத்ததோ அதுகொண்டு, களித்து-மகிழ்ச்சியுடன், எனக்காய்-எனக்காக.

எப்பொருடனுக்கும் யானொத்திருத்த லெனக்கு யாரு
மொப்பர் களினி யரின்னாதா ரென வொருவரி ல்லை
யிப்படி யறியு மன்பர் பக்கலே யானு நிற்ப
னப்படி யவரு மென்பா லங்ஙனே யமர்ந்து நிற்பார். 20

எல்லாப் பொருட்களையும் நான் சரி என்று ஏற்றுக் கொள்வதாலே, எல்லோருமே எனக்குப் பிரியமானவர்களே! இனியர், இன்னாதார் என எனக்கு எவருமில்லை. இப்படியாக என்னை அறிந்து கொள்ளக் கூடிய அன்பர்களின் அருகில் நான் இருப்பேன். அவ்வாறே அவர்களும் என்னருகே நிலையாக இருப்பார்கள். .

மொப்பர்-ஒப்பர்-பிரியமானவர்-அன்பர், எினிய ரின்னாதார்-இனியர்+இன்னாதார், பக்கல்-பக்கத்தில், அருகில், அங்ஙனே-அவ்வாறே.

ஊனையே முதலா வென்பா லொருக்கியன் ஞுணர்வால்
நாமும்
நானையே விட்டுத் தீமை புரியினுமவர் கணல்லா
ரேனை யேய புயத்தா யென்றுங் கேடில்லாவின்ப மல்லா
தானையே யொரு கேடில்லை யெங்கனும வருக்கய்யா. 21

உண்பதையே முதற்றொழில் எனக் கொண்டோரும் கூட, என்னிடத்தில் மனத்தை நிலைநிறுத்திக் கொள் வார்களாயினும் வெட்கத்தை விட்டு தீச்செயல்களே புரிபவர்களாயினும் அவர்களும் என்னையே வந்தடைகின்றார்கள். வீரமிக்க தோளினையுடைய அருச்சுனா! அவர்களுக்கும் என்றும் கேடில்லாத சுகமே கிட்டும். இதுவே எனது ஆணை. அதன்படி எங்கும் அவர்களுக்கு கேடு வருவதில்லை.

ஊன்-உணவு, நான்-வெட்கம், மவர்கனல்லார்-அவர்கள்+நல்லார், ஏனையர்-மற்றவர்கள.

வணிகரு மற்றை வேளாண் மாந்தரும் மகளிர் தாமும்
பணிவொடு மென்னைப் பேனிற் பற்றறுத்தி வரென்றா
லணிமுடியரசர் மேன்மையந் துணர டைவராகிற்
றணிவரும் பிறவிதீரச் சாற்ற வேண்டு வதுமுண்டோ! 22

வியாபாரம் செய்வோர், வேளாண்மை செய்வோர் மற்றும் பெண்கள் ஆகியோர் என்னைப் பணிவோடு போற்றிப் புகழ்ந்து பாடியவர்களாயின் பற்றறுத்து பரம பதம் பெறுவர். இப்படி என்றால், முடிதரித்த வேந்தர்கள், மற்றும் மேன்மைமிக்க அந்தணர்கள் ஆகியோரும் அவ்வாறே இருப்பின் அவர்களின் பிறவிப் பிணியும் தீரும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

வணிகர்-வியாபாரம் செய்வோர். பற்றறுத்தி-பற்றை நீக்கி, வேளாண்-விவசாயம் செய்வோர், சாற்ற-சொல்ல,

பற்றறுத்தல் என்பது ஆண்களைக் காட்டிலும் பெண்களால் இயல்வது மிகக் கடினம். அவ்வாறு பற்றறுத்துப் பணியும் பெண்களும் முக்தி பெறுவர் என்பது இவ்விருத்தத்தின் சிறப்பு.

மின்னையே யணைய வாள்வினிற் றனீ விருப்பினோமு
மென்னையே வணங்கி யென்று மென்னையே யிசைவா யாகி
லென்னையே யடைதீ யீயென் றியம்பினா னிலங்கு வாட்கட்
பின்னையே முறுவலோடும் பேய்முலை யுண்ட

பெம்மான்.23

மின்னலைப் போலத் தோன்றி மறையக்கூடிய வாழ்வில், நினைப்பு அற்று, விருப்பத்தோடுகூட என்னையே வணங்கி, என்றும் என்னுடனே இயைந்து இருப்பாயாகில் இறுதியில் என்னையே அடைவாய் என வாளினை ஒத்த கண்களையுடைய இலக்குமிதேவியின் கணவனானவனும், பேயாகிய பூதகியின் முலைப்பாலை யுண்டவனுமாகிய கண்ணன் முகத்தில் புன்முறுவலோடு கூறினான்.

மின்னையே-மின்னலைப் போன்ற, வாள்வினிற-வாழ்வினில், இசைவாகி-உறவாகி, வாட்கட் பின்னை-வாள்+கண்+பின்னை வாளை யொத்த கண்களையுடைய இலக்குமியின் கணவனாகிய கண்ணன்.

ஏழு எட்டு ஆகிய அத்தியாயங்களில் சொல்லப்பட்ட செய்திகளைவிட இந்த அத்தியாயத்தில் பக்தி என்பதன் பொருள் விளக்கமாகச் சொல்லப்பெற்றுள்ளது.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–9

ராஜ வித்யா ராஜ குஹ்ய யோகம்

1. ஸ்ரீபகவான் சொல்கிறார்:- எதைத் தெரிந்து கொள்வதாலேயே தீமையிலிருந்து துக்க வடிவமான உலகியலிலிருந்து, விடுபடுவாயோ, ரகசியமான, அந்த விஞ்ஞானத்துடன் கூடிய ஞானத்தை அருவருப்பு அற்றவனாகிய உனக்கு விஞ்ஞானத்துடன் சொல்லுகிறேன்.

2. ராஜவித்தை, ராஜரகசியம், தூய்மையைத் தருவதில் மிகவும் மாண்புடையது. கண்ணெதிரே காண்பதற்குரியது. அறத்துக் கிசைந்தது. செய்வதற்கு மிக எளிது, அழிவற்றது.

3. பகையைச் சுடுவோய்! இந்த அறத்தில் நம்பிக்கை யற்ற மனிதர், என்னை அடையாமல், நரகச் சம்சாரப் பாதைகளில் மீளுகின்றனர்.

4. அவ்யத்த வடிவாய் என்னால் இந்த அனைத்து உலகம் முழுவதும் சூழ்ந்திருக்கிறேன். பூதங்கள் எல்லாம் என்னிடத்திலே நிலைபெற்றன. நான் அவற்றுள் நிலை பெற்றிருக்கவில்லை.

5. பூதங்கள் என்னுள் நிலைபெறுவன அல்ல. இந்த ஈஸ்வரத் தன்மையுடைய யோக சக்தியைப் பார். பூதங்களைத் தாங்குபவனும், பூதங்களை உண்டாக்கு பவனும் நான் இருந்த போதிலும் என் ஆத்மா உயிரினங்களில் நிலைபெற்றிருப்பதில்லை.

6. எங்கும் செல்கின்ற பெருங்காற்று, எப்படி எப்போதும், வானில் நிலைபெற்றிருக்கிறதோ, அவ்வாறு எல்லா பொருட்களும் என்னுள் நிலைபெற்று இருக்கின்றன எனத் தெரிந்துகொள்.

7. குந்தியின் மகனே! கல்ப முடிவில் எல்லா உயிர்களும், என் இயல்பை எய்துகின்றன. மறுபடி கல்பத்தின் துவக்கத்தில் அவற்றை மீண்டும் நான் படைக்கின்றேன்.

8. இயற்கையின் வசந்தத்தால், தன் வசமிழந்த இந்த அனைத்து உயிர்த்தொகுதிகளையும், திரும்பத் திரும்ப, என்னுடைய இயற்கையின் வசத்தால் ஏற்றுக்கொண்டு படைக்கிறேன்.

9. தனஞ்செயா! அந்தத் தொழில்களில் (கர்மங்களில்) பற்றில்லாமலும், ப்ரக்கிருதியானது, அசைவன, அசையாதன எல்லாம், தோற்றுவிக்கிறது. இந்தக் காரணத்தால் உலகமே சுழல்கிறது.

10. குந்தி மகனே! தலைவனான என்னால் (என்னுடைய) மேற்பார்வையில் ப்ரக்கிருதியானது, அசைவன, அசையாதன எல்லாம், தோற்றுவிக்கிறது, இந்தக் காரணத்தால் உலகமே சுழல்கிறது.

11. என்னுடைய மேலான இயல்பை அறியாதவர்கள் மூடர்கள். மனித உடலைத் தாங்கிக் கொண்டிருக்கும், எல்லா உயிரினங்களுக்கும் தலைவனான என்னைப் புறக்கணிக்கிறார்கள்.

12. வீண் ஆசையுடையோர், வீணான செயல்களைச் செய்பவர்கள், வீணறிவாளர்கள், மதியற்றோர், மயக்கத் திற்கு இடமான இராக்ஷஸ, அசுர, மோகினி சக்திகளின் இயல்பைச் சார்ந்து நிற்கின்றார்கள்.

13. பார்த்தா! ஆனால், தெய்வீக இயல்பைக் கொண்ட மகாத்மாக்கள், என்னை எல்லா உயிர்களுக்கும் முதலானவன் என்றும் அழிவற்றவன் என்றும் அறிந்து, வேறு எதிலும் நாட்டமில்லாத மனத்துடன் வழிபடுகிறார்கள்.

14. திட விரதத்துடன், இடைவிடாது நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டும், முயற்சி புரிவோராகவும், என்னைப் பக்தியோடு வணங்குபவர்களாய் நித்திய யோகிகள் உபாசிக்கிறார்கள்.

15. வேறு சிலர் ஞானவேள்வியால், ஒன்றிய பாவனையுடன் வழிபட்டுக்கொண்டும், மற்றும் சிலர், விராட் ஸ்வரூபத்துடன் ஈஸ்வரனான என்னை, தன்னிலும் வேறாக எண்ணி உபாசிக்கிறார்கள்.

16. நான் ஹோமம், நான் யாகம், நான் ஸ்வதா என்கிற வாழ்த்துரை, நான் மருந்து, நானே மந்திரம், நானே நெய், நானே தீ, நானே அவிர்பாகமும், நானே தான்.

17. இந்த உலகம் அனைத்தையும் தாங்குபவனும், தந்தை, தாய், பாட்டனாரும், அறியத்தக்கவனும், புனிதமானவனும், ஓங்காரமும், யஜுர் என்ற வேதங்களும் நானேதான்.

18. அடையத்தக்க பரமபதம், காப்பவன், ஆள்பவன், சரண்புகுவதற்கான இடம், தோழன், தொடக்கமும் அழிவும், நிலையாகத் தங்குமிடம், நிதானம், அழியாத விதை.....

19. நான் வெப்பம் தருகிறேன். மழையை நான் கட்டி விடுகிறேன். நான் அதைப் பெய்விக்கிறேன். நானே அமிர்தம், நானே மரணம், உள்ளதும் இல்லாததும் நான்! அர்ச்சுனா !

20. மூன்று வேதங்களை அறிந்தோர். சோமம் உண்டோர். பாவம் அகன்றவர்கள். என்னை வேள்வி களால் உபாசித்து வானுலகு தர வேண்டுகின்றனர். அவர்கள், புண்ணிய ஸ்தானமாகிய தேவேந்திர லோகத்தை அடைந்து, ஸ்வர்க்கத்தில் திவ்யமான தேவ போகங்களைத் துய்க்கின்றனர்.

21. அவர்கள் விரிவாகிய வானுலகத்திலே இன்புற்று புண்ணியம் தீர்ந்த உடன் மறுபடி அழிவுடைய உலகத்துக்குத் திரும்புகிறார்கள். இப்படி மூன்று வேத முறைகளைச் சார்ந்திருக்கிற யோகப் பற்றுள்ளவர்கள் திரும்பத் திரும்ப பிறந்து இறத்தலை அடைகிறார்கள்.

22. வேறு எதிலும் நாட்டமில்லாத எந்த பக்தர்கள் என்னை தியானித்துகொண்டு, எந்தப் பயனையும் எதிர்பார்க்காது உபாசிக்கிறார்களோ, இடைவிடாது என்னையே நினைத்துக் கொண்டிருக்கிற அவர்களுடைய நன்மை தீமைகளுக்கு நானே பொறுப்பாவேன்.

23. குந்தியின் மகனே! எந்த பக்தர்கள் நம்பிக்கை யுடன் கூடியவர்களாக இருந்த போதிலும், மற்ற தேவதைகளை வழிபடுகிறார்களோ, அவர்களும் விதி முறைப்படி அல்லாமல், அஞ்ஞானத்துடன் என்னையே தொழுகின்றனர்.

24. ஏனெனில் எல்லா வேள்விகளிலும், உணவு உண்பவனும், தலைவனும் நானேதான், ஆனால் என்னை அவர்கள் உள்ளபடி அறியாதவர்கள். ஆகையால் வீழ்ச்சி அடைகிறார்கள்.

25. தேவதைகளை வழிபடுகிறவர்கள் தேவதைகளை அடைகிறார்கள். பித்ருக்களை வழிபடுவோர்,

பித்ருக்களை அடைகிறார்கள். பூதங்களைத் தொழுவோர் பூதங்களை அடைகிறார்கள். என்னை வழிடுகிறவர்கள் என்னை வந்து அடைகிறார்கள்.

26. எவர் அன்புடன், இலையையேனும், பூவையேனும், கனியையேனும், நீரையேனும் எனக்கு அளிப்பவன் ஆயின் அன்புடன் அளித்த அவற்றை நான் சாப்பிவேன்.

27. குந்தியின் மகனே! எந்தக் கர்மத்தை செய்கிறாயோ, எதை உண்கிறாயோ, எதை ஹோமம் செய்கிறாயோ,எதைத் தானம் அளிக்கிறாயோ, எந்தத் தவம் செய்கிறாயோ அதை எனக்கு அர்ப்பணம் செய்துவிடு.

28. இப்படியாக மங்கலம், அமங்கலம் ஆகிய பயன்களை, கர்மத்தளைகளிலிருந்தும் விடுபடுவாய், துறவெனும் யோகத்தில் இசைந்து, விடுபட்டவனாக, என்னையும் பெறுவாய்.

29. நான் எல்லா உயிர்களிடத்தும் சமமானவன், எனக்குப் பகையும் இல்லை. நண்பனும் இல்லை, ஆனால் என்னை அன்புடன் தொழுவோர், அவர்கள் என்னிடமும், நான் அவர்களிடமும் காணக்கூடியவனாக இருக்கிறேன்.

30. மிகவும் தீய நடத்தை உடையவனானாலும், வேறு எதிலும் நாட்டமின்றி, என்பக்தனாகி, என்னையே வழிபடுவானாகில், அவனை நல்லவன் என்றே கருதுக. ஏனெனில் அவன் நன்கு முயற்சி செய்கிறவன்.

31. விரைவிலேயே தர்மாத்மாவாக ஆகிறான், நித்திய சாந்தியும் எய்துவான். குந்தி மகனே! என்னுடைய பக்தன் அழிவதில்லை. சத்தியத்தை உறுதியாக அறிந்துகொள்.

32. ஏனெனில் பார்த்தா! பெண்களாயினும், எந்த வர்ணத்தவர் ஆயினும், அதேபோலப் பாவிகள் ஆனாலும், எவர்களாக இருந்தாலும், அவர்களும் என்னைத் தஞ்சமடைந்து மேலான கதியை அடைவார்கள்.

33. புனிதமான, அந்தனரும், ராஜரிஷிகளும் எனக்கு அன்பர்களாயின் சொல்லவும் வேண்டுமோ? நிலையற்றதும், இன்பமற்றதுமாகிய, இவ்வுலகப் பிறவி எய்திய நீ, என்னை வழிபடக் கடவாய் !

34. மனத்தை, எனக்காக்கி விடு, பக்தியை எனக்காக்கு, என்னைத்தொழு, என்னை வணங்கு, இவ்வாறு மனம், புலன்களுடன் கூடிய உடலை, என்னிடம் ஈடுபடுத்தி என்னையே அடைவாயாக !

விளக்கவுரை

வியாசர் தமது ஒன்பதாவது அத்தியாயத்திற்கு ராஜ வித்யா ராஜ குஹ்ய யோகம் எனத் தலைப்பிட்டு முப்பத்து நான்கு சுலோகங்களை இயற்றியுள்ளார்.

சுவடி ஆசிரியர் தமது ஒன்பதாவது அத்தியாயத்திற்கு மாயா விகார வத்தியாயம் எனத் தலைப்பிட்டு இருபத்து மூன்று விருத்தங்களை இயற்றியுள்ளார். இதில் முதல் விருத்தத்தில் கண்ணன் அருச்சுனனின் துயரையும், அவன் கொண்ட சந்தேகங்களையும் தீர்ப்பதற்காக பேசத்தொடங்குவதாக உள்ளது. இவ்வாறே கண்ணன் கூறுவதாக வியாசரின் இவ்வத்தியாயத்தின் முதல் சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 2. முதல் விருத்தத்தின் தொடர்ச்சியாகக் கூறப்பெறுவது இதுபற்றி வியாசரின் இரண்டாவது சுலோகத்தில் ராஜவித்தை ராஜரகசியம் என்றெல்லாம் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 3. ஞானமே மேலானது-அவ்வாறு ஞான மில்லாதோர் பிறப்பு இறப்பு எனும் இழிநிலை அடைவார்கள் எனக் கூறுகிறது. இதுவே வியாசரின் மூன்றாவது சுலோகத்தில், அறவழியில் நம்பிக்கையற்ற வர்கள் நரகத்தில் வீழ்வர் எனக் கூறப்பெற்றுள்ளது. இவ்விரண்டின் மையக் கருத்தும் ஒன்றே என்க !

விருத்தம் 4. நான் கொண்டிருக்கும் இப்போதய உருவத்தின் காரணமாக யாரும் என்னைத் தெரிந்து கொள்வதில்லை எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது. இச்செய்தி வியாசரின் சுலோகங்கள் எதிலும் நேரிடையாகக் கூறப்பெறவில்லை.

விருத்தம் 5. எல்லா உயிர்களுக்கும் மயக்கத்தையும் அகங்காரத்தையும் தருபவன் நான். என்ற செய்தி உள்ளது. இவ்வாறான செய்தி வியாசரால் கூறப்பெறவில்லை.

விருத்தம் 6. "ஆகாயத்தில் நிறைந்திருக்கும் காற்றைப் போல" என்ற எடுத்துக்காட்டு வியாசரின் ஆறாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 7. உயிர்கள் இறக்கும் காலத்தில் இறந்து பின் மீண்டும் பிறப்பை அடைகின்றன.

விருத்தம் 8. எல்லா உயிர்களையும், படைத்து பின் காப்பாற்றி அவைகளை அழிப்பதும் நானே எனக் கண்ணன் கூறுவது, பலனைக் கருதி செயல்படுவோர் வண்டு தன் வாயின் நூலால் தன்னைச் சுற்றிலும் பின்னிக் கொண்டு பின்னர் அதனின்றும் தன்னாலே வெளியே வர இயலாமல் அதற்குள்ளேயே இறந்து விடுவதுபோல அழிகிறார்கள் என்ற செய்தி உள்ளது. இப்படி ஒரு எடுத்துக்காட்டுடன் கூடிய செய்தி வியாசரால் கூறப்பெற வில்லை. ஆனால் ஏழாவது சுலோகத்திலும் எட்டு மற்றும் ஒன்பதாவது சுலோகங்களிலும் உயிர்களைத் தோற்றுவிப்பவன் நானே எனக் கண்ணன் கூறும் செய்தி உள்ளது.

விருத்தம் 9. என்னை ஒரு சாதாரண மனிதனாக நினைப்பவர்கள் அசுரர்கள் அரக்கர்கள் எனக் கண்ணனால் கூறப்பெறுகிறது. இதைப் பற்றி வியாசர் தமது பதினோறாவது சுலோகத்தில், என்னை அறியாத வர்கள் மூடர்கள், மதியற்றோர் எனவும் அடுத்து பன்னிரண்டாவது சுலோகத்தில் என்னுடைய இயல்பை அறியாதவர்கள் மதியற்றோர், இராட்சச, அசுர, மோகினி சக்திகளின் இயல்பையுடையவர்கள் எனக் கண்ணன் கூறுவதாக வருகிறது.

விருத்தம் 10. ஐம்பொறிகளை அடக்கி, வாயினால் வாழ்த்தி மனத்தினால் நினைந்திருப்போரே தேவர் களிலும் உயர்ந்தவர் என்று கூறப்பெற்றுள்ளது. இது வியாசரின் இருபதாவது சுலோகத்தில் என்னை வேள்வி களால் உபாசித்து வானுலகம் தர வேண்டுபவர்கள் ஸ்வர்க்கத்தில் உயர்வான தேவபோகங்களைத் துய்க்கிறார்கள் என்பதாகக் கூறப்பெற்றுள்ளது. மேற்கூறிய கருத்துக்கள் ஒன்றேயாயினும், வேறு வேறு அடிப்படையைக் கொண்டதாக உள்ளதைக் கவனிக்க வேண்டும். விருத்தம் கூறுவது பொதுவாகக் கண்ணனை வழிபட்டோர் அடையும் தேவலோக நிலையையும், சுலோகம் கூறுவது தனித்து, தேவலோகமே வேண்டும் என்று வழிபட்டோரையும் குறிப்பிடுவதை உற்றறிய வேண்டும்.

விருத்தம் 11. நான் காலம், பொருள், இடம் ஆகியவைகளினால் இன்னார் எனவோ இன்னது எனவோ கணிக்கப்பெற இயலாதவன் எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது.

விருத்தம் 12. முந்தய விருத்தத்தின் தொடர்ச்சியான இந்த விருத்தத்தில், வேள்வி, யாகம், நெய், மற்றும் ஒலி முதலான ஐந்து வகையானதாக இருப்பவனும் நானே எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது. எனவே தன்னை எவ்வாறு கணித்து அறிவது என்பது பற்றிய செய்தி எதுவும் கூறப்பெறாமல் எல்லாமும் நானே என்று தெரிவிக்கப் பெறுகிறது. இதில் உள்ள பிற்பகுதி கருத்து சுலோகம் பதினாறில் வியாசரால் கூறப்பெற்றுள்ளது. மேலும் சற்று கூடுதலாக ஸ்வேதா என்னும் வாழ்த்துரை, மந்திரம், அவிர்பாகம், தீ ஆகியன யாவும் நானே எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது.

விருத்தம் 13. மேறசொன்ன, வியாசரின் பதினாறாவது சுலோகத்தில் காணப்பெறும் செய்திகள் இந்த விருத்தத்தில் கூறப்பெறுவதோடு கூட, உலகங்களை உண்டாக்கி அவைகளை ஒளிமயமாக ஆக்குபவனும், முன்னோர்கள் செய்த வினைப் பயனைக் கூட நீக்குபவனும் நானே எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது. இதில் முன்னோர்களின் வினைகளைத் தீர்ப்பவன் என்ற கருத்து மட்டும் வியாசரில் இல்லை எனவே இது சுவடி ஆசிரியர் தாமாகக் கூறும் செய்தியென அறியவும்.

விருத்தம் 14. பாவ புண்ணியங்களை ஆக்குபவன் நான். தலைவனும் நானே! சாட்சியும் நானே ! நல்லவன் நான்! வித்து நான், இச்செய்தி வியாசரின் பதினெட்டாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 15. மழையைப் பெய்விக்கிறவன் நான், அருச்சனையும் நான், அருச்சனை செய்யப் பெறுபவனும் நான் இப்பாடலில் உள்ள இந்தச் செய்தி வியாசரின் பத்தொன்பதாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 16. தீவினையின் காரணமாக, வானுலக தேவர்களை வழிபடுபவர்கள் தேவலோகத்தையே அடைந்து அங்கு தாங்கள் செய்த புண்ணியத்தின் அளவாக சிலகாலம் இருந்து பின்னரும் பூலோகத்தில் பிறவி எடுப்பதாகக் கூறப்பெற்றுள்ளது. புண்ணியம் தீர்ந்த உடன் மீண்டும் பூலோகத்தில் பிறக்கிறார்கள் என்ற இக்கருத்து வியாசரின் இருபத்து ஓராவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 17. வேண்டியவர்களுக்கு வேண்டியதைப் பின்னர் தருகிறேன் என்று சொல்லாமல் அப்போதே தருகிறவன் எனக் கண்ணன் கூறும் செய்தி. இதே அளவு தெளிவாக வியாசரால் கூறப்பெறவில்லை.

விருத்தம் 18. தேவர்களை வழிபட்டோர் தேவ லோகத்தையும், பித்ருக்களை வழிபடுவோர் பிதுர் லோகத்தையும் அடைவர் எனக் கூறப்பெற்றுள்ள இக்கருத்து வியாசரின் இருபத்து ஐந்தாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 19. இலை, கனி, காய், நீர் இவைகளில் எது தம்மிடத்தில் உள்ளதோ அதைக்கொண்டு எம்மை அன்புடன் வழிபட்டால் அவைகளை நான் உண்பேன் எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது.

அது மட்டுமல்லாமல் வேறு எதைக் கொடுத்தாலும் அன்புடன் கொடுக்கப்பெற்றால் போதும் என்கிறார்.

எல்லோர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை என்பது திருமூலர் வாக்கு இதன்படி இயன்றதைக் கொண்டு என அறியலாம்.

விருத்தம் 20. எல்லோரும் எனக்கு இனியவர்களே, இன்னாதாரென எவரும் இல்லை. தீயசெயல்களைச் செய்வோராயினும் என்னிடத்தே மனத்தை நிலை நிறுத்தியவர்களாயின் அவர்களும் நல்லவர்களே, இது விருத்தம் இருபத்து ஒன்றில் (21) உள்ளது. அவர்களுக்கு கேடு வருவதில்லை என்பது. இவை எல்லாம் இவ்வாறே வியாசரால் கூறப்பெறாதவையாகும்.

விருத்தம் 22. இவ்விருத்தத்தில் நான்கு வருணத்தவர் களைப் பற்றிக் கூறப்பெறுகிறது. முதல் இரண்டு வருணத்தவராக சத்திரிய பிராமணர்களும் அடுத்த இரு வருணத்தவர்களாக வைசிய சூத்திரரும் எனக் கூறப் பெற்றதோடு வைசியரும் சூத்திரருமே என்னை வந்தடைகிறார்கள் எனில் சத்திரிய பிராமணர்கள் என்னை

வந்தடைவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை எனக் கூறப்பெறுகிறது. (ஞானாந்த சுவாமிகள் உரைநூல்)

விருத்தம் 23. இந்த இறுதி விருத்தத்தில் வாழ்க்கை என்பது ஒரு மின்னலைப் போல தோன்றி மறையக் கூடியது எனவே என்னையே வணங்கி என்னையே அடைவாயாக எனக் கண்ணன் அருச்சுனனிடம் கூறுவதாக அத்தியாயம் நிறைவடைகிறது.

இவ்வத்தியாயத்தில் வியாசரின் மூலக் கருத்துக்கள் பலவும் சுவடி ஆசிரியரால் சிற்சில இடங்களில் விவரமாகக் கூறப்பெற்றுள்ளன என்றாலும் பல செய்திகள் கண்ணன் கூறுவதாக வருவனவற்றில் விடுக்கப் பெற்றுள்ளன.

கண்ணன் இனி சொல்லப்போவது மிகவும் இரகசியமானதென்றும் விஞ்ஞானத்துடன் கூடிய ஞானம் எனவும் கூறுகிறான். ராஜவித்தை, ராஜரகசியம் செய்வதற்கு எளியது என்றும் கூறுகிறான். என்னை வந்தடையாதவர்கள் நரகத்தில் வீழ்கிறார்கள், நான் அவ்யக்ஞத்தை வடிவானவன், பூதங்களை உண்டாக்கு பவன் நான், என்னுடைய ஆத்மா உயிரினங்களில் நிலைபெற்றிருப்பதில்லை.

நாம சங்கீர்த்தனம் செய்கிறார்கள், விராட் ஸ்வரூபத்துடன் ஈஸ்வரனாக என்னைத் தன்னிலும் மேலானவனாக வேறானவனாக எண்ணி உபாசிக் கிறார்கள். சிலர் விராட் ஸ்வரூபத்துடன் ஈஸ்வரனாக என்னை உபாசிக்கிறார்கள். விராட் ஸ்வரூபம் என்பது பன்மையற்ற அத்வைத சொரூபம், இரண்டு அம்சங்கள் அடங்கிய துவைத சொரூபம், பல அம்சங்கள் கொண்ட சொரூபம் எனப் பலவுமாக உள்ள சொரூபம்-உருவம்-

என்று அறிக. நானே ஸ்வேதா-ஸ்வேதா என்பது சாதாரண உணவைக் குறிக்கும் சொல்-இதுவே பிதுர்கள் உண்பதற்காக வைக்கப்பெறும்-பிண்டம்-உணவையும் குறிக்கிறது. (சங்கர பாஷ்யம்)

ஆனால் இங்கு வாழ்த்துரை எனக் கூறப் பெற்றுள்ளது. வியாசர் தமது இவ்வத்தியாயத்தில் இருபதாவது சுலோகத்தில் சோமம் உண்போர் என்னும் செய்தி வருகிறது. சோமம் என்பது ஒரு பானம் அருந்தக் கூடியது. இது மட்டுமே ஆனால் இதனை வேறு வகையாகப் பொருள் கொள்ளக்கூடாது. சோமரசம் என்ன என்பதை இக்காலத்தில் எவராலும் சரியாகக் கூற இயலாது என தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளார்-இருபத்தாறாவது சுலோகத்தில் தான் வைத்திருப்பதில் எதையேனும் எனக்களிப்பவன் என்ற கருத்தில் பூ, இலை, கனி, நீர் ஆகியவை கூறப்பெறுகின்றன. ஆனால் இவற்றை அன்புடன் அளிக்கவேண்டும் எனப்பெறுகிறது. செய்யக்கூடிய கர்மம், உண்ணும் உணவு, ஹோமம், தானம், தவம் ஆகிய எல்லாவற்றையும் எனக்கே அர்ப்பணித்து விடு என்பதும் பெண்கள் கூட மேலான கதியை அடையக்கூடும் என முப்பத்து இரண்டாவது சுலோகத்திலும் ராஜரிஷிகள் கூட என்னையே வணங்கி என்னையே அடைவாயாக எனக் கண்ணனால் அருச்சுனனுக்குக் கூறப்பெறுவதோடு இவ்வத்தியாயம் நிறைவுறுகிறது.

▪▪▪▪▪▪▪▪

பத்தாவது அத்தியாயம் விபூதி அத்தியாயம்

அரிய வெனது நிலைமையை முன்பழவே சொன்னே னதுகேட்டே
உரிய மன்னிற் களிகூற ஒவ்வா நின்ற வுனக்கதனை
விரிய மொழியின் கேளென்று வேதத்தலைக்கே வீத்திருக்கும்
கரிய முகிலான் செய்வாயாற் காதல் கூரகட் டுரைப்பான். 1

அரியதாகிய என்னுடைய நிலைமை இப்படி என்று முன்னர் உறுதியாகச் சொன்னேன். அதைக் கேட்டு உன் மனதில் மகிழ்ச்சி உண்டாகும்படி நிற்கின்ற உனக்கு மேலும் விரிவாகச் சொல்கிறேன் கேள் என்று, வேதங் களுக்குத் தலைவனானவனும், கரிய மேகத்தைப் போன்றவனும் ஆகிய கண்ணன் அன்புடன் தனது சிவந்த வாயினால் கூறத்தொடங்கினான்.

களிகூற - மகிழ்ச்சியுடன், விரிய - விரிவாக, வீத்திருக்கும் - வீற்றிருக்கும் - விளங்கக்கூடிய, கரியமுகில்-கருத்த மேகம், காதல் கூர-அன்புடன் கூட, இவ்விருத்தம் ஒரு அறுசீரடியாசிரிய விருத்தம்.

தேவர்கழு மசுரர்களுமுனிவர் களுஞ் சித்தற்களும்
யாவர்களு மரியா ரென்பெருமையை முன்பளமை யினா
சாவகையும் பிறப்பு மில்லா வெனை யறியத் தகுவார்
பாவ வினை யறவிட்டுப் பரகெதி யடைகிப்பார். 2

தேவர்களும், அசுரர்களும், முனிவர்களும், சித்தர் களும் ஆகிய யாவரும் என்னுடைய பெருமையை அறியமாட்டார்கள். நான் அவர்களுக்கெல்லாம் முன்னவ னாக பழமையானவன் ஆகையால் சாவும் பிறப்பும் அற்ற என்னை பாவ வினைகளை அறவே விட்டொழித் தவர்களே என்னை அறிந்து பரமபதம் எனும் உயர் நிலையை அடைவார்கள்.

முன்பளமை-முன் பழமை-மூத்த, ஆதியான, பழமையான, பரகெதி-பரமபதம்-உயர்நிலை, பரகதி.

புத்தியுறை தவஞானம் புகழ் பழிதீக் கொலை தெழிவு
சத்திய நற்சமதை தவஞ் செயந் தானஞ்சா சாவுபிறப்
பத்தி கேடுநிரை வின்ப மிடரஞ்ச லஞ்சாமை
யித்தனையுந் தோன்றும் தென்னிடை நின்றே யெனத்
தெழிவாய். 3

புத்தி, பொறுமை, தவம், ஞானம், புகழ் பழியைத் தரக்கூடிய கொலை, தெளிவு, சத்தியம், எல்லாவுயிர் களையும் சமமாகக் கருதும் தன்மை, தவம், செயம், தானம், இறப்பு, பிறப்பு, கேட்டினைத் தரக்கூடிய காமம், துன்பம், பயப்படுதல்-பயப்படாமை, ஆகிய இத்தனையும் தோன்றுவது-என்னிடத்திலிருந்தே என்பதைத் தெளிவாக அறிவாயாக.

புத்தியுறை-புத்தி, பொறை-பொறுமை. தெழிவு-தெளிவு, வின்பமிடரஞ்சலஞ்சாமை-இன்பம்+இடர்+அஞ்சல்+அஞ்சாமை.

எனைத்து விதித்த தவத்தெழு வொரு
மனைத் தையும் நிற்ப நடப்பன வாக
மனைத்த மனுக்களோர் நால்வரு மென்ற
னினையபி லுதித்தன ரென்பது நேர்வாய். 4

இவைகள் எல்லாம் தவிர எல்லாவற்றையும் நிற்பன, நடப்பனவாக அனைத்தையும், நால்வகை மனிதர் களையும் ஆகிய எல்லாமே என் நினைவிலிருந்து தோன்றியனவென அறிவாயாக.

மனுக்கள்-மக்கள், நால்வர்-நான்கு வகையாகப் பிரிக்கப் பெற்றோர், பிராமண, சத்திரிய, வைசிய சூத்திரர்கள் என்போர், நேர்வாய்-தெரிந்துகொள்.

இப்பரி சென்னை யறிந்தவ ரென்பால்
வைப்பார்கள் சிந்தையை மன்னுயி ரோடு
மப்பரி செயறி யாரையு மங்கேயு
யப்ப ருரைப்பர் களிப்ப ருப்பர். 5

இவ்வாறு என்னை அறிந்தவர்கள், அவர்தம் சிந்தையை என்னிடத்தே வைப்பார்கள். தங்களுடைய உயிரோடுங் கூட என்னை நினைப்பார்கள். மகிழ்ச்சி அடைவார்கள்.

இப்பரிசு-இவ்வாறாக, சிந்தையை வைப்பர்; யுயப்ப-வியப்ப-ஆச்சரியப் படும்படி; களிப்பர்-மகிழ்ச்சி அடைவர்.

நிரந்தர மிப்பரி சென்னை நினைப்பாற்
கரந்தை கெடுத்தனையாய் மனத்தே
புரந்து கொடுத்தவர் தேர் பொருளாயே
வரங்க முற்ற வழித்த வரத்தால். 6

என்றும் இவ்வாறாக என்னை நினைத்து இருப்பவர் களின் துன்பத்தை நீக்கி, அவர்கள் தங்கள் மனதை என்னிடத்தில் வைத்தவர்கள் ஆதலால் தேர்ந்த- உயர்வான வற்றை அவர்களுக்கு வரங்களாகக் கொடுத்து பின் அதே வரத்தால் அவர்களின் துயரை நீக்குகிறேன்.

நிரந்தரம்-என்றும்; கரந்தை-குற்றம், குறை; புரந்து-கொடுத்து. தேர்-தேர்ந்த, வரங்க முற்றும்-வரங்கள் முழுவதும், அழித்த வரத்தால்-அளித்த வரத்தால்-கொடுத்த வரத்தால்.

மற்றவர் நெஞ்சின் மயக் கிருளெல்லா
மற்ற மிலா ஞான விழக் கொழி யாலே
பற்றுவிப்ப னெனப் பழை யோன்முன்
கொற்றவன் மற்றிதுகூற வளித்தான். 7

என்னாலே வரத்தையளிக்கப் பெற்றவர்களுடைய மனத்தில் உள்ள, மயக்கம் என்னும் இருளை என்னுடைய ஞானம் எனும் விளக்கின் ஒளியினாலே பிரகாசிக்கச் செய்வேன் என்று கூறிய பழமையானவனாகிய கண்ணன் முன் அரசனாகிய அருச்சுனன் மேலும் இவ்வாறு கூறலானான்.

மயக்கிருள்-மயக்கத்தைத் தருகின்ற அஞ்ஞானம் என்னும் இருள். விழக்கொழி-விளக்கொளி, கொற்றவன்-மன்னன்-அருச்சுனன்.

வேறு

பேதமுடைய பிறப்பகன்றான் பிரளா நிறைவு பெருஞ்செல்வ
மாதிதேவன் பரப்பி ரம்ம ழிவிலாதானா ரணங்க
ளோதவரிய வுத்தமனிங் கெல்லா முயிர்ப்பா னெனவுன்னை
நீதி முனிவருரைத்த வேலாம் நீயே யருளிச்
செய்தனையால். 8

வேறுபாடுகள் பலவும் கொண்ட, பிறவிகளி னின்றும் வேறுபட்டவன்.அள்ளக் குறையாத பெருஞ் செல்வம், ஆதிதேவன், பரப்பிர்மம், அழிவில்லாதவன், வேதங்களால் கூறுப்பெறுவதற்கு இயலாதவன், முனிவர்களால் சொல்லப்பெற்ற எல்லாவற்றையும் நீயே எனக்குச் சொன்னாய் ஆதலால்.

பேதமுடைய-வேறுபாடுகளையுடைய, பிறப்பகன்றான்-பிறப்பு என்பது இல்லாதவன்.

எல்லாப் பொருட்குந் தனிவித்தே
யெல்லாப் பொருட்கும் ஈசனே
நல்லார் புகழுந்தேவர் கட்கு மூலகங்களுக்கு நாயகனே
யல்லா லறி வாரா ருன்னயா னேயறிவனென வருஞ்
சொல்லா லுளலப் பொரு ளெல்லா மெய்யே யானுந் துணிந்
தொழிந்தேன்.9

எல்லாப் பொருட்களும் தோன்றுவதற்கு மூல காரணமான வித்தே! எல்லாப் பொருட்களுக்கும் ஈசனே! அவர்களின் மூலவர்களுக்கும் தலைவனே! உன்னை நீயே அறிவாய். உன்னை அறிவேன் எனச் சொல்லுகிறவர்களின்

உள்ளத்தில் உள்ளதெல்லாம் உண்மையே ஆகையால் நானும் அவ்வாறே அறிந்துகொண்டேன்.

யல்லால்+அறிவார்+யார்+உன்னை+யானே+அறிவேன்+என+ அனைவரும்+சொல்ல+உள்ளப் பொருள்+எல்லாம+மெய்யே+யானும்+ துணிந்து+ஒழிந்தேன்- இவ்வாறு பிரித்தறிக.

வேறு

மெய்வகை யவுவுலகினிடைவேறு வேறாய் நிற்ப
தெவ்வகை யவ்வுருவுனைச் சார்ந்தென வேது மறிகிலே
னவ்வகையை மெய்ப்பொருளு மொழியாம லடியெனுக்
குய்வகை நெறியாக வுரைத்தரு ளென்றே யுரைப்பான். 10

இந்த உலகத்தில் நீ வேறு வேறு உருவங்களாய் நிற்கிறாய். ஆகையால் உண்மையில் நீ எந்த உருவினனாக இருக்கிறாய் என்பதை என்னால் அறிந்து கொள்ள இயலவில்லை. நீ உண்மையில் எப்படி, எந்த உருவில் இருக்கிறாய் என்பதை எனக்குச் சொல்லி, என்னை உய்விக்கும் வழியை முறையாகச் சொல்ல வேண்டும் என அருச்சுனன் கேட்கிறான்.

வேறுவேறாய் நிற்ப-பலவேறு உருவங்களில் நிற்கின்றாய். எவ்வகை யவ்வுரு-உண்மையான உருவம் எது! - உய்வகை- கடைத் தேறும் வழி; நெறியாக-முறையாக, இது ஒரு கொச்சகக் கலிப்பா.

பருகா நின்றோர்க்குனது திருவாக்காம் பாலமுத
மொருகாரு காலு மார் கின்றதிலை யடி யேற்குறை யென்ன
வருகாலஞ் செல் காலம் நிகழ்கால மென்றிவற்றிற்
பெருகாத குறையாத பெரு மாயன் பேசுவான். 11

உனது திருவாய் மொழியைக் கேட்காதவர்களுக்கு என்றும் அமைதி ஏற்படுவதில்லை. எனக்கு மீண்டும்

சொல்வாயாக என அருச்சுனன் கேட்க, வருங்காலம், இறந்த காலம், நிகழ்காலம் என எக்காலத்திலும், குறைவும், நிறைவும் இல்லாத பெரிய மாயவனாகிய கண்ணன் கூறுவான்.

பருகாநின்ற-பால் அமுதம் போன்ற திருவாய் மொழியினைக் கேட்காதவர்கள். ஒருகாலும்+ஆர்கின்றதிலை-அமைதி ஏற்படுவதில்லை, பெருகாத குறையாத-குறைவதும் கூடுவதும் அற்ற ஒரே நிலையானதென அறிக. இது ஒரு கலி விருத்தம்.

இறந்தவென் விபூதிக் கோ ரெல்லை யின்மையிற்
பிறந்தன முடிவுறப் பேச வொண்ணுமோ
வறந்தரு மனத்தினாய வற்றிலே சில
சிறந்தன கூறுவ னென்று செப்புவான். 12

என்னுடைய பெருமைக்கோர் எல்லை இல்லை. தோன்றியது முதல் முடியும்வரை பேச முடியுமோ! அறந்தரு மனத்தின னாகிய அருச்சுனா! எனினும் அவற்றிலே சிறப்பான சிலவற்றை மட்டும் கூறுகிறேன் என்று கண்ணன் பேசத்தொடங்கினான்.

பிறந்தன முடிவுற-தோன்றியது முதல் இறுதிவரை, விபூதி-பெருமை, வறந்தரு-அறம் செறிந்த-இது ஒரு கலிவிருத்தம்.

ஓதிப் பெருகும் பூதங் கட்கெல்லா மிதையத்துள் ளுயிர் நான்
பேதித்திடு மிப்பொருட் கெல்லாம் பிறப்பு நிலை கேடாவேனா
னாதித்தியரில் விண்டுவு நான் மருத்துவரில் மரீசுயு நான்
சோதிக்கதிரி லிரவி யங்கி யென்றுஞ் சொல்
லப்படுவேனான்.13

சொல்லத் தொடங்கினால் மிக அதிக அளவில் இருக்கும், பூதங்களுக்கெல்லாம் இதயத்துள்ளே இருக்கிற உயிராய் இருப்பவன் நான் வேறுபாடுகள் நிறைந்த

உயிர்களுக் கெல்லாம் பிறப்பும் இறப்பும் ஆக உள்ளேன் நான். ஆதித்தியர்களில் விஷ்ணு நான். மருத்துவர்களில் மரீசு நான், இவ்வாறெல்லாம் சொல்லப்பெறுகிறவன் நான்.

ஓதிப்பெருகும்-ஓதிற்பெருகும்-சொல்லப் போனால் மிக அதிகமாகும். பேதித்திடு-வேறுபாடுகளுடன் கூடிய, கேடாவேன்-இறப்பு ஆவேன். ஆதித்தியர்-முதற் கடவுள்கள், விண்டு-விஷ்ணு மருத்துவர் என்ற சொல்லுக்கு வாயுக்கள் எனவும் பொருள் கூறப்பெற்றுள்ளது மரீசு என்பவன் வாயுக்களில், வேகம் மிக்கவன்-சூறாவளிக்காற்று-ஆதித்தியர்கள் பணிரிருவர் என்கின்றனர். வாயுக்கள் ஏழு எனவும் கூறப்பெற்றுள்ளது. சோதிக்கதிர்-ஒளி வீசக்கூடியன, இரவி-சூரியன், இங்கு இரவி யங்கி எனப்பெற்றுள்ளமையால் இரவு+இயங்கி=இரவியங்கி-இரவில் இயங்குகிற எனவும் கொள்க.. இயங்கி சந்திரன் எனப் பொருள் கொள்ளவும் கூடும்.

சந்திரனானாள் மீனிற் சாமனா னான் மறையி
லிந்திரனான் றேவர்களி லிந்திரியங் களில் மனனா
நேந்திர மாமுருவுகளிற் சேதனா னுத்திரரில்
மந்திரமாஞ் சங்கர நானியக்கரில் வச்சிர வணணான். 14

விண்மீன்களில் சந்திரன் நான்,வேதங்களில் சாம வேதம் நான், தேவர்களில் இந்திரன் நான், இந்திரியங் களில் மனம் நான், உருவமாய் இருக்கிறவற்றில் சேதமடையாதவன் நான். ருத்திரர்களில், சங்கரன் நான், இயக்கரில் வச்சிரம் நான்- இதனை ஆயுதங்களில் வச்சிராயுதம் எனவும் பொருள் கூறலாம்.

மீன்-விண் மீன்-நட்சத்திரங்கள், சாமன்-சாமவேதம், மனனா-மனம் நான்-மனனா, இரு ஒரு கலிநிறைத்துறை விருத்தம்.

மலைகளில் மாமேரு நான் வசுக்களிற் பாகவனுனான்
றலைவர்களில் அறுமுகனான் சகல நிலையில் சாகர நான்
னிலைய மிலா யாகத்திற்செய் யாக மாவேனா
னிலையுடைய வெனு மிவற்றினிம வானாய் நின்றோனான்.15

மலைகளில் மகாமேருமலை நான். வசுக்களில் பாகவன், அக்னி எனவும் பொருள் கூறப்பெற்றள்ளது. தலைவர்களில் ஆறுமுகமான சுப்பிரமணியன் நான். நீர் நிலைகளில் கடல் நான். அழிவில்லாத யாகத்தில் செய்யப்படும் யாகமும் நான் நிலையாக நிற்பனவற்றில் நானாகி நிற்பவனும் நான்.

வசுக்கள் எட்டுபேர்-அதில் சிறந்தவர், பாகவன்-பாவகன் எனவும் உள்ளது. சகலநிலை என்பது நீர்நிலைகளைக் குறித்து. அவனாய்-அவனாக.

முனிவரின் பிருகுநான் புரோகீதரில் பீதகனான்
னான மருவிய வாக்கவற் றோனான், மரங்களில் வைத்தரசு
னான் பொருவரிய நாரத நான் புத்தேள மாமுனிவர்
களிற்றிரு வியகந்
துருவர் களிற் சித்திரத் தோவனும் நான். 16

முனிவர்களில் பிருகுமுனி நான், புரோகிதர்களில் பிரகஸ்பதிநான். மறைவாக நினற வாக்குதனில் ஓம் என்ற எழுத்து நான். மரங்களில் அரசமரம் நான். பெருமைக் குரிய முனிவர்களில் நாரதன் நான். கந்தர்வர்களில் சித்திராதனன் நான்.

பீதகன்-பிரகஸ்பதி, வாக்கவற் றோனான்-வாக்கு அவற்றில் ஓம் நான், பொருவரிய-ஒப்புமை சொல்வதற்கு அரிய, புத்தேள்- தேவலோகம்.

சித்தர்களிற் கபிலமுனி திரைகடலிலே பிறந்த
உத்தமாம் புரவிகளி லுச்சிர வச்சிரவன்னா
னத்தமுடைய விலங்கு களிலியா னயிராவத மாவேன்
வித்தக மானிடப் பிறப்பில் வேல் வேந்தரா வேனான். 17

சித்தர்களில் கபிலமுனி, அலைகள் நிறைந்த கடலில் பிறந்த உயர்தரமான குதிரைகளில் சிறந்த உச்சிர வச்சிரன்

என்னும் பெயர் கொண்ட உயர்ந்த ஒரு குதிரை நான். கையையுடைய விலங்குகளில் நான் ஐராவதம். அறிவிற் சிறந்த மானிடர்களில் அரசன் நான்.

திரை-அலை, புரவி-குதிரை, அத்தம்-அஸ்தம்-கை, வேல்வேந்தர்-வேலாயுதம் கொண்ட மன்னர்கள்.

வேறு

படைகளில் வச்சிரம் பாம்பில் வாசுகி
யடைவரு மனந்த னானாகா தங்களிற்
கோடை பயில் சுரபி கோகுலத்திற் கூறிய
வடைவொடு மிவை யெல்லா மியானென் றேயறி. 18

போருக்குரிய ஆயுதங்களில் நான் வச்சிராயுதம். பாம்புகளில் வாசுகி, நாகங்களில் நான் அனந்தன், கொடைத்தன்மையில் அமுதசுரபி எனும் காமதேனு. இவ்வாறு பெருமையோடு சொல்லப்பெற்ற இவை எல்லாமே நான்தான் என்பதை அறிவாயாக.

கோடை-கொடை, சுரபி-வேண்டியதைத்தரும் அமுதசுரபி-காமதேனுவும் என்க. வடைவொடு-அடைவொடு, பெருமையாக, கோகுலம்-பசுக்களின் கூட்டத்தில் சிறந்த காமதேனு. இது ஒரு கலி விருத்தம்.

வருணனு மியமனு மலறவிலாழியும்
பெருமை செய்து சாரிற் பிரகலாதனு
மிருமையு மெண்ணுவா னென்னு மியானெனச்
சேரு மலிதொளினாய தெளியத் தேறுவாய். 19

நான் வருணன், யமன், கடல், பெருமைக்குரிய பிரகலாதன். இம்மையிலும் மறுமையிலும் எண்ணுகிறவர் களின் இலக்காக இருப்பவனும் நானே! போர்கள் பலவற்றிலும் வெற்றிபெறக் கூடிய தோளினையுடைய அருச்சுனா! இதை நீ தெளிவாக அறிவாயாக !

வருணன்-மழைக்குரிய தேவன், யமன்-தண்டனைகள் வழங்குவதில் மிக நேர்மையானவன். மலறவிலாழி-அலைகள் நிறைந்த கடல், செருமலி-அதிகமான போர்.

புராவருங் கருடனான் புள்ளின மாக்களில்
விராவருமடங்கல் நான் வாயு வேகனா
னிராம னானெறிபடை வீரர்தங்களில்
சுராமு னான் மீன்களி லாற்றிற் கங்கைனான். 20

பறவை இனங்களில் எதிர்த்து போரிட எவராலும் இயலாத கருடன் நான். இரவில் வேட்டையாடக் கூடிய மிருகங்களில் எவராலும் அடக்க இயலாத சிங்கம் நான். வேகத்தில் வாயு நான்.ஆயுதம் தாங்கி போர் செய்யும் வீரர்களில் இராமன் நான். மீன்களில் சுராமீன் நான். ஆறுகளில் கங்கை நான்.

புராவரும்-பொரு எவரும், புள்ளினம்-பறவையினம், இராவரு மடங்கல்-இரவில் வரும் அடக்கமுடியாத.

மிக்க சொற்றொகை யனைத்து நானரிய விச்சையிற்
பிர்மவிச்சா
னக்கரங்களில் அகார நான் அழிவில்லா காலநான்
அதுவுமின்றியே
தக்க தொத்துவ பாச நாளிரு வினைப் பயன் கடருவோனுநா
னுக்க மன்னுயிர் களைக் கொல்வோனு மவை யுற்பவஞ்
செய்திடு வோனுனான். 21

சொற்களின் தொகை நான். வித்தைகளில் பிர்ம வித்தை நான். என்றும் அழியாத காலம் நான். இவை எல்லாம் அல்லாமல், மயக்கங்களில் பாசமாக இருப்பதும் நான். இருவினைப் பயன்களைத் தருபவனும் நான். உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் கொல்பவன் நான். பின்னர் அவைகளை உண்டாக்குபவனும் நான்.

விச்சை-வித்தை, அக்கரம்-அட்சரம், எழுத்து, உற்பவம்-உற்பத்தி, தோன்றச் செய்தல். இது ஒரு அறுசீரடியாசிரிய விருத்தம்.

பெண்களிற் புகழ் திருச் சொல்மேதை பொறை திண்மை பேசு
நினவென்னவே
வெண் வகுத்தவேழு வொரு நானிரு துவா றிலன்ன
விளவேனினா
னண்ப நற்பெரிய சாம னானுரிய சாம மேழினு நலத்தினான்
மண்கழிப்ப வருதிங்களிற் புகழ் நின்ற மார்கழி மற்று நான். 22

பெண்களில் மிகச் சிறந்தவளாகிய இலக்குமி நான். திண்மை, பொறை, சொற்றிறமை, பேச்சுத்திறன் எனப்பெரும் ஏழு வகையான திறமைகளில் முதன்மை யானவன் நான். ருதுக்களில் இளவேனில் நான். ஏழு விதமாகப் பிரிக்கப்பெற்றுள்ள சாமவேதத்தில மிகவும் முக்கியமானதாகிய பிருஹத்சாமம் நான். மண்ணுலகம் செழிக்க வரும் மாதங்களில் புகழ்மிக்கதாகிய மார்கழி மாதமாய் இருக்கிறவனும் நான்.

திரு-இலக்குமி, வெண வகுத்த வேழு-திறன்கள் ஏழு வகையது எனப்பெறுகிறது. ருதுவாரில்-ஆறு, ருது-பருவகாலங்களில், மண் கழிப்ப-மண் களிப்ப, திங்கள்-மாதம், புகழ்கின்ற மார்கழி-மாதங்கள் பண்ணி ரெண்டில் உயர்வானதாக மார்கழி மாதம் சொல்லப்பெறுகிறது.

வேறு

கல்லாருந் தொழி நாயக கவிண்களிற் காயத்திரி னான்
றெவ்வாயங் களிற்சூது றுணிபாற் றுணிவு நான்
வெல்வார் பாற் வெற்றி நானல் லார்பா னன்மையு நான்
ஞானிகள் பால் ஞானமு நான். 23

கற்பாறையை ஒத்த வலிமையான தோளினை யுடைய அருச்சுனா! கலைகளில் காயத்திரி நான்.

சூதாட்டத்தில் சூது நான். துணிவுடையவர்களிடத்தில் துணிவு நான். வெற்றியாளர்களின் வெற்றி நான். நல்லவர் களுக்கு நன்மை செய்பவனும் நான். ஞானிகளிடத்து ஞானமும் நான்.

கல்லாரும்-பாறையைப் போன்ற, கவி-சொல்லப் பெரும் மந்திரங்கள் என்க. தாயங்களில் என்பது ஒருவகை சூதாட்டம். இதனை சொக்கட்டான் ஆட்டம் எனவும் கூறுவர். பொதுவாக இதில் பந்தயமாகப் பொருள் எதுவும் வைக்கப்படுவதில்லை என்றாலும் ஏதேனும் ஒரு பொருளைப் பந்தயமாக வைத்து இந்த ஆட்டத்தை ஆடினால் இதனைச் சூதாட்டம் என்று கூறுவர். இது ஒரு கலி விருத்தம்.

கண்ணனும் நான் யாதவரின றகவிகளில்
வைத்துவசனு நான்
றண்ணளி சேர் பாண்டவரில் றனஞ்செயனா
னாகின்றேன்
விண்ணவர் கோமுனிவர்களில் வேத வியாதனு நானே
யெண்ணிய மறைவுகளி லியம்பாமை யாவேனான்.24

யாதவர்களில் கண்ணன் நான். இனிய கவிகளில் வைத்துவசன்-சுக்கிரன்-நான். எவர்க்கும் எளியவர்களான பாண்டவர்களில் தனஞ்செயன் நான். தேவர் லோக முனிவர்களில் வேத வியாசன் நான். மறைவானவற்றில் மவுனம் நான்.

வைத்துவசன் என்பவர் ஒரு கவி - சுக்கிரன் எனவும் கூறப் பெறறுள்ளது-தண்-குளிர்ந்த, வியாதன்-வியாசன், இயம்பாமை-மௌனம்.

இரும்புவன மனைத்தினுக்கு வித்துனா னெனைப் போக்கி
யாதுமில்லை
வருந்தினுமென் பெருமைக்கி வரம்புரைக்க முடியாமை
வகுத்துச் சொன்னேன்

னருந் திருவை யுடையன் மெய்ப்பெரு முயற்சியின் வென்று
பேசுமிந்த
வரும் பொருள்க ளனைத்தினு மென்றொளி லினால்
வருமென வென்றறிதி நீயும். 25

பெரியதாய் இருக்கும் இவ்வுலகமனைத்தும் தோன்றுவதற்கு மூல விதையாய் இருப்பவன் நான். என்னைத் தவிர எதுவுமில்லை. என்னதான் முயற்சி செய்தாலும் என்னுடைய பெருமையின் எல்லை இதுதான் எனக் கூற இயலாது. இதனை நான் நன்றாகத் தெரிந்தே சொல்கிறேன். பெருவதற்கரிய செல்வத்தை உடையவன். இவை எல்லாம் பெரிய முயற்சியின் வெற்றியே என்று பெருமை பேசக்கூடிய பொருள்கள் அனைத்திலும் வரக்கூடியவன் நான் என்பதை என்னுடைய ஒளியினால் தான் அவைகள் எல்லாம் வந்தன என்பதன் மூலம் தெரிந்து கொள்வாயாக !

இரும்புவனம்-பெரியதாய் உள்ள பூவுலகம், என்னைப் போக்கி-என்னைத தவிர, திரு-செல்வம், ஒளி-என்னிடத்தே தோன்றக் கூடிய ஒளி என்க. இது ஒரு அறுசீரடி யாசிரிய விருத்தம்.

பலவினை வுரைத்தேனிந்தப் பல்லுயிரணைத் துமெல்லா
வுலகமு மொடுங்கி நிற்ப தென்னிலோ ரிடத்தினுள்ளே
கலவலவ னவன்றோ டென்றான் கஞ்சனா ருயிர் பொய்த்துஞ்ச
வலைகடல் வளராதே போந் தாயர் பால் வளரிந்த
பெம்மான்.25

என்னுடைய பல செய்கைகளையும் இவ்வளவு நேரம் சொல்லி வந்தேன். உலகில் உள்ள பலப்பல உயிர்கள் அனைத்தும், எல்லா உலகங்களும் ஒடுங்கி நிற்பது என்னில் ஒரு இடத்திலேதான். என்றும், அவை எல்லாம் என்னிடத்திலே தான் கலந்து ஒன்றோ

டொன்றாய் உள்ளன என்றும், அலைகடலில் துயில்வதை விட்டுவிட்டு ஆயர் குலத்திடையே வளர்ந்தவனும், கம்சனின் உயிரை மாய்த்தவனுமாகிய பெருமானுமாகிய கண்ணன்.

பலவினை-செய்த பல செயல்கள், கலவலவனவன்-கலந்து நிற்பன வென்று, கஞ்சன்-கம்சன்-துஞ்ச-சாகும்படி, வளராதே-கண் வளராது-தூங்காமல், ஆயர்பால்- ஆயர் குலத்தில், ஆயர்களிடத்தில்.

இவ்வத்தியாயம் முழுமையும் கண்ணன் தன்னுடைய பெருமைகளையே கூறுவதால் இவ்வத்தியாயத்திற்கு விபூதி யோகம் எனப்பெயராயிற்று.

பத்தாவது அத்தியாயம் முற்றும்.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–10

விபூதி யோகம்

1. பகவான் சொல்கிறார். பெருந்தோளுடையாய்! மிகவும் அன்பு கொண்டவனான உனக்கு நான் உன் நலம் கருதி எதை மீண்டும் கூறுவேனோ, என்னுடைய, உயரிய அந்த வாசகத்தைக் கேள்.

2. வானவர், கணங்கள் என் மகிமையை உணரார். பெருந்தகை முனிவரும் உணரார். ஏனெனில் நான் எல்லாவிதங்களிலும், வானோர்களுக்கும், மகரிஷி களுக்கும் ஆதி நானே !

3. பிறப்பற்றவன், உலகங்களுக்குத் தலைவன் என்று எவர் அறிவாரோ, மானிடர்களுக்குள்ளே மயக்கம் தீர்ந்த தெளிந்த அறிவுடையவர் அவர். பாவமனைத்தினின்றும் விடுதலைப்பட்டவர்.

4. மதியும் ஞானமும், மயக்கமின்மையும், பொறுத்தலும், வாய்மையும், அடக்கமும், அமைதியும், இன்பமும், துன்பமும், உண்மையும், இன்மையும், அச்சமும், அஞ்சாமையும்.....

5. துன்புறுத்தாமையும், நடுவு நிலைமையும், மகிழ்ச்சியும், ஈகையும், புகழும், இகழும், உயிரினங் களுடைய வெவ்வோறான, மனப்பாங்குகள், இயல்புகள், என்னிடமிருந்தே உண்டாகின்றன.

6. உலகில் இந்த பிரஜைகள் அனைவரும், எவரிடமிருந்து உண்டானார்களோ, அந்த சப்தரிஷி களுக்கும், முந்தையவர்களான, சனகர் முதலான நான்கு முனிவர்களுக்கும் அவ்வாறே மனுக்களும் மனத்தால் என்னியல்பு எய்தினர்.

7. எவன் என்னுடைய இத்தகைய பெருமையையும், யோகந்தனையும் உள்ளவாறு உணர்கிறானோ, அவன் அசைவிலா யோகத்தில் அமர்கிறனாவான். இதில் ஓர் ஐயமில்லை.

8. நான் அனைத்திற்கும் தொடக்கம். என்னிட மிருந்தே எல்லாம் இயங்குகின்றன என்று புரிந்து கொண்டு, நம்பிக்கையும் பக்தியும் கொண்டும் என்னை அன்புடன் தொழுவார்கள்.

9. அகத்தினை என்பால் வைத்து, உயிரை என்னுள்ளே புகுத்தி, தங்களுக்குள்ளே விளக்கிக் கொண்டும், புகழைப் பற்றிப் பேசிக்கொண்டும், எப்போதும் மகிழ்வார்கள் என்னிடமே இன்புறுகிறார்கள்.

10. எப்போதும் யோகத்தில் இருப்பாராகில், அன்புடன் என்னை வழிபடும் அவர்களுக்கு எந்த உபாயத்தின் மூலம் என்னை அடைவார்களோ, அந்த ஞான வடிவாகிய யோகத்தை அளிக்கிறேன்.

11. அவர்களுக்கு இரங்கி நான், உள்ளத்தில நிலைத்து நின்று நானே, அறியாமையால் உண்டான இருளை ஒளிமயமான, ஞானவடிவான விளக்கினால் அழிக்கிறேன்.

12. அர்ச்சுனன் சொல்கிறான் ! நீங்கள் பரப்பிர்மம், பரமபதம், (வீடுபேறு) தூய்மை அனைத்திலும் சிறப்புடைய தூய்மை என்றும் உள்ளவர் என்றும் தெய்வீகமான புருஷன் என்றும் ஆதிதேவன் என்றும், பிறப்பற்றவன் என்றும் எங்கும் நிறைந்தவர் என்றும்.....

13. முனிவர்கள் எல்லோரும் உன்னைப் பற்றிக் கூறுகிறார்கள். அவ்வாறே தேவரிஷி நாரதரும் அசிதரும், தேவலரும், வியாசரும் கூறுகிறார்கள். நீயும் அதையே என்னிடம் கூறுகிறாய்.

14. கேசவா! எதை என்னிடம் கூறுகிறாயோ, இந்த அனைத்தும் உண்மையே என்று எண்ணுகிறேன். பகவானே! உங்களுடைய விஸ்வரூபத்தை, அசுரர்கள் அறிந்துகொள்ளவில்லை, தேவர்கள்கூட அறிந்து கொள்ளவில்லை.

15. புருஷோத்தமா! நீ தன்னால் தன்னைத்தானே அறியவல்லவன். பூதங்களானாய் பூதத்தலைவனே! தேவதேவா! வையத்துள் இறைவா!

16. எந்த மகிமையினால் நீ இந்த உலகங்களைச் சூழ்ந்து நிற்கின்றாயோ, தெய்வீகச் சிறப்புடைய பெருமைகளை நீயேதான் முழுமையாகக் கூறுவதற்கு திறமை உள்ளவன்.

17. யோகியே! எவ்வாறு எப்போதும் தியானித்து நான் என்னை உணருவேன்? பகவானே! எந்தெந்த ஸ்வரூபங்களில் என்னால் தியானிக்குமாறு இருக்கிறாய்?

18. ஜனார்த்தனா! உன்னுடைய யோகத்தையும், பெருமையையும், விரிவாக மற்றொரு முறை சொல்க! ஏனெனில், அமுதம் போன்ற சொற்களால் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை, மேலும் கேட்க வேண்டும்போல இருக்கிறது.

19. பகவான் சொல்லுகிறான்! குருகுலத்தில் சிறந்தவனே! என் பெருமைகள் தெய்வீகமானவை, இப்பொழுது உனக்குப் பிரதானமானவற்றைச் சொல்லுகிறேன். ஏனெனில் என்னுடைய விரிவுக்கு எல்லையே இல்லை.

20. அர்ச்சுனா! உயிர்கள் அனைத்திற்கும் உள்ளே நிற்கும் ஆத்மா நான். அவ்வுயிர்களின் ஆதியும், இடையும், அவற்றின் இறுதியும் நானேதான் !

21. ஆதித்யர்களில் நான் விஷ்ணு, ஒளிகளில் நான் கதிர்களுடன் கூடிய சூரியன், வாயு தேவர்களில் நான் மரீசி. நட்சத்திரங்களில் நான் சந்திரனாக இருக்கிறேன்.

22. வேதங்களில் நான் சாமவேதமாக இருக்கிறேன். தேவர்களில் இந்திரனாக இருக்கிறேன். புலன்களில் மனமாக இருக்கிறேன். மேலும் உயிர்களிடத்தில் உணர்வாக இருக்கிறேன்.

23. ருத்ரர்களில் நான் சங்கரன், இயக்கர் அரக்கருள் குபேரன், வசுக்களில் நான் தீ மலைகளில் நான் மேரு.

24. புரோகிதர்களில் தலைவனாகிய பிரகஸ்பதி என்னை அறிந்துகொள் பார்த்தா! படைத்தவர்களில் நான் கந்தன்! நீர்நிலைகளில் நான் கடலாக இருக்கிறேன்.

25. மகரிஷிகளில் நான் பிருகு, வாக்குகளில் நான் ஒரெழுத்தாகிய ஓம் எனும் எழுத்தாக இருக்கிறேன். யக்ஞங்களில் நான் ஜபயக்ஞம். மலைகளில் நான் இமாலயம்.

26. மரங்கள் அனைத்திலும் நான் அரசமரம். தேவரிஷிகளில் நான் நாரதன். கந்தர்வகளுக்குள்ளே நான் சித்ராதன். சித்தர்களில் நான் கபிலமுனி.

27. குதிரைகளிடையே நான் அமிர்தத்தில் பிறந்த உச்சை சிரவம் என்றுணர், யானைகளில் என்னை ஐராவதம் என்றும், மனிதரில் அரசன் என்றும் என்னைத் தெரிந்துகொள்.

28. ஆயுதங்களில் நான் வஜ்ரம், பசுக்களில் நான் காமதேனுவாக இருக்கிறேன். பிறப்பிப்போரில் நான் மன்மதனாக உள்ளேன். மேலும் பாம்புகளில் நான் வாசுகியாக இருக்கிறேன.

29. நான் நாகர்களிடையே அநந்தன். நீர்வாழ் வோரில் வருணனாக இருக்கிறேன். பிதுர்களில் நான் அரியமான், அடக்கியாள்பவர்களில் யான் எமன்.

30. அசுரர்களில் பிரகலாதனாக இருக்கிறேன். இயங்குகின்றனவற்றில் நான் காலமாக இருக்கிறேன். நான் விலங்குகளில் சிங்கம், பறவைகளில் கருடன்.

31. தூய்மை செய்வனவற்றுள் காற்று நான், ஆயுதம் தாங்கியவர்களில் நான் ராமன், மீன்களில் நான் சுறா, ஆறுகளில் கங்கையாக இருக்கிறேன்.

32. படைப்புகளில் ஆதியும், அந்தமும், நடுவும் நானேதான். அர்ச்சுனா! வித்தைகளில் நான் அத்யாத்ம வித்தை, பேசுபவரிடையே நான் பேச்சு.

33. எழுத்துக்களில் நான் அகரம், புணர்ப்புகளில் இரட்டைப்புணர்ப்பு, அழிவற்ற காலம் நானே, எல்லாம் பக்கங்களிலும் முகம், கொண்ட விராட் விஸ்வரூபனும், எல்லாவற்றையும் சுமப்பவனும் நான்.

34. எல்லாவற்றையும் அழிக்கும் மரணம் நான். எதிர்காலப் பொருள்களின் பிறப்பு நான், பெண் களிடத்தில், கீர்த்தி, வாக்கு. நினைவு, மேதை, ஸ்திதி, பொறுமை.

35. சாமங்களில் (வேதப்பகுதியில்) நான் பிருகத் சாமம் என்ற பெரிய சாமம், சந்தங்களில் நான் காயத்திரி, மாதங்களில் நான் மார்கழி, பருவங்களில் நான் மலர் சார்ந்த இளவேனில்.

36. வஞ்சகரின் சூது நான், ஒளியுடையோரின் ஒளி நான், நான் வெற்றி, நான் நிச்சயம், உண்மையுடை யோரின் உண்மையாக நான் இருக்கிறேன்.

37. விருஷ்ணி குலத்தாரில் நான் வாசுதேவன், பாண்டவர்களில் தனஞ்செயன், முனிவர்களில் வியாசன், கவிகளில் சுக்கிர கவி.

38. ஆள்வோரிடத்தே அடக்கும் சக்தி (செங்கோல்) நான், வெற்றியை விரும்புபவர்களிடத்தே நியாய உணர்வு நான், நீதி நான், ரகசியங்களில் நான் மௌனம், ஞானமுடையோரிடத்தே ஞானம் நான்.

39. மேலும் அர்ச்சுனா! எல்லா உயிர்களிலும் விதை எதுவோ அது நான். நான் இன்றி எது இருக்கக்கூடுமோ, அத்தகைய அசையும், அசையாததுமாகிய பொருட்கள் எதுவும் இல்லை.

40. எதிரிகளைச் சுடுபவனே! என்னுடைய திவ்ய மகிமைகளுக்கு முடிவில்லை, பெருமைகளில் இந்த விரிவும் கூட, ஓரளவுதான் என்னால் கூறப்பட்டது.

41. எவையெல்லாம் பெருமையுடையதோ, உண்மையுடையதோ, அழகுடையதோ, வலிமையுடையதோ, அவை எல்லாம் என்னுடைய ஒளியின் அம்சத்தில் பிறந்தனவாகும். நீ புரிந்து கொள்.

42. அன்றியும் அர்ச்சுனா! இதைப் பலவாறாகத் தெரிந்து உனக்குப் பயன் யாது? நான் இந்த உலகனைத்தும், எனது சக்தியின் அம்சத்தால், தாங்கிக் கொண்டிருக்கிறேன்.

விளக்கவுரை

வியாசர் தமது பகவத்கீதையின் இப்பத்தாவது அத்தியாயத்திற்கு விபூதி யோகம் எனத் தலைப்பிட்டு நாற்பத்து இரண்டு சுலோகங்களை இயற்றியுள்ளார். சுவடி ஆசிரியரும் இப்பத்தாவது அத்தியாயத்திற்கு விபூதி யோகம் என்றே தலைப்பிட்டு இருபத்து ஆறு விருத்தங்களை எழுதியுள்ளார்.

விருத்தம் 1. இதில் கண்ணனை வேதங்களுக்கு எல்லாம் தலைவன் ஆனவன் என்றும், மேகத்தைப் போன்ற அவன் தன் சிவந்த வாயினால் அருச்சுனனின் சந்தேகங்கள் தீரும் பொருட்டு மேலும் சிலவற்றை சொல்லப்போவதாகவும் உள்ளது. இது வியாசரின் இவ் வத்தியாயத்தின் முதல் சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 2. தேவர்கள் மற்றும் அசுரர்கள் முனிவர்கள் என எவருமே என் பெருமையை அறிய மாட்டார்கள் எனக் கண்ணன் கூறுவது இரு வியாசரின் இரண்டாவது சுலோகத்தில் உள்ளது.

இனி கண்ணன் "எல்லாம் நானே" என்கிற வகையில் தானே அருச்சுனனிடம் கூறுவது இச்செய்தி, வியாசரால் கூறப்பெறும் அனைத்தும் சற்று கூடுதல் அல்லது குறைவான விளக்கங்களுடன் சுவடி ஆசிரியராலும் கூறப்பெற்றுள்ளது. அவைகளைச் சுருக்கமாகவே காணலாம்.

1. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் முனிவர் களுக்கும், சித்தர்களுக்கும் முன்னமே பிறந்த பழமை யானவன்.

2. புத்தி, பொறுமை, தவம், ஞானம், புகழ், கொலை, தெளிவு, சத்தியம் மற்றும் எல்லா உயிர்களையும் சமமாகக்

கருதும் தன்மை, தானம், பிறப்பு, இறப்பு, காமம், பயப்படுதல், பயப்படாதிருத்தல் ஆகியவை அனைத்தும் என்னிடத்திலிருந்தே தோன்றுவன எனக் கண்ணன் கூறுவது இது விருத்தம் மூன்றில் உள்ளது. இவை யனைத்தும் வியாசரின் மூன்று மற்றும் நான்காவது சுலோகத்தில் உள்ளன.

விருத்தம் 4. நிற்பன, நடப்பன, நால்வகை மனிதர்கள் ஆகியவை என் நினைவில் இருந்தே தோன்றியனவாகும். இச்செய்தி வியர்சரின் ஆறாவது சுலோத்தில் சற்று விளக்கமாக மனுக்களும் மனத்தால் எண்ணியல்பு எய்தினவென்று உள்ளது.

விருத்தம் 5. என்னை அறிந்தவர்கள் தங்களது சிந்தையை என்னிடத்தே வைப்பார்கள் என்பது. இதில் காணும் செய்திகள் மேலும் விளக்கமாகச் சுலோகம் ஏழு, எட்டு ஆகிய சுலோகங்களில் வியாசரால் கூறப் பெற்றுள்ளன.

விருத்தம் 6. என்னிடத்தில் மனத்தை வைத்தவர் களுக்கு வரங்கள் கொடுக்கிறேன். அவர்கள் துயரத்தை நீக்குகிறேன் எனக் கண்ணன் கூறுவது. இச்செய்தி வியாசரின் பத்து மற்றும் பதினோறாவது சுலோகங்களில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 7. என்னிடம் வரம் பெற்றவர்களின் மன இருளை நீக்குகிறேன் என்பது வியாசரின் பதினோறாவது சுலோகத்திலேயே உள்ளதுதான்.

விருத்தம் 8. இதில் கண்ணன் தன்னைப்பற்றி மேலும் கூறுவது:- வேறுபட்ட பிறவி, பெருஞ்செல்வம், ஆதிதேவன், பரப்பிர்மம், வேதங்களால் கூறப்பெற இயலாதவன் இவைகள் வியாசரின் சுலோகங்கள் பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து ஆகியவற்றில் அருச்சுனன் கண்ணனிடம் கூறுவதாக

உள்ளன. இவை இவ்வாறே சுவடி ஆசிரியரின் விருத்தங்கள்- 9, 10, 11 ஆகியவற்றிலும் சொல்லப் பெறுகின்றன.

விருத்தம் 12. என்னுடைய பெருமைகளில் சிலவற்றை மட்டும் கூறுகிறேன் எனக் கண்ணன் அருச்சுனனிடம் கூறுவது.

விருத்தம் 13. பூதங்களின் உயிர் நான், உயிர்களின் பிறப்பு இறப்பு நான், நானே விஷ்ணு, மரீசு, சூரியன்.

விருத்தம் 14. நானே சந்திரன், சாமவேதம், இந்திரன் மனம், சேதமடையாதவன், சங்கரன், வச்சிராயுதம்.

விருத்தம் 15. மேருமலை, பாகவன் (பாவகண்) ஆறுமுகன், கடல், யாகம்.

விருத்தம் 16. பிருகுமுனி, பிரகஸ்பதி, ஓம் எனும் எழுத்து, அரசமரம், நாதரதன், சித்திராதன்.

விருத்தம் 17. கபிலமுனி, உச்சிரவச்சிரன் என்ற குதிரை, ஐராவதம் என்னும் வெள்ளை யானை, அரசன்.

விருத்தம் 18. வச்சிராயுதம், வாசுகி எனும் பாம்பு, அனந்தன் எனும் நாகம், காமதேனு எனும் பசு.

விருத்தம் 19. நானே வருணன், யமன், கடல், பிரகலாதன்-இரணியனின் மகன், அசுரன்.

விருத்தம் 20. கருடன் எனும் பறவை, சிங்கம், ராமன், சுராமீன், கங்கை ஆறு.

விருத்தம் 21. சொற்றொகை, பிர்மவித்தை அகரம் எனும் முதல் எழுத்து, காலம், பாசம்.

விருத்தம் 22. இலக்குமி, முதன்மையான திறன், இளவேனிற்காலம், பிருகத்சாமம் எனும் முதல் வேதப்பிரிவு, மார்கழி மாதம் காயத்திரி.

விருத்தம் 23. சூது, துணிவு, வெற்றி, ஞானம்.

விருத்தம் 24. நானே கண்ணன், வைத்துவசன் எனும் கவி, தனஞ்செயன், வேதவியாசன், மவுனம்.

விருத்தம் 25. உலகம் தோன்றுவதற்கான ஆதிவித்து என்றெல்லாம் கண்ணன் தன்னைப் பற்றி எல்லாவற்றிலும் சிறந்தவன் நானே எனக்கூறும் இச்செய்திகள் அனைத்தும் சுவடியின் விருத்தங்களில் உள்ளவாறே வியாசரின் பதினைந்தாவது சுலோகம் வரை கூறப்பெற்று இறுதியாக இவ்வளவும் என்னுடைய பெருமைகளை நான் சொல்லிவிடவில்லை. ஓரளவுதான் சொல்லி இருக்கிறேன் எனக் கண்ணன் கூறுகிறான்.

விருத்தம் 26. எல்லா உலகங்களும் என்னுள் ஒடுங்கி நிற்பனவென, அலைகடலில் துயில்வதை விடுத்து ஆயர் குலத்திடை பிறந்து வளர்ந்து கம்சனின் உயிரை மாய்த்த கண்ணன் கூறினான் எனக் கூறப்பெற்றுள்ளது.

இவ்வாறு கண்ணனால் கூறப்பெற்றதனால் அர்ச்சுனனுக்கு என்ன பயன் என்பதாகக் கண்ணன் கேட்பதாக வியாசரின் இவ்வத்தியாயத்தில் நிறைவுச் சுலோகம் கூறுகிறது.

• • • • • • • • • • •

பதினோராவது அத்தியாயம்
விசுவ சொரூபவத்தியாயம்

சுருளார்கின்ற துளாய் முடியாய்ச் சொல்லுமனமுந்
தொடர்வரியா
யுருளார் சகடமிற வுதைத்தா யுயிர் கட்கெல்லா முள்ளுயிரே
யிருளார் பவத்தே கிடந்துளைக்கு மென்பா லிரங்கி நீயிசைத்த
வருளா ரமுதென் செவிகளா லாரப் பருகிய்யா வொழிந்தேன்.1

துளசியைச் சூடிய சுருள் சுருளான தலைமுடியை யுடையவனே! சொல்லிற்கும் மனதிற்கும் எட்டாதவரே! சகடமெனும் உருளையை உருட்டிக்கொண்டு அது இற்றுவிழும்படி உதைத்து சகடா சூரர்களை அழித்தாய், உயிர்களுக்கு எல்லாம் உள்ளே இருக்கும் உயிரே! அஞ்ஞானமென்னும் இருளில் கிடந்து உழலும் என்பால் மனமிரங்கி நீ சொன்ன அமுதம் போன்ற சொற்களை என் செவியாறக் கேட்டு என்னுடைய சந்தேகங்கள் எல்லாம் நீங்கப்பெற்றேன்.

சுருளார்-சுருண்டுள்ள, துளாய்-துழாய்-துளசி, பருகிய்யா-பருகியய்யா-கேட்டு சந்தேகம் நீங்கினேன். யய்ய-ஐயம், இது ஒரு அறுசீரடி யாசிரிய விருத்தம்.

தெரியா வகை நீயெங்குமாய் நின்ற வந்தத திருக்கோல
மரியாய் மெய்யே யடியேற்குங் காணலாமோமென வவன்பாற்
பரியா நின்ற சிந்தை யோடும் பாத்தன் வினவப்
பழமறைதான் பானவனுக்கப்
பரிசே காட்ட வேண்டிக் கட்டுரைப்பான். 2

யாருக்கும் தெரியாதபடி எங்கும் நிறைந்து நிற்கும் கண்ணனுடைய திருக்கோலத்தை, உண்மையாக நான் காண இயலுமோ எனக் கேட்ட அருச்சுனனுக்கு

அவன்பால் அன்பு மிகுந்தவனான, பழைய வேதங்களால் உணரப்பெறாத கண்ணன் அத்திருக்கோலத்தைக் காட்டுவதற்காக இவ்வாறு கூறலானான்.

பரியா நின்ற-பணிவுடன் நின்ற, பாத்தன்-பார்த்தன்-அருச்சுனன், பழமறை-பழைய வேதங்களால் அறியப்படாதவன் என்க.

வேறு

எண்ணினியற் கையதெண்ணி நிறைந்தது
பண்ணிய ஒருத்தர் படைத் தரியாதது
விண்ணினியத்தை சுருங்க விரிந்தது
கண்ணினழப் பரிதாயது காணாய். 3

ஒன்று இரண்டு என எண்ணப்படுவதற்கான வகையில் எண்ணிக்கையில் அடங்காதது. பலவற்றையும் உருவமாக படைக்கின்ற ஒருவரால் படைக்க இயலாதது. வானமே சிறியதாகப் போகுமளவுக்கு விரிவானது. கண்ணால் காண்பதற்கு அரியதாகியதைக் காண்பாயாக.

விண்ணினியம்-வின்னின் யியல்பு-ஐம்பூதங்களில் ஒன்றாகிய ஆகாயத்தில் மற்ற நான்கு பூதங்களாகிய வாயு, அக்கினி, பூமி, நீர் ஆகியவை அடங்குவதாகும்- இந்த அளவு விரிந்த ஆகாயமே சிறியது என ஆகும் அளவுக்கு விரிந்தது என்க.

படைத்தரியாயதது-படைத்தற்கறியாதது. உருவங்களைப் படைக்கும் சிற்பி போன்ற எவராலும் இப்படிப்பட்ட உருவம் எதையும் படைக்கத் தெரியாதது-இயலாதது எனவும் கொள்க.

மருத்துவர் சூரிய ரட்ட வசுக்க
ளுருத்திர ரென்னிடை யேயுளாயாரு
மருத்தி செயற்புத மாயவனே கருங்
கருத்துற வென்னிடையே யுளர் காணாய். 4

மருத்துக்கள் எனும் அசுவனி தேவர்கள், சூரியர்கள், அஷ்டவசுக்கள், உருத்திரர்கள் முதலான அனைவரும் மனது இசைவுடன், அன்புடனும் கூட மற்றும் பல அற்புத மானவர்களும் என்னிடத்துள்ளே இருப்பதைக் காண்பாயாக.

சூரியர்-என்பது பல சூரியர்கள் உண்டு என்க. அற்புதமாயவனேகர்-அற்புதமாய்+அனேகர், கருத்துற-மனம் விரும்பி.

என்றருளிச் செய்தவன் கண்ணிரண்டும்
நன்றறி கிறக்கென்ன ஞான மளித்திட்ட
டன்றவனுக் கருள் செய்வகை யேயாய்
நின்றவருக் கறியா வகையே நின்றான். 5

என்று இவ்வாறு அருளுடன் கூறிய கண்ணன், அருச்சுனனால் அவனுடைய மானிடக் கண்களால் காண இயலாது ஆகையால் தன்னுடைய விசுவரூபத்தைக் காணவேண்டி ஞானக் கண்ணைப் பெறும்படி செய்தார். பின்னர், அவ்வருச்சுனனுக்கு மட்டுமே அருள்செய்யும் வகையாக, எவரும் அறியாத ஒருவகை உருவாக தன்னுரு காட்டி நின்றான்.

நன்றறி கிறக்கென்ன-நன்று+அறிகிறகிறற்கு+என்ன-நன்றாகத் தெரிவதற்காக, ஞானமளித்திட்ட-ஊனக்கண் அன்றி இது ஞானக்கண் என்க. கண் என்பது ஊனக்கண்-மனக்கண்-அகக்கண்-ஞானக்கண் என்ற நான்கு வகையது என்பர்.

வேறு

பரிந்தினி யுரைப்பதெனவன் படிவமெய்யாய்
விரிந்ததுலகெங்கனும் விளங் கொளியினாலே
யெரிந்தன திசைப் பிறமதினனதென வேதுந்
தெரிந்ததிலை வானவர்களானவர் திகைத்தார். 6

சஞ்சயன் திருதவிட்டினனிடம் பணிந்து கூறுவது- அக்கண்ணனிடமிருந்து வெளிப்பட்ட ஒளியானது இவ்வுலகமெல்லாம் பரந்து விரிந்து விளங்கியது. சூரியனும் சந்திரனும் ஒன்றாக எரிந்துவிட்டதைப் போல இருந்து நின்ற அக்காட்சியைக் கண்ட தேவர்கள் இதன் காரணத்தைத் தெரிந்துகொள்ள இயலாது திகைத்து நின்றனர்.

திசைப்பிறமதினன்-திசைகளில் செல்லும் சூரியனும் மதியெனும் சந்திரனும், யெரிந்த-எரிந்து போயிற்று என. இது ஒரு கலிவிருத்தம்.

வேறு

அங்கு மால்கொள் கோலமிங்களந்து கூறலாகுமோ
கொங்குண மாலை யாடை சாந்து கொண்டு கோல் மேவியே
யெங்குமாகி யெல்லையின்றி யெண்ணில் கோதி கதிர்
மங்குல் வானில் வந்துதித்த தொக்கு மற்ற தன்கணே! 7

அந்த யுத்த பூமியில், மாதவனாகிய கண்ணன் கொண்ட கோலத்தை இங்கே அளவிட்டுக் கூற இயலாது. பூங்கொத்துக்களுடன் கூடிய மாலையணிந்து பீதாம்பரம் எனும் ஆடையுடுத்தி நறுமணப் பொருட்கள் எல்லாம் பூசிக்கொண்டதான அக்கோலம், எல்லாவிடத்தும் எல்லையின்றி ஒரே சமயத்தில் மேகங்கள் நிறைந்த வானில் கோடி சூரியர்கள் தோன்றினாற்போல உள்ளது.

மால்கொள்-மாலவன் கொள்ளும், கொங்குண-கொளத்தாகவுள்ள, சாந்து-சந்தன சாந்து, கோல்-கோல, கோடிகதிர்-கோடி சூரியன்கள், மங்குல்-அங்குல்-கார்மேகம்.

தொழும் புகழும் மெய்பயிர் துளக்கு முயிர்சோரு
மெழும் புவன மெழுவனன்றி யெதிர் காணான்
விழுங்கலுறு வாரினென விரும்பு மெய் மயங்கா
வழும் பரியுமென் செய்தனனென்றறிய லாமோ ! 8

தரையில் விழுந்து வணங்குவான், புகழ்ந்து பாடுவான், உடலில் உள்ள உரோமங்கள் சிலிர்க்க உயிர் சோர்ந்து விழுவான். ஏழு உலகங்களுக்கும் அவனே அன்றி வேறு எவரையும் நிகராகக் காணாது அந்த விசுவரூபத்தைக் கண்ணாலே விழுங்குவான். உடல் வருத்தமுற கீழே விழுந்து மயங்கி அழுகிறான். மேலும் அவன் என்ன செய்தான் என்று அறியக்கூடுமோ ?

மெய்மயிர்துளக்கும்-உடலில் உள்ள உரோமங்கள் குத்திட்டு நிற்கும்படி-மயிர்க்கூச்செரிதல், எதிர்காணான்-சமமாகக் கூற வேறு எவரும் இல்லாதான் விழுங்கலுறு-ஞானக்கண்களாலே விழுங்கி விடுதல் போல.

எவ்வகை தாள்களோடு தோள்களு மனேகஞ்
சாய்பெற வணிந்த வணிதானு முன்னனேகம்
வாய்களு மனேகம் மொளிவா முகமனேக
மாயுத மனேக மேழு மற்புத மனேகம் 9

ஏராளமான கால்களோடும, ஏராளமான தோள்களோடும், அழகுற அணிந்த ஆபரணங்களோடும், வாய்கள் பலவோடும், பல்லாயிரம் முகங்களோடும், ஒவ்வொரு கையிலும் ஆயுதங்கள் ஏந்திய பலகை களோடும் அவன் தோன்றியுள்ள அற்புதமானக் காட்சியைச் சொல்லவும் கூடுமோ !

தாள்-கால்கள், சாய்பெற-அழகுற, வணி-அணி-ஆபரணங்கள்.

அவ்வகையண மாயன்மா கோல மதனுள்ளே
யெவ்வகையவாய் பொருளி யாவு மதிர் காணா
னுய்வகை யனாமின்னெனா வுவகை கூறச்
செய்வகை யதறியா விசைய னிவ்வகை
செய்தானால். 10

அப்படிப்பட்ட, மாயவனான கண்ணனின் பெரிய வடிவத்தினுள்ளே எப்படி எல்லாவித உயிரினங்களும் எதிர்கொண்டு பிழைக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள இயலாதபடி மனதில் மகிழ்ச்சிகொண்டவனாக, என்ன செய்வது என்று அறியமுடியாமல் வியப்புடன் கூட விசயன் என்ன செய்தான் என்பதைக் கேளும்.

மாயன் மா கோலம்-மாயவனாகிய கண்ணனின் பெரிய வடிவம். உவகை கூற- மகிழ்வுடன்.

அஞ்சிமெய் நடுங்கி மிக அன்புறும் அகத்தே
நெஞ்சு மறிவுங் குளைய நின்று தொழு நேரே
யுஞ்சு கரை கரைகண்டன் னோனெனா வுவகை கூறும்
வெஞ்சுடர் கோவென்றென வியக்கும் வியன்எய்தா.11

பயம் மிகக்கொண்டு உடல் நடுங்கி, உள்ளத்திலே அன்பு மிகுதியாக, மனமும் அறிவும் குழைய நின்று தொழுவான். ஆற்றில் விழுந்தவன் நீரினின்றும் கரையைக் கண்டவன்போல மகிழ்ச்சியடைவான். வெம்மையான சுடரோவென்று வியந்து உயர் வியர்வையுறுவான்.

அஞ்சி-பயந்து, உவகை-மகிழ்ச்சி, வெஞ்சுடர்கோ! -வெம்மையான சுடரோ! என ஆச்சரியப்படுதல்.

மண்ணுற வணங்கு மயிர்குச் சென நிரைக்குங்
கண்ணுமனமுங் கரையநின்று கைமுகிள்த்தே
யெண்ணு முலகங்களை யுமியாவரையு மேனாட்
பண்ணு மவன் முன்பு சிலநின்று பகர்வுற்றான். 12

தன்னுடைய உடல் முழுவதும் தரையிலே விழும்படி யாக விழுந்து வணங்குவான். மயிர் கூச்செறிய கண்களில் கண்ணீர் மல்க, மனங்கரைய கைகளைக் கூப்பி நின்று, எண்ணுகின்ற இவ்வுலகங்களையும் யாவரையும்,

முன்னாளில் தோன்றும்படி செய்தவனாகிய, அந்தக் கண்ணனின் முன்னே நின்று இவ்வாறு கூறலானான்.

மண்ணுற-மண்ணில் வீழ்ந்து, மயிர்குச்சென-மயிர்கூச்செறிய, கைமுகிள்த்து-கைமுகிழ்த்து-கைகளைக்கூப்பி, மேனாட்பண்ணு-மேனாள் பண்ணும்-முன்னாளில் தோன்றும்படி செய்த.

தேவரும் வணங்கு தேவ நின்திருக் கோலத்துள்ளே
யாவருமெல்லை காணாப் பொருளெல்லா மிசையக்
கண்டேன்
முவரின்முதற் புத்தேளை முனிவர்களொடுங் கண்டேன்
மேவரு நாகங் கண்டேன் விண்ணவர் குளாமுங்
கண்டேன். 13

தேவர்களில் எல்லோராலும் வணங்கப்பெறும் தேவனே, உன்னுடைய இந்த அழகிய உருவத்திற்குள்ளே, அனைவரையும், எல்லையில்லாப் பொருள்கள் அனைத்தும் உள்ளிசைந்து கண்டேன். முப்பெருந் தெய்வங்களை முனிவர்களோடு இருக்கக் கண்டேன். மேலும் நாகங்களைக் கண்டேன் விண்ணகத்தோர் கூட்டமும் கண்டேன்.

விின்னவர் குளாம்-விண்ணவர் குழாம்-வானவர் கூட்டம் இது ஒரு அறுசீரடியாசிரிய விருத்தம்

கண்களும் வயிறுந் தொழுமுகங் கழுங் கருதி நோக்கி
என் பலவுடைய வாய் வுரு களனேகங் கண்டேன்
றண்கதிர் முடியுந் தண்டுஞ் சக்கரப் படையு மேந்தி
யொண்கதிர் கனலோ டொன்றாயனைய நின்னுர
வினுள்ளே.14

குளிர்ந்த ஒளியினை வீசக்கூடிய உன் முடிக் கிரீடமும், கையில் ஏந்திய தண்டாயுதமும், சக்கராயுதமும், ஏந்திய ஒளிமிக்க சூரியன் நெருப்போடு கூட

ஒன்றினைந்த உன்னுடைய இந்த உருவத்தினுள்ளே, அனேக கண்களும், வயிறும், தோள்களும், முகங்களும் எனப் பல உருவங்களாக நிறையக் கண்டேன்.

தொழு-தோளும், முகங்கழு-முகங்களும், வுருவுகளனேகம்-உருவுகள்+அனேகம், நிறைய உருவங்கள. ஒண்கதிர்-ஒளிவீசும் சூரியன், கனல்-நெருப்பு.

வேறு

இந்த வுரு வென்ன வுரு வென்றறிய கில்லே
னந்த மறி யெனடுவு யாதியு மனைத்தும்
நந்த வறியாத தனை நான்மறையு நாடித்
தந்த பொருளதனை மாயை தருசார்வை. 15

இப்போது நான் காணும் இந்த உருவம் எந்த உருவம் என்ன என்பதை நான் அறியேன். ஆதியும், நடுவும் அந்தமும், அழிவு என்பதை அறியாததனை, நான்கு வேதங்களும் தேடித்தந்த, மாயை சார்ந்த பொருளை அறிகிலேன்.

அந்த-முடிவு, ஆதி-தோற்றம், நந்த-அழிக்க, மாயைதரு சார்பு-மாயையின் சார்புடையது. இது ஒரு கலி விருத்தம்.

என்று முளதாயதை யியற்றரும மெல்லாம்
நின்று பிறளாவகை நிறுத்தி நெறி வாள்வை
சென்று குறையாத தனையென பழைய கோவைக்
கன்று துடரா ப்பரிசு நின்றெ னெதிர் கண்டேன். 16

என்றும் அழியாது இருப்பதானதை, தரும நெறிகள் தவறாது நிற்கச் செய்யும் நேர்மையான வாழ்வினை யுடையவனை, காலம் கடப்பதால் குறைவு ஏற்பட்டு விடாதானை, என்று சொல்லி பழமையான தலைவனைக்

கன்றைத் தொடர்ந்து செல்லும் பசுவைப் போல, தாய்ப் பசுவைத் தொடர்ந்து பின் செல்லும் கன்றினைப் போல எனவும் நின்று என் எதிரில் கண்டேன்.

பிறளா வகை-தவறாமல், வாள்வை-வாழ்வை, பழையகோ-பழமையான வேதங்களாலும் அறியப்படமுடியாதவன் என முன் பாடல்களில் சொல்லப்பெற்றவாறு-பழமையானவன் என்க.

வலந்தரு நிறத்தொடு வருங்கதிரிரண்டே
யலர்ந்தெழ விருப்பதை யடுங் கன்னெடுருப்பை
மலர்ந்தெழு முகத்தை மயங்க வுலகெங்கும்
கலந்து சுடருற்றதை வியந்த னெதிர் கண்டடேன். 17

குன்றாத நிறத்தொடு, கண்களைச் சுடுகின்றதாகிய நெருப்பென்ன வருகின்ற சூரிய சந்திரர்கள் எனும்படி விளங்கும் கண்களையுடைய முகத்தை, மயங்கும்படி உலகமெல்லாம் கலந்து நின்று ஒளிமிக்கதாய் இருப்பதை வியப்புடன் என் எதிரில் கண்டேன்.

கதிரிரண்டு-சூரியன்-சந்திரன். இதில் சூரியன் மட்டுமே காணக் கண் சுடுவது ஆயினும் சந்திரனையும் அவ்வாறே கூறப்பெற்றுள்ளது. மேலும் முகத்தைப் பார்ப்பது கண்களோடு சேர்த்துத்தான் ஆயினும் கண்களோடு கூடிய முகத்தை எனவும் கூறப்பெற்றுள்ளது.

நிலத்தினோடு வானுற நிமிந்த்து திசைநேர் பொய்
விலக்கமற நீ யுனது மேனியை விரித்தா
லலக் கண்டையாதவர்களா ரடை வய்யாக்
கலக்க முறுகின்ற வுலக ங்களிவை காணாய். 18

வானுக்கும் பூமிக்குமாக எல்லா திசைகளிலும் விரிந்தவனாக நீ உன்னுடைய உடலை விரித்துப் பெரிதாகக் காட்டினால், துன்பம் அடையாதவர்கள் யாரையா? எல்லோரும் கலக்கம் அடைகிறார்கள் இதனைப் பாருங்கள்.

திசைநேர்போய்-எல்லாத் திசைகளிலும். விலக்கமற-இல்லாத இடமென ஒன்றில்லாதபடி, மேனி-உடல், கலக்கம்-பயம், துன்பம்.

வணங்க விராமை யோர்களரு மாதவர் வழுத்த
கணங்கொடு வியந்து புகள் சித்தர் துகை கண்டே
ணுணங்க வுயிர் தானவர்கள் கந்திருவருள்ளோ
ரிணங்கி யின தென்றறி களாரை யெதிர் கண்டேன். 19

வானவர்கள் வணங்க மாதவம் செய்யும் ஞானிகள் உன்னைப் புகழும் சித்தர்கள் நிறைய பேர்கள் வணங்க தானவர்களும் கந்தர்வர்களும் ஒன்றுகூடி இன்னதென்று அறியாதிருக்க எதிரே கண்டேன்.

இமையோர்கள்-வானவர்கள், வழுத்த-வாழ்த்த, கணங்கொடு-கணங்களோடு-கூட்டத்தாருடன், புகள்-புகழ், துகை-அளவு, ரிணங்கி-இணங்கி ஒன்றுகூடி, யினதென்று-இன்னதென்று.

வானடைய விம்மி வருணம் பல வுடைத்தாய்ப்
பேனடைய வாய் பிறை போலெயிறு பெள்வாய்
தானுடையவாய் பலமுகம் பல தழைக்கும்
யானைடைய லாம் வகையதனறி யுரு வேந்தாய். 20

வானத்தையே அடைக்கும்படியாக பெரியதாகி, பல நிறங்களுடையதாய், பேயினுடைய வாயிற் பற்களைப் போல, பிறைபோல வளைந்த பற்களுடன், பிளந்த வாயும கொண்டவனாய் பல முகங்களோடு என்று வளர்ந்து கொண்டே வருவதுமாகிய இவ்வுருவை என்னால் அடையமுடியாதபடி உள்ளதே! வேந்தே!

வானடைய-வானளாவிய, வருணம்-வர்ணம், நிறம், பேனடைய-பேயினுடைய, பிறைபோல் எயிறு-வளைந்த பிறை நிலவு போன்ற பற்கள், பெளவாய்-பிளந்த வாய், வகையதன்றி யுரு-வழியில்லாத உருவம் முடியாத, இயாலாத உரு.

தஞ்சமிவ்வுலகுக் கெல்லா மாய நின்ற தன்மை கண்டேன்
யுஞ்சுன னென்று மாயனுருவுறக் காணக்காண
நெஞ்சமு நடுங்க நிற்கலையின் திசையுங் களிண
னஞ்சலென்றருள வேண்டு மகிலமுமாய வேந்தாய். 21

இவ்வுலகத்து உயிர்கள் எல்லாம் தஞ்சமென்று அடைவதற்கான இடம் நீயே என்னும் உன் தன்மையைக் கண்டேன். உன் மாய உருவத்தைக் காணக்காண நெஞ்சம் நடுங்கி நிற்கையில், பிழைத்தேன் என்று சொல்ல ஒரு திசையும் காணேன். என்னை பயப்படாதே என்று சொல்லி அருளவேண்டும்! உலகமெல்லாம் நீயேயான தலைவனே!

தஞ்சம்-அடைக்கலம், யுஞ்சனனென்று-பிழைத்தேன் என்று, வேந்தாய்-வேந்தனே-தலைவனே!

நூற்றுவர் தாமுந் தங்கள் சேனையு மவர் கட்காகி
றேற்றெதிரரசர் தாமு மென்படை தாமுமுந்தன்
கூற்றுற ளெயிற்றிற்பட்டு குறையுடலாகி நின்று
காற்று தீயினன்ன முகங்களில் வீழக் கண்டேன். 22

நூற்றுவர்களாகிய துரியோதனன் முதலானவர்களின் படைகளும், அவர்களுக்காகவே அவர்கள் சார்பில் எம்மை எதிர்க்க வந்துள்ள அரசர்களும், இயமனின் பற்களைப் போன்ற உன் பற்களில் அகப்பட்டு தலை, கை, கால்கள் இற்றுக்குறைவுற்ற உடல்களாகி நெருப்பிடைப் புகுந்த காற்றைப்போல உன் வாயில் விழுவதைக் கண்டேன்.

கூற்றுறளெயிற்றிற் பட்டு-கூற்றுவன்-எமன், எயிறு-பற்கள்-பட்டு-விழுந்து, குறையுடன்-கை கால் தலை என இவையற்ற உடல், காற்று தீயினன்ன-பெரு நெருப்பில் காற்று புகுந்தது போல.

ஓதரு நதிகளெல்லா மொரு கடத் தடைந்தார்ப் போல
போதரும் பொருள்களெல்லா முன்னுள்ளே புகுகக் கண்டேன்
தீதனிற் விட்டிற் பாய்ந்தாற் போற்றிருமுகங் களுள்ளே
மாதவ உயிர்களெல்லாம் விழுந்து மாய்குதல் கண்டேன். 22

சொல்லுவதற்கு அரிய பெரிய நதிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு குடத்திற்குள்ளே சென்று அடைந்து கொள்வதைப் போல, பெருமைக்குரிய அனைத்தும உன்னுள்ளே புகுவதைக் கண்டேன். தீயினைக் கண்ட விட்டில் பூச்சிகள் அத்தீக்குள் வீழ்வதைப்போல அவை யணைத்தும பாய்ந்து உன் அழகிய வாய்க்குள விழுந்து உயிர்விடுவதைக் கண்டேன் மாதவா!

கடம்-குடம், புகுகக்-புக, மாய்குதல்-சாதல்.

ஒளியினாலுலக மெல்லா மொழிந்தவை யூண் போதாமல்
வெளியினானீட்டி நீட்டி வெறுஞ்சுவை கொள்ளா நின்றாய்
தெளிகிலே லுன்னை யுந்தன் செய்கையுந் தெரிக்க
மாட்டேன்
னளியினா லடியேங்குன்னை யுள்ள வாறருளிச் செய்வாய். 24

உன்னிடத்தே தோன்றுகின்ற ஒளியினாலேயே இந்த உலக முழுவதையும் உண்டு விட்டாய். நாக்கை நீட்டி நீட்டி நக்கி கொண்டிருக்கிறாய். உன்னையும் இன்னா ரென்று தெரியவில்லை. உன் செயல்களையும் இன்னது என்று தெரிந்துகொள்ள இயலவில்லை. ஆகையினால் உன்னை உள்ளது உள்ளபடி நான் தெரிந்துகொள்ளும்படி அருள்புரிவாயாக.

யூண் போதாமல்-உண்டது போதாமல், வெறுஞ்சுவை-சுவைப்பதறகு ஏதும் இல்லாதபடி வெறும் நாக்கை மட்டும் நீட்டி. தெரிக்கமாட்டேன்-தெரிந்து கொள்ள இயலவில்லை.

என்றவன் வணங்கிக் கேட்ப யாவுமாய் எல்லையின்றி
நின்றவ னுரைப்பா னுன்னை ஒழிய நின்றவரை யெல்லாங்
கொன்றுயிர் பருகலுற்றேன் கடையுகங் குறுகலுற்ற
வன்றுலக டைய மாய்க்கும் வனி யானறி நீயையா. 25

என்று அருச்சுனன், கண்ணனை வணங்கிக் கேட்க, எல்லாமாகி எல்லையின்றி நின்றவனாகிய கண்ணன், உன்னைத்தவிர இங்கு (இந்தப் போர்க்களத்தில்) நின்றவர்களை எல்லாம் கொன்று அவர்களின் உயிர்களைப் பருகிவிட்டேன், கடைசியாக யுகம் முடியும் போது, எல்லா உயிர்களையும் அழிக்கும் காரியத்தைச் செய்கிறவன் நான் என்பதை நீ அறிவாய் அய்யா!

உன்னை ஒழிய- உன்னைத்தவிர, நினறவர்கள், கடையுகம்-யுக காலம் முடியும் நேரம், வன்றுலகடைய மாய்க்கும்-அன்று+உலகம்+ அடைய+மாய்க்கும், அடைய-முழுவதுமாக.

இறந்தாரே யெனக் கருதிங்கி வர்களெலா மென்னாலே
யறந்தானுமது நீயே யாங்கவரைக் கொன்றாயார்
சிறந்தா ரவ்வரசினையுஞ் செகத்தினில் வாழ்திருவினையும்
பிறந்தவர்கள் பெறாத பெரும் புகழினையும் பேணென்றார். 26

இப்போர்க்களத்தில் இறந்தவர்கள் எல்லாம் என்னாலேதான் செத்தார்கள் என்று நினை. தருமம் அதுதான். அப்படியல்லாது. நீயேதான் அவர்களை எல்லாம் கொன்றாயெனில், அவ்வாறு இறந்தவர்களின் அரசையும், உலகத்தில் உள்ள செல்வங்களையும், புகழையும், இந்த உலகத்தில் எவரும் பெறாத புகழினை நீ பெற்று அதனைக் காப்பாற்றுவாயாக என்றார்.

அறந்தானுமது-அதுவும் தருமமேயாகும், செகத்தினில்-உலகினிர், திரு-புகழ்-செல்வம், பேண்-காப்பாற்று. இது ஒரு கொச்சகக் கலிப்பா.

இவ்வகை மொழியாக் கேட்ட விசையன்னென் செய்தா னென்னீர்
கை தலமிசை யலாகக் கட்டுரை குளரக் கண்ணீர்
பையவே மார்பிற் சோரப் பயத்தொடும் பரிவினோடும்
மைவரை எடுத்த வள்ளல் பெருமையை வழுத்த லுற்றான். 27

இவ்வாறு கண்ணன் கூறியதைக் கேட்ட அருச்சுனன் என்ன செய்தானென்றால், கைகளைத் தலைமேல் கூப்பிக் கொண்டு, வார்த்தைகள் குழற கண்ணீரானது மெல்ல மார்பிலே விழும்படியாக பயத்தோடும், பணிவோடும், கரிய மலையைத் தூக்கிய வள்ளலாகிய கண்ணனின் பெருமைகளைப் புகழ்ந்து பேசத்தொடங்கினான்.

கைத்தல மிசைய லாக-கைகளைக் கூப்பி, குளர-குழற, பைய-மெதுவாக, மார்பிற் சோர-மார்புவரை வழியும்படி, மைவரை-கரியமலை-கோவர்த்தனகிரி, வழுத்தலுற்றான்-சொல்லத் தொடங்கினான். இது அறுசீரடியாசிரிய விருத்தம்.

சாயா விமையோர் சனகாதிக டாப தரானோர்
சேயா யணியா யுனை வேற்றியார் தெளியாதார்
மாயா மனனே மதுசூதனனே திருமாலே
யாயாவர சேயனை வேறறி யேனடியானே ! 28

நேர்மையான வானவர்கள், சனகாதி முனிவர்கள் ஆகியோர் தங்களுக்கு அருகில் இருப்பவனாக, அறிகின்றார்கள். மாயையுடைய மனத்தினனே! மதுசூதனா! திருமாலே! உன்னையல்லால் நான் வேறேதும் அறிகிலேன்.

சாயா-நேர்மை தவறாத, வேற்றியார்-வேறுயார், வேறறியேனடி யேன்-வேறு+அறியேன்+அடியேன்.

ஏகா வழகே யிகழா வுறவே யென தாழிப்
பாகா விமையோர் பருகா வமுதே பழையோனே
தீகானில் நீருளவே றெவையுந் தெரிகல்லா
வாகாயமு மேயுனை வேறறறியே னடியேனே ! 29

எல்லாவற்றிற்கும் ஒன்றாய் ஏகமாய்-இருப்பவனே! அழகனே! இகழகப்பெறாத உறவே! பிறவிக் கடலை நீந்துவதற்கான தோணியே! வானவர்களால் உண்ணப் படாத அமுதமே! பழமையானவனே! தீ, காற்று, நீர், நிலம் ஆகியவற்றிலும் ஆகாயமும் கூட நீயே என்பதைத் தவிர வேறெதையும் நான் அறிந்திலேன்.

ஏகம்-ஒன்று, ஆழிப்பார்கன்-பாகன் என்பவன் யானையை வழி நடத்துபவன், ஆழிப்பாகாவென்பது கடலில் விழுந்தவனைக் கரை சேர்ப்பபவனே எனும் பொருளாயது. விமையோர்-இமையோர், இமைக்காதவர்-வானவர், கானில்-கானில;

சாதீவினை யிலே விழுநா டமியேனைப்
போதீ தழியாத நெறி யன்றருளும் புனையாளா
சோதி யருவே யுருவே சுருதித் தொகை கூறு
மா தீமுடிவே யுனை வேறறியே னடியேனே! 30

சாவினைத் தரக்கூடிய தீவினை என்னும் கடலிலே விழுந்து இறக்கின்ற என்னை, அவ்வாறு அழியாதபடி எனக்கு நல்வழியை அருளும்! என்றும் துணையானவரே! ஒளி வடிவமே! உருவமாயும் உருவமற்றவராயும் இருப்பவரே! வேதங்களால் சொல்லப்படுபவரே! ஆதியே! முடிவே! உன்னை அல்லாது வேறெதையும் அறிகிலேன்.

சா தீவினை ஆழி-தீவினை எனும் கடல் அது சாவைத் தருவது-தீவினை சாவினைத் தருவது என இருவகைய பொருளது, புனையாளா-துணையானவனே! சுருதித்தொகை-வேதங்கள் யாவும்.

இருவே றுயிரே யெனவே யுலகா மெவை யாவுஞ்
தருவே முதலே யவையோ யழிநாடமியேனே
யருவே யுருவே உயிரே யென மற்றவை சோர
யுருவே யுறவே யுனை வேறறியே னடியேனே ! 31

ஆண் பெண் என இருவேறு வகையினதாக உலகை யெல்லாம் படைத்த கற்பகத்தருவே! முதலே! எல்லா வற்றையும் அழிப்பதில் நாட்டம் உடையவனே! அருவமே! உருவமே! உயிரே! மற்றும் இவையேதும் சேராதவனே! உன்னையல்லால் வேறெதையும் அறியேன்.

அழிநாடமியன்-அழிப்பதில் விருப்பம் உடையவன்.

மயலே வடிவாய் தருமாயை யினான் மறை யாவு
மியலே விசையே யெழின் மாசுவை போலினியானே
செயலே யுரையே மனமேஎன மற்றவை சோர
வயலே யறிவே யுனை வேறறியே னடியேனே! 32

மயக்கமே உருவாக மாயைத்தரும் வேதங்கள் யாவும் ஆனவனே! இயலே! இசையே! இசையின் ஏழு சுரங்களின் பெருஞ்சுவையே! எல்லாச் செயல்களு மானவனே! உரையானவனே! என் மனமே! உன்னை யல்லால் வேறெதையும் அறியேன்!

இசையே யெழின்சுவை என்பது இசையின் ஏழு சுரங்களின் இனிமையைக் குறித்தது. அதுபோல இனியவனேயும் என்றது.

ஒருநாக நாடா வொருநாக மளாவுய ரோதங்
கர நாண் மலரா முதா யெழவே கடைவோனே
வர நான்முகனே மறைதே டரியே மழுமான் சே
ரானா மகனே யுனை வேறறியே னடியேனே! 33

திருப்பாற் கடலில், மேரு மலையை மத்தாக வைத்து, ஒரு நாகத்தை மேலாகவும், இன்னொரு நாகத்தைக் கீழாகவும், நான் போலக் கட்டி மலர் போன்ற கைகளால் அமுதம் எழும்படி கடைந்தவனே! வரம் தரும் நான் முகனே! வேதங்களாற் தேட அரியவனே! மானும் மழுவும் ஏந்திய அரனே! உனையன்றி வேறெதையும் அறியேன்.

ஒருநாக-ஒருநாக-இங்கு இரண்டு நாகங்களைக் கொண்டு பாற்கடலைக் கடைந்ததாகக் கூறப்பெறுகிறது. ஒருநாகம்-வாசுகி.

ஞான முத லிந்திரிய மனைத்தினுக்கு நாயகனே!
யூன வினை தனை யறுப்பா யுன்னுடைய புகழ் கேட்கில்
வான வரு முனிவரரு மனங்களித்து மகிழ் வெய்தத்
தானவரு மரக்கர் களுஞ் சாதுயரப் படு பவர்களால். 34

ஞானம் முதலான அனைத்து இந்திரியங்களுக்கும் தலைவனே! குற்றங்களை யுடைய வினைகளை அறுப்பவனே உன்னுடைய புகழைக் கேட்டு தேவர்களும் முனிவர்களும் மனம் களிப்பெய்தி மகிழ்வார்கள். ஆனால் அசுரர்களும், ராட்சசர்களும், மரணத்துயரை அடை வார்கள்.

யூனவினை-ஊன வினை-ஊன-குறையுள்ள, இது ஒரு அறுசீரடி யாசிரிய விருத்தம்.

கையும் பதமுந் திருவாயுங் கண்ணுஞ் செய்ய கருமுகிலே!
யையைம் பொருளும் மறிவறியா யனார் தாயே யந்த மிலாய்
மெய்யும் பொய்யு மிலாத யெல்லா மாகி விரிந்தாயே
உய்யும் பரிசு நினைந்தவர் களுன்னை வணங்காத
வருளரோ! 35

திருக்கரங்களும், பாதங்களும், முகமும், திருவாயும் கண்களும் சிவந்த கருத்த மேகம் போன்றவனே! இருபத்தைந்து தத்துவப்பொருள்களையும், நன்றாக அறிந்தவரே! பிர்மாவின் தாயே! முடிவு இல்லாதவனே! உண்மையும் பொய்யுமில்லாது எல்லாமாகி பரந்துள்ளவரே! பிழைத்துக்கொள்ள வேண்டுமென நினைப்வர்கள் உன்னையே வணங்காதிருப்பரோ? வணங்குவர் என்பதாம்.

பதமும்-திருப்பாதங்களும், கருமுகில்-கருத்த மேகம், யையைம் பொருள்-இருபத்தைந்து, ஐந்தொடு ஐந்து-25, இதனை ஆத்ம தத்துவங்கள் இருபத்து நான்கொடு சீவாத்துமாவென ஒன்றுஞ் சேர இருபத்து ஐந்து தத்துவங்கள் ஆகிறதாகக் கூறுவர். உய்யும் பரிசு-கடைத்தேற வேண்டும் என்பர்.

ஆதி தேவனாவாய் நீயாக்கைக் கமைந்த வாருயிர் நீ
யாது மறியப்படாமையும் நீயெல்லாங் கடைகாற் புகலிடநீ
யோதியுணர்வார் யுணர்வா லுணரப் படுபொருணீ
நீதி யமனா யழிப்பா னீநீருங் காற்று மாவாய் நீ. 36

ஆதிதேவன் ஆனவனும் நீ! உடலுக்குள் அமைந்த உயிரும் நீ! எதனாலும் அறியப்படாதவன் நீ! எல்லாமும கடைசிக் காலத்தில் புகலிடமாய் இருப்பதும் நீ. நூல்களைக் கற்றுணர்வோரின் உணர்வு நீ! அவ்வுணர்வினாலே உணரப்படுபவனும் நீ! நீதியினையுடைய எமனாயிருந்து அழிப்பவனும் நீ! நீயே நீரும் காற்றும் ஆவாய்!

யாக்கை-உடல், கடைகாற்-கடைசிக்காலத்தில், நீதியமன்-தருமத்தை முறையாகக் கடைப்பிடிக்கும் எமன்.

ஏயும் பரிசு இவ்வுலக மெல்லா மென்றும் பிறப்பித்திடுகின்ற
தாயும் பிதாவு மாவாய்நீ தாய்தாய் தந்தை தந்தைநீ
யாயும் படியை யல்லா மலையாவுன்னை யடியேனென்
மாயும் பிறவித்துயர் தீர நூறாயிரங்கால் வணங்கினேன்.37

எல்லோராலும் ஏற்கப்படும் வகையில் இவ்வுலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம், பிறக்கச் செய்யும், தாயும் தந்தையும் நீ! தாயின் தாய்-பாட்டி-தந்தையின் தந்தை தாத்தா-நீ! உன்னை சாதாரணமாகத் தேடி அடைய இயலாது! ஆய்வு செய்து தேடப்பெற வேண்டியவன் நீ! தொல்லை தரும் எனது பிறவித்துயரம் தீர வேண்டி உன்னை நூறாயிரம் முறை வணங்குகிறேன்.

ஏயும்-ஏற்புடைய, நூறாயிரம் கால்-கால்-முறை.

என் பேரிடும்பை கெடும்வண்ண மின்னந் தொழுதே
னெந்தாயுன்
முன்பே தொழுதே னுன்னுடைய பின்பே முறையால்
வணங்கினே

யன்பே யடியே னாருயிரே யகலா விந்தப் பெரும் பிறவி
வன்பேகெட வுன்றனை யெங்கும் மறுத்து மறுத்து
வணங்கினேன். 38

என்னுடைய பெருந்துன்பம் அழிவதற்காக இன்னமும் உன்னைத் தொழுகின்றேன். உன்னுடைய முன்புறத்தை மட்டுமல்லாது முறையாக உன்னுடைய பின்புறத்தையும் வணங்கினேன் அன்பே! ஆருயிரே! என்னை விட்டு நீங்காத இந்தப் பிறவிப் பிறவியின் துயர் அழிவதற்காக உன்னை எல்லாவிடத்தும் மீண்டும் மீண்டும் வணங்கினேன்.

பேரிடும்பை-பெருந்துயர், முன்பே-பின்பே-முன்புறமும் பின்புறமும்-இது வைணவ சம்பிரதாயம். வன்பு-வலிய கொடுமை, மறுத்து மறுத்து-மீண்டும் மீண்டும்.

தேவதேவ நின்னில் வேறு தேவரேது தெய்வ மேது
பாவமே தறங்கலேது பற்றியாது வீடியாது
சாவதேது வாழ்வதேது மனைத்துமாய் தன்மை நீ
யாவதேது மொன்று நானறிந்திலேன் மாயனே ! 39

தேவர்களின் தேவனே! உன்னையன்றி வேறு தேவனேது? தெய்வம் ஏது? பாவமேது? புண்ணியம் ஏது? பற்றும் இல்லை வீடுபேறும் இல்லை. சாவதேது? வாழ்வது ஏது? அனைத்துமானவன் நீ! உன்னால் அன்றி ஆவது ஏது? ஒன்றும் நான் அறிகிலேன் மாயவனே.

பாபமேதறங்கலது-பாவம்+ஏது+அறங்கள்+ஏது; வீடியாது-வீடு பேறு-மோட்சம் ஏது?

நீதிவேதம் வானுளோர் நிலத்துளோர் நினைந்துனைந்
தோதியோதியுட் கசிந்த் துணர்ந்த வுன்னை முன்னெலாஞ்
சாதிபேதமாகி வாழ்சரா சரங்களுக் கெல்லா
மாதிமூல மென்று நானறிந்திலே னென் மாயனே! 40

நீதியும், வேதங்களும், வானவர்களும் நிலத்தில் வாழ்கிறவர்களும், நினைந்து நினைந்து, பாடி, மனம் உட்கசிந்து உணர்ந்தவனாகிய உன்னை, இந்த உன் விஸ்வரூபத்தைக் காண்பதற்கு முன்னால், பல்வேறு மாறுபாடுகளுடன் கூடிய இந்த அண்டசராசரங்களுக் கெல்லாம் ஆதி மூலமானவன் நீயே என்பதை அறியவில்லை மாயவனே!

ஆதிமூலம் - முதன்மையானவன்.

சாயைபோலும் வாழ்வு நாடுவீடு தந்தை தாயெனும்
பேயை ஏறிமாறியே பிறந்திருக்கு மீதெலாந்
தூயை யாகியாதுமோர் தொடங்கிலாது நின்றநின்
மாயை யாவ தென்று நானறிந்திலே னென் மாயனே ! 41

நிழலைப் போன்ற வாழ்வு, நாடு, வீடு, தந்தை, தாய் எனும் பேயை சார்ந்து மாறிமாறி பிறந்திருக்கும் இவை எல்லாம் தூய்மையாக இருந்தாலும், ஒரு தொடக்கம் என்பது இல்லாத உன் மாயையை என்னவென்று அறியேனே மாயவனே !

சாயை-நிழல், பேயை என்றது யாவும் தொல்லை தருவன என்பதால், தொடங்கல்-தோற்றம்-முதல் நிலையான.

யாதவாவென் மைத்துனா வடா வசோதை யின்னுயிர்க்
காதலாய காலியாய் கண்ண கண்ண வென்று நா
னோதவ லன்றியே யுரைத்த தீமை யாவையு
மாதகா தென்று நானறிகிலேனேன் மாயனே. 42

யாதவனே! என் மைத்துனனே! அடேய் யசோதைக்கு உயிர் போன்ற அன்பானவனே! கண்ணா! கண்ணா! என்று மரியாதையில்லாமல் நான் உன்னைப்

பேசியதெல்லாம், அப்படிப்பட்ட குற்றங்களையெல்லாம் தகாத பெருங்குற்றமான செயல் என்று நான் அறியவில்லையே! மாயவனே !

வடா-அடா, வாடா போடா வெனப் பேசுதல். கண்ண கண்ண வென்றது மரியாதையின்றி ஒருமையில் பேசியதைக் குறிப்பது.

ஏறுமல்லவென்று குன்றெடுத்த வண்ண மெண்ணியே
கூறு மல்ல றீரவும்பர் கூறுகின்ற கொண்டலே
வேறுமல்லை யென்று மல்லை மெய்மை கூறுமப்பொரு
ளாறும ல்லை என்று நானறிந் திலேனேன் மாயனே ! 43

கம்சனால் ஏவப்பெற்ற மல்லர்களை வென்று, யாதவர்களை இந்திரனின் கோபத்தினின்றும் காப்பாற்ற கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்தவனே! தேவர்களால் கூறப்பெறுகின்ற மேக வண்ணனே! இவ்வாறெல்லாம் செய்தவன் வேறு யாருமல்ல வென்றும், பல பேரானவனும் அல்லவென்று, உண்மைகள் கூறும் பொருள் உன்னையல்லாது வேறு யாருமல்லவென்றும் நான் தெரிந்திருக்கவில்லையே! மாயவனே !

ஏறுமல்லவென்று-குன்றெடுத்த வண்ணம், மல்லர்கள் ஈறு-என்பன வெல்லாம் கண்ணனின் வீரச்செயல்களையும் தெய்வீகமான செயல்களையும் குறிப்பிடுவனவாகும். கொண்டலே என்பது மேகத்தைப் போன்றவனே என்றது.

என்னுடைய தோழனெனவே கருதியானு
முன்னுடைய மெய்மையினை யொன்று முணராதே
வன்மையினினின் மொழி மறுத்தெதிர் வாத்தை
புன்மொழி களானவை பொருத்தருளு கண்டாய். 44

உன்னை என்னுடைய நண்பன் என்று நினைத்து உன்னைப் பற்றிய உண்மைகளை ஒன்றும் தெரிந்து

கொள்ளாமல் வன்மையான சொற்களினால் உன் சொல்லை எதிர்த்துப் பேசியதை எல்லாம் நீ பொறுத்தருள வேண்டும்.

வன்மையினால்-வலிமையினால், புன்மொழி-கொடிய சொற்கள், பொருத்து-பொறுத்து-மன்னித்து.

உண்ணல் விளையா டுதலுறங்குதல் திரித்தல்
பிண்ணலுறு போது களினும் பழமை யாலு
மெண்ண லறியா மையினில் வந்த பிழையெல்லாம்
கண்ண கருணாகர பொறுத்தரு ளுகண்டாய் ! 45

உண்ணும்போதும், விளையாடும்போதும், கூடி திரிதலின்போதும், ஒருவருக்கொருவர் விளையாட்டாகச் சண்டையிட்டுக் கொள்ளும் போதும், நீண்டகாலமாக உன்னோடே பழகினமையாலும், எண்ணிலடங்காத பிழைகளை என்னுடைய அறியாமையினால் செய்து விட்டேன் அவைகளை எல்லாம், கண்ணா! கருணாகரா! நீ மன்னிக்க வேண்டும்.

திரித்தல்-திரிதல், பிண்ணலுறு போது-விளையாட்டாக சண்டை யிட்டுக்கொள்ளுதல்.

உண்டான உலகனைத்து மீன்றாய் நீயே
யெவராலுமுன் ணுண்மை யுணர்ந்து கூறிற்
கொண்டாடப் பரிவாய் நீ மேன்மை நல்கிக்
குருவாகிக் குற்றங்க ளர்க்கின்றாய் நீ
எண்டாலும் மறையனைத்து முன்னின் மிக்கா
ரில்லை யென நின்றெடுத்துமெடுத்துக் காட்ட
கண்டாரு நின்பெருமை காணமாட்டா
கண்ணிலாதவர் வேறு காண்பதுண்டோ ? 46

தோன்றிய உலகங்கள் அனைத்தும் உன்னிடத்தே தான் தோன்றின. எவரேனும் இவ்வுண்மையை உணர்ந்து கூறுவார்களேயானால், அவர்களை நீ பெருமையுடன் கொண்டாடுவாய். அவர்களுக்கு உயர்நிலை அளிப்பாய். அவர்களுக்கு குருவாக நின்று அவர்கள் செய்த குற்றங்களை எல்லாம் மன்னிப்பாய். எண்களாலும், வேதங்களாலும் உன்னைவிட மேலான அதனை அறிந்தவர்களும் கூட உனது உண்மையான பெருமையைக் காணமாட்டார்கள். அவ்வாறிருக்க ஞானக் கண் இல்லாதவர்கள் வேறு எதையும் காண்பது என்பது ஆகுமோ ?

எண்டாலும்-எண்களால், கணணிலாதவர் என்றது ஞானக்கண் என்னும் உள் ஒளி இல்லாதாரைக் குறித்தது. இது ஒரு எண்சீரடியாசிரிய விருத்தம்.

அறியாத பருவத்து மகன் செய்குற்ற
மருந்தாதை பொறுத்தனவு மாவிபோலப்
பிரியாத தோழன் செய்குற்ற நட்பிற்
பெரியோர்கள் பொறுத்தனவும் பேதையேனான்
குறியாது செய்துவரு ங்குற்றமெல்லாங்
குணமாகக் கொண்டருள வேண்டுமென்றே
வெறியாரு மலர்ப்பதங் களிடையே வீழ்ந்து
வேண்டிக் கொண்டிவை யின்னம் விளம்ப லுற்றான் 47

அறியாத குழந்தைப் பருவத்தில் குழந்தைகள் செய்யும் தவறுகளை அவர்களின் தந்தையர் மன்னித்து பொறுத்துக்கொள்வது போலவும், ஒருவரோடொருவர் என்றும் பிரியாத நட்புக் கொண்டவர்கள் நண்பன் செய்த குற்றத்தை மதிப்பிற்குரியவர்கள் பொறுத்துக் கொள்வதைப் போலவும், அறிவிற் குறைந்த பேதையாகிய நான் செய்துவரும் குற்றங்களை எல்லாம் குணமாகக்

கொண்டு அருள் செய்ய வேண்டுமென்று, தேன் நிறைந்த தாமரை மலரினை ஒத்த திருப்பாதங்களிலே வீழ்ந்து வேண்டிக்கொண்டு அருச்சுனன் மேலும் சில சொல்லத் தொடங்கினான்.

பேதையே நான்–அறிவில்லாதவனாகிய நான், குறியாது–இன்னது எனத்தெரியாமல், வெறியாரு–தேன் நிறைந்த–வெறி–தேன்

பண்டு கண்டறியாப் பழங் கோலத்தை
கண்டு நெஞ்சங் கலங்கு களிக்குமாற்
றண்டு நீறண்முடி சங்கொடு சக்கரம்
கொண்ட கோலத்தையே கொண்டருளுவாய். 48

இதற்குமுன் ஒருபோதும் கண்டறியாத பழமையான கோலமாகிய விஸ்வரூபத்தைக் கண்ட அருச்சுனன் மனம் கலங்கி, மகிழ்வும் எய்தி-இக்கோலத்தை மாற்றி-நீக்கி-தண்டாயுதம், நீண்ட தலைமுடி, ஒரு கரத்திலே சங்கு, மற்றொரு கரத்திலே சக்கரம் ஆகியவற்றுடன் கூடிய முன்பிருந்த உருவத்தையே கொண்டு அருள் செய்ய வேணுமென்று வேண்டினான்.

பண்டு–முன்னாளில்; கண்டறியாப் பழங்கோலம்–இவ்வாறு தற்போது கண்ணன் காட்டிய விசுவரூபத்தை இதற்குமுன் எவருக்கும் காட்டியதில்லை என்க. நீண்முடி–நீண்ட தலைமுடி. இரு ஒரு கலிவிருத்தம்.

என்றவ னுரைத்திடலு மெவ்வுருவு மொன்றாய்
நின்றவ னுரைத்தருலு வானிறை யொளித்தாய்
முன்றரு முதற் பொருளுமாய் முழுதுமாய்
வென்றனு றுவத்தினை முன்னி யாவரறிநிற்பார். 49

என்று இவ்வாறு அருச்சுனன் கூறியதும் எந்த உருவமும் ஒன்றாய் நின்ற கண்ணன், வானம் நிறையும் அளவுக்கு சோதியாய் நின்ற, முதற்பொருளானவனும்,

முழுவதுமானவனும், ஆகி நின்று இப்போது நீயறியு மாறும் யாவரும் அறியுமாறும் நிற்கிறேன் என்றான்.

வானிறை ஒளி-எங்கும் பரவிய பேரொளி. முன்னி-முன்னால்.

வேத நெறியா மிகு வேள்விகளினாலும்
மாதவ மையாலு மகிடான வகையாலும்
காதலர்கள் காணமுடியா வடிவு கண்டாய்
யேத மறியாத வெளி யோக வலியாலே. 50

முறையாக வேதங்களை ஒதுவதாலும் யாகங்களைச் செய்வதாலும், அரிய தவங்களைச் செய்வதாலும், மகிழ்வு தரும் தான வகையாலும் என்னைக் காணவேண்டும் என்ற ஆசை கொண்டவர்களாலும் காண இயலாத வடிவத்தை, குற்றமேது இல்லாத பற்றற்ற யோகத்தின் வலிமையாலே நீ கண்டாய்.

மகிடானி-மகிழ்ச்சியான, மகிழ்ச்சியைத் தரக்கூடிய, யேதம்-குற்றம்.

இப்பரிசுரைத் தருளி யீரிருகை யேயா
யப் பழய கோலமது வாயருளி யங்கே
மெய்ப்பய மகத்தி விசயற் கிசைய வேறே
யொப்பரின் மிக்கவரில்லாத வனுரைப்பான். 51

இவ்வாறு உரைத்தருளி நான்கு கரங்களுடனே பழய மானிட உருவமதாக நின்றருளி அங்கே அருச்சுனனின் உடல் நடுக்கமாகிய பயத்தை நீக்கி, அவனுக்கு அன்புடன், ஒப்பாரும் மிக்காருமிலா கண்ணன் கூறலானான்.

யீரிருகை-இரண்டும் இரண்டுமாக நான்கு கரங்கள், பழய கோலம்-விசுவரூபத்தைக் காட்டுவதற்கு முன்பாக இருந்த வடிவம் மெய்ப்பய மகத்தி-மெய்ப்பய மகற்றி-உடலில் ஏற்பட்டிருந்த பயத்தை-நடுக்கத்தை-அகற்றி.

கண்டவரில்லை நீமுன் கண்டவிக் கோலங் காண
விண்டரு மறியா நின்றா ராதல லன்பு கூறுந்
தொண்டரு மாகி யென்னை யன்றியோர் துடக்கிலாமை
கொண்டவ ரடைவ ரென்றான் கோக்குல மேய்த்த
கோமான். 52

சற்றுமுன் நீ கண்ட இந்தக் கோலத்தை யாருமே பார்த்ததில்லை, இவ்வாறு ஒரு உருவம் உண்டு எனக் கூட யாரும் சொன்னதே இல்லை. ஏனெனில் அவ்வாறு சொன்ன எவருமே அதனைக் கண்டதில்லை. இனி நீ என் மீது அன்புடன் கூடிய தொண்டனாகி என்னையன்றி வேறு ஏதும் துணையில்லை எனக்கொண்டு, என்னையே வந்தடைவாயாக என்று, மாடுகளை மேய்த்தவனாகிய கண்ணன் அருச்சுனனிடம் கூறினான்.

விண்டர்-விண்டவர்-சொன்னவர். கண்டவர்கள் சொன்னதில்லை- ஏனெனில் என்னுடைய விசுரூபத்தைத் தரிசனம் செய்த அக்கணமே அவர்கள் என்னுடன் சேர்வர். சொன்னவர்கள கணடதில்லை- இது மேற் சொன்னதில் அடங்கும்-ஏனெனில் அவர்கள தங்களின் கண்களால் காணாமல் வெறும் கற்பனையினாலேயே தான் ஏதேதோ சொல்லியிருக்கிறார்கள் என்பது.

விசுபரூப தரிசனம் என்னும் இப்பகுதி பகவத் கீதையில் மனப்பாடம் செய்ய வேண்டிய ஒரு சிறப்பான பகுதி என முன்னோர்கள் கூறியுள்ளார்கள்-பல நூல்களிலும் எழுதப்பெற்றுள்ளது.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–11

விசுவரூப தரிசன யோகம்

1. அருச்சுனன் சொல்கிறான்: என்மீது அருள்பூண்டு உன்னால் ஆத்ம ஞானம் என்னும், மிக உயர்ந்ததும் மறைத்துக் காப்பாற்றத் தக்கதுமான, எந்த உபதேசம் கூறப்பட்டதோ, அதனால், என்னுடைய இந்த மோகம்/ மயக்கம் தீர்ந்து போயிற்று.

2. ஏனெனில், தாமரை இதழ் போன்ற விழிகளை யுடையோய், என்னால், உங்களிடமிருந்து, உயிர்களின் தோற்றத்தையும், அழிவையும் விரிவாகக் கேட்டேன், அவ்வாறே அழிவற்ற பெருமைகையையும் கேட்கப்பட்டது.

3. பரமேஸ்வரா! மனிதர்களில் உயர்ந்தவனே! நீ உன்னைப்பற்றி எவ்வாறு கூறினாயோ, அது அவ்வாறே, ஈஸ்வர ரூபத்தைக்காண விரும்புகிறேன்.

4. பிரபுவே! என்னால் அதைப் பார்க்க முடியும் என்று நீ கருதுவாயானால், யோகேஸ்வரா! அப்போது நீ உன்னுடைய அழிவற்ற ஆத்மாவை எனக்குக் காட்டுக.

5. ஸ்ரீபகவான் சொல்லுகிறார்! பல நூறாகவும், பல்லாயிரமாகவும், பலவகை, பல நிறம், அளவு பலவாக, இப்போது திவ்ய ரூபங்களைப் பார்! பார்த்தா!

6. அர்ஜுனா ஆதித்யர்களை, வசுக்களை உருத்திரர் களை, அசுவினி தேவர்களை, மருத்துவக்களை, பார் அவ்வாறே இதற்கு முன் கண்டிராத பல ஆச்சரியங்களைப் பார்!

7. அர்ஜுனா! இன்று, இங்கே என்னுடைய உடலினுள் ஒரேயிடத்தில் உலகம் முழுவதும், அவ்வாறே மேற்கொண்டு நீ எதைக் காண விரும்பினாலும் காண்.

8. ஆனால், இயற்கையான, உன் கண்களால், என்னைப் பார்க்க இயலாது. உனக்கு ஞானக் கண்ணைக் கொடுக்கிறேன். என்னுடைய ஈஸ்வர யோகத்தைப் பார்!

9. சஞ்சயன் சொல்கிறான்! அரசே! யோகத் தலைவனாகிய ஹரி இவ்வாறு உரைத்துவிட்டு அப்பால் பார்த்தனுக்கு மிக உயர்ந்த தன் கடவுள் வடிவத்தைக் காட்டினான்.

10. அவ்வடிவம், பல வாய்களும், பல விழிகளு முடையது. பல அற்புதக் காட்சிகளையுடையது. பல திவ்ய ஆபரணங்கள் பூண்டது. பல தெய்வீக ஆயுதங்கள் ஏந்தியது.

11. திவ்ய மாலைகளும் ஆடைகளும் புனைந்து திவ்ய கந்தங்கள் பூசியது. எல்லா வியப்புகளும் சான்றது. எல்லையற்றது, எங்கும் முகங்களையுடைய தேவரூபம்.

12. வானத்தில் ஆயிரம் சூரியன்கள ஒரே நேரத்தில் உதயமானால், பிரகாசம் எப்படி இருக்குமோ, அந்தப் பிரகாசம், அந்த மகாத்மாவின் ஒளிக்கு நிகராக இருக்கலாம்.

13. பாண்டவன் (அர்ஜுனன்) அப்போது, பல பகுதிப்பட்டதாய், வையகம் முழுவதும் அந்தத்தேவ தேவனுடைய, அந்த உடலில் ஒரே இடத்தில் கண்டான்.

14. அப்போது அந்தத் தனஞ்செயன், பெருவியப் படைந்து மயிர் சிலிர்த்து, அக்கடவுளைத் தலைகுனிந்து வணங்கி, கைகளைக் கூப்பிக்கொண்டு கூறினான்.

15. அர்ஜுனன் சொல்கிறான்! தேவனே உன் உடலில் எல்லாத் தேவர்களையும், அவ்வாறே அனேகப் பிராணி வர்க்கங்களையும், தாமரை மலரில் வீற்றிருக்கும் ஈசனாகிய, பிரம்மனையும், எல்லா ரிஷிகளையும் தெய்வீக சர்ப்பங்களையும் காண்கிறேன்.

16. எல்லாவற்றிற்கும் ஈசனே! பல தோள்களும் வயிறும் வாயும், விழிகளுமுடைய, எல்லையற்ற வடிவாக, உன்னைக் காண்கிறேன். எல்லாம் தன் வடிவாகக் கொண்டவனே, உன்னுடைய முடிவேனும் நான் பார்க்கவில்லை. மேலும் ஆரம்பத்தையும் பார்க்கவில்லை. இடையும் காண்கிலேன்.

17. மகுடமும், கதையும், சக்கரத்தோடு எங்கும் ஒளிரும் ஒளித்திரளாகவும், தழல் படுதீயும், ஞாயிறும் போல, பார்க்கக் கூசுகின்ற, எங்கும் நிறைந்ததுமாக, அளவிடற்கரியதாக உன்னைக் காண்கிறேன்.

18. அழிவிலாய்! அறியத்தக்கதில் சிறந்தது நீயே உலகத்தில் உயர்தனி உறைவிடம் கேடிலாய்! நீ என்றும் நிலையாக அறத்தினைக் காப்பாய்! சநாதன புருஷன் நீயே! எனக் கொண்டேன்.

19. ஆதியும், நடுவும், அந்தமும் இல்லாதவனாகவும், வரம்பில்லாத வீரனாகவும், ஞாயிறும் திங்களும் கண்களாகவும், கொழுந்துவிட்டு எரியும் தீ போன்ற வாயுடன் கூடியவனாகவும், தம்முடைய வெப்பத்தினால் இந்த உலகத்தையே எரிப்பவனாகவும் காண்கிறேன்.

20. மகாத்மாவே! வானத்துக்கும், பூமிக்கும் இந்த இடைவெளியும், எல்லாத் திசைகளும் உன் ஒருவனாலேயே நிறைந்திருக்கிறது. உன்னுடைய அற்புதமும், உக்கிரமான இவ்வடிவத்தைக் கண்டு மூன்று உலகங்களும் சோர்வெய்துகின்றன.

21. இந்த வானவர் கூட்டமெல்லாம், நினுள்ளே புகுகின்றது. சிலர் அச்சமெய்தி நின்னைக் கை கூப்பிப் புகழ்கின்றார்கள், மகரிஷிகளும், சித்தர்களுமாகிய கூட்டத்தார், மங்களம் உண்டாகட்டும் என்று கூறி, வண்மையுடைய புகழுரைகள் சொல்லி உன்னைப் புகழ்கின்றார்கள்.

22. இந்த ருத்திரர்கள், ஆதித்தியர்கள் வசுக்களும் ஸாத்யர், விசுவேசுவதேவர், அசுவினி தேவரும், மருத்துக்கள், உஷ்மபர், கந்தர்வர், யட்சர், அசுரர், சித்தர் கூட்டத்தார் எல்லோரும், வியப்புடன் உன்னைப் பார்க்கிறார்கள்.

23. பெருந்தோளாய்! பலவாய்களும், விழிகளும் பலகைகளும், பல கால்களும், பல வயிறுகளும் பல பயங்கரமான பற்களுமுடைய, உன் பெரு வடிவைக் கண்டு, உலகங்கள் நடுங்குகின்றன யானும் அங்ஙனமே.

24. ஏனெனில் விஷ்ணுவே! வானைத் தீண்டுவது பல வர்ணங்களையுடையது, திறந்த வாய்களும் கனல்கின்ற விழிகளுமுடைய உன்னைக் கண்டு, பயத்தினால், நிலை கொள்ளாமல், தைரியத்தையும், அமைதியையும் நான் அடையவில்லை.

25. கோரைப் பற்களால் பயங்கரமானவையும் பிரளய காலத் தீ போன்ற உன் முகங்களை, திசைகள் தெரியவில்லை, சாந்தி தோன்றவில்லை, தேவர்களின் தலைவனே! வையகத்துக்கு உறைவிடமே!

26. இந்தத் திருதராஷ்ட்டிரரின் மக்கள் எல்லோரும் மற்ற அரச கூட்டத்தார்களுடன் உன்னுள்ளே புகுகின்றனர். பீஷ்மனும் துரோணரும் அவ்விதமே சூதன் மகனாகிய இந்த கர்ணனும், நம்மைச் சார்ந்த முக்கியப் போர் வீரர்களும் கூட.

27. உன்னுடைய கொடிய பற்களையுடைய, பயங்கரமான வாய்களில், விரைவாக வீழ்கின்றனர். சிலர் உன் பல் இடுக்குகளில் அகப்பட்டு, பொடிபட்ட தலையினராகக் காணப்படுகின்றனர்.

28. பல ஆறுகளில் வெள்ளங்கள், கடலையே நோக்கி எவ்வாறு பாய்கின்றனவோ, அவ்வாறே இந்த மண்ணுலக வீரர்கள், சுடர்கின்ற உன் வாய்களில் புகுகின்றார்கள்.

29. விளக்குப் பூச்சிகள் மிகவும் விரைவுடன் எரிகின்ற விளக்கில் அழிவதற்காக எவ்வாறு புகுகின்றனவோ, அவ்விதமே உலகங்களும் அழிவதற்காக மிகவும் விரைவுடன் உன் வாய்களில் புகுகின்றன.

30. அனைத்து உலகங்களும், கனல்கின்ற வாய்களால் விழுங்கிக்கொண்டு, எப்புறத்தும் நாக்குகளால் தீண்டுகிறாய் விஷ்ணுவே! நின் உக்கிரமான சுடர்கள் வையம் முழுவதையும் வெப்பத்தினால் நிரப்பிச் சுடுகின்றன.

31. தேவர்களில் சிறந்தவனே! உக்கிர ரூபந்தரித்த நீ யார்? உன்னை வணங்குகின்றேன். அருள்புரி! ஆதியாகிய உன்னை அறிய விரும்புகிறேன.. ஏனெனில் உன்னுடைய செயலை அறிகிலேன். புரிந்துகொள்ள முடியவில்லை.

32. ஸ்ரீபகவான் சொல்லுகிறார்:- உலகத்தை அழிக்க பெருகி வளர்ந்துள்ள காலனாக இருக்கிறேன். இப்போது உலகனைத்தையும் அழிப்பதற்காக, தொடங்கி இருக்கிறேன். எந்த போர் வீரர்கள் எதிரில் இருக்கின்றார்களோ, அவர்கள் எல்லோரும் நீ போர் புரியாமல் இருப்பினும் இருக்கமாட்டார்கள்.

33. ஆதலால் நீ எழுந்து நில்! புகழெய்து, பகைவரை வென்று செழிப்பான ராஜ்ஜியத்தை ஆள்வாயாக!

இவர்கள் முன்பே என்னால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இடது கையாலும் அம்பு எய்யும் வீரனே! நீ வெளிக் காரணமாக மட்டும் இருப்பாயாக!

34. துரோணரையும், ஜயத்ரதனையும், கர்ண னையும், அவ்வாறே மற்ற யுத்த வீரர்களையும், நீ கொல். அஞ்சாதே போர் செய்! போர்க்களத்தில் பகைவரை வெல்வாய்!

35. சஞ்சயன் சொல்கிறான்! கேசவன் சொல்லிய இவ்வார்த்தையைக் கேட்டு, பார்த்தன் மெய் நடுக்கத் துடன் அஞ்சலி செய்து, மீண்டும் கண்ணனை வணங்கி, அச்சத்துடன் வாய்குழறி சொல்லுவான்.

36. அர்ஜுனன் சொல்கிறான்:- இருஷிகேசா! உன் பெரும் பெயரில் (புகழில்) உலகம் மகிழ்கிறது. இன்புறுவதும் பொருந்தும், ராட்சதர் அச்சமுற்று திசைகளில் மறைகிறார்கள். மேலும் சித்தர் கூட்டத்தினர் வணங்குகிறார்கள்.

37. மகாத்மாவே! பிர்மதேவனையே ஆதியில் படைத்தவனாகவும், மூத்தவராகவும் உள்ள, உனக்கு ஏன் வணங்க மாட்டார்கள்? அநந்தா! தேவேசா! வையத்தின் உறைவிடமே! எது சத்தாகவும், அசத்தாகவும், அவற்றைக் கடந்ததாகவும் உள்ள அளவற்ற பரம்பொருள் நீ !

38. நீ ஆதிதேவன்! பழமையான புருஷன் நீ இந்த அகிலத்தின் பரம நிலையம், நீ அறிவோன், நீ அறியப்படு பொருள், பரமபதம், அநந்தரூபனே! உன்னால் உலகனைத்தும் நிறைந்துள்ளது.

39. வாயு, யமன், அக்னி, வருணன், சந்திரன் நீ பிரம்மன், பிரம்மனுக்கும் தந்தை (பிதாமகன்) ஆயிரம் முறை கும்பிடுகிறேன். மீண்டும் உனக்கு நமஸ்காரம், திரும்பத் திரும்ப நமஸ்காரம்.

40. உன்னை முன்புறத்தேயும், பின்புறத்தேயும் கும்பிடுகிறேன். எல்லாமாவாய்! உன்னை எப்புறத்துங் கும்பிடுகிறேன். எல்லையற்ற வீரியமுடையாய் அளவற்ற வலிமையுடையாய், சர்வத்திலும் நிறைந்திருக்கிறாய், எனவே நீ அனைத்துமாக இருக்கிறாய்!

41. இப்படிப்பட்ட உன் பெருமையை அறியாமல், தோழன் என்று கருதி, தவறுதலாயேனும், அன்பாலேனும், ஏ கண்ணா! ஏ யாதவா! ஏ தோழா! என்று எது துடிப்புற்று சொல்லி இருப்பதையும்.

42. விளையாட்டிலும், இருப்பினும் உணர்விலும், தனியிடத்தேயும், அன்றி மற்றவர் முன்னேயேனும், வேடிக்கையாக, எந்தவிதமாக அவமதிக்கப்பட்டாயோ, அவற்றையெல்லாம், அளவற்ற பெருமையுடைய உன்னை நான் பொறுக்கும்படி வேண்டுகிறேன்.

43. இந்த சராசரமாகிய இவ்வுலகத்திற்குத் தந்தை ஆவாய், இவ்வுலகத்தாரால் தொழத்தக்கவன், மிகவும் சிறந்த குரு, உனக்கு நிகர் யாருமில்லை, எனல் உனக்கு மேல் யார்? மூன்று உலகங்களிலும் ஒப்பற்ற பெருமை உடையவனே!

44. ஆதலால் உடல் குனிய வணங்கி, அருள் கேட்கிறேன். வேண்டுதற்குரிய ஈசனே! மகனைத் தந்தை போலும், தோழனைத் தோழன் போலும், அன்பனை அன்பன் போலும், அன்பான மனைவியைக் கணவன் போலும் நீ என்னைப் பொறுத்தல் வேண்டும்.

45. இதற்குமுன் காணாததைக் கண்டு மகிழ்ச்சியுறு கிறேன். என் மனம் அச்சத்தால் சோர்வுறுகிறது. அந்த தேவ வடிவத்தையே எனக்குக் காட்டுக! தேவேசா! ஜகத்தின் நிலையமே! அருள்செய்க!

46. கிரீடமும், கதையும், கையில் சக்கரமுமாக, அந்த விதமாகவே உன்னைக் காண விரும்புகிறேன், அகில மூர்த்தியே ஆயிரந்தோளாய்! அதே நான்கு தோள்களுடன் கூடிய வடிவினை எய்துக.

47. ஸ்ரீபகவான் சொல்கிறார்:- அர்ஜுனா, அருள் கொண்டு, என்னுடைய யோக சக்தியினால், மிகச் சிறந்ததும், ஒளிமயமானதும், முதல் ஆனதும், முடிவுற்றது மான, எந்த என்னுடைய விஸ்வரூபத்தை உனக்குக் காட்டப்பட்டதோ, இவ்வடிவம், உன்னைத்தவிர வேறு எவராலும் பார்க்கப்படவில்லை.

48. வேதங்களாலும், வேள்வியாலும், கல்விக ளாலும், தானங்களாலும், கிரியைகளினாலேயும், உக்கிரமான தவங்களினாலும் கூட மனித உலகில், உன்னையன்றி, இந்த உருவத்தில் நான் காண இயலாதவன். குரு குலத்தில் சிறந்த வீரா!

49. இப்படிப்பட்ட என் கோர வடிவத்தைக் கண்டு, உனக்கு கலக்கம் வேண்டாம், மதிமயக்கமும் வேண்டாம். நீ அச்சம் நீங்கி, இன்புற்ற மனத்துடன், எனது இந்த வடிவத்தை மறுபடியும் பார்.

50. சஞ்சயன் சொல்கிறான், இங்ஙனம், வாசுதேவன் அர்ஜுனனிடம் கூறி, மறுபடியும் அதேவிதமான தன்னுடைய உருவத்தையும் காட்டினான். அந்த மகாத்மா, மறுபடி தன் இனிய வடிவமெய்தி, இந்த அச்சமுற்றிருந்த பார்த்தனை, ஆறுதல் கொள்ளச் செய்தான்.

51. அர்ஜுனன் சொல்கிறான், ஜனார்த்தனா! நினது தன்மை பொருந்திய இம்மானிட வடிவத்தைக் கண்டு இப்போது நிலையான மனம் கொண்டவனாக ஆகிவிட்டேன். இயற்கை நிலை எய்தினேன்.

52. ஸ்ரீ பகவான் சொல்லுகிறார், என்னுடைய எந்த வடிவத்தை நீ பார்த்தாயோ இது காண்பதற்கு அரிதானது தேவர்கள் கூட, எப்போதும் இந்த உருவத்தைக் காண விருப்பம் கொண்டு இருக்கிறார்கள்.

53. எவ்வாறு நீ என்னைப் பார்த்தாயோ இவ்விதமாக நான் வேதங்களாலும் காணப்பட முடியாதவன், தவத்தாலும் இல்லை. தானத்தாலும் இல்லை, வேள்வியாலும் இல்லை.

54. எதிரிகளை எரிப்பவனே! அர்ஜுனா! இவ்விதமாக நான் வேறெதுவும் வேண்டாத பக்தியால், காணுதல் இயலும், உள்ளபடி அறியவும் ஒன்றவும் முடியும்.

55. பாண்டவா! எவன் செய்ய வேண்டிய கடமைகளை என் பொருட்டே செய்வானோ, என்னையே அடையவேண்டும் என்று குறிக்கோள் கொள்வானோ, பற்றற்றவனோ, எவ்வுயிரிடத்தும் பகை இல்லாதவனோ, அவன் என்னையே அடைகிறான்.

விளக்கவுரை

வியாசர் தமது பகவத்கீதையின் பதினோறாவது அத்தியாயத்திற்கு விசுவரூப தரிசன யோகம் எனத் தலைப்பிட்டு ஐம்பத்து ஐந்து சுலோகங்களை இயற்றியுள்ளார். சுவடி ஆசிரியரும் இந்த அத்தியாயத்திற்கு விசுவரூபவத்தியாயம் என்ற தலைப்பில் ஐம்பத்தி இரண்டு விருத்தங்களை எழுதியுள்ளார்.

விருத்தம் 1. இதில் கண்ணனை சுருள் சுருளான் தலைமுடியுள்ளவனென்றும், சொல்மனம் இவைகளுக்கு எட்டாதவன் என்றும், சகடாசூரனைக் கொன்றவன் என்றும், அவனுடைய சொல்லைக் கேட்ட அருச்சுனன் தன்னுடைய சந்தேகம் நீங்கப்பெற்றான் எனவும் கூறப்பெற்றுள்ளது. இது வியாசரின் இவ்வத்தியாயத்தின் முதல் சுலோகத்தில் உள்ளதுதான். ஆனால் கண்ணனின் பெருமையைக் கூறும் செய்திகள் இல்லை.

விருத்தம் 2. கண்ணனின் விசுவரூபக் கோலத்தைக் காண இயலுமா? என்று கேட்ட அருச்சுனனிடம் தன்னுடைய விசுவரூபத்தைக் காட்டுவதற்காக.

விருத்தம் 3. காட்டுகிறேன் பார் என்கிறான் கண்ணன்.

விருத்தம் 4. தன் விசுவ ரூபத்தைக் காட்டி, என்னுள்ளே தேவர்கள், வசுக்கள், சூரியர்கள், ருத்திரர்கள் மற்றும் பலரும் இருப்பதைப் பார் என்கிறான் கண்ணன் இந்த செய்தி வியாசரின் ஆறாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 5. தன்னுடைய விசுவரூபத்தைச் சாதாரணமான மானிடக் கண்ணால் காண இயலாது.

ஆகவே உனக்கு ஞானக்கண்ணை அளிக்கிறேன். அவை கொண்டு பார் என்று கூறி விசுவரூபத்தைக் காட்டினான் என்பது. இச்செய்தி வியாசரின் எட்டாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 6. விசுவரூபத்தின விளக்கம்.

விருத்தம் 7. தொடர்ச்சி

விருத்தம் 8. இச்செய்தி வியாசரின் 10,11,12 ஆகிய சுலோகங்களில் உள்ளது.

விருத்தம் 9. விசுவரூபத்தைக் கண்ட அருச்சுனனின் நிலை. அருச்சுனனின் வியப்பு.

விருத்தம் 10. மேலும் அருசசுனனின் நிலை பற்றியது. இவைகள் வியாசரின் சுலோகங்கள் 14, 15, 16, 17, 18, 19, 20, 21. 22 ஆகிய சுலோகங்களில் உள்ளன.

விருத்தம் 11. கண்ணனின் விசுவரூபத்தைக்ண்ட அருச்சுனன், பயத்தினால், உடல் நடுங்க, மகிழ்ச்சியும் கொள்கிறான். இங்கு ஆற்றில் விழுந்தவன்-கரையைக் கண்டதுபோல எனும் உவமை எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது. இப்படி எதுவும் உவமை வியாசரால் கூறப்பெறவில்லை.

விருத்தம் 12. அருச்சுனன் கண்ணனின் விசுவ ரூபத்தைத் தரையில் வீழ்ந்து வணங்குதல், இதனை வியாசர், சஞ்சயன் வாய்மொழியாக திருதராட்டிரனிடம் கூறுவதாக அருச்சுனன் கைகளைக் கூப்பி நின்றதாக கூறப்பெற்றுள்ளது. பின்னர் அருச்சுனனே கூறுவதாகவும் உள்ளது.

விருத்தம் 13. "கைகூப்பி" என சுவடி ஆசிரியர் விருத்தம் 12ல். உள்ளது. அருச்சுனன், கண்ணனிடம் அந்த விசுவரூபத்தில் காணும் காட்சிகளைக் கூறுவது. இது வியாசரின் பதினைந்தாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 14. தொடர்ந்து விசுவரூபம் பற்றிக் கூறுவது.

விருத்தம் 15. தொடர்ச்சி-இதில் காணப்பெறும் முதலும் நடுவும் முடிவும் காண்கிலேன் என அருச்சுனன் கூறும் செய்தி வியாசரின் பதினாறாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 16. "கோவை கன்று தொடராப்பசு" என ஒரு எடுத்துக்காட்டு உள்ளது. இதுபோல எதுவும் உவமை வியாசரில் இல்லை.

விருத்தம் 17. விசுவரூபத்தின் ஒளி சூரியன் சந்திரன் இரண்டுமே ஒரு சேர வந்தாற்போல அவ்வுருவின் கண்களாகக் காணும் காட்சி விவரிக்கப்பெற்றுள்ளது. இது வியாசரின் பதினேழாவது சுலோகத்தில் தழல் போலும் ஞாயிறு போலவும் கண்கள் கூசுவதாக உள்ளது எனக் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 18. வானுக்கும் பூமிக்குமாக பேருரு. இது கண்டு கலக்கம் அடைவதாக அருச்சுனன் கூறுவது. (ஞாயிறும் திங்களும் கண்களாக என்பது வியாசரின் பத்தொன்பதாவது சுலோகத்தில் இருப்பதைக் காணவும்) சோர்வடைகின்றன என வியாசர் இருபதாவது சுலோகத்தில் கூறியுள்ளார். அவைகள் நடுங்குவதாகவும் இருபத்து மூன்றாவது சுலோகத்தில் வருகிறது. அருச்சனன், பயம் கொள்வதாக, அமைதி இல்லாமற் போனதாகவும் வியாசர் இருபத்து நான்காவது சுலோகத்தில் கூறுகிறார்.

விருத்தம் 19. வானவர்கள், ஞானிகள், சித்தர்கள், தானகவன், கந்தர்வர்கள், விசுவரூபத்தைக் கண்டு வாழ்த்தி, வணங்கும் காட்சி. இக்காட்சியை மேற்கொள்ள அனைவரும் பார்க்கிறார்கள் என வியாசரின் இருபத்தி இரண்டாவது சுலோகத்தில் உள்ளது. மேலும் இருபத்து மூன்றாவது சுலோகத்தில் அருச்சுனன் தானும் நடுங்குவதாகக் கூறுகிறான்.

விருத்தம் 20. வானுக்கும் பூமிக்கும் ஆய விரிந்த உருவம் அடைய முடியாதபடி உள்ளதாக அருச்சுனன் கூறுவது. இப்படி வியாசர் கூறவில்லை.

விருத்தம் 21. என்னை " பயப்படாதே ? " என்று சொல்லி அருளவேண்டும். என அருச்சுனன் வேண்டுவது. இச்செய்தி தெளிவாக வியாசரில் இல்லை.

விருத்தம் 22. நெருப்பிடைப் புகுந்த காற்றைப் போல துரியோதனன் மற்றும் அவனுடைய படைகள் உன் வாயில் விழுவதைக் கண்டேன் என அருச்சுனன் கூறுவது. இதனை வியாசரும் தமது இருபத்து ஏழாவது மற்றும் இருபத்து எட்டு, இருபத்து ஒன்பது ஆகிய சுலோகங்களில் கூறுகிறார். இங்கு இரண்டு எடுத்துக்காட்டுகள்-ஒன்று ஆறுகள் பலவும் ஒன்றுகூடி கடலை நோக்கி பாய்கிறதைப் போலவும் எனவும் இரண்டாவதாக விளக்கினை நோக்கி அழிவதற்கென்றே சென்றுவிழும் விட்டில் பூச்சிகள் எனவும் கூறப்பெற்றுள்ளன.

விருத்தம் 23. நதிகள் ஒன்றுகூடி ஒரு குடத்திற்குள் புகுவது போல உள்வாய்க்குள் படைகள் வீழ்கின்றன என சுவடி ஆசிரியர் கூறும் உவமை சற்று சிறப்பாகவே உள்ளது. இதே விருத்தத்தில் தீயினுள் புகும் விட்டில் பூச்சிகள் எனும் உவமையும் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 24. வெளியிலிருந்து வந்து உன் வாயில் விழும் படை வீரர்கள் ஆகிய உணவு போதாமல் உள் நாக்கை நீட்டி வெறும் நாக்கை நக்கிக்கொண்டிருக்கிறாய் என அருச்சுனன் கூறுவது விசுவரூபத்தின் பயங்கரமான தன்மையைக் காட்டுகிறது. இதே செய்தி வியாசரின் முப்பதாவது சுலோகத்தில், எப்புறத்தும் நாக்குளால் தீண்டுகிறாய்-என உள்ளது. இதனையே நக்குகிறாய் எனவும் கொள்ளலாம்.

விருத்தம் 25. கண்ணன் அருச்சனனிடம், உன்னைத் தவிர, இப்போர்க்களத்தில் இருந்த அனைவரின் உயிரினையும் குடித்துவிட்டேன் என்றது. இச்செய்தி வியாசரின் முப்பத்து இரண்டாவது சுலோகத்தில் கண்ணன் தான் உலகத்தில் உள்ளவர்களை எல்லாம் அழிக்கத் தொடங்கியுள்ளேன் என்று கூறுவதாக உள்ளது.

விருத்தம் 26. இங்கு இறந்தவர்கள எல்லோரும் என்னாலேதான் இறந்தார்கள் என்று நினை. நீ கொன்றதாகக் கருதினால் அவர்களின் அரசையும் செல்வத்தையும் நீயே பெறுவாயாக எனக் கண்ணன் கூறுவது. இதனை வியாசர் தமது முப்பத்து மூன்றாவது சுலோகத்தில் எழுந்து நில்? புகழ் எய்து! பகைவரை வென்று அவர்களின் செழிப்பான இராச்சியத்தை ஆள்வாயாக! எனக் கண்ணன் கூறுவதாக சொல்லி யுள்ளார்.

விருத்தம் 27. அருச்சுனன் கண்ணனைப் புகழ்ந்து பேசத்தொடங்குவது.

விருத்தம் 28. இதுவும் அது !

விருத்தம் 29. பிறவிக்கடலை நீந்துவதற்கு உதவும் தோணியானவனே! என அருச்சுனன் கூறுவது இப்படி ஏதும் வியாசர் கூறவில்லை.

விருத்தம் 30. முன் விருத்தத்தில் கண்ணனை "ஆழிப்பாகன்" எனவும் கூறுகிறான். சாவினைத் தரும் தீவினையெனும் கடலில் விழுந்து இறக்கின்ற என்னைக் காத்து நல்வழி அருளும் என அருச்சுனனை வேண்டுவது. இவ்வாறு ஒருசெய்தி வியாசரால் கூறப்பெறவில்லை.

விருத்தம் 31. எல்லாவற்றையும் அழிப்பதில் நாட்டம் உடையவனே என அருச்சுனன் கூறுவது. இப்படி வியாசரால் எங்கும் கூறப்பெறவில்லை.

விருத்தம் 32. அருச்சுனன் கண்ணனை ஏழு சுரங்களின் இனிமை போன்றவனே என்றது இப்படியும் வியாசர் கூறவில்லை.

விருத்தம் 33. கண்ணனின் பெருமையாக திருப்பாற் கடலைக் கடைந்தது, மற்றும் மானும் மழுவும் ஏந்திய அரனும் நீயே என்றது. இதுவும் வியாசரால் சொல்லப் படாத செய்தி.

விருத்தம் 34. உன்னுடைய புகழைக் கேட்டு தேவர்களும் முனிவர்களும் மகிழ்வடைகிறார்கள். அசுரர்களும், ராட்சதர்களும் துயரமடைகிறார்கள் என அருச்சுனன் கூறுவது இவ்வாறு வியாசரால் கூறப்பெறாத செய்தியாகும்.

விருத்தம் 35. இருபத்தைந்து தத்துவப் பொருளும் நன்றாக அறிந்தவரே! பிர்மாவின் தாயே! என்று அருச்சுனன் கண்ணனைப் புகழுவதாக வியாசர் கூறவில்லை. தத்துவங்கள் தொண்ணூற்றாறு என்பதை வடலூர் இராமலிங்கசுவாமிகள் தமது வசன பாகத்தில் தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் நாநாசீவவாதக் கட்டளை என்னும் ஒரு தத்துவ விளக்க நூல் உள்ளது அதிலும் இவ்விருபத்தாறு தத்துவங்களைப் பற்றிக் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 36. நீரும் காற்றும் ஆவாய் நீ என்பதோடு உயிர்களை அழிக்கும் எமனும் ஆவாய் நீ என அருச்சுனன் கூறுகிறான். வியாசரின் முப்பத்து ஒன்பதாவது சுலோகத்தில் நீ யமன், வாயு, அக்னி, வருணன், சந்திரன் என்றெல்லாம் அருச்சுனன் கூறுகிறான்.

விருத்தம் 37. தாய், தந்தை, பாட்டி, தாத்தா நீ எனவும் உன்னை நூறாயிரம் முறை வணங்குகிறேன் எனவும் அருச்சுனன் கூறுகிறான். இதனை-தாய் தந்தை பாட்டி தாத்தாவென்றெல்லாம் சொல்லாது-மீண்டும் மீண்டும் திரும்பத் திரும்ப உன்னை வணங்குகிறேன் என அருச்சுனன் கூறுவதாக அதே முப்பத்தொன்பதாவது சுலோகத்திலேயே வியாசர் கூறியுள்ளார்.

விருத்தம் 38. மீண்டும் மீண்டும் வணங்குகிறேன் என அருச்சனன் கூறுவது.

விருத்தம் 39. பாவமும் புண்ணியமும் நீயே என்பது இது வியாசரில் இல்லாதது.

விருத்தம் 40. இநத விஸ்வரூபத்தை நீ எனக்குக் காட்டுவதற்கு முன்னால் நீயே இந்த அண்டசராசரங் களுக்கு எல்லாம் ஆதி மூலமானவன் என்பதை நான் அறியவில்லை என அருச்சுனன் கூறுகிறான். இவ்வாறு அருச்சுனன் கூறுவதாக வியாசர் கூறவில்லை.

விருத்தம் 41. நிழலைப் போன்றது வாழ்வு என அருச்சுனன் கூறுவதாக வரும் செய்தியும் வியாசரில் இல்லாதது.

விருத்தம் 42. உன்னை மரியாதைக் குறைவாகப் பேசியிருக்கிறேன் ஆனால் அவையெல்லாம் குற்றமென அறியவில்லை என அருச்சுனன் கூறுவது இது வியாசரின் நாற்பத்தொன்றாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 43. கண்ணனின் வீரச்செயல்களைக் குறிப்பிட்டு மறுபடியும் நானறிந்திலேன் என அருச்சுனன் கூறுவது.

விருத்தம் 44. வன்மையான சொற்களைப் பேசி விட்டேன் எதிர்த்தும் பேசி இருக்கிறேன் அவைகளை எல்லாம் மன்னிக்வேண்டும் என அருச்சுனன் கூறுவது. இது வியாசரின் நாற்பத்திரண்டாவது சுலோகத்தில் உள்ளதுதான்.

விருத்தம் 45. பல சமயங்களில் நான் பிழை செய்து விட்டேன் என்னை மன்னிக்க வேண்டும் என அருச்சுனன் வேண்டுவது.

விருத்தம் 46. ஞானக்கண் உள்ளவர்களால் மட்டுமே உன்னைக் காண்பவர் என்பது. இது வியாசரில் இல்லை.

விருத்தம் 47. குழந்தைகள் செய்யும் தவறை தந்தை மன்னிப்பது போலவும், நண்பர்கள் மன்னிப்பது போலவும், என்னை மன்னிக்க வேண்டுமென பாதங்களில் விழுந்து அருச்சுனன் வணங்குவது, மேற்கண்ட செய்திகளுடன் கூட அன்பான கணவன் மனைவியை மன்னிப்பது போலவும் என ஒன்றைச் சேர்த்து வியாசர் தமது நாற்பத்து நான்காவது சுலோகத்தில் கூறியுள்ளார்.

விருத்தம் 48. விசுவரூபத்தை நீக்கி முன்பிருந்த உருவிலேயே இருக்கவேண்டுமென அருச்சுனன் வேண்டுதல். இது வியாசரின் நாற்பத்து ஆறாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 49. கண்ணன், தான் கொண்ட விசுவரூபம் நீங்கி முன்பிருந்த உருவிலே நின்றது. இக்கருத்து சஞ்சயன் திருதராட்டிரனிடம் கூறுவதாக வருகிறது வியாசரின் ஐம்பதாவது சுலோகத்தில்.

விருத்தம் 50. பற்றற்ற உன் யோக வலிமையி னாலேயே என்னுடைய விசுவரூபத்தை உன்னால் காண முடிந்தது எனக் கண்ணன் கூறுவது. வியாசர் இதனை பக்தியாலேதான் காண இயலும் என்பதாக கூறியுள்ளார். யோகம் என்பதும் பக்தி என்பதும் தனித்தனித் தன்மையது.

விருத்தம் 51. மானிட உருக்காட்டி கண்ணன் அருச்சுனனின் பயத்தை நீக்கியது. இச்செய்தி வியாசரின் ஐம்பத்தொன்று மற்றும் ஐம்பத்து இரண்டாவது சுலோகங்களில் வருகிறது.

விருத்தம் 52. விசுவரூபத்தை யாரும் கண்டதில்லை அவ்வாறு கண்டவர்கள் எவரும் அதனை மற்றவர்களுக்கு சொன்னதும் இல்லை. இதுவன்றி விசுரூபத்தைப் பற்றி சொன்னவர்கள் அவர்கள் தங்களுடைய சொந்தக் கற்பனையினாலேதான் சொல்லியிருப்பார்கள் எனக் கண்ணன் கூறுவது. இனி நீ என் தொண்டனாகி என்னையே வந்தடைவாயாக எனக் கூறி அருளிய செய்தி வியாசரின் நிறைவுச் சுலோகமாகிய ஐம்பத்தைந்தாவது சுலோகத்தில் வருகிறது.

இந்த அத்தியாயத்தில பல செய்திகள் வியாசரால் கூறப்பெறாதனவெல்லாம் சுவடி ஆசிரியரால் கூறப் பெற்றுள்ளதைக் காணலாம். ஆயினும் பல செய்திகள் வியாசரால் கூறப்பெற்றிருப்பவைகளில் விடப்பட்டும் உள்ளன. கண்ணனால் அருச்சுனனுக்கு ஆத்ம ஞான உபதேசம் செய்யப்பெற்றது. (சுலோகம் - 1)

அழிவற்ற உன் ஆத்மாவை எனக்குக் காட்டுக என அருச்சுனன் கேட்பது(சுலோகம்4) கண்ணன் தான் கொண்ட விசுவரூபத்தை ஈஸ்வர ஸ்ரூபம் எனக்கூறுவது

அதனை ஈஸ்வர யோகம் எனக்குறிப்பிடுகிறார். சுலோகம்8. ஒன்பதாவது சுலோகம் தொடங்கி பதினான்காவது சுலோகம் வரை சஞ்சயன் திருதராட்டிரனிடம் கூறுவது போல கண்ணனின் விசுவரூபத்தைக் கண்ட அருச்சுனன் "சநாதன புருஷன் நீயே" எனக் கூறுகிறான். வியாசர் பின் எந்த சுலோகத்திலும் சநாதன புருஷன் என்பதை விளக்கும் வகையில் ஏதும் கூறவில்லை. விசுவரூபமானது ஆடைகளை உடுத்தி ஆபரணங்கள் பூண்டு வாசனைப் பொருட்களையும் பூசிக்கொண்டிருப் பதாக வியாசர் கூறுவது. சுலோகம் 11, சுலோகம் 32ல் வியாசர், அருச்சுனனிடம் இப்போது நீ இவர்களைக் கொல்லாவிட்டாலும் இவர்கள் உயிரோடு நீண்ட காலம் இருந்துவிடப்போகிறதில்லை. எனக் கண்ணன் கூறுவதாக வரும் செய்தி.

முப்பத்து நான்காவது சுலோகத்தில், கண்ணன் அருச்சுனனிடம், துரோணரையும், ஜயத்தரனையும், கர்ணனையும் நீ கொல் என, பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்வது, அஞ்சாதே போர் செய்! என ஆணையிடுவது போலக் கூறுவது! நாற்பத்து ஒன்பதாவது சுலோகத்தில் கண்ணன் இந்த என் உருவத்தை மறுபடியும் பார் எனக் கூறுவது. அடுத்த சுலோகத்தில் சஞ்சயன் திருதராட்டினரிடம் கண்ணன் மறுபடியும் அதே விசுவரூபத்தைக் காட்டினான் என வருகிறதாகையால் ஒருமுறை விசுவரூபத்தைக் காட்டியபின் மறுபடி பழைய ரூபம் கொண்ட பின்னர் மறுபடியும் ஒருமுறை விசுரூபம் கொண்டான் எனக் கூறவேண்டியுள்ளது. ஆகிய மேலே கூறப்பெற்ற பல செய்திகள் சுவடி ஆசிரியரால் தமது விருத்தத்தில் கூறப்பெறாமல் விடுக்கப்பெற்றுள்ளதையும் அறியலாம்.

பதினோராவது அத்தியாயம்
பக்தியோகவத்தியாயம்

ஏயனா னெதிரே கண்ட வுருவமோ யிசை கிற்பாரோ
தூய நான் மறைக்கு மெட்டாப் பொருளையே தொடங்கிற்பாரோ
தாயனாய்ப் பெரியோனென்று தனஞ்சயன் வின வத்தானோ
ராயனாய் நிறைகண் மேய்க்கு மாயன் வேற ருளிச்செய்வான். 1

தாய்க்கு ஒப்பான அன்புள்ளம் கொண்டவரே! இப்பொழுது நான் என்னுடைய கண்ணெதிரே கண்டதாகிய இந்த விசுவரூபத்தையோ, அல்லது தூய்மையான நான்கு வேதங்களுக்கும் எட்டாப் பொருளாகிய பரப்பிர்ம சொரூபத்தை, பெரியோர்கள் ஏற்று வழிபடுவார்களோ! என தனஞ்சயன் கேட்க ஆயர் குலத்தவனாக நின்று மாடுகளை மேய்த்தவனாகிய மாயவனான கண்ணன் கூறத்தொடங்கினான்.

ஏய-சற்றுமுன்; தாயனாய்-தாயை ஒத்தவனே! ராயன்-ஆயன்; நிறை-கூட்டம்; மாடுகளின் கூட்டம் என்க. இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

மன்ன நான் முன்காட்டிய வடிவை நெஞ்சா
லுன்ன வாய்மொழியினாலே யுரைத் தவஞ் செய்தவர்களெல்லா
லென்னவார்ப் பிறிதொன் றெய்த லரியாரினு நால்வா ரிங்கு
சொன்ன வரன்றி மற்றையவர் கடந்துரையுங் கேழாய். 2

மன்னவனே! நான் உனக்கு சற்றுமுன் காட்டிய வடிவத்தை, அது இவ்வாறு என்று வாய்மொழியினாலே உரைத்தவர்கள், மற்றும் தவம் செய்தவர்கள் என்னையே வந்தடைவர். அன்றியும் வேறொன்றை அடைய மாட்டார்கள். இவ்வாறு என்னை அடைந்தவர்கள் அல்லாத மற்றவர்களும் தவஞ்செய்தவர்களாக இருப்பின்

அவர்களும் என்னையே வந்தடைவார்கள் என்பதைக் கேட்பாயாக.

உன்ன-நினைக்க, மறறயவர் என்றது-நல்லாரைக் குறித்தது. கடந்துரையும்-கடந்துவந்து சேர்வர்

உரைசெயற் கரியதாய் நெஞ்சிணுனர் விடப்படா தேயெங்கும்
புறைவரக் கலந்து போக்கு வரவினறிப் பொலிந்த தென்றைக்
கரை செயற்கரிய வாய் புலன்களைக் கடந்து காண்பா
வரச மறியானே யெண்ணி வன்னிய மென்னலாமோ ! 3

இன்னதிதுவென்று சொல்வதற்கு அரிதான, மனத்தால் உணர்ந்து அறியப்படாத, எங்கும் குற்றமில்லாது கலந்து, போதலும் வருதலும் இல்லாத, அழகுற்றதொன்றை, கட்டுப்படுத்த முடியாதபடி உள்ள புலன்களைக் கடந்து எவருக்கும் அறியப்படாமல் இருப்பவன் நானே என நினைப்பதை விடுத்து வேறாக எண்ணலாமோ மன்னா!

புறைவர-குற்றமின்றி, பொலிந்து-அழகுற, கரை செயற்கரிய-கரை யிட்டுக் கட்டுப்படுத்த இயலாத, அன்னியம்-வேறு, போக்குவரவு-சலனம்-அசைவு.

காரண மிறந்தோன்றிற்குங் காட்சியிற்படாத தொன்றைச்
சேர்பவர் வருத்தம் வென்றன் செப்பிடவாவதென்னா
லோர்வ ரிதிதான் வாழுமுயிர் களா லாவதென்றா
லாரவர் பெருமை தன்னை யளவருப் பார்களய்யா! 4

காரணம் எதுவும் இல்லாது தோன்றி, கண்களால் காண்பதற்கு இயலாத ஒன்றை சேருபவர்களுடைய முயற்சி என்னால் சொல்ல இயலாது. இப்படிப்பட்ட ஒரு முயற்சி வாழும் உயிர்களால் ஆகக்கூடிய ஒன்றுதான் என்றால், அப்படிப்பட்டவர்களின் பெருமை அளவிடற் கரியதாகும்.

யளவருப்பார்-அளவிடுவார்கள்.

மெய்யரவுன்னை யென்னிலே வைத்தா
லென்னில் வேறன்றி யொன்றாதற்
கையுற வில்லை யது முடியாதே
லாயினு மதனையே பயில்வாய்
பொய்யுறவதும் புரிகிலா யெனினுலுன்
வினைக ளென் பொருட்டி னார்ப் புரிவாய்
செய்யும் வினைகளப்படிச் செய்யா யேல்
வினைப் பயன்ற மிரவே செய்வாய் 5

மெய்யாக உன்னை என்னிடத்தில் ஈடுபடுத்திக் கொண்டாயானால், நீயும் என்னில் ஒன்றாய் ஆவதற்குச் சந்தேகமே இல்லை. அவ்வாறு அது இயலாததாய் இருப்பினும் அதற்காகவே பயிற்சி செய்வாயாக. அப்படி அந்த பயிற்சியும் இயலாதே போயினும், நீ செய்யும் எல்லாச் செயல்களையும் எனக்கென்றே அர்ப்பணித்துச் செய். இதுவும் ஆகக் கூடியதில்லை எனில் செய்யும் செயல்களில் பலனை எதிர்பார்க்காமல் செய்வாயாக! இவ்வாறு செய்தாலே போதும் என்னில் உன்னை ஈடுபடுத்திக் கொள்ள இயலும் என்பது முடிவு.

ஐயுறவில்லை-சந்தேகமில்லை, பயில்வாய்-பயிற்சி செவ்வாய்-முயற்சி செய்வாய், இப்பாடல் ஒரு எழுசீரடியாசிரிய விருத்தம்.

அத்தியானவினை பின் தனினு
மெத்தியான மிகுமதன் மேலதாம்
வித்தினாய வினைப் பயன் வீடுதல்
சித்த சாந்தி யதனி னுஞ்சீரியதால். 6

கருமத்தின் பலனை எதிர்பார்க்காமல் செய்வதும் ஒரு தியானமே அப்படிப்பட்ட தியானச் செயலை விட ஞான தியான மென்பது அதிகமானது. செய்யும் செயலின் பலன் கருதாமல் செய்யப்பெறுவது சித்தத்தில் அமைதி தரக்கூடியது மேன்மையானது.

மெத்தியானம்-மெய்த்தியானம்-ஞான தியானம், வித்தினாய வினைப்பயன்-செய்யும் செயலை வித்தாகக் கொண்டதன் வினைப்பயன்.

இருவகை யுயிர்க்கு மினியனாய் இன்ப
துன்பங்களி யானென தெனதறியா
ஒரு பொருள்களுங் குறைவு பாடன்றி
யுள்ளமு மொருவழிப் படாயப்
பொரு வருந் துணியுங் கருணையும் புரிந்து
புலன்றெறி யுணர்வை யென்பாலே
மருவு நின்றொகுமி யோகியென்பான் காண்
மன்னவ மற்றெனக் கினியான். 7

இருவகையதான உயிரினங்களுக்கும் இன்னல் ஏதும் செய்யாத இனியவனாகவும், இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றே எனக் கொள்பவனாகவும், கிடைத்த பொருளில் இது குறைவு இது அதிகம் என்று எண்ணாமலும், உள்ளத்தில் குறைபட்டுக்கொள்ளாமல், மனதை ஒரு நிலையாக்கி ஒப்பிலாத துணிவும், கருணையும் கொண்டு ஐம்புலன்களின் நெறிகளையும் உணர்வினையும் என்பால் இயைபுபடுத்தி நின்றவர்கள் தான் யோகிகள்! மன்னவா இவர்களே எனக்கு என்றும் இனியவர்கள்.

இருவகை உயிர்கள்: ஒரு இடம் விட்டு வேறிடம் நகரக்கூடின-மனிதன் மிருகம் பறவை முதலியன. அவ்வாறு நகர இயலாது ஒரேயிடத்தில் இருப்பன. மரம் செடி கொடி முதலியன என்க.

இனியனாய்-அன்புடையவனாய், யான் எனதென்றறிய-யானெனதறிய.

நான்-என்னுடையது என்னும் அகங்காரத்தைக் குறித்தது, துணிவுங் கருணையும்-உடலுக்கும் உள்ளத்திற்கும் துன்பம் ஏதும் வரும்போது அது

எனக்கில்லை-என் உடலுக்கே-என்னுள் இருக்கும் மனதிற்கே எனவும் இவையாவும் எளிதில் விலகக் கூடியதே என சகித்துக் கொள்வது துணிவு எனப் பெறுகிறது. இவ்வாறு இத்துணிவே தான் செய்யும் செயல்களில் சேர்ந்து என்னால் செய்யப்பெறுவதெல்லாம் மற்றவருக்கு துன்பந்தராத செயலே என்னும் கருணைக்கும் துணையாகும் என்பர்.

இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

உலகமுந் தானு வேறிலாமை யினா
றானொடு பொருட்டு மஞ்சாதே
யலகிலா வுயிர்கட்கினிய ணாதலினா
லவைகளுந் தன்னை யஞ்சாதே
புலவரா னவர்கள் புகழவே நிகழ்வான்
பொறமையு மயக்கமுங் களிப்பு
மிலகிடா நெஞ்சத்தி யோகி யென்பவன்கா
னியரினு மெனக்கு வேறினியான். 8

உலகத்து உயிர்கள் எல்லாம் தன்னுயிரே எனவும் தானே உலகம், இரண்டும் வேறல்ல என்கிற காரணத்தால் எதைக் கண்டும் பயம்கொள்ளாமல், அளவற்ற உயிர்களிடத்தே அன்பு கொண்டவன் ஆதலால் அவ்வுயிர்களும் அவனைக்கண்டு பயப்படுவதில்லை. உலகத்து அறிஞர்கள் அனைவரும் புகழும்படி வாழ்வான். பொறாமை எதைக்கண்டும் உளம் மயங்காமை- மகிழ்ச்சி யடையாமை ஆகிய குணங்களோடு இருக்கும் யோகியே எல்லோரையும் விட எனக்கு இனியவன்.

தானொரு பொருட்டும் அஞ்சாதே-அவைகளும் தன்னையஞ்சாதே என்பது எல்லாவுயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதின் காரணமாக-மற்ற உயிரினங்கள் அவனைப்

பார்த்து பயப்படுவதில்லை எனவே அவனும் எவ்வுயிரையும் கண்டு அஞ்சுவதில்லை என மாற்றிக் கருத்து கொள்க.

புலவரானவர்கள்-கற்றறிந்த பெரியோர்கள், புகழவே நிகழ்வான்-போற்றும்படி வாழ்வான். பொறமை-பொறாமை, களிப்பு-மகிழ்ச்சி.

ஒன்றினு மாசை யந்திரியங் கடன்
வழி யொழி கிடா தொறுக்கி
நன்றியினொடு தீங்கெலா மொத்து
நல்வினை தீவினை துறந்து
பொன்றினு நோயுற்றழிதல் செய்யாமற்
பூரித்தல் வாடுதல் லின்றி
யென்று முன் பிழைப் பொருட் கிறங்காமல்
வரும் பொருட் கிச்சை செய்யாதே! 9

எப்பொருளிலும் ஆசை கொள்ளாமல், பஞ்சேந் திரியங்களின் விருப்பத்திற்கு இணங்கி நடக்காமல், அவைகளை அடக்கி, தீதும் நன்றும் ஒன்றெனக்கொண்டு, நற்செயல்களையும் தீச்செயல்களையும் விடுத்து, அவமானம் நேர்ந்தபோதும் மனங்குன்றாமல், மகிழ்வும் துக்கமும் இல்லாது, முன் இழந்த பொருள்களுக்காக வருத்தப்படாமலும், இனிவரும் பொருட்களில் ஆசை கொள்ளாமலும் இருப்பவன்.

பொன்றினும்-மனம் வருந்தும்படி அவமானம் ஏற்பட்டாலும், பூரித்தல்-மகிழ்தல், இச்சை-ஆசை.

யிகள்பவர் நட்டா ரென்பதின்றியே யின்ப துன்பந்
திகழ்வமான மானஞ் சீதமே டழலின்றிமை
புகழ் பழி யிவற்றினோடே பொருந்தி வாழி டமொன்றின்றியே
நிகட்டும் யோகி கண்டாய் மற்றெனக் குரியநீரான். 10

இகழந்து பேசினாலும், புகழ்ந்து கொண்டாடினாலும், ஒன்றாகக் கொண்டு, துன்பத்தைத் தரும்படியாக அவமானம் ஏற்பட்டாலும்., மற்றவர்களால் மான முள்ளவர் எனப்புகழப் பெற்றாலும், குளிரானாலும், வெப்பமானாலும் ஒன்றாகவே கருதி, தான் வசிப்பதற் கென ஒரு இடம் இல்லாதவராக இருக்கும் யோகியே எனக்கு நேர்மையானவன்.

நாட்டார்-நண்பர்கள், திகழு வமா மானம்-மானம் அவமானம், சீதம்-குளிர், தழல்-நெருப்பு, வெப்பம், நிகட்டும்-நிகழ்த்தும், வாழும். இது ஒரு அறுசீரடியாசிரிய விருத்தம்.

யாவர்களா சிலர்க ளெல்லா வினையு மென் கண்ணே விட்டிட்
டாவர் தம் மறி வென்பாலே யாக்கு வாரவர்கடம்மைச்
சாவது முதலாயுள்ள துயர்களி னின்றுந் தாங்கி
ஏவர்களென்னுங் காலஞ் சிறிதிலே யெடுக்கின்றேனான். 11

யாவரேனும் சிலர், எல்லா செயல்களையும், எனக்கென்றே அர்ப்பணித்துவிட்டு, தம்முடைய ஞானத்தை என்பால் இசைவு செய்து கொண்டவர்களாக இருப்பின் அவர்களைச் சாவு முதலான துயரங்களி லிருந்து, வெகு விரைவாகவே காப்பாற்றுகிறவன் நான்.

தம்மறிவென்பால்-தங்களுடை ஞானத்தை என்னிடத்திலே தம்+அறிவு+எம்+பால்; எவர்களேனும்-எவராயிருந்தாலும், காலஞ் சிறிதிலே-மிகக் குறவான நேரத்தில்.

செயத்தகுவது மாகிச் சேர்ந்தவர்க் கல்லலீற
வயத்தோடு போவ தான பொருளை யானுரைத்த வண்ண
மியப்பட வுணர்கிற் பாருக்கி யாமிக வினியனென்றான்
மயக்கர வொருவராலும் மறவரிதாய மாயோன். 12.

யாவரும் செய்யத் தகுந்ததான ஞான யோகத்தைச் செய்தவராகி என்னை வந்தடைவர்களின் துயரம் தீரச் செய்து, அவர்கள் நலமாக உயர்நிலைக்கு போவதற்கான வழிமுறைகளை நான் சொல்லியபடி நியமப்படி உணர்கின்றவர்களுக்கு யான் இனிமையானவன் என மதி மயக்கம் தீரும்படியாக ஒருவராலும் அறிந்து கொள்ள அரியவனான மாயவன் சொன்னான்.

செயத்தகுவது-செய்யக்கூடியது ஞான யோகம் என்க. சேர்ந்தவர் கல்லலலீற-சேர்ந்தவர்க்கு+அல்லல்+ஈற=நீங்க, மியப்பட-நியமப்படி-முறைப்படி, வுணர்கிற்பாருக்கு-உணர்கிறவர்களுக்கு.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–10

பக்தி யோகம்

1. அர்ச்சுனன் சொல்கிறான்:- இங்ஙனம் எப்போதும் யோகத்தமர்ந்து நின்னை வழிபடும் தொண்டர்களை, அல்லது நாசமற்ற "அவ்யக்த" வஸ்துவை வழிபடுவோராக இவ்விரு திறத்தாரில் யோக ஞானத்தாலே மேம்பட்டவர் யார்?

2. ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்! என்னிடத்தே மனத்தை செலுத்தி, நித்திய யோகிகளாய் உயர்ந்த நம்பிக்கையுடன் என்னை வழிபடுகிறவர் யாவர் அவர்களே, சிறந்தோர் என நான் கருதுகிறேன்.

3. இனி அழிவற்றதும், குறிப்பற்றது, அவ்வியக்த்மும்-தெளிவற்றதும் எங்கும் நிறைநததும் மனம் புத்திகளுக்கு அப்பாற்பட்டதும், நிலையற்றதும், அசைவற்றதும், உறுதி கொண்டதுமாகிய, பொருளை யாவர் வழிபடு கின்றனரோ...

4. புலன்களின் கூட்டத்தை நன்கு அடக்கி, எங்கும் சம புத்தியுடையோராய், எல்லா உயிர்களுக்கும் நன்மை விரும்புவோராகிய, அவர்களும் என்னையே அடைகிறார்கள்.

5. உருவற்ற (அவ்யக்த) பிர்மத்தில் மனதை ஏற்படுத்தும், அந்த மனிதர்களுக்கு, சாதனையில் உழைப்பு அதிகம், ஏனெனில் உடலில் பற்று உள்ளவர்களால் உருவமற்ற பிர்ம விஷயமான மார்க்கம் மிகுந்த சிரமத்துடன் அடையப்படுகிறது.

6. என்னையே கதியாகக் கொண்ட எந்த பக்தர்கள் எல்லாக் கர்மங்களையும், என்னிடம் சமர்ப்பணம் செய்து என்னையே, பிறழாத யோகத்தால், இடையறாது நினைத்து வழிபடுகிறார்களோ.....

7. பார்த்தா! என்பால் அறிவைப் புகுத்திய அவர்களைச் சீக்கிரமாகவே நான் மரணவடிவான, சம்சாரக் கடலிலிருந்து கரையேற்றுபவனாக ஆகிறேன்.

8. என்னிடமே மனதை நிலை நிறுத்து, என்னிடமே புத்தியை ஈடுபடுத்து, அதற்குமேல் என்னிடமே வாழ்வாய், ஐயமில்லை.

9. ஒருவேளை சித்தத்தை என்னிடம் நிறுத்தி வைப்பதற்கு முடியாவிட்டால், அப்போது இறைவன் திருநாமம் ஓதுதல், போன்ற பயிற்சியினால், என்னை அடைய விரும்பு அர்ச்சுனா !

10. இவ்விதமான பயிற்சியில் கூட திறமையற்ற வனாக இருந்தால், எனக்காகவே கடமைகளை ஆற்றுவது என்பதையே மேலான லட்சியமாகக் கொண்டிரு என் பொருட்டுத் தொழில்கள் செய்து கொண்டிருப்ப தனாலும், என்னை அடைவாய்.

11. என்னை அடைவது என்ற யோகத்தைச் சார்ந்து நின்று இதைக்கூட செய்யத் திறமையற்றவனாக இருந்தால் அப்போது தன்னைத்தானே கட்டுப்படுத்தி, எல்லாச் செயல்களின் பயன்களையும் துறந்துவிடு.

12. பழக்கத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்தது, ஞானத்தைக் காட்டிலும் செய்கைப் பயன்களைத் துறந்துவிடுதல் மேலானது. அத்துறவைக் காட்டிலும் சாந்தி உயர்ந்தது. (தியாகத்தின் மூலம் அமைதி கிடைக்கிறது.)

13. எவர் எவ்வுயிரையும் பகைத்தலின்றி, அவற்றிடம் நட்பும் கருணையும் உடையவனாய், யானென்பதும் எனதென்பதும் நீக்கி, இன்பத்தையும் துன்பத்தையும் நிகராகக்கொண்டு பொறுமையுடையவனாய்,

14. எப்போதும மகிழ்ச்சியுடையவனாய், தன்னைக் கட்டியவனாய், திட நிச்சயமுடையவனாய் என்னிடத்தே மனத்தையும், மதியையும், அர்ப்பணம் செய்து, என் தொண்டனாகிய யோகி எனக்கு இனியவன்.

15. எவனை உலகத்தோர் வெறுப்பதில்லையோ, களியாலும், அச்சத்தாலும், சினத்தாலும் விளையும், கொதிப்புகளிலிலிருந்தும், எவன் விடுபட்டானா, அவனே எனக்கு இனியவன்.

விளக்கவுரை

பகவத்கீதையின் பன்னிரணடாவது அத்தியாயத்திற்கு வியாசர் பக்தியோகம் என்று தலைப்பிட்டு, பதினைந்து சுலோகங்களையும், சுவடியாசிரியரும் அதே தலைப்பிட்டு பன்னிரெண்டு விருத்தங்களையும் எழுதியுள்ளார்கள்.

விருத்தம் 1. விசுவரூபத் தரிசனத்தைக் கண்டவர்கள், பரப்பிர்ம சொரூபத்தைத் தியானிப்பவர்கள் இவர்கள். இருவரில் பெரியோர்களால் ஏற்றுக்கொள்ளப் படுபவர்கள் யாவர் என அருச்சுனன் கண்ணனிடம் கேட்கிறான். இது வியாசரின் முதல் சுலோகத்தில் உள்ளதுதான்.

விருத்தம் 2. இருவருமே தன்னை அடையத் தக்கவர்களே எனக் கண்ணன் பதில் கூறுகிறார். இது இரண்டாவது சுலோகத்தில் இவ்வாறே உள்ளது.

விருத்தம் 3. கண்ணன் தன்னுடைய தன்மையைப் பற்றிக் கூறுவது.

விருத்தம் 4. யோகிகளின் முயற்சி பற்றிக் கூறுவது. இவைகளும் வியாசரின் மூன்று மற்றும் நான்காவது சுலோகங்களில் உள்ளது தான் வேறுபாடு ஏதும் இல்லை.

விருத்தம் 5. இறைவனிடம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள எளிய வழி என்ன என்பது கண்ணனால் கூறப்பெறுகிறது.

விருத்தம் 6. சித்தத்தில் அமைதி தரக்கூடியது எது என்பதைப் பற்றிக் கண்ணன் கூறுவது. இச்செய்திகள் வேறுமுறையில் வியாசரால் கூறப்பெற்றுள்ளன.

விருத்தம் 7. உயிரினங்களுக்குத் தீங்கு செய்யாதவன், துன்பத்தையும் இன்பத்தையும் ஒன்றாய்க் கருதுபவர். மற்றும் ஐம்புலன்களை அடக்கியவன் ஆகியோர் யோகிகள் எனவும் அவர்களே தனக்கு இனியவர் எனவும் கண்ணன் கூறுவது. இப்படி நேரிடையான செய்தியாக வியாசரில் இல்லை.

விருத்தம் 8. தனக்கு இனியவன் யார் எனக் கண்ணன் கூறுவது. இது வியாசரின் பதினான்காவது சுலோகத்தில் மேலும் சில மாற்றங்களுடன் கூறப் பெற்றுள்ளது.

விருத்தம் 9, 10. ஆகியவற்றில் கண்ணன் நல்ல யோகியைப் பற்றிக் கூறுகிறான். இவ்வாறு அல்லாமல் கண்ணன் அருச்சுனனிடம் தன்னை வந்தடையும் மார்க்கமாக எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்பதாகக் கூறும் செய்திகளும் சுவடியில் கூறப்பெறும் செய்திகளை ஒத்தேயுள்ளன.

விருத்தம் 11. எல்லாச் செயல்களையும் எனக்கே என அர்ப்பணிப்போரைச் சாவு முதலான துன்பங்களிலிருந்து நான் விரைவாகவே காப்பாற்றுவேன் எனக் கண்ணன் கூறுவது. இது வியாசரின் ஏழாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 12. தன்னால் சொல்லப்பெற்றபடி ஞான யோகத்தைக் கடைப்பிடிப்பவரைத் தானே காப்பதாகக் கூறுவது. இதுவும் கொஞ்சம் வேறு விதமாகவே வியாசரால் சொல்லப்பெறுகிறது.

இந்த அத்தியாயம் முழுமைக்கும் வியாசரால் கூறப்பெறும் பக்தியின் தன்மை அல்லது பக்தியுடன் இருத்தல் என்றால் என்ன என்பது பற்றியும் இறைவற்கு

இனியனாக இருக்க எவ்வாரெல்லாம் இருக்க வேண்டும் எனவும் கூறப்பெறுகிறது. பின்னர் அருச்சுனனையும் தன்னுடைய தொண்டனாக இருக்கச் சொல்வதும் இதில் சிறப்பானதாக உள்ளது;.

கருத்துக்கள் சுலோக வரிசைப்படி விருத்தமாகக் கூறப்பெறாவிட்டாலும் வியாசரால் இந்த அத்தியாயத்தில் கூறப்பெறும் செய்திகள் அனைத்தும் சுவடி ஆசிரியரால் தமது விருத்தத்தில் கூறப்பெற்றுள்ளதை அறியலாம்.

பதின்மூன்றாவது அத்தியாயம்
சேத்திரட்சேத்திரக்கியானவத்தியாயம்

பணாமுடி யரங்கின்மிசை யேறி நடம் பயிலு நாயகன்
மறித்துமிகு
ஞானஞ்சடம் படுபிணிப்பிறவி யென்றிவை தரிக்கு
முடம்பொடு யிரானவை உரைத்தருள லுற்றான். 1

விஷமுடைய பாம்பின் தலையை அரங்கமாகக் கொண்டு நடனமாடியவனாகிய தலைவன், மறுபடி ஞானம், அஞ்ஞானம், சாவு, நோய் இவை எல்லாவற்றையும் உடைய உடம்பைப் பற்றியும், அதனுள் உறை உயிரைப் பற்றியும் கூறத்தொடங்கினான்.

பணாமுடி-விஷப்பாம்பின் தலை, அரங்கின்மிசை-ஆடல் பயில் அரங்கில் ஏறி, சடம்-பிணம்-சாவு, பிறவி-மறுபிறவி, இது ஒரு கலிவிருத்தம்.

உடம்பென வுரைப்பது யிருண்பவைக ளெல்லா
மிடம்பட விளைப்ப தெதிர் காணலுறு மீதாற்
றிடம்படவு மற்றிது தெரிந்து ணருமெய்யைக்
கடம்படு முயிர்ப் பொருளெனப் பகர்வர் கற்றோர். 2

உடம்பென சொல்லப்டுவது இந்தக் கண் முன்னே காணப்படும் தேகம்; அந்த உடலைத் தனது இருப்பிடமாகக் கொண்டது ஆத்மா. அந்த ஆத்மாவானது தான் இருக்கும் இடத்தை நன்றாகக் காட்டுவதற்காகவே இந்த உடலை அது கொண்டிருக்கிறது. இதனைக் கற்றறிந்த ஞானிகள் உயிர் என்றும் கூறுவர்.

இடம்பட-இருக்கும் இடம் தெரியும்படி, கடம்படு-களம்படு-ஒரு இடத்தைக் கொண்டுள்ள.

மன்ன வுடன் யாவையினு மன்னி யறிவாய் நின்
னுன்னுமுயிர் யானிவை யிரண்டினையு மோர் காற்
றண்மையினை யாதறியு மற்றதனை ஞான
மென்ன வுணர்வார் மிதுவெனக்கு மிசைவாமால். 3

மன்னவனே! உடலுக்குள் ஒன்றி அறிவாய் நின்று இருக்கும் உயிர். இவ்விரண்டினையும் இன்னது இதுவென்று மயக்கமின்றி அறிவதே ஞானம் என்று உணர்ந்துகொள். இதையே ஞானிகளும் கூறுவர். இது உனக்கு சரியென்று படுமேயானால் எனக்கும் அதுவே சரியானதாகும்.

மன்னி-ஒன்றி-இயைந்து; நின்றுன்னி முயிர் யானிவை யிரண்டு-நான் என்பது உடலும் உயிரெனும் ஆன்மாவும் ஆகிய இரண்டுமே என்று அறிந்து; உணர்வார்-உணர்வார்கள்; இசைவு-சம்மதம்.

மற்றிவுடறன்னின் வரவுங் குணனும் வந்தாங்
குற்றமை விகாரமு முயிர்க்குருதி தானு
நற்றவர்கள் வேறுபட வோதினர் கணாணுஞ்
சொற்றொகை யினாலிவை சுருங்க மொழிவன்கேள்.4

மற்றும், இந்த ஆன்மாவானது உடலில் வரவும், குணமும் பெற்று, அவ்வுடலிலேயே விரிவடைந்து, ஆன்மாவுக்கு உறுதியானதாக உடல் இருக்கிறதெனவும் வேறு வேறாகவும் சிலர் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு அவர்களால் கூறப்பெற்றுள்ளதைத் தொகுத்துச் சுருக்கமாகக் கூறுகிறேன் கேட்பாயாக.

மற்றிவுட றன்னின்-மற்றும்+இவ்+உடல்+தன்னில், விகாரம்-விரிவடைதல், வேறுபட-நான் சொல்லியதினின்றும் வேறாக, சொற்றொகை-சொற்களால் தொகுத்து.

எப்பொழுதிளினும் பரவி யெங்கு முளா வாகும்
அப் பெரிய பூதமவை யைந்து மவை யீனு
மொப்பரிய நானு மவை வந்து முனிதீக்கும்
பொய்ப் பகையில் பித்தி மகரனென்ற பொருடாளம்.5

எல்லாப் பொருள்களிலும் பரவி எல்லாவிடத்தும் இருப்பதாகிய பெரிய பூதங்களாகிய ஐந்து பூதங்களும், அந்தப் பஞ்சபூதங்களினால் தோற்றுவிக்கப்பட்ட நான் எனும் அகங்காரமும், அந்த அகங்காரமானது முன் சொன்ன ஐம்பூதங்களுடன் கூடியதால் உண்டான புத்தியும், இப்புத்திக்கு உண்மையான பகையுள்ள தான மகர மென்ற பொருளும்.

பெரியபூதம்-பஞ்ச பூதங்கள், யீனு-அவை உண்டாக்கக்கூடிய - பிறப்பித்த-நானு-நான் எனும் அகங்காரம்-முனிதி-புத்தி; பொய்ப் பகையில்-மெய்ப்பகையுடைய-மகரம் எனபது புத்திக்கு எதிரி என்க.

காதலி லிவ்வெட்டு விளை காரணமு மொன்றா
யோதவரியாய் புலனைந்து மவை புன்னு
மாத லறியாத பொறியைந்து மவையாலே
யேத விளை செய் கரண முன்றினோடி ரண்டாம். 6

ஆசை என்பது இல்லாத காரியங்கள் எட்டில் விளைவது காரணமாகிய ஒன்று. சொல்லுவதற்கரிய புலன்கள் ஐந்து. அவைகளின் நினைவாக ஆகிய பொறிகள் ஐந்து. இவைகளினால் செய்யப்பட்ட குற்றமுடைய செயல்களைச் செய்யும் கரணங்கள் ஐந்து ஆகும்.

காதலிலிவ்வெட்டு-காதல்+இல்+இவ்+எட்டு. யோதவரிதாய்-சொல்லுவதற்கு அரிதான. புன்னும்-உன்னும்-நினைக்கும்; யேதவினை-குற்ற முடைய செயல்; மூன்றினோடிரண்டு-மூன்றும் இரண்டும்-ஐந்து;

இற்றிவை யனைத்து மிடரின்ப முதலியாவுந்
துற்றமை விகாரமதை துடர்ந்த தொகை கண்டாய்
நற்றவ வுடம்பென வியம்புவது நால்லா
ருற்ற வுடலுக்குரிய ஞானமுமுரைப்பாம். 7

நல்ல தவங்களை செய்த அருச்சனா! இவை எல்லாம் இன்பம் துன்பம் முதலியவைகள் வந்து சேர்ந்து விரிவாகிப் போய் பின் அதனைத் தொடர்ந்து வந்த கணக்கு என்பதை அறிவாயாக. உடம்பு என்று சொல்லப்படுவது எல்லா வகையான நல்லவைகளும் சேர்ந்ததே. அதற்கான ஞானத்தை-அறிவை-சொல்கிறேன்.

இடர்இனபம்-மிடரின்ப, விகாரம்-ஒன்றுசேர்ந்து, தொகை-கூடுதல்-கணக்கு; நற்றவ-நல்ல தத்துவத்தை செய்தவனே! நல்லாருற்ற-நல்லவைகள் சேர்ந்த.

மானமும் பிறர்மனை மதிக்கப் பண்ணலு
மூனமும் பிறவுயிர்க்குறு கண் செய்கையுமியா
னெனுஞ் செருக்கு மிவ்விக பரங்களி
லான பேராசை யோடறுக்கு மாற்றலும். 8

தனக்குப் பெருமையுண்டாக வேண்டும் என்பதற்காகச் செய்யப்பெறும் ஆடம்பரமும், மற்றவை ஏதும் செய்ததற்கியலாத ஊனன் எனக்கருதுவதும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்தலும், நான் எனும் அகங்காரமும், இந்த உலக ஆசை யிதில் நீண்ட நாட்கள் வாழவேண்டும் என்பது பரலோக ஆசை-மோட்சத்தை அடைய விரும்புவது இவை அனைத்தையும் நீக்கும் மன வலிமையும்...

இகம்-இவ்வுலகு, பரம்-அவ்வுலகு. அறுக்கும் ஆற்றல்-நீக்கும் வலிமை. இது ஒரு கலிவிருத்தம்.

பெற்ற நன்மனையொடு பெண்டிர் மக்கன்பா
லுற்றெழு மடவாவுடனுடம் பிலே றூய்மையு
மற்றவைம் பொறிகளின் வாயின் வாழ்க்கையுஞ்
செற்றமுஞ் சிறியவர் குழுவுந் தீர்த்தலும். 9

பூர்வபுண்ணியத்தால் பெற்ற வீடு, மனைவி, அன்பான பிள்ளைகள், ஆசை, உடம்பிலே சுகம், ஐம்பொறிகளால் சுவைக்கப்படும் இன்பம் கோபத்தையும், சிறியோர்-தீயோர்களுடன் சேர்க்கையும் நீக்கலும்.

பெற்ற-நற்பயனால் கிடைத்த, மனை-வீடு, செற்றம்-கோபம், சிறியவர்குழு-கீழானவர் சேர்க்கை.

ஒருபெரும் பொருளையே உளத்து வைத்தலு
மிருவினை கெட்டவ ரிடங்க ளெய்தலுங்
குருவினை வழிபடு குணமுங் குற்றமென்
னுரு வினையுள்ளவா னுணரு முண்மையும். 10

ஒரு தனிப்பெரும் பொருளாகிய ஆன்மாவையே மனத்தில் எப்போதும் நினைத்தாலும், நல்வினை தீவினை ஆகிய இரண்டையும் விட்ட பெரியோர்கள் இருக்கும் இடங்களை நாடிச் சென்றடைதலும் கல்வியைக் கற்றுக் கொடுத்த ஆசானை இறைவன் எனக்கொண்டு வழிபடும் குணமும். இது குற்றமுள்ளதுதான் என்று உள்ளபடி உணர்ந்து கொள்ளுதலும், எவற்றுக்கும் உண்மையான வனாக இருத்தலும்...

பெரும்பொருள்-ஆன்மா என்பர், இருவினை-நல்வினை தீவினை, கெட்டவர்-நீக்கியவர், உள்ளவாறுணரு. இது தீச்செயலே என்பதை உள்ளவாறு உணரும் திறன்.

முன்றிதழ் பிறப்பொடு மூப்பிறப்பினாற்
சென்றிடை யிடும்பையைச் சிந்தை செய்கையு
மென்றிவை யணைத்து மற்றிவற்றினா லினிற்
சென்றடை பொருளினை தெரிந்து கேளென. 11

முன்பே சொல்லப்பெற்றுள்ள பிறப்போடு, மூப்பு, இறப்பு ஆகியவற்றால் வருகின்ற துயரத்தை மனதில் கொள்ளும் அறிவும் அந்த அறிவினாலே இனிமேற் கொண்டு அவ்வறிவு ஆன்மாவையே சென்றடைய வேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டு மேலும் கேட்பாயாக.

மூப்பிறப்பு-மூப்பு+இறப்பு=முதுமை சாவு, இடும்பை-துயரம், சிந்தை செய்கை-ஆராய்ந்து பார்த்தல், சென்றடையும் பொருள். ஞானம் சென்று அடைவதற்கான பொருள்-ஆன்மா.

ஆதியந்த மிலாதழி யாது நின்ற பெருமையே
யோதி லுண்ட திலையெனு மூனமின்றி யொழிவது
நீதியின் கண் நிலமுமாகி யெங்கு நிறைதலி
னோடுதருங் கைதலைசெவி கால்களொங் குமுடையது. 12

ஆதியும் அந்தமும் இல்லாததாகி அழியாது என்றும் நின்ற பெருமையைச் சொல்வோமானால், எங்கும் உள்ளது அது. மற்றும் எங்கும் இல்லை என்ற குற்றமும் அதற்கில்லை. நீதியுடன் நிலைத்திருப்பது எங்கும் நிறைந்திருப்பதினால் சொல்லற்கரிய அதனுடைய, கைகள், தலைகள், காதுகளும் கால்களும் எங்கேயும் உடையது.

ஆதியந்தம்-தோற்றமும் முடிவும், ஊனமின்றி-குற்றமில்லாமல், நிலமுமாகி-நிலைத்திருப்பதுமாகி.

காணும் புலன்களனைத்திற்கும் கண்ணாய் நின்று காட்டுவது
பேணும் புலன் கடனக் கொன்று மில்லாதி யென்ற பெற்றியது
பூணுமவற்றுந் தனக்கின்றி யெல்லாந் தானே பொறுக்கின்ற
தாணும் பெண்ணும் அலிகுலமு மன்றியே நின்றாகியது. 13

கண்ணால் காணப்பெறும் புலன்கள் எல்லா வற்றையும் கண்ணாய் இருந்து காட்டுவது. காப்பாற்றப் பெறும் பஞ்சேந்திரியங்கள் தனக்கென்று இல்லாதது என்னும் பெருமையை உடையது. ஐந்து புலன்களும், பொறிகளும் தனக்கு இல்லாவிடினும் அவற்றை யெல்லாம் தானேயாக இருப்பது. ஆண் பெண் அலி ஆகிய மூன்று குலமுமாகி நின்றது.

புலன்கடனக்கொன்று-புலன்கள்+தனக்கு+ஒன்று. பெற்றியது-பெருமையுடையது. இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

பூதமைந்தினகத் தினோடு புறத்தினும் பொலிகின்றதிங்
கேதமின்றி நடப்ப நிற்பன வாயிருப்பதி னின்ன தென்
றோதரும்படி நுண்ணிதாகிய தொன்றாதி யிருந்து மெய்ப்
பேதம் வந்ததுபோல நின்று பிணங்கவும் படுகின்றதே ! 14

ஐந்து பூதங்களின், உன்ளேயும், வெளியேயும் விளங்கி நிற்கின்றவை, ஏதும் மாற்றமில்லாது, நடப்பனவும், நிற்பனவும் ஆக இருக்கின்றவை இது இவ்வாறு தான் என்று கூறமுடியாதபடி மிகவும் நுண்ணியதாக இருக்கின்றன. இவைகள் இப்படி அளவற்ற வேறுபாடுகளினால் மிகவும் நுண்ணியதாக இருந்த போதும், உண்மையில் ஒன்றுக்கொன்று வேறுபாடு கொண்டது போல நின்று எதிர்த்துக் கொள்வது போலவும், ஒன்றுக்கொன்று சமாதானமாக இணங்கி இருப்பது போலவும் தோன்றுகிறது. இதனாலேயே

உடலில் பலவித வேறுபாடுகள் தோன்றுகின்றன. மனிதன் என்றாலும், மிருகங்கள் என்றாலும் எல்லாம் அதற்குரிய ஒரே மாதிரியான வேறுபாடு ஏதுமில்லாது இருக்க வேண்டும். ஆனால் அது மாதிரி இல்லாமல் ஒவ்வொரு மனிதனும் வேறு வேறான உருவத்தில் இருப்பதற்கான காரணம் கூறப்பெற்றுள்ளது.

பொலிகின்ற-விளங்குகின்ற, யோதமின்றி-குற்றமில்லாது, மெய்ப்பேதம்-உண்மையான வேறுபாடு. இது ஒரு கலி விருத்தம்.

அருவமா யதிதூரமாய் தனித்துமாய் யனைத்துமா
யருவமா யாவுமளித்து மீள வொழிக்கு நாளிலொழிப்பது
பொருவிலா வொளிகட்கு முள்ளொளி யாகியே பொலிகின்ற திங்
கிருமை நீடிய ஞான மோடது மேய மாயிசைந்தது. 15

கண்களுக்கு தெரியாததாகி, ஞானமற்றவர்களுக்கு காணப்படாத வெகு தூரத்திலும், ஞானிகளுக்கு வெகு அருகிலே காணக்கூடியதாகவும் இருப்பது. தனித்துமாயும், அனைத்துமாயும் இருந்துகொண்டு எல்லா உயிர்களையும் தோன்றச் செய்து பின் அவைகளை மீண்டும் அழிக்க வேண்டிய நாளில் அழிப்பது. எதிர் கொள்ள இயலாத ஒளிகளுக்கு உள் ஒளியாகி விளங்குவது. இம்மை, மறுமை யென்ற இரண்டு காலத்து ஞானத்தோடும் இசைந்து இருப்பது.

பொருவிலா-எதிர்க்க எவருமில்லாத, நேயமாயிருப்பு-ஒன்றோ டொன்று கூடியிருப்பது.

ஆனவிப்பொருண் முன்பு ரைத்த வற்றினால் அறியும் பொரு
ளூண மற்ற மனத்தனாய நல்லுடம்பு மற்றவ் வுடம்பு சேர்
ஞானமுற்று மவற்றினா லறியப்படும் பொரு ணன்மையு
மீனமற்ற திறத்தினோடு சுருக்கமாக வியம்பினோம். 16

அஞ்ஞானமெனும் குறை நீத்த அருச்சுனா! நிலையானதாகிய இவ்வாத்மா என்பது இதற்குமுன் சொல்லப்பெற்றது. இவை உடலினால், ஞானத்தின் காரணமாக அறியப்பட்ட பொருள் எனவும் அறிவாயாக. நல்ல உடம்பும், மற்றும் அவ்வுடம்பில் ஞானமென்பது உண்டாகி அவற்றினால் அறியப்படுவதுமாகிய ஞான முதிர்ச்சி எனப்பெறும் இவ்விரண்டைப்பற்றியும் சுருக்கமாகச் சொன்னேன்.

உடலைப்பற்றிய அறிவும், உடல் என்றால் என்ன என்பது பற்றிய அறிவு முதிர்ச்சியும் என இரண்டாகக் கொள்ளப்பெற்றது.

ஊனமற்ற-குற்றமற்ற, உபம்பு+உபம்பு சேர் ஞானம்+இவற்றினால் அறியப்படும் பொருள்.

எள்ளலான திகழ்ந்தியான் முன்னுரைத்த விப்பொரு ளீதெலா
முள்ளவாறு தெரிந்தெனன்பர் தமக்குணர்ந்திட வோதினார்
கள்ளமா தருமாய் வேலை கடந்து காதலசை யின்பமாம்
வெள்ளமாமென யெய்துவாறென வேறு கூற விரும்பினான். 17

இழிவானவற்றை எல்லாம் நீக்கி, நான்முன் சொன்ன செய்திகளை எல்லாம், உள்ளபடி தெரிந்து, என்னுடைய அன்பிற்குரியவர்கள் தெரிந்து கொள்ளும்படி சொன்னார். தீயதாகிய மயக்கத்தைத் தரக்கூடிய கடலைக் கடந்து, ஆசையை உண்டாக்கக் கூடியதும்., இன்பமயமான வெள்ளத்தைப் போன்ற என்னை வந்து அடைவார்கள் என்று சொல்லி மேலும் சொல்ல விரும்பினார்.

எள்ளலான-மற்றவர்களால் கீழாதென கூறப்பெறுகிற, இகழ்ந்து-நீக்கி, கள்ளமாதருமாய-தீமையைத் தரக்கூடிய மாய, வேலை-கடல், வேறு கூற-இதுவரை சொல்லியதன்னியில் வேறு செய்திகளைச் சொல்ல.

ஓதிய உடம்புக்கு முயிர்க்கு முன்மையா
யாதியா கண்டறிபவ ராரு மில்லையாற்
றீதிலி விவ்விரண்டு முன் செய்வதே தெளி
னீதியி னவற்றினை நிகழக் கூறுவாய். 18

இதுவரை நான் கூறிய, உடம்புக்கும் உயிருக்கும் ஆதியாக உள்ளது எது என்பதைக் கண்டறிந்தவர்கள் எவருமில்லை ஆதலால், குற்றமற்ற இவ்விரண்டும், முன் செய்வதாகிய நீதி என்ன என்பதை இனி கூறுகிறேன்.

தீதிலி-குற்றமற்ற, தெளி-நீதி, எவ்வாறு என்பதைத் தெளிவாக, நிகழ-தெரியும் படி, இது ஒரு கலி விருத்தம்.

நண்ணிய குணத்தின் வேறின்மை நாட்டலாட்
கண்ணிய வினை களுக் குடம்பு காரணம்
எண்ணிய துன்பமோ டின்ப மென்றிவை
புண்ணிய காரண முயிரென் கின்றதே. 19

அதற்கே உரிய சொந்த குணத்தைத் தவிர வேறு எதுவும் இல்லாததால், செய்யும் செயல்களுக்குக் காரணமாய் இருப்பது உடம்பு. இன்பம், துன்பம் இவற்றால் உண்டாகும் புண்ணிய பாவங்களுக்கு உயிர் காரணமாகும்.

நண்ணிய-சொந்தமாய் அமைந்த, கண்ணிய-அன்னிய, துன்பமோடின்பம்-துன்பமோடு+இன்பம் உடலின் செயலால் வருவனவற்றை அனுபவிப்பது. உயிர்-ஆன்மா-எனப்பெறுகிறது.

இவ்வுயிரிவ் வுட றன்னிலே யிருந்
தவ்வுடல் பயிற்றிடுங் குணங்கலானவை
துவ்விடு மிறந்திடுந் தோன்று மிக்குண
மெவ்வ நானு டையன வென்றிருத்தலால். 20

இந்த உயிரானது உடலில் இருந்து கொண்டுள்ளது இப்படி இந்த உயிர் உடலில் இருப்பதினால், உடலால் செய்யப்பெறும் பாவ புண்ணிய காரியங்களின் பலனை உயிர் ஏற்றுக்கொள்கிறது. சுக துக்கங்களையும் அனுபவித்துப் பின் மரணத்திற்கும், பின் பிறப்பதற்கும் ஆளாகிறது. உடல் இயங்குவது அகங்காரத்தால் என்பதும், அவ்வாறு உடலை அகங்காரம் நீக்கியதாக செயல்படச் செய்தால், உயிருக்கு எவ்வித பாவ புண்ணியமும் சேராது என வேறு நூல்கள் உபாயம் கூறுகின்றன.

பயிற்றிடுங்குணம்-செய்யும் செயல், துவ்வு-துய்த்தல், நானுடையன-நான் என்னும் அகங்காரம் உடையது.

உண்பன யாவையு முண் கின்றானு மெய்க்
கண் கொடெப் பொருளை யுங் காண் கின்றானு நா
னண் பவப் பொருட்கு மொத்திருக்கு நாதனு
மெண் செய் திவ் வுடம்பிலே நின்ற ஈசனே ! 21

உடலால் அனுபவிக்கப்பெறுகிற அனைத்தையும் அனுபவிக்கிறவனும், உடலில் உள்ள கண்களைக் கொண்டு எல்லாப் பொருள்களையும் காண்கின்றவனும், எல்லாவற்றிற்கும் காரணமானவனாக இருப்பவனும், இந்த உடம்பிலே நான் எனும் அகங்காரத்திற்கு காரணமாய் இருப்பவனும் ஈசன் என்னும் உயிரே....

உண்பனவென்பது உணவு உண்பதை யல்லாது ஒட்டுமொத்தமாக அனுபவிக்கப்பெறும் எல்லாப் பொருட்களையும் குறித்தது. இங்கும் உடலை இயக்குவது அகங்காரம் என்றே கூறப்பெற்றுள்ளது.

இப்படியா யுயிரையு மியாக்கை தன்னையு
மெய்ப்பட வறிந்தவன் வேட்டவை நுகர்ந்
தொப்பன வின்றியே யொழிகி வாழ்கினும்
பொய்ப்படு பிறவியு மறித்துப் போகலான். 22

இவ்வாறு உயிர்கள் என்பது என்னவெனவும், உடல் என்பது என்னவெனவும், உண்மையாக அறிந்தவன். தான் விருப்பப்படுகின்ற எல்லாவற்றையும் அனுபவித்தாலுங் கூட, இது தனக்கல்ல எனும் நெறியிலே வாழ்ந்தாலும் கூட, பொய்யான பிறவியை மறுபடி ஏற்காமல் மோட்சத்தை சென்றடைகின்றான்.

யாக்கை-உடல், மெய்ப்பட-உண்மையாக, நுகர்ந்து-அனுபவித்து, ஒப்பனவின்றி-ஒப்புதல் இன்றி, மறித்து-நீக்கி, போகலான்-போகிறான்.

செரியுமப் பொருளை சிலர் தியானமாங்
குறியினாற் றம்முளே கண்டு கொள்வார்க
ளறிவரும் சாங்கிய யோக மாகிய
நெறியினா லெங்குமாய் நிற்பக் காண்பரால். 23

செரிவான இப்பொருளாகிய ஆன்மாவைப் பற்றி சிலர் தியானங்களின் மூலம் தங்களின் உள்ளத்தினுள்ளே கண்டுகொள்கிறார்கள். வேறுசிலர் தெரிந்து கொள்வதற்குரிய சாங்கிய யோகம் என்னும் முறையினாலே, அந்த ஆன்மாவானது எங்கும் நிறைந்து நிற்பதைக் காண்கிறார்கள்.

செரியும்-கருத்து நிறைந்த, அப்பொருள்-ஆன்மா, நெறியினால்-சாங்கிய யோகத்திற்கான நெறிமுறையினால்.

இருமையும் அறிவதற் கிடமிலாதவர்
ஒருமகன் றெய்வ மென்றுரைத்த வொன்றையே
யருமையில் அருச்சனை செய்வ ராதலான்
பெருமையினவர் களும் பிறவி மேவிடார். 24

தியானம், சாங்கிய யோகம் ஆகிய இவ் விரண்டையும் தெரிந்து கொள்ள இயலாதவர்கள். ஒரு

குரு என்பவரால் தெய்வம் என்று காட்டப்பெறும் ஒன்றைச் சிறப்பாகப் பூசித்து வருவதாலேயே அவர்கள் உயர்வு பெற்று மறுபிறவி என்பதை அடையாது மோட்சத்தை அடைவர்.

இருமை-இருவகையான, ஒருமகன்-குருவைக் குறித்தது, அருச்சனை-அர்ச்சித்தல், வழிபடுதல், பிறவி மேவிடார்-மறுபிறவியை அடையமாட்டார்கள்.

போவன நிற்பன யாக்கை பூண்டுகொண்டி
யா வருந்துயர் படுகின்ற வீதெலாம்
மேவரு முயிருடல் வேறு பாட்டினை
யாவர் கண்டறிவ தோரறிவிலாமையே. 25

போவதும் நிற்பதுமான இந்த உடலை வைத்தக் கொண்டு துயரப்படுகிறதற்கு காரணம், இருக்கின்ற உடல் வேறு, உயிர் வேறு என்பதன் வேறுபாட்டைக் கண்டறிந்து கொள்ளும் அறிவு இல்லாமையே!

போவன நிற்பன-பிறவி போய் மறுபடி பிறவி வரும்வரை இப்படியே நிற்பது. யாக்கை-உடல், பூண்டு கொண்டு-தரித்துக்கொண்டு.

கெடுகின்ற பூதங்க டோருங் கெடாதே
வடுவின்றி நின்ற மறைப் பொருட் டன்னை
நடுவென்று கண்டவ னல்லன வெல்லாங்
கடுகின்றனை யொழியா வகை கண்டான். 26

அழிந்து போகக்கூடிய தன்மையுள்ள ஐம்பூதங்களி னூடே என்றும் அழியாமல் நின்றதாகிய வேதங்களின் உட்பொருளாகியதே, எல்லாவற்றிற்கும் பொதுவானது என்று தெரிந்து கொண்டவர்கள் எனக்கு அருகில் இருப்பவர்கள், அதுவே எங்கும் நீங்காது நிற்கும் எனும் வழியைக் கண்டவர்கள்.

கெடுகின்ற பூதங்கள்-பஞ்ச பூதங்கள் அழிபவை, வடுவின்றி-குற்ற மில்லாது, மறைபொருள். வேதங்களால் கூறப்பெரும் பொருள். நடவென்று-பொதுவானதென்று, அடுகின்ற-என்னை வந்து சேர்கின்ற-அருகில் இருக்கின்ற.

ஒத்தெங்கு மாய வொருமைப் பொருளினை
யத்தன்மையி னாலறியு மவனே
செத்தும் பிறந்தும் திரியா வகை தனை
மெய்த் தன்மையிலே புக விடுகின்றான். 27

எல்லாவற்றோடும் இசைந்து போவதுமாகவும், ஒரு தனித்த பொருளாகவும் இருப்பதனை, அவ்வாறே அறிபவர்கள், பிறந்தும் இறந்தும் திரியாததாகிய நிலையை உண்மையாக அறிந்தவராவர்.

ஒத்து-எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு ஒருமைப் பொருள்-தனித்ததானப் பொருள்.

உணர் விசாரி யென்றும் வினை யெலா முடம்பினோடே
புணர்வன வென்று கண்டான் பொய்யிலா மெய்கண்டா
னிணர் மலர் முடியா யெல்லா வினைகளுஞ் செய்துமீசன்
குணமிலி யாதலாலே யவற்றொடுங் கூடி நில்லான். 28

பூங்கொத்துக்களைக் கிரீடத்திலே தரித்த அருச்சுனா! ஈசன் எனும் ஆன்மாவை, உணர்வுகளைச் சார்ந்து இருப்பவனென்றும், செய்யும் செயல்கள் எல்லாம உடம்பினதே என்றும் பொய்யற்ற உண்மையைக் கண்டறிந்தவர்கள், ஆன்மா குணமில்லாதது ஆகையினாலே, எல்லாச் செயல்களையும் செய்பவனாக இருந்தாலும் அவ்வினைகளோடு இணைந்து இருப்பதில்லை.

உணர் விசாரி-உணர்ச்சிகளைச் சார்ந்து இருப்பது, இணர் மலர் முடியா-கொத்தோடு கூடிய மலரைச் சூடிய, ஈசன்-ஆன்மா. இது ஒரு அறுசீர்க்கழிநெழிலடியாசிரிய விருத்தம்.

உன்னிய வானமெங்கு மொழிவற நிறைந்த வேனுந்
தன்னுட நுண்மையாலே பிற ரோடுஞ் சார்வ துண்டோ
பன்னிய வதுபோ லெங்கும் பரந்துள்ள னேனு மங்கு
மன்னிய வீசனந்த வுடம்பொடு மருவ மாட்டான். 29

நினைப்பிற்குரிய ஆகாயமானது, மறைவின்றி எங்கும் நிறைந்திருப்பினும், தன்னுடைய நுட்பமான தன்மையினாலே மற்றெவரோடும் சேர்வதில்லை. அதுபோல எல்லாவிடத்தும் பரந்து இருப்பதாகிய ஈசன் எனும் ஆன்மா, இந்த உடம்போடு கலந்து இருக்க மாட்டான், தனித்தே இருக்கும் என்பது.

உன்னிய - மனத்தால் நினைக்கப்பெற்ற, மொழிவற-ஒழிவற-நிறைவாக, நுண்மையாலே-நுட்பமான தன்மையாலே. மருவ மாட்டான்-கலந்துவிட மாட்டான்.

இரவி தானொருவனே யாய் நின்றிந்த
உலகத்தெங்கும்
விரவிய இருளை நீக்கி விளக்குமாறு போலத்
தரவியாவரு முன்னில்லாத சராசர ருடம்பு தோறும்
பரவி யானு ரைத்த மாய னொருவனே பரந்து
நிற்பான். 30

இந்த உலகத்தில் பரவியுள்ள இருளை, தான் ஒருவனேயாகி சூரியன் ஒளியினைக் கொடுத்து விளக்குவதைப்போல, தன்னைத் தவிர தனக்குமுன் வேறு ஒன்று இல்லாத, மாயவனாகிய ஆன்மா, இந்த உலகங்கள் தோறும் உள்ள உடம்புகளில் எல்லாம் பரவி உள்ளது.

இரவி-சூரியன், விரவிய-பரந்துள்ள, யாவரு முன்னில்லாத-தன்னைத்தவிர வேறு ஒன்று இல்லாத, மாயன்-இங்கு ஆன்மாவைக் குறித்தது.

ஓரின் மேலாகி நின்ற உயிரினோடு டம்புக்குள்
போரினோ டிறப்பு மூப்புப் பிறப்பெனுமி வற்றை
நேராய்ப்
பாரின் மேலறிவார் வீடு பற்றினார் னென்றான்
பார்த்தன்
தேரின் மேனின்று வேதச் சிரத்தின் மேலிருக்குஞ்
சீரோன். 31

வேதங்களுக்கெல்லாம் தலைமையானவனான சிறப்புடைய கண்ணன், அருச்சுனனின் தேரின் மேல் நின்று, ஆராய்ந்து பார்க்கும்போது எல்லாவற்றிற்கும் மேலானதாக உள்ள உயிரானது இந்த உடம்புக்குள் இருந்து கொண்டு, இறப்பு, மூப்பு, பிறப்பு என்னும் இவற்றைச் சமமாகக் கொண்டுள்ளது என்பதை யார் அறிகின்றார்களோ அவர்களே வீடுபேற்றையடைந்த வர்கள் என்றான்.

சீரோன்-சிறந்தவன், வேதச்சிரம்-வேதங்களின் தலைமையாக இருப்பவன்.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–13

க்ஷேத்ர – க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்

1. ஸ்ரீ பகவான் சொல்கிறான்:- கேசவா! பிரகிருதி, புருஷன் க்ஷேத்ரம், க்ஷேத்ரக்ஞன், ஞானம், ஜ்ஞேயம் என்னும் இவற்றை அறிய விரும்புகிறேன்.

2. ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:- குந்தி மகனே! இந்த உடம்பு க்ஷேத்ரம் என்று உணர். க்ஷேத்ரக்ஞ னென்று பிரம்ம ஞானிகள் சொல்லுகிறார்கள்.

3. பாரதா! எல்லா க்ஷேத்ரங்களிலும் க்ஷேத்ரக்ஞனும் நானே என்று உணர். க்ஷேத்ரனனும் க்ஷேத்ரக்ஞனும் பற்றி அறியும் ஞானம் எதுவோ அதுவே ஞானம் என்பது எனது கொள்கை.

4. அந்த க்ஷேத்ரமென்பது யாது? எவ்வகைப் பட்டது? என்ன மாறுதல்கள் உடையது? எங்கிருந்து வந்தது? க்ஷேத்ரக்ஞன் யார்? அவனுடைய பெருமை எப்படிப்பட்டது? இவற்றைச் சுருக்கமாக என்னிடமிருந்து கேள்!

5. ரிஷிகளால் பலவகைகளிலே பாடப்பட்டது. பலவிதமான சந்தங்கள்-வேத மந்திரங்கள்-மூலமாகவும் தனித்தனியே கூறப்பட்டது. நல்ல நிச்சயமுடையனவு மாகிய யுக்திகளுடன் விளங்கும் பிர்ம சூத்திர பதங்களிலும் இசைக்கப்பட்டது.

6. மகாபூதங்கள்-ஐம்பூதங்கள்-அகங்காரம், புத்தி, அவ்யக்தம், பத்து இந்திரியங்கள்-புலன்கள்-மனதுடன் சேர்த்து பதினொன்று-இந்திரிய நிலங்கள் ஐந்து, சுவை, ஒளி, ஓசை போன்ற புலன்நுகர் பொருட்கள்.

7. வேட்கை பகைமை, இன்பம், துன்பம், உடம்பு, சைதன்ய சக்தி, உள்ளத்துறுதி ஆகிய மாறுபாடுகளை யுடைய இந்த க்ஷேத்திரம் சுருக்கிச் சொல்லப்பட்டது.

8. கர்வமின்மை, டம்பமின்மை, ஹிம்சை செய்யாமை, பொறுமை, நேர்மை, ஆசாரியனை வழிபடுதல், தூய்மை, ஸ்திரத்தன்மை, தன்னைக் கட்டுதல்.

9. இந்திரிய விஷயங்களில் விருப்பமின்மை அகங்காரம் இல்லாமை, பிறப்பு, இறப்பு, நரை, நோய், துக்கம், சந்தோஷம் இவற்றின் கண் இசைந்த காட்சியுடைமை.

10. மகனையும், மனைவியையும், வீட்டையும் பற்றின்மை, தன்னுடைமை எனக் கருதாமை, மேலும் விரும்பினவும், விரும்பாதனவும், எய்துமிடத்தே எப்போதுமே சம சித்தமுடைமை.

11. என்னிடம் பிறற்சியற்ற யோகத்துடன் தவறுதலின்றிச் செலுத்தப்படும் பக்தி, தனியிடங்களை மேவுதல், ஜனக்கூட்டத்தை விரும்பாமை.

12. ஆத்ம ஞானத்தில் எப்போதும் நழுவாமை, தத்துவ ஞானத்தில் பொருளுணர்வு, இவை ஞானமெனப்படும். இவற்றினின்றும் வேறுபட்டது அஞ்ஞானம் என்று சொல்லப்பட்டது.

13. எது அறியப்பட வேண்டியதோ எதை அறிந்தால் சாகாமல் இருப்பானோ, அதை விளக்கிக் கூறுவேன். அநாதியாகிய பரப்பிர்மம் என்பதுமில்லை. " சத் " என்பதுமில்லை " அசத் " என்பதுமில்லை.

14. அது எங்கும் கை கால்களையுடையது எங்கும் கண்ணும், தலையும் வாயுமுடையது. எங்கும் செவியுடையது. உலகத்தில் எதையும் சூழ்ந்து நிற்பது.

15. எல்லா இந்திரிய குணங்களும் வாய்ந்தொளிர்வது. எல்லா இந்திரியங்களுக்கும் புறம்பானது, பற்றில்லாதது, அனைத்தையும் பொறுப்பது. குணமற்றது, குணங்களைத் துய்ப்பது.

16. பூதங்களுக்கு உள்ளும் புறமும் ஆவது, அசரமும், சரமும் ஆவது. நுண்மையால் அறியமுடியாதது. அருகில் இருப்பது, தூரமானது.

17. அறியத்தக்க அது (பிரம்மம்) உயிர்களில் பிரிவு பட்டு நில்லாமல், பிறிவுபட்டதுபோல் நிற்பது. பூதங்களைத் தாங்குவது, அவற்றை உண்பது, அவற்றைப் பிறப்பிப்பது.

18. ஒளிகளுக்கெல்லாம் அது ஒளி, இருளிலும் உயர்ந்த ஞானம், அறியத்தக்கது, ஞானத்தால் எய்தப்படும் பொருள். எல்லாவற்றின் அகத்திலும் அமர்ந்தது என்று கூறப்படுகிறது.

19. இங்ஙனம் க்ஷேத்திரம், அவ்வாறே அறிவு, ஞானம், அறியப்படுபொருள், ஜ்ஞேயம், சுருக்கமாகச் சொல்லப்பட்டது. என் பக்தன் இதையறிந்து எனது தன்மையை அடைகிறான்.

20. பிரகிருதி, புருஷன் இவ்விரண்டும், அநாதி ஆரம்பம் இல்லாதது என்றுணர். வேறுபாடுகளும் குணங்களும், பிரகிருதியிலேயே பிறப்பன என்று அறிந்துகொள்.

21. காரியங்களையும் காரணங்களையும் ஆக்கும் விஷயத்தில், பிரகிருதியே காரணம் என்பர். சுக துக்கங்களை அனுபவிப்பதில் புருஷன், ஜீவாத்மா, காரணம் என்பர்.

22. பிரகிருதியில் நின்றுகொண்டு புருஷன்-ஜீவாத்மா-பிறகிருதியில் பிறக்கும் குணங்களைத் துய்க்கிறான்.

23. மேற்பார்ப்போன், அனுமதி தருவோன், சுமப்பவன், உண்பவன், மகேசுரன், இங்ஙனம் உடம்பிலுள்ள பரம புருஷன், பரமாத்மா என்று சொல்லப்படுகிறான்.

24. இங்ஙனம் புருஷனையும், பிரகிருதியையும் அதன் குணங்களையும், எவன் அறிகின்றானோ அவன் எல்லா நெறிகளிலும் இயங்குவானெனினும், மறு பிறப்பில்லை.

25. சிலர் ஆத்மாவில் ஆத்மாவால், தியானத்தின் மூலமாக ஆத்மாவை அறிகிறார்கள். பிறர் சாங்கிய யோகத்தால் அறிகிறார்கள். பிறர் கர்மயோகத்தால் அறிகிறார்கள்.

26. வேறு சிலர் இவ்வாறு அறியாமல், அந்நியரிடமிருந்து பெற்ற சுருதிகளை வழிபடுகிறார்கள். அவர்களும் அந்தச் சுருதிகளின்படி ஒழுகுவாராயின் மரணத்தை வெல்வர்.

27. பரதக் காளையே! எத்தனை எத்தனை ஸ்தாவரமாயினும், ஜங்கமமாயினும், பிராணிவர்க்கம் உண்டாகின்றதோ, அது க்ஷேத்திரமும், க்ஷேத்ரக்ஞனும் சேர்ந்தமையால் பிறந்தது என்று அறி.

28. எந்த மனிதன் அழியக்கூடிய எல்லா பூதங்களிலும், அழியாதனவாகவும், சமமாக நிற்பவனாகவும், பரமேச்வரனைப் பார்க்கிறானோ அவனே காட்சி உடையவன்.

29. எங்கும் சமமாக ஈசன் நிற்பதைப் பார்த்துக் கொண்டு நிற்பவன், தன்னைத் தானே துன்பப்படுத்திக் கொள்ளமாட்டான். அதனால் பரகதி அடைகிறான்.

30. மேலும், எவன் எங்கும் தொழில்கள் இயற்கை யாலேயே செய்யப்படுகின்றன. ஆதலால் தான் கர்த்தா இல்லை என்று காண்பானோ அவனே காட்சி யுடையவன்.

31. எப்போது பலவகை பூதங்களின தன்மை, ஒரே ஆதாரமுடையன, அந்த ஆதாரத்திலிருந்து- பரமாத்மாவிட மிருந்து விரிவடைந்தனவாகவும் காண்கிறானோ, அப்போது பிர்மத்தை அடைகிறான்.

32. குந்தியின் மகனே ஆதியின்மையால் இந்தப் பரமாத்மா குணமின்மையால்-கேடற்றவன். இவன் உடம்பிலிருந்தாலும் செயலற்றவன் பற்றற்றவன்.

33. எங்குமிருந்தாலும், ஆகாசம் தன் நுண்மை யினால் பற்றற்று நிற்பதுபோல, அவ்வாறே உடம்பில் ஆத்மா அங்ஙனமிருந்தாலும், பற்றுறுவதிலன்.

34. பாரதா! எப்படி சூரியன் ஒருவனாய், இவ்வுலக முழுவதும் ஒளியுறச் செய்கிறானோ அதுபோல கேஷத்திரத்தையுடையோன் கேஷத்திர முழுவதையும் ஒளியுறச் செய்கிறான்.

35. இவ்வாறு கேஷத்திரத்திற்கும் கேஷத்ரக்ஞனுக்கும் உள்ள வேற்றுமையையும், பரக்ருதி பரக்ருதியினுடைய செயல்கள் இவற்றிலிருந்து விடுபடுவதையும், எவர்கள் ஞானக் கண்ணால் பார்த்து அறிகிறார்களோ அவர்கள் பூதப் பிரகிருதியிலிருந்து விடுதலைப்பெற்று பரம் பொருளை அடைகிறார்கள்.

விளக்கவுரை

வியாசர் தமது பகவத் கீதையின் இந்த பதின் மூன்றாவது அத்தியாயத்திற்கு, க்ஷேத்ர, க்ஷேத்ரக்ஞ விபாக யோகம் என்று தலைப்பிட்டு முப்பத்தைந்து சுலோகங் களை இயற்றியுள்ளார். சுவடி ஆசிரியர் இநத அத்தியா யத்திற்கு சேத்திரட் சேத்திரட்கியான வத்தியாயம் என்று தலைப்பிட்டு முப்பத்தொரு விருத்தங்களைப் பாடியுள்ளார்.

வியாசர் உடலை க்ஷேத்ரம் என்றும் இந்த உடலைப் பற்றிய அறிவை எவன் பெறுகிறானோ அவனை க்ஷேத்ரக்ஞன் என்றும் கூறுகிறார்.

விருத்தம் 1. ஞானம், அஞ்ஞானம், சாவு, நோய் இவை எல்லாவற்றையும் உடையதாகிய உடம்பைப் பற்றியும் அதனுள்ளே இருக்கின்ற உயிரை கூறத் தொடங்கினார் எனவுள்ளது. வியாசரின் முதல் சுலோகத்தில் அருச்சுனன் கண்ணனிடம் பிரகிருதி, புருஷன், க்ஷேத்ரம், க்ஷேத்ரக்ஞன், ஞானம், ஞேயம் என்பன பற்றியெல்லாம் தான் அறிய விரும்புவதாகக் கூறுகிறான்.

விருத்தம் 2. கண்ணாற் காணும்படி இருப்பதுவே உடம்பு. இந்த உடம்பைத் தனது இருப்பிடமாகக் கொண்டிருப்பது உயிர் எனக் கூறப்பெறுகிறது. ஆன்மா என்ற சொல் சுவடி ஆசிரியரால் பயன்படுத்தப் பெறவில்லை. வியாசரின் இரண்டாவது சுலோகத்தில் இவ்வுடம்பிற்கு க்ஷேத்ரம் என்று பெயர் என்று சொல்லி விட்டு உயிர் அல்லது ஆத்மாவைப்பற்றிக் கூறாமல், இந்த உடம்பைப் பற்றி அறிந்து கொண்டவனை க்ஷேத்ரக்ஞன் என்பர் என்று கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 3. ஞானம் என்பது உடலுக்குள் ஒன்றிய அறிவாய் நின்றிருக்கும் உயிர். இவைகளைப் பற்றி அறிவது என்று கூறப்பெறறுள்ளது. இது முன்பே கூறப்பெற்றதுதான்.

விருத்தம் 4. உயிருக்கு உறுதியான இருப்பிடமாக இருப்பது உடல். இதை வேறு வேறாகவும் சொல்வதுண்டு. இதனை வியாசர் தமது ஐந்தாவது சுலோகத்தில் ரிஷிகளால் பல வகைகளில் பாடப்பட்டது என்கிறார்.

விருத்தம் 5. பஞ்சபூதங்களால் தோற்றுவிக்கப்படுவது நான் என்னும் அகங்காரம். இதே அகங்காரம் பஞ்ச பூதங்களுடன் கூடியதால் உண்டானது புத்தி-இதற்கு எதிரானது மகரம் என்பது. இவ்வாறு எதுவும் வியாசரில் கூறவில்லை.

விருத்தம் 6. காரியங்கள் எட்டு, காரணம் ஒன்று, புலன்கள் ஐந்து-பொறிகள் ஐந்து-இவைகளால் குற்ற முடைய செயல்களைச் செய்யும் காரணங்கள் ஐந்து என்று உடலில் உள்ள தத்துவங்களைப் பற்றிக் கூறப்பெற்றுள்ளது. இதைப் பற்றி வியாசரின் இந்த அத்தியாயத்தின் ஆறு, ஏழு ஆகிய சுலோகங்களில் மகா பூதங்கள், ஐம்பூதங்கள் அகங்காரம், புத்தி, அவ்யக்தம், பத்து இந்திரியங்கள், புலன்கள், மனதுடன் சேர்த்து பதினொன்று இந்திரிய நிலங்கள் ஐந்து, சுவை-ஒளி-ஓசை போன்ற புலன் நுகர் பொருட்கள்-வேட்கை-பகைமை-இன்பம்-துன்பம்-உடம்பு சைதன்ய சக்தி-உள்ளத்து உறுதி-எனப் பலவேறு மாறுபாடுகளையுடையது. இந்த க்ஷேத்திரம்-உடல்-என்று கூறப்பெறுகிறது.

விருத்தம் 7. உடல் எனபது எல்லா வகையான நல்லவைகளும் சேர்ந்ததே. துன்பமும் இன்பமும் விரிவாகி இவை உண்டாகின்றன.

விருத்தம் 8. ஆடம்பரம், பிறரைத் தாழ்வாக எண்ணுவது, பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவித்தல் நீண்ட நாட்கள் வாழவேண்டும் எனும் ஆசை, பரலோக ஆசை, இவை அனைத்தையும் நீக்கும் மன வலிமை இவை பற்றியெல்லாம் கூறப்பெறறுள்ளது.

இதனையே வியாசரும் தம்முடைய ஏழாவது மற்றும் எட்டாவது முதல் பன்னிரண்டாவது சுலோகங்கள் வரை வேறு வேறு மாறுபாடுகளுடன் கூறியுள்ளார்.

விருத்தம் 9. வீடு, பெண்டிர், பிள்ளைகளின் பேரில் ஏற்படும் ஆசை, உடலால் சுவைக்கப்படும் இன்பங்கள் கோபம்-சிறியோர் மற்றும் பெரியோர்களுடன் சேர்ந்திருக்கும் எண்ணம் ஆகியவைகளை நீக்குதல்.

விருத்தம் 10. தனிப்பெறும் பொருளாகிய - உயிரின் பேரில்-ஆன்மாவின் மேல்-எப்போதும் கவனம் வைத்தல்-இருவினைகளையும் நீக்கிய பெரியோர்களிடத்தில் நட்பு கொள்வது-குருவை வணங்கும் பண்பு-குற்றமுள்ள செயல்கள் எவை எனக் கண்டு கொள்ளுதல் உண்மை யானவனாக இருத்தல்.

இவை எல்லாம் வியாசரின் ஒன்பது பத்து ஆகிய சுலோகங்களில் கூறப்பெற்றுள்ளன.

விருத்தம் 11. பிறப்பு, மூப்பு, இறப்பு ஆகியவைகளால் வரக்கூடிய துன்பம். அறிவு முடிவில் ஆன்மாவையே வேண்டும் என்பது. இவ்விருத்தத்திலும் ஆன்மா எனும் சொல் இல்லை ஆனால் பொருள் எனக் கூறப்பெறுகிறது. இவ்வாறான ஒரு செய்தி வியாசரால் கூறப்பெறவில்லை.

விருத்தம் 12. ஆன்மாவைப் பற்றிக் கூறப்பெறுகிறது. இதனுடைய கை, கால்கள், தலைகள் காதுகள் ஆகியவை எங்கேயும் உள்ளது எனப்பெறுகிறது. இச்செய்தி வியாசரின் பதினான்காவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 13. இந்த விருத்தத்திலும் ஆன்மா என்ற சொல் இல்லாதபடி, கண்களாய் இருந்து அனைதையும் காட்டுவது, ஐம்பொறிகளும் புலன்களுமாய் இருப்பது ஆண், பெண், அலி ஆகிய மூன்றுமாய் உள்ளது. ஆன்மா எனப்பெறுகிறது. இப்படி ஏதும் வியாசர் சொல்லவில்லை.

விருத்தம் 14. ஐம்பூதங்களின் உள்ளேயும், வெளியேயும் இருப்பது. நுண்ணிய தன்மையது. பூதங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுவது போலவும், இசைந்து போவது போலவும் தோன்றும் இதனாலேயே உடலில் பலவித வேறுபாடுகள் தோன்றுகின்றன. இதுவும் வியாசரில் உள்ளதுதான்.

விருத்தம் 15. ஞானிகளுக்கு அருகிலும், அஞ்ஞானி களுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் ஞானத்தோடு இசைந்து நிற்பது என ஆன்மாவின் தன்மை பற்றிக் கூறப்பெறுகிறது. வியாசரின் பதினாறாவது சுலோகத்தில் பொதுவாக அருகில் இருப்பது தூரத்தில் இருப்பது, நுண்மையானது, பூதங்களின் உள்ளும் புறமும் ஆனது-சரம்-அசரம் ஆனது என்று கூறப்பெறுகிறது.

விருத்தம் 16. ஞானத்தின் காரணமாக அறியப் படுவது ஆத்மா, ஞானத்தின் முதிர்ச்சி என்பது இதனின் வேறு. இந்த அறிவின் முதிற்விற்கு வியாசர் ஜ்ஞேயம் எனக் கூறுகிறார். சுலோகம் பத்தொன்பதில் - வியாசரின் கருத்துப்படி உடலைப் பற்றி அறியப்படும் கருத்துக் களுக்கு ஜ்ஞேயம் என்று பெயர்.

விருத்தம் 17,18. உடலுக்கும் உயிருக்கும் ஆதியாக இருப்பது எது என்பதைக் கண்டறிந்தவர் எவருமில்லை. இப்படி வியாசர் கூறவில்லை-விளக்கம் தரப்பெறுகிறது.

விருத்தம் 19. செய்யும் செயல்களுக்குக் காரணமாய் இருப்பது உடம்பு, இன்பம், துன்பம் இவற்றால் உண்டாகும் பாவ புண்ணியங்களுக்குக் காரணமாய் இருப்பது உயிர் எனப்பெறுகிறது. இங்கும் ஆன்மா என்ற சொல் கூறப்பெறவில்லை. இருபத்திரண்டாவது சுலோகத்தில், பிரகிருதியில் நின்று கொண்டு-அதில் பிறக்கும் குணங்களை ஜீவாத்மா துய்க்கிறது என்கிறார் வியாசர். இரண்டும் ஒரே கருத்துதான்.

விருத்தம் 20. உடலால் செய்யப்படும் காரியங்களால் விளையும் பாவ புண்ணியங்களை உயிர் ஏற்பதால் தான் மறுபடி பிறக்க வேண்டிய நிலை உயிருக்கு உண்டாகிறது. முன் இருபத்திரெண்டாவது சுலோகத்திலேயே இச்செய்தி உள்ளது மேலதிகமாகச் செயல்களில் பற்றுதல் கொள்வதே மறுபிறவிக்குக் காரணம் எனவும் தெளிவுபடுத்தப்படுகிறது. எனவே பற்றற்ற கருமங்களால் பிறவியைத் தடுக்க இயலும் என்பது பாடமாகிறது. மேலும் வியாசரின் இருபத்து நான்காவது சுலோகத்தில், புருஷனையும், பிரகிருதியையும், அதன் குணங்களையும் அறிந்தவன் எவ்வாறாயினும் அவனுக்குப் பிறப்பில்லை என்று கூறுகிறது.

விருத்தம் 21. உடலால் அனுபவிக்கப்படுவதனைத்தையும் அனுபவிப்பவனும், உடம்பில் உள்ள நான் என்னும் அகங்காரத்திற்கும் காரணமானவன் ஈசன் என்கிறார் சுவடி ஆசிரியர். இங்கு ஈசன் என்றது ஆன்மாவை. இச்செய்தி முன் சுலோகத்தில் வியாசரால் சொல்லப்பெற்றதுதான்.

விருத்தம் 22. உடல் எது உயிர் எதுவென உண்மையாக அறிந்தவன், எல்லாவிதங்களையும் உடலால் அனுபவித்தபோதும். இது தனக்கல்ல என்ற நெறியில் வாழ்வானாகில் அவன் மோட்சத்தை அடைகிறான் என்று கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 23. இவ்விருத்தத்தில் ஆன்மாவைச் சுவடி. ஆசிரியர் செறியும் பொருள் என்கிறார். இதனைப்பற்றி சிலர் தியானத்தின் வழியாகவும் சிலர் சாங்கிய யோகத்தின் மூலமாகவும் ஆன்மாவானது எங்கும் நிறைந்துள்ளதைக் காண்பதாகக் கூறுகிறார் இதனை வியாசர் தமது இருபத்தைந்தாவது சுலோகத்தில் மேலும் தெளிவாகவே கூறுகிறார்.

விருத்தம் 24. தியானம், சாங்கியயோகம் இவற்றால் அறியமுடியாதவர்கள் ஒரு குருவின் மூலம் தெரிந்து கொள்கிறார்கள் என்கிறார். அந்நியரிடமிருந்து பெற்ற சுருதிகளின்படி ஒழுகினால் கூட மரணத்தை வெல்ல முடியும் என இதுபற்றி வியாசர் தமது இருபத்தாறாவது சுலோகத்தில் கூறியுள்ளார்கள். இங்கு அன்னியர் என்பது குருவைக் குறிப்பதாகக் கொள்ளல் அவ்வளவு சரியானதல்ல.

விருத்தம் 25. உடல் வேறு உயிர் வேறு என்று அறியாது துயரப்பட வேண்டியுள்ளது எனச்சுவடி ஆசிரியர் கூறுகிறார். இவ்வாறு சொல்லாமல் வியாசர் தமது இருபத்து ஏழாவது சுலோகத்தில், க்ஷேத்திரமும் க்ஷேத்திர யக்ஞனும் சேர்ந்ததே பிராணிகளின் வர்க்கம் உண்டாகிறது எனக்கூறுகிறார். எனவே இவரும் உடலும் உயிரும் வேறு வேறானவை என்றே கூறுகிறார் என ஏற்கலாம்.

விருத்தம் 26. அழிந்து போவது உடல், அழியாமல் நிற்பது ஆன்மா. இதனைத் தெரிந்து கொண்டவர்கள் எனக்கு அருகில் இருப்பவர்கள் எனக் கண்ணன் கூறுகிறான். இச்செய்தி வியாசரின் முப்பத்து ஐந்தாவது சுலோகத்தில், க்ஷேத்திரத்திற்கும், க்ஷேத்ரக்ஞனுக்கும்

உள்ள வேற்றுமையையும், ப்ரக்ருதியினுடைய செயல்கள் இவற்றிலிருந்து விடுபடுவதையும் அறிபவர்கள் பரம் பொருளை அடைகிறார்கள் எனக் காணலாம். இவ்வாறான செய்திகளைச் சற்று கூர்மையாக கவனித்து அறியவேண்டும்.

விருத்தம் 27. ஆன்மாவென்பது எல்லாவற்றோடும் இசைந்து இருப்பது எனப்பெறுகிறது. இதனை வியாசர் தமது முப்பத்து நான்காவது சுலோகத்தில் சூரியனை எடுத்துக் காட்டாகக் கூறி அது எல்லாப் பொருட்களையும் காட்டுகிறது. ஆனால் எவற்றோடும் கலந்து விடாமல் தனித்து இருக்கிறதை அறியும்படி தெளிவாகக் கூறுகிறார்.

விருத்தம் 28. இதனையே மறுபடியும் விளக்குகிறார். ஆன்மாவுக்கு என ஒரு தனி குணம் கிடையாது. உடம்பினால் செய்யப்பெறும் செயல்களின் உணர்வுகளை மட்டுமே அது அனுபவிக்கிறது எனவும், உடலால் செய்யப்படும் வினைகளோடு இணைந்து இருப்பதில்லை எனவும் மீண்டும் சொல்லப்பெறுகிறது.

விருத்தம் 29. இவ்விருத்தத்தில் ஆன்மா ஆகாயத்தோடு ஒப்பிட்டுக் கூறப்பெற்றுள்ளது. ஆன்மாவை ஈசன் எனக் குறிப்பிடுகின்றார். ஆகாயம் எல்லா இடங்களிலும் நிறைந்து இருப்பினும் அது தன்னுடைய தனித்தன்மையுடன்தான் இருக்குமே தவிர எதனுடனும் கலந்து விடுவதில்லை. அதுபோல ஆன்மா இந்த உடம்போடு கலந்து விடுவதில்லை. உடலினின்றும் தனித்தே இருப்பதாகக் கூறப்பெறுகிறது.

விருத்தம் 30. இதில் ஆன்மாவைச் சூரியனுக்கு ஒப்பிட்டு முன்கூறுப் பெற்றதே மறுபடி கூறப்பெறுகிறது.

விருத்தம் 31. நிறைவாக வேதங்களின் தலைவனான கண்ணன் அருச்சுனனின் தேரின்மேல் இருந்தபடி, இந்த உடம்புக்குள் இருக்கும் உயிரானது பிறப்பு, மூப்பு, இறப்பு இம்மூன்றையும் சமமானதாகக் கொண்டுள்ளது. இதனை அறிபவர்களே வீடுபேற்றை அடைகிறார்கள் எனக் கூறுவதாக இவ்வத்தியாயம் நிறைவுபெறுகிறது. இவ்வாறே வியாசரின் நிறைவு சுலோகமும் கூறுகிறது.

இவ்வத்தியாயத்தின் தொடக்க முதல் நிறைவுவரை சுவடி ஆசிரியர் தமது விருத்தம் எதனினும் ஆன்மா என்ற சொல்லைப் பயன்படுத்தவே இல்லை. உயிர் எனவும், ஈசன் எனவும் தனித்த பொருள் எனவும் பலவாறாகக் கூறியுள்ளார் என்பதைக் கவனிக்க வேண்டும்.

பொதுவாக பகவத்கீதையின் தமிழ் மொழி பெயர்ப்புகள் அனைத்திலும் ஆன்மா என்னும் சொல்லைப் பயன் படுத்தியே விளக்கம் அளிக்கப் பெற்றுள்ளதைக் காணலாம்.

சுவடி ஆசிரியர் இவ்வத்தியாயத்தில் வியாசரால் கூறப்பெற்ற அனைத்து செய்திகளையும் தமக்கேற்ற முறையில் விளக்கமாவே கூறியுள்ளார்.

பெரும்பாலான செய்திகள் கண்ணன் அருச்சுன னிடம் நேரில் கூறுவது போலவும் தானே கேள்வியையும் கேட்டுக் கொண்டு தானே பதிலையும் சொல்வது போலவும் அமைந்துள்ளன. சுவடி ஆசிரியரால் கூறப் பெற்றுள்ள செய்திகளைத் தவிர, கண்ணன் கூறுவதாக வியாசரால் கூறப்பெறுவன. எல்லாச் க்ஷேத்ரங்களிலும் க்ஷேத்ரக்ஞர் நானே! உடம்பிலுள்ள பரமபுருஷன் பரமாத்மா என்று சொல்லப்படுகிறான். க்ஷேத்ரமும், க்ஷேத்ரக்ஞனும் சேர்ந்தே ஸ்தாவர, ஜங்கம, பிராணி

வர்க்கம் உண்டாகிறது. தன்னைத்தானே துன்பப்படுததிக் கொள்பவன் பரகதியை அடையமாட்டான். பரமாத் மாவிற்கு ஆதியும் இல்லை. குணமும் இல்லை. க்ஷேத்திரத் திற்கும், க்ஷேத்ரக்ஞன், பிரக்ருதியின் செயல்கள் இவற்றி லிருந்து வேறுபடுகிறது. ஆகிய விஷயங்களை ஞானக்கண் கொண்டு காண்பவன் பிரக்கிருதியிலிருந்து விடுதலை பெற்று பரம்பொருளை அடைகிறான் ஆகிய விஷயங்கள் கூறப்பெறுகின்றன.

இவ்வத்தியாயத்தில் உடலைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் கூறப்பெறும் செய்திகளை மேலும் தெளிவாகவும், தத்துவங்களின் பிரிவுகளோடு கூடவும், ஸ்தூல சரீரம் என்றால் என்ன சூட்சும சரீரம் என்றால் என்ன உத்தம சரீரம், மத்திம சரீரம், அதம சரீரம் என்பனயாவை, உடலுக்கு தேகம் எனவும், சரீரம் எனவும் பெயர் வரக்காரணம், சுக்கில சுரோணித சேர்க்கை, கர்ப்பத்தோற்றம், அந்தக கர்ப்பத்தின் பத்துமாத கால வளர்ச்சி, கர்ப்ப கால அவஸ்தை, மற்றும் உடலால் அனுபவிக்கப்பெறக் கூடிய விஷயங்கள் யாவும் நாநாசீவ வாதக் கட்டளை என்னும் நூலில், பலவித உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், வேதக்கருத்துக்கள், மற்றும் கைவல்ய நவநீதம் போன்ற நூல்களின் ஆதாரங்களோடு தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன.

நாநாசீவ வாதக் கட்டளை என்னும் நூலும் கைவல்ய நவநீதம் என்ற நூலும் பகவத்கீதையில் கூறப்பெற்றுள்ள பல செய்திகளை விளக்கமாகவும் தத்துவரீதியாகவும் கூறுவனவாகும்.

▪▪▪▪▪▪▪▪▪

பதினான்காவது அத்தியாயம்

குண தீதவத்தியாயம்

செய்ய மாமலர் மேலுறை செல்வியும்
வைய மா மடவாளு மகிழ்ந்த தோ
ளையன் மைய யையன் பாலடி யோ மெலா
முய்ய மீள வுரைக்கத் தொடங் கினான். 1

சிவந்த பெரிய தாமரை மலரின் மேல் வாழும் இலக்குமி தேவியும், பூமாதேவி எனும் இளமாதும் கூடி மகிழ்ந்திருக்கும் தோளினையுடைய கண்ணன் அருளினாலே, நாம் எல்லோரும், நற்கதி அடையும் பொருட்டு மீண்டும் கூறத்தொடங்கினான்.

செய்ய-சிவந்த, மாமலர் மேலுறை செல்வி-இலக்குமி, வைய-பூமி, மடவாள்-இளமையானவள். உய்ய-நற்கதியடைய. இது ஒரு கலிவிருத்தம்.

நல்லவர் மறிவி யாவினு நல்லது
வல்லறீர் தவத்தோர்க் கறிவானது
மல்லு லாவிய தொண்முடி மன்ன யான்
சொல்ல மெய்வ தன்று ணிவாய் தே! 2

மற்றவர்களால் விரும்பப் பெறுகின்ற ஒளிமிக்க முடியணிந்த மன்னா! நல்லவர்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்ற யாவினும் நல்லது. துன்பத்தைத் தீர்க்கக் கூடிய தவம் செய்வோருக்கு அறிவானது அதனையே நான் இப்போது சொல்லவுள்ளேன்.

மறுவி-மறிவி, விரும்பி, அடைந்த, வலலறீர்-அல்லல்+தீர்-துன்பத்தைத் தீர்க்கக்கூடிய, மல்லுலாவிய-மல்+அவாவிய-மற்றவர்களால் விரும்பப்பெற்ற, தொண்முடி-ஒண்முடி, ஒண்-ஒளிமிக்க, பிரகாசிக்கின்ற.

இன்ன தன்மையின் ஞானத்தினியற்கையா
என்னை வந்தடைந்தா ரிவ்வுலகினிற்
பின்னை வந்தடையா ரிறவா ரிதன்
றன்மை யாதெனி லாங்கது சாற்றுவாம். 3

முன் சொல்லப்பெற்ற ஞானத்தின் இயற்கைத் தன்மையினால், அந்த ஞானிகள் என்னை வந்து அடைந்தார்கள். இனி இவ்வுலகினில் மறுபடி வந்து பிறக்க மாட்டார்கள். இறக்கவும் மாட்டார்கள். இது எவ்வாறு என்பதைப் பற்றிக் கூறுகிறேன்.

பின்னை+வந்து+அடையார்+இறவார், யாது+எனில்+ஆங்கு+அது-யாதெனிலாங்கது, பின்னை-மறுபடி, இறவார்-சாகவும் மாட்டார். படைப்புக் காலத்தில் பிறவார். ஊழிக்காலத்தில் சாகார் என்றது.

மூதவா வென் குண மவை மூன்றினும்
பேதமாகிய பிற கிறுதி தன்னிலே
காதலால் வைப்பன் யான் கரு வக்கருவைப்
பூதம் யாவும் புலப்படு கின்றதே. 4

மூத்த தவத்தினுடைய அருச்சுனா! மூன்றுவிதப் பேதங்களாகிய இந்தப் பிரகிருதியில், விருப்பத்துடன் நான் கருவை வைக்கிறேன். அதனைப் பஞ்ச பூதங்கள் தங்கள் தங்கள் கருப்பையில் ஏற்கின்றன.

மூதவா-மூத்த+தவ=மூத்த தவத்தினுடையவா, பேதமாகி-வேறுபட்ட-சத்வரஜோதமோ குணம், என மூன்றாக வேறுபட்ட, புலப்படுத்தும்-ஏற்றுக் கொண்டு காட்டும்.

இந்த வண்ணத்தினாலிவ் வுலகிடை
வந்து யோனி யெல்லாம் வருவித்திடுந்
தந்தையா யிவை யீன்றளிக்கின்ற தா
யந்த மாமலர் மேலயனா மென்றே ! 5

இவ்வாறாக, இந்த உலகத்தில் வந்து, எல்லா யோனிகளையும் தோற்றுவித்து, தந்தையாய் இருந்து அந்த யோனிகளை எல்லாம் காப்பவர். பெரிய மலரின் மேல் அமர்ந்துள்ள பிர்மாவாகும்.

மாமலர் மேலயன்-பிரம்ம தேவர்

என்று மூன்று குண மென்றியம்பிய
மூன்று மூலப் பிற கிறுதி தன்னிலே
தோன்றியுள்ளன தொல் லறி வைப்பற்றி
யூன்றி நிற்ப தவற்றை யுணர்த்த வாம். 6

மூன்று குணங்கள் என்று சொல்லப்பெற்ற அவை, மூன்றும் மூலப்பிரகிருதியில்தான் தோன்றி இருக்கின்றன. அவ்வாறு தோன்றியுள்ள, தொல்லறிவைப் பற்றியும் அது எதைப்பற்றிக்கொண்டு நிற்கிறது என்பதைப் பற்றியும் உனக்கு உணர்த்துகிறேன்.

மூலப்பிரகிருதி-ஆதியில் உள்ள பிரகிருதி. தொல்லறிவை-இவ்வாறு ஆன்மாவைக் குறிப்பிடுகிறார். யூன்றி-பற்றிக்கொண்டு-பிறப்பு இறப்பை என்க.

சத்துவம் மிரசத் தாமத மென்
வுய்த்து வந்த பெயரை யுடையன்
பெத்து வந்து வளந் தருகிற்பன
மெய்து வந் தவற்றின் செயல்வேறு கேள். 7

சத்துவம், இராஜசம், தாமசம் என்னும் மூன்று பெயர்களுடன் வந்தவைகளாகும். இவ்வாறு பெயர் பெற்று வந்த அம்மூன்றும் எல்லாத்தத்துவங் களையும், தருவிப்பனவாகும். அவ்வாறு வந்த அவைகளின் செயல்கள் என்னவென்பதைச் சொல்கிறேன் கேட்பாயாக.

உய்த்து-பெற்றுக்கொண்டு, பெத்து-பெற்று, வளந்தருகிற்பன-எல்லா விளக்கங்களையும் தருவன.

பற்று மாசின்னையாற் பளிங்கொப்பது
உற்ற நல்லறிவான துண்டாக்குவ
தெற்று மின்ப மல்லாற் துன்ப மென்பது
சற்று மில்லது சத்துவ மாவதே. 8

பற்றுகின்ற ஆசை என்னும் குற்றமில்லாத காரணத்தால் தூய பளிங்கு போன்றது. நல்ல அறிவை மட்டுமே உண்டாக்குவது என்றும் இன்பமே அல்லாமல் துன்பம் என்பது கொஞ்சமும் இல்லாதது சத்துவம் ஆகும்.

மாசின்மை-குற்றம் இன்மை-குற்றம் என்பது ஆசை என்க, தெற்றும்-சற்றும்.

ஓது மாசையிலே பிறந்துள்ளது
தாது கற்புரை யுன்னிறஞ் சார்ந்தது
போது செய்வினை யோ டறிவாய் பின்னர்க்
கேதுவாய் விராசத மென்றதே. 9

இராசத குணமென்பது, தீயதென சொல்லக்கூடிய ஆசையினாலே பிறந்தது. அதன் தனித்தன்மையவது பேதமுடையது. அது செய்யும் வினையாவது பிறப்பு இறப்பை உண்டாக்குவது இதுவே இராசதம் ஆகும்.

தாதுகள்+புரை+உன்னி+நிறம் சார்ந்தது-தாது கற்புரை நிறஞ் சார்ந்தது. புரை-குற்றம்-தாதுகள்-முதன்மையானவைகள், நிறம்-வேறுபாடு.

குறி கொளாத மயக்கமுங் கோதிலா
நெறிகளான நிகழ்தலு நீத்திரை
செறி தலானது மென்றிவற்றாற் றிண்ண
மறிவை மாய்க்குமது தாமத மாவதே !

தாமச குணம் என்பது, மயக்கத்தைத் தருவது. குற்றமற்ற செயல்களைத் தெரிந்து கொள்ளாதது. நிறைந்த தூக்கத்தைத் தருவது. அறிவை நல்லன எவை என அறிய விடாமல் அழிப்பது. இவ்வாறு இதனை உறுதியாக அறிவாயாக.

குறிகொளாத-இதுவென்று அறிந்து கொள்ளாத, கோதிலா-குற்றமற்ற, நித்திரை-தூக்கம், செறிவு-அதிகம், திண்ணம்-உறுதியாக.

வேறு

வாறுஞ் சற்றுவ மற்றைவ் விரண் டையு மறைத்துத்
தாளு மற்றை யவ்விரண்டையுந் தம் குணந்தளைப்பின்
வீளுஞ் சற்றுவ தமங்களை யிராசதம் விழையி
னூழின மற்றிவை யிரண்டுந் தளர்ந் தோன்று மிக்குளவாம். 11

சத்துவ குணத்தின் தனமை அதிகமாகும் போது ரஜோ, தமோ குணங்கள் ஆகிய இரண்டும் மறைந்து நிற்கும். ராஜோ குணத்தின் தன்மை அதிகமாகும் போது சத்துவகுணமும், தமோகுணமும் கீழ்மையடையும். அதுபோலவே தமோகுணம் மிகும் போது மற்ற இரண்டு குணங்களாகிய சத்துவமும் ராஜோ குணமும் தளர்வுறும். இது விதியின் அடிப்படை.

வாளும்-வாழும், தாளும்-தாழும், வீளும்-வீழும், தளைப்பின்-தழைப்பின்-மிகுதியானால், மேன்மையடைந்தால், ஊழின-விதியின் வசப்பட்டன. இது ஒரு கலி நிறைத்துறை விருத்தம்.

உரை செயுஞ் சற்றுவ முன்பந் துய்த்திடு
மிரசத வினைகளோ டறிவை யார்த்திடும்
புரைசெய் திவ் வழுக்கையே பொருந்திப் போர்த்திடும்
தரைசெறி புகழினாய் தம் மென் மின்றதே. 12

உலகம் புகழும் பெருமையும் புகழுமுடைய அர்ச்சுனா! உயர்வாகச் சொல்லப்பெறுகின்ற சத்துவ குணமானது இன்பத்தைத் துய்க்கச் செய்யும், இரஜோ குணமானது குற்றங்களைச் செய்து, அதனையே சார்ந்திருந்து சத்துவகுணத்தையே மறைத்து விடும்.

புரை-குற்றம், அழுக்கு-குற்றம், போர்த்திடும்-மறைத்து விடும், தரைசெறி-பூவுலகம் நிறைந்த. இது ஒரு கலி விருத்தம்.

ஒத்து நல்லறிவு மிக்க யாதொரு பொழுதப் போது
சத்துவந் தளைத்தபோது தாங்களும் வினைகளே கொண்டு
யத்துவந்தாரை கூர லோப வந்துற்ற போது
மத்திம குணமே சால வளர்ந்த தென்றறி நீ மன்னா! 13

ராஜோ குணமானது, ஒத்துவந்து, நல்ல ஞானம் வந்த நேரம் எதுவோ அப்போது, சத்துவ குணம் ஓங்கி நின்ற அப்போது, செய்தே ஆகவேண்டும் என்ற நிலையில் உள்ள வினைகள் வந்து முன்னிற்க, லோபம் எனும் தாமஸ குணம் வந்து கூடுமேயானால் அப்போது இது சத்துவ குணமும், தமோ குணமும் சேர்ந்த நிலை, இப்போது மத்திம குணம் ஆகிய ரஜோகுணம் வந்தெய்தும் என்பதை மன்னவா நீ அறிவாயாக.

யத்துவந்து தாரை கூர-அடுத்து வந்து அறை கூவ, சால-மேலாக-வளர்ந்தது-வந்து நின்றது. இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

தக்கது தாகறென் றொன்றைத் தானறியாத போது
எக்கரு மங்கள் மாட்டுமிகழ்ச்சி யோடிருக்கும் போது
மொக்கு மெய் மயக்கத் தோடு முறக்கம் வந்துற்றபோது
மிக்கது தமமே யென்று விசைய நீ அறிய வேண்டும். 14

இச்செய்ல் செய்யத்தக்கதே, அல்லது செய்யத் தகாததே என அறிய இயலாதபோதும், எந்தச்

செயலையும் செய்ய விருப்பமில்லாது சோம்பல் மிகும் போதும், உடல் மயக்கமும் அசதியாகவும் இருக்கும் போதும், தூக்கம் வந்த போதும் தாமச குணம் மேலோங்கியது என்று விசயனே நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

இகழ்ச்சியோடு-விருப்பமில்லாமல், மெய் மயக்கம்-உடல் சோர்வும் மயக்கமும், மிக்கது-அதிகமானது.

தக்க சற்றுவமே நிகழ்ந்த போதிறந்தோர்
தெய்வ யோ னிகளிலே சார்வர்
மக்களிற் பிறப்பரி ராசத குணமே வளர்ந்த
போதுடம்பினைத் துறந்தோர்
மிக்கெழு தமமே விளைந்த போதிறந்தோர்
விலங்கு சாதி களிலே வீள்வ
ரொக்க மற்றி வற்றின் பலன் களுந்தெரிய
வுரைக்கின்றே னிவற்றை முணர் வாய். 15

உயர்ந்த சத்துவ குணம் மேலோங்கி இருக்கும் போது இறப்பவர்கள் தெய்வத்தன்மை வாய்ந்த யோனிகளிலே சேர்வார்கள். இராசத குணம் மேலோங்கிய போது இறப்போர் மானிடர்களில் பிறப்பார்கள். அதுபோலத் தாமச குணம் மிகுந்திருந்த போது இறப்பவர்கள் விலங்கு இனத்தில் வீழ்வார்கள். மேலும் இவற்றின் பலன்கள் இவ்வாறென உரைப்பேன் உணர்ந்து கொள்வாயாக.

இது ஒரு எழுசீரடி யாசிரிய விருத்தம்.

அருங் குணமாய சத்துவ பலமா மழுக்கற விராசத பலமாம்
பெருந்துய ருழத்தல் தமோபல மாகும் பேதமை பேசிய
முறையே

பொருந்திய விக்குணங்கள் மூன்றாலும் பூத சாலங்
கழுக்கெல்லாம்
வருந்திருவாய் ஞானமொடு லோப மயக்க மென்பர் றின்னன
வருமால். 16

குற்றமற்ற தூய்மையானது சத்துவ குணம், பெரிய துக்கத்தைத் தருவது ராசத குணமாகும். அறிவின்மை யாவது தமோ குணம். இவ்வாறு பொருந்திய இந்த குணங் களினால் உடல்களுக்கு வருவது என்னவெனில் ஞானம், ஆசை, மயக்கம் என்பர். ஞானம் வருவது சத்வ குணத்தால் எனவும் அஞ்ஞானம் வருவது தமோ குணம் எனவும், ஆசையைத் தருவது ராஜோ குணம் எனவும் கொள்க.

லோபம்-ஆசை, பூதாசாலம்-பூதங்களினால் உண்டாகிய ஜால வித்தை எனும் உடல், அழுக்கற-குற்றமற்ற.

சத்துவ மாந்தர் பரகதியடைவர் தமத்துள் ளோரதேகதி சார்வர்
மத்திம குணத்தோராயினர் நடுவின் மானிடப்பிறவி யாய்
வாழ்வர்
ரித்திற மாய வுருவமேவிகாரியான விகாரி என்ற வற்றை
மெய்த்திறனாக வறிந்தவ னறிந்த பொழுதிலே வீட்டின்ப
மடைந்தனர்.17

சத்துவ குணத்தை அடைந்தவர்கள் என்றும் சாந்தமான குணத்தையுடையவர்கள் ஆதலால் அவர்கள் பரகதி எனும் மோட்சத்தை அடைகிறார்கள். இராசத குணமுள்ளவர்கள் நடுநிலையாகிய, மத்திய லோக மெனும் இப்பூமியில் மானிடர்களாய்ப் பிறக்கிறார்கள். தமோ குணம் படைத்தவர்கள் இவ்விரண்டு நிலையையும் அடையாமல் தாழ்வர். இப்படியாக எடுக்கப்பட்ட உடலை விகாரி எனவும், நான் விகாரி, என்னை விகாரி எனவும் உண்மையை அறிந்தவர்கள், அவ்வாறு அறிந்து கொண்ட அந்த நேரத்திலேயே வீடுபேறு பெற்று இன்பம் அடைகிறார்கள்.

சத்துவ மாந்தர்-சத்துவ குணத்தை அடைந்தவர்கள், நடுவின்-மேலுலகமும் கீழுலகமும் அல்லாத நடுவிலான, விகாரி-விவகாரங்களுக்கு-செய்கைகளுக்கு-அதிகாரி ஆகியமையால் உடலை விகாரி என்பர். அவிகாரி-எதற்கும் காரணமாகாதவன். அதே கதி-அதே நிலை-அதாவது எவ்விதமான இருப்பிடமும் இல்லாத எனவும்-கீழான நிலையை அடைதல் எனவும் பொருள் கொள்ளலாம்.

உடம்பு டனிருந்தே யுரைத்த விக்குணங்கள்
மூன்றையு முள்ள வா றறிந்து
கடந்தவன் பிறப்பு மூப்பிறப் பாதியாகவே கட்டுரைக்கின்ற
விடம்புரை இடும்பை யாவையுங் கடந்து வீட்டின்பம்
விளைபவ னென்றான் றடங்
கடலிடையே வளர்ந்தவர் தமக்கு வேறிது தனஞ்செயன்
உரைத்தான் 18

கிடைத்த இந்த உடம்புடன் இருந்தவாறு, என்னால் சொல்லப்பெற்ற இந்த மூன்று குணங்களையும், உள்ளது உள்ளபடி அறிந்து கொண்டவன், பிறப்பு, மூப்பு, இறப்பு ஆகிய மூன்றையும் கடந்து, குற்றமுடைய துன்பங்கள் யாவற்றையும் கடந்து வீடுபேறு அடைகிறான் என திருப்பாற்கடலில் துயிலும் கண்ணன் கூறிட அவனிடம் தனஞ்செயன் மேலும் சிலவற்றைக் கூறினான்.

கடந்தவன்-நீக்கியவன், விடம்புரை இடும்பை-குற்றமுடைய துன்பங்கள், கடலிடை-பாற்கடலில்,

கண்ணிய லுலகிற் கடப்ப தரிதாய குணங்கண் கடந் துயர்ந்த
புண்ணிய ரியல்பு மவர்களை யறியுங் குறியையும் புகன்ற
ருளென்ன
வெண்ணிய வுலகு முலகில் வாழுயிரு மிருவினை
யாக்கையுமாகப்
பண்ணியு மழித்துமே விளையாடும் பரமன் வேறிவ்
வகைப்பணித்தான் 19

நல்ல தன்மையான இந்த உலகில், கடப்பதற்கு மிகவும் கடினமான இந்த மூன்று குணங்களையும் கடந்து உயர்ந்தவர்களின் இயல்பையும் அவ்வாறு கடந்தவர்கள் எவர் என்பதைக் கண்டறிவதற்கான அடையாளங் களையும் சொல்ல வேண்டும் எனக் கேட்டபோது, பெரியோர்களால் என்றும் நினைக்கப்பெறுகின்ற இவ்வுலகில் இருவினைகளின் பயனாகத் தோன்றக்கூடிய உடல்களை, உயிருடன் உண்டாக்கியும், பின்னர் அதை அழித்தும், அதனையே தன்னுடைய விளையாட்டாகவும் கொண்ட பரமனாகிய கண்ணன் மேலும் இவ்வாறு கூறினான்.

கண்ணிய-கண்ணியமான, நல்ல தன்மையதான, புண்ணியர்-புண்ணியங்களைச் செய்தவர். அறியுங்குறி-அறிந்து கொள்வதற்கான அடையாளம்.

வாய்மை யல்லாத குணமவை மூன்றின் காரிய மாய்
வருகின்ற
தூய்மையுந் தொழிலு மயக்கமு மென்று சொல்லியதுரை
யவை மூன்றுஞ்
செய்மய மென்றும் பெறாத போதிரங்கல் பெற்றபேர் மகிழ்தல்
செய்யாதான்றான்
மயலாகாக் குணங்க ளோடிருந்த தெய் வற்றினாற்
சலிப்பாக்கப் படாதான். 20

உயர்வானதான அந்தக் குணங்கள் மூன்றின், காரணங்களுக்கு காரியமாய் வருவன, தூய்மை, செயல் செய்தல், மயக்கம் ஆகியவை யாகும். விரும்பிய பொருள் கிடைக்காத போது வருத்தப்படுதல், ஏதேனும் ஒரு பொருளைப் பெற்றபோது மகிழ்ச்சி அடைதல், ஆகிய உணர்வுகளை அடையாதவன். இவ்வித மூன்று குணங்களிலும் ஆவல் கொண்டு பின் எவற்றினாலும் அதில் சலிப்படையான் என்க.

காரியமாய் வருகின்ற-காரணமின்றி காரியமில்லை ஆதலால் குணங்களின் காரணமாக வருகின்ற காரியங்கள் எனப்பொருள் கொள்ளப்பெறுகிறது. செய் மய மென்று-செய்ய வேண்டும் என்று-பெற வேண்டுமென்று விரும்பியபோது. இரங்கல்-வருத்தப்படுதல், சலிப்படைதல்-இன்பமே என்றும் நிலைத்தபோது அதில் ஒரு திகட்டல் எனும் விருப்பில்லாமை கொள்வது. இவ்வாறே துன்பத்திற்கும் ஆகும்.

மான மவ மானம் வருமின்ப மிடர் மண் பொன்
னான மகிழ் வப் பிரிய மன்பர் பகையானோ
ரூன வுரையோடு புகழுற்ற பொழுதுப் பா
னீன மொருகின்ற குணமானவை யிகழ்ந்தோன். 21

வருகின்ற புகழ்பெருமை, அவமானம், இன்பம், துன்பம், மண், பொன், மகிழ்ச்சி, நண்பர், பகைவ ரானோர் ஆகிய அனைத்தையும் சமமகாகக் கருதக் கூடியவனே குற்றம் எனப்பெறும் மூன்று குணங்களையும் கடந்தவனாவான்.

மானமவமானம்-மானம்+அவமானம். மின்ப மிடர்-இன்பம்+இடர்-துன்பம், புகழுற்றபொழுது-புகழப்பெற்ற போதும், ஊனவுரை-இகழ்ச்சி யாகப்பேசப்பட்டபோதும். இது ஒரு கலி விருத்தம்.

இப்பரிசினால் வருகுணங்களை யிகழ்ந்தே
மெப்பருமாய பெரு வீடு பெருகி ற்பர்
ரெப்பரிசி னாலு மிடையின்றி யெழுமன்ப
லொப்ப வரில்லாத வெனை யுன்னுமவர் கண்டாய். 22

இவ்வகையாக வருகின்ற குணங்களை வெறுத்து, உண்மையான நிலையாகிய உயர்நிலையை அடைவர். எந்தக் காரணத்தினாலும் இடையில் கைவிடாது, மேலே உயர்வடைந்து விட்ட என்னுடைய அன்பர்கள். ஒப்புமை கூற எவரும் இல்லாத என்னை நினைக்கிறவர்கள் எனத் தெரிந்து கொள்வாயாக.

ஒளியா தென்றும் யாவற்கு மியானே யுணர்த்தி வருத லாற்
கிளியா வறிவுங் கெடா வீடுங் கேடிலின்ப மானதுவு
மளியா வரமு மென்னுள்ளே யுள யுளவாகா நின்றன
வென்றான்
சுளியா நின்ற பெரு வெள்ளத் திடையே பண்டு துயில்
கொண்டான்.23

மறைக்காமல், என்றைக்கும் யாவர்க்கும் நானே, இவைகளை, உணரச்செய்து கொண்டிருக்கிறேன். ஆகையால், கேடு இல்லாத ஞானமும், கேடுஇல்லாத வீடுபேறும், குறையாத இன்பத்தையும், அழியாத வரங்களும் என்னுள்ளே இருக்கின்றன என்றான். அன்று ஒருநாள் யுகமானது அழிகின்றபோது ஏற்பட்ட சுழித்தலுடன் கூடிய பெருவெள்ளத்தில் மூழ்காது ஆலிலைமேல் பள்ளிகொண்டவனாகிய கண்ணன்.

ஒளியாதென்றும்-மறைக்காது என்றும், கிளியா வறிவு-இளியா அறிவு-தூய்மையான அறிவு-ஞானம். இது ஒரு அறுசீரடியாசிரிய விருத்தம்.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–14

குணரத்ரய விபாக யோகம்

1. பகவான் சொல்லுகிறான்:- எதை அறிந்து எல்லா முனிவர்களும் இவ்வுலகத்திலேயே ஈடேற்றம் பெற்றிருக் கிறார்களோ, அந்த ஞானங்களிலேயே, உயர்ந்த பரம ஞானத்தை மறுபடி உரைக்கின்றேன்.

2. இந்த ஞானத்தை அடைந்து, அதனால் என்னியல்பு பெற்றோர், படைப்புக்காலத்தில் பிறவார். ஊழியிலும் சாகமாட்டார்.

3. பாரதா! பெரிய பரப்பிர்மமே எனக் காதாரம் அதில் நான் கருத்தரிக்கிறேன். எல்லா உயிர்களும் அதிலேதான் பிறக்கின்றன.

4. குந்தியின் மகனே! பலவிதமான பிறப்பிடங் களிலும் எந்த உடல்கள்-வடிவங்கள்-பிராணிகள் உண்டாகின்றனவோ, அவை எல்லாவற்றிற்கும், பிரக்கிருதியே பிறப்பிடம்-கருத்தரிக்கும் தாய்-நான் விதை அளிக்கும் தந்தை.

5. பெருந்தோளாய்! சத்வம், ரஜஸ், தமஸ் இந்த குணங்கள் பிரகிருதியில் எழுவன. இவை உடலில் அழிவற்ற ஆத்மாவைப் பிணைக்கின்றன.

6. பாவமற்றவனே! விருப்ப இயல்புடையது ரஜோ குணம். அவாவின் சேர்க்கையால் பிறப்பது என்று அறிந்துகொள். அது ஆத்மாவைத் தொழிற் சேர்க்கையால் கட்டுகிறது.

8. பாரதா! உடற்பற்றுடைய எல்லாரையும், மயக்கக் கூடிய தமோ குணமோ, அஞ்ஞானத்திலிருந்து உண்டாவ தாகத் தெரிந்துகொள். அது தவறுதலாலும்,சோம்பலாலும், உறக்கத்தாலும் கட்டுப்படுத்துகிறது.

9. பாரதா! சத்வம் இன்பத்திலே பற்றுதல் விளைவிக்கிறது. ரஜோ குணம் செய்கையில் பற்றுறுத்து கிறது. தமோ குணம் ஞானத்தைச சூழ்ந்து ஜீவனை மயக்கத்தில் பிணிக்கிறது.

10. பாரதா! ரஜோ குணத்தையும், தமோ குணத்தையும் அடக்கி சத்வம் இயல்பாகிறது. சத்வத்தையும் தமோ குணத்தையும் அடக்கி ரஜோ குணம் நிற்கிறது. அங்ஙனமே சத்துவத்தையும், ரஜோ குணத்தையும் அடக்கி தமஸ் மிஞ்சுகிறது.

11. எப்போது இந்த உடலில் எல்லா வாயில்களிலும் ஞான ஒளி பிறக்கிறதோ, அப்போது சத்வ குணம் வளர்ச்சி பெற்றதென்று அறியக்கடவாய்.

12. பாரதக்காளையே! ரஜோ குணம் மிகைப் படுவதிலிருந்து, அவா, முயற்சி, தொழிலெடுப்பு, அமைதி யின்மை, விருப்பம் இவை தோன்றுகின்றன.

13. குருகுலச் செல்வமே! தமோ குணம் ஓங்குமிடத்தே ஒளியின்மை, முயற்சியின்மை, தவறுதல், மயக்கம் இவை பிறக்கின்றன,

14. எப்போது மனிதன் சத்வம் ஓங்கி நிற்கையிலே இறக்கிறானோ, அப்போது மாசற்றவனாகிய உத்தம ஞானிகளின், களங்கமற்ற உலகங்களை அடைகிறான்.

15. ரஜோ குணத்தில் இறப்போன், கர்மப் பற்றுடை யோரிடையே பிறக்கிறான். அவ்வாறே தமஸில் இறப்போன், மூட கர்ப்பங்களில் தோன்றுகிறான்.

16. நற்செயல்களின் பலனே சத்வ இயல்புடைய நிர்மலத்தன்மை என்று கூறுவர். ரஜோ குணத்தின் பயன் துன்பம். தமோ குணத்தின் பயன் அறிவின்மை.

17. சத்வத்திலிருந்து ஞானம் பிறக்கிறது. ரஜோ குணத்தினின்றும் அவாவும், தமோ குணத்திலிருந்து தவறுதலும், மயக்கமும், அஞ்ஞானமும் தோன்றுகின்றன.

18. சத்வ குணத்தில் நிற்போர் மேலேறுகிறார்கள். ரஜோ குணமுடையோர் இடையே நிற்கின்றார்கள் மிகவும் இழிய குணங்களும் செயல்களுமுடையோராய்த் தாமஸர் கீழே செல்வர்.

19. எப்போது பார்ப்பவன் குணங்களைத் தவிர வேறான கர்த்தா-செயலைச் செய்பவன்-என்று பார்ப்பதில்லையோ குணங்களுக்கு மேலுள்ள பொருளை-பரமாத்வை- அறிகின்றானோ, அவன் என் இயல்பை அறிவான்.

20. உடம்பிலே பிறக்கும் இந்த மூன்று குணங் களையும் கடந்து, பிறப்பு, மூப்பு, சாவு, வருத்தம் என்பன வற்றினின்றும் விடுபட்டோன் அமிர்தநிலை அடைகிறான்.

21. அர்ச்சுனன் சொல்கிறான்! இறைவனே! மூன்று குணங்களையும் கடந்தோன் என்ன அடையாளங்களை யுடையோன்? எங்ஙனம் ஒழுகுவான்? இந்த மூன்று குணங்களையும் அவன் எங்ஙனம் கடக்கிறான்?

22. பகவான் சொல்லுகிறான்! பாண்டவா! ஒளி, தொழில், மயக்கம் இவை தோன்றும்போது, இவற்றைப் பகைத்திடான். நீங்கிய போது இவற்றை விரும்பான்.

23. புறக்கணித்தான் போலே இருப்பான். குணங்களால் சலிப்படையான். குணங்கள் சுழல்கின்றன என்று எவன் எண்ணி இருக்கிறானோ, அவன் அதிலிருந்து நிலைகுலைவதில்லை.

24. தன்னிலை உணர்ந்து நிற்பவன், துன்பத்தையும், இன்பத்தையும் நிகராகக் கொண்டவன். ஓட்டையும், கல்லையும், பொன்னையும் சமமாகக் காண்பான். இனியவரிடத்தும், இன்னாதவரிடத்தும், சமானமாக நடக்கும் தீரன். இகழ்ச்சியையும், புகழ்ச்சியையும் நிகராகக் கணிப்பான்.

25. மானத்தையும், அவமானத்தையும் நிகராகக் கருதுவான். நண்பர்களிடத்தும், பகைவர்களிடத்தும் நடுநிலைமை பூண்டான். எல்லாவிதத் தொழில் எடுப்புகளையும் துறந்தான். அவனே குணங்களைக் கடந்தான் என்று சொல்லப்படுகிறான்.

26. மேலும் எவன் வேறுபாடில்லாத, பக்தி யோகத்தால் என்னை வழிபடுகின்றானோ, அவன் இந்த குணங்களைக் கடந்து பிர்மத் தன்மையை பெறத்தகுவான்.

27. ஏனெனில் அழிவற்றதான பிர்மத்திற்கும் சாவற்ற நிலைக்கும், என்றும் நிலைக்கும் அறத்துக்கும் தனிமை இன்பத்திற்கும் நானே உறைவிடம்.

விளக்கவுரை

பகவத்கீதையின் இநத பதினான்காவது அத்தியாயத்திற்கு, குணத்ரய விபாகயோகம்-எனத் தலைப்பிட்டு இருபத்து ஏழு சுலோகங்களை இயற்றியுள்ளார். சுவடி ஆசிரியர் இநத அத்தியாயத்திற்கு, குணதீதவத்தியாயம் எனும் தலைப்பிட்டு இருபத்து மூன்று விருத்தங்களைப் பாடியுள்ளார்.

விருத்தம் 1. இவ்விருத்தத்தில் கண்ணனை, இலக்குமி தேவியுடனும் பூதேவியுடனும் கூடி இருப்பவன் என வாழ்த்துகிறார். பின்னர் செய்திகளைச் சொல்லத் தொடங்குகிறார். இப்படி ஒரு வாழ்த்து ஏதும் வியாசரால் கூறப்பெறவில்லை.

விருத்தம் 2. இதில் கண்ணன் அருச்சுனனைப் புகழ்ந்துரைக்கும் செய்தியுள்ளது. இதுவும் வியாசரில் இல்லாதது.

விருத்தம் 3. ஞானத்தின் இயற்கையான தன்மையினால் என்னை வந்து அடைந்த ஞானிகள், இறக்கவும் மாட்டார்கள், மறுபடி பிறக்கவும் மாட்டார்கள். இது எப்படி என்பதைக் கூறுகிறேன் எனக் கண்ணன் அருச்சுனனிடம் கூறுகிறான்.

வியாசரின் முதல் சுலோகத்தில் ஞானங்களில் உயர்ந்த பரம ஞானத்தைப் பற்றிக் கூறுவதாக உள்ளது. இப்படிப்பட்ட ஞானத்தை அடைந்தவர்கள் படைப்புக் காலத்தில் பிறப்பதும் அழிவுக் காலத்தில் இறப்பதும் இல்லை எனக் கண்ணன் கூறுகிறான்.

விருத்தம் 4. இந்தப் பிரகிருதியில் கருவை வைப்பது நான். அதனை வியாசர் தமது நான்காவது சுலோகத்தில், எல்லாவற்றிற்கும் பிரக்கிருதியே பிறப்பிடம் நான் விதை

அளிக்கும் தந்தை எனக் கண்ணன் கூறுகிறான். இதில் ஏதும் பெரிய வேறுபாடு இல்லை.

விருத்தம் 5. எல்லா யோனிகளையும் காப்பாற்றும் தந்தை எனக் கண்ணன் கூறுகிறான். இது முன் சுலோகத்தில் வியாசரால் கூறப்பெற்றதே!

விருத்தம் 6. மூன்று குணங்கள் பிரகிருதியைப் பற்றிக்கொண்டு நிற்பதைப் பற்றிக் கூறுகிறேன் என்கிறார்ன் கண்ணன்.

விருத்தம் 7. இராஜசம், தாமசம், சத்துவம் என்னும் மூன்றும் எவ்வாறு தத்துவங்களைத் தருவிக்கின்றன எனவும், அவைகளின் செயல்கள் என்னவென்பதையும் கூறுவதாக உள்ளது. இவ்வாறின்றி வியாசர் தொடர்ச்சியாகக் கண்ணன் வாயிலாகச் செய்திகளைத் தொகுத்துக் கூறத்தொடங்கியுள்ளார்.

விருத்தம் 8. சத்துவ குணத்தின் தன்மை பற்றிக் கூறப்பெறுகிறது. வியாசரின் ஆறாவது சுலோகத்தில் இச்செய்தி உள்ளது.

விருத்தம் 9. இராசத குணத்தைப் பற்றி கூறப் பெறுகிறது. இது வியாசரின் ஏழாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 10. தாமஸ குணத்தின் தன்மை கூறப் பெறுகிறது. இது வியாசரின் எட்டாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 11. ஒரு குணம் மேலோங்கும் போது மற்ற இரண்டு குணங்களும் அதன் கீழ் அடங்கும் தன்மை பற்றிக் கூறப்பெற்றுள்ளது. இதில் உள்ளவாறே வியாசரின் பத்தாவது சுலோகத்தில் தெளிவாக உள்ளது.

விருத்தம் 12. மீண்டும் சத்துவ, ரஜோ குணங்கள் பற்றிய செய்தி.

விருத்தம் 13. இங்கும் மீண்டும் எந்த குணம் மேலோங்கும்போது எவ்வகையாகச் செயல்படும் எனப்து பற்றியே உள்ளது.

விருத்தம் 14. முன் விருத்தத்தில் சொல்லப்பெற்றதன் தொடர்ச்சி.

விருத்தம் 15. எந்த குணம் மேலோங்கி இருக்கும் இறப்பவர்கள எப்படிப்பட்ட நிலையை அடைகிறார்கள் என்பது பற்றிக் கூறப்பெற்றுள்ளது. இச்செய்தி வியாசரின் பதினைந்தாவது சுலோகத்தில் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 16. மீண்டும் மூன்று குணங்களின் தன்மை கூறப்பெறுகிறது. இவை மறுபடியும் வியாசரால் தமது 11, 12, 13 ஆகிய சுலோகங்களில் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 17. மூன்று குணத்தவர்கள் அடையும் நிலை, மோட்சம், மானிடர், தாழ்வான பிறவி, விகாரி, அவிகாரி உடலை உடையவன், உடல் இல்லாதவன் பற்றிக் கூறப்பெறுகிறது. விகாரி, அவிகாரி என்ற சொற்கள் வியாசரில் இல்லை. சுலோகம் பதினெட்டில் மேலே காணும் செய்திகள் உள்ளன.

விருத்தம் 18. கிடைத்த உடலுடன் இருந்து கொண்டு, மூன்று குணங்களைப் பற்றியும் அறிபவர்கள் பிறப்பு, மூப்பு, இறப்பு இன்றி வீடு பேறு அடைவதாகக் கண்ணன் கூறுவது. இச்செய்தி வியாசரின் 19, 20 ஆகிய சுலோகங்களில் உள்ளது.

விருத்தம் 19. மூன்று குணங்களையும் எவ்வாறு தெரிந்து கொள்வது. அதற்கான அடையாளங்கள் எவை என அருச்சுனன் கேட்பது. கண்ணன் சொல்லத்

தொடங்கினான். இதில் ஏதும் மாற்றம் இல்லாதவடி வியாசரின் இருபத்தோறாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 20. மூன்று குணங்களின் காரண காரியங்கள் பற்றியது. இதைப்பற்றி நல்ல விளக்கமாக வியாசர் தமது இருபத்திரண்டு மற்றும் இருபத்து மூன்றாவது சுலோகங்களில் கூறியுள்ளார்.

விருத்தம் 21. குணங்களைக் கடந்தவன் யார் என்பது பற்றிக் கூறப்பெற்றுள்ளது. இச்செய்தி வியாசரின் 24, 25 ஆகிய சுலோகங்களில் உள்ளன.

விருத்தம் 22. குணங்களை வெறுத்தவர் அடையும் உயர்நிலை பற்றி கூறப்பெறுகிறது. இச்செய்தி வியாசரின் 26வது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 23. கண்ணன் தன்னுள்ளே ஞானம், வீடுபேறு இன்பம், வரங்கள் ஆகியவை எல்லாம் மறைக்கப் பெறாமல் யாவர்க்கும் தானே சொல்வதாகவும் உள்ளது. நிறைவாக ஆலிலை மேல் கண்ணன் துயில் கொண்ட செய்தியும் உள்ளது. இவைகளைக் கொஞ்சம் சுருக்கமாக வியாசர் தமது நிறைவுச் சுலோகமாகிய 27ல் கூறியுள்ளார்.

இவ்வத்தியாயத்தில் வியாசரால் கூறப்பெற்றுள்ள செய்திகளைச் சில விருத்தங்களில் விரிவாகவும் சிலவற்றில் சுருக்கமாகவும் சுவடி ஆசிரியர் கூறியுள்ளார்.

பரப்பிர்மமே எனக்கு ஆதாரம்-அதில் நான் கருத்தரிக்கிறேன். அதிலேயே தான் எல்லா உயிர்களும் பிறப்பதாகக் கண்ணன் கூறுகிறான். எனவே பிறப்பு என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானது எனக் கூறப்பெற்றள்ளது. சுலோகம்-3.

மூன்று குணங்களைப் பற்றி மீண்டும் மீண்டும் வியாசர் விளக்கமாகக் கூறுகிறார். சுலோகம் 6, 7, 8, 9 ஆகியன. சத்வகுணம் பிறக்கும் காலத்தில் இந்த உடலின் எல்லா வாயில்களிலும் ஞான ஒளி பிறக்கிறது. சுலோகம்-11, மேலும் தொடர்ந்து 12வது சுலோகத்தில் ரஜோ குணம், சுலோகம்-13ல் தமோ குணம் ஆகியவை மேலுற்று போது பெறக்கூடியநிலையைப் பற்றி நல்ல விளக்கமாகக் கூறப்பெற்றுள்ளது. சுலோகம் -22ல் மூன்று குணங்களின் தன்மைகளிலும் விருப்பமும் இருக்கக் கூடாது வெறுத்தலும் ஆகாது எனக் கூறப்பெற்றிருக்கும் செய்தி.

இருபத்தாறாவது சுலோகத்தில் பக்தி யோகத்தில் நின்று வழிபடுவதே, குணங்களைக் கடப்பதற்கான வழி எனவும், அவ்வாறு வழிபடுபவனே பிர்மத்தை அடையத் தகுந்தவன் எனக் கூறப்பெறுகிறது.

மேலே கூறப்பெற்ற செய்திகள் சிறப்பாக வியாசரால் இவ்வத்தியாயத்தில் கூறப்பெற்றுள்ளவையாகும்.

பதினைந்தாவது அத்தியாயம்

பிறவஞ்சவத்தியாயம்

சாயையன்ன வெவ் வினை தளை யறுக்க வோ தகவிற்
பேயை இன்னுயிர் செகுக்க வோ பிள்ளையாய் வளந்தான்
வேயை யொன்றிய வரிசிலை விசயற்கு மீள
மாயை தன்னை யோர்மர மொக்க வருணிக்க லுற்றான். 1

பெண்ணெனப் பெறாத பேயாகிய பூதகியைக் கொல்வதற்காக கோகுலத்தில் பிள்ளையாக வளர்ந்த கண்ணன், மூங்கிலைக் கொண்டு கட்டப்பெற்றதாகிய வில்லையுடைய விசயனுக்கு, நிழலைப் போலத் தொடர்ந்துவரக் கூடிய இருவினைகளையும் அறுக்க வேண்டிய மாயை என்பது என்னவென்பதை ஒரு மரத்தை உதாரணமாகக் காட்டி விளக்கத்தொடங்கினான்.

சாயை-நிழல், வெவ்வினை-கொடிய இருவினை, செகுக்க-அழிக்க, வேய்-மூங்கில், வரிசிலை-இழுத்துக் கட்டப்பெற்றவில், மரமொக்க-மரத்திற்குச் சமமாக, தகவில்-தகுதியற்ற, இது ஒரு கலித்துறை விருத்தம்.

வேறு

வேர் மேலது தலை கீழது வீவில்லது வேதத்
தேர் மேவிய நிலை மேவியதி யாரும் புகழ்தலினானா
லார் மேவிவிய வசுவத்தம தெனவே யாதனின்
பேர்மேவிய பெருமையை சேய பிறவிப் பெருமரமே. 2

வேர் பாகம் மேலே உள்ளது. கிளைகள் கீழேயுள்ளன. ஆனாலும் அழிவில்லாதது. வேதம் எனும் அழகான இலைகளுடன் கூடியது. எல்லோராலும் புகழப் படுவதினால் மட்டும் அல்லாது தானே புகழ்மிக்க தாய் உள்ளது. அதுவே அசுவத்தாமம் என்பது. அதுவே பெருமைமிக்க பிறவி எனும் பெரியமரம்.

விவில்லது-வீழ்ச்சி இல்லாதது-உயர்வானது, வேதத்தேர் மேவிய நிலை-வேதம் எனும் இலைகள் நிறைந்த நிலையானது. அசுவத்தாமம்-இன்று உள்ள ஒன்று நாளைய சூரிய உதயம் வரை இருக்கும் என்பதற்கான உறுதித் தன்மை இல்லாத ஒன்று, இது உடலுக்கு ஆகி வந்தது-நிலையாமையைக் குறித்தது. இது ஒரு கலி விருத்தம்.

இவ்வா றிதனியல்பாகிய வகை யாதெனி லியாதும்
ஒவ்வா வகைபெரிதாகிய பிரமத் தொரு விடையே
வைவாள் வலியுழலாதவா வான் முறையே வானமுறையே
மெய்வான் முறை வரு மாதலின் மேலது வேரே ! 3

கூர்மையான வாளினாலே பகைவரை வெல்லக் கூடிய அருச்சுனா! இவ்வாறு இதனுடைய இயல்பு என்ன வென்பதைக் கூறுகிறேன் கேள்! ஒப்புமை கூற இயலாத அளவுக்குப் பெரியதாகிய பிர்மத்தின் ஒரு இடத்திலே, அந்தப் பிர்மத்தினுடைய விதிகளின்படி ஆகாயத்தின் தன்மையான விதிப்படி உண்மையான ஆகாசமெனும் மாயையின் தன்மை மேலானது எனவே மேலே வேர் என்று சொல்லப்பெறுகிறது.

பிர்மத்தின் ஆகாயத்தின் சேர்க்கையாலே ஆகாயம் மேம்பட்டது. ஆதலால் அது மாயை எனப்பெறுகிறது. இதன் தோற்றம் தலைகீழ் வேர் மேல் என ஆயிற்று என்பது விளக்கம்.

ஒவ்வா வகை-ஒப்புமை கூற இயலாதபடி, வை வாள் வலி-வாளின் வலிமையினால், உழலாத-தோல்வியடையாத.

ஊழால் வரு முலகாகிய முயிராகியு மேழலாற்
கீழான தலையாய் வருமூவ றீறிடை கீழாய்ச்
சூழாகிய பிறவித் தொட ரொரு காலமு மடையப்
பாழாம் வகை யழியாமை லழியாத தோர் படியே! 4

விதியின் காரணமாக, இம்மாயை உலகங்களாகியும், உயிர்களாகியும், அழகாக, தலை கீழாக வருகின்றது. மேல், நடு, கீழ் என மூன்றும் மாயைக்கு கீழே இருக்காமல், சுழல் கின்ற காரணத்தால், பாழாகிப் போகும்படியும் இல்லாது, அழியாததாயும் ஒப்பில்லாத குணமுடையதாகவும், இந்த அசுவத்தாமம் தன்னுடைய இயற்கைக் குணத்துடன் நிற்கிறது.

ஊழ்-விதி, மேழாற் கீழான-தலைகீழாக, மூவறீறிடை-மேல்-நடு-கீழ் எனும் மூன்றும் இடையே. பாழாம் வகை-பாழாகாமல்-வீணாகமல்.

கரு நாண்முதல் வினையாவது வளர் காதல் செய்தலினா
லரு நான் மறை யவையே யிலை யாவை யாமென வறிநீ
வருநாள் களிலொரு நாள்பெறும் வகை வின்மையினாலே
பெரு நாடறிய சுவத்தம தென லாயது பேரே ! 5

கர்ப்பமடைந்த நாள் முதல் கருவானது வளர்வதி னாலே அக்கருவோடு கூட ஆசையின் காரணமாக, அதுவே நான்கு வேதங்களாகிய இலைகள் ஆகின. இதுவே அந்தப் பிறவியாகும் என்பதையும் நீ அறிவாயாக! வரக்கூடிய நாட்களில் ஒருநாளைக் கூட முழுமையாகப் பெற்றிருக்காத காரணத்தினால், இந்த யுகத்தில் உள்ளோர் அதனை அசுவத்தமம் என்று பெயரிட்டுக் கூறுகிறார்கள்.

கருநாண்-கர்ப்பமடைந்த நாள், காதல் செய்தலினால்-ஆசையின் காரணமாக, பெருநாடு-யுகம்.

மற்றிப்படி நிகழ்கின்ற இம்மாய மரமிதனின்
பெற்றிற் திறமிது வல்லது பிறிதின்மையினாலே
யுற்றிப்படி யறிவாய் பொருளல்லாவு முணர்ந்தா
ரிற்றிற் பெருமானின் றிற மின்னுஞ் சிலவுள கேள்.6

மேலும், இவ்வாறாக இருக்கின்ற இந்த மாயை என்னும் மரத்தின் இயற்கைத் தன்மை இதனைத் தவிர வேறொன்றும் இல்லை என்பதினாலே, இதனை உள்ளது உள்ளபடி, அறிந்து, அதன் பொருளை எல்லாம் முழுவதுமாய் உணர்ந்தவர்கள் எவரும் இல்லாததால், அந்த பெருமானாகிய பிர்மத்தின் தன்மை மேலும் சில உள்ளன. அவற்றையும் சொல்கிறேன் கேள் !

இற்றிற்-இல்லாததால், பெருமானின்றிறம்-பெருமானின் திறம்-அந்தப் பரபிர்மத்தின் தன்மை என்றது.

கண்ணே என வனையா யாய்பல பிறவிக் கதி வழியே
மண்ணே முதல் கீழாமுலகிடையே வளர்வனவும்
விண்ணே முதல் மேலாமுல கிடையே வனவு
மெண்ணேயறிய பவமாகிய பனையா லிசை தருவே! 7

என் இரு கண்களுக்கு ஒப்பான அருச்சுனா! பல பிறவிகள் எனும் முறை வழியாக, மண்ணுலகில் பிறந்து வளர்கின்றவைகளும், வானுலகத்திடையே இருப்பவை களும், எண்ணிக்கையில் பெருகியதாகிய பனை மரத்திற்கு ஒப்பானவைகளாகும்.

பிறவிக்கதி-பிறவிக்குண்டான முறைமை, எண்ணே யறிய-எண்ணிக்கையில் இவ்வளவுதான் என, அறியப்பெற்ற- எண்பத்து நான்கு லட்சம் பிறவிகள், என்பர்-தேவர்கள்-14, மனிதர்கள்-9, விலங்குகள்-10, பறவைகள்-10, நீர்வாழ்வன-10, ஊர்வன-11, தாவரங்கள்-20, ஆகக் கூடுதல் 84 லட்சம் என்க. எண்கள் லட்சத்தைக் குறிப்பன-நாநா சீவவாதக் கட்டளை-பக்-272.

நெறியால் வரும் விளையோ பல நிலமா மிடையே
யறியாமை யோடு வீழ் தவிவோர் கீழினுமுளதாம்
பிறியா தெழு குணமாகிய பெரு நீர்மையின் வளரும்
பொறியாகிய விவையே தளிர் போன் மேயதுபொலிவே.8

செய்யக்கூடிய செயல்களின் முறையினால் வரக் கூடிய வினைகள் பலவாகும். இக்கருமமே நிலமாகும். அறியாமை எனும் அஞ்ஞானத்தின் காரணமாக வேர்கள் கீழேயும், (விழுவதால் வேர் மேலே உள்ளது எனவாகியது) என்றும் நீங்காது எழக்கூடிய குணங்கள் எனும் நீர் அங்கு இருந்ததன் காரணமாகத் தளிர்களாகிய ஐம்பொறிகளும் துளிர்த்து வளர்ந்து பரவியதாக விளங்குகின்றது.

வினை என்பது நிலம், அஞ்ஞானம் என்பது வேர். இது கீழ்நோக்கிச் செல்வது, குணங்கள்-நீர். இவை இருப்பதால் துளிர்க்கிறது-இத்துளிர்கள் ஐம்பொறிகளாகக் கூறப்பெற்றுள்ளது.

கனவுந் திகழ் கழுதாழியின் மிரு கந்திரு நகரு
மென வந்தழித லினாருவது வின்றி முன்யாது
முன வந்திடு முதனாளொடு முடிவின் மையினாலே
தன தந்தமு முதலுந் தெரிதர வில்லது தானே ! 9

கனவாகவும், கானல் நீராகவும உள்ளது போன்று வந்து அழிவதினாலே, இதற்கு முன்னதாக எந்த உருவமு மில்லாமல் முன்னே உண்டாகி வந்து, முதல் நாளும் மற்றும் அதனுடைய முடிவான நாளும் இல்லாததினாலே, அதற்கு முதலும் இல்லை முடிவும் இல்லை எனத் தெரிந்து கொள்வாயாக.

கழுதாழி-கானல்நீர், தனதந்தமுதமுதலுந்-தனது+அந்தமும்+முதலும்-முடிவும் தொடக்கமும்.

மந்திர மாய விந்த மரத்தினைத் துறவென்கிற
தந்திர வாழால் வெட்டித் தற்பரமாகி நின்றே
இந்திர சால மென்ன யாவு மென்னிடையே காட்டு
மந்த மில்லா வென்னை யடைகையே
யடுப்பதாய்யா. 10

மந்திரம் போன்ற மாயையாகிற இந்த பிறவி எனும் மரத்தை, துறவு என்கிற தந்திரமான ஒரு வாளினால் வெட்டி, பிர்மமாகி யோகத்தில் நின்று- இந்திர ஜாலத்தைப் போல எல்லாவற்றையும் என்னிடத்திலே இருப்பதைப் போல காட்டுகின்ற, என்றும் முடிவு என்பது இல்லாத என்னை வந்து அடைவதே செய்யக்கூடிய நற்செயல் அய்யா!

மந்திர மாய மரம்-பொய்யான தோற்றமுள்ள மரம். தந்திர வாளால்-மந்திரத்தை வெல்வது தந்திரம் என அறிக. வாழால்-வாளால். தற்பரமாகி-தானே பரப்பிர்மமாகி, இந்திர சாலம்-இல்லாத ஒன்றை தனது சக்தியால் இருப்பது போலக் காட்டும் திறன் கொண்டவன். இநதிரன். எனவே அது இந்திரசாலம் ஆயிற்று. இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

துன்னிய வாசை காமங் கடந்த வாக காணத் தோன்று
மென்னுரு வியற்கை கேட்கிலி யாவையும் காட்டுகின்ற
மன்னிய ஒளி கண்காணா வகையதாய் வந்து சேர்ந்தார்
பின்னிய லவேறொன் றாகப் பெற்றியாய் என்னென்று பேசும்.11

மேல் நின்றதாகிய ஆசை, காமம் ஆகியவைகளைக் கடந்தவர்கள் காணும்படியாக உள்ள என்னுடைய பேருருவின் இயற்கைத் தன்மையை கேட்பாயாகில், எல்லாவற்றையும் காட்டுகின்றதாகிய ஒளியினையுடைய சூரியன், சந்திரன், தீ ஆகியவற்றால் கூட என்னைக் காட்ட இயலாதவனான என்னை வந்து அடைந்தவர்கள், மேலும் வேறு எதையும் பெறவேண்டியதில்லை என்னும் படியாக எல்லாவற்றையும் பெற்று என்னியல்பை அடைகின்றார்கள்.

மன்னிய ஒளி-மண்ணில் உள்ள அனைத்தையும் கண்களுக்குத் தெரியும்படி காட்டக்கூடிய ஒளி, மென்னுரு-என்+உரு=என்னுரு= என் உருவம்.

குடந்தோறும் தோன்றுகின்ற வாகாயமுங் குலைதற் கொப்ப
தடம்புன றோறுந் தோன்றுஞ் சந்திரன் றானுமென்ன
வுடம்புக டோறும் வேறா யுயிரென நின்றே யிந்த
விடம்படு புலன்களாறு மியல்பினி யியற்றுவேனான். 12

ஆகாயம் ஒன்றே யாயினும், நீர் நிரப்பப்பெற்ற குடங்களிலெல்லாம் தனித்தனியே அது காணப் படுவதைப் போலவும், குளங்களிலெல்லாம் தோன்றக் கூடிய சந்திரனைப் போலவும், ஒவ்வொரு உடம்பிலும் வெவ்வேறு உயிராய் நின்று, குற்றமுடைய இந்த ஐம்புலன்கள் செய்யும் செயல் என்னவென்பதை இனி நான் கூறுகிறேன்.

குடந்தோறும்-குடங்கள் ஒவ்வொன்றிலும், குலைதற்-நீர் இருந்தால் தோன்றும்-இல்லாவிடில் தெரியாது என்பது. தடம்புன-தடம்+புனல்-குளம்-புனல்-நீர், விடம்படு- குற்றம் நிறைந்த, யாற்றுவேன்-கூறுவேன்.

பூக்கமழ் நாற்றங்கொண்டு பொருவளி போகுமாப் போற்
றீக்கனல் கின்ற வேலோய் சீவன் என்கின்ற சீரோன்
னாக்கையை யெய்தும் போது மதனை விட்டேகும் போதும்
போக்கரிய தாய வாறு புலன்களைக் கொண்டுபோ மால். 13

காற்றானது தான் போகும் வழியில் உள்ள பூக்களிலிருந்து பூக்களை அங்கேயே விட்டு விட்டு வாசனையை மட்டும் எடுத்துக்கொண்டு தன்வழியே போவதைப் போல, உயிரானது உடலை வந்து அடையும்போதும் பின் அதனை விட்டு நீங்கும் போதும் எவ்வாறு போயிற்று எங்கே போயிற்று என்று அறிந்து கொள்ள முடியாதபடி ஐம்புலன்களையும் தன்னுட னேயே கொண்டு போகும். நெருப்பென சுடும் வேலை யுடைய அருச்சுனா!

பூக்கமழ் நாற்றம்-பூக்களில் மணக்கும் வாசனை, வளி-காற்று, சீவன்-உயிர், யாக்கை-உடல், போக்கரியதாயவாறு-போகிற இடம் இன்ன தென்று தெரியாதபடி.

மின்னே யானைய உடம்பிதனை விடுவதடைவதாய் விடயந்
தன்னேரில்லா தானது தானா கின்றா றோர் தன்மை யினை
யென்னே காணா ரறியா தாரறிவார் யோகத் தாலேதம்
முன்னே காண்பரித னியற் கைதெளி யின்ன மொழிவன் கேள். 13

மின்னலைப் போன்று நிலையற்றதாகிய இந்த உடலை, விடுவதும் அடைவதுமாக உள்ளதும், தனக்கு நிகர் ஒன்று இல்லாததும், எல்லாமே தான் ஆகின்றதோர் தன்மையும், வியப்புக்குரிய இதனை அறிவற்றவர்களால் அறிய இயலாது. யோகத்தினாலே தான் அறிந்து கொள்ள இயலும். இதனுடைய இயல்பு இன்னது என்பதை இன்னமும் சொல்கிறேன் கேள் !

மின்னே யனைய-மின்னலைப் போன்ற, விடுவதடைவதாய்-விடுவது+அடைவது+ஆய இறப்பதும் பிறப்பதும் என்க. இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

இந்திரியங் களுக்குங் கண்ணாயிர விதியிந்து வின்பால்
வந்தெழுங் கதிரு நானே மானில மாகி நின்று
தந்தி யேறனைய தோழா சாமமே முதலாந் தன்மை
தந்திரந் தவிர்ந்து மெல்லாந் தாங்கு கின்றோ னுநானே! 15

ஆண் யானையை ஒத்த நண்பனே! ஐந்து இந்திரியங் களுக்கும் கண்ணாய் இருந்து சந்திரன், சூரியன், மற்றும் இப்பூவுலகையும் காட்டுகிறவன் நானே! சாமவேதம் முதலான நான்கு வேதங்களுக்கும் மேலாக எல்லாவற் றையும் தாங்குகிறவனும் நானே !

இந்து-நிலவு, கதிரி-சூரியன், மானிலம்-பூமி, தந்தி யேறு-ஆண் யானை.

முந்துவான சுவை முற்று மாகியே
இந்துவாகி நின் றுண்பன யாவையும்
தந்து சேர் வையகத்தி லே தக
நந்திடா வகை வளர்க்கின் றோனு நான். 16

எல்லாப் பொருட்களிலும் உள்ள சுவையாக இருப்பவனுமாகி, இவ்வுலகத்தோர் உண்பதற்கான எல்லாவற்றையும் விளைவிக்கின்ற சந்திரனுமாகி, உலகத்துயிர்கள் எல்லாம் வாழ்வதற்கான எல்லா வற்றையும் கொடுத்து, மேலும் அவை அழிந்து விடாதபடி வளர்க்கின்றவனும் நானே !

சுவை முற்றும்-பொருளாக அல்லாது அப்பொருளின் உள்ளே உள்ளதாகிய சுவை என அறிக. உண்பன யாவையும்-உயிர்னங்கள் வாழ வேண்டி உண்பதற்குத் தேவையானவற்றை, நந்திடாவகை-நலிவடை யாமல், அழிந்துவிடாமல். இது ஒரு கலி நிலைத்துறை விருத்தம்.

தின்ப நக்குவ தீஞ்சுவை யுண்பவா
நண் பயன் செயு நால்வகை யுண்டியு
மின்ப மாம் வகை யாக்கை டோறுநின்
றன் பவங்கியா யறுக்கின் றோனு நான். 17

உயிர் வாழ வேண்டி, உணவை வாய் வழியாக உடலுக்குள் செலுத்தும் வகை நான்கு. அவையாவன தின்பவை, நக்குபவை, சுவைப்பவை, உண்பவை எனவாம். இவ்வாறான நான்கு வகை உணவாகவும் இருந்து உடலுக்கு வகை வகையான இன்பத்தைத் தருவதும், பின்னர் அதனால் விளைந்த பயனை அந்த உணவைச் செறிக்கச் செய்பவனும் நான்.

உண்டி-உணவு, யறுக்கின்றது-செறிக்கச்செய்வது.

நல்ல மாந்தர் நல்லறிவு நன்கிலாப்
புல்லர் தங்கள் புல்லறிவும் போர்திகழ்
வில்லமைந்த தோள்வீரர் விரவி யா
னல்ல தில்லை யென்றறிய வேண்டுமால். 18

போரில் வெற்றியைத் தரும் வில்லினைத் தோள் களிலே உடைய வீரர்களின் வீரனே! நல்ல மனிதர்கள் எனப்பெறும் ஞானிகளின் நல்லறிவு மட்டுமல்லாது அறிவில்லாத அஞ்ஞானிகளின் அஞ்ஞானமும் கூட என்னைத் தவிர வேறொருவர் இல்லை என்று நீ தெரிந்து கொள்வாயாக.

நன்கிலாப்புல்லர்-நல்ல அறிவில்லாத கீழோராகிய அஞ்ஞானிகள். வில்லமைந்த-வில்லினையுடைய.

அசைவில்லா மறைக் கறிவு நான் தன்
வசை யில்லாத மெய்ப் பொருளும் வாய்மை சே
ரிசை யினா லெடுத் தோதுவோனு மியான்
விசய கேள் ளின்னம் வேறு மொன்றையே ! 19

நிலையான வேதத்தின் அறிவு நான். தனக்கென குற்றம் ஏதும் இல்லாத மெய்ப்பொருளும், இதனை உண்மையான இனிய சொற்களால் எடுத்துச் சொல்கிற வனும் நானே! விசயா! இன்னும் கூட வேறு ஒன்று உண்டு சொல்கிறேன் கேள் !

அசைவில்லா-நிலையான, வசை-குற்றம், வாய்மை-உண்மை, இசையினால்-இனிமையாக.

மருவுகின்ற திவ்வுலகின் மாய்தலே
யுருவமாக முன்புடைய தொன்றுமே
யுருவ மொன்றினால் அழிவதின் மையே
பொருவ நின்ற தோர் பொருளு முண்டோ. 20

உருவமாக இருப்பவை எல்லாம் அழிவது இவ்வுலகத்தின் மாயையே! உருவமற்றவையாக இருப்பவை என்றும் அழிவதில்லை. அழிந்தும் அழியாமலும் பொதுவாக நின்ற எந்த பொருளும் இல்லை.

மருவுகின்ற-அழிகின்ற, அருவம்-உருவம் இல்லாமை, பொருவ-பொதுவாக.

மொழி செய்கின்ற இவ்விரண்டு முற்றவே
விழியினா லுற நோக்கின் மெய்மையே
யழிவ தாக்கை யாங்கழிவு பாடிலாததே
வழிவ தென்னெனி னுயிரென் கின்றதே ! 21

இவ்வாறு கூறப்பெற்ற இவ்விரண்டினுள் ஞானக் கண் கொண்டு பார்க்கின், அழிவது உடல், என்றும் அழியாது வாழ்வது என்னவெனில் அது உண்மையில் உயிர் என்பதுவே!

விழியினாலுணர-கண்கொணடு பார்க்க, (ஞானக்கண் என்க.) மெய்மை-உண்மை, வழிவ-வாழ்வது.

இவை யிரண்டையும் கடந்து யாது மோர்
நவையு மின்றியே நாசமின்றியே
யெவையு மின்றியே யாவு மின்றியே
குவையி னின்றதோர் குறிய லின்பமே. 22

முன்னர் கூறப்பெற்ற தான இவ்விரண்டையும் கடந்து எந்த ஒரு குற்றமும் இல்லாத, அழிவும் இல்லாத, எதுவுமில்லாத, எல்லாமும் இல்லாத, கூட்டமும் இல்லாத எந்த நோக்கமும் இல்லாதது ஆனந்தமே !

நவை-குறைபாடு, குவை-கூட்டம், குறி-நோக்கம், அடையாளம் எனவும் கொள்ளலாம்.

இந்த வின்ப மியா னென்னை யுள்ளவா
சிந்தையி னகனே தெளிதன் மேயினார்
பந்த மொன்றிலார் பழய விப் பொருட்
கந்தமாதி வேரறிய வெண்ணு மோ. 23

இந்த இரண்டு இன்பங்களாகிய உருவம், அருவம் ஆகிய இரண்டையும் கடந்த என்னை உள்ளபடி,

மனத்திலே தெளிவாக உணர்ந்தவர்கள் பந்தபாசம் என்பன ஏதும் இல்லாதவர்களாவார்கள் மிகவும் பழமையான இந்தப் பொருளின் ஆதி எது அந்தம் எது என இதன் மூலத்தை எண்ணமாட்டார்கள்.

தெளிதன் மேயினார்-தெளிவாக உணர்ந்தவர்கள், பந்தம்-உறவு, அந்தம்-முடிவு, ஆதி தொடக்கம், பொருட்கந்த மாதி-பொருள்+க்கு+ அந்தம்+ஆதி, வேரறிய-மூலம் எதுவென்று தெரிந்துகொள்ள.

வேத நாலு நின்றுரை செய்தாலு முன்
றோத லாவதென் லுலகறிந்த தோர்
காதலா லெனக் கினிய தோழனி
யாதலா னுனக் கறிய வோதினோன். 24

நான்கு வேதங்களும் கூடிநின்று கூறினாலும், இது என்னவென்று கூற இயலாதது என்பதை இந்த உலகத்தோர் அறிவர்-நீ எனது அன்புக்குரிய தோழன் ஆகையால் உனக்கு இது தெரியும்படி கூறினேன்.

நின்றுரை செய்தல்-வேதங்களைப் பதப்பொருள் கூறி விளக்கம் அளித்தல். னி-நீ, தோழன்-நண்பன்.

கண்ணை யோரிடத்து மின்றி யதனிலே வைக்கிற் காதல்
பண்ணை யோ டொக்குகின்ற வினையெலாம்
பயக்குமென்றான்
வெண்ணெ யோ விதுரனிட்ட விருந்தையோ வேலை சூழ்ந்த
மண்ணை யோ வுண்டு முன்னாள் வரும் பசிதீர்த்த
மாயோன். 25

கண்களை வேறு எங்கும் காணவிடாது அந்தப் பரம்பொருளினிடத்தே வைத்தால், ஆசைக் கூட்டமாகிய வினைகள் எல்லாவற்றையும் கொடுக்கும் என்று- அன்று

அவனுக்கு எடுத்த பசி தீர்வதற்காக, வெண்ணெய்யை உண்டானோ அதுமல்லாது கடல் சூழ்ந்த இந்த பூமியின் மண்ணைத்தான் உண்டானோ என அறிய இயலாத கண்ணன் கூறினான்.

அதனிலே என்பதை இறுதியில் கூறியுள்ளபடியால் எல்லாமாகிய பரம்பொருள எனப் பொருள் கொள்க.

காதல் பண்ணை-ஆசைக்கூட்டம்-பலவித ஆசைகள் ஆயர்கள் வீட்டில், வெண்ணெயைத் திருடித் தின்ற கதை-கண்ணனின் இளம் பருவக்கதை.

யசோதையிடத்து வாயைத் திறந்து காட்டுவதற்கும் முன்னதாக கண்ணன் மண்ணை எடுத்து உண்டான் பின்னர் யசோதை வாயைக் காட்டச்சொல்லிய போது தன் வாயைத் திறந்து ஈரேழு பதினான்கு லோகங்களையும் காட்டினான் என்பது. பாண்டவர்களுக்காக திரியோத னனிடம் தூது சென்றபோது விதுரனின் வீட்டிற்குச் சென்று அவரால் அளிக்கப்பெற்ற விருந்தினை உண்டான் என்பது.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–15

புருஷோத்தம யோகம்

1. பகவான் சொல்லுகிறான்! மேலே வேர்கள், கீழே கிளை அரசமரம் அழியாதது என்று கூறுவார்கள். எந்த அரச மரத்திற்கு வேதங்களே கிளைகளோ, அந்த அரச மரத்தை எவர் அறிகின்றார்களோ, அவனே வேதத்தை அறிந்தவன்.

2. சம்சாரம் என்னும் அந்த மரத்தின்-அதன் கிளைகள் புலன் நுகர்ப்பொருள்கள் என்னும் விஷயத்தளிர்களுடன் கூடிய, தேவ, மனித, விலங்குகளுடன் கூடிய கிளைகள் கீழும் மேலுமாகப் பரவியுள்ளன. மனித உலகின் கர்மப் பினைப்புகளாக, அகந்தை, மமதை, வாசனை, உருவான வேர்களும், கீழும் மேலுமாக எல்லா உலகங்களிலும் பரவியுள்ளன.

3. இந்த மரத்தின் உருவத்தைப் போல, இவ்வுலகத்தில் காணப்படுவதில்லை, முடிவும், ஆதியும், நிலைக்களனும் புலப்படுவதில்லை. அகங்காரம், மமகாரம், முற்பிறவியின் வாசனை என்ற உறுதியான வேர்கள் கொண்ட இந்த அரசமரத்தை, பற்றின்மை எனும் வலிய வாளால் வெட்டி எறிந்து விட்டு

4. அதன் பிறகு எங்கோ சென்றவர்கள் திரும்பி வருவதில்லையோ, அந்த பரமபதம் நன்கு தேடப்பட வேண்டும். மேலும் எதனிடமிருந்து பழமையான, சம்சார மரத்தின் தொடர்ச்சி விரிவு அடைந்துள்ளதோ, அந்த ஆதிபுருஷனையே சரணம் அடைகிறேன்.

5. செருக்கும் மயக்கமும் அகன்றவர்கள், பற்று எனும் குறைபாட்டை வென்றவர்கள், ஆத்ம ஞானத்தில் எப்போதும் நிற்போர், விருப்பங்களினின்றும் எப்போதும் நீங்கியோர் சுக துக்கக் குறிப்புகளையுடைய, இரட்டை

களிலிருந்தும் விடுபட்டோர். மடமையற்றோர், அந்த நாசமற்ற பதத்தை எய்துகின்றனர்.

6. எதை அடைந்த பிறகு திரும்பி வருவதில்லையோ, அங்கே பரமபதத்தில், சூரியன் ஒளி தருவதில்லை, சந்திரனும், தீயும் ஒளிருவதில்லை. அதுவே என் மேலான வீடு பரமபதம்.

7. இவ்வுடலில் என்றும் உள்ள ஜீவாத்மா, எனது அம்சமே! அதுவே பிரக்கிருதியில் உள்ள, மனம், மற்றும் ஐந்து புலன்களையும் ஈர்க்கிறது.

8. காற்று மணமுள்ள இடத்திலிருந்து பலவித மணங்களை இழுத்துச் செல்வது போல, உடலை ஆளும் ஜீவாத்மாவும், எந்த உடலை விட்டுக் கிளம்புகிறானோ மனதோடு கூடிய புலன்களையும் எடுத்துக்கொண்டு எந்த உடலை அடைகிறானோ அதில் வந்து சேர்கிறான்.

9. கேட்டல், காணல், தீண்டுதல், சுவை, மோப்பு, மனம் இவற்றில் நிலைகொண்டு, ஜீவன் விஷயங்களைத் தொடர்ந்து நடத்துகிறான்.

10. அவன் புறப்படுகையிலும், நிற்கையிலும் உண்ணுகையிலும், முக்குணங்களைக் கூடி இருக்கும் போதும் அவனை மூடர் காண்பதில்லை. ஞான விழியுடையோர் காண்கின்றனர்.

11. முயற்சியுடைய யோகிகள் இவனைத் தம்முள்ளேயே காண்கின்றனர். முயற்சியுடையோ ராயினும் தம்மைத் தாம் தூய்மைப் படுத்தாதவர்கள், அஞ்ஞானிகள், இவனைக் காண்கிலர்.

12. சூரியனிடமிருந்து உலக முழுமைக்கும் பிரகாசிக்கச் செய்கிறதோ, சந்திரனிடத்துள்ளதும், தீயிலுள்ளதும் அவ்வொளி யெல்லாம் என்னுடையதே என்றுணர்.

13. நான் பூமியுட் புகுந்து வீரியத்தால் உயிர்களைத் தாங்குகிறேன். மேலும், நான் நிலவாகி அனைத்துப் பயிர்களையும் போஷிக்கின்றேன்.

14. உயிர்களின் உடல்களைச் சார்ந்திருக்கிறேன். பிராண அபான வாயுக்களுடன் கூடி வைசுவா நரன் என்ற அக்னியாகி, நால்வகைப்பட்ட அன்னத்தை ஜீரணமாக்கு கின்றேன்.

15. எல்லோருடைய அகத்திலும் நான் புகுந்திருக்கிறேன். மேலும் என்னிடமிருந்துதான், நினைவும், ஞானமும், இவற்றின் நீக்கமும் பிறக்கின்றன. எல்லாத் தேசங்களிலும் அறியப்படும் பொருள் நான். வேதாந்தத்தை ஆக்கியோன் நான். வேதமுணர்ந்தோன் நானே!

16. உலகத்தில் அக்ஷர புருஷன் க்ஷர புருஷன் என இரண்டுவகைப் புருஷர்கள் உளர். க்ஷர புருஷன் என்பது எல்லா உயிர்களையும் குறிக்கும். கூடஸ்தனே அக்ஷர புருஷன்.

17. எவர் மூன்று உலகினுட் புகுந்து, தாங்கி, போஷிக்கிறாரோ, அழிவற்றவர் என்றும், ஈசுவரன் என்றும், பரமாத்மா என்றும் அழைக்கப்படுகின்றாரோ அந்த புருஷோத்தமன் இவரில் வேறுபட்டோன்.

18. எக்காரணத்தினால், நான் அழியக்கூடிய ஜடவர்க்கத்திற்கு அப்பாற்பட்டவனகாவும், அக்ஷர புருஷனைக் காட்டிலும் சிறந்தவனாக உள்ளேனோ, அக்காரணத்தினால் உலகத்தாராலும் வேதங்களாலும், புருஷோத்தமன் என்று புகழ்பெற்றுள்ளோன்.

19. பாரதா! எந்த ஞானி என்னைப் புருஷோத்தமன் என்று அறிகின்றானோ,எல்லாமறிந்த அவன், எல்லா விதமாகவும் என்னை வழிபடுகிறான்.

20. குற்றமற்றவனே! இங்ஙனம் இந்த மிகவும் ரகசியமான சாஸ்திரம் என்னால் கூறப்பட்டது. இதனை உணர்ந்தோன் புத்திமான் ஆவான். செய்யத்தக்கது செய்பவன் ஆகிறான்.

விளக்கவுரை

வியாசர் தமது பகவத்கீதையின் இப்பதினைந்தாவது அத்தியாயத்திற்கு புருஷோத்தம யோகம் எனத் தலைப்பிட்டு இருபது சுலோகங்களை இயற்றியுள்ளார். சுவடி ஆசிரியர் தமது பதினைந்தாவது அத்தியாயத்திற்குப் பிறவஞ்சவத்தியாயம் என்று தலைப்பிட்டு இருபத்தைந்து விருத்தங்களை எழுதியுள்ளார்.

விருத்தம் 1. கண்ணனை பூதகியைக் கொன்றவன் எனவும் பாராட்டி, இருவினைகளை அறுப்பதற்கு வேண்டிய மாயை என்பது என்னவென்பதை ஒரு மரத்திற்கு உதாரணம் காட்டி கணணன் விளக்கத் தொடங்குவதாக உள்ளது.

வியாசரின் இவ்வத்தியாயத்தின் முதல் சுலோகத்தில் கண்ணனைப் பாராட்டும் செய்தி ஏதும் இல்லை. மரத்தை உதாரணம் காட்டி அதன் கிளைகள பூமிக்குள் எனவும் வேர்கள் பூமிக்கு மேலே எனவும், அது அரசமரம் எனவும் கூறுகிறார். மரத்தை அறிந்தவனே வேதத்தை அறிந்தவன் என்கிறார்.

விருத்தம் 2. முதலில் சொல்லிய அந்த மரத்திற்கு அசுவத்தாமம் என்று பெயர் என்கிறார். அதுவே பிறவி எனும் பெரியமரம் என்கிறார். வியாசர் தமது இரண்டாவது சுலோகத்தில் சம்சாரம் எனும் அந்த மரம் என்கிறார். கிளைகளைப் பற்றியும் வேர்களைப் பற்றியும் செய்தி சொல்கிறார். அசுவத்தாமம் என்ற சொல் இல்லை.

விருத்தம் 3. பிர்மத்தின் தன்மை-ஆகாயத்தின் சேர்க்கை அகந்தை, மமதை, காமப் பிணைப்பு, வாசனை ஆகியவையே வேர்கள் எனக் கூறுகிறார். வேறு தத்துவ

நூல்களில் கூறப்பெற்றுள்ள விரிவான விளக்கங்களின்படி மாயையின் காரணமாக வருவது அகந்தை மற்றும் காமம் ஆகியவை எனக் கூறப்பெறுவதால் இருவரின் கருத்துக் களும் ஒன்றே எனவாகிறது.

விருத்தம் 4. விதியைப் பற்றியும், மீண்டும் அசுவததாமம் பற்றியும் கூறப்பெறுகிறது.

விருத்தம் 5. அசுவத்தாமத்தின் பொருள் கூறப் பெறுகிறது.

விருத்தம் 6. மாயையின் இயற்கைத் தன்மையைப் பற்றிக் கூறுவதாக உள்ளது. வியாசர் தமது ஐந்தாவது சுலோகத்தில் பரமபதம் அடைவதைப் பற்றிக் கூறுகிறார். பரப்பிர்மம் என்பதாகச் சொல் இல்லை.

விருத்தம் 7. பிறந்து இறக்கும் பிறவியை பனை மரத்திற்கு ஒப்பிட்டுக் கூறுகிறார். பிறவிகளின் எண்ணிக்கையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இதன் விளக்கம் கொடுக்கப்பெறவில்லை.

விருத்தம் 8. முன்கூறப்பெற்ற வேர் மேலே கிளைகள் கீழே என்பதன் வேறு செய்திகள் உள்ளன.

விருத்தம் 9. இதில் ஆத்மாவைப் பற்றிக் கூறப் பெறுகிறது என்றாலும், ஆத்மா-ஆன்மா-என்ற சொல் குறிப்பிடப்பெறவில்லை.

விருத்தம் 10. பிறவி என்னும் மரத்தைத் துறவு என்னும் வாளால் அறுக்க வேண்டும் என்கிறார். அப்படி அந்த மரத்தை வெட்டியவன் தன்னை வந்து அடைவதாகக் கண்ணன் கூறுகிறான். இப்படி ஒரு உவமை வியாசரால் கூறப்பெறவில்லை.

விருத்தம் 11. கண்ணன் தன்னுடைய பேருருவின் தன்மையையும், அதனைக் கண்டவர்களின் நிலையைப் பற்றியும் கூறுவது.

விருத்தம் 12. நீர் நிறைந்த குடத்தில் ஆகாயம் தோன்றுவது. குளங்களில் நிலவின் உரு தோன்றுவது பற்றிக் கூறப்பெற்று பின் அது போலவே உடல்கள் தோறும் தான் இருப்பதாக-உயிர் இருப்பதாகக் கண்ணன் கூறுவது. இது வியாசரின் உவமை ஏதும் இல்லாது-உயிர்களின் உடலைச் சார்ந்திருக்கிறேன் எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது.

விருத்தம் 13. பூக்களில் உள்ள நறுமணத்தை மட்டும் அள்ளிச் செல்லும் காற்றைப் போல உயிர் இந்த உடலை விட்டுப் போகும்போது ஐம்புலன்களையும் தன்னோடே கொண்டு செல்கிறது என்னும் உவமை மிகவும் எளிமையாகவுள்ளது இதே கருத்து வியாசரால் எட்டாவது சுலோகத்தில் இதே உவமையுடன் கூறப் பெறறுள்ளது. இங்கு இது மேலும் தெளிவாக கூறப் பெற்றுள்ளது.

விருத்தம் 14. உடல் மின்னலைப் போன்று நிலையற்றது. இதன் தன்மையை அறிவால் அறிய இயலாது. யோகத்தினால்தான் அறியமுடியும் என்கிறார். இதனை வியாசர் தமது பதினோறாவது சுலோகத்தில் முயற்சியுடையவன்-யோகத்தால் காண்கிறான் எனவும், அஞ்ஞானிகளால் காண இயலாது என்றும் கூறியுள்ளார்.

விருத்தம் 15. கண்ணன் தன்னைப்பற்றிக் கூறுவது. பஞ்சேந்திரியங்களில் கண் நான். சந்திரன், சூரியன் நானே! வேதங்களுக்கும் மேலானவன் நானே எனக் கூறுவது. இச்செய்தி வியாசரின் பன்னிரெண்டாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 16. இதுவும் மேலது. பொருட்களின் சுவை நான். பொருள்களை விளைவிக்கும் சந்திரன் நான். வாழத் தேவையானவற்றைக் கொடுத்து அழியாமலும் காப்பவன் நான். இது வியாசரின் பதின்மூன்றாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 17. நான்கு வகை உணவாகவும், அவைகளை உண்பதில் உடலுக்கு வரும் இன்பமாகவும் இருந்து பின் அவ்வுணவைச் செரிக்கச் செய்பவனும் நானே எனக் கூறப்பெற்றுள்ள இச்செய்தி வியாசரின் சுலோகம் பதினான்கில் அக்னியாகி செரிக்க வைக்கிறேன் என உள்ளது. இது ஒரு கூடுதல் செய்தி.

விருத்தம் 18. ஞானிகளின் ஞானமும் நானே. அஞ்ஞானிகளின் அஞ்ஞானமும் நானே என்பது. வியாசரின் பதினைந்தாவது சுலோகத்தில் என்னிடமிருந்து தான் ஞானமும் இவற்றின் நீக்கமும் பிறக்கிறது என்று கூறப்பெற்றுள்ளது. ஞானத்தின் நீக்கம் அஞ்ஞானம் என்க.

விருத்தம் 19. வேதத்தின் அறிவு நான். மெய்ப் பொருளும் நானே. அதை எடுத்துச் சொல்கிறவனும் நானே என்கிறது. இதுவும் வியாசரின் பதினைந்தாவது சுலோகத்திலேயே உள்ளது.

விருத்தம் 20. உருவமாக இருப்பவை எல்லாம் அழியக்கூடியவை. உருவமற்றதாய் இருப்பவைதான் அழியாதவை. உருவமற்றதாய் இருப்பவைகள் பற்றி முன் சுலோகங்களில் வியாசரால் கூறப்பெற்றுள்ளது. மேலும் வியாசரால் க்ஷர புருஷன், அக்ஷர புருஷன் என்பவை பற்றிக் கூறப்பெறுகிறது. சுலோகம்-16.

விருத்தம் 21. உடல் அழிவதையும், உயிர் அழியாதிருப்பதையும் ஞானக்கண் கொண்டு பார்க்க இயலும் என்று சுவடி ஆசிரியர் கூறுகிறார். இவ்வாறு தெளிவாக வியாசர் ஏதும் கூறவில்லை.

விருத்தம் 22. உயர்வானது ஆனந்தம் எனப் பெறுகிறது. இப்படி எதுவும் வியாசர் கூறவில்லை.

விருத்தம் 23. உருவம், அருவம் இரண்டையும் கடந்தவன் நான். இதனை உணர்ந்தவர்கள். என்று ஆதியந்தம் எவை எனக் கேள்வி கேட்கமாட்டார்கள் என்பது. இவ்வாறு வியாசர் கூறவில்லை.

விருத்தம் 24. நான்கு வேதங்களாலும் கூட கூற இயலாதது. இது ஆன்மாவைக் குறிக்கிறதா அல்லது பரப்பிர்மத்தைக் குறிக்கிறதா எனக் கேள்வி கேட்கக் கூடாது! ஏனெனில் ஈஸ்வரன்-பரமாத்மா என்பன வேறு-புருஷோத்தமன் இவற்றினின்றும் வேறுபட்டவன் என வியாசர் கூறுகிறார் சுலோகம்-17

விருத்தம் 25. எல்லாவற்றையும் கொடுப்பது ஆசையின் பாற்பட்ட வினைகளே எனக்கூறி இவ்வத்தியாயம் நிறைவு செய்யப்பெறுகிறது. இவ்வாறான ஒரு தெளிவான கருத்துச் சுருக்கம் வியாசரால் கூறப்பெறவில்லை.

இந்த அத்தியாயத்தில் வியாசரின் சுலோகங்களுக்கு வரிசையாக அவர் கூறியிருப்பதையே ஒத்ததாக சுவடி ஆசிரியரால் கூறப்பெறவில்லை, என்றாலும் வியாசரின் சுலோகங்களில் காணப்பெறும் செய்திகள் யாவும் விருத்தங்களில் கூறத்தான் பெற்றுள்ளன எனலாம்.

எல்லாமும் நானே எனக் கண்ணன் கூறுவதில் பல செய்திகள் சுவடி ஆசிரியரால் கூறப்பெறாமல் விடுக்கப் பெற்றுள்ளன. அவைகளில் சில.

1. பிராண அபான வாயுக்களுடன் கூடி, வைசுவா நரன் என்ற அக்கினியாகி நால்வகைப்பட்ட அன்னத்தை ஜீரணிக்கிறேன்.

2. அழியக்கூடிய ஜட வர்க்கத்திற்கு அப்பாற் பட்டவனாக இருக்கிறேன். அக்ஷர புருஷனைக் காட்டிலும் சிறந்தவனாக உள்ளேன். அதனால் என்னைப் புருஷோத்தமன் என்கிறார்கள்.

3. என்னை புருஷோத்தமன் என்று என்னை அறிந்தவன் என்னை வழிபடுகிறான்.

4. மிகவும் ரகசியமான மந்திரம் என்னால் கூறப்பட்டது. மேலும் கண்ணன் என்னுடைய வீடாகிய பரம பதத்தை அடைந்தவர்கள் மீண்டும் அங்கிருந்து திரும்புவதில்லை.

விஷயங்களை நடத்துகிறவன் ஜீவன்-அதாவது உயிரானது உடலில் இருந்து கொண்டு அந்த உடலைத் தனக்குரிய செயல்களை உயிர் செய்விக்கிறது என்பது பொருள்.

ஞானத்தை முயற்சி செய்து பெற்றவர்கள் அதாவது கல்வியறிவு என்பதாக ஞானத்தைப் பெற்றவர்கள், தங்களைத் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறின்றி வெறும் ஞானம் மட்டும் ஆன்மாவைக் காண இயலாது என்பது. ஆகிய செய்திகள் இந்த அத்தியாயத்தில் வியாசரால் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன.

பதினாறாவது அத்தியாயம்

தேவர் அசுரவத்தியாயம்

மறந்திருந்த மனத் திரு ணீக்கி நிந்
திறந் திடப்படச் செப்புதன் மேயினா
னறந் திறந் தெறிந் தாக்கு தற் காகவே
பிறந் திறந் துழல்கின்ற பேராளனே! 1

மறைந்திருக்கக் கூடிய மனத்தின் அறியாமை என்னும் இருளை நீக்கி, நீதியை நன்றாகச் சொல்வதற் காகவும், தருமத்தை நிலைநாட்டுவற்காகவும் தன்னைப பிறப்பும் இறப்பும் உடைய மனிதனாக்கி இவ்வுலகில் உழல்கின்றவனாகிய கண்ணன் தன்னை ஆக்கிக் கொண்டான்.

மனத்திருணீக்கி-மனத்து+இருள்+நீக்கி, திறந்திடப்பட-நன்றாகவும் உறுதியாகவும், பிறந்திறந்துழல்-பிறந்து+இறந்து+உழல், இது ஒரு கலி விருத்தம்.

தெய்வ வசுர ரென்றித் திறத் தோராய்
வையக மாந்தர் யெல்லோர் களும் வாழ்வ தில்வ
கைய கேள் அவற்றின் றிர மென்று தன்
செய்ய வாய் திறந் தில் வண்ணம் செப்பினான். 2

இந்த உலகத்தில் வாழும் மக்கள் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள் எனவும் அசுரத் தன்மையுடையவர்கள் எனவும் வாழ்கிறார்கள். அவர்களின் தன்மை எவ்வகைப் பட்டதென்று, தன்னுடைய சிவந்த வாயினைத் திறந்து இவ்வாறு கூறினான்.

திறத்தோர்-தன்மையினர், செய்ய-சிவந்த

அஞ்சுத லின்மையு மறிவை யாக்கலும்
நெஞ்சினி யடக்கலு நிலைகெடா மையும்
வெஞ்சின மின்மையு மெய்மை கூறலுந்
தஞ்சென் வேள்வியுந் தவமுமாக்கலும். 3

பயப்படுதல் இல்லாமை, அறிவை வளர்த்தல், மனத்தில் ஆசை ஏற்படா வண்ணம் அடக்கல் எந்நிலையிலும் தன்னிலை மறவாமையும் கடுங்கோபம் கொள்ளாமையும், உண்மையையே பேசுவதும், இறைவனுக்கு அடைக்கலமாகி வேள்விகளையும், தவங்களையும் செய்வதும்..

அறிவை ஆக்கல்-அறிவை வளர்க்க நூல்களைக் கற்றல், வெஞ்சினம்-கடுமையான கோபம். தஞ்சன்-தஞ்சமென்று- இது ஒரு கலிவிருத்தம்.

மறைபயி லறந்தனை மறந்திரா மையும்
குறளை கட விர்தலுங் கொள்கை மாற்றலும்
பிறர் பிழை பொறுத்தலும் பேரொழுக்கமே
மறன்வலி தானமோ டருளை யாக்கலும். 4

வேதங்களால் கூறப்பெறும் தருமநெறிகளை மறவாதிருத்தலும், கோள் சொல்லும் பழக்கத்தைத் தவிர்த்தலும், பிடிவாதமான குணத்தை மாற்றிக் கொள்வதும், பிறர் நமக்கிழைத்த தீமையை மன்னித்தலும், நல்ல ஒழுக்கமும், அறவழியிலான தருமமும், இரக்க சுபாவமும்....

மறை பயி லறம் – வேதங்களால் சொல்லப்பெறும், அறநெறிகள்; குறளை – புறஞ் சொல்லல். கொள்கை – பிடிப்பு, தானம் – தருமம்.

இருவகைத் தூய்மையு மிந்திரியங் களை
யொரு வகைப் படுத்தலு முன்னிட் டன்னவே
செரு வருஞ்சி லையினாய் தெய்வத் தன்மையோர்
மருவிய தொழிலென மதிக்க வேண்டுமே. 5

போர் செய்வதற்கான அரிதான வில்லையுடைய அர்ச்சுனா! இன்பம் வரும்போது மகிழ்தலும், துன்பம் வரும்போது வருந்துவதுமாகிய இருவகையிலும் நடுநிலையாக இருத்தலும், இந்திரியங்களைஅவை கட்டுகடங்காமல் போகும் வண்ணம் விடாது ஒரு நிலைப்படுத்தலும், தெய்வத் தன்மையோர்களின் செயல்களாகும். இவைகளையே நல்லவையாக நீயும் ஏற்கவேண்டும்.

செரு - போர், மருவிய - அணைந்த- செய்தக்க.

தீமை செய் அசுர ராணோர் செய்கையை தெரிக்கி லொன்றை
யாம் வகை யென மற்றாகா வனவென வறிதலில்லார்
தூய்மையும் தூய வாய வொழுக்கமும் துடக்கும் விட்டார்
வாய்மை யொன்றாலு மில்லார் மயக்கமே மருவி நின்றார். 6

தீமைகளைச் செய்கின்ற அசுரர்களின் தன்மையைச் சொல்கிறேன். செய்யக்கூடிய நற்செயல் எதுவெனவும் செய்யத்தகாத தீச்செயல் எவையெனவும் அவர்கள் அறியமாட்டார்கள். அகத்தூய்மை, புறத்தூய்மை எதையும் தெரியாதவர்கள். மேலும் அவ்வகையான தூய நெறிகளை எவ்வாறு செய்யத் தொடங்குவது என்றும் தெரியாதவர்கள், உண்மை பேசுவது என்பதும் தெரியாது. மயக்க நிலையில் மதிமயங்கியவராய் இருப்பர்.

துடக்கு-தொடங்கவே தெரியாது என்க. ஆம்வகை+மற்று+ஆகா வகை+அறிதல்+இல்லாதார். இரு ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

எண்ணிய உலகமு மூவுலகுக் கீசனும்
புண்ணிய பாவமும் பொய் யென்றே கொள்வர்
பெண்ணி னோடாண் புணர்கின்ற பெற்றியார்
துண்ணிய யாவையும் மெடுத்துக் காட்டுவார். 7

காணப்பெறும் இநத உலகம் பொய். மூவுலகிற்கும் ஈசன் என ஒருவன் இருப்பதாகச் சொல்வதும் பொய். புண்ணியம் என்பதும் பாவம் என்பது எல்லாம் பொய்யுரைகள் என்று கூறுவார்கள். ஆணும் பெண்ணும் புணர்ந்து இன்பம் காண்பதே பெறும் பேறு எனக் கொள்வார்கள். இவ்வாறு அவர்கள் கொண்ட கொள்கையே மேலானது எனப் பலருக்கும் எடுத்துக் கூறுவார்கள்.

பெண்ணினோடாண்-பெண்ணி+னோடு+ஆண். பெற்றியார்-பெருமையாக நினைப்பவர். துண்ணிய-உண்ணிய-தாம் நினைத்ததே, எடுத்துக்காட்டுவர்-மற்றவர்களுக்கும் சொல்வார்கள். இது ஒரு கலி விருத்தம்.

விரும் பலராகி வொழுக்கங கடுறந்தார் மெய்மையுஞ்
செம்மையும் விட்டா
ரிரும் பயனா யரிவு மாய்ந் துள்ளோரிடம் படா மனத்தி னோடி
சைந்தார்
பெரும்பழி யான தோர் தொழில்களே பயில்வார் பிழைப்பு
வாய்ப் பென்றறியாதார்
ரரும் பகையா விவ்வுலகினை யெல்லா மழிப்பதன் பொருட்
டவதரித்தார்.8

நல்லொழுக்கத்தையே விரும்பாதவர்களாகி அதனை விட்டவர்கள், உண்மையையும், செம்மையான வாழ்வதனையும் விட்டவர்கள். நற்பெயரைத் தருவதாகிய நல்லறிவு வாய்ந்தவர்களோடு என்றும் சேராது, பெரும்

பழியைத் தரக்கூடிய செயல்களையே செய்வார். இதுவே பிழைப்பதற்கான நல்வழி என்பதை அறியாதவர். இப்பிறவி கிட்டியது உய்வதற்கான ஒரு நல்ல வாய்ப்பு என்பதனை அறியார். இவ்வுலகில் உள்ளவர்களை எல்லாம் பகைவரைப் போலவே இருந்து, இதனை அழிப்பதற்கே பிறவி எடுத்தவர்கள்.

விரும்பலராகி-விரும்பாதவர்களாகி, வொழுக்கங்கடுறந்தார்-ஒழுக்கங்கள்+துறந்தார். அவதரித்தார்-பிறந்தார்கள். இது ஒரு எழுசீரடி ஆசிரிய விருத்தம்.

நிறை விலாக் காம போகந் தன்னையே நிரைக்க வேண்டி
மறைவிலா மானத் தோடும் தங்களை மருவி நின்று
குறைவிலா மயக்கத்தோடுங் கோபத்தை யடைந்து நின்று
பொறை யிலா விரதம் பூண்டு பொய்தவம் புரியா நிற்பர். 9

எவ்வளவுதான் அனுபவித்தாலும் நிறைவைத் தராத காமத்தின் பாற்பட்ட சுகத்தை நிறைவு செய்வதற்காக, மான அவமானம் என்பதே இல்லாமல் கர்வத்தோடு இருப்பர். என்றும் குறையாத மதி மயக்கத்தோடே, கடுமையான கோபத்தையுடையவராயும் இருப்பர். பொறுமை என்பதே சிறிதும் இல்லாத தவத்தை மேற் கொண்டு, பொய்மையான தவத்தையும் செய்வர்.

நிறைவிலா-மன நிறைவைத் தராத, நிரைக்க-பூர்த்தி செய்ய, மருவி-சேர்ந்து, பொறை-பொறுமை, பொய்த்தவம்-தவம் செய்பவரைப் போல பொய்யாக, இது ஒரு அறுசீரடியாசிரிய விருத்தம்.

இறந்து போமளவு மெய்தப் பொருளையே யெய்த நிற்பார்
மறந்து மோர் பொருள் வேறில்லை வரும் பயனன்றி என்பார்
சிறந்து போகங்கட்ட காகத் தீமையே பொருளெலாம் செய்வார்
பிறந்து பேராசை யாற் பாசத்தாற் பிணிக் கப்பட்டார். 10

தாம் இறந்து போகும் காலம் வரை நிறைய பொருளைப் பெறவேண்டும் என எண்ணி அதனைப் பெறவேண்டியே செயல்படுவார்கள். தனக்கு ஒரு பயன் கிடைக்காததாகில் கைப்பொருளை எவருக்கும் கொடுக்க மாட்டார்கள். காம சுக போகங்களை அனுபவிப் பதற்காகத் தீய செயல்களை எல்லாம் செய்வார்கள். இவ்வுலகில் பிறந்து பேராசையினால் கட்டுண்டவர்கள்.

இறந்து போமளவு-இறக்கும் காலம் வரை, வரும் பயனன்றி-தனக்கு ஒரு பயன் கிட்டாதன்றி, பிணிக்கப்பட்டார்-கட்டுண்டவர்கள்.

இப்பொருளை டைந்தோம் வேறிப்பொருளை யடைவோ
மென்று
மிப்பகை செருத்தோம் வேறியப் பகையினைச் செயிப்போ
மென்றுநீ
துய்ப்பவ ரெம்மற்று துய்க்க வல்லவரில்லை யென்றும்
மொய்ப்ப ரெம்மின் மிக்கார் ருளர் கொல் வென்று நிற்பர். 11

இந்த அளவு பொருளைப் பெற்றுவிட்டோம் இனி வேறு எப்பொருளை அடையலாம் என்றும், இதுவரை இருந்த பகைவரை எல்லாம் வெற்றி கொண்டோம். இனியும் எவரை வெற்றி கொள்ளலாம் என்றும், எம்மைப் போல் எல்லா வகையான இன்பங்களையும் அனுபவித்தவர் வேறு எவரும் இல்லை என்றும், எம்மளவிற்கு பெரிய கூட்டமான உறவினர்கள் வேறு எவருக்கும் உள்ளதோவென்று செருக்குடன் நிற்பர்.

செருத்தோம்-வெற்றி கண்டோம், துய்ப்பவர்-அனுபவித்தவர், மொய்ப்பவர்-உறவென்று கூடி நிற்பவர்.

இனம் வலிஇன்பம் பெற்றோ மெம்மின் மிக்கார் களில்லை
தன மிகவுடை யோமென்றுந் தம்மையே வியவ நிற்பர்
மனதினில் யாகஞ்செய்வோ மழை யெனக் கொடுப்போமென்று
தினமிவை தோறும் சிந்திப்பது வலார் செய்வதில்லார். 12

அதிகமான உறவினர்களை உடையவர்கள் எனவும் தாமே வலிமை மிக்கவர் எனவும், இன்பங்களை அனுபவிப்பதில் எங்களை மிஞ்சியவர் எவரும் இல்லை எனவும், பொருள் மிகப் படைத்தோர் எனவும் தங்களைத் தாங்களே பாராட்டிக்கொள்வர். யாகங்களைச் செய்வோம், மேகங்கள் மழையைக் கொடுப்பது போல தானங்கள் செய்வோம் என்றெல்லாம் தினமும் மனதிலே நினைப்பார்களேயன்றி அப்படி ஏதும் செய்ய மாட்டார்கள்.

இனம்-உறவினர், வலி-வலிமை, வியவ-வியந்து, தனம்- செல்வம், சிந்திப்பவலார்-சிந்திப்பவர்களே தவிர.

துடக்கற வில்லாத நினை வெனப்பட்ட சூழலைப் பற்றியே
சுழல்வர்
ரடக்கரிதாய் மயக்கமென்கின்ற வலையுளே யகப்பட்டு நின்றா
ருடற் குடில் வாழ்வாம் புன்னுனிப் பனி நீருலர்ந் திடினுயிர்
நடுக்கெய்தி
கடப்பரி தாய நரக மென்கின்ற கடகனில் வீழ்வே கடவர். 13

இடைவிடா நினைவெனும் சூழலில் அகப்பட்டு சுழன்று கொண்டிருப்பார்கள.. அடக்கமுடியாத மாய வலையில் அகப்பட்டு நின்றவர்கள். உடலாகிய இச்சிறு வீட்டின் வாழ்வானது புல்லின் நுனியில் உள்ள பனித்துளி யானது சூரிய ஒளி பட்டவுடன் உலர்ந்து போய் விடுவதைப் போல உயிரானது உடலை விட்டுப் போய்விடும என்பதை அறியார். கடந்து கரையேற இயலாத நரகம் எனும் கடல்களில் வீழ்ந்து அழிவார்கள்.

துடக்கற வில்லாத-இடைவெளி இல்லாத, உடற்குடில்-உடல் என்னும் சிறுகுடிசை, புன்னுனிப்பனி-புல்+நுனி+பனி, நீருலர்ந்திடினுயிர்-நீர்+உலர்ந்திடின்+உயிர். இது ஒரு எழுசீரடி ஆசிரிய விருத்தம்.

வியந்து தங்களையே மேலாய்ப் பார்த்து மெய் மாந்தர் தம்மை
நயந்து கொண்டாட யில்லார் நல்லவை செய்தாரென்றும் பயந்து
பயந்துடர்ந் துரைத் தற்காகப் பாடிய பழய நூல்க
லியம்பியபடி செய்யாதே யாகங்களியற்றா நிற்பர். 14

தங்களைத் தாங்களே வியப்புடன் நோக்கி உயர்வாய் எண்ணிக்கொள்வார்கள். உண்மையான நல்ல மனிதர்களைப் பணிந்து பாராட்டவும் மாட்டார்கள், தம்மைக் கண்டு பயப்படுகிற காரணத்தால், இவர் நல்லவை எல்லாம் செய்பவர் என்று கூறுவதற்காக வேண்டி, பழைய நூல்களில், பெரியோர்கள் சொல்லி வைத்த முறைப்படி அல்லாமல், அவர் தாம் விருப்பத்திற் கேற்ப முறையற்ற வகையில் யாகத்தையும் செய்வார்கள்.

வியந்து-ஆச்சரியப்பட்டு, மெய் மாந்தர்-உண்மையான நல்ல மனிதர்கள், நயந்து-பணிந்து, கொண்டாட-பாராட்ட, இது கலிநிறைத்துறை விருத்தம்.

மன்னிய களிப்பொடு வலியுங் காமமும்
துன்னியா னென்று பெருமயக்கஞ் சூழ்ந்துளோ
ரெண்ணிய யியல்பு தனினும் யாவர் மாட்டினும்
மன்னிய மெனக் கெடு பொறாமை யாக்குவர். 15

இயல்பாகவே ஆகிப்போன சந்தோசத்தோடும், வலிமையோடும், காமத்தோடும் கூட உள்ளவன் நான் என்று பெரிய மயக்கம் சூழ்ந்த காரணத்தால் தம்மை எண்ணிக் கொண்டவர்கள் தன்னைத் தவிர வேறு எவர் பேரிலும், கெடுதலைத் தரக்கூடிய பொறாமை கொள்வார்கள்.

களிப்பு-மகிழ்ச்சி, காமம்-ஆசை, பெருமயக்கம்-தீமை தரும் மயக்கம்.

மற்றவர் தம்மை யிந்த மானிடரானோ ரியார்க்கும்
கொற்றவ கீழானாரைக் கொடுமையா லரவொப்பாரை
யற்றமி லிடும்பை சேரு மசுரர்கள் யோனியாய்
புற்றரை தோறு யானே புகப்புக வீழ்த்துகின்றேன். 16

இந்த உலகத்தில் உள்ள மானிடர்களுக்கெல்லாம் அரசனான அருச்சுனா! இப்படிப்பட்ட பாம்பினைப் போல தீமை செய்யும் கீழானவர்களை அசுர யோனிகளில் பிறக்கும்படியாக நானே மீணடும் மீண்டும் வீழ்த்துகிறேன்.

கொற்றவ-மன்னா; அரவொப்பாரை-பாம்பினை ஒத்தவர்களை, இடும்பை-தீமை, தெய்வ யோனி ×அசுரயோனி. இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

இவ்வகை யசுர யோனி யடைந்தோர்
மெய் வகையாய் மறிவின் மையினால்
நைவர் கடீ நரக கதிதோறு முயல்
வகையின்றி யுழன்று திரிந்தே ! 17

இப்படியாக அசுர யோனியை அடைந்தவர்கள் உண்மையை ஆராய்ந்து அறியும் அறிவின்மையினால் மிகவும் கஷ்டத்தை அடைந்து, தாம் வீழ்ந்த அந்த நரக பிறவி தோறும் முன்னேறுவதற்கான வழியில்லாது அங்கேயே சுழன்று திரிவார்கள்.

நைவர்-துயர் அடைவர், முயல்வகை=-உய்வதற்கான வழிவகை, இது ஒரு கலி விருத்தம்.

ஒருவன் சிக்க வியற்றுவ தேனு
பரு நரகத்தி லடைப்பது தானும்
வருகை மூன்றுள மற்றவை தன்னை
யொரு முறை கூறி வுணர்த்திடுவேன் கேள். 18

நரகத்தில் அடைக்கப்படும் நிலையை அடைய மூன்று காரணங்கள் உண்டு. இப்போது நீ ஒருவன் மட்டும்தான் நான் சொல்வதைக் கேட்க உள்ளாய் இருந்தாலும் அதனை ஒருமுறை கூறி உனக்கு உணர்த்து கிறேன் கேள்!

ஒருவன் சிக்க-சிக்கி இருப்பது ஒருவன் மட்டும், வருகை மூன்றுள-மூன்றுவிதமான காரணங்கள்.

காதலினாகிய காம முலோபமுங்
கோதறவே சுடு தீ நிகர் கோப
மாதலி னாலவை மூன்று மகன்றார்
வேதனை தீர பெரு வீடு விளைந்தார். 19

ஆசையினால் உண்டாவதாகிய காமமும், லோபமும், பெரியதாக சுடக்கூடிய தீயை யொத்த கோபத்தின் காரணமாகவே தோன்றுவனவாகும். ஆகவே ஆசை, காமம், லோபம் என்னும் இம்மூன்றையும் அகற்றியவர்கள் தங்களின் துயரம் தீரும்படியாக வீடுபேறு அடைவார்கள்.

காதல்-ஆசை, கோதற-முற்றிலுமாக.

கூறின நூல் வழி சேர்குறி பேணா
தேறின வாறு செய்வா ரிகலோகம்
வேறியலா பரலோகம் விளைக்கும்
பேறின வானவை பேறு பெறாரால். 20

சொல்லப்பெற்ற நூலாகிய வேத நெறிகளின்படி நடவாது, தங்கள் மனம் போனபடி எல்லாம் செய்வோர். இகலோக இன்ப மட்டுமின்றி பரலோக நன்மைகளையும் அடையமாட்டார்கள்.

கூறின் நூல் – வேதங்கள் என்க, பேணா–போற்றி, அதன்படி செயல்படாத, தேறினவாறு–தமக்குச்சரி யெனப்பட்டவாறு.

ஆதலிடர்க வரிகைக்கு வழியான
வேத முதனூலானவை விதித்த நெறியாலே
யேத வினை யாதுன் வினையே யிசை வென்றான்
பூதமுதலா னவை பொருத்தருளு கின்றான். 21

ஆகையினால், துன்பம் வருவதற்குக் காரணமாகிய வேதம் முதலான நூல்கள் விதித்த நெறிமுறைகளைப் பின்பற்றி வினை செய்யாத நிலையை விடுத்து, அவைகளுக்கு இசைவான செய்கைகளையே செய் என்று, பூதங்கள் முதலானவற்றின் குணங்களை எல்லாம் பொறுத்துக் கொண்டு அவரவர்களுக்கு அருள் செய்கின்ற வனாகிய கண்ணன்.

ஆதலிடர்க வரிகை–ஆதலில்+இடர்+வருகை, வழியான–காரண மான, யேத–ஏற்ப, இசைக–ஏற்றுச் செய்க.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–16

தெய்வாசுர சம்பத் விபாக யோகம்

1. ஸ்ரீ பகவான் சொல்கிறான், அஞ்சாமை உள்ளத் தூய்மை ஞான யோகத்தில் உறுதி. தன்னடக்கம், வேள்வி, கற்றல், தவம் நேர்மை.

2. கொல்லாமை, வாய்மை, சினவாமை, துறவு, ஆறுதல், வண்மை, ஜீவதயை, அவாவின்மை, மென்மை, நாணுடைமை, சலியாமை.

3. ஒளி, பொறை, உறுதி, சுத்தம், துரோகமின்மை, செருக்கு கொள்ளாமை, தெய்வ சம்பத்தை எய்திய வனிடம் காணப்படுகின்றன.

4. பார்த்தா! டம்பம், இறுமாப்பு, கர்வம், சினம், கடுமை, அஞ்ஞானம், அசுர சம்பத்தை எய்தியவனிடம் காணப்படுகின்றன.

5. தேவ சம்பத்தால் விடுதலையுண்டாம். அசுர சம்பத்தால், பந்தமேற்படும் என்பது என் கொள்கை. பாண்டவா! தேவசம்பத்தை எய்தி விட்டாய் துயரப்படாதே!

6. பார்த்தா! இவ்வுலகத்தில் உயிர்ப் படைப்பு இரண்டு வகைப்படும். தேவ இயல் கொண்டது. அசுர இயல் கொண்டது. தேவ இயல் கொண்டதை விரித்துச் சொன்னேன். அசுர இயல் பற்றி என்னிடம் கேள்.

7. அசுரத்தன்மை கொண்டோர், தொழில் இயல்பையும் வீட்டியல்பையும் அறியார். அவர்களிடம்

தூய்மையேனும் இல்லை. வாய்மையேனும் காணப் படுவதில்லை.

8. இவ்வுலகம் உண்மையற்றதென்றும், நிலையற்ற தென்றும், கடவுளற்றதென்றும் சொல்கிறார்கள். காமத்தை ஏதுவாக உடையது. இது தவிர என்ன அந்த அசுர குணம் படைத்தவர்கள கூறுவார்கள்?

9. இந்தக் காட்சியில் நிலைபெற்று, அற்ப புத்தியுடைய அந்த நஷ்டாத்மாக்கள், தீமையையே நினைப்பவர்களாக, கொடிய தொழில் செயபவர்களாக உலக நாசத்திற்கே முனைகிறார்கள்.

10. டம்பமும், மதமும், பொருந்தியவராய், நிரம்ப ஒண்ணாத காமத்தைச் சார்ந்து, மயக்கத்தால் பொய்க் கொள்கைகளைக் கொண்டு, அசுத்த நிச்சயங்களுடைய தொழில்புரிகிறார்கள்.

11. பிரளய மட்டும், தீராத எண்ணற்ற கவலைகளில் பொருந்தி, விருப்பங்களைத் தீர்த்துக் கொள்வதில் ஈடுபட்டோராய், உண்மையே இவ்வளவு தான் என்ற நிச்சயமுடையோராக.

12. நூற்றுக்கணக்கான ஆசைக் கயிறுகளால் கட்டுண்டு, காமத்துக்கும், சினத்துக்கும் ஆட்பட் டோராய், காம யோகத்துக்காக அநியாயஞ் செய்து பொருட்குவைகள் சேர்க்க விரும்புகிறார்கள்.

13. என்னால் இன்று இன்ன லாபம் அடையப் பட்டது. இன்ன மனோரதத்தை இனி எய்துவேன், என்னிடம் இந்தச் செல்வம் உள்ளது. இனி இன்ன பொருளைப் பெறுவேன்.

14. இன்ன பகைவரைக் கொன்று விட்டேன். இனி மற்றவர்களைக் கொல்வேன். நான் ஆள் ஆவேன். நான் போகி,

15. நான் செல்வன், பெரிய குடும்பத்தை உடையவன். எனக்கு நிகர் வேறு யாவருளர்? வேள்வி செய்கிறேன். கொடுப்பேன். களிப்பேன் என்ற அஞ் ஞானங்களால் மயங்கினோர்.

16. பல சித்தங்களால் மருண்டோர், மோக வலையில் அகப்பட்டோர். காம போகங்களில் பற்றுண்டோர். இவர்கள் அசுரத்தனமான நரகத்தில் வீழ்கிறார்கள்.

17. இவர்கள் தற்புகழ்ச்சியுடையோர்கள், முரடர், செல்வச் செருக்கும் மதமும் உடையோர். அவர்கள் பெயர் மாத்திரமான வேள்வியை, டம்பத்துக்காக விதி தவறி செய்கின்றனர்.

18. அகங்காரத்தையும், பலத்தையும், செருக்கையும் விருப்பத்தையும், சினத்தையும் பற்றியவர்களாகிய பிறரை இகழ்கின்றவர்களாக, மற்றவர் உடல்களிலும் உள்ள என்னை வெறுக்கிறார்கள்.

19. வெறுப்பவர்களாகவும், கொடியவர்களாகவும் உலகத்தில் எல்லாரிலும் கடைப்பட்ட இந்த அசுப மனிதரை நான் எப்போதும் சம்சாரத்தில் அசுரப் பிறப்புகளில் எறிகிறேன்.

20. குந்தியின் மகனே! இம்மூடர் என்னை எய்தாமலே பிறப்புத் தோறும், அசுரக் கருக்களில் தோன்றி மிகவும் கீழான கதியைச் சேருகிறார்கள்.

21. இவ்வாறு, ஆத்ம நாசத்துக்கு இடமான, இம்மூன்று நரக வாயில்கள், காமம், சினம், அவா ஆதலால் இம்மூன்றையும் விடுக.

22. குந்தியின் மகனே! இந்த மூன்று இருள் வாயில் களிலிருந்தும் விடுபட்டோன், தனக்குத் தானே நலந் தேடிக் கொள்கிறான். அதனால் பரகதி அடைகிறான்.

23. எவன் சாஸ்திர விதிகளை மீறி, விருப்பத்தால் தொழில்புரிவானோ, அவன் சித்திபெறமாட்டான். பரகதி அடையமாட்டான். அவன் இன்பம் எய்த மாட்டான்.

24. ஆதலால் உனக்கு, எது செய்யத்தக்கது. எது செய்யத்தகாதது என்று நிச்சயிப்பதில், நீ சாஸ்த்திரத்தைப் பிரமாணமாகக் கொள். அதை அறிந்து சாஸ்திர விதியால் கூறப்பட்ட தொழிலை செய்யக்கடவாய்.

விளக்கவுரை

வியாசர் தமது பகவத்கீதையின் பதினாறாவது அத்தியாயத்திற்கு தெய்வாசுர சம்பத் விபாக யோகம் எனத் தலைப்பிட்டு இருபத்து நான்கு சுலோகங்களை இயற்றியுள்ளார். சுவடி ஆசிரியர் இவ்வத்தியாயத்திற்கு தேவர் அசுரவத்தியாயம் எனத் தலைப்பிட்டு இருபத் தொரு விருத்தங்களை இயற்றியுள்ளார்.

விருத்தம் 1. கண்ணன் தன்னை ஏன் மனிதனாக ஆக்கிக் கொண்டான் எனக் கூறப்பெற்றுள்ளது. இதைப் போல வியாசர் கூறவில்லை.

விருத்தம் 2. உலகின் வாழும் மக்களில், தெய்வத் தன்மை வாய்ந்தவர்கள், அசுரத்தன்மை வாய்ந்தவர்கள் என இருவகைப்பட்டவர்கள் உள்ளார்கள் எனவும் அவர்களின் தன்மையைக் கூற இருப்பதாகக் கண்ணன் கூறுகிறான். இப்படி ஒரு முன்னுரையை வியாசர் கூறவில்லை.

விருத்தம் 3, 4, 5. ஆகிய மூன்று விருத்தங்களில் தெய்வத்தன்மை வாய்ந்தவர்களின் இயல்புகள் கூறப் பெறுகின்றன.

விருத்தம் 6. தீமைகளைச் செய்கின்ற அசுரத் தன்மை வாய்ந்தவர்களின் இயல்புகளைச் சொல்லத் தொடங்குகிறார்.

வியாசர் தமது முதல் சுலோகத்திலேயே தெய்வத் தன்மையர்களின் சிறப்பைக் கூறத்தொடங்கி முதல் மூன்று சுலோகங்களில் அவைகளைக் கூறிய பின் நான்காவது சுலோகத்தில் தான் அசுர குணம் படைத்தவர்களைப் பற்றி

சொல்லத் தொடங்குகிறார். ஐந்தாவது சுலோகத்தில் தேவ சம்பத்தினால் விடுதலையும், அசுர சம்பத்தினால் பந்தமும் ஏற்படும் என்கிறார். இங்கு சம்பத் என்ற சொல்லுக்குக் குணம் எனப்பொருள் கொள்ளலாம்.

விருத்தம் 7. இதிலும் அசுர குணத்தவர் பற்றியே உள்ளது. வியாசர் தமது ஏழாவது சுலோகத்தில் அசுர சம்பத்துடையவர்களிடத்தில் தூய்மையும் இல்லை, வாய்மையும் இல்லை என்கிறார்.

விருத்தம் 8. இவ்வுலகத்தவர்களைப் பகைவரைப் போல் இருந்து அழிப்பதற்காகவே இவ்வசுர குணத்தவர் பிறவி எடுத்துள்ளார்கள் எனக் கூறப்பெறுகிறது.

விருத்தம் 9. இதுவும் அது.

விருத்தம் 10. இதிலும் முன் சொன்னதே.

விருத்தம் 11. தொடர்ந்து அசுர குணத்தவர் பற்றி.

விருத்தம் 12. இங்கும் அசுர குணத்தவர் பற்றியே கூறப்பெறுகிறது.

விருத்தம் 13. பனித்துளி காலை வேளையில் இலைகளின் நுணியில் இருப்பவை சூரிய ஒளி பட்டவுடன் உலர்ந்து மறைவதைப்போல உயிரானது உடலை விட்டு மறைந்துவிடும் என்கிறார். உயிருக்கும் உடலுக்கு மான இப்படிப்பட்ட ஒரு உவமையை வியாசர் கூறவில்லை.

விருத்தம் 14. இங்கும் அசுர குணத்தவர் பற்றியே கூறப்பெறுகிறது.

விருத்தம் 15. இங்கும் அதுவே வேறுபட்ட செய்திகள்.

விருத்தம் 16. இவ்விருத்தத்தில் தீமை செய்யும் அசுர குணத்தவர்கள் பாம்பைப் போன்றவர்கள் என ஒரு உவமையைக் கூறுகிறார். இதுவும் வியாசரால் சொல்லப் பெறாத ஒன்று.

விருத்தம் 17. அசுர குணம் கொண்டோரை மீண்டும் மீண்டும் அசுர யோனியில் தானே பிறக்கச் செய்வதாகக் கண்ணன் கூறுகிறான். இவ்வாறு கண்ணன் கூறுவதாக வியாசர் கூறவில்லை.

விருத்தம் 18. நரகத்தில் வீழ்வதற்கு மூன்று காரணங்கள் உண்டு என்கிறார்.

விருத்தம் 19. அவை ஆசை, காமம், லோபம் ஆகியவை எனவும் இவற்றிற்கெல்லாம் கோபமே மூல காரணம் என்றும் கூறப்பெற்றுள்ளது. இச்செய்தி வியாசரின் இருபத்தொன்று, இருபத்திரண்டு ஆகிய சுலோகங்களில் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 20. முதலில் சொல்லப்பெற்ற மூன்று தீய குணங்களையும் அகற்றியவர்கள் வீடுபேறு அடைவார்கள் எனக் கூறப்பெற்று, வேத நெறிகளின்படி நடக்காமல் தங்கள் மனம் போனபடி எல்லாம் வாழ்பவர்கள் இகலோகம், பரலோகம் ஆகிய இரண்டிலும் இன்பம் அடையமாட்டார்கள் எனப்பெறுகிறது.

வியாசரின் 22, 23 ஆகிய சுலோகங்களில் இக்கருத்து உள்ளது.

விருத்தம் 21. துன்பம் தருவனவாகிய செயல்களைச் செய்யாது வேதம் முதலான நீதி நூல்களில் சொல்லப் பெற்றவைகளையே செய் எனக் கண்ணன்

அருச்சுனனுக்கு உரைத்து நிறைவு செய்யப்பெற்றுள்ளது. இதுவே வியாசரின் நிறைவுச் சுலோகமாகிய இருபத்து நான்காவது சுலோகத்தில் கூறப்பெற்றுள்ளது.

இவ்வத்தியாயம் மனிதன் நன்னெறிகளைக் கடைப் பிடித்து வாழவேண்டும் என்பதை வலியுறுத்தி தீய குணம் என்பது என்ன என்பதை விளக்கமாகக் கூறுவதோடு அப்படிப்பட்ட தீயவர்கள் செய்யக்கூடிய செயல்கள் எவை எனவும் அவர்கள் தங்கள் மனதளவில் எந்தவிதமான எண்ணங்களைக் கொண்டிருப்பார்கள் என்பதையும் விரிவாகக் கூறப்பெற்று, நிறைவாக வீடுபேறு எய்த வேண்டும் என்ற அவா நிறைவடைய வேண்டுமானால் தெய்வகுணங்கள் பொருந்தியவனாக செயல்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறப்பெற்றுள்ளது. ஆகவே பகவத்கீதையின் மிக முக்கியமான ஒரு நீதி கூறும் அத்தியாயம் இதுவெனலாம்.

பதினோழாவது அத்தியாயம்
குணவிகாரவத்தியாயம்

உண்டு மீள வளித் துலகி யாவையுங்
கண்டு காப்ப வின் கட்டுரைத் திட்டதே
கொண்டு பாத்த னக் கொண்டல் வண்ணன் தன்னைத்
தொண்டு கூறிப் பணிந்திவை சொல்லினான். 1

இப்பூவுலகத்தையே உண்டு மீண்டும் அளித்து அதனைக் காப்பாற்றுபவனுமாகிய கண்ணன் இதுவரை கூறியதை நன்றாக மனதில் கொண்டவனாக அருச்சுனன் அந்த மேக வணணனாகிய கண்ணனுக்கு தன்னைத் தொண்டன் எனக்கூறி பணிந்து இவைகளைக் கூறத் தொடங்கினான்.

கண்டு காப்பவ-உயிர்களின் நிலையைக் கண்டு காப்பவன், கொண்டல்-மேகம், தொண்டு கூறி-தன்னைக் கண்ணனின் தொண்டன் எனக்கூறி. இது ஒரு கலி விருத்தம்.

வேதமே முத நூல் விதியின்றியே
காதலா லுலகோர் செய்யுங் காரிய
மேதமாங் குண மூன்றினும் யாதென
வோத மாக் கடல் வண்ணனு மோதினான். 2

முதல் நூலாகிய வேதத்தில் சொல்லப் பெற்றுள்ள விதிமுறைகளின்படி அல்லாமல் தங்கள் தங்கள் விரும்பிய வாறெல்லாம் செய்யும் காரியங்கள் எல்லாம் மூன்று குணங்களில் இதற்கு ஏற்ற குணம் எதுவென அருச்சுனன் கேட்க, குளிர் நீருடைய பெரிய கடலின் நிறத்தையுடைய கண்ணன் கூறலானான்.

காதலால்-விருப்பத்தினால், காரிய மேதமாங்-காரியம்+ஏதம்-ஏதம்-ஏற்றது-சரியானது. வோதம்-குளிர்ந்த, மாக்கடல்-பெரிய கடல்.

யாவர் களாசைப் பாடு மியம் பிடி லியம்பப் பட்ட
மூவகைக் குணனு மாகி யல்லது முற்றுகிலார்
மேவரு மவற்றி னாய் வேறு பாடதனை யெல்லாங்
கரவா தெரியக் கூறக் கேளெனக் கழ லலுற்றான். 3

எல்லோருடைய ஆசையும் என்னவென்பதைச் சொல்வோமானால், அவை யாவும் பெரியோர்களால் சொல்லப்பெற்ற மூன்று வகையான குணங்களின் பாற்பட்டதென்றேயாகும். அப்படி அம்மூன்று குணங் களுக்கும் உள்ள வேறுபாட்டினை எல்லாம் ஒளிக்காமல் நீ தெரிந்து கொள்ளும்படிக் கூறுகிறேன் கேட்பாயாக என்று கூறினான்.

முற்றுகிலார்-இதைத்தவிர வேறில்லை எனக் கொள்க. கரவாது-மறைக்காமல், கழலலுற்றான்-சொல்லத் தொடங்கினான். இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

சாத்துவீகர் தேவரையே சரண்புகுவர் தாமதர்கள்
காத்தல் புரிவர் பேயும் பூதமுமாய்க் கடைப்பிடிப்பர்
ரேத்தரிய அவற்றினி ராசதமாங் குணமுடையோர்
கர்த்த னென வரக்கரையு மியக்கரையு மடைவார்களால். 4

சாத்வீக குணமுடையவர்கள் தேவர்களையே சரணமென்று வழிபடுவார்கள். தாமஸ குணமுடைய வர்கள், தம்மைக் காப்பாறக் கூடியவர்கள் பேயும் பூதமுமே என்று அவர்களை வழிபடும் முறைகளைக் கடைப்பிடிப்பார்கள். இராசதகுணமுடையவர்கள் தம்முடைய தெய்வம் என்று அரக்கரையும், எட்சர் களையும் வழிபடுபவர்கள்.

ஏத்தரிய-பெரியவர்கள் என்று பாராட்ட இயலாத, கர்த்தர்-எல்லா வற்றையும் செய்பவர், அரக்கர்+இயக்கர்-எட்சர், இது ஒரு கொச்சகக் கலிப்பா.

அடங்கிய பொறியி னாலறிவு மின்றியே
இடம்படு நூல்களி யம்பு மன்றியே
வுடம்பையு முயிரையு மொருக்கு மாதவத்
தொடங்குவா ரசுர யோனி களிற் றோன்றினார். 5

ஐம்பொறிகளின் அடக்கத்தினால் வரக்கூடிய நல்லறிவுமில்லாது, இங்கு உள்ள அறநூல்களால் சொல்லப்பெற்றபடியும் அல்லாமல், உடலையும் உயிரையும் ஒடுக்கக் கூடிய பெரிய தவத்தை அசுர யோனியிற் பிறந்தவர்கள் செய்யத் தொடங்குவார்கள்.

பொறி-ஐம்பொறி, ஒருக்கும்-ஒடுக்கும், இது ஒரு கலி விருத்தம்.

உண்பர் யோகம் யாருமுறு தவந்தான் மென்ன
வொண் பட வுரைத்த நான்கு மோரென்று மூன்றாய் நின்ற
பண்படுங் குணங்களாலே கேளெனப் பற்றும் வீடு
நண்பொடு பகையுமிலான் முறை மையினவில லுற்றான். 6

எல்லோராலும் தவயோகமே மேலானது என்று கூறினாலும், அறியும்படி தெளிவாக உரைத்த நான்கு வேதங்களையும் தெரிந்துகொள். தங்களுக்கே உரிய வேறு பாடாண குணங்களினாலே அவை மூன்று தான் என, பற்று-வீடுபேறு-நண்பர்-பகைவர், என எவருமில்லாத கண்ணன் முறையாகக் கூறினான்.

உண்பர்-ஏற்றுக் கொள்வர், வொண்பட-யாவரும், தெளிவாக அறியும்படி, ஓர்-உணர்ந்து கொள்.

சத்துவ குணத்தா ருணாவது ரைத்திடிலழகு சார்ந்து
தித்திக்கச் சுவையவாகி தேகஞ்சிக் கெனவுஞ் சேர்ந்த
வத்தித்து வலி நோயின்மை நல்லாயு ளின்பம்
மத்திக்கச் செய்த விந்த வுணவு தான் மடங்க லன்னாய். 7

ஆண்சிங்கத்தை ஒத்த அருச்சுனா!! சத்துவ குண முடையோர் உண்ணும் உணவினைப் பற்றி சொல்கிறேன். அது அழகைத்தருவது, சுவையில் தித்திப்பது, அதை உண்டால் தேகம் சிக்கென பலமுடையதாக ஆகும். அத்தோடு கூட உடல் வலியைத் தீர்க்கும். நோய் அண்டாது. நல்ல ஆயுளைத் தரும். காமத்தை அழியச் செய்யும் ஆக இப்படிப்பட்டது தான் அது.

தேகம் சிக்கென-உடல் கொழுப்பின் காரணமாகப் பெருக்காது சிக்கென பலமுள்ளதாக. சேர்ந்தவதித்தித்து-சேர்ந்த அவை இனியதாக. சேர்ந்த+அவை+தித்தித்து, மடங்கல்-ஆண்சிங்கம். ஆயுளின்ப மத்தித்தி-ஆயள்+இன்பம்+மத்தித்து. மத்தித்து-அழித்து.

இப்படி யன்றி வேறோ ரிராசத ருணவுகேட்கிற்
கைப்பன புளிப்பு வர்ப்புக் கூர்ப்பன கடியவெய்து
நெய்ப்பயி நெருப்புப் போலச் சுடுவன விவற்றினாலே
மெய்ப்படு நோயு நெஞ்சத் திடும்பையும் விளைவிப்ப
வேலோய்! 8

இவ்வாறு அல்லாது வேறு இராசத குணத்தவர்களின் உணவு எவ்வகைப்பட்டது என்று கேட்டால், கைப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு என சுவைக்கக் கூடாதென வாகவும், நெய் வார்த்த நெருப்பினைப் போல சுடக்கூடிய தாகவும், இவற்றை உண்பதால் உடலுக்கு நோயும், மனத்திற்கு கெடுதலும் விளைவிப்பனவாக இருக்கும். இதை வேலினையுடைய அருச்சுனா நீ அறிவாயாக!

கூர்ப்பன-கார்ப்பு-கசப்புச் சுவையன. மெய்-உடல்.

ஆசினை யடைந்த நெஞ்சிற் றாமதரணவு கேட்கி
லாசின பழஞ்சோ ரெச்சி லுமுண்பர் பூசனைக் காகா
பேசின வெந்திலாத விளைவன விவற்றினாலே
காசின முதல யுள்ள துயரெலாம் விளைவு கண்டாய். 9

குற்றத்தையுடைய மனமுடையவர்களாகிய தாமச குணமுள்ளவர்களின் உணவைக் கேட்கின், ஊசிப்போன, கெட்டுப்போன, பழஞ்சோற்றையும், இறைவனின் படையலுக்கு ஆகாதனவற்றையும் உண்பார்கள் இதனால் கடுங்கோபம் முதலான துன்பந்தருவன வெல்லாம் விளையும் என்பதை அறிவாயாக.

ஆசினை-குற்றத்தினை, காசின-காய்+சின, கடுமையான கோபம்

செய்யத் தகுவன வென்றல்லாமற் சேர்ப்பயன் சிந்தியாதே
தயத்த நூன்முறை செய்யா கஞ்சார்ந்து விதன் செய்த யாகம்
பயத்தையே வேண்டியாதல் பலர் புகழ்தல் வேண்டியாத
வியற்றுறுகின்ற பாதமிரா ஜஸரியாக மதே ! 10

இது செய்யவேண்டிய கடமை என்று எண்ணா மலும், அப்படிச் செய்வதால் வரக்கூடிய பலனைப் பற்றி சிந்திக்காமலும், யாகம் செய்வதற்கான விதிகளைச் சொல்லக்கூடிய நூல்களில் சொல்லியுள்ள முறைப்படி யான யாகத்தைச் சாத்வீக குணத்தவர் செய்வர். ஆனால் ராஜஸ-ராசத-குணமுள்ளவர்கள் பயனை வேண்டியும், பலரால் புகழப்படுவதற்காக வேண்டியும், யாகத்தை செய்வார்கள்.

சேர்ப்பயன்-கிடைக்கும் பயன், வீதன்-சாத்வீகன், இயற்றுறு-செய்கின்ற, ராஜஸ-ராசத.

நூற்படு நெறியு மின்றி நுனித்தவர் முதலாயுள்ள
தாற்பரியமும் வேறன்றித் தக்க மந்திர முமின்றி
யேற்பவர்க் கீதலின்றி யியற்று றுகின்ற யாகந்
தாற் பொலிகின்ற மார்ப தாமத ரியாக மாமே! 11

மாலையணிந்து விளங்குகின்ற மார்பினையுடைய அருச்சுனா! நூல்களில் சொல்லப்பெறுகின்ற விதிமுறை ஏதும் இல்லாது, அரிய தவம் செய்தவர்களின் நடை முறையைப் பின்பற்றாமலும், உரிய முறையில் மந்திரங்கள்

சொல்லப்பெறாமலும், தானத்தை ஏற்கிறவர்களுக்கு எதுவும் கொடுக்காமலும், செய்யப்படுகிறதே தாமத குணத்தவர்கள் செய்யும் யாகமாகும்.

நுனித்தவர்-நுண்ணிய தவத்தினர், தாற்பரியம்-பின்பற்றப்பெறும் நன்னெறி, தாற்பொலி-தார் பொலி, -தார்-மாலை, பொலி-விளங்குகின்ற.

தீக்குலா வேலினாய் தவத்தின் செய்கைதான்
வாக்கினாற் பேசுதன் மனத்தி னாக்குக
யாக்கையாலிற்று றலா யிருப்பது
நோக்கினா னானிவற்றை நுனித்துக் கூறவே! 12

நெருப்பெனச்சுடும் வேலினையுடைய அருச்சுனா! வாயினால் தவத்தைப் பற்றி உயர்வாகப் பேசுதலும், மனத்தினாலேயும் அவ்வாறே நினைத்தாலும், உடம்பி னாலே காரியம் செய்வதுமாய் இருப்பதே தவத்தின் தன்மையாகும். இதனை அன்புடன் நுட்பமாகக் கூறுகிறேன் என்றான் கண்ணன்.

தீக்குலா-நெருப்பு சூழ்ந்த, வாக்கு-வாய்ச்சொல், நுனித்து-நுட்பமாக, துல்லியமாக. இரு ஒரு கலி விருத்தம்.

தீர்த்த யார்க்குஞ் செவிக்கினி தாயின
வார்த்தை மாமருந்தே யென லா மென
வோர்த்து மென்மொழி கூறுதல் ஓதுதல்
வார்த்தையாற் பண்ணு மாதவ மென்பதே! 13

வாய்ச்சொல்லினால் செய்யும் பெரிய தவம் என்பது, சந்தேகம் தீரும்படியாக, குழப்பம் இல்லாமல் செவிக்கு இனியவாகப் பேசுவதே பெரிய மருந்தாகும். ஆராய்ந்து மென்மையான வார்த்தை சொல்வதும் கற்பித்தலும் ஆகும்.

தீர்த்த-தெளிவான, மாமருந்து-உயர்வான மருந்து, வோர்த்து-ஆராய்ந்து, ஓதுதல்-கற்பித்தல். இரு ஒரு கலி விருத்தம்.

தெளிய நெஞ்சைச் செரியப் பிணித்தலும்
களிசெய் யய்ம் புலனைக் களிமாற்றலும்
குளிர்வு நெஞ்சி னுணர்வு கோணாமையு
மௌி தன்மான தமா தவமென்பதே ! 14

தெளிவாக மனத்தை நன்கு கட்டுப்படுத்துவதும் கூத்தாடும் ஐம்புலன்களின் ஆட்டத்தை அடக்குவதும் குளிர்ந்த மனத்தில் உணர்வுகளை மாறுபடச் செய்யா மலும், மௌனமாய் இருத்தலுமே பெரிய தவமாகும்.

தெளிய-தெளிந்த, செரிய-கட்டுப்படுத்தி, பிணித்தல்-பிணைத்தல் அடக்குதல், களி-தன் விருப்பம் போல ஆட்டம் போடுதல், கோணாமை-மாறுபடாமல், மௌிதன்மான-எளிதின் மன மென்பது மௌனம் எனக்கொள்க.

தலைமை யந்தணர் தேவர் குரவர் பால்
மலைதலின்றி வழிபடு வாழ்க்கையும்
கொலை துறத்த லுங் காமங் குறைத்தலுந்
தலைவ காயத் தவ மென்றி சைப்பதே ! 15

தலைவா! மேலான அந்தணர்கள், தேவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை தயக்கமின்றி வணங்கி வாழும் வாழ்க்கையும், கொலை செய்யாமையும் காமத்தைக் குறைத்துக் கொள்வதும் உடலால் செய்யப்பெறும் தவமென்று இனிமையாகக் கூறுவர்.

குரவர்-பெரியோர்-ஆசிரியர், மலைதல்-தயங்குதல், காயம்-உடல்.

தீத்தவழும் வடிவேலோய் செப்பிய விம் மூன்றாலுஞ்
சோற்றலாகும் கீழ் வெய்தச் செய்கின்ற வருந்தவத்தி
லார்த்து வரும் பலன் வேண்டாதா கின்ற வருந்தவந்தான்
சாத்துவிதத் தவமென்று சாத்துவதுத் தக்கோரே. 16

நெருப்பினில் இட்டு துவட்டப்பெற்ற அழகிய வேலினையுடைய அருச்சுனா! இதுவரை சொல்லப் பெற்ற இம்மூன்றாலும் உயர்வடைகின்ற உலகத்தார். இப்படிப்பட்ட தவத்தினால் வரக்கூடிய பலனைப் பற்றி ஆய்வு செய்து இதுவும் இவ்வுலகில் கீழ் நிலையையே அடைய உதவும் என எண்ணி அப்படிப்பட்ட தவத்தின் பலனையும் கூட வேண்டாதவராகியவர்கள் தவம்தான் சாத்துவித - சாத்வீக குணத்தவர் செய்யும் தவம் என்று பெரியோர்கள் கூறுவர்.

தீத்தவமும்-தீத்துவளும்,தீயிலிட்டு துவட்டப்பட்ட, சோற்று-சோர்ந்து சலித்து, ஆர்த்து-ஆராய்ந்து, சாத்துவர்-சாற்றுவர்-கூறுவர், தக்கோர்-தகுதியுடைய பெரியோர்கள். இது ஒரு கொச்சகக் கலிப்பா.

வசையி றவுமுடைய ரென மானிடர் கொண்டாடு கைக்கு
நசையினொடு பொருள் பெறவுஞ் செய்கின்ற நற்றவத்தை
விசைய வுனக்கு றை செய்தென் மிகப்பெரியோர் செய்திடினும்.
மிசைய வறி மற்றிதனை யிராசத மாந்தவ மென்றே! 17

குற்றமில்லாத நல்ல தவத்தைச் செய்கின்றவர் இவர் என மற்றவர்களால் பாராட்டப்பெறுவதற்காகவும், கேடு தரும் பொருட் செல்வத்தை பெருவதற்காகவும், செய்யப் பெறுகின்ற நல்ல தவத்தைப் பற்றி, விசயனே! உனக்கு இதுவரை கூறினேன். இப்படிச் சொன்னதால் என்ன பயன்? மிகப் பெரியோர்களால் இப்படிப்பட்ட தவம் செய்யப்பெற்றாலும் நீ அதனைச் சரி என்று எடுத்துக் கொள்ளாதே! ஏனெனில் இது இராசத குணமுடை யவர்கள் செய்வது என்று அறிவாயாக!.

வசை-குறை கூறத்தக்க, நசை-குற்றம், கொண்டாடுதல்-பாராட்டுதல்-புகழ்தல்.

பேதமையை மிக்க வுடைத்தாய் தன்னுயிர்க்கும் பிறவுயிர்க்கும்
மேதமுறு பெறுந் துயருங் கேடு மியற்றுவதா
யாதவனு பனியுமுள்ள றாற்றுகின்ற வருந்தவந்தான்
தாதலரு நெடுமுடியாய் தாமதமாந்தர் தவ மாமே ! 18

மொட்டவிழ்ந்த மலர்களையுடைய நெடிய முடியையுடைய அருச்சுனா! வெய்யிலிலும், பனியிலு மாக அலைந்து திரிபவர்கள் அறியாமையினால் தன்னுயிருக்கு மட்டுமில்லாது, மாறுபட்ட பிற உயிர் களுக்கும், துயரமும், கெடுதலும் செய்யக் கூடியதான தவத்தைச் செய்பவர்கள் தாமச குணம் உடையவர் களாவர்.

பேதமை-அறிவின்மை, மேதமுறு-பேதமுறு-மாறுபட்ட, யாதவன்-ஆதவன்-சூரியன்-வெய்யில், பிணி-நோய், தாதலரு-மொட்டுவிரியும்பூ.

முன் செய் காரியப் பொருட்டு மின்றியே முடிந்திதனாற்
பின் பொரு நற்பயன் விளக்கு மென்பதுவும் பேணாதே
நன்குடை நற்காலத்தே நல்விடத்தே நல்லவர்க்குந்
தன் பொருள் கொடுக்குமது சாத்து விதத்தானமே! 19

நம்முடைய முன்னோர்களால் இவ்வித தானங்கள் செய்யப்பெற்றன. ஆகவே நாமும் இதனைச் செய்வோம் என்ற கருத்தில் அல்லாமலும், இப்படி ஒரு தானத்தைச் செய்தோமானால், பிற்காலத்தில் இது நமக்கு ஒரு நல்ல பலனைக் கொடுக்கும் என்று கருதாமலும், நல்லதாகிய இத்தானத்தை, தேவையான நேரத்தில், தூய்மையான இடத்தில் தன்னிடத்திலே உள்ள பொருளை நல்லவர்களுக்குத் தானமாகக் கொடுத்துச் செய்யக்கூடிய தானமே சாத்வீக குணமுடையோர் செய்யும் தானமாகும்.

பேணாது-கருதாமல், நன்குடை-நல்ல தன்மையுடைய, நல்லவர்க்கும் என உள்ளதால் எவருக்கும் எனக்கொள்க.

கொண்டு செய்த் தகுங் கரும மெனுங் குறிப் பொன் றின்றியே
பண்டுசிலர் செய்தற்காய் பரிவினோடு பண்ணினவும்
உண்டிதனால் மேல் விளை வென்றுணர் வோடு கொடுத்தனவு
மெண்டிசையு நிறை புகழா இராச தமாந் தானமே! 20

இதுவே செய்யத்தக்க செயல் என்று உறுதியாகக் கொண்டு செய்யாது, முற்காலத்தில் சிலர் இதனைச் செய்தார்கள் அதனால் நாமும் இதனைச் செய்து விடுவோம் என்று செய்கின்ற தானமும், இந்த தானத்தைக் கொடுப்பதால் இனி நமக்கு நல்ல விளைவு உண்டு என்ற உணர்வோடு கொடுக்கின்ற தானமும், எட்டுத் திசை களிலும் நிறைந்த புகழையுடைய அருச்சுனா! இது ராசத குணத்தவர் செய்யும் தானமாகும்.

குறிப்பொன்று-உறுதி என்று ஒன்று, பண்டு-முன்னாளில், பரிவினோடு-இரக்கத்தால்.

வாயாத ஒரு பொருளை வழங்காத காலத்தே
யேயாத நிலத்திடையே யிழிந்த குலத்தவர் களுக்கே
யாயாத வறிவினோடும் பிரியத் தோடுங் கொடுத்தல்
காயாத பெருந்திறலாய் தாமத மாந் தானந் தானே. 21

தானத்தைப் பெறுகின்றவனுக்கு அப்போதைக்குத் தேவையே இல்லாத ஒரு பொருளை தேவைப்படாத ஒரு சமயத்தில் கொஞ்சமும் சிந்திக்காமல், ஏற்புடையதல்லாத ஒரு இடத்தில் வழங்குவதும்-குலத்தால் இழிந்தவர் களுக்குக் கொடுத்தாலும், ஏதேனும் ஒரு காரணத்தால் ஆசையோடு கொடுத்தலும் எவராலும் வெற்றி கொள்ளப் பெறாத பெரிய தோள்களையுடைய அருச்சுனா! தாமச குணத்தவர் செய்யும் தானமாகும்.

வாயாத-வாய்ப்பு இல்லாத, யேயாத-ஏற்புடையதல்லாத, யாயாத-ஆராய்ந்து காணாத, காயாத-தோல்வியுறச் செய்ய இயலாத, சினமாகப் பேசப் பெறாத எனவும் கொள்க.

ஒப்பரி தாய வுண்டி யோடியாக முறுந்த வந்தான மென்னுரைத்த
வப்படி யெல்லா மறிவகை யுனக்கு வுரைத்தன னடைய மற்றய்யா
மெய்ப் படியா மற்றிவத்தினைச் செய்து வீடு பெற்றுயர் நெறி யாவ
தெப்படி என்னிலதனை யுனக்குத் தெரிவகை வுணர்த்துவேன் கேணீ! 22

ஒப்பிட்டுக் கூற அரியதானதும், ஆதாரத்தோடு கூடியதுமான, யாகம், தவம், தானம் ஆகியவை பற்றி நீ தெரிந்து கொள்ளும்படி உனக்கு இதுவரை கூறினேன். உண்மையாக இவைகளைச் செய்து வீடுபேறு பெற்றவர்கள் அதை எப்படிப் பெற்றார்கள் என்பதையும், அதன் வழிமுறைகள் என்னவென்பதையும் உனக்குத் தெரியும்படி கூறுகிறேனய்யா !

ஒப்பரிதாய-சமம் என்று கூற இயலாத, வுண்டியோடு-உண்டியோடு-எடுத்துக்காட்டு ஆதாரத்தோடு. மெய்ப்படியா-உண்மையாக. இது ஒரு எழு சீரடி ஆசிரிய விருத்தம்.

ஓமென்கின்ற தனி யெழுத்து முரைத்தற்கரிய தற்பதமுந்
தாமங் கமழுமதற்கு மேற்சத் தென்கிற தனிப் பதமு
மாமென்கின்ற விவைமூன்று மறிவன பெற்றி யிவற்றாலே
யாமுன் புணரு மறை யோரியா வத்தே யோன்றிற் றெனவறியாய். 23

ஓம் எனப்பெறும் ஒரு தனி எழுத்து, சொல்வதற்கரிய "தத்" என்ற சொல்லும், மாலை மணம் கமழும் அருச்சுனா! இதற்கும் மேலே "சத்" என்ற சொல்லும், தனிச்சொல் லாகிய "ஓ ஆம்" என்கின்றதுமாகிய இவை மூன்றும் முதலில் நீ தெரிந்து கொள்ள வேண்டியதாகும். இவைகளின் மூலம், நான் முன்பு சொன்ன, வேதமறிந்தோர் கூறியவையும் ஒன்றேயென அறிவாயாக.

தற்பதம்-தனித்தன்மையுள்ள சொல், பதம்-சொல், இவை மூன்று-ஓம், தத், சத் ஆகிய மூன்று.

ஓமென்று ரைத்தே வினை செய்வார் வீடுற்றவர் வீடுறு மவர்க
டாமுன்புரை தத் தற்பரத்தை யுரைத்தே செய்வோர் சத் தென்றே
யாமென்றிருந்தே விளையாகு மிவை மற்றழகா யின வெல்லாம்
காம பலத்தின் மேலின்றிச் செய்வா ரறிஞர் கதிர்வேலோய். 24

ஒளிமிக்க வேலினையுடைய அருச்சுனா! வீடு பேற்றினையடைந்த ஞானிகள் "ஓம்" என்று கூறியே தங்களின் செயல்களைச் செய்வார்கள். மோட்சத்தை பெறுபவர்கள், அவர்கள் முன்னர் சொல்லப்பெற்ற "தத்" என்று சொல்லியே தங்களின் கருமத்தைச் செய்வார்கள். தானென்ற அகந்தையால் ஆவதும் மற்றும் அழகான வற்றை எல்லாம் "சத்" என்று ஆசையின் காரணமாகச் செய்வார்கள் என அறிஞர்கள் கூறுவர்.

வீடுற்றவர்கள்-மோட்சத்தை அடைந்தவர்கள், யாமென்றிருந்தே-நாமே எல்லாம் எனும் அகந்தையுடன் இருந்து. காமபலம்-ஆசையின் துணையோடு.

காதலா லிந்தப் பதங்கள் மூன்றினையுங் கற்றுணர்ந்த
வர்கடங் கருத்தா
யோதலாம் வகையா லுரைத்தலாற் றவமுந் தான முதலிய
வொழியா
ராதலா லிந்தப் பதங்களை யுரைத்தே வினை செயத் தகுவ
ரென்றுரைத்தான்
றீதிலா வுலகந்தன்னுள்ளே யுதிப்பத் தேவகி
திருவயிற்றுதித்தான். 25

தீமையேதும் இல்லாத இந்த உலகத்தில் வந்து தோன்ற வேண்டும் என்பதற்காக தேவகி வயிற்றில் வந்து பிறந்தவனாகிய கண்ணன், விருப்பத்தினால் இம்மூன்று சொற்களையும் கற்று உணர்ந்தவர்கள் தங்களின் கருத்தாக, இவைகளை சொல்வதற்கான வழிமுறைகளை எல்லாம் சொன்னார்கள் ஆகையால், இந்த மூன்று சொற்களையே உரைத்து உன்னுடைய செயல்களை யெல்லாம் செய்வதே தகும் என்று கூறினான்.

காதலால்-விருப்பத்தினால், பதங்கள் மூன்று-ஓம் தத் சத்-என்ற மூன்று சொற்கள். கற்றுணர்ந்தவர்கடங்கருத்தா-கற்று+உணர்ந்தவர்கள்+தம்+கருத்தாய், தவமுந்தான முதலிய-தவம், தானம், யோகம் முதலியன. இது ஒரு அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–17

சிரத் தாத்ரய விபாக யோகம்

1. அர்ச்சுனன் சொல்கிறான்: கண்ணா! எவர்கள் சாஸ்த்திர விதியை மீறி, ஆனாலும் நம்பிக்கையுடன், வேள்வி செய்கிறார்களோ, அவர்களுக்கு என்ன நிலை கிடைக்கிறது? சத்துவமா? அல்லது ராஜஸ தாமசா?

2. ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்: ஜீவர்களிடம் இயற்கையான சுபாவத்தால் உண்டான அந்த நம்பிக்கை, மூன்று வகையாகத் தோன்றுகின்றது. சாத்வீகம், ராஜசம், தாமசம் என அதைக்கேள்.

3. யாவருக்கும் நம்பிக்கை தத்தம் உள்ளியல் புக்கு ஒத்தபடியாகவே அமைகிறது. மனிதன் சிரத்தை மயமானவன். எவன் எந்தப்பொருளில் நம்பிக்கையுடைய வனோ அவன் அந்தப் பொருளே தான் ஆகிறான்.

4. ஒளியியல்புடையோர் வானவர்க்கு வேள்வி செய்கின்றனர். ரஜோகுணமுடையோர் யக்ஷர்களுக்கும், ராக்ஷஸர்களுக்கும் வேள்வி செய்கின்றனர். மற்ற தமோ குணமுடையோர்கள், பிரேத பூத கணங்களுக்கு வேள்வி செய்கின்றனர்.

5. எந்த மக்கள் நியமத்தை மீறி டம்பமும் அகங்காரமும் உடையவராய், விருப்பத்திலும், விழைவிலும் சார்பற்றவர்களாய் கோரமான தவஞ் செய்கிறார்களோ...

6. உடம்பிலுள்ள பூதத் தொகுதிகளையும், அகத்தி லுள்ள என்னையும் வருத்துகிறார்கள். அந்த அறிவு கெட்டவர்கள் அசுர நிச்சயமுடையவர் என்று உணர்.

7. ஒவ்வொருவருக்கும் பிரியமான உணவும் மூன்று வகைப்படுகிறது. அங்ஙனமே, வேள்வியும், தவமும் தானமும். அவற்றின் வேற்றுமையைக் கேள்.

8. உயிர், சக்தி, பலம், நோயின்மை, இன்பம், பிரீதி மிகுதிப்படுத்துவன, சுவையுடையன, குழம்பாயின உறுதியுடையன உளமுகந்த இவ்வுணவுகள் சத்துவ குணமுடையவர்களுக்கு பிரியமானவை.

9. கசப்பும், புளிப்பும், உப்பும், உறைப்பும், அதிகச் சூடு கொண்டன. உலர்ந்தன, எரிச்சலுடையன, இவ் வுணவுகளை ரஜோகுணமுடையோர் விரும்புவர்.

10. எந்த உணவு கெட்டுப்போனது சுவையற்றது, அழுகியது, பழையது, எச்சில் பட்டது, அசுத்தம், தமோ குணமுடையோருக்குப் பிடித்தமானது.

11. எவர் விதிகள் சொல்லியபடி வேள்வி புரிதல் கடமையென்று மனம் தேறி பயனை விரும்பாதவர் களாய், வேள்வி செய்கிறார்களோ, அந்த வேள்வி சத்துவகுணமுடையது.

12. பாரதறிற் சிறந்தோய்! ஆடம்பரத்துக்கெனினும் பயனைக் குறித்தெனினும், கருத்தில் கொண்டு, வேள்வி வேட்கப்படுகிறதோ அது ராஜஸ வேள்வி என்றுணர்.

13. விதி தவறியதும், பிறதர்க்கு உணவு தராததும், மந்திர மற்றது, தக்ஷினையற்றது, நம்பிக்கையின்றி செய்யப்படுவது இத்தகைய வேள்வியைத் தாமஸ மென்பர்.

14. தேவர், அந்தணர், குருக்கள், அறிஞர் இவர்களுக்குப் பூஜை செய்தல், தூய்மை, நேர்மை, பிர்மச்சரியம், கொல்லாமை இவை உடம்பைப் பற்றிய தவமென்பர்.

15. சினத்தை விளைவிக்காததும், உண்மை யுடையதும் இனியது, நலங்கருதியதுமாகிய சொல்லுதல் கல்விப்பயிற்சி, இவை வாக்குத்தவம் எனப்படும்.

16. மனமகிழ்ச்சி, அமைதி, மௌனம், தன்னைக் கட்டுதல், எண்ணத்தூய்மை, இவை மனத்தவம் எனப்படும்.

17. பயனை விரும்பாத யோகிகளான மனிதர்களால் உயர்ந்த நம்பிக்கையுடன், மேற்கூறிய மூன்று வகை களிலும், செய்யப்படும் தவம் சாத்வீகம் எனப்படும்.

18. எந்தத் தவம் மதிப்பையும் பெருமையையும், பூஜையையும் போற்றுதலையும், ஆடம்பரத்துக்காகவும் செயவதுமாகிய தவம் ராஜஸ தவம் எனப்படும். அது நிலையற்றது உறுதியற்றது.

19. எந்த மூடக்கொள்கையுடன், தன்னைத்தான் துன்பப்படுத்திக்கொண்டு, பிறரைக் கெடுக்குமாறு செய்வதுமாகிய, அந்த தவம் தாமஸமாகும்.

20. கொடுத்தல் கடமை என்று கருதி எந்த தானம், தகுந்த இடத்தையும், காலத்தையும், பாத்திரத்தையும், கைம்மாறு வேண்டாமல் கொடுக்கப்படுகிறதோ அந்த தானம் சாத்வீக தானம் என்பர்.

21. ஆனால் மன வருத்தத்துடன், கைம்மாறு வேண்டியும் பயனைக் கருதியும் கொடுக்கப்படுகிறதோ அந்த தானத்தை ராஜஸமென்பர்.

22. எந்த தானம் மதிப்பின்றி, இகழ்ச்சியுடன், தகாத இடத்தில் தகாத காலத்தில், தகாதார்க்குத் தரப்படுகிறதோ அந்த தானம் தாமஸ தானம் எனப்பெறும்.

23. ஓம், தத், சத் என்ற மூன்றுவிதமாக பிர்மத்தைக் குறிப்பது என்பர். அதனால் முன்பு பிரமாணங்களும் வேதங்களும், வேள்விகளும் வகுக்கப்பட்டன.

24. ஆதலால் பிர்மவாதிகள் விதிப்படி புரியும் வேள்வி, தவம், தானம் என்னும் கிரியைகள் எப்போதும் "ஓம்" என்று தொடங்கி செய்யப்படுகின்றன.

25. "தத்" என்ற சொல்லை உச்சரித்து, பயனைக் கருதாமல் பல வகைப்பட்ட வேள்வியும் தவமும், தானமுமாகிய கிரியைகள் மோக்ஷத்தை விரும்புவோரால் செய்யப்படுகின்றன.

26. "ஸத்" என்ற சொல் உண்மை என்ற பொருளிலும் நன்மை என்ற பொருளிலும் வழங்கப்படுகிறது. பார்த்தா! புகழுக்குரிய செய்கையைக் குறிப்பதற்கும் "ஸத்" என்ற சொல் வழங்குகிறது.

27. வேள்வி, தவம், தானம் இவற்றில் உறுதி நிலையும் "ஸத்" எனப்படுகிறது. பிர்மத்தின் பொருட்டாகச் செய்யும், கர்மமும் "ஸத்" என்றே சொல்லப்படும்.

28. அசிரத்தையுடன் வேள்வியும் தானமும் செய்யும் தவமும் கர்மமும் "அஸத்" எனப்படும் அவை இம்மையிலும் பயனில்லை மறுமையிலும் பயனில்லை.

விளக்கவுரை

வியாசர் தமது பகவத்கீதையின பதினேழாவது அத்தியாய்த்திற்கு "சிரத்தாத்ராய விபாக யோகம்" என்று தலைப்பிட்டு இருபத்தெட்டு சுலோகங்களை இயற்றி யுள்ளார். சுவடி ஆசிரியர் இந்த அத்தியாயத்திற்கு "குண விகாரவத்தியாயம்" என்று தலைப்பிட்டு இருபத்து ஐந்து விருத்தங்களை எழுதியுள்ளார்.

விருத்தம் 1. அருச்சுனன் கண்ணனிடம் சில கேட்கத் தொடங்கினான் என உள்ளது.

விருத்தம் 2. வேதத்தில் சொல்லப்பெற்றுள்ள விதி முறைப்படி செய்யாது, தங்களின் விருப்பப்படி செய்யப் பெறும் காரியங்களின் குண பேதங்கள் என்னவென கண்ணனிடம் கேட்கிறான். இதே கேள்வியை அர்ச்சனன் கேட்பதாக வியாசரின் முதல் சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 3. ஆசை என்பது மூன்று குணங்களின் பாற்பட்டது. அந்த மூன்று குணங்களைப் பற்றியும் சொல்கிறேன் எனக் கண்ணன் கூறுவது. இப்படி ஒரு முன்னுரை வியாசரில் இல்லை.

விருத்தம் 4. சாத்வீக, குணமுடையோர் தேவர் களையும, தாமதர்கள் பேயையும், பூதங்களையும், இராசத குணத்தவர் அரக்கரையும், யட்சர்களையும் வழிபடு வார்கள் எனப்பெறுகிறது. இதனை வியாசர் தமது நான்காவது சுலோகத்தில் சாத்வீகர்களை ஒளியுடையோர் எனக்கூறி அவர்கள் தேவர்களை வழிபடுவார்கள் எனவும், ரஜோகுணமுடையோர் யட்சர்களையும் ராட்சதர் களையும், தமோகுணத்தவர் பிரேத பூதங்களையும் குறித்து வேள்வி செய்வர் என்கிறார்.

விருத்தம் 5. அசுர யோனியிற் பிறந்தவர்கள் செய்யும் தவம் இன்னது எனக்கூறுவது. வியாசரின் ஆறாவது சுலோகத்தில் அசுர நிச்சயமுடைவர்களை அறிவு கெட்டவர்கள் என்கிறார். கோரமான தவம் செய்பவர்கள் எனவும் குறிப்பிடுகிறார்.

விருத்தம் 6. யோகமே மேலானது என்றாலும் வேதங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். மூன்று குணங்களின் வேறுபாடுகள் பற்றி கூறல். இது வியாசரின் ஏழாவது சுலோகத்தில் உணவு, வேள்வி, தவம், தானம் இவைகளும் மூன்று குணங்களின் அடிப்படையில் வேறுபடும் எனக் கூறுகிறார்.

விருத்தம் 7. சத்துவ குணத்தவர் விரும்பும் உணவு என்ன எனக் கூறப்பெறுகிறது. இது வியாசரின் எட்டாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 9. தாமச குணத்தவர் செய்யும் யாகங்கள் என்னவென்பது பற்றியது.

விருத்தம் 10. சாத்வீக-ராஜச குணத்தவர் செய்யும் யாகங்கள் என்னவென்பது பற்றியது. இது வியாசரின் பதினோறாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 11. தாமத குணத்தவர் செய்யும் யாகம் பற்றி இது வியாசரின் பதின்மூன்றாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 12. நினைத்தல், பேசுதல், செய்தல் இவை மூன்றும் இணைந்ததே தவம் என்கிறது. இக்கருத்து வியாசரில் இல்லை.

விருத்தம் 13. வாய்ச்சொல்லினால் கூட தவம் செய்யமுடியும் என்கிறது. இது வாக்குத்தவம் இதைப் பற்றி வியாசரின் பதினைந்தாவது சுலோகத்தில் கூறப் பெறுகிறது.

விருத்தம் 14. மனத்தைக் கட்டுப்படுத்தல்-புலன்களின் ஆட்டத்தை அடக்குவது, மௌனமாய் இருத்தல் ஆகியவை பெரிய தவம் என்கிறார்-வியாசர் தமது பதினாறாவது சுலோகத்தில் இதைக்கூறியுள்ளார்.

விருத்தம் 15. அந்தணர்கள், தேவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை வணங்குதலும், கொலை செய்யாமையும், காமம் தவிர்த்தலும் உடலால் செய்யப்படும் தவம் என்கிறார் சுவடி ஆசிரியர். இது வியாசர் தமது பதினான்காவது சுலோகத்தில் கூறியிருப்பதுதான்.

விருத்தம் 16. தவத்தின் பயனைக் கூட வேண்டாது செய்யும் தவமே சாத்வீகம் என்பது. இதுவே வியாசரின் பதினேழாவது சுலோகம் கூறுகிறது.

விருத்தம் 17. தவம் எப்படிப்பட்டதாயினும் அது ராசத குணத்தவருடையது தான் என்பது.

விருத்தம் 18. தாமச குணத்தவர் செய்யும் தவம் பற்றியது. இது வியாசரின் பத்தொன்பதாவதில் உள்ளது.

விருத்தம் 19. தானம்-சாத்வீக தானம் என்பது என்ன என்பது பற்றியது. இது சுலோகம் 20ல் உள்ளது.

விருத்தம் 20. இராஜஸ குணத்தவர் செய்யும் தானம் பற்றியது. இது வியாசரின் 21வது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 21. தாமச குணத்தவரின் தானம் பற்றியது. இதை வியாசரின் 22வது சுலோகத்தில் காணலாம்.

விருத்தம் 22. யாகம், தவம், தானம் பற்றி எல்லாம் சொன்னேன். இவைகளைச் செய்து எவ்வாறு வீடுபேறு பெற்றார்கள் என்பதைச் சொல்கிறேன் என்பதைக் கண்ணன் கூறுவது. இது ஒரு முன்னுரை போன்றது இது வியாசரில் இல்லை.

விருத்தம் 23. ஓம், தத், சத் - எனும் சொற்களின் பொருள் பற்றிக் கூறுவது. இது சுலோகம் 23ல் உள்ளது.

விருத்தம் 24. முன்னர் சொல்லப்பெற்ற ஓம் தத் சத்- என்ற மந்திரங்களைச் சொல்பவர்களைப் பற்றியது இவை வியாசரின் 24, 25 ஆகிய சுலோகங்களில் உள்ளன.

விருத்தம் 25. நிறைவுரையும் ஓம் தத், சத் என்ற மூன்று சொற்களையே உரைத்து உன்னுடைய எல்லா காரியங்களையும் செய்வாயாக என, கண்ணன் அருச்சுனனுக்குக் கூறுவது. வியாசர் தமது 26, 27 ஆகிய சுலோகங்களில் மூன்று சொற்களைப் பற்றியும் கூறியபின் நிறைவாக "அஸத்" என்றால் என்னவெனவும் கூறுகிறார்.

இந்த அத்தியாயத்தில் வியாசரால் கூறப்பெற்றுள்ள அனைத்துக் கருத்துக்களையும் சுவடி ஆசிரியரும் தவறாமல் கூறியுள்ளார். சில செய்திகளைக் கொஞ்சம் விரிவாகவும் கூறியுள்ளார்-பல விருத்தங்களில் கண்ணனின் செயல்களையும் பெருமைகளையும் இணைத்துள்ளார்.

பதினெட்டாவது அத்தியாயம்
சன்னியாதி யோகவத்தியாயம்

ஏகமே கருதுவா ரிதயமே விளைவ தோர்
யோகமே யுலகிலோர் பொரு விலா வொருவனே
நாகமே யளியாய் நளினமே மாள்வ தோர்
மேகமே பணி யெனா விசயன் மேல் வினவுவான். 1

ஒன்றேயான பிர்மத்தை விரும்புகிறவர்களுடைய இதயத்திலே விளைகின்ற யோகமே! இந்த உலகில் ஒப்பில்லாத ஒருவனே! நாகத்தின் மேல் படுத்திருப் பவனே! தாமரை மலர் முகத்தோனே! மேகவண்ணனே உன்னைப் பணிந்தேன் எனக் கூறி விசயன் மேலும் சிலவற்றைக் கேட்கலானான்.

ஏகம்-ஒன்று, பொருவில்-ஒப்புமை கூற இயலாத. யளி-படுக்கை, நளினம்-தாமரை, மேகமே-மேகத்தை ஒத்த வண்ணமுடையவன். இது ஒரு கலி விருத்தம்.

சன்னியாச மாவதுந் தகுந் தியாக மவதுந்
மென்னியாய மாகவேம் பிதி ராளியம்பு தென்னவே
வன்னி வாயு வான மாகிய மண்ணு நீரு மாயோன்
ருன்னிய பொருட் டொகைத் திறஞ் சொலத் தொடங்கினான்.2

சந்நியாசமென்பதும், தகுந்த தியாகம் என்பதும் என்ன வகையில் நியாயம் என்பதை எமக்குச் சொல்ல வேணும் என அருச்சுனன் கேட்க, நெருப்பு, காற்று, வானம், மண், நீர் ஆகிய யாவும் தானேயாகிய மாயவனாகிய கண்ணன் அவற்றின் பொருளைத் தொகுத்து சொல்லத்தொடங்கினான்.

என்ன+நியாயம்-மென்னியாயம், இயம்பு-சொல், உன்னிய= நுட்பமான, இது ஒரு கலி விருத்தம்.

காம மென்றிடும் பலன்செய் கன்ம மான யாவையுந்
தாமடங் கவே யிகழ்த்தல் சன்னியாத மாவதிங்
கேம மின்றி யெவ்வினைப் பயன் களானவையுந் தீய்மை
தீயென்றறத் துடைத் திருத்தல் தியா கமாவதே. 3

ஆசையென்பது பலனை எதிர்நோக்கிய எல்லா செயல்களாகும். இவைகளை வெறுத்து நீக்குவதே சந்நியாசமாகும். இறைவன் ஒருவனே என்று செயல் களால் வரும் பலன்கள் அனைத்துமே தீமை தருவதே என்று எண்ணி அவைகளை எல்லாம் நீக்கி இருத்தலே தியாகம் எனப்பெறுகிறது.

காமம்- ஆசை, கன்மம்-கர்மம்-செயல், தீய்மை-தீமை, யிகழ்தல்-வெறுத்தல், துடைத்திருத்தல்-நீக்கி இருத்தல்.

தீங்கியற்று கின்ற தீவினைத் திறங்கள் போலவே
யீங்கியற்று கின்ற நல்வினைப் பயன்கள் யாவையு
மாங் கியற்ற லின்றி விட்டிருத்தலே யுத்தம மாஞ்
சாங் கியத்தை யோதிடுந் தவத்தோர் ருரைப்பரால். 4

தீங்கினைப் பலனாகத் தருகின்ற தீய செயல்களைப் போலவே, நல்வினைகள் கூட ஒரு பலனையே தருவது ஆகவே அவைகளைக் கூட செய்யாது விட்டுவிடுதலே நல்லதாகும் என சாங்கியம் எனும் நீதிகளைக் கூறக்கூடிய தவத்தினர் கூறுவர்.

உத்தமம்-நல்லது. சாங்கியம்-நீதிநெறிகள்.

ஞான காரணங்களாத லியாக மோடு நற்றவ
தான மோ டிரத்தலைத் தகாமை கூறுவா ருளர்
ரான காரணத்தி னாலறிந் தடங்கி னார்க் கலா
லீனமா மிவற்றை விட்டிருத்த லென்றிருத்தலே. 5

ஞானத்திற்குக் காரணங்களாகிய, யாகம், தவம், தானம் ஆகியவைகளை விட்டுவிடுவது சரியல்லவென்று சிலர் கூறுவார்கள். யாகம், தானம், தவம் ஆகியவைதான் ஞானத்திற்குக் காரணங்கள் என்பதை அறிந்து அடங்கியவர்களுக்கு மட்டுமே இது அவைகளை விடுதல் தகும் மற்றவர்களுக்கு அவ்வாறு அம்மூன்றையும் விடுவது கேடு தருவதாகும்.

தகாமை-கூடாது, ஈனம்-கெடுதல்.

தியாக மூன்று வகைப்படுஞ் செப்பக்கேள்
யாகமுந் தவந்தானமு மென்றிவை
மயலருக்கு மனத்தினை யாதலா
லயர் வுரைத்தல் விடுகை யடாத லால். 6

தியாகம் என்பது மூன்று வகைப்படும். அவைகளைச் சொல்கிறேன் கேள். யாகம், தவம், தானம் இவை மூன்றும் மனதின் மயக்கத்தை நீக்கக் கூடியவை ஆகையால் இதனை விட்டுவிட வேண்டும் என்று சொல்வது மறதியின் காரணமாகச் சொல்வதாகும். எனவே அவைகளை விட்டுவிடுதல் தகாது.

செப்ப-சொல்ல, மயல்-மயக்கம், அயர் வுரைத்தல்-நீதி நூல்களை மறந்ததால் கூறியது. அடாது-தகாது.

என்ன செய்வதென வினைகளாற்
பின்னை செய்து பெரும் பயனாவது
தன்னை விட்டுச் செய்யத் தகுமென்பது
முன்னை யோர்க்கு மெனக்கு முடிவுறோ. 7

நல்வினை, தீவினை ஆகிய இரண்டினாலும் ஏதேனும் ஒரு பயன் விளையத்தான் செய்கிறது. என்ன செய்வது? இவை எல்லாம் நான் செய்வதல்ல என்றபடி

தான் என்கிற அகங்காரத்தை விட்டுவிட்டுச் செய்வதே தகும் என்பதே எமக்கும் முன்னோர்கள் கூறியது அதுவே எனக்கும் சரி எனப்பட்ட முடிவாகும்.

முன்னையோர்-முன்னோர்கள், அறோ-அசை.

நித்தமாய் வினையின் னெறியினை
மத்தர் போல வொருவன் மயக்கினாற்
பித்தனாய் விடுகின்ற வப் பெற்றியைச்
சித்தா மா மத்தியாக மென்கின்றதே! 8

சித்தியுடைய அருச்சுனா! என்றும் நிலைத்திருப்ப தாகிய இந்த வினைகளின் நெறிமுறைகள், பித்தம் பிடித்த வனைப் போல ஒருவனை மயக்குகின்ற காரணத்தால், அப்படிப்பட்ட கிடைத்தற்கரிய பெருஞ் செல்வத்தை, பைத்தியமே ஆனாலும் இதனையே உத்தமமான தியாகம் என்பர்.

நித்தம்- என்றும், மத்தர்-உன்மத்தர்-மதியற்றோர், பித்தன்-பைத்தியம், சித்தா-சித்திகளைப் பெற்றவனே!

மெய் வருத்த முண்டென்று விடுவது
மைய மின்றி யராதத்தியாக மாங்
கை விரும்பல மாசைக மாறவே
செய்வது சத்துவத் தியாகமே ! 9

யாகம், தவம், தானம் ஆகிய இம்மூன்றும் உடலை வருத்தியல்லவா செய்யவேண்டும் எனக் கருதி அவைகளை விட்டு விடுவது சந்தேகமின்றி ராசத குணம் கொண்ட தியாகம் ஆகும். கைமாறு கருதாமல் ஆசையை நீக்கிச் செய்வதே சத்துவகுணத் தியாகமாகும்.

மெய்-உடம்பு, ஐயமின்றி-சந்தேகமில்லாது, கை-கைமாறு, மாறவே-நீங்கவே.

யாதின் மாட்டினு மையமென்றின் ன்றியே
தீதின் ஞானியுந் தியாகியு மானவன்
கோதிலின் பமுந் துன்பமு கூர்வினை
மீதில் வேண்டல் வேண்டாமை வீடுமால். 10

எந்தத் தத்துவத்திலிடத்தும் சந்தேகம் என்பது இல்லாமல், குற்றமேதும் இல்லாத ஞானியும், தியாகியு மானவன், இன்பமும் துன்பமும் தரக்கூடிய இரு வினைகளின் பேரிலும் விருப்பும் வெறுப்பும் அற்றவனா யிருத்தல் கூடும்.

யாதின்-எதன் பேரிலும், கோது-தீது, விடுமால்-விடுமால்-விடு வானாகில்.

யாக்கையொடு மிசையுமிரு வினை
நீக்க லாவன தல்ல நிலத்திடை
வீக்கமாய் வினைப் பயன் வீட்டினார்
போக்கலா வினையையும் போக்கினார். 11

உலகத்தில் வாழ்பவர்களுக்கு, உடலோடு கூடிய தாகிய இருவினைகளையும் நீக்கி விடுதல் இயலாது. வளர்ந்து வருவனவாகிய வினையின் பயன்களை வீடுபேறு பெறுவதன் மூலமாகவே போக்க முடியாத வினை களையும் போக்கினார்கள்.

யாக்கை-உடல், இசையும்-பொருந்திய, நிலத்திடை-உலகத்தில், வீக்கம்-வளர்தல்.

இன்னாதனவு மினியனவு மிரண்டுங் கூடி யிசைந்தவ வுமாய்
முன்னாய் நின்ற வினை மூன்று மவற்றால் வந்த முடி பொருளும்
பொன்னானதுவுந் தொழிலும் போலிருக்கு மந்த பொய் மெய்யை
யுன்னா தவர்க்கே யுள்ளதிவை யுணர்ந்தோர்க்கு
ளவாயுதியாவால். 12

தீமையைத் தரும் செயல்களும் நன்மையைத் தரும் செயல்களும் ஆகிய இரண்டிற்கும் காரணமாய் நிற்பது வினையாகும். இம்மூன்றும் சேர்ந்தமையால் வருவது பொன் போன்ற உறவுகள் ஆகும். பொய்யான இந்த உறவை மெய்யென்று நம்புவோர்க்கு முடிவான பொருளாகிய வீடு பேறு கிட்டுவதில்லை. அதையே பொய்யென்று உணர்ந்தவர்களுக்கு இவ்வீடு பேறு உளவாகும் என்பது.

இன்னாதன× இனியன, முன்னாய்-காராணமாக, முடிவுறு பொருள்-வீடுபேறு, உன்னாதோர்-உணர்ந்தோர். இது ஒரு அறுசிரடி ஆசிரிய விருத்தம்.

இருப்பிடமா முடம்பியற்று மாருயிர்
கருத்தினை முதலிய காரணங் காற்றினால்
விருப்பொடு வருந்தொழி லிவற்றின் மெய்த் தொழில்
லருத்தமா மொழியென வாக வந்த தரோ ! 13

உடம்பையே இருப்பிடமாகக் கொண்டு இயங்குவது உயிர். முன்சொன்ன மூன்றோடு-யாகம், தவம், தானம், இவ்வுயிரும் கூடிய காரணத்தினால், காற்று என்னும் பிராணனும் கூடி நான்காயிற்று. இவற்றோடும் செய்யக்கூடிய செயல்கள் எல்லாம் ஆசையின் காரண மாகவே-ஆக கூடி ஐந்து-(யாகம்-தவம்-தானம்-உயிர்-ஆசை=5) ஆயிற்று உண்மையான கருமம் செய்யப் பெறுவதே உயர்வானது என ஆயிற்று.

காற்று-பிராணன்-மூச்சு, விருப்பு=ஆசை மெய்த்தொழில்-உண்மையான கருமம்.

ஓங்கிய யுலகினி லுயர்ந்த நன்மையைத்
தீங்கினை யாம் வினையாவுஞ் செய்தற்குச்
சாங்கிய நூலிலே சமைந்தன
மீங்குள ஐந்தையும் யெடுத்துக் கூறுவாம். 14

மேன்மையான இந்த உலகத்தில், நல்லனவும், தீயனவுமாகிய வினைகளைச் செய்வதற்கு ஐந்து காரணங்கள் உண்டு என நீதி நெறிகளைக் கூறும் நூல்கள் கூறுகின்றன. அவ்வைந்தையும் நான் உனக்கு எடுத்துச் சொல்கிறேன்.

ஓங்கிய-மேன்மையான, சாங்கிய நூல்-நீதி நெறிகளைக் கூறும் நூல், சமைநதன-அடங்கியிருப்பன.

வாக்கினா லாதனை மெய் மனத்தி னாதல் தம்
யாக்கை யாலாத லிவ்வுலகில் யாவரும்
வீக்கு வார் சிலையி னாய் வினை யிரண்டி லொன்
றாக்கு நாளிங் கிவை ஐந்தும வேண்டுமால். 15

வாரினால் இழுத்துக் கட்டப்பெற்ற வில்லையுடைய அருச்சுனா! உடலையும் மனத்தையும் கட்டுப்படுத்தவது வாக்கு எனும் வாய்ச்சொல். செய்யக்கூடிய நல்வினை தீவினை ஆகியவற்றை உடம்பினால் செய்வதற்கு முன் சொல்லிய இவ்வைந்தும் வேண்டும்.

வாக்கு-வாய்ச்சொல், வார்சிலை-வாரினால் கட்டப்பெற்ற வில், ஐந்து-யாகம், தவம், தானம், உயிர், ஆசை, உயிர்-உடல் சேர்ந்தது.

யானொருவன் றன்னுடம்பை யானென்றிருக்கு மியல்
பொழிந்தா
னியாயவ னொருவன் கரணங்களியா தென்றோடும்
விளைந்திரா
னியவனவனிவ் வுலகத்தை யடையக் கொன்ற னாயிடினும்
பாவமில்லை யவன் கொன்ற பழியு மில்லை பார் மன்னா ! 16

மன்னா! எவன் ஒருவன் தன்னுடைய உடலைத் தான் என்னும் அகங்காரத்தை ஒழித்தவனோ, எவன்

ஒருவன் தன்னுடைய அந்தக் கரணங்களின் விஷயத்தில் ஆசையற்றவனாக இருக்கிறானோ, அப்படிப்பட்டவன் இந்த உலக முழுமையுமுள்ள உயிர்களைக் கொன்றாலும் கூட அவனுக்கு ஒரு பாவமும் இல்லை. ஒரு பழிச்சொல்லும் வந்தடைவதில்லை.

கரணங்கள்-அந்தக் கரணங்கள், உலகத்தையடைய-உலக முழுமைக்கும் உள்ள உயிர்களை இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

அறிவு மறியப் படுபொருளு மறிவா னொருவன் றானு மாய்
நெறியில் வினைகள் விதிக்கின்ற விதியின்னிலமை நிற்பதுதான்
செறியுந் தொழிலுஞ் செய்வானுஞ் செய்தற்குறிய வறிவுமாய்க்
குறியில் வினைகள் முடியிருப்ப வின்னஞ்சிலது கூறக்கேள்! 17

உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் அறிகின்ற அறிவும், அந்த அறிவினால் அறியப்பெறும் பொருளும் ஆகிய இவ்விரண்டையும் அறிகின்றவனும், செய்யக் கூடிய தொழிலும், செய்பவனும், செய்வதற்குரிய அறிவும் ஆகிய மூன்றுமே வினைகளின் முடிவாய் குறிக்கப்படுவனவாகும். இன்னமும் சில உண்டு அதையும் கூறுகிறேன் கேள்.

தொழில் ஒன்று, செய்பவன்-ஒன்று- செயலின் விதிமுறைகள். ஒன்று-ஆக கூடி மூன்று நிலையை உடையது செயல். இம்மூன்றும் தவிர வேறும் உண்டு என்கிறது.

இவ்வகையே வருவினை யிரண்டையு
மெய்வகையே யானன்றி வேறிலைச்
செய்வகை யானெனச் சிந்தைமேயினு
னுய்வகை வேறிலா னுணர்வு மாய்ந்துளான். 18

இந்த வகையில் வரக்கூடிய இருவினைகளையும் உண்மையாக பொருந்தியவன் நானேயன்றி வேறில்லை. இவ்வகையான கருமங்களை செய்கிறவனும் நானே.

இதனை அறியாது தானே செய்வதாகக் கொண்டு மனத்திலே அகங்காரம் கொண்டவன் உய்வதற்கு ஒரு வழியுமில்லாது அழிந்து அறிவும் கெட்டவன் ஆகின்றான்.

இருவினை-நல்வினை-தீவினை. மெய்வகை-உண்மை நிலை. செய்வகை-செய்வது என்ன வென்று, மாய்ந்துளான்-அறிவு கெட்டுளான். அழிகிறான்.

ஆன்ற வறிவுங் கருமமு மக் கருமங்களை யாக்கிடுவானு
மூன்ற வுணரும் புத்தியாயோடு திருத்தி யென வேறுரைத்
தனவுந்
தோன்ற வினையு மின்பமு முன்சொன்ன குணத்தின் றொடர்
பாலே
மூன்று வகையா மென வென்றே யவற்றின் நிறன் நான்
மொழியக்கேழ். 19

நிறைந்த அறிவும், கருமமும், அக்கருமங்களை ஆக்கிடுவானும் ஆகிய மூன்றையும் உணரக்கூடிய அறிவோடு, இவைகளை யெல்லாம் திருத்தம் செய்து நான் சொல்லியவைகளும், தோன்றுகின்ற வினை வினையும் இன்பமும், முன் சொன்ன குணத்தின் தொடர்பின் காரணமாக மீண்டும் மூன்றுவகையாகும். அவற்றின் திறன் என்னவென்பதை நான் சொல்லக் கேட்பாயாக !

ஆன்ற-நிறைந்த, தெளிந்த, ஊன்ற-மூன்ற-நன்றாக, திருத்தியென-திருத்தமாக, திறன்-வகை, பிரிவு.

நன்றாய் ஞானத் திரளாகி நானாவிதமாய் விரிந்தெங்கும்
வொன்றா நின்ற பூதங்க டோறும் பொன்றாய் பொருளாகி
யொன்றாய் நிற்ப யொன்றதனை யுணருமுணர் வாமுணர்
வதனை
யன்றா மென்னா சாத்துவித ஞான மெனவே யமைப்பாரால். 20

நன்றாக ஞானத்தின் திரட்சியாகி பல்வேறு விதமாய் விரிந்து எங்கும் ஒன்றேயாக நின்ற பூதங்கள் எல்லா வற்றிலும் அழியாத பொருளாகி ஒன்றேயாகி நிற்கும் ஒன்றதனை, அது இருப்பது இருக்கின்றவாறே அறிகின்ற அறிவை, எவருமே மறுக்காமல் சாத்துவித ஞானமென்று சொல்வார்கள்.

ஞானத்திரள்-திரண்ட அறிவு, நானாவிதம்-பலவிதம், பொன்றாப் பொருள்-அழியாத, நிலையான பொருள்-இங்கு ஆன்மா எனப்பெறுவது. ஆயினும் ஆன்மா எனும் சொல் குறிப்பிடப்பெறவில்லை. சாத்துவித-சாத்வீக.

வீதலும் பற்று மேலோர் வினைப் பயன் வேண்டல் வேண்டாக்
காதலொன் றின்றிச் செய்யுங் கருமஞ் சாத்துவித கரும
மாய் தரு மனத்தினோடும் வருங் காரணத்தி னோடு
யெய் தருங் கரும மெல்லாம் மிராசத கரும மாமே ! 21

இறந்து போவதும் இல்லற பந்தத்தில் கட்டுப் படுகிறதும், வினையின் பயன்களை, வேண்டுதல் வேண்டாமையின்றி ஆசையென்பது இல்லாமல் செய்யக் கூடிய செயலே சாத்துவித கருமமாகும். மனம் ஒன்றி வரக்கூடிய பலனைக் காரணமாகக் கொண்டும் செய்யக் கூடிய செயல்கள் எல்லாம் இராசத கருமம் எனப்பெறும்.

வீதல்-இற்ந்போதல், காதல்-ஆசை, மாய்தரு-மயக்கத்தை தருகின்ற. இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

கொலை பெறும் பற்று மேலோர் கூறிய நீதியோடு
கலை தெரிந்துணர்ந்து மெய்ம்மை கடைப்பியாமை யாற்கு
மலைவருங் கேடுஞ் சூழ்த லனைத்தினு மொன்றினோடுந்
தலைவரச் செய்வதெல்லாம் தாமத கருமமாமே! 22

கொலைக்குச் சமமான பேராசையும், பெரியோர்கள் கூறியுள்ள நீதிகளைக் கற்றும் அதனை உண்மையெனக்

கடைப்பிடிக்காதவர்களுக்கும், மலையை ஒத்த பெரிய கெடுதல்கள் வருதலும், ஆகிய செயல்களைச் செய்வ தெல்லாம் தாமத குணத்தவர் செய்யும் செயல்களாகும்.

கொலைபெறும்-கொலைக்குச் சமமான, மலைவருங் கேடு-மலைபோன்று வரும் கேடு, தலைவர-முதன்மையாகும்.

பற்று மாங்காரந் தானும் பழுதறத் துறந்து யாவு
முற்றெழு முயற்சியொடு நிலையினோடுரையு மொன்றி
பெற்ற மோ ரிழிவு பெற்றி துன்ப மின்ப மென்னுஞ்
சற்றுமோர் சலிப்பில்லாத தலைவன் சாத்துவீக னென்பான். 23

பந்த பாசமெனும் ஆசையும், அகங்காரத்தையும் குற்றமறத் துறந்து செய்யும் செயல்கள் யாவற்றையும் முழுமையான முயற்சியோடு செய்பவனும், சொல்லும் செயலும் ஒன்றேயாக ஒன்றி, செல்வம் வந்த போதும் ஓர் இழிவு நேர்ந்தபோதும் ஒன்றே என நிலையானவ னாகியவனும், இன்பத்திலும் துன்பத்திலும் சற்றும் மனம் தளராதவனாகவும் இருப்பவனே தலைவன். அவனையே சாத்வீகன் என்பர்.

பழுதற-குற்றமின்றி, நிலையினோடு+உரையும், செயலும்-சொல்லும், பெற்றம்-செல்வம், பெற்றி-ஒன்றாய் எண்ணி, சலிப்பு-விருப்பு, வெறுப்பற்ற நிலை, தலைவன்-உயர்ந்தவன்.

வினைப் பயன் தனை வேண்டலும் வேட்கையு
மெனைத்து மியார்க்கு மீயாமையுந் தூய்மையு
நினைப்பி னீடலு நெஞ்சின் மகிழ்தலு
மினைப்ப வாழ்பவ ரிராசத மாந்தரே. 24

செய்யும் செயலால் வரக்கூடிய பயனை எதிர் பார்த்தலும் ஆசையும், எவர்க்கும் எத்துணையும் தருமம் செய்யாமையும் எதிர்பார்த்தலும், வருங்காலத்தைப்

பற்றியே சிந்திப்பதும், செல்வம் மிகவும் வரும் என கருதி மனதில் மகிழ்தலும் இவ்வாறெல்லாம் நினைத்து வாழ்பவர் இராச குணத்தவர் ஆவர்.

வினைப்பயன்-செயலின் விளைவு, வேட்கை-பேராசை, எனைத்தும்+யார்க்கும்+ஈயாமையும்-எனத்துமியார்க்குமீயாமையும், இது ஒரு கலி விருத்தம்.

ஊனப்படு இவ்வுட றோலுமுள்ள பொருளை யுணராதே
யீனப் படக் காண்கின்ற விராசத ஞானமே யாகு
ஞானத் திரளாய் நின்ற தையோ ருடம்பினிடையு
நாட்டமுடையோர்
தானத் திடையு மடங்காக் காண்பது தாமதமா ஞானமே! 25

வீணாகிப் போவதாகிய இவ்வுடம்பில் உள்ள உயர்ந்த பொருளை இதுவென உணர்ந்து கொள்ளாமல், தன்னையே தாழ்வாகக் கருதுவது இராசத குணமாம். அறிவின் திரளாய் நின்றதை உடலில் இருப்பதை அறியும் விருப்பமில்லாமல், மனதை ஒரு இடத்தில் அடங்க விடாதிருப்பது தாமத ஞானமாகும்.

ஊனம்-வீணாதல், குறையடைய, பொருளை-ஆன்மாவை என்க, நாட்டம்-விருப்பம். (விருத்தம் வரிசை மாறியுள்ளது)

மனம் மொருக்காலும் வான்கலை நூல்களை
தன மொருக் கொடு கற்றலுந் தக்கவ
ரின மகிழ்த்தலு மின்றி யுண்டாக்கிய
சினம் விடுக்கிலார் தாமதஞ் சேர்ந்துளார். 26

மனதை ஒருக்காலும் நிலை கொள்ளவையார். உயர்ந்த கலைகளைக் கூறும் நூல்களை ஒரு நாளும் பொருள் செலவு செய்து கற்றுக்கொள்ளவும் மாட்டார். உயர்ந்தவர்களை ஒரு போதும் மகிழ்விக்கும் செயல்

களைச் செய்யார். கோபம் வந்தபோது அதை நீக்கவும் மாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் தாமச குணத்தைச் சேர்ந்தவர்கள்.

வான்கலை-உயர்ந்த கலைகள், தனம்-பொருட்செல்வம். தக்கவர்-உயர்ந்தோர்.

யீனமற்ற துறவற மல்லறம்
ஞானம் பற்றோடு நல்வினை தீவினை
யான தவஞ்சுவ தஞ்சத்தகா தென
தானறிந்துது சாத்வீக புத்தியே ! 27

குறைவில்லாத துறவறம் நல்லறம் எனும் ஞானத்தைப் பற்றிக்கொண்டு நல்வினை இது தீவினை இதுவென அறிந்து எதைக் கண்டு அஞ்சுவது எதனை அஞ்சாது செய்வது என உணர்ந்து தன்னையும் அறிவது சாத்வீக புத்தியாகும்.

யீனம்-ஈனம்-தாழ்வு, தானறிந்து-தன்னைத் தான் உணர்ந்து.

தருமம் பாவம் தனக்குச் செயத் தகுங்
கருமஞ் செய்யத் தகாத கருமங்க
ளருமையா லறியாத வரிவரே
விருமையாய் விராசத புத்தியே. 28

தருமம் எது, பாவம் எது, தான் செய்யத்தக்கச் செயல் எது, செய்யத்தகாத செயல் எது. ஆகியவற்றின் உண்மையறியாதவராயும், செயல்களின் பெருமையை உணராதவருமாக தாமதரும் அல்லாது சாத்வீக குணத்தவருமல்லாது இருவருமாய் இருப்பரே இராஜச புத்தியுடையவர்.

அருமை-எது எனும் உண்மை, விருமையாய்-இருமையாய்-இருவருமாக.

பாவமாக தருமத்தைப் பாற்கையும்
மாவதா மென்ற டாதது நோக்கலுந்
தீமை செய்கின்ற சிந்தனைத் தீங்கிலே
போவதாகிய தாமத புத்தியே. 29

தருமச் செயல்களைச் செய்வதை பாவமாகக் கருதுவதும், அடாத தீய செயல்களைச் செய்வதே ஆகும் செயல் எனக் கொள்வதும், தீமை செய்வதையே சிந்திப்பதும், தீங்கானவற்றிலேயே விரும்பிச் செல்வதும் தாமத புத்தியாகும்.

பாற்கையும்-பார்த்தாலும், அடாததது-தகாதது.

மனஞ் செயுந் தொழின் மன்னுயிரின் றொழி
லினஞ் செய் திந்திரி யஞ்செய் தொழி லென்றிவை
கனஞ் செய் தேறினுங் கண்டு பொறுத்தலுஞ்
சினஞ் செய்யாமையுஞ் சாத்துவத் திருத்தியே. 30

மனதின் தூண்டுதலால் செய்யப்பெறும் தொழில் இது. மண்டியுள்ள உயிரின் செயலால் செய்யும் தொழில் இது. பஞ்சேந்திரியங்களின் ஊக்கத்தால் செய்யும் தொழில் இது எனப் பகுத்தறிந்து, தெளிவுற்று அவைகளைச் செய்யாது பொறுத்தலும், கோபம் கொள்ளாமையும் சாத்வீக புத்தியாகும்.

இனம்செய் இந்திரியங்கள்-ஐந்து வகையான இனமாகிய இந்திரியங்கள், கனம்-கணம், பிரிவு. தேறி-கண்டுணர்ந்து, பொறுத்தல்-செய்யாதிருத்தல். சினம்-கோபம்.

பண்ணிக் காமந் தரு பயனைக் கொள்வா
னெண்ணித் தாங்குந் திருத்தி இரா சதங்
கண்ணிற் சோகங் களிப் புறக்கம் பய
நண்ணித் தாங்கும் தம்பொறை நாளுமே. 31

ஒரு செயலைச் செய்து, ஆசையின் பயனை ஏற்று அடைவதும், அதைச் சரி எனக்கொள்வதும் இராசத புத்தியாகும். சோகம், மகிழ்ச்சி, உறக்கம், பயம் இவை சார்ந்த செயல்கள் தாமச புத்தியுடையவர்கள் தாங்கிக் கொள்வதாகும்.

பண்ணி-செய்து. காமம்-ஆசை. திருத்தி-திருப்தி. களிப்பு-மகிழ்ச்சி. பொறை-தாங்கிக் கொள்வது.

துன்பமாவது பொன்று துடக்கற
வின்பமாகி வினை விளைத்திட யாவர்க்கு
மன்ப ராரமுதே யென லாவதா
மென்ப சாத்துவிதந் தருமின்பமே. 32

ஒரு செயல் தொடங்கப் பெற்ற நாளில் துன்பம் போல இருந்தாலும் பின்னாளில் அதுவே இன்பமான தாகவும் கிடைத்தற்கரிய அமுதம் போன்றதாகவும் ஆகக் கூடிய ஒன்றே சாத்வீகம் தரும் இன்பமாகும் அன்பனே!

பொன்று-பொறுத்திருந்து, வினை விளைத்திட, செயலைச் செய்திட. ஆராமுது-ஆராவமுது.

பொருத்தமாய்ப் புலனோடு பொறியிலே
யருத்தமா றெழுந் தார முதென்னலாய்
விருத்தமாய் விளை விட மாகியே
யிருத்தலாகு மிராச யின்பமே. 33

ஐம்புலன்களோடும் பொறிகளோடும் சரியானபடி பொருந்தியதாகவும், அமுதமென உயர்வாகவும், புலன்களுக்கும் பொறிகளுக்கும் கேடு வராத வகையில் விளைவதே இராசத குண இன்பமாகும்.

பொருத்தமாய்-விரோதமில்லாமல்-இசைவாக, ஆரமுதென்ன-ஆராவமுது என-உயர்வானது என எண்ணும்படியாக. விருத்தமாய்-விரிவாக-பலனாக.

துடருறக்க மயக்கொடு சோம் புமேற்
படவு தித்தவை பண்ணும் பொழுதினுங்
கடன் விளைத்து முடிந்த காலத்தினு
மிடர் விளைப்பது தாமத வின்பமே. 34

தொடர்ந்து வருவதாகிய தூக்கம், மயக்கம், சோம்பல் இவை அதிகமாகி துன்பம் இழைத்த போதிலும் அத்துன்பமானது தீர்ந்தபாடில்லாமல்-உயர்நிலை கிடைக்க முடியாதபடி கடனாகி துன்பத்தைத் தருவது தாமத இன்பம் எனப்பெறும்.

துடர்-தொடர், கடன்-தீராது, மீதமிருப்பது. இடர்-துன்பம். உதித்து-மீண்டும் தோன்றி.

இந்த வியற்கை யினாலிக் குணங்கள் விட்டவரில்லை
அந்தணருக்கும் வணிகருக்குமரசர் களுக்குஞ் சூத்திரற்குந்
தந்த மியற்கை யினாற் குணமூன்றின் றன்மையினால்
வந்த வினைத் திற மவற்றை யுணர்த்தக் கேண் முடிமன்னா! 35

இயற்கையாகவே அமைந்துள்ள இக்குணங்களை விட்டு விட்டவர்கள் எவருமில்லை. அந்தணர்கள், வணிகர்கள், அரசர்கள், சூத்திரர்கள் ஆகியவர்களுக்கு அவரவர்களின் இயற்கையான தன்மையாக அமைந்த குணங்கள் மூன்று. அம்மூன்று குணங்களின் தன்மை காரணமாக வருகின்ற கருமங்களின் விதங்களை உனக்கு சொல்கிறேன் கேள். கிரிடம் அணிந்த மன்னா !

நால்வகை வருணத்தவர்களின் குணங்கள் வேறுபடும் என்பது இயற்கை எனக் கூறப்பெறுகிறது. இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

கறை செய்யம் புலன்களைக் காண நான்குடன்
துறை துறையடக்கலுந் தவமுந் தூய்மையும்
பொறையொடு கல்வியும் ஞானமும்
மறையவர் தொழிலென வகுக்கப் பட்டதே. 36

குற்றத்தைச் செய்யக் கூடிய ஐம்புலன்களையும் அந்தரக் கரணம் எனும் நான்கினையும் அவைகளின் வழியே அடக்குவதும். தவமியற்றலும், உடல், ஆடை முதலானவைகள் தூய்மையுடையனவாய் இருத்தலும், பொறுமை காத்தலும், கல்வியுடைமையும், ஞானமும் மறையவர் எனும் வேதம் ஓத அறிந்த அந்தணர்களுக்கான தொழில் என வகுக்கப்பட்டுள்ளது.

கறை-குற்றம், புலன்-ஐம்புலன், கரண நான்கு-அந்தக் கரணங்கள் நான்கு. துறைதுறை-அந்தந்த வழியில். பொறை-பொறுமை, மறையவர்-வேதம் அறிந்தவர் இது ஒரு கலி விருத்தம்.

தலைமையுங் கொடையொடு தறுகணா ண்மையும்
நிலைமையுங் கீழ்ப்பாரை நெஞ்சி னிட்டமும்
கொலைப் பயில் போர்களிற் புறங் கொடாமையுஞ்
சிலைமலி தோளினா யரசர் செயகையே. 37

தோளிலே வில்லினையுடைய அருச்சுனா! தலைமை யேற்கும் தன்மையும், தானம் செய்தலும், வீரமிக்க ஆண்மையும், நீதியில் நிலையான தன்மையும், எளிமை யானவர்களிடத்திலே மனமொத்த அன்பும், கொலை களைச் செய்யும் இடமாகிய போரிலே புறங் காட்டா மையும் அரசர்களின் செய்கையாகும்.

கொடை-தருமம் செய்தல், தறுகாண்மை-வீரமிக்க ஆண்மை, நிலைமை-நடுநிலைமை, கீழ்ப்பார்-தன்னிலும் கீழான எளியோர், சிலை-வில்.

உழுதொழில் பசுக்களை யோம்பல் வாணிபம்
வழுவறச் செய்கையே வணிகர் வாழ்க்கையாம்
பழுதற விவர்களைப் பாது காத்தலே
விழுமிய தொழில்கள் வேளாளற் கென்பவே. 38

உழுவதாகிய தொழில் ஆகிய விவசாயம் செய்தல் பசுக்களைக் காப்பாற்றுவது. பொருள்களை வாங்குவதும் விற்பதுமாகிய வியாபாரம் செய்வதை குற்றமில்லாமல் செய்வதே வணிகரின் சிறந்த வாழ்க்கையாகும். இவர்களுக்கு எல்லாம் குறை ஏதும் ஏற்படா வண்ணம் பாதுகாப்பதாகிய உயர்ந்த தொழிலே வேளாளர் என்பவர்க்கு ஆகியது.

ஓம்பல்-பாதுகாத்தல், வழுவற-குற்றமின்றி, பழுதற-குற்றமின்றி. விழுமிய-சிறந்த.

தீரா வகை தன் செயலே செயவே
நாராயண னாமுத னாயக னுக்
காரா தனையா மதனா லவரே
வரா வழியா மவரே தருமால். 39

இவ்வாறு நிலையான வகையாகப் பிரிக்கப் பெற்றோர் அவரவர்தம் தொழில்களைச் சிறப்பாகச் செய்வதே நாராயணன் எனும் முழுமுதற் கடவுளுக்குச் செய்யும் வழிபாடாகும். இதனால் அவர் தாமாக இவர்கள் மறுபடியும் இப்பூமிக்கு பிறவி எடுத்து வாராதிருக்கும் மோட்சத்தை அவர் தருவார்.

தீராவகை-நிலையான பிரிவு, ஆராதனை-வழிபாடு, வராவழி-மோட்ச நிலை. செய்யும் தொழிலே தெய்வம் என்க.

கனலெரி புகையோடன்றிக் காரண முன்படாமை போல
வினைகளுங் குற்றந்தன்னை விட்டிராத தாலே
யனைய வென்றி கழ்தலாகா வடுத்தக் காரியங்க டம்மை
நினைய வருந் தருமமென்று செய்கையே நீதியெல்லாம். 40

உள்ளே இருப்பது நெருப்பேயானாலும் வெளியே முதலில் தெரிவது புகையாகும். இதைப் போலவே செய்யும் செயல்கள் எல்லாவற்றிலும் மறைவாக குற்றம்

இருக்கவே இருக்கும். எனவே தருமமான காரியங் களையே செய்தலை விடுதல் கூடாது. அது வெற்றியைத் தருவதாகையால் அதையே செய்தல் வேண்டும்.

கனல்-நெருப்பு, வென்றிகழ்தல்-வெற்றியினை விடாமல், தருமமென்று-சரியென்று, நீதி என்று. இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

அல்லா வினை தானழகாய் வரினுஞ்
செல்லார் பெரியோரவை செய்வதனிற்
றொல்லா குலமேதுட ருந்தொழிலே
பொல்ல வெனினுஞ் செயல் பொருளே. 41

தன் குலத்திற்கு அல்லாத வேறு குலத்தவர்க்குரிய தொழில் தனக்கு நன்றாகச் செய்யத் தெரிந்த போதும் அறிவுடைய பெரியோர்கள் அதனைச் செய்யமாட் டார்கள். அவ்வாறு அத்தொழிலைச் செய்வதை விட தமக்குரிய குலத்தொழில் பொல்லாத தீய-கீழான-தொழிலேயானாலும் அதையே செயவதுதான் உயர்வாகும்.

அல்லா வினை-தன் குலத்திற்கு அல்லாத தொழில். பொல்ல வெனினும்-தீயது-கீழானது எனினும்.

வெல்லப்பட்ட மனத்தினனாய் வேறொன்றினையும் வேண்டாதே
யல்லற் படுக்கு முடம்பற்று மறவே யறுத்தான் வினையாவுஞ்
செல்லச் செல்லவே வருத்தமதனாற் சித்த முடிவாகச்
சொல்லப்பட்ட கரணங்க ணான்கும் தூயதாய் விடுமன்றே.42

மனத்தில் எழக்கூடிய ஆசைகளை வென்றவனாகி, வீடுபேற்றைத் தவிர வேறு எதையும் வேண்டாதவனாகி தொல்லையைத் தரக்கூடிய உடம்பின் மேலான பற்றி னையும் விட்டவனாகி இருப்போனின் செயல்கள், காலம் செல்லச் செல்ல வருத்தத்தின் காரணமாக, மனதை

முடிவாகச் சொல்லப்பெற்ற அந்தக் கரணங்கள் நான்கும் தூய்மையாகி விடுவதைக் காணலாம்.

வேறொன்றினை என்பதை வீடுபேற எனவும்-இறைவனை அன்றி எனவும் கொள்ளலாம். செல்லச் செல்ல என்பது-அவ்வாறே செய்துவர எனவும் கொள்ளலாம்.

சொன்ன கரணமவை நான்குந் தூய்மையதாய் விடும்
அத்தூய் மையினா
லுன்ன லரியப் பெரும் பொறையை யுடையவனாகும்
மப்பொறையா
லின்னல் செய்யும் பொறியைந் துமிராகத் துவேஷி
மெனுமிரண்டு
மென்ன தன்னை நலியாம லாற்று மதனை மாற்றினான்.43

முன் சொல்லப்பெற்றதாகிய கரணங்கள் நான்கும் தூய்மை ஆகிவிடும். பின் அதனாலேயே நினைப்பதற்கு அரியதாகிய பொறுமையுடையவனாவான். அந்தப் பொறுமையின் காரணமாகத் துன்பம் தரக்கூடிய ஐம்பொறிகளும், ஆசை, வெறுப்பு என்னும் இரண்டும் தன்னைத் துன்பப்படுத்தாது மாற்றும் தன்மையதாகும்.

உன்ன-நினைக்க, பொறை-பொறுமை, ராகம்-ஆசை, துவேஷம்-வெறுப்பு, நலியாமல்-வருத்தப் படுத்தாமல்.

காடு மலையு மலையுமுள முழையுங் கடுநா முதலை
நலிவில்லா
தோடு புனலாறு ள்ளிட்ட விடமே யுறை யுளவாக் கொண்டு
தேடும் பொரு ளொன் றின்றியே சிறிதேயுண்டு
சென்றெங்கும்
மோடு மனம் வாய்மொழி யாக்கை யடங்கப் பெறுமால்
வனேயால்.44

காடும், மலையும், மலையில் இருக்கும் குகையும், கொடிய நாக்கினையுடைய முதலை போன்ற விலங்கினால் உண்டாகும் துன்பமும் இல்லாமல், ஓடும் நீரையுடைய ஆறு முதலான இடங்களையே உறையும் இருப்பிடமாகக் கொண்டு பரம்பொருளன்றி வேறொன்றையும் தேடும் பொருளாகக் கொள்ளாமல், உணவைக் குறைத்து சிறிதளவே உண்டு, பல விஷயங் களையும் நோக்கி ஓடக்கூடிய மனத்தையும், வாய்ச் சொல்லைக் கட்டுப்படுத்தி மவுனமாகவும் இருந்து உடலின் இச்சை அடங்கப்பெறுவது அவனாலே ஆகும்.

முழை-குகை, கடுநா-கொடிய நாக்கு, ஓடுபுனல்-ஓடுகின்ற நிரையுடைய ஆறு., உறையுள்-இருப்பிடம், எங்கும்+ஓடும்+மனம்-அலையும் மனம் வாய்மொழி யடக்கல்-மௌனமாய் இருத்தல்.

சொன்னவிவை போயடங்கிடவே தோன்றுங் களப்புங்
காமமுமுன்
பென்னதுயா னென்கின்றதுவு மெரிபோல் வெகுளி யோடுவலியு
முன்னரவிந்தே சாந்திபெறும் சாந்தி பெறவே யோரிடத்தும்
பின்னமடையா தொன்றாகி நின்ற பொருளின் பேருருவாம். 45

முன்சொன்ன அந்த இந்திரியக் கரணங்கள் எல்லாம் அடங்கிப் போகவே, கர்வமும், காமமும், எனது நான் என்கின்ற அகங்காரமும், தீயை ஒத்த கோபமும், இத்தோடுகூட உடல் திமிரும், முதலில் அவிந்து மனம் சாந்திபெற்றுவிடும். இவ்வாறு சாந்தி பெற்ற பின்னர் எங்கும் குறைவென ஒன்று இல்லாத எங்கும் நின்ற பரம் பொருளின் பெரிய உருவமாகி நிற்பான்.

களிப்பு-கர்வமான மகிழ்வு, எரி-நெருப்பு-தீ, வெகுளி-கோபம், வலி-வலிமை-திமிரு, அவிந்து-அடங்கி, பின்னம்-குறைவு, பேருரு-பெரிய உருவம்-பரப்பிர்மம் என்க.

அந்த உருவானவன் பின்னை யாதே வரினும் மழிவுறா
னிந்த உலகத்துயிர்க் கெல்லா மொத்தே யிருக்கு மிங்கிவனும்
பந்தமற விட்டென்னை யுமறி பத்திபெறு மப்பத்தியினாற்
சிந்தை யிடையே யெனைத் தெளியு மதனால் எனையே
சேருமால்.46

அவ்வாறு பரப்பிர்ம உருவானவன், அதற்குப் பிறகு எவ்வகைத் துன்பம் வரினும், அழிவுறமாட்டான். இந்த உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தையும் தன்னுயிர் எனவே ஒத்து இருப்பான். பந்த பாசங்களை முழுவதுமாக விட்டு என்னை யாரென்று அறிந்து கொண்டு என்னிடத்தே பக்தி கொள்வான். அப்படிப்பட்ட பக்தியினாலே நான் யாரென்ற உண்மையை தெளிவாகத் தெரிந்து கொள்வான். ஆகையால் அவன் என்னையே வந்தடைகிறான்.

பின்னை-பிறகு, ஒத்தேயிருக்கும்-எவ்வுயிரும் தன்னுயிர் என ஒத்துணர்வோடு இருப்பான் என்றது.

என்னைப் பற்றிக் கொடு நின்றே யெல்லா வினையு
மியற்றினாற்
நின்னைப் பிறவாப் பெறும்பத மென்னருளி னாலே பேறுங்
கண்டாய்
நின்னைத் தொடரும் வினையெல்லாம் மென்னை
நினைந்தே செயல் வினைக
டன்னைக் கடத்தற்கருந் துன்ப மெல்லாங் கடக்கத் தகுதியால். 47

என்னையே துணையெனப் பற்றிக்கொண்டு நீ செய்யக் கூடிய செயல்களை எல்லாம் செய்தாயே யானால், மீண்டும் இப்பூவுலகில் பிறவாதிருத்தலாகிய பெரிய நிலையை என்னுடைய அருளினாலே நீ பெறுவாய். உன்னைத் தொடர்ந்து வரும் கருமங்களினால்

ஆகக்கூடிய செயல்களை எல்லாம் என்னையே நினைத்து செய்வாயேயானால், அவ்வினையின் பயன்களைக் கடந்து, அரிய துன்பங்களை எல்லாம் கடந்து ஈடேறுவதற்கான தகுதியுடையவனாய்.

பின்னை-பிறகு, பெரும்பதம்-பரமபதம், அருந்துன்பம்-மிகப் பெரிய-அரிய துனபங்கள்.

ஒன்றிய மனத்தினாலே யானு ரைக்கின்ற வுண்மை
நன்றி தென்று ணரா வாயி னா செயமே யடைதீ மற்றீ
தன்றியு மரசர்க் கெல்லா மடுத்த காரிய மாயுள்ள
வென்றியை யுடையா யேனும் வேறுநீ விளைவ கேளாய்.48

ஒரு நிலைப்பட்ட மனத்தினாலே, நான் சொல்கிற இவ்வுண்மையினை இதுவே நல்லது இதுவே என உணர்ந்து கொள்வாயேயானால் உனக்கே வெற்றி உண்டாகும். மேலும் அரசர்களுக்கெல்லாம் உரிய செயலாகிய, போரில் வெற்றி பெறுதலையும் உடையவனாய், இதன்றி வேறும் உள சொல்கிறேன் கேள்!

ஒன்றிய-ஒரு நிலைப்பட்ட, செயம்-வெற்றி. இது ஒரு அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

விரைசெய்தார் மன்ன வேண்டலை யாயினுங்
கரை செய்துன் றன்னைக் காலுற வார்த்திடு
மரசர் தங்குண மாகிய வாண்மையே
புரைசெய் வாளமர்க்கே புகுவிக்கு மால். 49

மணமிக்க மாலையணிந்த மன்னவா! நீ விரும்பவில்லை யென்றாலுங் கூட, மற்ற அரசர்கள் தங்களின் ஆண்மை குணத்தினால் வஞ்சகமாக உன்னை, குற்றத்தையுடைய வாட்போரை செய்யுமாறு செய்துவிடுவர்.

விரை+செய்+தார்=விரை வாசனை, தார்-மாலை, கரை-வஞ்சகம்-குறை, காலுற-ஈடுபடுமாறு, புரை-குற்றம், வாள்+அமர்=வாளமர்-வாள் சண்டை, வாட்போர். இது ஒரு கலி விருத்தம்.

பொறிகளு ண்ணின்ற வற்றின் புணர்ப் பெல்லா
மறிய வாட்டினன் யாக்கை டோறும் பொன்
மறைவி நின்று தன் மாயை யினால் வினைக்
குறிகள் செய்விப்ப னீச னென்றே கொள்வாய். 50

ஐம்பொறிகளின் உள்ளிடத்திலே நின்று அவற்றின் செயல்களை எல்லாம் செய்விக்கின்றவனாகி, உடல்கள் தோறும் மறைவாகவே நின்று தன்னுடைய மாயை யினாலேயே, செய்யப்பெற வேண்டிய செயல்களை எல்லாம் செய்விக்கிறவன் ஈசன் என்றே தெரிந்து கொள்வாயாக.

பொறிகளுண்ணன்ற-பொறிகளின் உள் நின்ற, புணர்ப்பு-செயல்கள், யாக்கை-உடல்.

தீதலான வுளவோ வினவேண்டி லெனத்தேறி
யோதலினா னினைத்திலினா லெனைப் போக்கி யொன் றறியா
யாதலினா வியாவர்களு மறியாத தொரு பொருளைக்
காதலினா லுனக் கின்ன முறைக்கின் றேன் கடைப்பிடி நீ. 51

தீமையைத் தராத ஒன்று ஏதேனும் உளதோ என என்னை நீ கேட்பாயானால், இதனை என்னாலே மட்டும்தான் கூறமுடியும் எனக் கருதி என்னிடம் கேட்டாய். உனக்கு என்னைத் தவிர வேறு எவரையும் தெரியாது. ஆகையினால், இவ்வுலகில் எவரும் அறிந்திலாத ஒரு பொருளைப் பற்றி, உன் பேரில் உள்ள அன்பின் காரணமாகக் கூறுகிறேன். இதனையே நீ நல்லது எனக்கொண்டு கடைப்பிடிக்கவேண்டும்.

தீதலாதன-தீமையைத் தராதன, வினவ-கேட்க, எனைத்தேறி-என்னைத் தேர்ந்தெடுத்து, எனைப்போக்கி-என்னைத் தவிர, காதலினால்-அன்பின் காரணமாக, இது ஒரு அறுசீர் கடிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

என்னையே நினைந் தெழு வுன் மனத்தினை என்னிடை
யேவைத்
தென்னையே நினைத்திரு மற்றென்றெனக்கே பூசனை செய்
யென்னையே குருவாய்க் கொள்ளுதி செய்யிலெப் பொழுது
லென்னையே வந்தடைதி யிது மெய்யே யிது மெய்யே. 52

எப்போதும் என்னையே நினைந்து எழும் உன் மனத்தை என்னிடமே வைத்திரு. எப்போதும் என் நினைவாகவே இரு! மேலும் எனக்கே பூசனைகள் செய்து வழிபடு! என்னையே உன்னுடைய குருவாகக் கொள். இவ்வாறு நீ இருப்பாயானால் அப்பொழுது நீ என்னை வந்தடைவது உறுதி இது உண்மை. உண்மையன்றி வேறில்லை.

எப்பொழுத என்றது-அவ்வாறு செய்யும் காலத்தில், ஒரு பொழுதில் என்றது-மெய்யே மெய்யே என்றது உண்மையை உறுதி செய்தது.

இருவேறு வகையாய் வெவ்வேறு வினைகளையு
மருவேனென றற விட்டு மாயை யினாற் மறைப் பரிய
வொருவனையேப் பற்று தியேல் அப்பற்றினாலு னைப் பிறவிக்
கருவேலைக் கடந்தேறக் கை தருவேன் கதிர்வேலோய். 53

ஒலிமிக்க வேலினையுடைய அருச்சுனா! இரண்டும் வேறு வேறு வகையானதாகிய வெவ்வேறு வினை களையும் செய்யமாட்டேன் என்று அறவே விடுத்து, எவ்விதமாயையினாலும் மறைப்பதற்கு இயலாத என் ஒருவனையே பற்றெனக் கொண்டாயேயானால், பிறவியைத் தரக்கூடிய கருப்பை எனும் கடலைக் கடந்து கரைசேர கைகொடுத்து உதவுவேன்.

இருவேறு-வெவ்வேறு வினைகள் என்றது. நல்வினை தீவினை என்பன, மருவ-சேர, செய்ய, அறவிட்டு-அறவே விட்டு முழுதுமாக விடுத்து, கருவேலை-கருவையுடைய கடலை பிறவிப்பெருங்கடல் என்க.

மற்றுனக்குச் சொல்லிய விம்மறைப் பொருள் மாதவ
மிலார்க்குங்
குற்ற மறுத்தறி வருளுங் குரு வழிபா டில்லா தவற்குஞ்
செற்ற மனச் சழக் கற்கு மெனை நினையாத் திறத்தவர்க்கும்.
மற்ற மறத் தெரிந் துரைக்கை யடா தென்றே
யறிகண்டாய். 54

இப்பொழுது நான் சொன்னதாகிய இந்த இரகசிய மானவற்றை, நல்ல தவங்களைச் செய்யாதவர்க்கும், குற்றங்களையும் சந்தேகங்களையும் நீக்கி அறிவைக் கற்பிக்கும் குருவை வழிபடும் குணம் இல்லாதவர்க்கும், கோபத்தோடு கூட, மனதில் பொறாமை எனும் அழுக்குடையவர்களுக்கும், என்னை நினைக்காத தன்மையவர்க்கும், மாற்றம் ஏதுமின்றி தெரிந்து கொண்டதைச் சொல்லக்கூடாது என்பதை அறிவாயாக.

மறைபொருள்-இரகசியமான விஷயம், செற்றம்-கோபம், சழக்கு-பொறாமை, பாத்திரமறிந்து பிச்சையிடுக வென்றது.

எல்லாப் பொருட்கும் பரமாம் மிப்பொருளை யென்னப் பகர்க்
கிசையச்
சொல்லாற் றெரிவிப்பார் தம்மையறியச் சொல்ல வேண்டுமோ
நல்லார்களின் மற்றெனக் கினிய நன்மை செய்கின்றாரு மவ
ரல்லாத வருமிப் பொழுதில்லை மேலு மவர்களு ளாராகார். 55

எல்லாப் பொருள்களுக்கும் மேலான, நான் சொல்லியதன் பொருளை, கேட்பவர்கள் நன்றாகப் புரிந்து கொள்ளும்படி சொற்களால் தெரிவிக்க வல்லவர்

களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? அவர்களே நல்லவர்கள். எனக்கு இனியன செய்கிறவர்கள். எனக்கு நன்மை செய்கிறவர்கள். இப்படிப்பட்டவர்கள் அல்லாதவர்கள் இப்போது எவருமில்லை. இனியும் அப்படிப்பட்டவர்கள் இருக்கப்போவதுமில்லை.

பரம்-உயர்வான, பகர்க்க-சொல்ல, இசைய-உணரும்படி, அல்லாதவர்--அவ்வாறு சொல்லாதவர்கள் என்க.

ஏய யிருவோம் பேசிய விம் மறை நூலினையே யெடுத்துரைப்பா
னாய ஞான யோகத்தா லெனையே யாராதரிக்கின்றான்
மேய பொறாமை தனைவிட்டு விருப்பாலி தனைக் கேட்பானுந்
தீய வினைகளற விட்டுத் தேவருலகஞ் சேருமால். 56

நாம் இருவருமாக இசைந்து பேசிக்கொண்டதாகிய இந்த இரகசியமான வேதம் போன்ற நூலை, மற்றவர் களுக்கு எடுத்துச் சொல்பவர்கள் ஞான யோகத்தால் என்னை வழிபடுகிறவராவார்கள். மனதில் தோன்றும் பொறாமையை விட்டு விட்டு எவன் ஒருவன் விருப்பமுடன் கேட்கிறானோ அவன் தன்னுடைய தீவினைகளை எல்லாம் விட்டவனாகி தேவர் உலகத்தை அடைவான்.

ஏய - இணைந்து, தேவருலகம்-தேவலோகம்.

என்னது மொழியினாலே யானியம்பிய ஞானத்தாலே
மன்னவ வுனக்கு வந்த மயக் கெல்லாங் கெட்டதே யான்
சொன்ன விப்பொருளெல்லாம் துணிந்தனை கொல்லோ
வென்று
நன்னகை கூற நின்று நாயக னருளிச் செய்தான். 57

மன்னவனே! இதுவரை என் வாய்மொழியினாலே நான் சொன்னதான ஞான மொழியினாலே உன் மனதிலே உள்ள மயக்கமெல்லாம் அழிந்ததல்லவா? நான்

சொன்னதை எல்லாம் மனதில் துணிவோடு நீ ஏற்றுக் கொண்டாயல்லவா? என்று நல்ல சிரிப்பினூடே கூறி நின்று தலைவனாகிய கண்ணன் அருச்சுனனுக்கு அருள் செய்தார்.

மயக்கம் கெட்டதே-மனதில் உள்ள-சந்தேகம் நீங்கியதோ! துணிந்தனை கொல்லோ-தயங்காமல் ஏற்றுக் கொள்வாயல்லவா. நன்னகை-சிரிப்பு. இது ஒரு கலி நிலைத்துறை விருத்தம்.

மன்னவ வெண் மாயமதுசூத மறை நூலின்
முன்னவை மொழிந்த திருவாய் மொழி களாலே
யென்ன குறை யுண்டினி யெனக்கென வியம்பித்
தன்னக மகிழ்ந்திவை தனஞ் செயன் வுரைப்பான்.58

மன்னவனே என அழைத்து, மதுசூதனனாகிய கண்ணன், வேத நூல்களில் முன்னாளில் கூறப்பெற்ற விஷயங்களை எல்லாம் கூறியதனால், மனம் மகிழ்ச்சியுற்ற தனஞ்செயன்-இனியும் எந்தக் குறையும் எனக்கில்லை எனக்கூறினான்.

தன்னக மகிழ்ந்து-மனமகிழ்ச்சியுற்று. இது ஒரு கலி விருத்தம்.

பையரவியிலே யினிது பள்ளிய மாலோனே
மையமு மிவ்வைய மதின் மன்னுயிர்கள் யாவும்
செய்ய வினையற்றது சிதைத்தலது தானு
மெய் தெரியினீ முன் விளையாடும் வகையன்றோ! 59

படமெடுத்த பாம்பின் மீது இனிதே படுத்திருக்கும் திருமாலே! இவ்வுலகத்தோடு கூடி அதில் வாழும் உயிர்களையும் படைத்து பின் அவைகளை அழிக்கும் உன் செயலின் உண்மை தெரியாது நீ விளையாடும் வகை எதுவோ!

பையரவு-படத்தையுடைய-விஷப்பாம்பு, பள்ளிய-துயின்ற, மையலை-உலகம், சிதைத்தல்-அழித்தல்.

அணித்தகைய சோதியே யமலா வுனருளாலே
கணித்த வரிதாய பிறவிக் கடல் கடந்தென்
பிணித்த மாயை மயல் கெட்டது பிரானே
பணித்த பணி யல்லாது செயத் தகுவதுண்டோ! 60

குற்றமேதுமில்லாத, பிரகாசமான சோதிவடிவே! உன் அருளாலே, சொல்லற்கரியதாகிய இந்தப் பிறவிக் கடலைக் கடந்தேன். என்னைப் பிடித்த மாயையும், சந்தேகமும் தீர்ந்துவிட்டன. உயிருக்கும் மேலானவனே! இனி இடும் கட்டளைப்படி நடப்பதுவல்லாமல் செய்யத் தக்கது வேறில்லை.

அணித்தகைய-ஒளிவீசக் கூடிய, அமலா-குற்றமற்றவனே, கணித்தவரிய-குறிப்பிட்டுச் சொல்ல இயலாத, பிணித்த-பிடித்த.

வைய முழுதுண்ட திருவாய் மலர் திறந்திட்
டுய்ய வடியென் முன்னுரை செய்தமை யினாலே
ஐயமு மகன்ற தென் யாப்பு மற விட்டேன்
செய்வ தினி யுன்ற னருளிச் செயல் களன்றோ? 61

உலக முழுவதையும், உண்ட உன் திருவாய் திறந்து, நான் உய்யும் வகையாய் என் முன்னே எல்லாவற்றையும் நீ சொன்னமையினாலே, என்னுடைய சந்தேகம் எல்லாம் தீர்ந்தன. என்னுடைய அகங்காரமும் அழிந்தது. இனி நீ எதைச் சொல்கிறாயோ அதையே செய்வேன்.

உய்ய-ஈடேற, யாப்பு-இருமாப்பு, அகங்காரம்.

தோன்றாதனத் தோன்ற வையகந்தான் செய்யுந் தொழினி
மித்தமாய் திகழுஞ் சூழ் கதிரோன் போலச்
சான்றாகி நின்றனைத்துங் கரணங்கள் செய்யுந்
தகமைகளுக் கெல்லாம் தனி நிமித்தமாகி

வான் றானெனெ வோர் வடிவின்றி யோற்று வரம்
புகழ்ந்து நின்றா லிம் மன்னுயிர்க் கெல்லாம்
மீன்றாலுங் காத்த ழித்தல் செய்தாலு முன்றனியல்
பொடு மாகாத தெவ்வகை நீயெந்தாய். 62

நினைக்க இயலாதவற்றை யெல்லாம் நினைக்கச் செய்து, உலகம் தான் செய்யக்கூடிய செயல்களின காரணமாக எங்கும் சூழ்ந்திருக்கக்கூடிய சூரியனைப் போல, சாட்சியாக நின்று, எல்லாக் கரணங்களும் செய்யக்கூடிய செயல்கள் எல்லாவற்றிற்கும் காரணமாகி, வானமே எல்லையாகாத ஒரு வடிவமாகி, உயர்ந்தோர் போற்றும்படி நின்றாலும், இம்மன்னுயிர்களை எல்லாம், படைத்தலும், காத்தலும், அழித்தலுமே உன்னுடைய மூவகை இயல்பாக இருப்பது எவ்வாறு என அறிகிலேன் என் தாய் ஒத்தவனே!

நிமித்தம் - காரணம், கதிரோன்-சூரியன், ஈன்றலும், காத்தல், அழித்தல்-ஆகிய தொழில் மூன்று. மூன்றின் இயல்பொடு ஆகாத என்றது தான் தோன்றாவது அழியாது நின்றதைக் குறித்தது. இது ஒரு தனி விருத்தம்.

எரியாதவ னுக்கு வெம்மை தானே வடிவாகி
யிருந்தப் போலியாது மொன்றுந்
தெரியாத மெய்யறிவினு ருவாயேதுந் தீரியாமை
யெவ் வடிவாய்க் கரணங்கள் யாவும்
பிரியாது நினைப் பற்றி நின்றுத் தத்தம் பெருந்
தொழிலே புரிகின்ற பெற்றி கண்டாற்
கரியானே யுன தடிமைத் தொழிற் பூண்டு
காதலிப் பாற்கு இயலாத கரும முண்டோ! 63

சுட்டெரிக்கும் சூரியனுக்கு வெப்பமாக இருப்பவனே! எதிலும் சேராமல் இருப்பவனே!

அலையாத மெய்யறிவின் வடிவாகி எங்கும் திரியாது எல்லா உருவமுமாகி இருப்பவனே! கரணங்கள் எல்லாம் உன்னைப் பற்றிக்கொண்டு நின்று தான் அவை தத்தமது தொழில்களைச் செய்கின்றன எனும் பெருமையைக் கண்டேன். கரிய நிறத்துக் கண்ணனே உனக்கு அடிமை யாகி உன்னிடத்தே அன்பு செலுத்துபவர்களுக்குச் செய்ய இயலாத செயல் என்று எதுவும் இல்லை.

எரியாதவன்-எரிக்கும் சூரியன், போலியாது- பொலியாது- தெரியாமல், திரியாமை-அலையாமல், பெற்றி-பெருமை, கரியானே- கரிய நிறத்தானே! காதலிப்பதற்கு-அன்பு செலுத்துவோர்க்கு.

நானாவித மாகுங் கரணங்களேது நனுகாத
வுருவின்னாய நற்புலன்க ளென்னுங்
கானாறு தனளுழலுங் கரணங் கட் கெல்லாங்
காரணமாய் நின்றவைகள் காண்கின்ற வையெல்லாந்
தானகுவகை காட்டி யக்காரணந்
தோருந் தனித்தனியே நின்று தலையழியா நின்ற
யானாலு முன்னை யவையேது மொன்று மறியாத வகை
நிற்ப தெவ்வகை நீயையா. 64

பல விதங்களாக ஆகக்கூடிய கரணங்கள், தானாக ஆகிய உருவினனாக, நல்ல புலன்கள் என்னும் காட்டிலே உழலுகின்றதற்கான காரணங்களுக்கெல்லாம் காரணமாய் நிற்கின்றவைகளுக்கெல்லாம், தானே காரணம் என காட்டி, பின் அக்காரணங்கள் தோறும் தனித்தனியாக நின்று, என்றும் அழியாது நிற்கின்றாய். ஆனாலும் அக்காரணங்கள் எதுவும் உன்னையறிய முடியாதபடி நீ என்றும் இருப்பது எப்படி என்று தெரிகிலேன்.

நானாவிதம்-பலவிதம், நாணுகாத-சேராத, கான்-காடு, தலையழியா-என்றும் முதன்மை அழியாத.

ஆடியினில் வேறுபடத் தோன்றுகின்ற வன்னிழலு
முணர்வினா லறிந்து பாற்கிற்
கூடிய வ்முகம் போக்கி வேறிலாமை குறியாயே
நிகழ்ந்தாற் போல குணங்களைலே
தேடிய வவ்வுட டோறும் தோன்றித் தோன்றிச் சீவனாய்
திகழ்கின்ற திகழ்ச்சி தானும்
பாடிய வம் மறை நெறியே யுணர்ந்து பாற்கி
னீயல்லா வகை யுண்டோ பரம யோகி. 65

கண்ணாடியில் இடவலமாற்றமாகத் தோன்றுகின்ற அந்த நிழலை நன்றாக உணர்ந்து பார்த்தால் அது பார்த்தவரின் முகமேயல்லாமல் வேறில்லை. அது போலவே, குணங்களினாலே தேடியடையப்பெற்ற உடல்கள் தோறும் தோன்றித் தோன்றி உயிராய் இருக்கின்ற செயல்கள் எல்லாம், சொல்லப்பட்ட நீதி நெறிமுறைகளின்படி உணர்ந்து பார்த்தால் எல்லாமே நீயல்லாமல் வேறில்லை பரம யோகியே!

ஆடி-கண்ணாடி, சிவன்-உயிர், பரமயோகி-யோகமே உருவானவன்.

செறிவாகு மாடி யிலா திடத்தி லாங்கே திகழ்கின்ற
முக நீழற் செய்கை தானும்
பிறிவாகி வேறு படத் தோன்றாதே முன் பேசுகின்ற
முகமேயாய்ப் பேத மகன்றாப் போ
னெறி வாழுங் கரணங்க ளெல்லா மேய்ந்து நீயேயா
யொழிவின்றி நித்தியாகி
லறிவா னுமறி பொருளு மன்றி யொன்றே யாயிருக்கு
மதுவே நின்னியற்கை யாதி. 66

கண்ணாடி இல்லாத இடத்தில், முகத்தின் நிழல் காணாதது போல, கண்ணாடி வேறு முகம் வேறு எனப்

பிரிவாகித் தோன்றாது. எனவே கண்ணாடி யில்லாததால் முகமும் இல்லை எனவாகாது. இதில் சந்தேகம் இல்லை. இதைப்போலவே, முறைப்படி இயங்கக்கூடிய கரணங்கள் எல்லாவற்றிலும் வேறுபாடின்றி நீயே ஆகி நின்று அனுதினமும், அறிபவனாகவும், அறியப்படும் பொருளாகவும் நீயே என ஒன்றாயிருப்பதுவுவே உன்னுடைய இயற்கையாகும்.

செறிவாகுமாடி-உருவம் தெரிந்த கண்ணாடி, பேதம்-சந்தேகம், நித்தியாகி-என்றும் நிலையாய், இருப்பவனாகி-அறிவானது மறி பொருளும்-அறிபவனாகவும் அறியப்படும் பொருளுமாகி.

ஆதித்த னொருவன் தானாகி நின்றே யகலந் தோறு
தேருமாந் திருந்த புனல் கடோறும்
பேதித்துப் பலவாகி தோன்றி ணாற்போற் பிறிதின்றி
நீயேயாய் பிணக் கிறந்து நின்றே
வாதித்த மதியாகி கரணந் தோறு மற்றவை
போற் றோன்று கின்ற மாயவனே
சோதித்து நின்பெருமை சொல்வதற்கு மேலைச்
சுருதிக டாம் வல்லவோ சொல்லிறந்த சோதி. 67

ஒரே சூரியன், வீடுகள் தோறும் வைக்கப் பட்டிருக்கும் நீர் நிறைந்த பாத்திரங்களில் உள்ளவாறு பலவாக தோன்றும். இதைப்போல, உன்னைத் தவிர வேறு ஒருவன் எங்கும் இருக்கிறதில்லை. இதைப்பற்றி வாதிட்ட போதும் கூட மற்றவற்றைப் போலவே நீ தோன்றுகிறவனாகிய மாயவனே! உன்னுடைய பெருமையைச் சோதனை செய்து கூற வேதங்களாலும் இயலாது. நீயே சோதி வடிவானவன்.

ஆதித்தன்-சூரியன், புனல்-தண்ணீர், பேதித்து-வேறுபட்டு, பிணக்கு-சண்டை சச்சரவு-வேறுபாடு, சுருதி-வேதம்.

நிலை யொன்றிச் சலிப்பின்றி யொருவ னேயாய்
நின்றாலும் வானிரவி நின்றன்னாலே
யலை யொன்றி நீரினோ டலைந்து மற்றாங் கசலமா
நீரினோடே சலமாகித்
தலைநின்று வரும்படி போலறிவு தோறு மவற்றிற்
குத்தக னிற்குந் தகையோ உன்னை
கலை நின்ற மறை தெரிய வல்ல வாகக் காட்டுவதுஞ்
சிலர் கண்டா லாவ தென்னா. 68

ஒரு நிலையில் ஒன்றி இருந்து, கொஞ்சமும் சலிப்பு என்பது இல்லாமல் நீயே ஒருவனாய் நின்றாய். அவ்வாறு அலையிலே கடந்து, நீரினோடு அலைந்து, மேலும் அந்த நீரிலேயே அசையாத மலையாகி, முதன்மையாக நின்றாய். அந்த மலையாகவே அறியப்படுகின்றவனும் பெரியோன் நீ. உன்னை எல்லாக் கலைகளும் நிறைந்த வேதங்கள் காட்டினாலும், அதன் உண்மையை அறிய இயலாத வர்கள் காண்பதால் பயன் ஏதும் இல்லை.

வானிரை நின்ற-வானளாவியவாறு நின்ற, சலம்-மலை, மறை-வேதம், சிலர் என்றது உண்மையறிய இயலாத சிலர் எனக்கொள்க. ஆவதென்ன எனவந்தமையால்.

ஓரொன்றாத லின்றியே யுலகிலுள்ள வறு பொருள்
ளனைத்தினுக்கு மொரு காலத்தே
சீரொன்றாய் நின்ற கதிரிரவி காட்டுஞ் செயல்
போலே யாவர்களுக்குஞ் செய்வினைக ளெல்லாம்
மார்கின்ற கதிராழி யானே
நீயே வருங்கால மொன்றி யறிவித் திடுதி யென்றால்
நேர் றொன்றா யுன்னை
யொழித்துச் செய்கின்றாராய்
நிற்கின்றவருடைய நிலைமை யென்னா. 69

ஒவ்வொரு பொருளையும் காட்டுவதற்காக சூரியன் தனித்தனியே இருப்பதில்லை. ஒன்றேயாக இருந்து உலகத்திலுள்ள அனைத்தையும் கதிரொளி மூலம் காட்டுகிறது. அதைப்போல, சங்கு சக்கரம் தரித்த கண்ணனே! அவர் அவர் வினைக்கேற்ப வருங்காலத்தில் நிகழவிருப்பதனை அறிவித்து, நேரே நீ நிற்காமல் செய்கின்றாய். உன்னை நினைக்காமல் செயல்படு வோரின் நிலைமை என்னாவாகுமோ!

ஓரொன்றாத லின்றி-ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ஒவ்வொவ் வொன்றாய் ஆகாமல், கதிரிரவி-கதிர்+இரவி=சூரியன், கதிர்+ஆழி=சங்கு சக்கரம், நேர் தோன்றா-நேரில் காண இயலாது.

அலர் கதிரோன் காட்டிட வெப்பொருளுங் கண்டாங்
கவனொழியப் பொருளை விழியறி
கிலாப் போலி லருகுறு வெங் கதிர்க் காட்டற் கேதுவாகியா
காட்டுமது தானென்று மொன்றாய்
நிலவுறு மப்பொறியது நின்வடிவமென்று நெறியினான்
மறையின் முடி நினைவுற்றாலு
முலகறியக் குழலூதி நிரைகண் மேய்க்கும் முரவோனே
யாருன்னை யுணர்கிற் பாரே! 70

விரிகின்ற கதிரினையுடைய் சூரியன், தன் ஒளியினால் எதையும் காட்டினான் அன்றி, கண்களினால் எவரும் எப்பொருளையும் காண இயலாது. அதுபோல யாவர்க்கும் எல்லாவற்றையும், அவரவர்க்கு ஏற்றதான வழியைக் காட்டுவது. ஒன்றாய் நீயே நிற்கின்றாய். விளங்கும் பொறிகள் எல்லாம் உன் உருவே என்று முறையாக நான்கு வேதங்கள் முடிவாகக் கூறினாலும், இவ்வுலகத்தார் அறியும்படியாக, கையிலே குழல் எடுத்து ஊதி ஆ நிறைகளை மேய்த்த, வீரமிக்கவனே, உன்னை ஒருவராலும் உணர்ந்துகொள்ள இயலாது.

அலர்கதிர்-விரிந்த கதிர், விழியறி-கண்களால் காணும்படி, நான் மறையின் முடி-நான்கு வேதங்களின் முடிவாக, நிரைகண்-ஆநிறைகள்-பசுக்கூட்டங்கள். முரவோன்-வீரமிக்கவன். உணர்கிற்பாரே-உணர்வாரோ வென்றது உணர இயலாது என்றது.

விண்ணினாற் கின்ற முகில் படலமூடத் தன்னுடைய விழிய
தனை மறைப்ப போய்க்
கண்ணினா லூடுருவிக் காண்கிலாதான் கதிரோனை யொளி
யிலானாய்க் கருதினார்போ
லெண்ணிலா தவர்கள எல்லாம் உன்னை மெய்யே யிறந்து
பிறந்து ழலுதி நீயென்று
பண்ணினாயு ண்ணுடைய பான்மையி னைப் பாற்கில்
பற்றுண்டோ வீடுண்டோ பரமமூர்த்தி 71

வானத்தில் உலவுகின்ற மேகங்கள், சூரியனின் ஒளியை மறைக்க, அம்மேகங்களை ஊடுருவித் தன் கண்களினாலே சூரியனைக் காண இயலாதவன், சூரியனுக்கே ஒளியில்லை. அது மறைந்து போயிற்று என்று கூறினாற்போல, இவ்வுலகில் பலரும் உன்னை இறந்தும் பிறந்தும் உழல்கின்ற ஒரு மானிடப்பிறவி என்று எண்ணும்படி செய்திருக்கும் உன்னுடைய அறபுதத்தைப் பார்க்கும்போது, பற்றற்றுப் போகும், வீடுபேறும் கிட்டும், நீயே பரமமூர்த்தியாவாய்.

ஆற்கின்ற-உலாவுகின்ற, முகில்-மேகம், கதிரோன்-சூரியன், ஓகாரம் ஆம் என்றது.

உலவாத பெரு வான மெங்குந் தானே யூடுருவி நின்றாலு
மாங்கதனோ டொன்றும்
கலவாத வகை போலிவ்வுலக மெங்கும் கலந்தள வாக
நின்றாலும் கணித்தற் காகாய்

பலவாய் வுலகங்க ளுன்னோ டொன்றும் பற்றாத வகை
நின்ற பரிசு கண்டாற்
குலவாயர் மகனா கியானெய் யுண்டு கோகுல மேய்த்திடு
வதற்கும் குறைவுண்டோ ! 72

பெரியதாக நிற்கும் வானமெங்கும் ஊடுருவிப் பரவி நின்றபோதுங்கூட, அந்த ஆகாயத்தோடு கூட கலந்து விடாது நிற்கும் தன்மையைப் போல, இவ்வுலகத்து உயிர்களில் எல்லாம் நீயே கலந்து நின்றபோதுங் கூட, அளவிட்டுக் கூற இயலாதவாறு, பலவுமாகி ஒவ்வொரு உலகங்கள் தோறும் பற்று சிறிதும் இல்லாது நிற்கும் உன் பெருமையைக் காணும்போது ஆயர்குலத்தில் பிறந்தவ னாகி, ஆங்கே பசுவின் நெய்யையுண்டு, மாடுகளையும் மேய்த்தவனாகினாய் இதனால் உனக்கு எதுவும் குறை என்பது இல்லை.

உலவாத-நிலையாக நிற்கக்கூடிய, கணித்தற்கு-இன்னது என அளவிட்டுக் கூறுவதற்கு, ஆகாய்-இயலாதவனாய், பற்றாத வகை-ஒன்றெனக் கலக்கும் பற்று என்பது இல்லாத நிலை, ஆநெய்-பசு நெய், கோகுலம்-பசுக்கூட்டம், ஓ காரம்-எதிர்மறையாகி இல்லை என்றது.

விடுத்த தொழிலின வாகி நின்றபேரும் வேறு சில கூடுதலால்
விகாரம் பொன்றிட
படுத்தது காட்டும் பளிங்கு நீரினோடே யலைகின்ற யிரவு
மதியம் போல் வாங்கே
கொடுத்த மன முதலாய் கரணந்தோறும் மாங் கவற்றின்
றொழில் புரிவாயாகித் தோன்றும்
கடுத்த திற லாழி யங்கை யுடையா யுன்னை கண்ணினாற்
காண்கிற்றான் கண்ட பரிசு முண்டோ. 73

செய்யும் கருமங்கள் எல்லாவற்றினையும் விட்டு விட்டவர்களாக இருக்கின்றவர்களுக்கும், வேறு சில

கருமங்கள் செய்ய வேண்டி வந்து அதுவே பெருகிவிடும். இது எவ்வாறு எனில் தெளிந்த நீரினிடையே சூரியனும், சந்திரனும் தெரியும்போது, அவை நிலையாகத் தெரியாமல் அங்கும் இங்கும் ஆடி அசைவது போல தெரிகிறது போலவாகும். இதுபோலவே மன அளவில் கருமங்களை நீக்கியவர்களுக்கும் கூட உடலில் உள்ள கரணங்கள் எல்லாவற்றிற்கும் அவ்வவ்வற்றிற்குரிய தொழில்களைச் செய்தாக வேண்டியதாயிருக்கும் என்பதாம். சங்கு சக்கரங்களை உன் அழகிய கைகளில் ஏந்திய கண்ணா உன்னைக் கண்களினால் கண்டு விட்டால் கிடைத்த பெருமை போல் வேறில்லை.

தொழில்-கருமம், விகாரம்-விரிவடைதல், பெருகுதல், யிரவு மதியம்-நிலவும் சூரியனும், ஆழி-சங்கு கடல், அங்கை-அம்+கை=அழகிய கை, உண்டோ-ஓகாரம் எதிர்மறையாகி இல்லையெனவாயிற்று..

பிணித்த பிறவிப் பெருந்தளையை பெயர்த்தென் பெரும்
பேதமை நோயைத்
தணித்தவர் சேயெனக்கது தான் றகுமோ யாகத் தகாதால்
துணித் திறல் வான் போரினையே துடங்கென்று நீயிங்குப்
பணித்த பணியன் செய்வ னெனப் பார்த்தவாறு
முடன்பட்டான். 74

என்னைப் பிடித்துக் கட்டிய பிறவி எனும் பெருங்கட்டினை நீர் நீக்கிவிட்டீர். என்னுடைய அறியாமை எனும் நோயையும் நீக்கிவிட்டீர். உன் மகனை யொத்த எனக்கு இது தகுமோ, தகாதோ அறியேன். துணிந்து இப்போரினைத் தொடங்கு என நீ எனக்கு இங்கு கட்டளையிட்டபடியே செய்வேன் என்று கூறி அருச்சுனன் அவ்வாறே செய்ய உடன்பட்டான்.

பிணித்த-கட்டிய, தளை-கட்டு, பெயர்த்து-விடுவித்து, பேதமை-அறியாமை, சேய்-மகன், பணித்த-கட்டளையிட்ட.

மாதவனுந் தனஞ் செயனுந் தங்களிலே மகிழ்ந்துரைத்த
வோதரிய பொருளினை நீ யுணர்ந்தவா றெங்ங னெனின்
வேத வியாசனுடைய மெய்யருளை மிகவுடையே
னாதலினா லறிந்தனன் பெற்றி யெலாம் வகை யுண்டோ.75

கண்ணனும் அருச்சுனனும் தங்கள் இருவருக்குள்ளும் தனித்திருந்து மகிழ்வோடு பேசிக்கொண்டதாகிய, சொல்லுவதற்கு அரியதான இவ்வுயர்ந்த பொருளை எல்லாம் நீ எவ்வாறு அறிந்தாய் என்று கேட்கில், வேதவியாசனுடைய பேரரருள் எனக்கு மிகுதியாக உள்ளமையால்தான் வேறே எதுவும் இல்லை.

வோதரிய-சொல்வதற்கு அரிதான, பெற்றி-பெருமை, வகையுண்டோ-வேறுண்டோ-இல்லை எண்க.

திருவற தீதி செயம் புகழொலா
மருவரு மாயை செய் மாதவன் வாய்மை
தருமம் விடாத் தனஞ்செய னென்று
மிருவரும் நின்ற விடந்தான் மென்றான். 76

அழகு, தருமம், தீமையில்லா வெற்றி, புகழ் இவையெல்லாம் குற்றமற்ற மாயா விநோதங்களைச் செய்யும் கண்ணனின், உண்மையான தருமத்தை விடாது கடைப்பிடிக்கும் தனஞ்செயனும் கண்ணனும் ஆகிய இருக்கும் இடத்திலேதான்.

திரு-செல்வம், அழகு, தீதி-குற்றமற்ற, செயம்-வெற்றி, மருவரு-குற்றமற்ற, இது ஒரு கலிவிருத்தம்.

எஞ்சலிலாப் பொருளதனை யிப்படியே புகுந்தெனச்
சஞ்சய னின்றெடுத் துரைத்து நூற்றுவர்க்குத் தாதையாய்
வஞ்சனையே கண்ணாக வாழ்கின்ற மற்றவரக்கு
பஞ்சவரே வலிய வரென்று இவ்வண்ணம் பகரலுற்றான். 77

குறைவற்றதாகிய இப்பொருளினை நடந்தது நடந்தபடியே, அவ்விடத்தே இருந்தவனைப் போல, சஞ்சயன், நூற்றுவர்க்குத் தந்தையான, வஞ்சனையே கண்ணாக வாழ்கின்ற திருதராட்டிரனிடம், கௌரவர் களைக் காட்டிலும் பஞ்சபாண்டவர்களே வலியவராக இருக்கிறார்கள் என்று எடுத்துரைத்தான்.

எஞ்சல்-குறைவு, புகுந்தென-அவ்விடத்திலே புகுந்து நின்றவன் போல., பஞ்சவர் - பஞ்சபாண்டவர்.

என்ற பொறுட்டிற் மிப்படியே யாய்க்
குன்ற மெடுத் தருள் கொண்டல் பணிப்பான்
வென்ற குலத்து வியாதன் விதிப்பா
னின்ற வருக்கிவை நேர்பட வன்றோ. 78

உயர்வானதாகிய இதுவரை இப்படியாக, கோவர்த்தனகிரி எனும் குன்றைத் தூக்கிப் பிடித்து ஆயர்களுக்கு அருள் செய்த மேக வண்ணனாகிய கண்ணன் கூறினான். வெற்றிபெற்ற குலத்திலே தோன்றியவனாகிய வியாசர் எழுதி வைத்தான் இவ்விரண்டு செய்கைகளும் இவர்களுக்கேயன்றி வேறெவர்க்கும் இயலாததாகும்.

என்ற பொருட்டில்-என்று சொல்லியபோது, ஆய்க்குன்றமெடுத்த-ஆயர்களுக்காக மலையை எடுத்த, கொண்டல்-மேகம், பணிப்பான்-எழுதம்படி உத்தரவிட்டான், வென்ற குலம்-உயர்வான குலம் என்க, வியாதன்-வியாசன், விதிப்பான்-விதியை எழுதினான் என்பதை விதித்தான் என்பது எழுதினான் எனப்பொருள் கொள்ளலாயிற்று.

அப்பொருளை நினைதோறு யற்புதமாய கமகிழ்வு
மெப்பொழுதும் வரும் வன்றா னிருக்கின்ற வகை விரித்த
வப்பெரிய திருக்கோலம் உணர் தோறும் உணர்தோறும்
செப்பரிய பெருங் களிப்பென சிந்தையுள்ளே திகழுமாம். 79

கண்ணனும், அருச்சுனனுமாக இருவரும் பேசிக் கொண்ட அப்பொருளைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் ஒரு விவரிக்க இயலாத அற்புதமான மகிழ்ச்சி உண்டாகிறது. தியானம் தானாக வரும். கண்ணன் தான் எவ்வகையானவன் என்பதை எடுத்துக் காட்டிய அந்தப் பெரிய உருவமாகிய விஸ்வரூப தரிசனத்தை எண்ணி எண்ணி உணர்கின்றபோதெல்லாம், சொல்லுவதற்கு இயலாத அளவுக்கு என் மனதிலே பெரிய களிப்பு உண்டாகிறது.

பெரிய திருக்கோலம்-விசுவரூபம், மெய்ப்பொழுது-தியானத்தில் இருக்கும் காலமே உண்மையானபொழுது, செப்பரிய-சொல்லுவதற்கு இயலாத.

வேத நூல்களின் முடிவினை வியாதறிற் பின்னா
வோதமாக் கடலுலகி லுண்டாகிய வுரவோன்
கோதிலா நெறி யுணர்ந்த கோவிந்த மாமுனிதன்
பாத தாமரை பற்றி வீட்டின்ப மடைந்தான். 80

வேத நூல்களின் முடிவாகிய இந்த பகவத் கீதையை, வியாசருக்குப் பிறகு குளிர்ந்த நீரிடையே தோன்றிய இந்த உலகத்தில் திறமை மிகுந்த, குற்றமற்ற நெறிமுறைகளை யுணர்ந்தவராகிய கோவிந்த மாமுனி அவர்தம் பாத தாமரைகளைச் சரணடைந்து வீடுபேறு எனும் இன்பத்தை அடைந்தான்.

வோதம்-குளிர்ந்த, உரவோன்-திறன் மிக்கவன், கோதிலா-குற்றமற்ற.

இப்பாடலில் கோவிந்த மாமுனி என்பது சுவடி ஆசிரியரின் குருவின் பெயராக இருக்கக்கூடும். அன்றி கண்ணனையே கோவிந்த மாமுனியெனவும் குறிப்பிட்டிருக்கக்கூடும்.

ஆற்றியல் வழுவியல் புலன்களைந்தையு
மாற்றிய சங்கர பகவத் பாதத்தனன்
றேற்றிய பெயரினானரு ளினாலியான்
சாற்றிய திப்பெருந் தரும நூலையே ! 81

நூல்களால் சொல்லப்பெற்ற முறைப்படியும், தன்னுடைய .இயல்பினாலும், ஐம்புலன்களையும் அடக்கியவரான சங்கர பகவத் பாதாள் என்ற பெயருடையவன் அருளினாலே இந்த தருமம் பற்றிக் கூறும் பெரிய நூலை இயற்றினேன்.

இங்கும் இந்நூலாசிரியர் தமது பெயரைக் குறிப்பிடவில்லை.

ஆற்றியல்-நூல்களால் சொல்லப்பெறுவது, வழுவியல்-கடைப்பிடித்தல்-செயலால் செய்வது, ஆற்றிய-அடக்கிய.

வியாசரின் பகவத் கீதை

அத்தியாயம்–18

மோக்ஷ சந்நியாச யோகம்

1. அருச்சுனன் சொல்கிறான்-உயர் புயத்தோய் ரிஷிகேசா! கேசியைக் கொன்றவனே! சந்நியாசத்தின் இயல்பையும், தியாகத்தின் இயல்பையும் பிரித்துக் கேட்க விரும்புகிறேன்.

2. ஸ்ரீ பகவான் சொல்கிறான்-விருப்பத்தால் செய்யப்படும் கர்மங்களைத் துறப்பது சந்நியாசமென்று புலவர் தெரிவித்துள்ளனர். எல்லாவிதச் செயல்களின் பலன்களையும் துறந்துவிடுதல் தியாகமென்று ஞானிகள் கூறுவர்.

3. சில அறிஞர்கள், கர்மங்கள் அனைத்தும் குற்றம் போலக் கருதி, விட்டுவிடவேண்டும் என்கிறார்கள். வேள்வி, தானம், தவம் என்ற செயல்களை விடக்கூடாது என்று வேறு சிலர் கூறுகிறார்கள்.

4. பாரதரில் சிறந்தவனே! ஆண் புலியே! தியாக விஷயத்தில் நான் நிச்சயத்தைச் சொல்கிறேன் கேள். தியாகம் மூன்று வகையாகக் கூறப்பட்டது.

5. வேள்வி, தானம், தவம் என்ற செயல்களை விடக் கூடாது, செய்யவே வேண்டும். வேள்வியும், தானமும், தவமும் அறிவுடைய உத்தமமான நிச்சயக்கொள்கை.

6. ஆனால் பார்த்தா! இச்செயல்களைக் கூட ஒட்டின்றியும், பயன்களை வேண்டாமலும், செய்ய வேண்டும் என்பது என்னுடைய உத்தமமான நிச்சயக்கொள்கை.

7. ஆனால் நியமத்தின்படியுள்ள செய்கையை, துறத்தல் தகாது. மதிமயக்கத்தால் அவற்றை விட்டுவிடுதல் தமோ குணத்தால் நேர்வது என்பர்.

8. எது செய்யவேண்டிய கருமமோ துன்பமாகக் கருதி உடம்புக்கு வருத்தம் நேருமென்ற பயத்தால் அவன் விட்டுவிடுவானேயாகில் அவன் ராஜஸ தியாகம் செய்து தியாகப் பயனை அடையமாட்டான்.

9. அர்ச்சுனா! நியமத்துக்கிணங்கிய செய்கையைக் காரியம் இது செய்வதற்கரியது என்னும் எண்ணத்தால், ஒட்டுதலையும் பயன் வேண்டுதலையும் விடுத்து செய்தால் அதுவே சாத்வீக தியாகம் எனப்படும்.

10. சத்வ குணத்திசைந்து மேதாவியாய் ஐயங்களை அறுத்த தியாகி, இன்பமற்ற செய்கையை வெறுப்பதில்லை. இன்பமுடைய செய்கையில் பற்றுக்கொள்வதுமில்லை.

11. மேலும் உடம்பெடுத்தவனால், முழுதுமே செய்கைகளை விட்டுவிட முடியாது. எவன் செய்கைகளின் பயனைத் துறக்கிறானோ அவனே தியாகி எனப்படுகிறான்.

12. வேண்டப்படாதது, வேண்டப்படுவது இரண்டும் கலப்பானது என மூன்று வகைப்பட்ட கர்மப் பயன்கள் தியாகிகள் அல்லாதோர்க்கு, இறந்த பின்னர் ஏற்படுகிறது. சந்நியாசிகளுக்கு எங்கும் பயன் கிடைப்பதில்லை.

13. பெருந்தோளாய்! கர்மங்களின் முடிவிற்கான வழியைக் கூறும் சாங்கிய சாஸ்த்திரத்தில் எல்லாச் செயல்களும் நிறைவேறுவதற்கு ஐந்தாகக் காரணங்கள் கூறப்பட்டன அவற்றை என்னிடம் கேட்டுணர்.

14. அவை இடமும், செயலைச் செய்பவன் பலவிதக் காரணங்கள், வெவ்வேறு வகைப்பட்ட செயல்முறைகள் இயற்கை என ஐந்து காரணங்கள்.

15. உடம்பாலும், வாக்காலும், மனத்தாலும், எந்தச் செயலைத் தொடங்கினாலும், அது நியாயமாயினும் விபரீதமாயினும், அதற்கு இந்த ஐந்துமே காரணங்கள்.

16. இங்ஙனமிருக்கையில், எவன் புத்திக் குறைவால் ஆத்மாவை-கர்மங்களைச் செய்வதில், தனிப்பொருளாகிய ஆத்மாவை கர்த்தாவாக-தொழில் செய்பவனாகக் காணுகிறானோ அந்த மூடன் காட்சியற்றவனேயாவான்.

17. எவருடைய உள்ளத்தில் நான் சொல்கிறேன் என்னும் எண்ணம் இல்லையோ, பற்றுதல்கள் அற்று மதியுடையவன் அவன் இந்த உலகங்கள் அனைத்தையும் கொன்ற போதிலும் கொலையாளியாகான். பாவத்தில் கட்டுப்படமாட்டான்.

18. அறிவு, அறியப்படுபொருள், அறிவோன் இம்மூன்றும் செயல்களைத் தூண்டுவன. கர்த்தா, கருவி, செய்கை என்று மூன்று விதங்களும் கர்மத்தின் அமைப்பு ஆகும்.

19. குணங்களை எண்ணுமிடத்தே, ஞானம், கர்மம், கர்த்தா இவை குண பேதங்களால் மூன்று வகைப்படும் என்று சொல்லப்படுகின்றன. அவற்றை உள்ளபடியே கேள்!

20. எந்த ஞானத்தினால் தனித்தனியான உயிர்கள் அனைத்திலும், பிரிவற்ற, நாசமற்ற ஒரே இயல்பைக் காணுகிறானோ அந்த ஞானத்தைச் சாத்வீகமென்றறி!

21. ஆனால் அந்த குணத்தின் மூலமாக, உயிர்கள் அனைத்திலும், வெவ்வேறு வகைப்பட்ட பல இயல்புகள் பிரித்துக்காணும் அந்த ஞானம் ராஜஸம் என்றுணர்.

22. ஆனால் எந்த ஞானம் யாதேனும் ஒன்றைக் காரியத்தை, அனைத்துமாகக் கருதிப் பற்றுதல் எய்துவதும், யுக்திக்குப் பொருந்தாததும், உண்மையில் அறியாததும், அற்பத் தன்மை உடையதும் தாமஸமென்று கூறப்பெறும்.

23. எந்தச் செயகை விதிப்படிப் பற்றுதல் இன்றி, பயனைக் கருதாமல், விருப்பு வெறுப்பு இன்றி செய்யப்படுகிறதோ அது சாத்வீகமெனப்படும்.

24. ஆனால் எந்தச் செயல் விருப்பங்களுக்கு வசப்பட்டவனால், அல்லது அகங்காரமுடையவனால் செய்யப்டும் மிகுந்த ஆயாசத்துக்கிடமான செய்கை, அது ராஜஸ எனப்படும்.

25. எந்தச் செய்கையின் பின் விளைவுகளையும் அதனால் பிறருக்கு ஏற்படக்கூடிய நாசத்தையும் துன்பத்தையும், செய்வானது திறமையையும் கருதாமல், அறிவின்மையால் தொடங்கப்படுகின்றதோ, அது தாமஸமெனப்படும்.

26. பற்றற்றவனாகவும், நான் என்னும் எண்ணம் இல்லாதவனாகவும், உறுதியாகவும், ஊக்கமும் உடையவனாகவும், வெற்றி தோல்வியில் வேறுபாடற்றவனாகவும் உள்ள கர்த்தாவை - செயல் ஆற்றுபவனை- சாத்வீகன்-ஒளியியல்பு-உடையவன் என்பர்.

27. வேட்கையுடையோன், செய்கைப் பயனை விரும்புவோன் லோபி எனும் பேராசையுடையவன், இடர் செய்வோன், தூய்மையற்றவன். இன்ப துன்பத்தால் பாதிக்கப்படுபவன், இவ்வண்ணமாகித் தொழில் செய்பவன் ரஜோ குணத்தவன் என்பர்.

28. கட்டுப்படுத்தப்படாத மனநிலை உடையவன். அறிவு முதிர்ச்சி அடையாதவன் கர்வமுடையவன், வஞ்சகம் உடையவன், பிறருடைய வாழ்க்கையைக் கெடுப்பவன், கவலை கொண்டவன், சோம்பேறியும் காலத்தை நீட்டிக்கொண்டே போவோன். இவ்வண்ண மாகித் தொழில் செய்வோன் தமோ குணமுடையவன் எனப்படுவான்.

29;. தனஞ்சயா! குணவகையால், புத்திக்கும், மன உறுதிக்கும், மூன்றுவிதமான வேறுபாட்டை முழுமை யாகவும், பகுத்தும் உரைக்கிறேன் கேள்.

30. அர்ஜுனா! எது பிரவிர்த்தி மார்க்கம், எது நிர்விர்த்தி மார்க்கம், செய்யத்தக்கது யாது, செய்யத் தகாதது யாது, அஞ்ஞானம் எது, பந்தம் எது, விடுதலை எது என்பனவற்றைப் பகுத்தறியும் அந்தப் புத்தியே சாத்வீக புத்தியாகும்.

31. பார்த்தா! எந்தப் புத்தியினால், தர்மத்தையும், அதர்மத்தையும், செய்யத்தக்கது, தகாதது என்பதை உள்ளபடி அறியாத புத்தி ராஜஸமெனப்படும்.

32. பார்த்தா! எந்தப் புத்தி இருளால் கவரப் பட்டதாய் அதர்மத்தைத் தர்மமாகக் கருதுவதும், எல்லாப் பொருள்களையும் நேருக்கு மாறாக நினைக்கிறதோ அது தாமஸ புத்தியாகும்.

33. பார்த்தா! எந்தப் பிறழ்ச்சி இல்லாத உறுதியால் யோகத்தின் மூலம், மனம், உயிர், புலன்கள் இவற்றின் செயல்களை நிலை நிறுத்துகிறானோ அந்த உறுதியே சாத்வீகமாவது.

34. ஆனால் பார்த்தா! அர்ஜுனா! பயன்களை விரும்புவோன், எந்த உறுதியினால், மிகுந்த பற்றோடு, அறம் பொருளின்பங்களை அடைவதிலே உறுதியாக இருக்கிறானோ அந்த உறுதி ராஜஸம் ஆகும்.

35. மன உறுதியினால், உறக்கத்தையும், அச்சத்தையும் துயரத்தையும், ஏக்கத்தையும், செருக்கையும விட முடியவில்லையோ, பார்த்தா, அந்த உறுதி தமோ குணத்தைச் சார்ந்தது.

36. பாரதக் காளையே! இப்போது மூன்றுவிதமாகிய இன்பங்களை என்னிடமிருந்து கேள்! எதனிலே ஒருவன், பயிலப் பயில உவகை மிகுதியுறப்பெறுவானோ எதனில் துக்க நாசமெய்துவானோ.

37. எது தொடக்கத்தில் விஷத்தை ஒத்ததாய், அது விளைவில் அமிர்தத்தை ஒத்ததாக மாறுகிறதோ அந்த இன்பமே சாத்வீகம் எனப்படுகிறது. அது தான் பரமாத்வைப் பற்றிய தெளிந்த அறிவில் பிறப்பது.

38. எது விஷயங்களில் புலன்களைப் பொறுத்து வதனால், தொடக்கத்தில் அமுதைப் போலிருந்து, விளைவில், நஞ்சு போன்றதாய் முடியுமோ அந்த இன்பம் ராஜஸம் எனப்படும்.

39. எந்தச் சுகம் தொடக்கத்திலும் இறுதியிலும், ஆத்மாவுக்கு மயக்கம் விளைவிப்பதாய், உறக்கத்தி லிருந்தும் சோம்பலிலிருந்தும், தவறுதலினின்றும், பிறக்கிறதோ அது தாமசம் என்று கருதப்படுகிறது.

40. இயற்கையில் தோன்றும் இம்மூன்று குணங்களி லிருந்தும், விடுபட்டதாக எந்த உயிர் இருக்குமோ அது மண்ணுலகத்திலோ, வானுலகத்தில் தேவருள்ளேயோ வேறு இடங்களிலோ இல்லை.

41. எதிரிகளை வாட்டுவோனே! பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் இவர்களுடைய தொழில்கள், அவரவர்களின் இயல்பில் விளையும் குணங்களின்படி, வகுப்புற்றனவாம்.

42. மன அடக்கமும், புலனடக்கமும், தவமும், தூய்மை, பொறுமை, நேர்மை, ஆத்திகம், ஞானம், அனுபவம் மூலம் உணர்தலும், இயல்பிலே தோன்றும் பிராமண கர்மங்களாகும்.

43. சூரத்தன்மை, ஒளி, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, ஈகை, இறைமை, ஆளும் தன்மை இயற்கையிலே தோன்றும் க்ஷத்திரிய கர்மங்களாகும்.

44. உழவு, பசுக்காத்தல், வணிகம் இவை இயற்கையிலே பிறக்கும் வைசியக் கர்மங்களாகும். அனைவருக்கும் தொண்டுபுரிதல், சூத்திரனுக்கு அவனியற்கையாக ஏற்பட்ட தொழில்.

45. தனக்குத்தானே, உரிய கர்மத்தில் மகிழ்ச்சியுறும் மனிதன், ஈடேற்றம் பெறுகின்றான். தனக்குரிய தொழிலில் இன்புறுவோன், எங்ஙனம் சித்தி அடைகிறான் என்பதைக் கேள் !

46. எதிலிருந்து உயிர்கள் உண்டாயினவோ, எதனால் அனைத்தும் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பரமாத்வை, தனக்குரிய கர்மத்தால் பூஜை செய்யும் மனிதன் ஈடேறுகிறான்.

47. பிறர்க்குரிய தர்மத்தை நன்கு செய்வதைக் காட்டிலும், தனக்குரிய கர்மத்தால் பூஜை செய்யும் மனிதன் ஈடேறுகிறான்.

48. குந்தி மகனே! இயல்பான தொழில் குறைவுடையதாயினும், கைவிடலாகாது. ஏனெனில், புகையால் சூழப்பட்ட தீயைப்போல, எல்லாத் தொழில்களிலும் குறைகள் சூழ்ந்தே நிற்கின்றன.

49. குந்தி மகனே! பற்றற்ற மதியுடன் விருப்பம் தவிர்த்தவனாக, தன்னை வென்றவன் எங்கும் செயல் இல்லாத, பெரிதும் உயர்ந்த வெற்றியைக் கர்மத்தளை யிலிருந்து விடுபடும் வெற்றி-அடைகிறான்.

50. ஞானத்தினுடைய உயர்ந்த நிலை எதுவோ, அந்த நிலையை அடைந்த மனிதன் எங்ஙனம் பிர்மத்தை அடைகிறானோ, அந்த நிலையை சுருக்கமாக என்னிட மிருந்து தெரிந்துகொள் குந்தி மைந்தனே!

51. தூய்மை பெற்ற புத்தியுடையோனாய், உறுதியால் தன்னைக் கட்டுப்படுத்தி, ஒலி முதலிய புலன் நுகர் பொருட்களைத் துறந்து, விருப்பு வெறுப்புகளை எறிந்துவிட்டு.

52. தனி இடங்களை நாடுவோனாய், எளிய உணவு உண்பவனாக, வாக்கு மனம் இவைகளை வசப்படுத்தி, தியான யோகத்தில் ஈடுபட்டிருந்து பற்றின்மையை நன்கு பற்றியவனாய்..

53. அகங்காரம், வலிமை, செருக்கு, காமம், சினம், இரத்தல், விடுத்து, மமகாரம் நீங்கி சாந்த நிலை கொண்டவன், பிர்மமாகத் தகுவான்.

54. பிர்ம நிலை பெற்றோன் ஆனந்தமுடையோன். துயரற்றோன், விருப்பற்றோன், எல்லா உயிர்களையும் சமமாக நினைப்போன், உயர்ந்ததாகிய என் பக்தியை அடைகிறான்.

55. என்னை யார் எனவும், எத்தன்மை உடையவன் எனவும், பக்தியாலே உள்ளபடி அறிகிறான். என்னை உள்ளபடி அறிகிறான். என்னை உள்ளபடி அறிந்து கொண்டபின்னர், 'தத்' (அது) என்னும் பிர்மத்தில் புகுவான்.

56. என்னையே சார்பாகக் கொண்டோன், எல்லாத் தொழில்களையும், எப்போதும் செய்து கொண்டிருந் தாலும், எனதருளால், அழிவற்ற நித்தியப்பதவியை எய்துகிறான்.

57. செயல்களை எல்லாம் அறிவினால், எனக்கெனத் துறந்துவிட்டு, புத்தி யோகத்தில் சார்புற்று என்னிடத்தே ஈடுபட்டு எப்போதும் என்னைச் சித்தத்தில் கொண்டு இரு.

58. என்னைச் சித்தத்தில் கொண்டிருப்போனாய் எல்லாத்தடைகளையும் எனதருளால் கடந்து செல்வாய். அன்றி நீ அகங்காரத்தால், இதனைக் கேளாது விடுவாயாயின் அழிந்து போவாய்.

59. எந்த அகங்காரத்தின் வசப்பட்டு, நான் யுத்தம் செய்யமாட்டேன் என்று நினைக்கிறாயோ இந்தத் தீர்மானம் பொய்யானது. ஏனெனில் இயற்கை உன்னைப் போரில் வலுவில் ஈடுபடுத்தும்.

60. குந்தியின் மகனே! எந்தச் செயலை மயக்கத்தால் அதனைச் செய்ய விரும்பாயெனினும், அதையும் நீ உன்னுடைய இயல்பான கர்மவினையால் கட்டப்பட்டு தன் வசமின்றியேனும் அதைச் செய்யலாவாய்.

61. அர்ஜுனா! உடல் என்கிற எந்திரத்தில் ஏற்றி அனைத்து உயிர்களையும் ஈசுவரன், மாயையினால் சுழற்றிக்கொண்டு, எல்லா உயிர்களின் உள்ளத்திலும் நிற்கிறான்.

62. பாரதா! எல்லா வடிவங்களிலும், அவனையே சரண் எய்து, அவனருளால், பரம சாந்தியாகிய நித்திய ஸ்தானத்தை அடைவாய்.

63. இங்ஙனம் இரகசியத்திலும் இரகசியமான ஞானம், என்னால் உனக்குக் கூறப்பட்டது. இதனை முற்றிலும் ஆராய்ச்சி செய்து, எப்படி இஷ்டமோ அப்படிச்செய்.

64. எல்லாவற்றிலும் ஆழ்ந்த இரகசியமாகிய என்னுடைய பரம வசனத்தை, மீண்டும் ஒருமுறை கேள். நீ திடமான நண்பன். ஆதலால் உனக்கு இது நல்லது என்று சொல்கிறேன்.

65. மனதை எனக்காக்குக, என் தொண்டர்களுக் காக்குக. எனக்கென வேள்வியைச் செய்க. என்னையே வணங்குக. என்னையே எய்துவாய். உண்மை இதுவே உனக்கிது சபதமுரைக்கின்றேன். எனக்கு இனிமையானவ னாக இருக்கிறாய்.

66. எல்லா அறங்களையும் விட்டுவிட்டு, என்னையே சரண் புகு. எல்லாப் பாவங்களிலிருந்தும் நான் உன்னை விடுவிக்கிறேன். துயரப்படாதே!

67. உனக்குச் சொல்லப்பட்ட இதை எப்போதும் தவமில்லாதோனுக்கும், பக்தியில்லாதோனுக்கும், கேட்க விரும்பாதவனுக்கும், என்பால் பொறாமையுடை யோனுக்கும், சொல்லாதே!

68. எவன் என்னிடம் உயர்ந்த பக்தி செலுத்தி இந்தப் பரம இரகசியத்தை-கீதையை-என் பக்தர்களிடையே சொல்லுவானோ, அவன் என்னையே எய்துவான். ஐயமில்லை.

69. அவனைக் காட்டிலும் எனக்கு இனிமை செய்வோன் மானிடருள்ளே வேரெவருமில்லை, உலகத்தில் அவனைக் காட்டிலும் எனக்கு உகந்தவன் வேறு எவருமில்லை.

70. நம் இருவருக்குள் நடந்த இந்த தர்ம சம்பாஷனையை எவன் கற்றறிகிறானோ, அவனாலும் நான் ஞான யக்ஞத்தால் திருப்தி பெற்றவனாவேன். இது என் கொள்கை.

71. எந்த மனிதன் நம்பிக்கையுடையவனாக, பொறாமை போக்கியவனாக, கேட்பது மட்டுமே செய்வானெனினும் அவனும் பாவங்களிலிருந்து விடுபட்டு, புண்ணியம் செய்தவர்கள் அடையும் உலகங்களை எய்துவான்.

72. பார்த்தா! உன்னால் ஒருமுகப்படுத்தப்பட்ட மனத்தோடு கேட்கப்பட்டதா? தனஞ்செயா! உன் அஞ்ஞான மயக்கம் அழிந்து விட்டதா?

73. அர்ஜுனன் என்ன சொல்கிறான். அச்சுதா உன்னருளாலே, மயக்கம் அழிந்தது, நான் நினைவு அடைந்தேன். ஐயம் விலகி நிற்கிறேன். நீ செய்யச் சொல்வதைச் செய்வேன்.

74. சஞ்சயன் சொல்கிறான்-இப்படி நான் வாசுதேவனுக்கும் மகாத்மாவாகிய பார்த்தனுக்கும்-இடையே நடந்த-இந்த அற்புதமான மயிர்க்கூச்செறியும் உரையாடலைக் கேட்டேன்.

75. யோகக் கடவுளாகிய கண்ணனிடமிருந்து, பரம ரகசியமான இந்த யோகத்தைத்தான் நேராகவே சொல்லும்போது, நான் வியாசனருலால் கேட்டேன்.

76. அரசனே! கேசவ அர்ஜுனரின் வியப்புக்குரிய இந்த புண்ய சம்பாஷனையை, நினைத்து நினைத்து, மீண்டும் மீண்டும் மகிழ்கிறேன்.

77. அரசனே! ஹரியின் மிக அற்புதமான, அந்த ரூபத்தை நினைத்து நினைத்து, எனக்கு பெரிய ஆச்சரியமுண்டாகிறது. மீண்டும் மீண்டும் களிப்படைகிறேன்.

78. எங்கு யோகக் கடவுள் கண்ணனும், எங்கு வில்லினை ஏந்திய விஜயன் தன்னோடும் இருக்கின்றார் களோ அங்கே திருவும், ஆக்கமும், வெற்றியும், ஐஸ்வர்யமும் நிலை தவறாத நீதியும் இருக்கும். என்னுடைய உறுதியான கருத்து இது.

விளக்கவுரை

பகவத் கீதையின் நிறைவு அத்தியாயத்திற்கு வியாசர், மோக்ஷ சந்நியாச யோகம் என்ற தலைப்பிட்டு எழுபத்தி எட்டு சுலோகங்களை இயற்றியுள்ளார். சுவடி ஆசிரியர் இந்நிறைவு அத்தியாயத்திற்குச் சன்னியாதி யோக வத்தியாயம என்று தலைப்பிட்டு எண்பத்து ஒரு விருத்தங்களை எழுதியுள்ளார்.

விருத்தம் 1. யோகம் என்பது பிர்மத்தை நாடுகிறவ னுடைய இதயத்திலே தான் தோன்றும் என்கிறார். இவ்வாறு வியாசரில் இல்லை.

விருத்தம் 2. சந்நியாசம் என்றால் எண்ன, தியாகம் என்றால் என்னவென்று அருச்சனன் கண்ணனிடம் கேட்கிறான். அதற்குக் கண்ணன் பதில் கூறத்தொடங்கி னான் என உள்ளது. இவ்வாறு அருச்சுனன் சந்நியாசம் என்றால் என்னவெனக் கேட்டும் செய்தி வியாசரின் இவ்வத்தியாயத்தின் முதல் சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 3. ஆசையை வெறுத்து நீக்குவதே சந்நியாசமாகும், செயல்களால் வருவது பாவமே எனக் கருதி அவைகளை நீக்குவதே தியாகம் எனவும் கூறுகிறார். விருப்பத்தால் செய்யப்படும் கருமங்களைத் துறப்பது சந்நியாசமெனவும், செயல்களின் பலன்களைத் துறத்தல் தியாகம் எனவும் வியாசர் தமது இரண்டாவது சுலோகத்தில் கூறியுள்ளார்.

விருத்தம் 4. தீய செயல்கள் தீய பலனையும், நல்ல செயல்கள் நற்பலனையும் தருவன. ஆயினும் இவை இரண்டையுமே விட்டுவிட வேண்டும் என்று சாங்கியங்கள் கூறுவதாக சுவடி ஆசிரியர் இவ்விருத்தத்தில்

கூறுகிறார். வியாசர் தமது மூன்றாவது சுலோகத்தில் கர்மங்கள் அனைத்துமே குற்றமுடையது தான் எனவே அவைகளை எல்லாம் விட்டுவிட வேண்டும் என சில அறிஞர்கள் கூறுகின்றார்கள் என்கிறார். வேள்வி, தானம், தவம் ஆகியவற்றை விடக்கூடாது என்றும் சிலர் சொல்கிறார்கள்.

விருத்தம் 5. யாகம், தானம், தவம் ஆகியவை ஞானத்திற்கு காரணம் என்பதை அறிந்து அடங்கியவர்கள் வேண்டுமானால் இவைகளை விட்டுவிடலாம். ஆனால் மற்றவர்களுக்கு இது தகாது என்கிறார். இவ்வாறு வியாசர் பிரித்துக் கூறவில்லை.

விருத்தம் 6. யாகம், தவம், தானம் இவை மூன்றும் மனதின் விட்டுவிட வேண்டும் என்று சொல்வது சரியல்ல என்கிறார். இச்செய்தி வியாசரின் ஐந்தாவது சுலோகத்தில் உள்ளது. மேலே கூறப்பெற்ற மூன்று செயல்களையும் பயனில் பற்று இன்றி செய்தல் வேண்டும் என்கிறார் வியாசர்.

விருத்தம் 7. நல்வினை, தீவினை ஆகிய எதனைச் செய்வதாக இருந்தாலும் தான் என்கிற அகங்காரத்தை விட்டு விட்டுச் செய்ய வேண்டும் என்கிறார். இச்செய்தி வியாசரால் நேரிடையாகக் கூறப்பெறாத ஒன்று.

விருத்தம் 8. இருவினைகளின் நெறிமுறைகள் ஒருவனை பித்தம் கொள்ளச் செய்துவிடும் ஆயினும் அவைகளை விட்டுவிடக் கூடாது என்கிறார். இப்படி வியாசர் சொல்லவில்லை.

விருத்தம் 9. யாகம், தவம், தானம் ஆகியவைகளைச் செய்ய உடலை வருத்த வேண்டியிருக்கிறதே எனக் கருதி

அவைகளை விட்டுவிடுதல் ராசதகுணம் கொண்ட தியாகம், அவ்வாறின்றி அதே செயல்களை ஆசையை நீக்கிச் செய்வது சத்துவ குணத்தியாகம் என்கிறார். இச்செய்தி வியாசரின் ஏழாவது சுலோகத்தில் உள்ளது. இதே செய்தி மேலும் விளக்கமாக எட்டாவது சுலோகத்திலும் கூறப்பெறுகிறது.

விருத்தம் 10. ஞானியும், தியாகியும், இன்பத்தையும் துன்பத்தையும் தரக்கூடிய இருவினைகளிலும் பற்றில்லாமல் இருக்க இயலும் எனக் கூறப்பெறுகிறது. இதனை வியாசர் தியாகி தான் செய்யும் இன்பம் உள்ள, இன்பம் அற்ற ஆகிய இரு செய்கைகளையும் பற்றுக் கொள்வதில்லை என்று கூறியுள்ளார்.

விருத்தம் 11. உடலோடு கூடிய இருவினைகளை நீக்கிவிடுதல் இயலாது. வீடு பேற்றினைப் பெறுவதன் மூலமாகத்தான் எல்லா வினைகளையும் போக்கமுடியும் என்கிறார். இதனை வியாசர் தமது பதினோறாவது சுலோகத்தில் தியாகி என்பவன் யார் எனக் கூறுகையில் குறிப்பிட்டுள்ளார்.

விருத்தம் 12. உறவுகளைப் பொய்யென்று உணருபவருக்கே வீடுபேறு கிட்டும் என்கிறார். இவ்வாறு ஏதும் வியாசரால் கூறப்பெறவில்லை.

விருத்தம் 13. உடம்பை இருப்பிடமாகக் கொண்டு இயங்குவதே உயிர்-இத்துடன் இருவினை-மற்றும் உறவு அகியவற்றின் அம்சங்களாகிய யாகம், தவம், தானம் ஆகிய மூன்றும் சேர்ந்து ஐந்து ஆகியது. இவைகளில் செய்யக்கூடிய செயல்களுக்கெல்லாம் காரணம் ஆசையே ஆகவே இதனைத் தெளிவாக, யாகம், தவம், தானம், உயிர் ஆசை=5 என விளக்கம் தரப்பெறுகிறது. இவ்வைந்தை

வியாசர் இடம், செய்பவன்-காரணங்கள்-செயல் முறைகள்-இயற்கை என ஐந்து என தமது பதினான்காவது சுலோகத்தில் கூறுகிறார். இவைகளைப் பற்றி விரிவான விளக்கம் கொடுக்கப்பெற்றால் இருவர் கூறுவதும் ஒன்றே என விளங்கிக்கொள்ள இயலும்.

விருத்தம் 14. இருவினைகளைச் செய்வதற்கு ஐந்து காரணங்கள் உண்டு-அவைகளைச் சொல்கிறேன் எனக் கண்ணன் கூறுவது. இச்செய்தி வியாசரின் பதின் மூன்றாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 15. உடலையும் மனத்தையும் கட்டுப் படுத்துவது வாய்ச்சொல் முதலில் சொல்லப்பட்ட ஐந்தும் உடலினால் செயல் செய்வதற்கு வேண்டும் எனப் பெறுகிறது. இதே செய்தி வியாசரின் பதினைந்தாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 16. தான் என்ற அகங்காரம் அற்றவனும், அந்தக் கரணங்களில் ஆசையற்றவனுமாகிய ஒருவனுக்கு அவன் செய்யும் கொலைகளினால் பாவமோ பழியோ வருவதில்லை என்பது. இச்செய்தி வியாசரின் பதினேழாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 17. அறிகின்ற அறிவு, அறியப்படும் பொருள் மற்றும் செய்யக்கூடிய கருமங்கள் இம்மூன்றுமே வினைகளின் முடிவு-என்பது-இச்செய்தியைத் தவிர கர்த்தா, கருவி, செய்கை இவை மூன்றும் கர்மத்தின் அமைப்பு என்று வியாசர் கூறுகிறார்.

விருத்தம் 18. இருவினைகளும் பொருந்தியவன் நானே. கருமங்களைச் செய்கின்றவனும் நானே, இதனை அறியாது, தான் செய்வதாக அகங்காரம் கொண்டவன்

அழிகிறான் எனப்பெறுகிறது. இது கண்ணன் கூறுவது. இவ்வாறு வியாசரால் கூறப்பெறவில்லை.

விருத்தம் 19. குணத்தின் தொடர்பு காரணமாக மீண்டும் அவை மூன்று வகையாகின்றன என்பது. இதுவே வியாசரின் பத்தொன்பதாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 20. சாத்துவித, சாத்வீக ஞானம் என்றால் என்ன என்பது பற்றிக் கூறப்பெறுகிறது. இந்த சாத்வீக ஞானத்தின் விளக்கம் வியாசரின் இருபதாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 21. இதில் சாத்வீக கருமம் என்பது என்னவெனக் கூறப்பெறுகிறது. இது வியாசரின் இருபத்து மூன்றாம் சுலோகம், கருமம் என்ற சொல்லைக் குறிப்பிடாமல் சொல்கிறது.

விருத்தம் 22. தாமத குணத்தவரின் செயல்களைப் பற்றியது. இது வியாசரின் இருபத்திரெண்டாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 23. தலைவன் என்பவன் யார்? அவனே சாத்வீகன் எனத் தமது இருபத்து ஆறாவது சுலோகத்தில் கூறியுள்ளார். ஆனால் அவனே தலைவன் எனச் சுவடி ஆசிரியர் கூறியது போலக் கூறவில்லை.

விருத்தம் 24. வீணாகிப் போவது உடம்பு. ஆனால் அதன் உள்ளே இருப்பதோ உயர்வானது. இதனை உணராதவன் தாமச குணத்தவன் என்கிறார். தமது இருபத்தி எட்டாவது சுலோகத்தில் வியாசர் இந்த தாமச குணத்தவனைப் பற்றி சுவடி ஆசிரியர் கூறியிருப்பதை விட மேலும் சிலவற்றைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

விருத்தம் 25. இராசத குணத்தவரின் செயல்களைப் பற்றிக் குறிப்பிடப்பெறுகிறது. இதைப் பற்றிய செய்தி வியாசரின் இருபத்தி ஏழாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 26. தாமச குணத்தவரின் செயல்களைப் பற்றிக் கூறப்பெறுகிறது. மேலும் சில செய்திகளோடு வியாசரின் இருபத்தி எட்டாவது சுலோகத்தில் இவை உள்ளன.

விருத்தம் 27. சாத்வீக புத்தி என்பது என்னவெனக் கூறுவது. வியாசரின் முப்பதாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 28. இராசத புத்தியில் தன்மை கூறப்பெறுகிறது. இது வியாசரின் முப்பத்து ஒன்றாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 29. தாமஸ புத்தியினரின் செயல்களைப் பற்றியது. இதனை வியாசரின் முப்பத்தி இரண்டாவது சுலோகத்தில் மேலும் தெளிவாகக் காணலாம்.

விருத்தம் 30. சாத்வீக புத்தியைப் பற்றி மீண்டும் கூறப்பெற்றுள்ளது. இதைப்பற்றி வியாசர் தமது முப்பத்து மூன்றாவது சுலோகத்தில் கூறியுள்ளார்.

விருத்தம் 31. இராசத புத்தி மற்றும் தாமஸ புத்தி பற்றி. இது வியாசரின் முப்பத்தெட்டாவது சுலோகத் திலும் முப்பத்தொண்பதாவதிலும் உள்ளது.

விருத்தம் 32. சாத்வீக இன்பம் என்பது என்ன வென்பது. இவ்விருத்தத்தில் உள்ளது உள்ளபடி வியாசரின் முப்பத்து ஏழாவது சுலோகத்தில் இருப்பதைக் காணலாம்.

விருத்தம் 33. மீண்டு இராசத குணத்தைப் பற்றிக் கூறப்பெறுகிறது. இரு வியாசரின் முப்பத்து எட்டாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 34. தாமஸ இன்பம் என்பது பற்றியது. இது முப்பத்தொன்பதாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 35. இயற்கையாக வருகிற குணங்கள் மூன்று. அந்தணர்கள், வணிகர்கள், அரசர்கள், சூத்திரர்கள் ஆகியோரின் இயற்கைத் தன்மைகளை கூறுவதாகக் கண்ணன் கூறுவது. இதனை வியாசர் தமது நாற்பத்து ஓராவது சுலோகத்தில் கூறியுள்ளார்.

விருத்தம் 36. அந்தணர்களின் தொழில் இன்ன தெனக் கூறுவது. இந்த பிராம்மண குணம் பற்றி வியாசர் தமது நாற்பத்து இரண்டாவது சுலோகத்தில் கூறியுள்ளார்.

விருத்தம் 37. அரசர்களின் கடமை பற்றி கூறுவது. இவர்களைச் சத்திரியர் என்றும் அவர்தம் கடமை பற்றியும் வியாசரின் நாற்பத்து மூன்றாவது சுலோகத்தில் காணலாம்.

விருத்தம் 38. வேளாளர் தம் தொழில் பற்றிக் கூறுவது. சுலோகம் நாற்பத்து நான்கில் இது உள்ளது.

விருத்தம் 39. அவரவர்க்குறிய தொழிலை அவரவர் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் மோட்சத்தை அடையலாம் என்கிறது. இயற்கையில் ஏற்பட்ட தொழிலைச் செய்வதால் பாவமடையமாட்டார்கள் என்கிறார் தமது நாற்பத்து ஏழாவது சுலோகத்தில் வியாசர்.

விருத்தம் 40. செய்யும் செயல்களில் குற்றம இருத்தல் இயற்கை. ஆதலால் தரும காரியங்களையே செய்தல் வேண்டும் என்கிறது இந்த விருத்தம். இதில் கூறப்பெற்றுள்ள அதே எடுத்துக் காட்டுடன் தமது நாற்பத்து எட்டாவது சுலோகத்தில் வியாசர் மேற்கண்ட கருத்தைக் கூறியிருப்பதைக் காணலாம்.

விருத்தம் 41. தன் குலத்திற்குரிய தொழில் அல்லாத பிற குலத்தவரின் தொழிலைத் தமக்கு நன்றாகச் செய்யச் தெரியும் என்ற போதும் கூட அறிவுடையோர் அதனைச் செய்யமாட்டார்கள். தமது தொழில், பிறர் தொழிலை விடக் கீழானதாயினும் அதையே விரும்பிச் செய்வர் எனப்பெறுகிறது. எனவே செய்யும் தொழிலில் எது மேலானது எது கீழானது என்பது பற்றி எதுவும் கூறப்படுவதாகக் கொள்ளக்கூடாது. என்றும் இச்செய்தி. இவ்விருத்தத்தில் கூறப்பெறுகிறது. இதே செய்தி வியாசரின் நாற்பத்து ஏழாவது சுலோகத்தில் கூறப் பெற்றுள்ளது.

விருத்தம் 42. அந்தக் கரணங்கள் எவ்வாறு தூய்மை யடையும் என்பதைப் பற்றியது. இப்படி வியாசர் கூறவில்லை.

விருத்தம் 43. முன் விருத்தத்தில் தொடர்ச்சியாக, ஐம்பொறிகள் துன்பப் படுத்தாத நிலை ஏற்படுவது பற்றிக் கூறப்பெறுகிறது. இவ்வாறு தனித்து வியாசர் கூறவில்லை.

விருத்தம் 44. வாய்ச்சொல்லைக் கட்டுப்படுத்தி, மனத்தையும் கட்டுப்படுத்தி உடல் இச்சையையும் அடக்கும் திறன் ஐம்பொறிகளினால் துன்பம் எய்தாதவனுக்கு ஆகும் செயல் என்கிறார். இச்செய்தி வியாசரில் ஐம்பத்தி இரண்டு ஐம்பத்தி மூன்று ஆகிய சுலோகங்களில் உள்ளது.

விருத்தம் 45. மனம் சாந்தி பெற்ற பின்னர் குறைவற்ற பரப்பிர்ம சொரூபமாகிறான் என்பது. இது ஐம்பத்து மூன்றாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 46. பரப்பிர்ம நிலையை அடைந்தவன் என்னிடத்தில் பக்தி கொள்வான். பின்னர் என் உணர்வோடு இருப்பான் என்றது. அடுத்த ஐம்பத்து நான்காவது சுலோகத்தில் இச்செய்தி உள்ளது.

விருத்தம் 47. என்னைத் துணையெனப் பற்றிக் கொண்டு செயல்களைச் செய்வதால் வினையின் பயன்களைக் கடந்து ஈடேறுவதற்கான தகுதியைப் பெறுகிறாய் என்பது. இச்செய்தி ஐம்பத்து ஆறாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 48. ஒரு நிலைப்பட்ட மனத்தினால் வெற்றி உண்டாகும். வேறு சில சொல்கிறேன் எனக்கண்ணன் கூறுவது. இது இல்லை.

விருத்தம் 49. நீ விரும்பவில்லை என்றாலும் கூட மற்ற அரசர்கள் உன்னைப் போர் செய்யும்படி செய்து விடுவார்கள் என்றது. இதனை வியாசர் மற்ற அரசர்கள் உன்னைப் போர் செய்யும்படிச் செய்வர் என்பதற்குப் பதிலாக கர்ம வினைகளின் பயனாக தன்வசமின்றி போர் செய்வாய் எனக் கண்ணன் கூறுவதாக உள்ளது. சுலோகம்-60.

விருத்தம் 50. ஈசனின் செயல் இன்னதெனக் கூறுவது. இதனைச் சுலோகம் அறுபத்தொன்றில் காணலாம்.

விருத்தம் 51. தீமையைத் தராத ஒன்று உளதோ என அருச்சுனன் கேட்க, க்ண்ணன் இதற்குத் தன்னால்

மட்டுமே பதில் கூற முடியும் எனக் கூறுவது. இவ்வாறு ஒரு செய்தி வியாசரில் இல்லை.

விருத்தம் 52. முதல் விருத்தத்தில் கேட்கப்பெற்ற கேள்விக்கு விடையளிக்கப் பெறவில்லை. அதற்குப் பதிலாக கண்ணன் தன்னைப்பற்றிக் கூறி. தன்னைப் பற்றிய நினைவாகவே இரு எனக்கூறுகிறான். இந்தச் செய்தி வியாசரால், ஈசன் எல்லா உயிர்களிடத்திலும் இருக்கிறான் அவனைச் சரணடைந்தால் நித்திய ஸ்தானத்தை அடையலாம் எனக் கண்ணன் கூறுவதாக அறுபத்து இரண்டாவது சுலோகத்தில் வியாசர் கூறியுள்ளார். இரண்டும் வேறு வேறு முறையில் கூறப்பெற்றுள்ளன.

விருத்தம் 53. என்னைப் பற்றெனக் கொண்டால் நான் கரையேற்றுவேன் எனக் கண்ணன் கூறுகிறான். எல்லா அறங்களையும விட்டுவிட்டு என்னையே சரண்புகு நான் உன்னை விடுவிக்கிறேன் எனக் கண்ணன் கூறுவது வியாசரின் அறுபத்து ஆறாவது சுலோகத்தில் .

விருத்தம் 54. சொல்லப்பெற்ற இரகசியத்தைத் தகாதவர்களிடம் சொல்லக்கூடாது எனக் கண்ணன் கூறுவது. இவ்வாறு வியாசரின் அறுபத்து ஏழாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 55. சொல்லப்பெற்ற செய்தியைச் சொல்பவர்களும் கேட்பவர்களும் மேன்மையானவர்கள் எனப்பெறுகிறது இது சுலோகம் அறுபத்தி எட்டில் உள்ளது.

விருத்தம் 56. நம் இருவருக்கும் நடந்த இந்த இரகசியமாகிய நூலைக் கற்றவனும் சொன்னவனும்

மேன்மையடைவான் என்றது. இச்செய்தி எழுபதாவது சுலோகத்தில் வியாசரால் கூறப்பெற்றுள்ளது.

விருத்தம் 57. சொன்னதை எல்லாம் கேட்டுக் கொண்டாயல்லவா எனக் கண்ணன் சிரித்துக் கொண்டே கேட்டான் என்றது இது எழுபத்தி இரண்டாவது சுலோகத்தில் உள்ளது.

விருத்தம் 58. கண்ணனின் அறவுரைகளைக் கேட்ட அருச்சுனன் இனி எனக்குக் குறையொன்றும் இல்லை என்றான். வியாசரின் எழுபத்து மூன்றாவது சுலோகத்தில் இதற்கும் மேலாக இனி நீ சொல்வதைச் செய்வேன் என அருக்சுனன் கூறுகிறான்.

விருத்தம் 59. கண்ணா! இவ்வுலகத்து உயிர்களை எல்லாம் படைத்து, பின் அவைகளை அழிக்கும் செயலின் உண்மையாது என அருச்சுனன் கேட்பது. இச்செய்தி வியாசரில் இல்லை.

விருத்தம் 60. முன் விருத்தத்தில் அருச்சுனனால் கேட்கப்பெற்ற கேள்விக்கு பதில் இல்லை. ஆனால் அருச்சுனன் கண்ணா ! இனி உன் கட்டளைப்படி நடப்பதல்லாமல் வேறில்லை என்கிறான். இது முன்னர் சுலோகம் 73இல் உள்ளது தான்.

விருத்தம் 61. என் சந்தேகம் தீர்ந்தது-என்னுடைய அகங்காரம் அழிந்தது-இனி சொல்வதைச் செய்கிறேன் என மீண்டும் அருச்சுனன் கூறுவது. முன் சொன்னதோடு சரி வியாசர் மீண்டும் சொல்லவில்லை.

விருத்தம் 62. முன் கேட்கப்பட்ட கேள்வி-படைத்தலும், காத்தலும், அழித்தலும் உன்னுடைய

இயல்பாக இருப்பது எவ்வாறு என அறிகிலேன் என அருச்சுனன் கூறுவது. எழுபத்து மூன்றாம் சுலோகத்திற்குப் பின்னர் சஞ்சயன் கூற்றாக ஐந்து சுலோகங்கள் கூறப் பெறுவதால் மேலே கூறிய செய்தி வியாசரில் இல்லை.

விருத்தம் 63. அருச்சுனன் கண்ணனின் பெருமையைக் கூறி உனக்கு அடிமையாகி உன்னிடத்தே அன்பு செலுத்துபவர்களுக்கு எல்லாம் கைகூடும் என்றது. இது வியாசரில் இல்லாதது.

விருத்தம் 64. மீண்டும் கண்ணனின் பெருமை களைக் கூறி அருச்சுனன், கரணங்கள் தோறும் தனித் தனியாக இருந்த போதும் அக்கரணங்களே உன்னை அறியமுடியாதபடி நீ எப்படி இருக்கிறாய் எனக் கண்ணனிடம் அருச்சுனன் கேட்பது. இதுவும் வியாசரில் இல்லாதது.

விருத்தம் 65. நீயல்லாமல் வேறில்லை பரம யோகியே என அருச்சுனன் கூறுவது. இதுவும் வியாசரில் இல்லாதது.

விருத்தம் 66. கண்ணனின் இயற்கை இன்னதென அருச்சுனனே கூறுவது. இதுவும் வியாசரில் இல்லாதது.

விருத்தம் 67. வேதங்களால் கூட உன்னுடைய பெருமையைக் கூற இயலாது. நீயே சோதி வடிவானவன் என அருச்சுனன் கூறுவது. சுவடி ஆசிரியரின் இச்செய்தி வியாசரில் இல்லை.

விருத்தம் 68. மேலும் அருச்சுனன் கண்ணனின் பெருமைகளைக் கூறுவது. வியாசரில் இல்லை.

விருத்தம் 69. இதுவும் கண்ணனின் பெருமையைக் கூறுவது.

விருத்தம் 70. உன்னை ஒருவராலும் உணர்ந்து கொள்ள இயலாது என அருச்சுனன் கூறுவது.

விருத்தம் 71. நீயே பரம மூர்த்தி எனல்.

விருத்தம் 72. நீ பற்றில்லாதவன்

விருத்தம் 73. உன்னைக் கண்ணால் காண்பதே பெருமை.

விருத்தம் 74. கண்ணனின் கட்டளைக்கு அருச்சுனன் உடன்பட்டான்.

விருத்தம் 75. சுவடி ஆசிரியர் கூற்று.

விருத்தம் 76. உண்மையான தருமம் கண்ணனும் அருச்சுனனும் இருக்கும் இடத்தில்தான் இருக்கும் எனச் சுவடி ஆசிரியர் கூற்று.

விருத்தம் 77. சஞ்சயன்-திருதராட்டிரனிடம் கூறுவதாக-சுவடி ஆசிரியர் கூறுவது.

விருத்தம் 78. இதுவும் சுவடி ஆசிரியர் கூறுவது.

விருத்தம் 79. கண்ணனின் விசுவரூப தரிசனம் பற்றி வியத்தல்-சுவடி ஆசிரியர் கூற்று.

விருத்தம் 80. கோவிந்த மாமுனி வீடு பேறு அடைந்தான் எனும் செய்தி.

விருத்தம் 81. சங்கர பகவத் பாதாள் என்பரின் அருளினாலே தருமத்தைப் பற்றிக் கூறும் இந்நூலை இயற்றினேன் எனச் சுவடி ஆசிரியர் கூறி நிறைவு

செய்கிறார். எனினும் தன்னுடைய பெயரைக் குறிப்பிடவில்லை.

நிறைவு அத்தியாயமாகிய இப்பதினெட்டாவது அத்தியாயத்தில் கண்ணனின் பெருமைகளைக் கூறும் பகுதி சிறப்பாகவுள்ளது. மேலும் வியாசரின் பகவத் கீதையில் கூறப்பெற்றுள்ள அனைத்து செய்திகளும் முறையாகச் சுவடி ஆசிரியரால் நல்ல விளக்கங்களுடன் கூறப்பெற்றுள்ளன. வியாசரால் கூறப்பெற்றுள்ள எடுத்துக் காட்டுகளையே சுவடி ஆசிரியரும் கையாண்டுள்ளதையும் காணலாம். வியாசரின் பகவத் கீதையில் கண்ணன் தன்னைப் பற்றித் தானே கூறுவதாக வரக் கூடிய செய்திகளைச் சுவடி ஆசிரியர் அருச்சுனனின் வாய்மொழியாகக் கூறியிருப்பது சிறப்பு.

ஆகக் கூடுதல் விருத்தங்கள் 587.

கீதை விருத்தம் என்னும் இந்நூலிற் காணப்பெறும் உவமைகள்

2. காந்தத்தின் இரும்பு போல.

50. உயிருடன் இருப்பவர்கள் மண்ணைப் போன்றவர்கள்.

54. கடலில் எழக்கூடிய அலைகளைப் போன்றது பிறவி.

57. பீறிய போர்வையைப் பெயர்த்து.....மாறி யோரும் பினை மருவு.

82. ஆமை ஐந்தும் தன்னுள்ளே அடக்குமாப் போலே தீமை செய்யும் புலன்களை.....தன்னுள்ளே செலுத்தி

83. அறை கடலளைய நெஞ்சத்து அவா.

84. எரிநிகர் வெகுளி

87. கடலொடுங்க கலத்தினை யுடன் செலக் காற்றே வேறு செய்து அறைந்து மாய்த்து மாப் போல புலன்களைக் கலக்கும்.

89. நீறினா னிறைந்த கடல் – ஆசை செறிந்தவர்.

159. தாமரையிலையில் தண்ணீர் ஒட்டாததுபோல, செய்யும் செயல்களை இறைவனுக்கே அர்ப்பணித்துச் செய்பவர்களுக்கு வினைப்பயன் சேராது.

161. ஒன்பது வாயில்களையுடைய ஊரான உடல்

163. வானில் சூரியனைப் போலத் திகழ்வது ஞானம்.

164. வேதத்தை உணர்ந்து போற்றாதவர்கள், இறைச்சியை உண்டுத் திரியும் நாயைப் போன்றவர்கள்.

170. எல்லாம் தானேயாகி நின்றவன்.

182. அலைகள் வீசும் கடலைப் போன்றது காமம்.

185. காற்றில்லாத இடத்தில் அசையாது எரியும் விளக்கைப் போல யோகியானவன் நிலையாக இருப்பான்.

198. அரைகுறையாக யோகத்தைப் பயின்றவன். உடைந்து கரைந்து அழியும் மேகத்தைப் போல அவனுடைய வாழ்வு அழியும்.

212. உயர்தரமான ரத்தின மணிகள் ஒரு நூலில் கோர்க்கப் படுவது போல-பஞ்ச பூதங்கள் தாங்கப்படுகின்றன.

256. எல்லாவிடத்திலும் நிறைந்திருக்கும் காற்றைப்போல உயிர்கள் எல்லாம் இறைவனையே சார்ந்திருக்கும்.

258. வண்டு தன்னைச் சுற்றி நூலை உண்டாக்கி, அதனுள் தானே சிக்கி வெளியே வர முடியாமல் இறந்து விடுவது போல, பயன்களை நினைத்துச் செயல்படுவோர் அந்தச் செயல்களையே கட்டப்பெற்று உழல்வார்கள்.

322. பெரிய நதிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு குடத்திற்குள்ளே சென்றடைவதைப்போல, பெருமைக்குரிய அனைத்தும் கண்ணனின் பேருருவுக்குள் புகுந்தன.

393. எங்கும் பரவும்படி ஒளியைத் தரும் சூரியனைப் போல ஆன்மாவானது இந்த உலகங்களில் உள்ள உடம்புகளில் எல்லாம் பரவியுள்ளது.

418. நிழலைப் போலத் தொடர்ந்து வருவது இருவினைகள்.

419. வேதம் எனும் அழகான இலை-பிறவி எனும் மரம்.

427. பிறவி எனும் மரம் - துறவு எனும் மந்திரவாள்.

430. காற்றானது - பூக்களை அங்கேயே விட்டுவிட்டு அவற்றின் வாசனையை மட்டும் எடுத்துச் செல்வதுபோல் உயிர் உடலை விட்டுவிட்டு தான் மட்டும் போகிறது. ஐம்புலன்களையும் கொண்டு போகிறது.

454. நினைவு எனும் சுழல். உடல் எனும் சிறுவீடு - புல்லின் நுனியில் இருக்கும் பனித்துளியைப் போன்றது உயிர். கரை ஏற முடியாத நரகம் எனும் கடல்.

457. பாம்பினைப் போன்ற கீழானவர்கள்

460. கோபம் என்பது பெரியதாகச் சுடக்கூடிய தீ.

527. உள்ளே இருப்பது நெருப்பு ஆனால் வெளியே தெரிவது புகை அதுபோல வெளியில் தரும காரியமாகத் தெரிந்தாலும் குற்றம் மறைவாக இருக்கும்.

வியாசரின் பகவத்கீதையிலும் மிகக் குறைவான அளவில்தான் உவமைகள் கூறப்பெற்றுள்ளதைக் காணலாம். சுவடி ஆசிரியரும் குறைவான அளவில் தான் உவமைகளைக் கூறியுள்ளார்.

சுவடி ஆசிரியர் கண்ணனைப் பற்றிக் கூறும் செய்திகள்.

க. வா - துாய மாதவன்

1. செங்கட் கண்ணன்

2. அராவணைமேல் நெழிய வேறி வைகுண்டத் தினி தமரு மாயோன்.

2. பாண்டவர்கள் சாரதி.

2. நாம் பரவும் தெய்வம்

3. மின்ன விற் படர்க்கை மாயன்

8. மறையவன்

14. தீர்த்தன்

15. வைய மனத்தினையும் வாரி முன் வைக்கும் செய்ய திருப் பவளத்திடை வைத்தவன்.

18. மாயன்

19. கண்ணன்

20. மேகவண்ணன்

21. கண்ணன்

33. கார்வண்ணன்

34. கரிய செவ்வாயன்

37. சாதலானதும் பிறப்பு மில்லாத் தனிமுதல்

39. தாமரைக் கண் மஞ்சு

40. மாயன்

42. பொன்னை யணியும் திருமார்பன்

91. இவ்வுலகத்தை எல்லாம் பெற்ற அன்னையை தன் திருமார்பில் அணைத்தான்.

93. வேதங்களின் முதன்மைப் பொருளாக விளங்குபவன், வளர் எரியில் நின்றவன்.

98. மூவுலகையும் முன்னர் படைத்த பரமாத்மா.

111. மாயவன்.

118. மீனாய் உருவெடுத்து உலகைக் காத்த தேரோட்டும் பெருமான்.

119. தூய்மையான சங்கினைக் கையில் ஏந்தியவன்.

124. துளசி மாலையை அணிந்தவன்

131. இயற்கையாய் அமைந்தவைகளுக்குப் பற்றுக் கோடாய் இருப்பவன்.

151. உரியிலே வைத்த வெண்ணெயை உண்டவன் உலகத்தையே உண்ட பெரிய வாயினன்.

152. ஈரேழு உலகத்தையும் காத்தருளி, விளையாடி இறுதியில் அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்கியவன்.

171. முழுமுதற் பொருளாகி இருந்து நாகப்பாம்பின் மீது நடனமாடிய மேகவண்ணன்.

193. துளசி மாலையை அணிந்த நெடிய முடியினை யுடைய கண்ணன்.

194. மல்லாண்ட திண்தோள் மணிவண்ணன்.

195. மாயவன்.

207. அருவும் உருவும் என உலகத்தோரால் அறியப் பெற்றவனாகிய கண்ணன்.

208. உலகத்தை உண்டவன். வேத குணங்களை உட் கொண்டவன். இடையர்குலப் பெண்களால் கற்பனை செய்து பார்க்க இயலாதவன். குளிர்ந்த பவள வாயினன். இலக்குமியின் கணவன்.

232. மாயக்கூத்தெனும் விளையாட்டை ஆடுகின்ற மாயவனாகிய வாசுதேவன்.

233. இந்த உலகத்தையே தன்னுள் அடக்கியவன். ஆனால் தான் கட்டுப்படாதவன். இடையர்தம் தாம்புக் கயிற்றினால் கட்டப்பெற்றவன்.

235. உடலில் கோடுகளையுடைய பாம்பின் மேல் படுத்துறங்கும் மாயவன்.

251. கரிய மேகம் திரண்டு வந்தன போன்றவன். தேரை ஓட்டும் பாகன்.

267. மின்னலை ஒத்த வேல்.

273. மின்னலைப் போன்று தோன்றி மறையும் வாழ்வு.

273. வாளினை ஒத்த கண்களையுடைய இலக்குமி தேவியின் கணவன்.

பேயாகிய பூதகியின் முலைப்பாலை யுண்டவன்.

274. வேதங்களுக்குத் தலைமை யானவன். கரிய மேகத்தைப் போன்றவன். செவ்வாயன்.

280. ஞானம் எனும் விளக்கு - மயக்கம் எனும் இருள்.

284. வருங்காலம், நிகழ்காலம், இறந்த காலம் என எக்காலத்திலும் குறைவும் நிறைவும் இல்லாத பெரிய மாயவன்.

299. அலைகடலில் துயில்வதை விட்டுவிட்டு, ஆயர் குலத்திடையே வளர்ந்தவன், கம்சனுடைய உயிரை மாய்த்தவன்.

300. துளசியைச் சூடிய சுருள் சுருளான தலைமுடியை உடையவன். சொல்லிற்கும் மனதிற்கும் எட்டாதவன் சகட மெனும் உருளையை உருட்டிக்கொண்டு அது இற்று விழும்படி உதைத்து சகடா சூரர்களை அழித்தவன். உயிர்களுக்கெல்லாம் உள்ளே இருக்கும் உயிர்.

301. பழைய வேதங்களால் உணரப்படாதவன்.

303. அருச்சுனனுக்கு ஞானக் கண் அருளியவன்.

305. விசுவரூபம் - சஞ்சயன் வாயிலாகக் கூறப் பெறுவது. அருச்சுனன் வாயிலாகவும கூறப்பெறுகிறது.

324. எல்லா மாகி எல்லை இன்றி நின்றவன்.

326. கரிய மலையைத் தூக்கிய வள்ளல்

327-333-336. அருச்சுனனால் கூறப்பெறுபவை-வேறு.

348. எல்லா உருவமும் ஒன்றாய் நின்றவன். வானம் நிறையும் அளவுக்கு சோதியாய் நின்றவன். முதற் பொருளானவன். முழுவதுமாய் ஆனவன்.

350. அருச்சுனனின் உடல் நடுக்கத்தையும், பயத்தையும் நீக்கியவன்.

351. மாடுகளை மேய்த்தவன்.

352. ஆயர் குலத்தவனாகி மாடுகளை மேய்த்த கண்ணன்.

364. விஷமுடைய பாம்பின் தலையை அரங்கமாகக் கொண்டு ஆடியவன்.

393. வேதங்களுக்கெல்லாம் தலைவனான சிறப்புடையவன்.

395. சிவந்த, பெரிய தாமரை மலரின்மேல் வாழும் இலக்குமி தேவியும், பூமாதேவி எனும் இளமாதும் கூடி மகிழ்ந்திருக்கும் தோளினையுடைய கண்ணன்.

412. திருப்பாற்கடலில் துயில்பவன்.

413. உடல்களை உயிருடன் உண்டாக்கியும், பின்னர் அதனை அழித்தும் அதனையே தன்னுடைய விளையாட்டாகக் கொண்ட பரமன்.

414. யுகமானது அழிகின்றபோது ஏற்படக் கூடிய பெருவெள்ளத்தில் மூழ்காது ஆலிலை மேல் பள்ளி கொண்டவன்.

418. பெண்ணெனப் பெறாத பேயாகிய பூதகியைக் கொல்வதற்காக, கோகுலத்தில் பிள்ளையாக வளர்ந்த கண்ணன்.

442. பசி தீருவதற்காக வெண்ணெய் யுண்டவன்- விதுரன் வீட்டில் விருந்துண்டவன்- மண்ணையுண்டவன்.

443. சிவந்த வாயினன்.

462. பூதங்களின் குணங்களைப் பொறுத்துக் கொண்டு அவைகளுக்கு அருள் செய்கின்றவன்.

463. இப்பூவுலகத்தை உண்டு, மீண்டும் அளித்து, அதனைக் காப்பாற்றுபவன்-மேகவண்ணன்.

464. குளிர்ந்த நீரினையுடைய கடலின் நிறத்தை ஒத்தவன்.

468. பற்று-வீடுபேறு-நண்பர்-பகைவர் என எவரும் இல்லாதவன்.

487. தீமை ஏதும் இல்லாத இந்த உலகத்தில் வந்து தோன்ற வேண்டும் என்பதற்காக தேவகி வயிற்றில் வந்து பிறந்தவனாகிய கண்ணன்.

489. நெருப்பு. காற்று, வானம், மண், நீர் ஆகிய யாவும் தானே யாகியவன்.

544. தலைவனாகிய கண்ணன்.

545. மதுசூதனன்

565. கோவர்த்தனகிரி எனும் குன்றைத் தூக்கிப்பிடித்து ஆயர்களுக்கு அருள்செய்தவன். மேகவண்ணன்.

(கண்ணனைப் பற்றி அருச்சுனன் வாயிலாகக் கூறப்பெறுவன இதில் சேர்க்கப்பெறவில்லை.)

தேசப்பிதா அண்ணல் மகாத்மா காந்தியும் பகவத்கீதையும்

மகாத்மா காந்தி அவர்கள் பகவத் கீதையைத் தமது தாய்மொழியாகிய குஜராத்தியில் அனாசக்தியோகம் என்ற தலைப்பிட்டு மொழி பெயர்த்துள்ளார். இதனை, திரு. க. சந்தானம் அவர்கள் 1958ல் மொழி பெயர்த்துள்ளார்.

காந்தியடிகள் முதன்முதலில் ஆங்கிலத்தில் எட்வின் ஆர்னால்ட் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட பகவத்கீதையைப் படித்துள்ளார். பகவத்கீதையை மொழி பெயர்க்கும் பணியில் தம்முடன் சிறையில் இருந்த ஸ்ரீவினோபாபாவே, காகா கலேல்கர், மகாதேவ் தேசாய், கிசோரலால் மஷ்ருவாலா ஆகியோரின் உதவியைப் பெற்றுள்ளார். கீதையின் சுலோகங்களுக்கான மொழி பெயர்ப்பினைத் தனியே கொடுத்துவிட்டு, தமது சொந்தக் கருத்துக்களை இடை இடையே குறிப்பு எனக் குறிப்பிட்டுள்ளார். அந்தக் குறிப்புகளை மட்டும் நாம் பார்த்தோமானால் பகவத்கீதையின் கருத்துக்களை நாம் தற்காலத்தில் எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது தெளிவாகத் தெரியும்.

முன்னுரையில் சம்பூரண ஞானியான கிருஷ்ணன் கற்பனா புருஷனே ! அவன் அவதார புருஷன் என்ற கொள்கை பிற்காலத்தில் ஏற்பட்டது. அவதார புருஷனாகக் கொண்டு அவனைப் பூஜை செய்வதால் இதில் குற்றம் ஏதும் இல்லை. மகாபாரதத்தில் வரக்கூடிய நாயக நாயகியரின் வரலாற்றை வியாசர் எழுதவில்லை. தர்மத்தை உபதேசிக்கவே அவர்களைப் பயன்படுத்தி

யுள்ளார். மேன்மையை விரும்புவோர், தமது ஆத்ம நிலையை எய்துவதற்கு சாதகமான ஒரு ஒப்பற்ற வழியை உபதேசிப்பதே கீதையின் முக்கிய நோக்கம். கீதையில் மோக்ஷம் என்ற பதத்தின் பொருள் ஆத்மாவின் பரம சாந்த நிலையே ! ஆசையில்லாதவனுக்குப் பொய்யுரைப் பதற்கும், ஹிம்சை செய்வதற்கும் விருப்பம் உண்டாகாது. தன் கர்மத்தை - செயலை-விட்டுவிடுவதை துறவு என்று கீதை ஒப்புக்கொள்ளவில்லை. சத்தியத்தையும், அஹிம்சையையும் பூர்ணமாக அனுசரிக்காத வரையில் கர்ம பலத் தியாகம் செய்வது மனிதனுக்கு அசாத்தியம் என்று வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கீதை பாமர ஜனங்களுக்காக இயற்றப்பட்டது. கீதையின் அர்த்தம் காலத்திற்குத் தகுந்தவாறு மாறிக்கொண்டே இருக்கும். கீதையினிடத்தில் நம்பிக்கை இல்லாதவனுக்கு அது உதவாது. என மேலும் பல சுவையான அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

இனி கீதையின் மொழிபெயர்ப்பிற்கு இடையே காந்தியடிகள் கொடுத்துள்ள குறிப்புகளை மட்டும் காண்போம்.

1. நமது சரீரமாகிய சேத்திரம் தர்ம க்ஷேத்திரம் . ஏனெனில், அதன் வாயிலாகவே, மோக்ஷத்தை அடைய வேண்டும். பாவம் இந்த சரீரமாகிய க்ஷேத்திரத்தின் உற்பத்திக்குக் காரணம். அது பாவத்தையே அனுபவிக்கிறது. ஆகையால் அது குரு க்ஷேத்திரமாகும். கௌரவர் என்றால் அசுர குணங்கள். பாண்டு புத்திரர்கள் தெய்வீக குணங்கள், ஒவ்வொரு சரீரத்திலும், தூயனவும், தீயானவுமாகிய இருவகைக் குணங்களுக்கும் போர் நடந்து கொண்டேயிருக்கின்றது. இதனை யார் தான் அனுபவிக்கவில்லை.

2. மோக வசப்பட்ட மனிதன் அதர்மத்தைத் தர்மமெனறு எண்ணுகிறான். மோகத்தால் அர்ச்சுனன் தனக்கும் மற்றவர்களுக்கும் பேதம் காட்டினான். இந்தப் பேதத்தைப் பொய் என்று சொல்லி, தேகத்திற்கும் ஆத்மாவிற்கும் உள்ள வித்தியாசத்தை ஸ்ரீகிருஷ்ணன் விளக்குகிறார். தேகம் அநித்யம், அது ஒவ்வொருவருக்கும் பிரத்யோகமானது. ஆத்மாவோ நித்யம். அது ஒன்றே என்று அவர் கூறுகிறார். மனிதன் தனது புருஷார்த் தத்திற்குப் பிரயத்தனப் படுவதறகே அதிகாரி. தன் முயற்சியின் பலாபலன்களுக்கு அல்ல. இதனால் தனது கடமையை நிச்சயித்து கவலையற்றது அதில் முழு மனத்துடன் ஈடுபட வேண்டும். இவ்விதம் சஞ்சலமின்றி ஒரு வழி நின்று கடன் ஆற்றுவதால் மனிதன் மோக்ஷம் அடைவான்.

3. இதுகாறும் ஸ்ரீகிருஷ்ணன், மதியின் உதவியால் நித்யத்தையும், தேகத்தின் அநித்யத்தையும் விளக்கிக் காட்டி, எப்பொழுதேனும், உடலை அழிப்பது உசிதமானால், அச்சமயம், அதனைச் சேர்ந்தவர்க ளென்றும், பிறர்கள் என்றும் பிரிவு செயது, கௌரவர்கள் சகோதரர்கள், அவர்களை எவ்விதம் கொல்வது என்று யோசிப்பது, மோகத்தினாலுண்டாவது என்று கூறினார். இனி க்ஷத்திரிய தர்மம் என்னவென்று அர்ச்சுனனுக்குக் கூறுகிறார்.

4. இவ்விதம் ஆத்மாவின் நித்யத்தையும், தேகத்தின் அநித்யத்தையும் காட்டினார். மேலும் தனது முயற்சி இன்றி கிட்டிய போரைப் புரிவது, க்ஷத்திரிய தர்ம விரோத மாகாது என்று உரைத்தார். பகவான் பரமார்த்தத்துடன் உபயோகத்தையும் பிணைத்திருக்கிறார்.

5. எப்பொழுது புத்தி ஓர் முகமின்றிப் பலவாறாக ஆகின்றதோ, அப்பொழுது அது புத்தியல்ல. வாசனையாக மாறி விடுகின்றது. ஆகையால் புத்திகள் என்றால் வாசனைகள் என்று பொருள்.

6. கர்ம காண்டம் அல்லது வேதத்தின் வாதம் என்பது, பலன்களைத் தரக்கூடிய கணக்கற்ற வைதீகக் கிரியைகள். இக்கிரியைகள் வேதத்தின் இரகசியமான வேதாந்தத்திலிருந்து வேறுபட்டு, அல்ப பலன்களைக் கொடுப்பதால் பிரயோசனமற்றவை.

7. ஆத்மாவைக் கொண்டு அகமகிழ்ச்சி அடைவது என்றால் ஆத்மாவின ஆனந்தத்தைத் தனது உள்ளத் திலேயே தேடுவது என்று பொருள். சுகதுக்கத்தைக் கொடுக்கத் தகுந்த வெளிப்பொருள்களை, இவ்வானந்தத் திற்கு ஆதாரமாகக் கொள்ளலாகாது. ஆனந்தம் சுகத்தினின்றும் மாறுபட்ட விஷயம். இதை மறந்துவிடக் கூடாது. பணம் கிடைத்துவிட்டது. அதனால் சுகம் அடைந்தேன் என்று கருதுதல் மோகத்தாலுண்டாகிறது. பிச்சை எடுப்பேன். உணவின்றி வருந்துவேன். ஆயினும் திருட்டுப் போன்ற இழிதொழிலில் புரியேன் என்பதில் கிடைக்கும் உணர்ச்சி ஆனந்தம். அதுவே ஆத்மாவின் அகமகிழ்ச்சி.

8. புலன்களின் உணர்ச்சிகளைச் சாந்தப்படுத்து வதற்கு உபவாசம் முதலியவை இன்றியமையாதவை: ஆனால் அவைகளுக்கு வேரான ரஸம், அல்லது ருசி ஈஸ்வரனைக் கண்ட பிறகே சாந்தமடையும், ஈஸ்வரனைக் காண்பதில் ருசி பெற்றவன் மற்ற ருசிகளை மறந்து விடுகிறான்.

9. பக்தியின்றி, கடவுளின் கருணையின்றி மனிதனுடைய முயற்சி வீண்.

10. காமத்தையுடையவனால் கோபத்தை விலக்க முடியாது. மூடத்தனத்தால் மதிக்குழப்பம் உண்டாகிறது. மனக்கலக்கம் உள்ளவனின் காமம் எப்பொழுதும் திருப்தி அடைவதில்லை.

11. போகத்தில் ஈடுபட்ட மனிதர்கள் இரவு பன்னிரண்டு அல்லது ஒருமணி வரை நர்த்தனம், நாடகம், அன்னபானம் முதலியவைகளில் காலங்கழித்து, காலை ஏழெட்டு மணிவரை உறங்குகிறார்கள். இந்திரியங்களை ஜெயித்தோன் இரவு ஏழெட்டு மணிக்குப் படுத்து, நடுநிசியில் எழுந்து கடவுளைத் தியானம் செய்கிறான். தவிர போகத்தில் பிரியமுடையவன் தனது உலக விவகாரங்களைப் பெருக்கிக் கடவுளை மறக்கிறான். ஞானியோ உலக வாழ்க்கையில் கவலையற்று, ஈசுவரனைக் காண்கிறான். இவ்விருவருடைய நெறிகள் வெவ்வேறென்று இங்கு பகவான் காட்டுகின்றார்.

12. மெய்யான ஞானம் கர்மத்தில் பரிணமிக்க வேண்டும். அர்ச்சுனனுக்கு மனக்குழப்பம் ஏற்பட்டது. ஒரு பக்கம் மனத்தளர்ச்சி அடைந்ததற்காக பகவான் அவனை நிந்தித்தார். மற்றொரு பக்கத்திலோ கர்மத் தியாகங்களை உபதேசித்ததாகக் காணப்படுகிறது. ஆழ்ந்து ஆலோசனை செய்தால் இக்குழப்பத்திற்குக் காரணம் இல்லை என்று கூறுகிறார்.

13. நிஷ்ட கர்மம் என்பது மனம், வாக்கு, காயம் இவைகளால் எவ்வித வேலையும் செய்யாதிருத்தல். இவ்வித நிஷ்கர்மத்தின் அனுபவம் கர்மத்தைத்

துறப்பதால் பெறமுடியாது. அப்படியானால் இதன் அனுபவம் எப்படிக் கிட்டும் என்று மேலே பார்ப்போம்.

14. வாக்கை மட்டும் அடக்கிக்கொண்டு, மனத்தால் பிறரைத் தூஷிப்பது நிஷ்கர்மம் அல்ல. மித்யாசரமே. இதனால் மனத்தை அடக்கமுடியாதவன் சரீரத்தை அடக்குவது உபயோகமில்லை என்று கொள்ளக்கூடாது. சரீரத்தை அடக்காமல் மனத்தைச் சிறிதும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் சரீரத்தை அடக்குவதோடு மனத்தையும் கூடவே அடக்கியாள முயலவேண்டும். பயம் முதுலிய வெளிக் காரணங்களால் சரீரத்தை அடக்கி மனத்தை அடக்காமலும், அதுமட்டுமின்றி, மனத்தால் விஷயங்களை அனுபவித்துக்கொண்டும் சந்தர்ப்பம் கிடைத்தபொழுது சரீரத்திலும் போகங்களை அனுபவிக்கும் பொய்யர்களே இவ்விடம் நிந்திக்கப் படுகிறார்கள். இதற்கு மாறுபட்ட மனோபாவம் உண்டு.

15. இதில உள்ளும் புறமும் கலந்திருக்கிறது. மனத்தைக் கட்டி வைத்த பிறகும், மனிதன் தன் சரீரத்தால், அதாவது கர்மேந்திரியங்களின் மூலம் ஏதாவது செய்தே தீருவான். ஆயினும் கட்டப்பட்ட மனத்தையுடைய புருஷன், காதால் கேட்ட வமபுகளைக் கேளாது. ஈசுவர பஜனையைக் கேட்பான் நல்லோர்களின் குணங்களைக் கூறுவோர்க்குச் செவி கொடுப்பான். மனத்தைத் தன் வசப்படுத்தியவன் விஷய பதார்த்தங்களில் ருசி கொள்ளான். இவ்வித மனிதன் ஆத்மாவிற்கு அழகான வேலையைச் செய்வான். இவ்வித கர்மங்களைச் செய்வதே கர்ம மார்க்கம். எந்த முயற்சியால், ஆத்மா, சரீரத்தின் பந்தத்திலிருந்து விடுபட வழிபிறக்குமோ, அதுவே கர்மயோகம். இதில் விஷயங்களில் பற்று வைப்பதற்கு இடமே இல்லை.

16. நியதமான என்ற சொல் மூல சுலோகத்தில் இருக்கிறது. பின் சுலோகத்துடன் அதற்குச் சம்பந்தம் உண்டு. அதில் மனத்தைக் கொண்டு இந்திரியங்களை நல்வழியில் செலுத்தி, பற்றின்றிப் பணி செய்வோர் புகழப்படுகின்றனர். இவ்விடம் நியதமான காரியத்தின் அதாவது இந்திரியங்களை நல்வழிப்படுத்தி செய்யப்படும் கர்மத்தின் அவசியம் வற்புறுத்தப்படுகிறது.

17. யக்ஞம் என்றால், பரோபகாரத்திற்காகவும், ஈசுவரனுக்காகவும் செய்யப்படும் காரியம்.

18. தேவதை என்றது ஈசுவரனுடைய சேதன சிருஷ்ட்டி உயிருள்ள ஜீவன்களுக்குத் தொண்டு புரிதல் தேவசேவை. அதுவே யக்ஞம்.

19. சூரியன், சந்திரன், பூமி முதலியவை ஓய்வின்றியும், வழி தவறாமலும் செல்லுவது ஈசுவரனுடைய கர்மத்தைக் குறிக்கின்றது. இக்கர்மங்கள் மனத்தால் செய்யப்படாதன. சரீரத்தினால் செய்யப்படுவதாகக் கருதப்படலாம். கடவுளுக்கு உருவ மில்லாதிருப்பதினால் அவர் உடலால் ஆகும் காரியங்களை எங்ஙனம் செய்யக்கூடும் என்ற சந்தேகத்திற்கு இடமில்லை. ஏனெனில் அவர் அசரீரியாக இருந்தும் சரீரம் உள்ளவரைப்போல் வேலை செய்து வருவதைப் பிரத்யக்ஷமாகக் காண்கிறோம். இக் காரணத்தால் கர்மம் புரிந்து கொண்டே அகர்மியாகவும், கர்மத்தால் தூஷிக்கப்படாதவராகவும் இருக்கிறார். ஈசுவரனுடைய ஒவ்வொரு சக்தியும் இயந்திரத்தைப் போல வேலை செய்து வருகிறது. அவ்விதமே மனிதனும் தனது கர்மங்களை, புத்தி பூர்வமாகச் செய்வதோடு, இயந்திரத்தைப் போலவே, நியமத்துடன் செய்ய வேண்டும். இயந்திரத்தின் போக்கை அலட்சியம் செய்து,

தன் இஷ்டம் போல் செய்வதில் மனிதனுக்கு யாதொரு பெருமையும் இல்லை. தனது கடமையை நன்கு ஆராய்ந்து நிர்ணயித்த பின், இயந்திரம் போலவே பணிசெய்தால், அவன் கவலையற்றிருப்பான். சாவதற்கும் அவன சித்தமாய் இருப்பான். தேகத்தின் நியமப்படி, உடல் தன் காலம் வந்ததும். நாசமடையும் ஆனால் அதனுள் இருக்கும் ஆத்மா என்றும் தனது நிலை மாறாமல் இருக்கும்.

20. மூச்சுவிடுதல் முதலிய கிரியைகள் தாமகவே நடைபெறுகின்றன. அவைகளில் மனிதன் பற்று வைப்பதில்லை. அவனது அங்கங்கள், நோய்வாய்ப்பட்ட பொழுதே அவைகளைப் பற்றிக் கவலைப்படுகின்றான். இல்லாவிடில், அந்த அங்கங்கள் இருப்பதைக் கூட கவனிப்பதில்லை. அவ்வாறே சுபாவமான கர்மம் தானாகவே நடந்துவந்தால் அதில் பற்று உண்டாகாது. உதார சுபாவமுள்ளவன் தனது உதார குணத்தை அறியான். ஆனால் அவனால் தானம் செய்யாமலிருக்க சாத்தியப்படாது. இத்தகைய பற்றின்மை அப்பியாசத் தாலம், ஈசனருலாலும் கிடைக்கும்.

21. உடல் இருக்குமட காலத்தே, தன் ஆத்மாவை அறிந்து அது பரமாத்மாவின் அம்சமென்று உணர்வோன். தன்னைச் சார்ந்த எல்லாவற்றையும் பரமாத்மாவிடம் அர்ப்பணம் செய்துவிடுகிறான். வேலைக்காரன் தனது எஜமானனுடைய பெயரால் காரியஞ் செய்து அதன் பலனை எஜமானனுக்கே அளிப்பது இதற்கு உதாரணம்.

22. சாகும்வரையில் புலன்களை அடக்கி வாழ பயிற்சி செய்து கொண்டே இருக்கவேண்டும். ஆனல் அப்பொழுதும் தனது முயற்சி பலிக்காவிட்டால், நிக்கிரகம் நிந்திக்கப்படவில்லை. இயற்கையின்

சாம்ராஜ்யமே விளக்கப்பட்டிருக்கிறது. இதுவே எனது இயற்கை என்று சொல்லிக்கொண்டு எவனாவது தீங்கு செய்யத் தலைப்பட்டால் அவன் இந்தச் சுலோகத்தின் பொருளை அறியாதவன்-(சுலோகம் 33-அத்-3) நாம் இயற்கையின் வழியில் போவதில்லை. நமது வழக்கங்கள் எல்லாம் இயற்கையன்று. ஆத்மாவின் சுபாவம் மேல் நோக்கிச் செல்லுதலே. ஆகையால் ஆத்மா கீழே விழும்போது அதை நேர்வழியில் கொண்டு வருதல் நமது கடமை.

23. காதின் விஷயம் கேட்டல். காதுக்கினிமையாக இருக்கும்போது அதைக் கேட்பதில் இச்சை. அதாவது விருப்பம். அல்லது ராகமாகும். அதற்கு மாறாக கர்ண கொடூரமாக இருப்பதைக் கேட்பதில் வெறுப்பு, அல்லது துவேஷம். இது இயற்கை என்று சொல்லி ராகத்திற்கும் துவேஷத்திற்கும் வசப்படக்கூடாது. அவைகளை எதிர்க்க வேண்டும். ஆத்மாவின் சுபாவம் சுக துக்கத்தால் தீண்டப்படாமை. அந்தச் சுபாவத்தை மனிதன் மீண்டும் பெற வேண்டும்.

24. சமாஜத்தில் குப்பை அள்ளுவது ஒரு மனிதனுடைய வேலை. கடமையாகவும், கணக்கு வைத்துக் கொள்வது மற்றொருவன் கடமையாகவும் இருக்கிறது. கணக்கெழுதுதல் உயர்ந்த வேலையாகக் கருதப்படட்டாலும், குப்பை அள்ள வேண்டியவன் தனது கடமையை விட்டுவிடின் அவன் தம்மம் இகழ்ந்தவன் ஆகிறான்.சமாஜத்திற்கும் கேடு விளை விக்கின்றது. கடவுள் முன்னிலையில் இவ்விருவரின் தொண்டுகளும் அவர்களின் மனப்பான்மையை அனுசரித்து சீர்தூக்கிப் பார்க்கப்படுகினறன. வேலை களின் பெறுமானம் ஒன்றே. இருவரும் பலன்களை ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்யும் மனோபாவத்துடன்

தங்கள் கடமைகளை ஆற்றுவாராயின், சமமாகவே மோக்ஷத்திற்கு உரிமை உடையவராவார்.

25. நமது உண்மையான சத்ரு நமது உள்ளத்தில் உள்ளது. அதுவே காமம். அதுவே குரோதம். அதன் வயிறு எப்போதும் நிரம்புவதில்லை. அதுவே கொடிய பாவி. இவ்வுலகத்தில் அதை உன் எதிரியாக அறியக்கடவாய்.

26. இந்திரியங்களில் காமம் பரவியிருந்தால், மனம் மாசடையும். அதனால் பகுத்தறிவு குறைந்து, ஞானம் நாசமடைகிறது.

27. இந்திரியங்களை வசப்படுத்திவிட்டால், சூக்ஷமமான காமத்தை வெல்லுதல் எளிதாகும் என்று பொருள்.

28. மனிதன் தன் உடலுக்குள்ளிருக்கும் ஆத்மாவை அறிவானாகில், மனம் இந்திரியங்களின் வசமில்லாமல், அவன் வசப்படும். தன்மானத்தை வென்றவனுக்குக் காமம் என்ன செய்யக்கூடும்.

29. நம்பிக்கையுள்ளவர்களுக்குக் கண்ணன் தேறுதல் கூறுகிறார். சத்தியமும் தருமமும் என்றும் நிலையாக நிற்பவை என்னும் வாக்குறுதியை அளிக்கிறார். உலகில் அதர்மம் சில வேளைகளில் பரவிய போதும், முடிவில் தர்மமே வெற்றியடைகிறது. சாதுக்கள் நாசமடைய மாட்டார்கள். ஏனெனில் பொய் நிலையாக நிற்காது. இதை உணர்ந்த மனிதன் தனது சக்தியில் கர்வம் கொண்டு இம்சை செய்யாதிருக்க வேண்டும். தீய வழியில் செல்லாதிருக்க வேண்டும். நமக்குத் தெரியாமல் ஈசனது மாயை தனது வேலையைச் செய்தே தீரும். இதுவே அவதாரம் அல்லது ஈசுவரனுடைய ஜன்மம் என்று கூறப்படுகின்றது. உண்மையில் கடவுள் ஜன்ம மெடுப்பதில்லை.

30. இது எப்படி எனில். கடவுள் சத்தியத்தை வெல்லச்செய்வார் என்ற உறுதியான நம்பிக்கை ஏற்பட்டவுடன் மனிதன் சத்தியத்தை நழுவ விட மாட்டான். தைரியத்தைக் கைக்கொள்ளுவான். துயரத்தை பொறுமையுடன் ஏற்றுக்கொள்வான். தனது என்ற அபிமானம் இல்லாமல் பிறப்பு இறப்பு என்னும் சம்சார சாகரத்திலிருந்து தப்பி, பரம்பொருளைத் தியானித்து அதனிடம் லயமடைவான்.

31. கடவுளின் கட்டளையை எவராலும் கடக்க முடியாது. விதைப்பதையே ஒவ்வொருவனும் அறுவடை செய்வான். செயவது போலவே பலன் கிடைக்கும். ஈசுவரனுடைய கர்மத்தின் விதியை, அதாவது கர்மத்தின் நியமத்தை தப்பக்கூடியது ஒன்றுமில்லை. தனது யோக்யதைக்குத் தக்கவாறு நியாயம் கிடைக்கும்.

32. தேவதைகள் என்றால் விண்ணுலகில் இருக்கும், இந்திரன், வருணன் முதலிய திவ்ய புருஷர்களல்ல. ஈசனுடைய அம்சமான சக்தியே தேவதை என்று கூறப்படுகிறது. இவர்த்தத்தில் மனிதனும் தேவதையே! அதனை அறிந்து உபயோகிபபதால் இவ்வுலகில் உடனே பலன் கிடைப்பதைக் காண்கிறோம்.அந்தப் பலன் ஒரு கூணமே நிற்பது. ஆத்மாவிற்கு அது சந்தோஷத்தைக் கொடுக்காது. மோகூத்தைக் கொடுக்க அதனிடம் சக்தி ஏது ?

33. ஏனெனில், மனிதன் கர்மம் செய்து கொண்டே கர்மம் இல்லாதவனாக இருப்பதற்கு இதுவே மிகச் சிறந்த உதாரணம். எல்லாக் காரியங்களுக்கும் கர்த்தா கடவுள். நாம் நிமித்த காரணங்கள் இப்படி இருக்க, நான் இதைச் செய்பவன் என்று மனிதன் அபிமானம் கொள்வதற்கு இடமேது ?

34. கர்மத்தைச் செய்துகொண்டே, தான் கர்த்தாவென்ற அபிமானம் கொள்ளாதவனுடைய கர்மம் அகர்மமாகும். வெளிப்படையாகக் கர்மத்தைத் துறந்தும் மனத்தால் கோட்டை கட்டிக் கொண்டிருப் பவனுடைய அகர்மம் கர்மமாகும். பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்டவன், அசைக்கமுடியாத தன் அங்கத்தை முயற்சி செய்து, அதாவது அபிமானத்துடன், அசைக்கும் பொழுது அது சற்றே அசையும். இவ்வியாதியால், அவன் தன் அங்கத்தை அசைப்பதின் கர்த்தா ஆகிவிடடான். ஆத்மாவின் குணம் அகர்த்தாவாக இருத்தல். எவன் மோகத்தால் விழுங்கப்பெற்று, தன்னைக் கர்த்தா வென்று எண்ணுகிறானோ, அவனுடைய ஆத்மாவிற்குப் பாரிச நோய் பிடித்தது போலாகும். அச்சமயம் அவன் அபிமானத்துடன் காரியம் செய்கிறான். இம்மாதிரியான கர்மத்தின் போக்கை அறியும் புருஷனை, புத்திமான் யோகி, தன் கடமையைச் செய்வோன் என்று கொண்டாடுகிறார்கள். நான் கர்த்தா என்று எண்ணுகிறவன் கர்மம், அகர்மம் இவைகளின் பேதத்தை மறந்து, தனது சாதனங்களின் நன்மை தீமையைப் பற்றி ஆராயமாட்டான். ஆத்மாவின் போக்கு இயற்கையில் மேல் நோக்குவதால், அறநெறி தப்பிச் செல்லும் பொழுது, மனிதனுக்கு அகங்காரம் உண்டாகிறதென்று கூறத்தகும். அபிமானமில்லாத புருஷனுடைய கருமம் சுபாவமாகவே சாத்வீக குணமுடையதாகவே இருக்கும். அதாவது கர்மத்தின் பலனை அவன் அனுபவிக்க வேண்டி இராது.

35. அபிமானத்துடன் செய்யப்படும் காரியங்கள் அனைத்தும் எவ்வளவு நல்லவனாக இருப்பினும், மனிதனைக் கட்டுப்படுத்துவனவாகவே இருக்கும். மனத்தால் ஈசுவரனிடம் அர்ப்பணம் செய்யப்பட்டு, அபிமானம் இன்றி செய்யப்பெறும் கர்மமே பந்தமில்லாத

தாக இருக்கும் எவனுக்கு நான் என்ற எண்ணம் முற்றிலும் குன்றி சூன்யமாகிவிட்டதோ, அவனது சரீரம் தானே, தனது எல்லாக் காரியங்களையும் செய்துகொள்ளும். தூங்கும் மனிதனுடைய சரீரம், தனது காரியங்களைத் தானே செய்துகொள்கிறது. எவன் கைதியாகி, தன் இஷ்டமின்றி வேலை செய்கிறானோ, அவனது உடலே சகல காரியங்களையும் செய்துகொள்கிறது. எவன் இஷ்டப்பட்டு மனப்பூர்வமாக ஈசுவரனுடைய கைதியாகத் தன்னைச் செய்து கொள்கின்றானோ, அம்மனிதனுடைய சரீரமும் தன் காரியத்தைத் தானே செய்து கொள்கிறது. தான் சூன்யமாகிவிடுகிறான். ஈசுவரனே தூண்டுபவன் ஆகிறான்.

36. ஒரு பக்கம் காதால் கேட்டல் முதலிய காரியங்களை அடக்குதல், மறறொரு பக்கம் இப்புலன்களை உபயோகித்து அதன் விஷயங்களை ஈசுவரனுக்குப் பிரியமுளள பஜனை செய்தல் முதலான காரியங்களைச் செய்தல். உண்மையில் இரண்டும் ஒன்றே!

37. பிராணாயாமம், ரேசகம், பூரகம், கும்பகம் என்று மூன்று வகைப்படும் சம்ஸ்கிருதத்தில பிராணவாயு என்பது குஜராத்தில் உள்ள அர்த்தத்திற்கு விரோதமானது. இந்த சுலோகத்தில் உள்ள, பிராணவாயு உள்ளிருந்து வெளியே விடப்படுவது. நாம் வெளியிலிருந்து உள்ளே இழுத்துக் கொள்வதைப் பிராணவாயு என்று கூறுகிறோம்.

38. இவ்விடத்தில் கர்மத்திற்குப் பரந்த பொருள் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது உடல், மனம், ஆத்மா இவைகளால் செய்யப்படும் கர்மங்கள். இவ்விதக் கர்மங்களைச் செய்யாமல் யக்ஞம் இல்லை. யக்ஞமின்றி மோக்ஷம் இல்லை. இவ்வாறு அறிதல் இதன் பிரகாரம் நடத்தல். இதுவே யக்ஞத்தை அறிதல் என்று உரைக்கப்

படுகிறது. மனிதன், தனது சரீரம், புத்தி ஆத்மா இவைகளைக் கொண்டு ஈசுவரனைப் பிரீதி செய்வதற்கு, அதாவது உலகத்திற்குத் தொண்டு செய்வதற்காக, கர்மங்களைச் செய்யானாகில், அவன் திருடன். எவன் தன் புத்தி சக்தியை மட்டும் உபயோகித்து, உடல் ஆன்மா இவைகளால், ஒன்றும் செய்யாமல் ஏமாற்றுகிறானோ, அவன் பூரணமான யக்ஞம் இயற்றியவன் ஆகமாட்டான். இந்த சக்திகளைக் கொண்டு, தன் கடமையைச் செய்யாமல், அவனால் பரோபகாரம் செய்யமுடியாது. ஆகையால் ஆத்ம சுத்தியின்றி உலக சேவை சாத்திய மில்லை. தொண்டன் தனது சரீரம், புத்தி ஆன்மா அல்லது அறநெறி பற்றி வாழும் சக்தி இம்மூன்றையும் சமமாகவே விசாலப்படுத்தி வளர்க்கவேண்டியது கடமை.

39. பரோபகாரத்தின் பொருட்டுக் கொடுக்கப்படும் பொருள் அறிவுடன்அளிக்கப்படாவிடில், பல வேளை தீமை விளைவிக்கும். இது யாருக்கு அனுபவமில்லை? ஞானத்துடன் சேர்ந்தபொழுதே நல்ல நோக்கத்துடன் செய்யப்படும் கார்யங்களும் பிரகாசிக்கிறன. ஆகையால் வெறும் கர்மம், ஞானத்தில் ஹோமம் செய்யப்பட வேண்டும்.

40. ஞானத்தை அடைவதற்கு மூன்று நிபந்தனைகள் உண்டு வணக்கம், விரும்பிக்கேட்டல், பணிவிடை செய்தல், விவேகத்தோடு கூடிய வணக்கத்தை-பிரணி பாதம்-என்று கூறப்பட்டிருக்கிறது. அடிக்கடி கேட்டல்-பரி பிரச்னம்-சேவையில்லாத வணக்கம், முகஸ்துதியிலே முடிகிறது. தவிர தேடினாலொழிய ஞானம் கிட்டாது. ஆனதால், தன் மனத்தில் பதியும்வரை, சீடன் தனது குருவிடம் வணக்கத்துடன் விடாமல் கேட்டுத் தெரிந்து கொள்வதே, ஞானத்தின் விருப்பத்திற்கு அடையாளம்.

இதற்கு நம்பிக்கை இன்றியமையாதது. நம்பிக்கை இல்லாதவரிடம் உண்மையான வணக்கம் உண்டாகாது. அப்பொழுது அவருக்கு எவ்வாறு பணிவிடை செய்ய முடியும்?

41. பிண்டத்தைப் போலவே பிர்மாண்டத்திலும் என்று சொல்வதன் பொருள் இதுவே. ஆத்ம சாசனம் கூடிய காலத்தில் தன் ஆத்மாவுக்கும் பிறர் ஆத்மாவுக்கும் பேதம் தோன்றாது.

42. சந்நியாசத்திற்கு விசேஷ லக்ஷணம் கர்மத்தை விட்டு விடுவதன்று இரு வினைகளுக்கு எட்டாத நிலை அடைவதே யென்பது இதன் பொருள். கர்மம் செய்து கொண்டும் ஒரு மனிதன் சந்நியாக இருக்கலாம். மற்றொருவன் ஒரு வேலையும் செய்யாதிருந்தும் மித்யாசாரனாக இருத்தல் கூடும்.

43. ஞானயோகியானவன் உலகச்சேவை செய்வதால் உண்டாகும் கர்மயோக பலத்தைத் தனது நியமத்தால் பெறுகிறான். கர்மயோகியோ தனது பற்றின்மையின் காரணமாக, கர்மம் செய்து கொண்டே ஞான யோகியின் சாந்தியை எளிதில் அடைகிறான்.

44. அபிமானமுள்ளவரையில் இவ்விதப் பற்றில்லா நிலை கிடைக்காது. ஆகையால் சிற்றின்பத்தில் அவாக் கொண்ட மனிதன் "நான் விஷய போகங்களை அனுபவிக்கவில்லை. எனது இந்திரியங்களே தம் காரியங்களைச் செய்கின்றன" என்று கூறித் தப்ப முடியாது. இப்படி அர்த்தத்தை அநர்த்தமாகச் செய்வோன் கீதையின் கருத்தை உணரமாட்டான். தர்மத்தையும் அறியமாட்டான்.

45. இரண்டு மூக்கு துவாரங்கள், இரண்டு காதுகள், இரண்டு கண்கள், மலத்தைக் கழிக்கும் ஸ்தானங்கள், இரண்டு, வாய் முக்கிய துவாரங்கள், இவ்விதமே தோலின் கணக்கில்லாத ஓட்டைகள், உடலின் கதவுகள், இவ்வாயில்களைக் காப்போன் இவைகளின் வழி வருவதற்கும், வெளியில் போவதற்கும் அதிகாரமுள்ள வற்றையே வரப் போகவிட்டால், இப்போக்குவரத்து நடந்து கொண்டிருந்தும், அவனுக்கு எவ்வித பொறுப்பு மில்லை. அவன் கேவலம் ஒரு சாக்ஷியே. இதனால் அவன் செய்வதுமில்லை செய்விப்பதுமில்லை.

46. ஈஸ்வரன் கர்த்தாவென்று, கர்மத்தின் நியமம் மாறுதல் அடையாதது. தடுக்கக்கூடாதது. எவன் எவ்விதம் செய்கின்றானோ அவன் அதற்கேற்றவாறே அனுபவிக் கிறான். இதில் ஈஸ்வரனுடைய தயவும், நியாயமும் விளங்குகின்றன. மாசற்ற நியாயத்தில் குறைவற்ற கருணையும் அடங்கி இருக்கின்றது. நியாயத்திற்கு விரோதமாக இருக்கும் கருணை கருணையன்று. கொடுமையே. ஆனால் மனிதன் முக்காலத்தையும் அறியவல்லவனல்லன். ஆதலால் அவனுக்குத் தயை- அதாவது பொறுமையே நியாயமாகும். அவன் எக்காலமும் தானே நியாயத்திற்குப் பாத்திரனாகி தயைக்காக கெஞ்சவேண்டி இருக்கிறது. ஆகையால், பொறுமையின் மூலமாகவே பிறருக்கு நியாயம் செய்ய வேண்டும். பொறுமை வளர வளர - அகர்த்தா-யோகி சம புத்தியுள்ளவன் - கர்மத்தில் திறமையுள்ளவன் - ஆகிறான்.

47. அறிவின்மையால் நான் செய்கிறேன் என்று எண்ணிச் செய்கின்றபொழுது மனிதன் கர்ம பந்தத்தில் வீழ்கிறான். தவிரவும் தனக்குக் கிடைக்கும் நல்ல அல்லது கெட்ட பலன்களை ஈஸ்வரன் தலையில் போடுகிறான். இது மோகவலை.

48. இவர்கள் எல்லோருக்கும், அவர்களின் தேவைக்குத் தகுந்தபடி தொண்டுபுரிகிறான் என்று பொருள். பிராமணனையும், சண்டாளனையும் ஒரே சமமாகக் கருதுவது எவ்விதமென்பதற்கு உதாரணம், பிராமணனைப் பாம்பு கடித்தால் அவனுடைய காயத்தில் உள்ள விஷத்தை உறிஞ்சி எப்படி அவனைப் பிரியத்துடன் காப்பாற்ற முயல்வானோ, சண்டாளனைப் பாம்பு கடித்த போதும், அவனுக்கும் ஞானியானவன் அவ்வாறே தொண்டு செய்வான்.

49. எவ்விதம் எதைப்பற்றி சிந்திக்கிறானோ மனிதன் அப்படியே ஆகிறான். ஆகையால் சமத்துவத்தைச் சிந்தனை செய்து மாசற்றவனாய், சமத்துவ சொரூபமான, தோஷமில்லாத பிர்மத்தை அடைகிறான்.

50. தன் உள்ளத்தை நோக்குபவன் ஈஸ்வரனைப் பார்க்கிறான். அவனுக்கே பிர்மானந்தம் பலிக்கும். விஷயங்களில் பற்றின்றி கர்மம் புரிவதும். பிர்ம சமாதியில் ஆனந்தம் அடைவதும் வெவ்வேறான காரியங்கள் அன்று. ஒரு காசின் இரு பக்கங்கள் போல ஒரே வஸ்துவின் இரு தோற்றங்கள்.

51. உயிர் போனபின், சரீரத்திற்கு விருப்பும் வெறுப்பும் எவ்விதம் இல்லையோ, சுக துக்கமும் இல்லையே, அவ்வாறே உயிருடன் இருக்கும்போதும் பிணத்திற்குச் சமானமாக ஜடப்பொருளைப் போல தேகத்தில் பற்றறறு இருப்பவன் சம்சாரத்தை ஒழித்து உண்மையான இன்பத்தைப் பெறுகிறான்.

52. பிராண வாயு உள்ளிருந்து வெளியே போவது அபான வாயு வெளியிலிருந்து உள்ளே போவது. இந்தச் சுலோகத்தில் பிராணாயாமம் முதலிய வெளிச்

செய்கைகள், சரீரத்தைச் சீர்படுத்தி பரமாத்மா வசிப்பதற்கு உரிய கோயிலாகச் செய்வதில் உபயோகப் படுகின்றன. போகிக்கு தேகப் பயிற்சியால் ஆகும் பயன், யோகிக்கு பிராணாயாமத்தால் கிடைக்கிறது. தேகப் பயிற்சி முதலியவை போகிக்குத் தனது இந்திரியங்களை உணர்ச்சிகளைக் கூர்மையாகச் செய்வதில் சகாயம் செய்கின்றன. பிராணாயாமம் முதலியவை யோகியின் உடலை நோயின்றித் திடமாகச் செய்வதுடன்,சாந்த நிலை அடைவதற்கும் உதவிபுரிகின்றன. இந்நாட்களில் பிராணாயாமம் முதலிய விதிகளைச் சிலரே அறிவார்கள். அவர்களிலும், அவைகளை நல்ல உபயோகம் செய்பவர் மிகச்சிலரே, எவனுக்குத் தனது இந்திரியங்கள், மனம், புத்தி இவைகளின் பேரில் வெற்றியுண்டாகவில்லையோ, எவனுக்கு மோக்ஷத்தில் அளவற்ற ஆசையோ, எவன் விருப்பத்தையும், வெறுப்பையும் ஒழித்துப் பயத்தை அகற்றிவிட்டானோ அவனுக்கே பிராணாயாமம் முதலியவை பயன்பட்டு உதவும். உள்ளத் தூய்மை இல்லாதவனுடைய பிராணாயாமம் முதலிய அனுஷ்டானங்கள், அவனைப் பந்தம் செய்ய சாதனங்களாகி மோகக் கிணற்றில் அதிக ஆழத்தில் கொண்டுபோய் விடும். அப்படியே செய்கின்றன வென்பது பலருடைய அனுபவம். இக்காரணத்தால் யோகீந்திரரான பதஞ்சலி, யமம், நியமம் முதலியவைகளுக்கு முதல் ஸ்தானம் கொடுத்து, அவைகளின் வழியாக மோக்ஷத்தை அடைய விரும்புவோனுக்கு உதவிகளாக, பிராணாயாமம் முதலிய வற்றைக் கருதியிருக்கின்றார். யமம் ஐந்து, அஹிம்சை, சத்தியம், பிறர் பொருளை விரும்பாதிருத்தல், பிர்மச்சரியம் பிறர் முகம் நோக்காதிருத்தல். நியமம் ஐந்த, சுத்தம், சந்தோஷம், தவம், வேதாத்தியானம்,கடவுள் வணக்கம்.

53. ஈஸ்வரன் சர்வ சக்திமானாக இருப்பதால், கர்த்தாவும்,அகர்த்தாவும் அவனே. அனுபவிப்பவனும், விலகியிருப்பவனும் அவனே. மற்ற விதங்களில் கூறப்படு பவனும், அவற்றிற்கு மாறாக இருப்பவனும் அவனே. அவன் வர்ணிக்கத்தகாதவன். மனித மொழிக்கு எட்டாதவன். ஆகையால் அவனிடத்தில் பரஸ்பரம் விரோதமான குணங்களையும் சக்திகளையும் கற்பித்து மனிதன் அவனை அறிய முயலுகிறான்.

54. அக்னி என்பது எல்லா சாதனங்களையும் குறிக்கின்றது. அக்னியின் வழியாக ஹோமம் செய்யப் படும்பொழுது நெருப்பின் அவசியம் ஏற்படுகிறது. இந்த யுகத்தில் ராட்டினம் உலக சேவையின் சாதனமாக இருக்கிறதென்று நினைத்தால் அதை விட்டு விடுவதால் ஒருவன் சந்நியாசி ஆகிவிடமாட்டான்.

55. எவனுக்கு ஆத்ம சக்தி உண்டாகிவிட்டதோ, எவன் சமத்துவ புத்தி அடைந்தானோ, அவனுக்கு ஆத்ம தரிசனம் எளிதில் கிடைக்கிறது. யோக நிலை பெற்றவன் உலக நன்மைக்குப் பணி செய்ய வேண்டியதில்லை என்பது இதற்குப் பொருள் அன்று. உலக நன்மைக்காக கர்மம் புரியாமல் அவன் ஜீவித்திருக்க முடியாது. தொண்டு புரிதல் அவனுடைய இயற்கை ஆகிறது. வெளித்தோற்றத்திற்காக அவன் ஒன்றும் செய்வதில்லை.

56. மூக்கு நுனி என்று கூறியதன் அபிப்பிராயம் புருவங்களுக்கு நடுப்பாகம். (அத்-5-சு.27 பார்க்கவும்) பிரம்மச்சாரி விரதமென்பது வீர்யத்தைக் கட்டுவது மட்டுமல்ல. அத்துடன் பிர்மத்தை அடைவதற்கு வேண்டிய அஹிம்சை முதலிய எல்லா விரதங்களும் அதில் அடங்கி இருக்கின்றன.

57. ஞானி என்ற பதத்திற்கு அனுபவ ஞானமின்றித் தர்க்க ஞானமுடையவன் என்று பொருள் கொள்ள வேண்டும்.

58. பூமி, ஜலம், நெருப்பு, காற்று, ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம். இவ்வெட்டுத் தத்துவங்களுடன் கூடிய சொரூபம் க்ஷேத்திரம் அல்லது அழிவுள்ள அம்சம் என்று சொல்லப்படும்.

59. நம்முன் தோன்றும் உலகை உண்டாக்கியும், அதனால் தீண்டப்படாமல் இருக்கும் காரணத்தால், பரமாத்மாவின் மறைந்திருக்கும் தன்மை யோகமாயை யாகும்.

60. இவ்வுலகில் ஈசுவரனைத் தவிர மற்றொன்று மில்லை. எல்லாக் கர்மங்களுக்கும் அவனே கர்த்தா. போக்தாவென்பதும் அவனே. இவ்விதமறிந்து, சாகும் பொழுதும் சாந்த நிலையில் ஈசுவரனிடம் தன் மயமாகி வாசனைகள் அனைத்தையும் போக்கடித்தவர்களே அவனை அறிந்தவர்கள். அவர்கள் மோக்ஷமடைவார்கள்.

61. நமது அறிவுக்கெட்டாத பரப்பிர்ம முதல், நம் கண்முன் தோன்றி மறையும், அற்பப் பொருள் வரையுள்ள உலகு முழுவதும் பரமாத்வே. இவையெல்லாம் அவன் செயல். அப்படியிருக்கையில், பிராணிகளில் ஒருவனான மனிதன் தான் கர்த்தாவென்று அபிமானம் கொள்வதை விட்டு, பரமாத்மாவின் சேவகனாய் தனது கர்வ முழுதும் அர்ப்பணம் செய்வது அவசியமல்லவா !

62. இருபத்தி நான்கு மணியுள்ள நமது தினம் இப்பிரபஞ்சத்தின் காலச்சக்கரத்தில் , ஒரு க்ஷணத்திலும் சிறியது. ஆகையால் இந்தத் தினத்தில் அடையக்கூடிய போகம் வான மலரைப்போன்று நமது மதிமயக்கமே

யொழிய வேறொன்றுமில்லை. இதை உணர்ந்து அதை அலட்சியம் செய்து, நமக்குக் கிடைக்கும் காலத்தைக் கடவுள் வணக்கத்திலும், உலகத் தொண்டிலும் கழித்து, நமது வாழ்க்கையைப் பயன் உள்ளதாகச் செய்வதோடு, இன்று ஆத்ம தரிசனம் கிடைக்காவிடினும் தைரியத்துடன் இருக்கவேண்டும்.

63. இவ்வாறறிந்தும், மனிதன் தன் கையில் சிறிதளவு சக்தி இருக்கிறதென்று உணரவேண்டும். பிறப்பும் இறப்பும் ஜோடியாகச் சேர்ந்தே காணப்படுகின்றன.

64. பக்தியுள்ளவன், உலகத்தொணடு புரிபவன். ஞானம் பெற்ற பின், எப்பொழுது மரணமடைந்தாலும் மோக்ஷத்தையே அடைகின்றான். யக்ஞும் செய்வோன், பரோபகாரம் செய்து தனது ஆயுளைக் கழிப்பவன், ஞானமடைந்தவன், பிர்மத்தின் தன்மையை உணர்ந்தவன், இவ்வித புருஷன் மரண காலத்தில், தன் நிலை குன்றாதிருப்பின் மோக்ஷமடைவான். இதற்கு மாறாக யக்ஞும் செய்யாது, அறிவின்றி, பக்தியின் பெருமையை உணராது இருப்பவன், சந்திரலோகத்தை, அதாவது அல்ப காலம் இருக்கும் லோகத்தை அடைந்து, பின் சம்சாரத்திற்கு மறுபடியும் திரும்பி வருகிறான். சந்திரனுக்குச் சொந்த ஒளி இல்லை.

65. இவ்விரண்டு வழிகளையும் அறிந்து சமநிலை பெற்றவன். இருள், அதாவது ஞானமில்லாத வழியில் செல்ல மாட்டான். இதையே மோகத்தில் அகப்பட மாட்டான் என்று கூறப்பட்டிருக்கிறது.

66. ஞானம், பக்தி, சேவை இவைகளால் சமநிலை யடைந்தவன் மற்ற புண்ணியங்களின் பலன்களை மட்டும் அடைவதில்லை. பரமபதத்தையும் அடைகிறான்.

67. எல்லா உயிர்களும் என்னிடம் இருக்கின்ற வென்றும், இல்லையெனவும் சொல்லலாம். அவ்வாறே நான் அவைகளிடம் இருக்கின்றேன். இல்லை என இருவிதமாகவும் உரைக்கலாம். இது ஈசுவரனுடைய யோக பலம், மாயை, அல்லது விசித்திர சக்தி. பகவானும் ஈசுவரனுடைய சொரூபத்தை மனித மொழியால் வருணிக்க வேண்டியிருந்தது. ஆதலால் பலவித சொற்களைப் பிரயோகித்து அர்ச்சுனனுக்குச் சந்தோஷத்தைச் செய்கிறார். இருப்பவையாகவும், ஈசுவர மயம். ஆகையால் எல்லாமே அவனிடத்தில் இருக்கின்றன. அவன் அவைகளால் தீண்டப்படுவது இல்லை. நடக்கும் காரியங்களுக்கு அவன் அவைகளால் தீண்டப்படுவது இல்லை. நடக்கும் காரியங்களுக்கு அவன் கர்த்தாவல்ல. ஆகையால் ஜீவன்கள் அவனிடமில்லை என்று சொல்லத்தகும். ஆனால் அவனிடத்தில் பக்தி யுள்ளவனிடம் அவன் நிச்சயமாக இருக்கிறான். நாஸ்திகள் அவனைத் தன் நம்பிக்கையின் பிரகாரம் தன்னிடம் அணுகுவதில்லை. இது ஈசுவரனுடைய விசித்திர சக்தி. இல்லையெனில் இதை என்னவென்று சொல்வது?

68. கடவுளின் சக்தியை அறியாதவர்கள், தமது உடலுக்குள் அந்தர்யாமியாக இருக்கும் பரம்பொருளைக் காணமாட்டான். அவர் இருப்பதையே நம்பாமல் நாஸ்திகர்கள் ஆகிறார்கள்.

69. யோகிகளை அறிந்து கொள்வதறகு மூன்று வழிகள் உண்டு. சமத்துவபுத்தி, கடமை செய்வதில் ஆற்றல், சஞ்சலமில்லாத ஒரு முகப்பட்ட பக்தி இம்மூன்று குணங்களும் பாவு, ஊடைபோல் கலந்து நெய்யப் பட்டிருக்க வேண்டும். பக்தி, சமத்துவமின்றிக் கிட்டாது. சமத்துவம் பக்தியில்லாமல் கிடைக்காது. தன் கடமையை

ஆற்றுவதில் வல்லமை இல்லாத பக்தியும், சமத்துவமும் வெளித்தோற்றங்கள் என்றே பயப்படவேண்டும். யோகம் என்றால் பொருளைச் சம்பாதித்தல், க்ஷேமம் என்றால் சம்பாதித்த பொருளை ரக்ஷித்தல். விதியை அறியாம லிருப்பதாவது, மாசற்று, உருவமற்று, தனிப்பொருளாக இருக்கும் என்னை, கண்ணனை அறியாதிருப்பது.

70. தொண்டுபுரியும் எண்ணத்துடன் கொடுக்கும் பொருள்களை, அதை ஏற்றுக்கொள்ளும் பிராணியில் அந்தர்யாமியாக இருக்கும் பகவான், அதை அங்கீகாரம் செய்துகொள்கிறார் என்பதை உணரவேண்டும்.

71. கடவுளிடத்து ஓர் வழிப்பட்டு பக்தி செய்தல் தீய குணங்களைப் போக்கும்.

72. சூதாடுவோர்களின் சூது நான் என்ற வாக்கியத்தைக் கண்டு, படித்து, திடுக்கிட வேண்டிய தில்லை. இவ்விடம் சூதின் நன்மை தீமை ஆராயப்பட வில்லை. இருப்பவை எல்லாம் கடவுளின் ஆணையின்றி இருக்க முடியாதவையென்று கூறப்பட்டிருக்கிறது. சூதாடுவோனும், எல்லாம் கடவுள் ஆதீனமென்று உணர்ந்தால், தனது அபிமானத்தை இழந்து சூதையும் விட்டுவிடுவான்.

73. சரீரமுள்ள மனிதன், உருவமில்லாத சொரூபத்தைக் கற்பனையால் அல்லவோ அறிய வேண்டும் ஆனால் அவனிடம் உருவமில்லாத சொரூபத்தை விளக்க ஐயமற்ற சொல் யாதொன்றும் கிடையாது. ஆகையால் மற்ற பொருள்களை விலக்கும், நேதி-நேதி-இல்லை-இல்லை என்ற சொல்லோடு திருப்தி அடையவேண்டியிருக்கிறது.

ஆகையால் விக்ரக பூஜையை வெறுப்பவர்களும் நுட்பமாக ஆராய்ந்து பார்க்கின், மூர்த்தி பூஜை செய்பவர் களாகவே இருப்பர். புஸ்தகத்தைத் தொழுவது கோயிலில் வழிபடுவது, ஒரு திக்கை நோக்கிய பூஜை செய்வது, இவை யெல்லாம் மூர்த்தி பூஜையின் லக்ஷணங்கள். அவ்விதம் இருந்த போதும், மூர்த்திகளின் எல்லைகளைக் கடந்து வடிவமற்ற, மனத்திற்கு எட்டாத ஒரு சொரூபம் இருக்கின்றதென்று எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. பகவானிடம் லயமடைந்து முடிவில் ஒரே அத்விதீய உருவமற்ற பரம்பொருளே மிஞ்சி இருப்பது பகதனுடைய கடைசி எல்லை. ஆனால் இந்நிலையை மூர்த்தி பூஜை வாயிலாக எளிதில் அடையும் வழி மிகவும் எளிது. ஆதலால் அவ்யக்தப் பொருளை நேரில் அடையும் வழி மிகவும் கடினமென்று கூறப்பட்டிருக்கிறது.

74. அப்பியாசமாவது சித்தத்தின் போக்குகளை, அடக்கும் சாதனம். ஞானமாவது காதால் கேட்டு, மனத்தால் சிந்தித்தல் தியானமாவது பூஜை. இவைகளின் பயனாக கர்ம பலனைத் துறக்கும் சக்தி உண்டாகாம லிருந்தால், அப்பியாசம், உண்மையான அப்பியாசமல்ல. ஞானம் ஞானமல்ல, தியானமும் தியானமல்ல.

75. மகா பூதங்கள் ஐந்து. பூமி, ஜலம், தேஜஸ், காற்று, ஆகாயம். அகங்காரமாவது சரீரத்திறகுள் நான் என்று நினைக்கும் தன்மை. அவ்யக்தம் அல்லது ஐம்புலன் களுக்கு எட்டாது இருக்கும் மாயையே பிரகிருதி என்பது. பத்து இநதிரியங்களாவன, ஐந்து ஞானேந்திரியங்கள், மூக்கு, காது, கண், நாக்கு, தோல் அவ்வாறே ஐந்து கர்மேந்திரியங்கள், கை, கால், முகம், மலங்கழிப்பதற்கும், காமத்திற்குமான இந்திரியங்கள். இரண்டு; ஐந்து விஷயங்களாவன, ஐநது ஞானேந்திரியங்களின் செயல்கள், நுகர்தல், கேட்டல், பார்த்தல், ருசித்தல்,

தொடல், ஸங்காதம் என்றால் உடலின் தத்துவங்கள் ஒன்றை ஒன்று தழுவியிருக்கும் சக்தி. திருதி என்பது தைரியம் என்ற சூட்சும குணமன்று. சரீரத்திலுள்ள பரம அணுக்கள் ஒன்றையொன்று ஒட்டிக் கொண்டிருக்கும் குணம். இக்குணம் அகம்பாவத்திலிருந்து உண்டாகிறது. அகங்காரம் பிரகிருதியிலிருந்து உண்டாகிறது. இவ்வகங் காரத்தின் உண்மையை மோகம் தெளிந்த மனிதன் அறிந்து, அதைத் தியாகம் செய்கின்றான். இக்காரணத்தால் மரண காலத்திலும், மற்றக் கஷ்டங்களிலும் துயரப்பட மாட்டான். ஞானி அஞ்ஞானி அனைவரும் முடிவில் நிலையில்லாத இந்த க்ஷேத்திரத்தை விட்டே தீர வேண்டும்.

76. ஈசுவரனை ஸத் என்றோ அஸத் என்றோ இருவிதமாகவும் சொல்ல முடியாது. எந்த ஒரு தனிச் சொல்லாலும், அதனை விளக்கவோ, குறிக்கவோ சாத்தியப்படாது. அதன் சொரூபம் இவ்வாறு குணங்களைக் கடந்து இருக்கிறது.

77. அதனை அறிபவன் அதனுள்ளே இருக்கிறான். போவதும், நிற்பதும், சாந்தியுடனிருப்பதும், சாந்தி யில்லாமல் தவிப்பதும், நமது வாழ்க்கையில் அனுபவிக்கிறோம். எல்லா மனோபாவங்களும் அதனிடமிருந்தே உண்டாகின்றன.ஆகையால் போவதும் நிற்பதும் அது என்று கூறப்பட்டுள்ளது.

78. பிரகிருதியை சாதாரண பாஷையில் ஜனங்கள் மாயை என்று சொல்கிறார்கள். புருஷன், ஜீவன், மாயை அல்லது மூலப் பிரகிருதி வசப்பட்ட ஜீவன், சத்துவ, ரஜ, தமோகுணங்களை மேற்கொண்டு கர்மங்கள் புரிந்து அவைகளின் பலன்களை அடைகின்றான். இக்கர்மங் களை அனுசரித்தே மறுபிறப்பும் அவனுக்கு உண்டாகிறது.

79. 2, 9. 12 முதலிய அத்தியாயங்களைப் போலவே இச்சுலோகத்திலும் (அத் 8-சு-23) மனம் போனவாறு கர்மம் செய்வதை உபதேசிக்கவில்லை என்று அறியக் கூடும். பக்தியின் மகிமையை உபதேசிப்பது இதன் நோக்கம். வெறும் கர்மம் பந்தப்படுத்தக்கூடியது. ஆனால் அக்கர்மங்கள் அனைத்தையும், பரமாத்மாவிற்கு அர்ப்பணம் செய்தால், பந்தத்திலிருந்து மனிதன் விடுதலை அடைகிறான். இவ்வாறு எவன், தான் கர்த்தாவென்ற எண்ணத்தை இழந்து, அந்தர் யாமியான பரமாத்வை இடைவிடாமல் சிந்திப்பானோ, அவன் எவ்வித தீச்செயல் களையும் புரியான். பாபத்தின் மூலம் அபிமானம். நான் என்ற நினைவு இல்லாதவிடத்தில் தீங்குமில்லை. இந்தச் சுலோகம் தீச்செயல் புரியாத நெறியைக் கற்பிக்கின்றது.

80. சம பாவத்துடன் இருக்கும் ஈசுவரனைப் பார்ப்போன், அவனிடம் லயமாகி, வேறொன்றையும் பார்க்கமாட்டான். இதனால் மன விகாரங்கள் அற்று, மோஷமடைகின்றான். தனக்குத் தானே எதிரி ஆகமாட்டான்.

81. தூங்கும் மனிதனுடைய ஆத்மா நித்திரை செய்வதில்லை. அவனுடைய பிரகிருதியே தூங்கும் கர்மத்தைச் செய்கிறது. மற்றும் அவ்வாறே மனிதனுடைய கண்கள் காணத்தகாதவைகளைப் பார்க்காது. பிரகிருதி மாறுதல் அடையும் தன்மை உடையது. அபிமானமுள்ள புருஷன் தன்னை அதன் நாயகனாக நினைக்கும்போது, அதன் சேர்க்கையால் விஷய விகாரங்கள் உண்டா கின்றன.

82. அனுபவத்தால் எல்லாவற்றையும், பிர்மத் தினிடம் காண்பதையே பிர்மத்தை அடைதல் என்று கூறபபடுவது. அச்சமயம் ஜீவன் பரமாவிடமிருந்து வேறுபட்டிருப்பதில்லை.

83. கர்மத்தால் நிரம்பிய லோகமென்பது மனித உலகம். மூடயோனி என்பது மிருகம் முதலியவை. நற்கருமங்களின் பலன் சாத்வீகமாகவும், மாசற்றும் இருக்கும். ராஜச கர்மங்களின் பலன் துக்கமாகவும், தாமஸ கர்மங்களின் பலன் அறிவீனமாகவும் ஆகின்றன.

84. நாம் சாதாரணமாக சுக துக்கம் என்று சொல்லப்படும் விஷயங்கள், அப்பதங்களால் இங்கு கூறப்படவில்லை. சுகத்தின் பொருள் ஆத்ம ஆனந்தம். இதற்கு மாறுபட்டது துக்கம்.

85. குணங்களைக் கர்த்தாவென்று நினைப்பவனுக்கு அகம்பாவம் இருக்காது. இதனால் அவனுடைய கர்மங்கள், இயற்கையை அனுசரித்தும், சரீர போக்ஷணத்திற்காகவும் மட்டுமே இருக்கும். சரீர போஷண பரம புருஷார்த்தத்தின் பொருட்டேயாதலால், எல்லாக் கர்மங்களிடத்தும், தியாகமும் வைராக்கியமும் அவனுக்கு உண்டாகவேண்டும். இவ்வித ஞானி சுபாவ மாகவே குணங்களுக்கப்பாலிருக்கும் நிர்க்குணனான ஈசுவரனைச் சிந்தித்து அவனை வழிபடுவான்.

86. "ச்வ்" என்ற பதத்திற்கு நாளை என்று பொருள். அசுவத்தம் என்ற சொல்லால், நாளை வரையில் நிலை பெற்றிராத, க்ஷண நேரம் உள்ள சம்சாரம் குறிக்கப் படுகிறது. ஒவ்வொரு நிமிஷமும் மாறிக்கொண்டே யிருப்பது. இதனால் அது அசுவத்தம். ஆனால் இத்தன்மை யுடன் அது எக்காலமும் இருப்பதினாலும், அதன் வேர் மேலே, அதாவது ஈசுவரனிடத்தில் இருப்பதினாலும், அதன் வேர் மேலே அதாவது ஈசுவரனிடத்தில் இருப்பதினாலும், அது விநாசமற்றது அதில் வேதம், தர்மத்தின் சுத்த சொரூபம் என்ற இவைகள் தோன்றா விடின் அது பிரகாசிப்பதில்லை. இவ்விதம் சம்சாரத்தின் உண்மையான ஞானம் எவனுக்கு இருக்கின்றதோ அவனே ஞானி.

87. நல்லறிவில்லாதவனுக்கு இவ்வச்வத்த மரம் தோன்றும் வகை இவ்விடம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மேலே ஈசுவரனிடம் இருக்கும் வேர்களை அவன் நோக்கான். இதற்கு மாறாத விஷயங்களின் அழகால் மயங்கி மூன்று குணங்களின் மூலம் இவ்விருக்ஷத்தை விருத்தி செய்கிறான். அதன் காரணமாக இவ்வுலகில் கர்மமென்றும் கயிற்றினால் கட்டப்படுகிறான்.

88. பற்றின்மை என்பதன் தாத்பர்யம் ஒத்துழையாமை. எதுவரையில் மனிதன் விஷயங்களுடன் ஒத்துழையாது தூரத்தில் விலகி நிறகவில்லையோ, அதுவரையில் அவன் அவைகளிடத்தில் சிக்கிக்கொண்டு, அதே சமயத்தில் அவைகளால் தீண்டப்படாதிருத்தல் அசாத்தியமென்பது கருத்து.

89. விஷயங்கள் என்ற சொல்லின் அர்த்தம் வெறுக்கத்தக்க சிற்றின்ப சுகமன்று. ஒவ்வொரு இந்திரியத்திற்கும் உரிய சுபாவகிரியைகளே குறிக்கப்படுகின்றன. கண்ணிற்கு விஷயம் பார்த்தல், காதின் விஷயம் கேட்டல், நாக்கின் விஷயம் ருசித்தல் முதலியன. இக்கிரியைகள் மன விகாரத்தைக் கொடுப்பின், அகம்பாவத்துடன் கூடி இருப்பின், தீங்கை விளைவிப்பனவாகவும், வெறுக்கத் தக்கனவாகவும் இருக்கும். மன விகாரத்தை உண்டு பண்ணாமல் இருந்தால், மாசற்றனவாக இருக்கும். குழந்தை கண்ணால் காண்கிறது. கையால் தொடுகிறது. ஆனால் மனவிகாரம் அடைவதில்லை.

90. அகிருத ஆத்மாக்கள் என்றது. பக்தி இல்லாது, தன்னிச்சைப்படி நடக்கும் தீயோனைக் குறிப்பது. வணக்கத்துடனும், சிரத்தையுடனும் ஈசுவரனை வழிபடுவோன், உள்ளத் தூய்மை பெற்று கடவுளைக் காண்கிறான். யம, நியமங்களைப் பொருட்படுத்தாது

வெறும் புத்தியின் பிரயோகத்தால், ஈசுவரனைக் காணமுயலும் மதியில்லாதவர்கள் கடவுளை விட்டகன் றவர்கள், அவர்கள் கடவுளைக் காணவும் அறியவும் மாட்டான்.

91 தன்னிடத்தில் இல்லாத குணத்தை வெளிப் பார்வைக்கு இருப்பது போல் நடிப்பது டம்பம் அல்லது ஏமாற்றம். கர்வமெனபது தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்வது. பாருஷ்யமென்றால் கொடுமை.

92. சாஸ்திர விதியின் அர்த்தம், தர்ம கிரந்தங்கள் என்று சொல்லப்படும் நூல்களில் கூறப்பட்டுள்ள பலவித கிரியைகள் அல்ல. அனுபவத்துடன் கூடிய ஞானத்தை அடைந்த பெரியோர்களால் காட்டப்பெற்ற நல்லொழுக் கமே. இதனால் குறிக்கப்படுகிறது.

93. ஒவ்வொருவரும் தனக்கிஷ்டப்பட்ட நியமங் களைச் செய்து கொண்டு, மனம் போனவாறு போகக் கூடாது. அதற்கு மாறாக அனுபவத்தால் தர்மத்தை உணர்ந்தவரின் வாக்கியங்களைப் பிரமாணமாகக் கொண்டு ஒழுகவேண்டும்.

94. ஒவ்வொரு கர்மத்தையும் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்தே இயற்ற வேண்டும் என்பது கருத்து. ஏனெனில் "ஓம்" என்பதே "சத்" அல்லது சத்தியம். அதற்கு அர்ப்பணம் செய்த கர்மமே சத்திய பலனைக் கொடுக்கும்.

95. கீதையின் பல சுலோகங்கள், மனிதனுடைய அந்திம லக்ஷியங்களைக் கற்பனையால் அவலம்பிக் கொண்டிருக்கின்றன. அவைகளின் சரியான உதாரணம் இப்பூமியில் கிடைக்காது. க்ஷேத்ர கணிதத்தில், கனம், நீளம், அகலமில்லாத கற்பனைச் சித்திரங்கள் எவ்வாறு உதவுமோ, அவ்வாறே இவையும் அறநெறியைக்

காட்டுவதில் பயன்படுவன. ஆகையால் எவனுடைய அகங்காரம், முற்றிலும் நசித்துவிட்டதோ, எவன் மதியில் அணுவேணும் மாசில்லையோ, அப்புருஷன் இஷ்டப் பட்டால், உலக முழுவதையும் அழித்துவிடலாம் என்று சொல்லக்கூடும். புத்தி பூர்ணமாக, தூய்மையாகின் அம்மனிதன் மூன்று காலங்களையும் பார்க்க ஆற்றல் பெறுகிறான். பகவான் ஒருவனே இவ்வித புருஷன். அவன் எக்காரியங்களைச் செய்தும் அகர்த்தாவாக இருப்பவன். கொன்றாலும் அஹிம்சையோடு கூடியவன். ஆதலால் சாதாரண மனிதன் கொல்லக் கூடாது என்றும் பெரியோர்களின் அறநெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவதே முறை என்றும் கூறப்பெறுகிறது.

96. இதில் அறிவும் ஒழுக்கமும் பிணைக்கப் பட்டிருக்கின்றன. முதலில் மனிதன் தன் கடமையை (ஜ்ஞேயம்) அதறகு வழி (ஞானம்) இவ்விரண்டையும் அறிந்து பரிஞாதா அல்லது அறியும் புருஷன் ஆகிறான். இவ்விதம் கர்மத்தில் தூண்டப்பட்ட பின்னர் புலன்கள் (கரணங்கள்) வழியாகக் கர்த்தாவாகிறான். இதுவே கர்ம தத்துவங்களின் சமூகம்.

97. ஸ்வதர்மமாவது தன் கடமை, கீதையின் உபதேசத்தின் நடுநாயகமானது கர்ம பலத் தியாகம். தன் கடமையை விட்டு அதற்கு உத்தமமான, கடமையைத் தேடும்பொழுது, பலத் தியாகத்திற்கு இடமில்லை. ஆதலால் ஸ்வதர்மமே சிறந்ததென்று சொல்லப்பட்டது. எல்லா தர்மங்களும் சரியாகப் பரிசீலிக்கப்படாவிட்டால் ஒழிய பயன்படாது.

98. யோகேசுவரனான கிருஷ்ணன் என்ற தன் கருத்து அனுபவ சித்தமான சுத்தஞானம். வில்லேந்திய அர்ச்சுனன் என்றால் அந்த ஞானத்தைப் பின்பற்றிய செய்கை.

மகாத்மா காந்தியடிகளின் இந்த 98 குறிப்புக்களைப் பகவத் கீதையை ஒருமுறை படித்த பின்னர் படித்துப் பார்க்க வேண்டும். கீதையில் தெளிவுபடாத பல விஷயங்கள் தெளிவுபடும். குழப்பம் நீங்கும்.

இதைத் தவிர மகாகவி சுப்ரமணிய பாரதியார் பகவத் கீதையை மொழி பெயர்ப்பாக எழுதாமல் கீதையைப் படிப்பவர்களின் மனதில் எழக்கூடிய கேள்விகளுக்குப் பதில் கூறும் வகையில் முனனுரை எனத் தலைப்பிட்டு 13 கட்டுரைகள் எழுதியுள்ளார். இதுவும் படிப்பவர்களைச் சிந்திக்கவைப்பதோடு, சிந்தனையில் ஒரு தெளிவையும உண்டாக்கும்.

மகாபாரதக் கதையும் மூன்று கீதைகளும்

மகாபாரதக் கதைக்கு 'ஜெயா' என்று ஒரு பெயர் உண்டு. இந்திய சமூகத்தின், பண்பாட்டு நினைவுகளும், பொருளாதாரம் சார்ந்த மாற்றங்களும், அதன் நினைவு களும் ஒன்றினைக்கப் பெற்ற ஒரு ஆவணம் என மகாபாரதக் கதையைக் கூறலாம்.

இது ஒரு வரலாறு கூறும் நூல் அல்ல. சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் எழுதப்பெற்றதாக ஒரு பொதுக்கருத்து உண்டு. பழைமையான வேதங்களைத் தொகுத்துக் கொடுத்த வியாசர் என்பவரே இந்த மகாபாரதக் கதையை எழுதியவர்.

கதையின் நாயகன் உயிருடன் இருக்கும் காலத்தில் எழுதப்பெற்றவற்றை இதிகாசம் என்கிறோம். இராமன் உயிருடன் இருக்கும்போது வான்மீகி அவனுடைய வரலாற்றை எழுதினார். அதைப் போலவே பாண்டவர் களும் கண்ணனும் உயிருடன் இருக்கும்போது தான் வியாசர் பாரதக் கதையை எழுதினார். எனவேதான் இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் இதிகாசங்கள் என்கிறோம். மற்றபடி இறந்து போனவர்களைப் பற்றிப் பின்னாளில் செய்திகள் சேரிக்கப்பெற்று எழுதப் பெறுபவை புராணங்கள் எனப்பெறும்.

பகவத் கீதையைப் படித்தறிய விரும்புகிறவர்கள் கீதையை மட்டும் படிப்பதால் பயன் ஒன்றும் இல்லை. முழுமையான மகாபாரதக் கதையையும் ஒருமுறை படிக்கவேண்டும். அதில் கூறப்பெற்றுள்ள ஏராளமான துணைக் கதைகளை எல்லாம் படிக்கவேண்டும். அவைகளில் எல்லாம் வெறும் கதை மட்டும் சொல்லப் பெறவில்லை. பல நீதிகளை விளக்கிக் கதையாக, படிக்கச் சுவையாக எழுதப்பெற்றுள்ளன.

இங்கு மகாபாரதக் கதையை முழுமையாகக் கூறமுடியாது. தலைப்புகளை மட்டும் குறிப்பிட்டுள்ளேன் ஆர்வமுள்ளவர்கள் பாரதக் கதைப் புத்தகத்தைப் படித்து முழுமையான கதைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுகிறேன்.

மகாபாரதத்தைத் தமிழில் பெருந்தேவனார், வில்லிபுத்தூரார், அரங்கநாதக்கவிராயர், நல்லாப்பிள்ளை ஆகியோர் பாடியுள்ளனர். மேலும் பாரதியாரின் பாஞ்சாலி சபதம், சோமசுந்தரபாரதியின் மாரிவாயில், புகழேந்திப் புலவரின் நளவெண்பா, அதிவீரராம பாண்டியனின் நைடதம், குசேலோபாக்கியானம், அரிச்சந்திரபுராணம் ஆகியவையும் பாரதக் கதையைச் சேர்ந்தவைகள்தான். மேலும் வியாசரின் மகாபாரதத்தைத் தமிழ்மொழி மாற்றம் செய்து பலரும் எழுதியுள்ளனர். அவைகளில் ஸ்ரீ மகாபாரதம்-ம.வீ. இராமானுஜாச்சாரி யார், வியாசர் விருந்து-மகாபாரதம்-சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரி-ராஜாஜி-மகாபாரதம்-அ.லெ. நடராஜன், வியாசர் பாரதம்-மிழலைத் தண்டன், தபோவனப்பதிப்பு ஆகியவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, நகர்ப்புறங் களிலும், கிராமப்புறங்களிலும் ஆங்காங்கே திரௌபதி அம்மன் கோயில்கள் இருப்பதைக் காணலாம். இக்கோயிலில் அரவானின் தலை சுதைச் சிற்பம் இருக்கும். இக்கோயில்களில் தீமிதித் திருவிழா நடத்துவார்கள். இத்திருவிழாவை முன்னிட்டு வசதிக் கேற்றவாறு சில நாட்களுக்கு மகாபாரதக் கதையைத் தகுந்த அறிஞர்களைக் கொண்டு சொல்லச் செய்வார்கள். பின்னர், மாடுபிடி சண்டை, அருச்சுனன் தபசு, அரவான் களப்பலி, திரௌபதி கூந்தல் முடிதல் போன்ற நிகழ்வுகளைத் திருவிழாவாக நடத்துவார்கள். இவ்விடங் களில் கதை சொல்பவர்கள். வில்லிபுத்தூராரின் மகாபாரத நூலையே துணையாகக் கொண்டு சொல்வார்கள்.

வியாசரின் மகாபாரதக் கதையில் இல்லாத ஒன்று அரவான் களப்பலி. கம்பர் தன்னுடைய இராமாயணத்தில் இரணியன் கதையை இணைத் திருப்பதைப் போல வில்லிப்புத்தூரார் இக்கதையை இதில் இணைத்துள்ளார். (விரிவான செய்திகளுக்கு-அரவான் களப்பலி-இசை நாடகம்-சரசுவதி மகால் நூலக வெளியீட்டுப் புத்தகத்தைப் பார்க்கவும்.) ஆக மகாபாரதக் கதை கோயில் விழாக்களாக மட்டுமின்றி, தொழில்முறை நாடகக் கலைஞர்களாலும், கிராமப்புறக் கலைஞர் களாலும் பல பிரிவுகளாக நாடகவடிவில் நடத்தப் பெற்றும் வருகின்றன. எனவே மகாபாரதக் கதையைத் தமிழ் மக்கள் பன்னெடுங்காலமாக அறிந்தே வைத்துள்ளனர் என்பது தெளிவாகத் தெரியும். பக்தி இயக்கம் மிகவும் தீவிரமாக வளரத்தொடங்கியபோது இந்த இதிகாச பாத்திரங்கள் கடவுளாக, வழிபாட்டிற்கு உரியவர்களாக மாறிவிட்டனர்.

1. ஆதி பருவம்

வியாசர் இந்த மகாபாரதக் கதையைச் சொன்னார். வியாசருடைய புதல்வர் ஜனமேஜயன். இந்த ஜனமே ஜயன் மகாராஜாவுக்கு வைசம்பாயனர் கூறுவதாக வருவது இக்கதை. வியாசரால் சொல்லப்பெற்ற போது விநாயகரால் எழுதப்பெற்றது.

இருபத்தோராயிரத்து எண்ணூறு ரதங்கள், இதே அளவு யானைகள், ஒரு லட்சத்து ஒன்பதாயிரத்து முன்னூற்றைம்பது காலாட்படை, அறுபத்தையாயிரத்து அறுநூற்றுப் பத்து குதிரை கொண்டது ஒரு அக்ரோணி, தேவலோகத்து நாய் பொரமேயன் கதை, உதங்கர் குண்டலங்கள் கொண்டுவந்த கதை, ஜனமே ஜயன் சர்ப்ப யாகம் செய்தல், டுண்டுபம் என்ற பாம்பின் கதை இதில்

பிராணிகளுக்குத் துன்பம் செய்யக்கூடாது என்ற நீதி கூறப்பெறுகிறது. பரீட்சித்து மன்னன் கதை, விதி வலியது என்ற நீதியைக் கூறும் கதை, ஜனமே ஜயன் சர்ப்ப யாகம் செய்தல்.

தேவர்களின் குரு பிரகஸ்பதி. அசுரர்களின் குரு சுக்கிராச்சாரி, சுக்கிராச்சாரிக்கு இறந்தவர்களை உயிர்ப் பிக்கும் சஞ்சீவினி மந்திரம் தெரியும். ஆனால் பிரகஸ்பதிக்கு இம்மந்திரம் தெரியாது. பிரகஸ்பதியின் மகன் கசன். இவன் சுக்கிராச்சாரியின் மகளான தேவயானியின் மீது காதல் கொண்டான். தேவயானியும் கசனைக் காதலித்தாள். அசுரர்கள் கசனைக் கொன்று எரித்து சாம்பலாக்கி மதுவில் கலந்து சுக்கிராச்சாரிக்குக் குடிக்கக் கொடுத்தனர். தேவயானியின் வேண்டு கோளின்படி கசனை உயிர்ப்பிக்க ஒப்புகொண்ட சுக்கிராச்சாரி, கசனை உயிர்ப்பித்தால் தான் இறந்து விடுவோம் என்பதால் முதலில் கசனுக்கு, அவன் தன் வயிற்றில் இருக்கும்போதே சஞ்சீவினி மந்திரத்தைக கற்றுக்கொடுத்துவிட்டு, கசன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியில் வந்து இறந்துபோன சுக்கிராச் சாரியை சஞ்சீவினி மந்திரத்தால் உயிர்ப்பித்தான். இதைவிட மதுவினால் வரும் கேட்டைப்பற்றி நன்றாக கதை சொல்லமுடியுமா பாருங்கள். தொடர்ச்சியாக சர்மிஷ்டை என்பவள் தேவயானியைக் கிணற்றில் தள்ளிவிட்ட கதை, கிணற்றில் விழுந்த தேவயானியை யாயாதி என்ற மன்னன் காப்பாற்றினான். இங்கு பிராமண குலம் உயர்வானது என்ற ஒரு செய்தி உள்ளது. யாயாதி தேவயானியைத் திருமணம் செய்துகொண்டான். புத்திரனைப் பெறுவதற்கும் கணவரைப் பேணுவதற்கும் தான் பிர்மன் பெண்களைப் படைத்திருக்கிறான் என்ற ஒரு செய்தியும் இங்கு வருகிறது. யயாதி சர்மிஷ்ட்டை

என்பவளையும் திருமணம் செய்து கொண்டார். தேவயானிக்கு 'யது', 'துர்வசு' என இரு பிள்ளைகளும் சர்மிஷ்ட்டைக்கு த்ருக்யு, அணு, பூரு என்ற மூன்று பிள்ளைகளும் பிறந்தார்கள். யாயாதி சாபத்தால் முதுமையை அடைந்தான். யாராவது யாயாதியின் முதுமையைப் பெற்றுக்கொண்டால், யாயாதி மீண்டும் இளமைப் பருவத்தை அடைய முடியும். சர்மிஷ்டையின் மூன்றாவது பிள்ளையாகிய புரு தன் தந்தையின் முதுமையை வாங்கிக் கொண்டு தன்னுடைய இளமையைக் கொடுக்க அந்த யாயாதி ஆயிரம் ஆண்டுகள் இளமையுடன் வாழ்ந்துவிட்டு மறுபடி தன்னுடைய இளமையைப் புருவிடம் கொடுத்துவிட்டு மறுபடி தன்னுடைய இளமையைப் புருவிடம் கொடுத்து விட்டு முதுமையைப் பெற்றான். புருவிற்கே தன்னுடைய நாட்டை, பட்டாபிஷேகம் செய்து வைத்துவிட்டு யாயாதி காட்டிற்குப் போய்விட்டார்.

இது யதுவின் வம்சத்தினர் யாதவர்கள் எனவும் துர்வசுவின் வழியினர் யவனர்கள எனவும், திருக்யுவின் வழித்தோன்றல்கள் போஜர்கள் எனவும், பூருவின் வம்சத்தினர் பௌரவர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். இந்த பூருவின் வழியில் வந்தவன் தான் துஷ்யந்தன். இங்கு அந்தணர்களின் ஆயுதம் கோபம் என்ற ஒரு செய்தி வருகிறது. துஷ்யந்தனுக்கும் கன்வ மகரிஷியின் மகளான சகுந்தலைக்கும் திருமணம் ஆனது. பரதன் எனும் பிள்ளை பிறந்தான். இவனுடைய வழித்தோன்றல் தான் சந்தனு என்பவன். அஸ்தினாபுரம் இவனது நாடு. இவனே கங்காதேவியை மணந்தவன். இவர்களுக்கு எட்டாவதாகப் பிறந்த பிள்ளை தேவ விரதன் எனும் காங்கேயன். சந்தனு ராஜா சத்யவதி என்ற ஒரு செம்படவப் பெண்ணை மணந்தார். காங்கேயன் தன் பட்டத்து

உரிமையைத் துறந்து பீஷ்மர் என்ற பெயரைப் பெற்றார். பீஷ்மர் என்ற சொல்லுக்குச் செயற்கரிய செயலைச் செய்தவர் என்பது பொருள். நீ விரும்பும்போதுதான் உன் உயிர்போகும் என்ற வரத்தைக் கொடுத்தவர் பீஷ்மரின் தந்தை சந்தனு. சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் பிறந்த பிள்ளைகள், சித்ராங்கதன், விசித்ர வீரியன்.கந்தர்வ நாட்டு மன்னனுடன் நடந்த போரில் சித்திராங்கதன் மாண்டான்.

காசிராஜனின் புத்திரிகள், அம்பை, அம்பாலிகை, அம்பிகை, அம்பை, சௌபால நாட்டு மன்னன் சால்வனைக் காதலித்தாள். எனவே அம்பாலிகை, அம்பிகை ஆகிய இருவரையும் விசித்திர வீரியன் திருமணம் செய்துகொண்டான். அம்பையை சால்வன் திருமணம் செய்துகொள்ள மறுத்துவிட்டான். பீஷ்மரும் திருமணம் செய்துகொள்ள மறுத்து விட்டார். எனவே கோபம் கொண்ட அம்பை, தனக்கு ஆறுமுகக் கடவுளால் கொடுக்கப்பட்ட மாலையை, பாஞ்சால நாட்டு மன்னன் துருபதனின் அரண்மனை வாசலில் எறிந்துவிட்டு, இந்த மாலையை அணிபவன் பீஷ்மரைக் கொல்வான் எனச் சாபம் இட்டுவிட்டுப் போனாள். இதன் காரணமாக பீஷ்மருக்கும் பரசுராமனுக்கும் போர் நடந்தது. இறுதியில் அம்பை தீயில் விழுந்து உயிரை விட்டாள். அடுத்த பிறவியில் துருபதன் மகளாகப் பிறந்தாள். சிகண்டி என்று பெயர். அவளே அந்த மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டாள். இவன் வேண்டும்போது தன் பெண் வடிவை ஒரு ஆணுக்குக் கொடுத்துவிட்டு அந்த ஆணின் வடிவைப் பெறும் வரத்தைப் பெற்றவள். ஒரு கந்தர்வனிடம் தன்னுடைய பெண்ணுருவைக் கொடுத்துவிட்டு ஆண் உருவைப் பெற்றான் சிகண்டி. சிகண்டியின் கதை பெரியது.

விசித்திர வீரியன் பிள்ளைப்பேறு இல்லாமலேயே நோய்வாய்ப்படடு மாண்டான். சத்தியவதிக்கும் சந்தனுவுக்கும் திருமணமாவதற்கு முன் பராசர முனிவருடன் கூடி பெற்ற பிள்ளை வியாசர். விதவை களான அம்பாலிகை, அம்பை ஆகியவர்களுடன் கூடி, அம்பிகையின் மகனாக கண் பார்வையற்ற திருதராட்டிர னையும், அம்பாலிகையின் மகனாக பாண்டு என்ற உடல் வெண்ணிறம் கொண்ட பிள்ளையும் பிறந்தார்கள். பின்னர் வியாசர் அரண்மனைப் பணிப்பெண் ஒருத்தியுடன் கூட, விதுரன் பிறந்தார்.

காந்தார நாட்டு மன்னன் மகள் காந்தாரிக்கும் திருதராட்டிரனுக்கும் திருமணம் நடந்தது. காந்தாரி சிவபெருமானிடம் நூறு பிள்ளைகளைப் பெறுவதற்கான வரத்தைப் பெற்றவள் காந்தாரியின் சகோதரன்தான் சகுனி.

சூரன் என்பவன் யதுகுல மன்னன். இவனுடைய மகள் குந்தி, மகன் வசுதேவன். இந்த குந்தி துர்வாச முனிவர் கற்பித்த வரத்தைக் கொண்டு, கன்னிப் பெண்ணாக இருந்தபோது சூரியனை வேண்ட, சூரியனின் மூலம், கவச குண்டலத்துடன் கூடிய ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, பழிக்கு அஞ்சி ஆற்றிலே விட்டு விட்டாள். அந்தக் குழந்தையை தேர்ப்பாகன் ஒருவன் எடுத்து வளர்த்தான். அவன்தான் கர்ணன். கர்ணன் என்ற சொல்லுக்குப் பெருத்த செல்வ முடையவன் என்று பொருள். இந்த குந்தியை பாண்டு திருமணம் செய்துகொண்டார். இரண்டாவதாக மாத்ர நாட்டு மன்னன் சல்லியனின் சகோதரியாகிய மாத்ரி என்பவளையும் திருமணம் செய்துகொண்டார். இப்போது அஸ்தினாபுரத்துக்கு மன்னன் பாண்டுதான். மான் வடிவில் இருந்த கிந்தம முனிவரின் சாபத்தால்

பாண்டு தன் மனைவியருடன் கூட முடியாத நிலையை அடைந்தார். பாண்டுவின் அனுமதியின் பேரில் குந்தி, தர்மதேவதையை வரவழைத்து அவன் மூலம் ஒரு பிள்ளையைப் பெற்றாள். அப்பிள்ளையின் பெயர் யுதிஷ்ட்ரன்.

குந்திக்குப் பிள்ளை பிறந்து விட்டான். தனக்குப் பிறக்கவில்லையே என இரண்டு வருட காலமாக கர்ப்பமாகவே இருந்த காந்தாரி தன் வயிற்றில் அடித்துக் கொள்ள ஒரு பிண்டம் வெளியே வந்தது. வியாசரின் அருளால் அது நூற்றி ஒரு பிள்ளைகள் ஆயிற்று அதில் முதல் பிள்ளை துரியோதனன். ஒன்று மட்டும் பெண், அதன் பெயர் துச்சலை, திருதராஷ்ட்டிரனுக்குப் பணிவிடை செய்துவந்த பெண்ணுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அதன் பெயர் யுயுத்சு. ஆக திருதராட்டிரனுக்கு நூற்றிரண்டு பிள்ளைகள். பின்னர் பாண்டுவின் வேண்டுகோளின்படியே குந்தி, வாயு தேவனை வேண்டி ஒரு பிள்ளையைப் பெற்றாள் அவனே பீமன். குந்திதேவி இந்திரனை வணங்கிப் பெற்றபிள்ளைதான் அருச்சுனன். ஒரு பெண் நான்காவது புத்திரனைப்பெறக்கூடாது. கற்புடையவனுக்கு அழகல்ல. ஐந்தாவது புத்திரனைப் பெறும் பெண் வேசிக்குச் சமம். இது குந்தியின் வாக்கு. எனவே குந்தி தனக்கு தெரிந்த மந்திரத்தை, தன்னுடைய சகக்கிழத்தியாகிய மாத்ரிக்குக் கற்பிக்க, அம்மாத்ரி அஸ்வினி தேவர்களை வேண்டி இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். அவர்களே நகுலன், சகாதேவன். இவ்வைந்து பேரையும் பாண்டவர்கள் என்று அழைத்தார்கள். காமவசப்பட்ட காரணத்தால் பாண்டுவும், மாத்ரியும், மாண்டனர். பாண்டவர்கள் முதலில் சுகன் என்பரிடம் வில்வித்தை பயின்றார்கள். சத்தியவதி தனது மருமகள் களாகிய அம்பிகை, ஆம்பாலிகை ஆகிய இருவரையும் அழைத்துக்கொண்டு கானகம் போனாள்.

பீமனின் பலத்தைக் கண்ட துரியோதனன் சிறு வயதிலேயே பொறாமை கொண்டு அவளைக் கொன்றுவிட முயற்சி செய்தான். இதற்கு சகுனியும் துணையாக இருந்தார்.

கௌதம மகரிஷியின் மகன் சரத்வான். இவனுடைய தவத்தைக் கெடுக்க இந்திரனால் அனுப்பப் பெற்ற ஜாலவதி என்னும் தேவ கன்னிகைக்கும் பிறந்தவர் கிருபன். இவருடைய சகோதரி கிருபி. இவர்தான் பாண்டவர்களும், கௌரவர்களும் வில்வித்தை கற்றார்கள்.

பரத்வாசருக்கும் கிருதாசி என்வனுக்கும் பிறந்தவர். துரோணம் என்னும் குடத்தில் பிறந்ததால் அதற்கு துரோணர் என்று பெயர். துரோணர் கிருவரின் தங்கை கிருவியை மணந்து கொண்டார். இவர்களுக்குப் பிறந்த பிள்ளை அசுவத்தாமன். பரசுராமனிடமிருந்து துரோணர் வில்வித்தை கற்றார். பால்ய நண்பனான பாஞ்சால நாட்டு மன்னன் தனக்கு உதவி செய்யாததால் கோபமடைந்தார். கிணற்றிலிருந்து பந்தை எடுத்த கதை, பின்னர் துரோணர் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஆசிரியர் ஆனார். அருச்சுனனிடம் சிறப்புக் கவனம் செலுத்தி பயிற்சியளித்த துரோணர் ஏகலைவனிடம் அவனுடைய கட்டைவிரலைக் குரு காணிக்கையாகப் பெற்றதன் மூலம் அருச்சுனனுக்கு இணையான வில்லாளி இல்லை என்ற நிலைமை உருவாக்கினார்.

அரங்கேற்ற நிகழ்ச்சியில் அவமானப் படுத்தப்பட்ட கர்ணனை அங்கதேசத்துக்கு அதிபதியாக்கினான் துரியோதனன். இந்தச் சமயத்தில் குந்திதேவி கர்ணனைத் தன் மகன் என அடையாளம் கண்டு கொண்டாதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. துரோணர் தனது சீடர்களைக்

கொண்டு துருபதனை வெற்றிகொள்ளச் செய்தார். இதனால் மனம் வெந்துபோன துருபதன் துரோணரை எப்படியும் அழிக்க எண்ணினான். இதற்காக செய்த யாகத்தில் பிறந்தவர்கள் திருஷ்ட்டத்யூமனும், கிருஷ்ணையும்.

சகுனியின் மந்திரியாகிய கணிகன் என்பவன் திருதராட்டிரனுக்குப் பாண்டவர்களை வெல்வதற்கான வழியைச் சொன்னான். திருதராட்டினின் சூழ்ச்சியின்படி பாண்டவர்கள் வரணாவதம் என்ற நாட்டிற்குச் சென்றார்கள். புரோசனன் என்பவனின் உதவியால் அரக்கு மாளிகையை அமைத்து பாண்டவர்களைக் கொல்ல முயற்சித்த துரியோதனனின் சதி விதுரன் மூலம் முறியடிக்கப்பட்டு பாண்டவர்கள் உயிர் தப்பினர். தப்பிச் சென்ற பாண்டவர்கள இடிம்பன் என்னும் அரக்கன் வாழும் காட்டுப்பகுதிக்குச் சென்றார்கள். பீமன் இடிம்பனைக் கொன்று அவன் தங்கையாகிய இடிம்பியைத் திருமணம் செயது கொண்டான். இவர்களின் பிள்ளை கடோத்கஜன். பின்னர் பகாசுரன் என்பவனைப் பீமன் கொன்ற கதை: பிராமணர் ஒருவர் மூலம் பாஞ்சால நாட்டில் கிருஷ்ணையின் சுயம்வரம் நடக்க இருப்பதை அறிந்து பாஞ்சால நாட்டில் கிருஷ்ணையின் சுயம்வரம் நடக்க இருப்பதை அறிந்து பாஞ்சால நாட்டிறகுப் புறப்பட்டனர். வழியில் அங்காபரணன் என்ற கந்தர்வன் கதை:- தௌமியர் என்பரைப் புரோகிதராகக் கொண்டார்கள். பின்னர் பாஞ்சால தேசத்திற்கு வந்து சுயம் வரத்தில் பிராமணர்கள் வடிவிலேயே கலந்து கொண்டார்கள். அங்கே பலராமரும் ஸ்ரீகிருஷ்ணனும் வந்திருந்தார்கள். இவர்கள் பாண்டவர்கள் அங்கு வந்திருப்பதை அறிந்து கொண்டார்கள்.

அர்ச்சுனன் போட்டியில் வென்று திரௌபதியுடன் தன் சகோதரர்களுடன் குந்தியின் இருப்பிடம் வந்து, "அம்மா நாங்கள் இன்று ஒரு சிறந்த பிச்சையை கொண்டு வந்திருக்கிறோம்" என்று கூற வீட்டின் உட்புறத்தில் இருந்தபடியே குந்திதேவி, "அப்படியா அதனை நீங்கள் ஐவரும் ஒன்று சேர்ந்து சாப்பிடுங்கள்" என்று கூறினாள். இங்கேதான் முதன்முதலில் ஸ்ரீகிருஷ்ணன் தனது தமையனார் பலராமருடன் வந்து பாண்டவர்களைச் சந்திக்கிறார். வியாசரின் முயற்சியால் பாண்டவர் ஐவருக்கும் மனைவியாக திரௌபதி திருமணம் செய்து வைக்கப்பட்டாள். இந்த திருமணத்திற்கு ஸ்ரீகிருஷ்ணன் பல பரிசுப்பொருட்களை அனுப்பி வைத்தார்.

பாண்டவர்கள் உயிரோடுதான் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்ட துரியோதனன் முதலா னவர்கள் அவர்கள் மீது படையெடுத்து தோற்றுப்போய், அவர்களைக கொன்றுவிட திட்டம்போட்டார்கள. ஆனால் அது ஆகாத காரியம் என்று முடிவு செய்து விதுரனை அனுப்பி பாண்டவர்களை அஸ்தினாபுரத் திற்கு அழைத்துவரச் செய்தார்கள். துரியோதனன் காசி நாட்டு மன்னன் மகளைத் திருமணம் செயது கொண்டான். தருமருகுப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார்கள். பாண்டவர்கள் காண்டவப் பிரஸ்தம் என்ற நாட்டிற்கு புறப்பட்டுச் சென்றார்கள். ஸ்ரீ கிருஷ்ணனின் அருளால் இந்திரப் பிரஸ்தம் என்ற நகரம் உருவாக்கப் பெற்று அங்கு பாண்டவர் இருக்க ஸ்ரீ கிருஷ்ணர் விடை பெற்றுச் சென்றார். நாரதர் வருகை, சுந்தன், உபசுந்தன் கதையைக் கூறி பாண்டவர்கள் தங்களுக்குள் விரோதம் வராதபடி ஒவவொருவரும் திரௌபதியுடன் ஒவ்வொரு வருடம் இல்லறம் நடத்த வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தி விட்டுச் சென்றார்.

தருமரும் திரௌபதியும் இருக்கும் அறைக்குள் அர்ச்சுனன் போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, அதன் காரணமாக அர்ச்சுனன் வனவாசம் செல்ல நாக கன்னியை மணந்து அரவான் என்ற பிள்ளையைப் பெற்றார்கள். நாக கன்னிகையின் பெயர் உலூபி. பின்னர் அர்ச்சனன், சித்ராங்கதை என்பவளைத் திருமணம் செய்து கொண்டான். இவர்களுக்குப் பிறந்த பிள்ளை "பப்ருவாகனன்". கண்ணனின் சகோதரியாகிய சுபத்திரையைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அர்ச்சுனன் விரும்பினான். இதற்குக் கண்ணனும் உடன்பட்டான். கண்ணனின் அண்ணனாகிய பலராமருக்குத் தெரியாமல் அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் திருமணம் நடந்துவிட்டது. பலராமன் கோபமடைந்தார். கண்ணன் அவருடைய கோபத்தை நீக்கினான். சுபத்திரைக்கும் அர்ச்சுனனுக்கும் ஒரு பிள்ளை பிறந்தது அவன்தான் அபிமன்யு.

இதற்குப் பிறகு திரௌபதிக்குப் பாண்டவர்கள் மூலமாக ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள். பிரிதி விந்தியன், சுரதசோமன், சுதகர்மா, சதானீகன், சுதசோனன் என்பது அவர்களின் பெயர்கள். பின்னர் அர்ச்சுனனும் கண்ணனு மாகச் சேர்ந்து காண்டவ வனத்தை எரித்தனர். இதன் மூலம் இந்திரனிடமிருந்து காண்டீபம் என்ற வில்லும் வற்றாத அம்புகளையுடைய அம்பாராத்துணியும், அநுமக் கொடியும் கிடைக்கப்பெற்ற அருச்சுனனும் அவனுடன் கூட நட்பாய் இருக்கவேணுமென்ற வரத்தைக் கண்ணனும் பெற்றார்கள். இக்காண்டவ வனம் எரிந்த போது நான்கு பறவைகள் மட்டும் உயிர் தப்பின. இத்துடன் ஆதி பருவம் நிறைவடைகிறது.

2. சபா பருவம்

மயன் அர்ச்சுனனுக்கு தேவதத்தம் என்ற சங்கினையும், பீமனுக்கு கதாயுதம் ஒன்றையும் கொடுத்து பின் ஒரு மாளிகையையும் கட்டிக் கொடுத்தான். நாரதர் வந்தார். இந்திரன், வருணன், யமன் ஆகியோரின் சபைகளைப் பற்றிக் கூறினார். அரிச்சந்திரனின் வரலாற்றைக் கூறி ராஜ சூய யாகம் செய்யும்படிக் கூறினார். இதைப் பற்றி தருமர் கண்ணனிடம் கேட்ட போது அவர் ஜராசந்தனின் கதையைக் கூறினார். கண்ணனிடம் கேட்டபோது அவர் ஜராசந்தனின் கதையைக் கூறினார். கண்ணனின் உதவியால் பீமன் ஜராசந்தனைக் கொன்றான். இதற்கிடையில் கண்ணன் பிறந்த கதையும், கம்சனைக் கொன்ற விபரம் உள்ளது.

ராஜசூய யாகம் செய்வதற்காக, பல நாடுகளையும் வென்று வர வேண்டி அருச்சுனன் வடதிசை நோக்கியும் பீமன் கிழக்குத்திசை நோக்கியும் சென்றார்கள். சகாதேவன் கிழக்கு திசைக்கும், சகாதேவன் சோழ நாட்டை வந்தடைந்த செய்தியில் காவிரி ஆறும் அதன் சிறப்பும் கூறப்பெறுகிறது. கடோத்கஜன் இலங்கைக்குச் சென்று விபீஷனனுடன் நட்புடன் கப்பம் பெற்றான். நகுலன் மேற்கு திசை நோக்கிச் சென்று பல நாடுகளை வென்று நால்வரும் இந்திரப் பிரஸ்தம் திரும்பினார்கள். ராஜசூய யாகம் நடந்தது, துரியோதனன் முதலானவர் களும் வந்திருந்தனர். யாகத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு முதல் மரியாதை செய்யப்பெற்றது. சிசுபாலன் என்ற சேதி நாட்டு மன்னன் இதனை எதிர்த்தான். இப்போது ஸ்ரீகிருஷ்ணனின் பெருமையைக் கூறும் வகையில் வராக அவதாரம், நரஸிம்ம அவதாரம், வாமன அவதாரம், தத்தாத்ரேய அவதாரம், பரசுராம அவதாரம், இராமா வதாரம், கிருஷ்ணாவதாரம் ஆகிய கதைகள் கூறப்

பெறுகிறது. பின்னர் சிசுபாலனின் வரலாறும் அவன் கண்ணனால் கொல்லப்படுவதுமான கதை, யாகத்திற்கு வந்திருந்த வியாசர் பதின்மூன்று ஆண்டு காலம் தீய காலம் வரப்போகிறது என முன் எச்சரிக்கை செய்தார்.

யாகத்திற்கு வந்த துரியோதனன் அரண்மனையைச் சுற்றிப் பார்க்கும்போது பலராலும் அவமானப்படுத்தப் பட்டான். பாஞ்சாலி சிரித்தாள் என்ற செய்தி இல்லை. பின்னர் வருகிறது, பொறாமை கொண்ட துரியோதனன் சகுனியினால் சூதாட்டத்திட்டம் தீட்டுகிறான். பின்னர் விதுரர் போய் பாண்டவர்களைத் திரியோதனன் அழைத்ததாகக் கூறி அங்கு சூதாட்டம் ஆடவேண்டும் எனவும் தெரிவிக்கிறார். சூதாட்டம் நடந்தது. எல்லாப் பொருட்களையும் தம்பிமார்களையும் சூதில் இழந்த தருமர் திரௌபதியையும் பணயமாக வைத்து இழந்தார் தருமர். துர்ச்சாதனன், திரௌபதியின் மேலாடையைச் சபையில் நிறுத்திப் பிடித்திழுத்தான். ஸ்ரீ கிருஷ்ணனின் அருளால் மேலாடை வளர்ந்தது. பாண்டவர்கள் சபதம் செய்தார்கள். சமாதானப் பேச்சு நடந்தது. பாஞ்சாலி கேட்ட வரத்தின்படி அனைவரும் விடுதலையாகி பாஞ்சாலியும் பாண்டவர்களும் தங்கள் நாட்டை அடைந்தார்கள். கார்த்த வீரியன் கதை, மறு சூதாட்டம் நடக்கிறது, பாண்டவர்கள் திரும்பி வந்து மறுமுறை சூதாடி நாட்டைத் தோற்று பாண்டவர்கள் வனவாசம் புறப்பட்டார்கள்.

3. வன பருவம்

பாண்டவர்கள் வனவாசம் செல்லும்போது சில அந்தணர்களும் உடன் சென்றார்கள். சூரியனை வழிபட்டு தருமர் அட்சயபாத்திரத்தைப் பெற்றார். திருதராஷ்டிரனுக்கும் விதுரனுக்கும் ஏற்பட்ட

விரோதத்தின் காரணமாக விதுரர் நாட்டை விட்டு காட்டிற்குப் போய்விட்டார். மன்னன் தன்னிடத்தில் உள்ள பொருளைக் கொண்டு திருப்தி அடையவேண்டும். மற்றவர்களின் பொருளின் மேல் ஆசைப்படக்கூடாது. வியாதியுள்ளவனுக்கு பத்தியம் சுவை தராது. இவை விதுரனின் பொன்மொழிகள், பாண்டவர்கள் தங்கியிருந்த காம்யகவனத்தில் இருந்த கிர்மீரன் என்பவனைப பீமன் கொன்ற கதை, சூதாட்டம் நடந்த சமயத்தில் கண்ணன், சிசுபாலனின் தம்பியாகிய சால்வனைக் கொல்வதற்காக நாட்டைவிட்டு வெளியில் போயிருந்தேன் என்று சமாதானம் கூறும் செய்தி, இந்திரனின் சொல்படி அருச்சனன் சிவனை வழிபட்டு, வேடன் வடிவில் சிவன் வந்தது, அர்ச்சுனன் வில்லால் அடித்தது, பின்னர் சிவபெருமான் அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுத்த செய்தி, இந்திரனுடன் இந்திரலோகம் சென்ற அருச்சுனனுக்கு ஊர்வசி மூலம் பேடியாகும் சாபம் கிடைத்தது.

நிடதநாட்டு மன்னன் நளன் கதை, பிருகத் முனிவரால் தருமரிடம் கூறப்பட்டது. நாரதர் வருகை, இந்திரலோகத்திலிருந்து லோமேச முனிவர் என்பவர் வந்து பாண்டவர்களைத் தீர்த்த யாத்திரை மேற கொள்ளும்படிக் கூறினார். முதலில் தென்திசை நோக்கிச் சென்றார்கள். அகஸ்தியரின் ஆசிரமத்திற்கு வந்தார்கள். அகஸ்தியருக்கும் உலோப முத்திரை என்பவனுக்கும் திருமணம் ஆனது. இல்வலன் என்ற அசுரனின் தம்பி வாதாபி இருவரையும் அகத்தியர் அழித்த கதை. இத்ம வாகன் என்பவன் அகத்தியருக்கும் உலோபமுத்திரைக்கும் பிறந்தவன். ஜமதக்கினி முனிவரின் மனைவி ரேணுகை இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். கடைசிப்பிள்ளை பரசுராமர். இவன்தான் தந்தையின் கட்டளைப்படி

தாயின் தலையை வெட்டியவன். கார்த்தவீரியன் என்பவனைப் பரசுராமன் கொன்றான். கார்த்த வீரியனின் பிள்ளைகள் அகத்தியரைக் கொன்றுவிட பின் பரசுராமன் கார்த்த வீரியனின் பிள்ளைகளைக் கொன்றதோடு க்ஷத்திரிய மன்னர்களையும் கொல்ல ஆரம்பித்தார். ஸ்ரீகிருஷ்ணனும் வசுதேவரும் பாண்டவர்களைச் சந்தித்து விட்டுப் போனார்கள். சிபிச்சக்கரவர்த்தியின் கதை; லோமேசாபில் கூறப்பட்டது. கைலாச யாத்திரை, பீமன் அநுமனைக் கண்ட கதை, அநுமன் பீமனுக்கு விஸ்வரூபம் காட்டியது. திரௌபதி வேண்டிய ஒரு மலரை பீமன் கொண்டு வந்து கொடுத்த விவரம். அந்தணன் வடிவில் இருந்து சமயம் கிடைத்தபோது ஆயுதங்களையும், திரௌபதி, தருமர், நகுலன் ஆகியோரை அபகரித்துச் செல்ல முயன்ற ஜடாசுரன் என்ற அசுரன் பீமனால் கொல்லப்பட்டான். மணிமான் என்ற அரக்கன் பீமனால் கொல்லப்பட்டான். குபேரனின் சாபம் நீங்கியது, இந்திரன் வருதல், இந்திரலோகத்தில் இருந்து வந்த அருச்சனன் வந்து சேர்ந்தான். இந்திரனின் விரோதிகளான நிவாத கவசன் வதம் அர்ச்சுனனால் நடந்தது. காம்யக வனத்தில் ஆறு ஆண்டுகளும், கந்தமாதன மலையில் நான்கு ஆண்டுகளும் ஆக பத்து ஆண்டுகள் வனவாசம் ஆயிற்று. நகுஷன் என்ற பாம்பு வடிவில் இருந்த ராஜரிஷி சாபவிமோசனம் பெற்ற கதை- இது திருவிளையாடல் புராணத்திலும் உள்ளது. கண்ணனும் சத்யபாமாவும் வருகை-மார்க்கண்டேயர் வருகை, வயது இருபத்தைந்து, நாரதரும் வந்தார் அத்ரி மகரிஷி கதை, கொக்கென்று நினைத்தாயோ கதை, மாமிசக்கடை நடத்திய தர்மவான் கதை, உயிர்க்கொலை இல்லாத தொழிலே இல்லை என்றார், திரௌபதி சத்யபாமா உரையாடல்- கணவனை வசியப்படுத்துவது எப்படி என்பது, கணவன் ஊரில் இல்லாதபோது மலர் சூடி அலங்கரித்துக் கொள்ளாத

மனைவியே உத்தமி, பாண்டவர்களைத் துன்பப்படுத்து வதற்காக துரியோதனன் காட்டிற்குப் போய் கந்தர்வர் களுடன் போரிட, பாண்டவர்களால் காப்பாற்றப்பட்டு, துரியோதனன் நாடு திரும்பிய கதை, அர்ச்சுனனைக் கொல்வேன் என கர்ணன் சபதம் செய்தான். பீஷ்மரின் அறிவுரை, ராஜசூய யாகத்திற்கு சமமான வைஷ்ணவி யாகத்தைத் துரியோதனன் செய்தான். தருமர் கனவில் மிருகங்களைக் கண்டது. வியாசர் வந்து போனார். சாப்பாடு கேட்டு வந்த துர்வாச முனி சொல்லாமலே ஓடிப்போனது. திரௌபதியைக் கடத்திச் சென்ற ஜயத்ரதன் அவமானப்பட்டது. சிவனிடம் வரம்பெற்றது, மார்க்கண்டேயர் தருமரிடம் இராமாயணக் கதையைக் கூறியது. சத்யவான், சாவித்திரி கதை, யாசித்து வந்த இந்திரனுக்குத் தன்னுடைய கவசகுண்டலங்களைக் கொடுத்த கர்ணன் அவனிடமிருந்து சக்தி ஆயுதத்தைப் பெற்ற விபரமான செய்தி. குளத்திற்குத் தண்ணீர் எடுத்துவரச் சென்ற பீமன், அருச்சுனன், நகுலன் சகாதேவன் ஆகிய நால்வரும் மாண்டபின் குளத்தின் உரியவன் யமனின் கேள்விகளுக்குப் பதில் கூறி தருமன் அனைவரையும் பிழைக்க வைத்த கதை. கேள்வி பதில் சிறப்பானவை.

4. விராட பருவம்

விராட நகரில் மறைந்து வாழ்ந்த விபரம்: விராட மன்னனின் சபைத் தலைவராக தருமர், கங்கன் என்ற பெயரிலும், பீமன் வல்லபன் என்ற பெயருடன் சமையற்காரணாகவும், அருச்சுனன் பிருகன்னனை என்ற பெயருடன், அந்தப்புரத்தில் பேடியாகவும், நகுலன் தாமக்கிரந்தி என்ற பெயருடன் குதிரைச் சேவகனாகவும், சகாதேவன், தந்தரிபாலன் என்ற பெயரில் திரௌபதி,

அரசகுலப் பெண்டிற்கு அலங்காரம் செய்பவளாகவும் சேர்ந்தார்கள். தங்களுடைய ஆயுதங்களை, சுடுகாட்டில் உள்ள ஒரு வன்னி மரத்தில் மறைத்து வைத்தார்கள். கீசகனை பீமன் கொன்ற வரலாறு: துரியோதனன் தூதர்களை அனுப்பி பாண்டவர்களின் இருப்பிடத்தைக் கண்டறிந்து வரச்சொன்னான். பசுக்கூட்டங்களைக் கவர்ந்து சென்ற சுசர்மா என்பவனைப் பீமன் வெற்றி கொண்டு பசுக்கூட்டங்களை மீட்டது. துரியோதனன் விராட மன்னனின் பசுக்கூட்டங்களை மீட்டது. துரியோதனன் விராட மன்னனின் பசுக்கூட்ட்ங்களை பிடித்துப்போன கதை-அருச்சுனன் வெளிப்பட்டது. மற்றவர்களும் தாங்கள் யார் என்பதைக் கூற விராடன் தன்னுடைய மகள் உத்தரை என்பவளை அருச்சுனனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

5. உத்தியோக பருவம்

துருபத மன்னன் கட்டளைப்படி ஒரு அந்தணர் துரியோதனனிடம் பாதி நாட்டைக் கேட்க வேண்டி தூதாக அனுப்பப்பட்டார். அருச்சுனனும், துரியோதனனும் கண்ணனைச் சந்தித்து. துரியோதனன் யாதவப் படைகளையும், அருச்சுனன் ஆயுதம் ஏந்திப் போரிடாத கண்ணனையும் போருக்குப்பெற்றது. இந்திரனுக்காக மகாவிஷ்ணு கடல் நுரையில் புகுந்து விருத்திரன் என்பவனைக் கொன்ற கதை. சல்லியன் கர்ணனுக்குத் தேரோட்டியாக இருக்கும் காலத்தில் துரோகம் செய்து கர்ணனைக் கொல்ல உதவுவதாக தருமரிடம் கூறியது. இந்திரன் பாம்பான கதைகள்: துரியோதனன் பக்கமும், தருமர் பக்கமும் போரிட பல மன்னர்கள் கூடிய வரலாறு: தூது சென்ற அந்தணன் பதில் ஏதுமின்றி திரும்பி வந்தான். விதுரன் திருதராஷ்டிரனுக்கு அறிவுரை கூறியது. பீஷ்மர், அர்ச்சுனனும், கண்ணனும் நர நாராயணர்கள என்று

கூறியது. பாண்டவர்களுடன் போர் செய்யாமல் இருப்பதே நல்லது என திருதராஷ்டிரன் துரியோதனனிடம் கூறியது. பாண்டவர்களுக்கு ஊசி முனை அளவு கூட இடம் தரமாட்டேன் எனத் துரியோதனன் கூறினான். சஞ்சயன் திருதராஷ்டிரனிடம் கண்ணன் தூதுவனாக வரப்போகும் செய்தியைத் தெரிவித்தான். கண்ணனும் தூதுவனாக வந்து விதுரனின் வீட்டில் தங்கினான். விருந்துண்டான். துரியோதனனின் சபையில் கண்ணன் தன்னுடைய விசுவரூபத்தைக் காட்டியது. குந்திதேவி கண்ணன் கூறியபடி கர்ணனைச் சந்தித்தது. கர்ணன் உறுதிமொழி கொடுத்தது. போர் தொடக்கம்- பாண்டவர்களின் படைகளுக்குத் திருஷ்டத்யூமனும் கௌரவர்களின் படைகளுக்குப் பீஷ்மரும் படைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள். உலூகனின் தூதுக்குப் பிறகு போர் தொடங்கியது.

6. பீஷ்ம பருவம்

போரில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள்: ஒப்பந்தம்:- வியாசர்-திருதராஷ்ட்டிரனுக்கு போர் நடக்கும் விவரத்தை அரண்மனையில் இருந்தபடியே கூறுவதற்காக சஞ்சயனுக்கு ஞானக்கண் அளித்தது.

போர்க்களத்திறகு வந்த அருச்சுனனுக்குக் கண்ணன் கீதையை அருளியது. போர்க்களத்தில் நடப்பவைகளை சஞ்சயன் திருதராஷ்ட்டிரனுக்குக் கூறிக்கொண்டிருக்கிறான். தருமர், பீஷ்மர், துரோணர் ஆகியோரை வணங்கினார்.

முதல்நாள்போர்:- விராடனின் மகன் உத்தரன் மாண்டான். சுவேததன் மாண்டான்.

இரண்டாம் நாள்:- பாண்டவர்களுக்கு வெற்றியாய் அமைந்தது.

மூன்றாம் நாள்:- அருச்சுனன் பெரிய வெற்றி பெற்றான்.

நான்காம் நாள்:- பாண்டவர்களுக்கு வெற்றி முகம்.

ஐந்தாம் நாள்:- இரு தரப்பினருக்கும் பெரிய வெற்றியோ தோல்வியோ ஏற்பட்டதாக சொல்ல முடியவில்லை.

ஆறாம் நாள்:- சிறப்புச் செயதி ஏதும் இல்லை.

எட்டாம் நாள்:- பீஷ்மரின் தேரோட்டியை பீமன் கொன்றான். துரியோதனனின் தம்பி சுநாபன் என்பவனையும் பீமன் கொன்றான். அர்ச்சுனனின் மகனான அரவான் சகுனியின் தம்பிகளைக் கொன்றான். அலம்புசன் என்பவனால் அரவான் கொல்லப்பட்டான்.

ஒன்பதாம் நாள்:- பாண்டவர்கள் பீஷ்மரிடம் சென்று அவரை எப்படிக்கொல்வது என்று கேட்க, பீஷ்மர் தன்னைக் கொல்ல சிகண்டியை முன்னிருத்தி அர்ச்சுனனுக் கொண்டு அம்பு எய்தச் செய்து கொல்லும்படி அவரே கூறுகிறார்.

பத்தாம் நாள்:- அருச்சுனனின் அம்புகளால் பீஷ்மர் வீழ்த்தப்பட்டார். அம்புப் படுக்கையில் இருந்த அவரது தொங்கிய தலைக்கு அர்ச்சுனனே அம்புத் தலையனையையும், பின்னர் தண்ணீரும் கொடுத்தான். உத்திராயண புண்ய காலத்தின் தான் சாக இருப்பதாக பீஷ்மர் கூறினார்.

பதினோராவது நாள்:- இதுநாள்வரை போரில் கலந்து கொள்ளாமல் இருந்த கர்ணன், தன்னுடைய சபதத்தின்படி இப்போது பீஷ்மர் வீழ்ந்து விட்டதால் இன்று போரிடத தொடங்கினான். பீஷ்மருக்குப் பிறகு துரோணர் படைத்தலைவர் ஆனார்.

பன்னிரண்டாவது நாள்:- தருமர்-துரோணரின் தாக்குதலைத் தாங்க முடியாமல் பயந்து ஓடினார். அருச்சனனின் பிர்மாஸ்திரத்தால் திரிகர்த்தர்கள் மாண்டனர். பகதத்தனின் வைஷ்ணவாஸ்திரத்தைக் கண்ணன் தன் மார்பில் தாங்கி அருச்சுனனைக் காப்பாற்றினார். பின்னர் அருச்சுனன் பகதத்தனைக் கொன்றான்.

பதின்மூன்றாம் நாள்:- துரோணர் அமைத்த பத்மவியூகத்தில், வெளியில் வரத்தெரியாத அபிமன்யு உள்ளே போய், துரியோதனனின் மகனான இலட்சுமணனைக் கொன்றான். துர்ச்சாதனனின் மகனால் அபிமன்யு கொல்லப்பட்டான்.

பதினான்காம் நாள்:- சாத்யகி, அலமபுசனைக் கொன்றான். பின்னர் பூரி சிரவஸ்ஸைக் கொன்றான். அர்சுனன் ஜயத்ரதனைக் கொன்றான். கொல்வதற்கான வாய்ப்பு கிடைத்தபோதும் கர்ணன், சகாதேவனைக் கொல்லாமல் விட்டுவிட்டான். போர் இரவு நேரத்திலும் நடந்துகொண்டிருந்தது. அர்ச்சுனனைக் கொல்வதற்காக, இந்திரனால் கொடுக்கப்பட்ட வைஜயந்தி சக்தி ஆயுதத்தைக் கர்ணன், கடோத்கஜன் பேரில் விடுத்து அவனைக் கொன்றான். கர்ணன் அந்த சக்தி ஆயுதத்தை இழந்தது கண்ணனை மகிழ்ச்சி அடையச் செய்தது.

பதினைந்தாம் நாள்:- துரோணர், விராடனையும், துருபதனையும் கொன்றார். பீமன் அஸ்வத்தாம என்ற யானையைக் கொன்றான். பீமன் அஸ்வத்தாமா மாண்டதாக அறிவிக்க, துரோணர் தமது மகனான அசுவத்தாமன் மாண்டதாக எண்ணி துரோணர் யோக நிலையில் அமர்ந்து உயிரை விட, அந்த உடலை துஷ்ட்டத்யூமன் வெட்டினான். அசுவத்தாமனின் நாராயண அஸ்திரம் வீணானது.

பதினாறாம் நாள்:- கர்ணன் சேனாதிபதியானான். சல்லியன் கர்ணனின் தேரோட்டியானான். சல்லியன் கர்ணனுக்குக் காகத்தின் கதையைச் சொன்னான்.

பதினேழாம் நாள்:- தருமரால் கர்ணனைக் கொன்றிருக்க முடியும் ஆனால் அருச்சுனனின் சபதத்திற் காகக் கொல்லாமல் விட்டுவிட்டார். மலையத்துவஜ பாண்டியனை அசுவத்தாமன் கொன்றான். பீமன் துர்ச்சாதனனைக் கொன்று அவனுடைய இரத்தத்தைக் குடித்தான். கர்ணனின் மகனான விருஷசேனனை அருச்சுனன் கொன்றான். கர்ணன் விட்ட நாகாஸ்த்திரத் திலிருந்து அருச்சுனனைக் கண்ணன் காப்பாற்றினான். அர்ச்சனன் கர்ணனைக் கொன்றான்.

பதினெட்டாம் நாள்:- சல்லியன் சேனாதிபதி யானான். தருமன் சல்லியனைக் கொன்றார். சால்வனை சாத்யகி கொன்றான்: துரியோதனனின் தம்பியாகிய சுதர்சன் என்பவனைத் தவிர மற்றவர்கள் பீமனால் கொல்லப்பட்டனர். பின்னர் சுதர்சனையும் பீமன் கொன்றான். சகாதேவன் உலூகனைக் கொன்றான். பின்னர் சகுனியைக் கொன்றான். துரியோதனனைக் கொன்றான். அர்ச்சுனனின் தேர் எரிந்து போயிற்று. கண்ணன், திருதராஷ்ட்டிரனுக்கும் காந்தாரிக்கும் ஆறுதல் கூறினான். அசுவத்தாமன் சேனாதிபதி ஆனான். தூங்கிக்கொண்டிருந்த திருஷ்ட்டத்துய்மனை அசுவத்தாமன் எழுப்பிக் கொன்றான். திரௌபதியின் புதல்வர்களைக் கொன்றான். பாண்டவர்கள் ஐவர், கண்ணன், சாத்யகி ஆகிய ஏழுபேரைத் தவிர மற்ற அனைவரையும் அசுவத்தாமன் கொன்றுவிட்டான். இந்தச் செய்தியைக் கேட்ட பின்னர் தான் துரியோதனன் உயிரை விட்டான்.

10. சௌப்திக பருவம்

கர்பங்கள் அழிந்தன - அசுவத்தாமனின் மணி தருமருக்குக் கிடைத்தது.

11. ஸ்திரி பருவம்

பீமனைக் கட்டிப் பிடித்து நொறுக்கி கொல்ல நினைத்த திருதராஷ்ட்டிரனிடம் இரும்பு உருவத்தைக் கொடுத்து கண்ணன் பீமனைக் காப்பாற்றினான். காந்தாரி கண்ணனுக்குச் சாபமிட்டது. போரில் மாண்டவர்களுக்கு சிரார்த்தங்கள் செய்தார்கள்.

12. சாந்தி பருவம்

இதுவே இரண்டாவது கீதை எனப்பெறுகிறது. இதில் 1. இராஜ தருமம், 2. ஆபத்தருமம், 3. மோட்ச தருமம் என்பதாக நீதிகள் கூறப்பெறுகின்றன. சிலநீதிகளை மட்டும் சுருக்கமாகக் காண்போம்.

1. தருமரிடம் நாரதர் கர்ணனின் பிறப்பு பற்றிய வரலாற்றைக் கூறினார். கர்ணன் பெற்ற சாபங்கள் பற்றிக் கூறினார். பெண்கள் மனதில் ரகசியம் தங்காமல் போகக் கடவ கர்ணன் சாபமிட்டது.

2. யானையைக் கொண்டு யானையை பிடிப்பது போலப் பொருளைக் கொண்டுதான் பொருளை அடையமுடியும்.

3. பொருள் அற்றவனை விட்டு நண்பர்களும் விலகுவார்கள்.

4. ஒருவனிடம் உள்ள பொருள் மற்றவனிடமிருந்து ஏதோ ஒரு வகையில் அபகரித்துப் பெற்றவைதான்.

5. இடம், பொருள், காலம் அறிந்து செயல்படு கிறவனிடத்தில் கல்வி, செல்வம், வீரம் ஆகியவை நிலைத்து நிற்கும்.

6. போரிடாத மன்னனையும், நாடு சுற்றாத பிராமணனையும், பாம்பு எலியை விழுங்குவது போல பூமி விழுங்கிவிடும்.

7. ஒரு மனிதன் கோடாரியால் மரத்தை வெட்டு வானாகில் மரத்தை வெட்டிய கோடாலிக்குப் பாவமில்லை, வெட்டிய மனிதனுக்கே சேரும்.

8. சூரியன் உதிக்கும்போதும் மறையும்போதும படுத்துறங்கும் பிர்மச்சாரி, அந்தணர்களை நிந்திப்பவன். பசுவைக்கொன்றவன், காட்டை எரித்தவன், பொய் சொல்லி அடுத்தவர் குடியைக் கெடுத்தவன், தாரை வார்த்துக் கொடுத்ததை திரும்பப்பெற்றவன், காட்டை எரித்தவன், பொய் சொல்லி அடுத்தவர் குடியைக் கெடுத்தவன், தாரை வார்த்துக் கொடுத்ததை திரும்பப் பெற்றவன். பிறர் கொடுப்பதைத் தடுப்பவன், உறவினர் களிடம் கலகம் செய்தவன், அடைக்கலமாக வந்தவனைக் கைவிட்டவன், அந்தணர்களின் பொருளை அபகரித்தவன். தகப்பனோடு சண்டையிடும் மகன், குருவின் பத்தினியை மனதில் எண்ணியவன், தன் பத்தினியிடம் சேராமல் இருப்பவன் ஆகிய இத்தகைய காரியங்களைச் செய்பவர்கள் பாவம் செய்தவர்கள்.

9. கிருஷ்ணன் தருமருக்குப் பட்டாபிசேகம் செய்து வைத்தான். தருமர், பீமனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி, விதுரரை அமைச்சராக்கினார். சஞ்சயனை வரவு செலவு கவனிக்கவும் நகுலனை சேனைத் தலைவனாகவும் நியமித்தார். பகைவர்களை அடக்கும் பொறுப்பு

அருச்சுனனுக்குக் கொடுக்கப்பட்டது. ஓகதி நதிக்கரையில் அம்புப் படுக்கையில் இருந்த பீஷ்மரைக் காணச் சென்றார்கள். பரசுராமனின் வரலாறு கூறப்பெறுகிறது.

10. உறவினர்களானாலும் கெட்ட எண்ணத்துடன் வருபவர்களோடு போரிடுவது தவறில்லை. பீஷ்மர் கூறியது.

11. அரசன் உண்மையையே பேசவேண்டும்.

12. உலக நீதிக்கு இடையூறு செய்யும் அந்தணன் தண்டிக்கப்பட வேண்டியவனே.

13. காமம், கோபம் முதலான பதினெட்டு குணங்களை அரசன் தவிர்க்க வேண்டும். அளவுக்கு மீறி பொறுமையுடன் இருந்தால் யானை மீது மாவுத்தன் ஏறுவது போல மற்றவர்களால் அவமதிக்கப்டுவான்.

14. கர்ப்பிணிப் பெண், தன் வயிற்றில் உள்ள பிள்ளையின் நன்மையைக் கருதியே செய்யப்படுவதைப் போல அரசன் எப்போதும் தன் மக்களின் நலனையே கருதவேண்டும்.

15. வேலைக்காரர்களுடன் பரிகாச் வார்த்தைகள் பேசக்கூடாது. எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

16. அரசன் எவரையும் நம்பக்கூடாது.

17. பணியாட்களுக்கு கூலியை முறைப்படி வழங்க வேண்டும்.

18. தீயவர்களின் பொருளைக் கைப்பற்றி நல்லவர் களிடம் வழங்கவேண்டும்.

19. முயற்சி இல்லாத மன்னன் விஷமில்லாத பாம்பு போன்றவனாக மற்றவரால் அவமதிக்கப்படுவான்.

20. அரசன் எவ்வாறு தோனறினான் என்பதைப் பீஷ்மர் கூறினார்.

21. சாதியர்களின் கடமைகள் கூறப்பெறுகின்றன.

22. அரசனின் கடமைகள் கூறப்பெறுகின்றன.

23. நான்குவகை நண்பர்களைப் பற்றிக் கூறப் பெறுகிறது.

24. காக்கையின் கதை ஒன்று கூறப்பெறுகிறது.

25. நாயைப் புலியாகவும், யானையாகவும், சிங்கத்தைக் கொல்லும் சரபமாகவும், மாற்றிய ரிஷியின் கதையை பீஷ்மர் கூறினார்.

26. வண்டுகள் தேனைச் சேகரிப்பது போல மன்னர் பொருள் சேர்க்க வேண்டும்.

27. வலிமை மிக்க பகைவனுடன் நட்பு கொள்ள வேண்டும்.

28. பூனைக்கும் எலிக்கும் ஏற்பட்ட நட்பைப் பற்றிய கதை ஒன்று கூறப்பெறுகிறது.

29. எதிரியிடம் நண்பனைப் போலப் பழக வேண்டும். பாம்பைக் கண்டு அஞ்சுவதைப் போல அஞ்சி நடக்க வேண்டும்.

30. காரியம் ஆகும் வரை எதிரியைத் தோளில் தூக்க வேண்டும், காரியம் முடிந்ததும், மண் குடத்தைக் கல்லில் உடைப்பது போல அவனை அழித்துவிட வேண்டும்.

31. மரத்தின் வேர் அறுபட்டால் கிளைகள் அழியும். அதுபோல எதிரியின் ஆதாரம் எதுவோ அதை அழிக்க வேண்டும்.

32. எவரையும் பரிசோதித்துப் பார்க்காமல் நம்பிவிடக் கூடாது.

33. எதிரிகளைக் கழுகைப்போல கவனிக்க வேண்டும். கொக்கைப் போல காலம் வரும வரை காத்திருக்க வேண்டும். நாயைப் போல எச்சரிக்கையுடன் தாவ வேண்டும். சிங்கத்தைப் போல வீரத்தைக் காட்ட வேண்டும். காகத்தைப் போல மாற்றான் எண்ணத்தை அறியவேண்டும். பாம்பைப் போல துணிச்சலுடன் உள்ளே நுழைய வேண்டும்.

34. சுக்கிராச்சாரியார் கூறிய வேடன் கதை.

35. சுடுகாட்டில் இருந்த கழுகு நரி கதை.

36. நன்றி கெட்ட அந்தணன் கதை.

37. அறிவே பெரும் பயன் தருவது. காசிபன் கதை.

38. தானம், தவம், யாகம், குருவிற்குச் செய்யும் பணிவிடை இவைகளில் தானமே சிறந்தது.

39. ஜனகனின் நகரம் எரிந்த கதை.

40. சுவேதகேது-சுவர்ச்சலை-தம்பதியர் கதை. ஆத்மாவைப் பற்றிய விளக்கம் கூறப்பெறுகிறது.

41. பராசர கீதை:-

1. தர்மமே இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் நன்மையைத் தருகிறது.

2. கர்மாவைச் செய்யாமல் சுகம் உண்டாவதில்லை.

3. தனக்குச் சமம் இல்லாதவனுடன் நட்புக் கொள்ளக்கூடாது.

4. தனது சக்திக்கு ஏற்றவாறு தர்மம செய்ய வேண்டும்.

5. வியாசர் மகாவிஷ்ணுவின் மகன் என்ற கதை. இவ்வாறு இரண்டாவது கீதை நிறைவடைகிறது.

13. அநுசாசன பருவம்

1. கௌதமி என்ற கிழவி தன் மகனைப் பாம்பு கடித்ததால் இழந்த கதை-காலமே காரணம் என்ற செய்தி.

2. ஓகவதி-சுதர்சன் கதை

3. ஊழ்வினை-முயற்சி இவை இரண்டில் எது சிறந்தது? முயற்சி பூமியாகவும் ஊழ்வினை விதையாகவும் செயல்படுகிறது. நல்ல முயற்சி இல்லாவிடில் ஊழ்வினை பயன் தராது. முயற்சி இல்லாமல் தெய்வத்தையே நம்புகிறவன் ஆண்மையற்ற கணவனை அடைந்த பெண்ணுக்குச் சமம். முயற்சியற்றவனுக்கு தெய்வம் எதையும் கொடுக்காது.

4. தேவலோகத்தைவிட மானிட லோகமே சிறப்புடையது.

5. தானம் செய்வதால் தனத்தை அடையலாம். தவத்தால் சுகபோகங்களையும், பிரம்மச்சரிய விரதத்தால் நீண்ட ஆயுளையும் அடையலாம்.

6. என்னென்ன தானங்கள் செய்தால் என்னென்ன பலன் கிடைக்கும் என்கிற விவரம்.

7. நல்லொழுக்கத்தினாலேயே மனிதன் நீண்ட ஆயுளைப்பெறுகிறான்.

8. தன்னுடைய ஒரு காலை மற்றொரு காலால் மிதிக்கக்கூடாது.

9. பிர்மச்சரியம் காக்கப்பட வேண்டிய நாட்கள் அமாவாசை, பௌர்ணமி, தன்னுடைய பிறந்த தினம், அஷ்டமி, துவாதசி ஆகியவை.

10. தீயினால் சுட்ட புண் ஆறும், நாவினால் சுட்ட மனப்புண ஆறாது.

11. ஆடையின்றிக் குளிக்கக்கூடாது. வடக்கேயும் மேற்கேயும் தலைவைத்துப் படுக்கக்கூடாது. கிழக்கு முகமாய் உட்கார்ந்து சாப்பிட வேணடும். பகலில் பெண்களைச் சேரக்கூடாது. வீட்டு விலக்குடையவளைச் சேரக்கூடாது. மனைவி கர்ப்பமாய் இருக்கும்போது கடலில் நீராடக்கூடாது. இவை எல்லாம் நீண்டநாள் ஆயுளுக்கான விதிகள்.

12. தந்தையானவன் தன்பிள்ளைகளுக்குத் தன்னுடைய சொத்தைச் சமமாக பங்கிட்டுத் தர வேண்டும்.

13. பூமிக்கும் மேம்பட்டவள் தாய்.

14. துவாதசி நாளில் விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும். ஞானம் பெருகும்.

15. பிறருக்குத் துன்பம் செய்யாமை, தானம் செய்தல், பொய் பேசாமை, இம்மூன்றும் மனித மேன்மைக்குறிய வழிகள்.

16. அதிஷ்டம் கெடுவதால்தான் செல்வம் அழியும்.

17. யோகிகளை விட கொடையாளியே சிறந்தவன்.

18. ஞானம், தவம், தானம் இவற்றில் தானமே சிறந்தது.

19. கணவனிடம் மனைவி கடுஞ்சொல் பேசக் கூடாது.

20. மூத்தோரைப் பூஜிக்கவேண்டும்.

21. பெண்கள் மாமனார் மாமியாருக்கு அடங்கி நடக்க வேண்டும்.

22. கோள் சொல்லக் கூடாது.

23. பெண்கள் தவறான முறையில் சிரிக்கக்கூடாது.

24. கணவனால் விரும்பப்படாததை செய்யக் கூடாது.

25. கணவன் விரும்பும் உணவையே சமைக்க வேண்டும்.

26. வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

27. பிள்ளைகளை நன்முறையில் வளர்க்க வேண்டும்.

28. கோபம் கொள்ளக் கூடாது.

29. கணவன் வெளியூர் சென்றிருக்கும்போது மனைவி தன்னை அலங்காரம் செய்து கொள்ளக் கூடாது.

30. கணவனின் துக்கத்தைக் கலைக்கக் கூடாது.

31. வீட்டு ரகசியங்களை வெளியில் சொல்லக் கூடாது.

32. தானங்களின் வகைகள்:-

1. பொறாமையற்ற தானம்:- பலன் கருதாத தானம், தர்ம தானம் என்பது.

2. அர்த்த தானம்:- என்பது கொடுத்தான்-கொடுப்பாள் எனக் கருதிச் செய்வது.

3. பய தானம்:- இவனுக்குக் கொடுக்காவிட்டால் இவனால் நமக்குத் தீங்கு வரும் எனப் பயந்து செய்வது.

4. காம தானம்டு:- ஒருவனின் பேரில் விருப்பம் கொண்டு, நண்பனுக்கு செய்யும் தானம்.

5. தயை தானம்:- இரக்கத்தால் செய்வது. ஏழைக்குக் கொடுப்பது. இவை அனைத்தும் புண்ணியமே.

33. விருந்தினர், உறவினர்,வேலைக்காரர்கள் ஆகிய அனைவருக்கும் ஒரே வகையான உணவையே அளிக்க வேண்டும்.

34. விளம்பரத்திற்காக தரும் செய்யக்கூடாது.

35. தானே செய்தாலும் மற்றவர்களைக் கொண்டு செய்வித்தாலும் பாவம் பாவமே.

36. காலம்தான் அறிவை ஆட்டிப்படைக்கிறது.

37. தருமமே வெற்றியை உண்டாக்கும்.

38. அன்னதானமே மிகவும் சிறந்தது.

பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்து ஐம்பத்தெட்டு நாட்கள் ஆயிற்று. உத்திராயண புண்ய காலமாகிய மாசி மாதம் வந்தது. உடலில் இருந்த அம்புகள்கள் எல்லாம் நீங்கின. பீஷ்மரின் ஆத்மா சுவர்கலோகத்தை சென்றடைந்தது. பாண்டவர்கள் நீர்க்கடன் முடித்தனர். கங்காதேவி புலம்பினாள்.

14. அசுவமேதிக பருவம்

ஒருவன் அளவுக்கு அதிகமாகச் சோகப்படுவானேல் அது அவனுடைய முன்னோர்களைப் பாதிக்கும். கண்ணன், மனிதன் ஈஸ்வரனால் ஏவப்பட்டே எல்லாக் காரியங்களையும் செய்கிறான். வியாசர், போரினால் விளைந்த பாவங்கள் தீர தருமரை அசுவமேத யாகம் செய்யும்படி வியாசர் கூறினார். அதற்குத் தேவையான பொருள் கிடைக்க வழியையும் கூறினார். இதுநாள் வரை உடன் இருந்த கிருஷ்ணன் துவாரகைக்குச் சென்றார்.

அனுகீதை - மூன்றாவது - சுருக்கம்

இதுவும் கண்ணனால் அருச்சுனனுக்குச் சொல்லப் பெற்றது. ஜனன மரணம்:- கர்மங்கள், இந்த ஜென்மத் திலேயே பயன் தருவன. ஆயுனை நீட்டிப்பன. கர்மங்கள் முழுமையாக நசித்த பின்னரே ஆயுள் முடிகிறது. மல மூத்திரங்களை உரிய நேரத்தில் கழிக்காமல் அடக்கி வைத்தால் அது ஆயுளைக் கெடுக்கும். மனிதன் கர்ப்பத்தில் உள்ள போதும் கர்ப்பத்திலிருந்து வெளியே வரும்போதும் துன்பம் அடைகிறான். சூடு, ஒளி, மூச்சு, உணர்ச்சி, செய்கை இவையாவும் அற்றவன் இறந்தவன். தேவலோகத்தில் உயர்வு, தாழ்வு, நடு என்னும் நிலைகள் உண்டு. புண்ணிய கர்மங்களும், பாப கர்மங்களும் நாசமடைவதில்லை. அவற்றிற் கேற்ப உடலை அடைந்து,

அதற்குத் தக்கபடி பயனைத் தருகின்றன. சாதுக்களின் விரதத்திற்கு "சதாசாரம்" என்று பெயர். இது சொர்க்கம் மோட்சம என்ற இரண்டுவிதப் பயனைத் தரும். முதன்முதலாக பிர்மதேவர் தமக்குரிய உடலைச் செய்து கொண்டு பின்னர், தாவரம், பிராணிகள் போன்ற உயிரினங்களின் உடலைப் படைத்தார். வீடு பேறாகிய மோட்சத்தை அடையும் மார்க்கம் கூறப்பெறுகிறது. தேகத்திலிருந்து ஆத்மாவை வேறுபடுத்திக் காண்பவனே யோகி. இவன் இந்திரப் பதவியைக் கூட விரும்புவதில்லை.

பிர்மத்தை அடையும் வழி:- எவன், ஒன்றையும் விரும்பாமல், எதன் மேலும் ஆசை கொள்ளாமல் இருக்கிறானோ, அவன் இவ்வுலகில் இருக்கும்போதே பிர்மத் தன்மையை அடைகிறான். ஜனன மரணத்தை வீழ்த்தும் வழி கூறப்பெறுகிறது. பிர்மச்சரியமே முதலாவது பதம், இல்லற தருமம் இரண்டாவது பதம், வானப்பிரஸ்தாச்ரமம் அதற்கும் மேலானது. சந்நியாசம் அதற்கும் மேலானது. வைராக்கியம் உள்ளவனே பிர்மத்தைக் காணமுடியும். இருபத்து நான்கு தத்துவங்களை அறிந்தவன் எல்லாப் பிராணிகளுள்ளும் மோகமடைய மாட்டான். சத்துவம், ரஜஸ், தாமசம் என்பவை மூவகைக் குணங்களாகும். இவை அவ்யக்தம் எனப்பெறும். இது அழிவற்றதும் அசைவற்றதுமாகும். மூன்று குணங்களும் ஒன்றோடொன்று தொடர் புடையவை. பகவத்கீதையில் சொல்லப்பெற்ற- மூன்று குணத்தவர்களைப் பற்றி மீண்டும் இங்கு சொல்லப் பெறுகிறது.

தருமம்-ஞானம்-மோட்சம் ஆகியவை பற்றியும் மீண்டும் கூறப்பெறுகிறது. சத்துவ குணத்தவன் தாமரை யிலையில் தண்ணீர் போல எதிலும் ஒட்டுதலின்றி

இருப்பான். இருட்டில் தீபத்தை எடுத்துச் செல்வதைப் போல பரம ரிஷிகள் தத்துவமாகிய தீபத்தை எடுத்துச் செல்கின்றனர். எண்ணெயும் திரியும் உள்ளவரை தீபம் எரியும். இதில் சத்துவ குணம் எண்ணெய், புருஷன் திரி: கட்டுச் சோறின்றி வழிநடக்கிறவன் பசியால் இறந்து போவான். தெப்பம் இல்லாமல் நீந்திக் கடலைக் கடப்பவன் நீரில் மூழ்கி மாள்கிறான். இதில் தெப்பம் குரு. ஓடத்தில் ஏறி பூமியைக் கடக்க முடியாது.இரதத்தில் ஏறிக் கடலைக் கடக்க முடியாது. ஆஸ்ரமத்திற்கேற்ற கர்மத்தையே செய்ய வேண்டும் என்பது. புத்தியே எல்லா வற்றிலும் மேலானது. புத்தியை விட ஆத்மா மேலானது. ஆத்மாவை விட அவ்யக்தம் மேலானது. அவ்யக்யத்தைக் காட்டிலும் மேலானது இறைவன். எனவே இறைவனை அடைவதன் மூலம் மேலான தன்மையை அடையலாம். குரு என்பவன் நானே எனக் கண்ணன் கூறினான். உதங்க மகரிஷிக்குத் தாகம் எடுத்தபோது தண்ணீர் கொடுத்த கதை, உதங்களுக்குக் கண்ணன் தன்னுடைய விஸ்வரூபத்தைக் காட்டியது. கண்ணன் துவாரைகைக்குப் போய்ச் சேர்ந்தார். வியாசர் வந்து பொருள் பெற்றார்.

உத்தரைக்கு உயிரற்ற பிள்ளையாகப் பிறந்த பரீஷத்துவுக்குக் கண்ணன் உயிர் கொடுத்தார். அசுவமேத யாகக் குதிரை புறப்பட்டது. குருச்சேத்திரத்தில் வசித்த பிராமணன் ஒருபடி மாவைத் தானமாகக் கொடுத்த கதை, கீரியால் கூறப்பெறறது. அசுவமேத யாகம் நிறைவடைந்தது. இவ்வாறு அனுகீதா பருவம் நிறைவடைகிறது. பெரும்பாலும் பகவத்கீதையில் கூறப்பெற்ற செய்திகளே இங்கும் கூறப்பெறவதைக் காணலாம்.

வைஷ்ணவத் தர்மம்:- தர்மத்தைப பார்த்தாலும் சொன்னாலும், செய்தாலும் கேட்டாலும் அது

மனிதனை இந்திரபதம் அடையச் செய்கிறது. தரித்திரர், வியாதியுள்ளவர், பிறரால் வெறுக்கப்படத்தக்கவர், மூர்க்கர் ஆகியோர் முன்ஜென்மத்தில் தர்மத்தைச் செய்யாதவர்கள்.

நீண்ட ஆயுளையுடையவர். சூரர்கள், பண்டிதர்கள், போகமுள்ளவர்கள, அழகான உருவம் உள்ளவர்கள ஆகியோர் முன் ஜென்மத்தில் தர்மம் செய்தவர்கள்.

கண்ணன் தான் பிறவி எடுத்த காரணத்தையும், தன்னைப்பற்றியும் கூறினான்.

ஐநதுவிதமான யக்ஞங்களைச் செயபவர்களுக்கு மரணம் சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

ஜீவாத்மா பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை. ஐந்துவித யக்ஞம் என்பது, தேவயக்ஞம், பிரம்ம யக்ஞம், பூத யக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பித்ரு யக்ஞம் என்பனவாகும். இதன் விவரம் கூறப்பெறுகிறது. பின்னர் ஸ்நானம் செய்தல், நதியில் குளித்த பிறகு வேறு தண்ணீரில் குளிக்கக்கூடாது. தண்ணீரை வணங்க வேண்டும். சூரியனுக்கு எதிராகக் குளிக்க வேண்டும். கண்ணனுக்கு விருப்பமான மலர்கள், ஆம்பல், அலரி, கடலை, செண்பகம், மல்லிகை, ஜாதிமல்லி, நந்தியாவட்டை, அறுகு, லவங்கம், உத்பலம் ஆகியவை. செந்தாமரையை விட வெண் தாமரை மேலானது. எல்லாவற்றிலும் மேலானது துளசி இலை. மண்ணால் கூடக் கண்ணனைப் பூசிக்கலாம். நீக்க வேண்டிய மலர்கள் பற்றியும் கூறப்பெறுகிறது.

திருதராஷ்ட்டிரன் காட்டிற்குச் சென்று விட்டார். காட்டில் திப்பிடித்து திருதராஷ்ட்டிரன் மாண்டார். அவருக்கு பாண்டவர்கள் நீர்க்கடன் செய்தார்கள். பலராமரின் உயிர் நாகவடிவம் கொண்டு நாகலோகம் சென்றது. ஜரன் என்ற வேடன் அம்பினால் கண்ணனைக் கொன்றான். கண்ணனின் உறவினர்கள் உலக்கையால் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு மாண்டார்கள். மிஞ்சி இருந்தவன் வஜ்ரன் என்பவன் மட்டும்தான்.

பாண்டவர்கள் ஐவரும் திரௌபதியுடன் கூட சொக்கலோகம் சென்றார்கள். அவர்களுடன் நாய் வடிவில் இருந்த தருமதேவதையும் சுய உருபெற்றுச் சென்றுவிட்டது.

வைசம்பாயனரால் ஜனமே ஜெயனுக்கு சொல்லப் பெற்றதான இக்கதை நிறைவுற்றது.

இக்கதையை முழுமையாக அறிந்தவர்கள் வேதங்களை உணர்ந்தவர்களாவர்.

இக்கதையைக் கேட்டாலும், சொன்னாலும் எல்லா சுக போங்களையும் அடைவார்கள்.

சுபம்.

சொல்லடைவு

(எண்கள் - விருத்தங்களின் வரிசை எண்)

அ - ஔ

அகரம்	234	அதிதூரம்	378
அகங்காரம்	255	அதிபூதம்	234
அகத்தியாகம்	236	அதியூகமதி	232
அகமகிழ்வு	566	அதியெச்சம்	232
அகாரம்	294	அதேகதி	411
அகிலம்	2	அந்தக் கரணம்	236
அங்கர்கோன்	10	அந்தணர்	272
அங்கி	249,139	அந்தம்	314, 226
அங்கை	560	அந்தமிலி	227
அசுரர்	259	அநிதியம்	226
அசுவத்தாமம்	419	அபிமனு	9
அசைவில்லாமறை	436	அமர்	19, 66
அட்டவசுக்கள்	303	அமலா	547
அஞ்சல்	276	அமுத நாயகன்	526
அஞ்சாதே	359	அய்யாவே	51
அஞ்சாமை	276	அயலாமே	127
அஞ்சு புலன்	243, 110	அயன்	399, 2
அஞ்சு பொறி	110, 169	அயிராவதம்	290
அடிமைத்தொழில்	550	அயிலும் பொறி	184
அஞ்சிடார்	187	அரக்கர்	259
அஞ்சுதலின்மை	444	அரங்கு	364
அடியேன்	329	அரசர்	302, 535
அடுதுயர்	40	அரசு	289
அடுகின்ற	389	அசுரர்கள் யோனி	457
அடுப்பது	34	அரவொப்ப	457
அடைவொடு	291	அரன்	2
அண்ணிய	382	அராவணை	2
அண்மை	க. வா.	அரி	2
அத்தம்	290	அரிச்சனை	265

அரிது 70
அரியான் 240
அருச்சனை 224
அருந்தாதை 346
அருந்திரு 298
அருமை 155
அருவம் 437, 378
அருவென 207
அருளாரமுதன் 300
அல்லல் 218
அல்லாவினை 528
அலகிலாவுயிர் 359
அலர் கதிரோன் 557
அலிக்கள் 34
அலைகடல் 299
அலையும் கடல் 182
அவதரித்த க. வா.
அவதரித்தார் 449
அவம் 100
அவா 372
அவிகாரி 411
அழகாய் 528
அழல் 48
அழியாதவை 53
அழியாமை 235
அழிதுயர் 125
அழிவிலாதான் 281
அழுக்கு 406
அளதாகி 81
அளவா மறை 103
அளவான மழை 103
அளியா வரம் 417
அற்புதம் 566
அற்புத மாயவன் 303
அற்றால் 77
அற 119
அறனொன்றிய 253
அறிகிலாதவை 163
அறியாத பருவம் 346
அறியாமை 344. 151
அறியாவகை 304
அறியும் குறி 412
அறிவரியோன் 207
அறிவானது 396
அறிவிலிகள் 227
அறுதிங்கள் 245
அறுமுகன் 288
அறைகடல் 83
அறைந்தது 88
அறையும்பொருள் 252
அன்ப 161
அன்பிலார் 150
அன்னலார் 353
அன்னியம் 211
அனேகர் 303, 104
அன்னை 92
அனந்தன் 29
ஆக்கல் 444
ஆக்கை 430
ஆகாதன 179
ஆகாயம் 429
ஆகுதி 139
ஆசான் 11
ஆசு 471

ஆடி	552
ஆண்மை	524
ஆணும் பெண்ணும்	376
ஆதவன்	49
ஆதி	95
ஆதித்யர்	286
ஆதிதேவன்	281, 335
ஆதிமுடிவு	329
ஆதி மூலம்	339
ஆதியந்தம்	375
ஆநெய்யுண்டு	559
ஆம்	485
ஆமை	82
ஆயர்	299
ஆயனார்	324, க. வா.
ஆயாதவர்	34
ஆயனாய்	352
ஆர்வஞ்செய்து	251
ஆராதனை	526
ஆவி	244
ஆழி	147, 292, 54
ஆழிப்பாகா	328
ஆழியங்கையன்	119
ஆற்றியல்	568
ஆற்று வெள்ளம்	132
ஆறிய வுடம்பு	57
ஆறுசெல் பொருள்	88
ஆன்றான்	549
ஆனந்தவுருவம்	227
இக்குவாகு	120
இகபரம்	134
இகம்	165
இகம்பரம்	253
இகழ்	110
இகழ்பவர்	361
இகழா உறவு	362
இச்சை	360
இசை	331
இசைக	462
இசையான்	101
இசைவாகி	273
இடங்கள்	373
இடும்பை	412, 374, 126
இடையூறு	70
இணர்மலர்முடி	391
இதயத்துள்	286
இதயம்	488
இந்தியம்	140
இந்திர சாலம்	427
இந்திரன்	287
இந்து	432
இப்படி	385
இப்பரிசு	278
இமையோர்	327
இயக்கமற	142
இயக்கம்	466
இயம்பாமை	297
இயம்பு	8
இயல்பு	420, 412, 46
இயலான	127
இயற்கை	46
இரசதம்	400
இரண்டு	1
இரவி	265, 120

இரவியங்கு	286
இராமன்	293
இராவரும்	293
இரும்பு	2
இரும்புவனம்	298
இருவகைவுயிர்	358
இருவேருயிர்	330
இருளார்பவம்	300
இல்லாமை	54
இலங்கிழையார்	28
இலை	269
இழிந்த குலத்தவர்	483
இழியாது	191
இழவில் இடர்	154
இழவு	68
இளமை	46
இளவேனில்	295
இறைச்சி	164
இறப்பச்சிறியான்	240
இறப்பு	125
இறவா வகை	176
இன்ப துன்பம்	358, 68
இன்பம்	25
இனியன்	357
ஈசன்	282
ஈசனே	384
ஈண்டு	257
ஈதெலாம்	380
ஈனம்	100
ஈர்	251
உகம்	125
உச்சி	5
உச்சிர வச்சிரன்	290
உஞ்சன்	320
உஞ்சே	38
உடம்பறுப்பான்	164
உடம்பொடுவுயிர்	364
உடல்	123, 23
உடலம்	238
உடற்குடில்	454
உடன்பட்டான்	561
உடன்பிறந்தான்	21
உண்டான உலகு	345
உண்ணல்	344
உண்டி	183, 434
உண்பன	384
உணர்விசாரி	391
உத்தமம்	491
உத்தமன்	281
உத்தராயணம்	249
உலக மூன்று	105
உலக மேழு	170
உய்யும் பரிசு	324, 128
உய்வகை	195, 173, 283
உயிர் சோரும்	306
உரவோன்	557
உருத்திரர்	303
உருவென	207
உருளார்	30
உவகை	120
உவகை கூற	309
உவர்ப்பு	470
உழுதொழில்	525
உழவன்	8

உள்ளங்கை	89
உளளம் பாழாக	218
உள்ளொளி	378
உற்பவம்	211, 294
உறக்கம்	408
உறங்குதல்	344
உறவாவார்	345
உறியார்	151
உறுகண் செய்கை	371
உறுபொருள்	556
உறைவிடம்	264
ஊசின பழஞ்சோறு	471
ஊடுருவி	18, 558
ஊண் போதாமல்	323
ஊர்வன	259
ஊழ்	421, 218
ஊறுபட	55
ஊண	271
ஊன்று பொருள்	214
ஊனம்	371
ஊன வினை	333
எச்சமாகி	237
எச்சில்	471
எஞ்சல்	564
எஞ்சவே	187
எஞ்சுதல்	110
எண்டிசை	481
எண்ணியற்கை	302
எதிர்காணான்	307
எதிர் வார்த்தை	343
எரி தீ	210
எரிபொருள்	70
எரியாதவன்	550
எவமற	120
எள்ளலான	380
எறிபடை	293
என் நாட்டார்	21
ஏகம்	488
ஏகாவழகு	328
ஏதமானது	250
ஏதமின்றி	377
ஏதுவாய்	403, 250
ஏயனான்	352
ஏயாத நிலம்	483
ஏவர்கள்	362
ஏற்பவர்	473
ஏறிவரும் பிணி	231
ஐம்பொருள்	324
ஐயம்	199
ஐயுறேல்	63
ஐவகை	1
ஐவகைப் பொருள்	80
ஐவர்	12
ஒண்கதிர்	313
ஒப்பரிய	484
ஒருகை	431
ஒருப்படு	128
ஒரு பதம்	3
ஒரு மகன்	387
ஒருமைப் பொருள்	390
ஒருவழிப்பாடு	358
ஒல்லாதன	194
ஒளியாது	417
ஓடம்	131

ஓடு மனம் 531
ஓதரு ஞானி 221
ஓதரு நதிகள் 322
ஓதம் 464
ஓதியோதி 339
ஓம் 485
ஓமெனமெழுத்து 244, 263

க - கௌ

கங்குல் 249
கங்கை 293
கங்கையாள் மகன் 13
கங்கையாள் 10
கஞ்சன் 299
கட்டுண்டு 258
கட்டுண்பர் 160
கட்டுரை 176
கட்டுரைப்பான் 412
கடப்பதரிது 413
கடம்படு 365
கடல் 15
கடல் கிடந்து 93
கடல் வண்ணன் 464
கடலிடை 412
கடவியவினை 75
கடற்படை 12
கடனாகும் 160
கடுங் காமம் 116
கடுத்த திறள் 560
கடும் பகைஞன் 179
கடைக்கால் 183
கடையுகம் 324
கண்காணாவகை 428
கண்டவரில்லை 351
கண்ண 344
கண்ண கண்ண 341
கண்ணனை 1
கண்ணன் 297
கண்ணியர் 7
கண்ணில்லாதவர் 345
கண்ணில்லாவரசன் 7
கண்ணீர் 326
கண்ணயிரம் 432
கண்ணுமென 79
கண்வளர் 152
கண் வளரும் 158
கதி 264
கதிர் 1
கதிர்வன் மண்டலம் 239
கதிர்வேல் 486
கதிரிரண்டு 316
கந்தம் 440
கந்திருநகர் 426
கந்துருவர் 289
கைப்பன 470
கபிலமுனி 290
கமலத்திடை 243
கர்த்தன் 466
கரணம் 1, 2
கதிராழியான் 556
கரந்தை 279
கரவாது 465
கரியமுகிலான் 274

கரியான்	550
கரு	398
கருக்கும் வகை	121
கருடன்	293
கருணாகர	344
கருதரு	101
கருநாள்	422
கருமுகில்	334
கரைகண்டன்	310
கரை செய்து	536
கருவேல்	540
கலக்கும்	88
கலவலன்	299
கலவாது	255
கலவாத வகை	559
கலைகள்	206
கலைகின்ற மறை	555
கவி	297
கவை	73
கவைதருங் குணம்	157
கழறுகின்ற	153
கழிபவர்	100
கழியாது	191
கழுதாழி	426
களி கூற	274, 101
களிகொண்டு	251
களி செய் ஐம்புலம்	476
கள்வர்	249, 102, 102
களித்து	225
களிதரும் புலன்	237
களிப்பறுப்பர்	278
களிப்பு	359
களிறு	க. வா.
கழறு	153
கற்றவர்	102
கறை	523
கன்மம்	137
கன்று	315
கனலெறிபுகை	351
கனவு	426
கனி	269
காங்கும்	141
காசின	471
காண்டீபவில்	417
காணம் பதிநான்கு	196
காத்தருளி	152
காதம்	291
காதல்	22
காதல் பண்ணை	442
காதலர்கள்	349
காதலுறுவோர்	262
காதற்றோழன்	179
காந்தம்	2
காமப்புலன்	116
காம பலம்	486
காமம்	113, 81
காமபோகம்	450
காய்	269
காயத்தவம்	477
காயத்திரி	296
காயம்	234
காயாத	483

கார்திரள் முளக்கம்	15
கார்முகம்	8
கார்வண்ணன்	33
கார்வந்தென	251
காரணம்	551, 52
காரியம்	174, 104
காவ்	118
காலதேவதை	249
காலம் சிறிது	362
காலான் அடக்கும்	158
காலிலாவிடம்	186
காலுற	536
காவல்	167
காவல் பேணி	19
காவலன்	10
காற்று தீயினன்ன	321
காறுடா நெஞ்சம்	88
கான்	551, 148
கிடைப்பிக்கும்	29
கிளியாவறிவு	417
கிறங்காமல்	360
கீதை	க. வா.
கீழ்மை சமைப்பார்	175
கீழானோர்	218
குன்றெடுத்த வண்ணம்	342
குசை	181
குஞ்சும்விழி	158
குடம்	429
குணகல்லி	32
குண மயக்கம்	229
குணமிலி	391
குயிலும் யோகம்	319
குரல் திறந்தார்	17
குரவர்	477
குருவாகி	345
குருதி	36
குருபூமி	7
குலங்கெட	28
குல தருமம்	28
குல மறை	56
குலவாயர் மகன்	559
குவை	439
குழலூதி	557
குழி	74
குற்றம்	345
குறள்	445
குறிகொளாத	404
குறியாது	346
குறுகாதநெறி	54
குறையுடல்	321
குறைவு பாடு	358
குன்றெடுத்த வண்ணம்	342
குன்றேயணையாய்	94
கூர்ப்பன	470
கூற்றவர்	36
கூற்று	35
கூறிலை	246
கூனல் வரிவில்	26
கெடம்	322
கெடாவீடு	417
கெடுகின்ற பூதம்	389
கெடுமாற்றம்	29

கேடிலின்பம் 417
கேடு 276
கேணீ 484
கை தலமிசை 326
கைதல செவி கால் 375
கைப்படுவான் 245
கைம்மாறு 179
கைமாறு 41
கைமுகிள்த்து 311
கையில் வேலோய் 222
கையிலை 159
கையும் பதமும் 334
கைவேல் 210
கொண்டல் 342, 565
கொண்டல் வண்ணன் 463
கொண்டாட 345
கொண்டாடு 479
கொடுமெய் 60
கொடுவன் 31
கொல் படை 37
கொல்லினும் 32
கொல்வோன் 294
கொலை 477
கொலையேவல் 56
கொழுந்தீ 65
கொள்கை மாற்றல் 445
கொற்றவ 457
கொற்றவர் 27
கொற்றவன் 280
கொன்னே கழிக்க 31
கோகுலம் 291, 559
கோடி கதிர் 305
கோடு 131
கோடென 156
கோடை 291
கோணாமை 476
கோதிலாநெறி 567
கோலத்தால் 261
கோலம் 351
கோலமேவி 305
கோவிந்த மாமுனி 567
கோள் வளவு 19
கௌரவர்கள் 18

ச - சோ

சக்கரப்படை 313
சகடம் 300
சகலநிலை 288
சகாதேவன் 17
சகோடம் 17
சங்கரபகவத்பாதன் 568
சங்கின் ஒலி 19
சங்கொடு சக்கரம் 347
சங்கை 15
சடம் 166
சடம்படுபிணி 364
சந்திரன் 429, 287
சத் 485
சத்தியம் 276
சத்துவம் 400
சத்துவ பலம் 410
சதிரி யுகம் 246
சமதை 276

சரண் 38
சராசரம் 339, 254
சருவி 262
சரணம் 3
சராங்கன் 152
சருவுடன் 138
சலங்கொள்வினை 258
சலம் 2
சலமாகி 555
சலனுறுபிறவி 97
சலிப்பது 47, 224
சலிப்பிக்க 414
சலியாது 58
சழக்கு 541
சற்றுவம் 405
சனகன் 104
சனகாதிகள் 327
சனித்திடும்பொருள் 229
சன்னியாசம் 489
சாகரம் 288
சாங்கியயோகம் 386
சாத்தி 42
சாத்துவீகர் 466
சாதலானது 37
சாதிபுரியும் தொழில் 170
சாதி பேதம் 339
சாதிவினை 329
சாந்து 325
சாயை 418, 340
சாயா நரகம் 34
சாமத்தீ 139
சாமம் 432
சாமன் 287
சாரதி 2
சாரரால் 165
சால 407, 261
சாவகை 275
சாவது 43
சாவது முதல் 362
சாவாது 125
சான்றென 215
சான்று 264
சிந்தை 440
சித்த சாந்தி 357
சித்தர்கள் 275
சித்தி 87
சித்திரத்தோவன் 289
சிலரவர் 108
சிலை 9
சிலைக்கை 128
சிலை மலிதோள் 524
சிறுசுவை 74
சிறுவர் 22
சீதம் 48, 49
சீதமோடழல் 361
சீரியது 357
சீரோன் 394
சீவன் 430, 552
சுடர் 193
சுடர்வேலோய் 256
சுடுதீ 400
சுடுவன 470

சுரபி	291	செயலின்மை	132
சுரபூசை	98	செயாவின	106
சுரா	293	செயிப்போம்	452
சுருக்கமாக	379	சென்னம்	113
சுருங்க	242	செகுக்க	418
சுருதி	554	செருக்கு	371
சுருதித் தொகை	329	செரிய	476
சுருள்	300	செருவருஞ்சிலை	446
சுளியா நின்ற	417	செல்காலம்	467
சுவை	433, 331	செல்லாக்கருமம்	206
சூத்திரர்	522	செல்வம்	31
சூதமறை	545	செல்வி	395
சூது	296	செவ்வாயன்	35
சூருதி நூறு	க. வா.	செவிக்கினிய	475
சூழ்	421	செவிபுதைப்ப	17
செகுத்தோன்	192	செழுத்தி	239
செங்கண்	1	செற்றம்	135, 372
செங்கை	15	செறிகி	222
செத்தும் பிறந்தும்	390	செறிகாற்று	256
செதிக்க	58	செறிதல்	404
செப்பார்	72	செறுமலிதோள்	292
செப்பு	442	செறிய	82
செபம்	278	சென்னி	42
செம்மை	200	சேமம்	க. வா.
செய்குற்றம்	346	சேய்	561
செய்வகை	162, 80	சேய்கள்	22
செய்யவாய்	443	சேய	க. வா.
செய்வண்ணம்	33	சேல்	118
செய்வினை	1, 135	சேவடி	146
செயத்தகுவது	363	சொல் மேதை	295
செயம்	535	சொற்றொகை	367, 294

சோகமில் நாடு	201
சோகிதர்	44
சோதி	க. வா.
சோதிக்கதிர்	286
சோதியுரு	329
ஞ	
ஞாலத்தார்	261
ஞாலத்திரள்	512
ஞான நெய்	140
ஞாலம்	65, 233
ஞானம்	க.வா. 296
ஞானயோகம்	543
ஞான வருமறை	164
த - தோ	
தக்கது	408
தக்கோர்	165
தகாதது	111
தகாமை	492
தகாதென்று	341
தகுவினை	76-77
தஞ்சம்	320
தடுத்ததொழில்	111
தடுமாறல்	28
தண்டாமறை	159
தண்டு	39, 203
தண்ணளி	297
தண்ணிய	7
தணித்தல்	90
தந்தி	432
தந்திரவாள்	427
தந்தை தந்தை	336
தந்தையார்	21
தந்தையவர் தந்தை	263
தமம்	408
தமோ பலம்	410
தமிழினால்	4
தரு பயன்	77
தரும நூல்	568
தரைசெறி புகழ்	406
தலை நின்றான்	567
தலைமை அந்தனர்	477
தலைகீழது	419
தலை நின்ற	79
தலைவன்	264
தலையும் கழுத்தும்	182
தலைவர்கள்	288
தவஞானம்	276
தவத்தோர்	396
தவம்	141
தவர்	37
தழன்குடி	187
தழராது	182
தளல்	140
தளைத்தபோது	407
தன்னுயிர்	480
தனஞ்செயன்	297
தனித்துமாய்	378
தனி வித்து	282
தாக்குதல்	442
தாகம்	188
தாது	403
தாம்பு	233
தாமதம்	400
தாமதர்கள்	466

தாமம் 485
தாமரைக்கண் 39
தாய் தாய் 336
தாயினொடு தந்தை 263
தாயும் பிதாவும் 336
தார் பொலிகின்ற 473
தாரை கூற 407
தாள் 307
தாளும் 405
தாத்பரியம் 473
தானம் 445, 276
தானவர் 333
தானை 8, 20
திகைப்பு 216
திங்கள் 295
திசைமுகன் 246
திட்டம் 137
திண்மை 295
தித்திக்க 469
தியாகம் 489
தியானம் 386, 36
தியானவினை 467
திரட்படை 15
திரித்தல் 344
திரியா வகை 390
திரு 295
திருக்குலத் தாதா 202
திருக்கோலம் 556, 301
திருமாது கேழ்வன் 208
திரை கடல் 290
திருநகை 42
திருமார்பன் 42
திருமால் 327
திருவாக்கு 284
திருமொழி 35
திருவாய் 41
திறலோர் 214
தின்ப 434
தினனாய் 100
தினை வல்லது 114
தீக்கனல் 430
தீக்குலாவேள் 474
தீங்கெலாம் ஒத்து 360
தீஞ்சுவை 434
தீத்தவழும் 478
தீதனிற்விட்டில் 322
தீதிலா வீடு 104
தீதுண்கின்றான் 102
தீமனம் 113
தீயேயென்ன 23
தீர்த்தன் 15
தீர்த்தா 475
தீவினை 43
துகில் 181
துஞ்ச 299
துஞ்சும் 237
துடக்கு 447
துடங்கலாம் 20
துடங்குகின்ற 136
துணிவு 296
துயில் 184
துயில் கொண்டான் 417
துரை 414
துவ்வு 383

துவேஷம் 530
துளப முடியோன் 124
துளாய் 193, 300
துறவு 427, 153, 154
துறவுற்றோர் 150
துன்னிய ஆசை 428
தூய்மை 82, 414
தூய க. வா.
தூய நான் மறை 352
தூயவன் 122
தூனெறி 179
தெய்வம் 2
தெய்வயோனி 409
தெய்வாசுரர் 443
தெரிசனம் 5
தெற்றும் 401
தேக்கனாயனம் 249
தேகம் சிக்கென 469
தேய்வர் 43
தேர் பொருள் 279
தேவகி திருவயிறு 487
தேவதேவ 338
தேவர்கள் 98
தொகை 370
தொடங்கிலாது 340
தொண்டர் 351
தொண்முடி 396
தொல்பரம் 117
தொல்லறிவு 150
தொல்லோன் 239
தொழில் 446, 414
தொழும் 307
தொழுவிசயன்
தொன்மை 145
தோழன் 10

ந - நோ

நக்குவ 434
நகரம் க. வா.
நசை 479
நசியாது 51
நஞ்சு 187
நட்டார் 361
நடப்பன 377, 211. 217
நடம் பயிலும் 364
நடமாடும் 171
நடுங்காத விளக்கு 186
நடுவு 124
நண்ணாமல் 40
நண்ணியர் 104
நண்ணுவர் 223
நண்ணும் 28
நண்பன் 122
நண்ணி 211
நந்தவறியாத 314
நந்திடாவகை 433
நம்பன் 10
நமர் 7
நரகதி 458
நரகம் 29
நல்யோகி 172
நல்ல மாந்தர் 435
நல்லறிவு 123
நல்லிடம் 481
நல்லுடம்பு 379

நல்லோய் 223
நல்லோன் 264
நலங்கெட 28
நலியாமல் 40
நலியாவிடம் 180
நலுவி 23
நவை 439
நவை தரு குணம் 73
நவை தருந் தொழில் 37
நளினம் 488
நற்கதி 197
நற்பதம் 250
நற்காலம் 481
நன்மனை 372
நன்வினை மாந்தர் 230
நன்னகை 544
நன்னல் 113
நன்னலம் 220
நாகநாடன் 332
நாக பாணன் 171
நாசம் 439
நாசமின்றி 97
நாட்டலால் 382
நாடார் 147
நாடோறும் 160
நாண் 332, 271
நாதம் 262
நாதன் 384
நா நீட்டி நீட்டி 483
நாமம் 5
நாம மற்று 113
நாயகன் 364, 282
நாரதன் 289
நாராயணன் 526
நாலுகுலம் 127
நாற்றம் 430
நானாவிதம் 557
நானுடையன 383
நிகட்டும் 361
நிகழ் காலம் 284
நிகழ்வான் 359
நிகழ்விடம் 50
நித்தியம் 56, 49
நித்திரை 404
நித்தியாகி 553
நிமித்தம் 549, 24
நிரந்தரம் 279
நிரை கண் 557
நில்லாவியற்கை 194
நில்லாவுடல் 56
நிலத்துளோர் 339
நிலத்தோர் 99
நிலைநின்ற 79
நிலைமை 274
நிலையம் 288
நிழல் 552
நிற்குவேன் 255
நிற்ப 277
நிற்பன 259, 211. 377
நிறைகள் 352
நின்றவினை 164
நீங்கிடாவகை 189
நீடியது 53
நீடு 205

நீடுகின்ற 131
நீடும் புலன்கள் 177
நீண்முடி 347
நீதி 281
நீர்மை 210
நீரான் 361
நீருங் காற்றும் 335
நுண்ணிதாகிய 377
நுண்மையாலே 392
நுணிகியவறிவு 72
நுளைய 6
நுனித்தவர் 473
நூற்றுவர் 564, 321
நூறாயிரங்கால் 336
நெக்கொழுகாது 58
நெஞ்சு 169
நெடுங்கண்ணீர் 41
நெடுந்தேர் 2
நெடுநாள் 197
நெடுமுடி 193, 480
நெய் 262
நெருப்பு 115
நெழிய 2
நேந்திரம் 287
நைவர் 458
நோய் 247
நோயுற்றழிதல் 360

ப - போ

பக்கல் 270
பகவத்கீதை க. வா.
பகழி 32
பகையானோர் 415
பசி 432
பஞ்சவர் 564
பட்டனார் க. வா.
படிவம் 305
படைக்கை 4
படைகள் 291
பருகாவமுது 328
படுமாற்றம் 29
பண்டிரந்தோர் 29
பண்டு 109, 203
பண்ணாது 101
பண்ணியுமழித்தும் 413
பண்ணியவினை 72
பணாமுடி 364
பணித்த பணி 547
பணித்தான் 413
பணம் 115
பத்தி 59
பதம் 251
பந்தம் 440
பந்தமற 533
பயமகத்தி 350
பயில்வாய் 356
பயிலார் 105
பரகதி 275
பரங்கள் 371
பரந்து நிற்பான் 392
பரப்பி 254
பரம்பொருள் 248
பரமயோகி 552

பரமன் 413
பரமாம் 542
பரமானந்தம் 186
பரமார்த்த 5
பரிகுசை 15
பரிசு 42, 20
பரிந்து க. வா.
பரிபுணர் 2
பரியுண்டு 223
பருகா நின்றோர் 284
பருவம் 46
பரலோகம் 461
பரவும் 2
பல்லாயிரம் 124
பல்லியங்கள் 15
பல்லுயிர் 299
பலபொருள் 50
பலவினை 299
பயில்கின்ற யோகி 186
பவளம் 16
பவளவாய் 208
பவனம் 16
பள்ளிய மாலோன் 546
பளமையினான் 275
பளிங்கு 560, 301
பளையான் 240
பழங்கோலம் 347
பழமுனி 4
பழி 27
பழிதீக்கொலை 276
பழுதற 525
பழையகோ 315
பழைய கோலம் 350
பழைய நூல் 215
பழையோன் 280, 112
பற்று 223
பறியுண்டு 218
பன்மயமான 178
பன்னரும் 4
பாகன் 251
பாகவன் 288
பாங்கியாத்து 189
பாசம் 451
பாடும் பனுவல் 177
பாண்டவர்கள் 2, 297
பாதகம் 147
பாதி க. வா.
பாம்பு 291
பாயல் பறவை 112
பார்த்தன் 2, 301
பாலமுதம் 284
பாவமாம் பழி 66
பாவனை 238
பாவவினை 275
பான்மை 134
பாணன் 142
பிணங்கவும் 377
பிணி 83
பிணித்தல 476
பித்தி 368
பிதாமகன் 12
பிதிர்கள் 268

பிர்மவிச்சா	294
பிரகலாதன்	292
பிரகிருதி	228
பிரபாவம்	36
பிரமம்	138, 231
பிரம நெருப்பு	138
பிராணன்	142
பிராணாயாமம்	142
பிரியத்தோடு	483
பிரியா தோழன்	346
பிருகுவு	289
பிழைப்பு	449
பிழையீர்	99
பிற உயிர்	480
பிறக்கு நாள்	257
பிற கிறுதி	398
பிறந்திறந்து	442
பிறப்பகன்றான்	281
பிறப் பிறப்பு	56
பிறப்பு நிலை	286
பிறர் மனை	371
பிறர் பொருட்டு	106
பிறவாது	125
பிறவிப்பெருமரம்	419
பிறவி	72
பிறவிக்கடல்	547
பிறழாநிலை	281
பிறளா வகை	315
பிறிதுறுமனம்	78
பிறைபோலேயிறு	319
பிறிவறிய நெறி	247
பின்னல்	344
பின்னை	397, 92, 7
பீதகன்	57
புக்கதே	104
புகலிடம்	335
புகழ்பழி	361
புகழும்	306
புகழுற்றபொழுது	415
புகை	249
பகைந்து	84
புட்பகம்	17
புண்ணியகதை	6
புண்ணிய பூமி	7
புண்ணியர்	412
புணர்ந்தவின்பம்	165
புணர்ப்பு	537
புணர்வன	391
புணராதே	256
புத்தேள்	289, 1
புந்தி	117, 99
புலனைந்து	116
புயல் வகை	99
புரந்து	279
புரவி	290
புருவம்	168
புரைதீருயிர்	241
புரைவர	254
புரோகிதர்	289
புல்லர்	435
புல்லவர்படை	8
புல்லறவு	435

புலவரானவர்கள் 539
புலன்கள் 82
புலனிலாதார் 162
புலனும் பொறியும் 48
புவனம் 152
புள்ளினம் 293
புளிப்பு 470
புளுக்கூடு 232
புன்மயமான 178
புன்மொழி 343
புன்னுனிப்பனி 45
புனல் 131, 74
புனலாறு 531
புனையாளன் 329
பூக்கமழ் 430
பூசைக்காகா 471
பூத்தருளி 152
பூதங்கள் 286
பூத சாலம் 410
பூதம் 51
பூரித்தல் 360
பெண்கள் 295
பெண்டிர் 372
பெண்ணினோடான் 448
பெண்மை க. வா.
பெம்மான் 299
பெரிய பூதம் 368
பெரியவர் 105
பெரியோர்கள் 247, 346
பெருங்களிப்பு 566
பெருஞ்செல்வம் 281, 40
பெருந்தேர் 9
பெரும்பாவம் 114
பெருமயல் 77, 228
பெருமாயன் 284
பெருமான் 423
பெருவாயன் 151
பெருவாழ்வு 36
பெருவானம் 559
பெருவிணை 76
பெருவீடு 460, 416
பௌவாய் 319
பெற்றி 562, 247
பேசும்விழி 158
பேணாதார் 102
பேணி 145
பேணிப்பிழைத்து 102
பேதமை 78
பேதியாது க. வா.
பேதை 106
பேதையேனான் 346
பேய்முலை 273
பேயும் பூதமும் 466
பேயை ஏறி 340
பேராசை 451, 371
பேரின்பம் 165
பேரிடும்பை 337
பேரொழுக்கம் 445
பேனடைய 319
பைய 196
பையரவு 546
பொய்த்தவம் 450

பொய்ப்பிறவி	245
பொய்படு பிறவி	385
பொய்வகை	162
பொய்வாயில்	161
பொய்யிலா மெய்	391
பொய்யுறவு	356
பொருட்பால்	149
பொற்குறி	148
பொற்றிகழும்	163
பொற்றேர்	3
பொறி	148
பொறிதரு புகழ்	81
பொறிவழி	96, 260
பொறாமை	359, 108
பொறை	295
பொறைகெட	83
பொன் மாய்ந்தார்	108
பொன்றில்	65
பொன்றினும்	360
பொன்றுவது	46
பொன்னையணி	42
போக்கறுத்து	188
போக்கு	97
போகம்	197, 25
போதரா உலகம்	104
போதரும் பொருள்	322
போமிடம்	61
போயினார்	க. வா.
போர்த்திடும்	406
போர் திகழ்வில்	435
போர் முகம்	8
போவன நிற்பன	388
போற்றி செய்து	260
போனவை	229
போனாள்	52

மை - மொ

மகரம்	368
மகளிர்	272
மகிட்சை	81
மகிடான வகை	349
மகிழ்விடம்	100
மங்குல் வான்	305
மஞ்சு	39
மடங்கல்	469, 293
மடித்து	3
மண்டலம்	17
மண்ணுற	71
மண்பொன்	415
மணி	2
மணியாழி	32
மத்தர்	495
மத்தித்து	469
மத்திம குணம்	407
மதனாலாயமறை	63
மதனாறிய	100
மதியெச்சம்	234
மதுசூதனன்	327
மந்திரம்	427, 138
மந்தை மனத்தன்	226
மயக்கம்	359, 81
மயக்கிருள்	280
மயமாயம்	216
மயல்	70
மயிர்குச்சென	311
மயன்மேல்	132
மரங்கள்	289

மரமொக்க 418
மருத்துவர் 286
மருந்தால் 58
மருந்து 153
மருவிய மனம் 207
மல்லார் தோள் 194
மலைகள் 288
மலைதல் 477
மலையார் முழை 180
மழை 265
மழுமான் 332
மற்றவர் 280
மறக்கர 363
மாயன் 250, 4
மாயாமனன் 327
மாயோன் 122, 2, 363
மார்கழி 295
மாரீசு 286
மால்கொல்கோலம் 306
மால்வரை 5
மாலாய் மயங்கு 118
மாலையாடை 305
மாற்றலர் 36
மான் 131
மான அவமானம் 361
மானிடப்பிறப்பு 290
மானிடப்பிறவி 411
மானிடர் 179
மிக்கோர் 76
மிதவை 147
மின்னவிழ் 4
மின்னேயனைய 31
மின்னை 267
மின்னையனைய 42
மீன் 287
முகம் 23
முகில் படலம் 508
முகின் முளக்கம் 8
முட்டாவகை 75
முடிகின்ற பொருள் 215
முடியரசர் 272
முடியும் பொருள் 42
முண்டு 203
முதலை 531
முதற்பொருள் 42, 348
முந்த 226
முப்பு 73
முயல்வகை 99, 458
முயல்வார் 160
முயலார் 53
முழுதுமாய் 348
முழை 531
முளுதுமாய் 255
முறுவல் 273
முன்னாள் 123
முன்னி 348
முன்னிசையசைய 252
முன்னுரை 548
முன்னை 92
முனியாமே 31
முனிவர்கள் 37, 275
மூக்குத்துதி 182
மூதவா 398
மறவறிதாய 363
மறன்வலி 445
மறித்து 385, 112

மறுத்து மறுத்து	337
மறுவவருமாயை	563
மறைகள்	42, 4
மறை நீர்மை	208
மறை நெறி	71
மறைபயிலறம்	445
மறைமொழி	83
மறலி	14
மறையவர்	523
மறையவன்	8
மறையும் பொருள்	252
மறைவிலாமனம்	450
மறைவுகள்	297
மன்செய்த குலங்கள்	106
மன்மயமான	178
மன்னர்	4
மன்னி	366
மன்னிய ஒளி	428
மனத்திருள்	442
மனம்	23
மனுக்கள்	277
மனுவாசன்	120
மாக்கடல்	464
மா கோலம்	309
மா சங்கை	251
மாசின்மை	401
மாடுகின்ற	131
மாண்டு	257
மாணாக்கன்	39
மாதர்	43
மாதவம்	349
மாதவர்	க. வா.
மாதவன்	22
மா தனம்	4
மாமதுரை	க. வா.
மா மருந்து	475
மாமலர்	395
மாய்க்கும்	404
மாய்கை	210
மாய்த்து	88
மாய்வர்	43
மாயக்கூடம்	177
மாயக்கூத்து	232
மாயும்	137
மாயுமாயை	209
மாயுமானிடர்	209
மாயவன்	112
மூபபிறப்பு	374
மூப்பு	46
மூலகங்கள்	282
மூவகையுலகு	98
மூன்றினோடிரண்டு	369
மூன்று குணம்	215
மூன்று பதங்கள்	487
மெஞ்ஞானம்	21
மெய்ஞ்ஞானி	219
மெய்க்கண்	384
மெய்க்குறி	261
மெய் காண்பான்	192
மெய்ஞானயோகம்	79
மெய்த்தன்மை	390
மெய் வகை	48
மெய்யறிவு	167
மெய்யனி	199
மெய்வாய்	35
மெய்ப்பகை	175

மெய்ப்பயம் 182
மெய்ப்பாட்டை 78
மெய்ப்பாடு 79
மெய்ப்பேதம் 377
மெய்ப்பொருள் 4
மெய் 365
மெய்யுணர்ந்தார் 170
மெய்யுணர்வு 40, 87
மெய்யுற 356
மெய்யும் பொய்யும் 128, 324
மெய்யுயிர் 31
மெய்வகை 80, 107
மேகம் 5
மேகமவர் 57
மேகமேயென 198
மேகவண்ணன் 20
மேரு 288
மேவாது 125
மேற்கதி 204
மேனாள் 311
மேனி 317
மைக்குணம் 216
மைத்துனன் 341
மையல் 199
மைவரை 326
மொழி 438
மொழி மறுத்து
மொய்ப்பர் 452

ய - யோ

யசோதை 341
யமன் 335
யாக்கை 247, 385
யாகம் 288
யாதவர் 297, 13
யாதவன் 341
யாப்பு 548
யாவனொருவன் 192
யீரிருகை 350
யேகமுதற்பொருள் 171
யேதவினை 369
யோக மனம் 171
யோக நீர்மை 121
யோக வலி 349
யோக வெந்தீ 140
யோகி 399, 246
யோனி 132
லோபம் 407, 460
லோப மயக்கம் 410
ராசத பலம் 410

வ - வோ

வகுத்திவாக 13
வச்சிரம் 291
வசம் 107
வசுக்கள் 288
வசை 479
வசையில்லாமெய் 436
வஞ்சா 14
வஞ்சாவேல் 187
வந்தியாது 180
வடிவு 254
வடிவேல் 193
வடுவின்றி 389
வணிகர் 522, 272
வயத்தோடு 363

வயல்வகை 99
வயலார் 53
வயிறு 313
வரங்கள் 279
வரம்பு 298
வரலாறு 119
வரவு 367
வரவு நீக்கி 81
வரிசிலை 418
வரியரவு 235
வருகாலம் 284
வருங்காலம் 556, 248
வருணம் 319
வருணன் 292
வருநாள் 52
வருபயன் 147
வரும்பொருள் 298
வலை 454
வள்ளல் 326
வளந்தருகிற்பன 400
வளராது 299
வளராழி 1
வளரெறி 93
வளுத்தவும் 82
வளைகள் 15
வளைத்தசிலை 13
வளையின் ஓசை 19
வழிபாடு 146
வழிவந்த 253
வழுத்தல் 326
வழுவற 525
வழுவியல் 568
வன்புகெட 337
வன்றுயர் 251
வன்னி 489
வஸ்து 11
வாக்கு 179
வாகுயிர் 335
வாங்கி 189
வாசுகி 291
வாட்கண்பின்னை 273
வாட்டம் 81
வாடுதல் 360
வாணிபம் 525
வாய் 23
வாய்ப்பு 449
வாய்மை 414. 82, 121
வாய்மொழி 531
வாய்வைத்தன் 13
வாயாத 483
வார் முரசு 8
வாளால் வெட்டி 151
வாழ்க்கை 372
வாழிடம் 361
வாழுமுயிர் 355
வான்கலை நூல் 513
வான்முறை 420
வான்றவன் 214
வானடைய 319
வானாள் 226, 25
வானிரவி 163
வானுலகு 43
வானுளோர் 339
வானேகாமுன் 104
விகாரம் 367, 50

விச்சை 294
விசயன் 35, 9
விசயற்கிசைய 350
விட்டுவிட்டு 137
விடம் 166
விடம்படுபுலம் 429
விடம்புரை 412
விடலரும் வகை 75
விண்கள் 296
விண்காற்குவை 65
விண்டருமறியா 351
விண்டு 286
விண்ணவர் குழாம் 312
விண்ணவர்கோ 297
விண்ணியம் 302
விண்ணியமொழி 6
விண்ணொடு 40
வித்து 264
வித்தை 2
விதுரன் 442
விபூதி 285
விம்மாது 179
விம்மி 319
வியத்தம் 247
வியன்மேல் 132
வியாதன் 6, 565
விரக்கம் 33
விரிய 199
விருத்தம் 520
விருந்து 442
விரும்பலர் 449
விரைசெய்தார் 536
வில்லாட்கள் 9
வில்லார்தோள் 124
விலங்குகள் 290
விலங்கு சாதி 409
விவரம் 23
விளக்கொளி 280
விளையாடி 152
விளையாடு 413
விளைவன 471
விளுப்பொருள் 222
விழி 438, 146
விழிசோர 32
விழிபுணராதோர் 52
விழிமறைய 228
விழாநின்ற 23
விழுமிய 525
விழை 156
வின் 80
வின்னவக்கொற்றன் 68
வின்னென 8
விளையாடுதல் 344
வினை 14
வினைபத்து 191
வீக்கம் 498
வீக்குவார்சிலை 501
வீட்டின்பம் 412
வீடு 49, 21, 205
வீமன் 9
வீயலுறும்பொழுது 234
வீளும் 405
வீளும்பொழுது 232
வெகுளி 81
வெங்கதிர் 240
வெங்காமம் 115

வெஞ்சமம் 14
வெஞ்சிலை 229
வெஞ்சுடர் 310
வெஞ்சுரன் 110
வெண்பரி 130
வெண்ணிய உலகு 413
வெண்ணெய் 151, 442
வெதும்பும் 23
வெந்திலாத 471
வெந்தீ 41
வெம்படை கலம் 58
வெம்பி 110
வெம்மை 550
வெய்யதழல் 172
வெருவினை 76
வெள்ளத்திடை 417
வெள்ளம் 131
வெள்ளை மா 18, 20
வெற்றி 296
வெறியாருமலர் 346
வெறுஞ்சுவை 323
வென்றி 11, 24
வேகமாய் 188
வேட்டவை 385
வேண்டப்படுவான் 179
வேண்டாமை 229
வேண்டுவோர் 126
வேதச்சிரம் 394
வேதத்தலை 274
வேதத்தேர் 419
வேதவியாசன் 562
வேதவியாதன் 297
வேதமுடிவு 92
வேதமொழி 262
வேதநெறி 349
வேதனை 460
வேந்தர்கள் 64
வேந்தாய் 320
வேய் 418
வேர்மேலது 419
வேல் 61
வேல்வேந்தர் 290
வேலவன் 37
வேலை 18, 380
வேள்வி 349
வேளாண் மாந்தர் 272
வேளாளர் 525
வேழ்வி 172
வேறுபட 55, 367
வேறுபாடு 388, 107, 124
வேறுவேறாய் 283
வைகுண்டம் 2
வைத்துவசன் 297
வைதிகம் 64
வையமுண்டு 208
வையம் 16
வையமா மடவாள் 395
வொட்டாவகை 76
வொண்பட 468
வோதமாக்கடல் 567
வோதரிய 562
வோர்த்து 475

• • • • •


தஞ்சாவூர் மராட்டிய மன்னர்களின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்
0575